தீக்கொன்றை மலரும் பருவம்

சர்வதேச இலக்கிய வரிசை

அபுபக்கர் ஆடம் இப்ராஹிம்

தமிழில்: லதா அருணாச்சலம்

மார்கேஸ், சோயின்கா, பென் ஓக்ரி
ஆகியோரின் எழுத்துக்களின்
எதிரொலியாக ஒலிக்கும் தைரியமான,
கவனத்துக்குரிய இந்தாவல்
ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் சம
அளவில் நமக்கு உண்டாக்குகிறது.

Toni Kan,
Poet and author of *The Carnivorous City*

அடர்த்தியான, தீவிர வாசிப்பிற்கான
புதினம். குற்றங்கள் மலிந்த நிழல்
உலகத்தை சுயநலத்திற்காகப்
பயன்படுத்திக் கொள்ளும் ஊழல்
அரசியலின் பின்னணி, சமூகத்தால்
தவிர்க்கப்படும் பேசு பொருளான முதிர்
பெண்டிரின் பாலியல் தேர்வு
ஆகியவற்றைப் பற்றித் துணிவுடன்,
திறம்பட, செறிவான மொழியில்
எழுதப்பட்டிருக்கிறது.

Zoe Wicomb, Author of *October*

வன்முறை, காதல், நெருக்கமான குடும்ப
அமைப்பின் அழுத்தங்கள் பேசும்
செறிவான, துடிப்பான புதினம்.

Leila Aboulela,
Author of *The Kindness of Enemies*

மிக சுவாரஸ்யமான, அழுத்தமான
மொழிநடை கொண்ட அபுபக்கரின் இந்த
நாவல், வன்முறைக்கும், பேசப்படாத
காமத்திற்கும், மென் உணர்வுகளுக்கும்
ஏக்கங்களுக்கும், குடும்ப அமைப்புக்கும்,
தனி மனித விருப்பங்களுக்கும் ஊடாகப்
பயணிக்கிறது. மிகக் கொடூரமான
சூழலின் இடையேயும், கைவிட
முடியாத அன்பு மற்றும் உடல் சார்ந்த
தேடலின் வலிமை ஆகியவற்றை
நுட்பமான எழுத்தில் நினைவுறுத்திச்
செல்கிறார்.

Namita Gokhale

தீக்கொன்றை மலரும் பருவம்

அபுபக்கர் ஆடம் இப்ராகிம்

தமிழில்: லதா அருணாச்சலம்

எதிர் பிரசுரம்

Original in English, Season of Crimson Blossoms © Abubakar Adam Ibrahim 2016
First Published in the UK by Cassava Republic Press, 2016
First Published in the English language in India by Speaking Tiger Publishing Pvt. Ltd, 2017
Ezhutthu Prachuram First Edition : July 2019
தமிழில் : தீக்கொன்றை மலரும் பருவம் : ©லதா அருணாச்சலம் 2019

ISBN : 978-93-87707-89-4
TITLE NO EP : 62

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording, psychic, or otherwise, without the prior permission of the publishers.

Ezhutthu Prachuram
(An imprint of Zero Degree Publishing)
No.55(7), RBlock,
6th Avenue, Anna Nagar
Chennai - 600040

Website: www.zerodegreepublishing.com
E Mail id: zerodegreepublishing@gmail.com
Phone : 98400 65000

Typeset : Vidhya Velayudham

Cover Art : Saravana Kumar

Printed in Manipal Technologies Limited, Manipal.

முன்னுரை

புதிய நிலத்தின் தரிசனம்...

நைஜீரிய நாவலை தமிழாக்கம் செய்யும் வாய்ப்பு கிடைத்தபோது இது நிச்சயம் தற்செயல் அல்ல என்று எனக்குத் தோன்றியது. ஏனென்றால், நைஜீரியா நான் வாழ்ந்த நிலப்பரப்பு, இன்றும் தொடர்புடைய நாடு. அதன் இலக்கியம், வரலாறு, மாறுபட்ட புவியியல் தன்மை, மனிதர்கள், அவர்கள் வாழ்வு ஆகியவற்றைப் பற்றி ஏதேனும் ஒரு வகையில் அனைவரும் அறியுமாறு வெளிப்படுத்தவேண்டும் என நான் எண்ணிக் கொண்டிருந்த வேளையில் இந்த வாய்ப்பை நல்கிய ஸீரோ டிகிரி பதிப்பகத்தார் ராம்ஜி மற்றும் காயத்ரி இருவருக்கும் நன்றி.

நைஜீரிய இலக்கியத்துக்கென்று ஆப்பிரிக்கா மற்றும் உலக அளவில் தனித்துவமான இடம் உண்டு. இலக்கியத்தில் நைஜீரிய எழுத்தாளர்கள் செய்யும் பரிசோதனை முயற்சி எப்போதும் என்னை வியப்பில் ஆழ்த்தும். அந்த நாட்டின் படைப்புகளில் மாறுபட்ட சமூக, பொருளாதார, அரசியல் பின்புலத்தைத் தொடாத புனைவுகளும், இலக்கிய ஆக்கங்களும் இல்லை எனலாம். ஆனால், இந்தப் புத்தகம், அவற்றையெல்லாம் உள்ளடக்கிய, அதே வேளை அவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டு வன்முறைகளும், அடக்குமுறைகளும் கொண்ட சூழலில் வாழும் மனிதர்களின் தனி மனித உணர்வுகளைத் துல்லியமாக வெளிப்படுத்துகிறது.

மொழிபெயர்ப்பில் ஈடுபட்டிருந்தபோது அதன் கதைப்புலமும், கதை மாந்தர்களும் மனதில் பரிச்சயப்பட்ட மனிதர்களாக உலவினார்கள். புனைவில் ஏற்றிச் சொல்லப்பட்ட பல உண்மை நிகழ்வுகளைக் கண்களால் காணவில்லை என்றபோதும் செய்தித்தாள்கள், தொலைக்காட்சிகள், மற்றும் அங்கிருந்து தப்பி வந்தவர்கள் மூலமாக அந்தக் கோரச் சம்பவங்களை அறிந்த மௌன சாட்சியாக அங்கு வாழ்ந்த காலகட்டம் அது. மத, இன வெறியின் முன் மனிதம் மரித்துப்போன சம்பவங்கள், உயிரைப் பாதுகாக்க வேண்டி, அந்த உயிரையே பணயம் வைத்து சொந்த நாட்டிலேயே புலம் பெயர்ந்த அவலமும் அங்கு நிகழ்ந்தது. இவையனைத்தையும், அயல்குடி மக்களாகிய நாங்கள் கையறு நிலையில் கவனித்துக் கொண்டிருந்தோம். மனதில் அமிழ்ந்திருந்த நினைவுகளையே தடையேதுமின்றி மொழியில் மாற்றியதுபோல உணர்ந்தேன். அதனால், புத்தகம் பல இடங்களில், சொல்லுக்குச் சொல் *(Literary translation)* மொழிபெயர்ப்பாக இல்லாமல், ஆற்றல் மிகு மொழிபெயர்ப்பாக *(Dynamic translation)* வெளிப்பட்டுள்ளது.

சீர்குலைந்த பொருளாதாரச் சூழலில் பணம் ஈட்டுவதே அறம்,

பிழைப்பே சாகசம் என் நேர்மையை சமரசம் செய்கிறோம் என்பதை அறியாமல் குற்றவியலே வாழ்வு என்பது இயல்பான நிகழ்வாகிறது. அதன் விளைவுகள்தான் இன்றும் உலகெங்கும் எதிரொலிக்கும் இந்த நாட்டின் குற்றத்தின் குரல்கள். அப்படியானதொரு சூழலில் தன்னைத்தானே நிர்வகித்துக் கொண்டு வாழ்பவன்தான் இந்தப் புதினத்தின் நாயகன்.

இத்தகைய பின்னணியில், பெண்கள் புறத்தில் மட்டுமின்றி அகத்திலும் அவர்கள் மேற்கொள்ளும் பயணம் பற்றி இப்புதினம் மிகவும் விளக்கமாக சித்தரிக்கிறது. பலதார மணம் சாதாரணமாகவும், குற்றமற்றதாகவும் இருக்கும் சமூகச்சூழலில், கைவிடப்பட்டு விடுவோமோ என்னும் பாதுகாப்பின்மை வாழ்நாள் முழுவதும் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் நிலையில் ஒரு பெண்ணின் வாழ்வென்பது பிழைத்தலின்றி வேறெதுவு மில்லை. அப்படியோர் இயந்திரத்தனமான வாழ்வில், வாழ்வின் ருசி என்னவென்பதையே அறியாமல், கட்டுப்பாடான சூழலில், ஒடுக்கப்பட்ட பாலியல் உணர்வுகளின் ஏக்கத்தின் மீதங்களை மனதில் புதைத்து வாழ்ந்து மடிந்துவிடும் பெண்கள் பெரும்பாலும் உள்ளனர். அவர்கள் அந்த நாட்டுக்கு மட்டும் உரியவர்களா என்றால், அப்படி இல்லை. அந்தப் பெண்களின் குரல் மண்ணின் எல்லை கடந்து உலகெங்கும் ஒலிக்கும் குரல். ஒரு கட்டத்தில் இந்தக் கதை அது எழுதப்பட்ட நாட்டுக்கு மட்டுமின்றி பல வகைகளில் நமது பிரதேசத்துக்கும் வெகுவாகப் பொருந்திப்போவதை அறிந்தேன். கதையின் பிரதானப் பாத்திரமான பிந்த்தா என்னும் ஒற்றைப் பெண்ணின் உளவியல், பாலியல் பிரச்சனைகளை மட்டுமன்றி, கதை நெடுகிலும் உலவும் பல பெண்களின், கட்டமைக்கப்பட்ட வடிவத்துக்குள் இணங்காமல் அதை உடைத்து வெளியே வரத்துடிக்கும், அல்லது அதிலேயே ஆழ்ந்து போகும் மனநிலையை வெளிப்படுத்துகின்றன.

பிறந்தது முதல் மனதளவில் தனிமையில் உழலும் இருபத்தைந்து வயது ஆணுக்கும், ஐம்பது வயதிற்கு மேற்பட்ட பெண்ணுக்கும் இடையே சமூகத்தின் அத்தனை தளைகளையும், நியதிகளையும், மதிப்பீடுகளையும் கடந்து மலரும் உறவைப் பற்றிப் பேசுகிறது இந்தப் புதினம். அதனூடாக அவர்கள் மேற்கொள்ளும் பயணத்தில் இழப்பும் மீட்பும் சரி விகிதமாக இருக்கிறது. எதைச்சரியென்று சொல்வது என்னும் வினாவுக்கான விடையை வாசகர்களிடமே விட்டுச் செல்கிறார் எழுத்தாளர். நவீன படைப்புலகத்தில் இது போன்ற அகச்சிக்கல்கள் பரவலாக விவாதத்திற்குட்படுத்தப்படும் சூழலில் இந்தப் புத்தகமும் புதிய வாதங்களையும், கருத்துகளையும் நிறுவக் கூடுமென நம்புகிறேன்.

தமிழாக்கத்தின் போது பூர்வ புனைவின் மண்ணின் தன்மையை அதன் அடையாளம் சிதையாமலும், அதே வேளை வாசிப்பவர்களுக்கு கனமான வார்த்தைகளின் சுமையை ஏற்றாமல் இடைப்பட்ட ஒரு மொழியைத் தேர்ந்தெடுப்பதில் சிறிய அளவில் சவால் ஏற்பட்டது. அந்த மொழிநடை குறித்த வாசிப்பும், அந்தத் துறைசார் அனுபவம் மிக்க சில நண்பர்களின் அறிவுரைகளும் சவாலை எளிதாகக் கடக்க உதவியது. மற்றும் நைஜீரிய மக்கள் பேச்சு வழக்கில் எப்போதும் மொழியின் தூய சொற்களை அதிகம் பயன்படுத்துவார்கள். வணக்கம், வருத்தம், நன்றி, இறைவனை அழைத்தல் போன்ற வார்த்தைகளின்றி அவர்கள் சொற்றொடர்கள் முற்றுப் பெறுவதில்லை. ஆதலால், எழுத்துக்களை தமிழாக்கம் செய்கையில் நான் எடுத்துக்கொண்ட நடை மனதை நெருடவில்லை. சிற்சில இடங்களில் நேரடி ஹௌஸா மொழிப் பயன்பாடும், உணவுப் பண்டங்களின் பூர்வ பெயர்களும் எடுத்தாளப்பட்டுள்ளன. அவை வாசிப்பில் எவ்விதமான தேக்கத்தையையும் ஏற்படுத்தாமல், மாறாகக் கதைப்புலத்தோடு ஒன்றச் செய்யும் என்றே நம்புகிறேன். இஸ்லாம் மதம் தொடர்பான சில சொல்லாடல்களை பரந்துபட்ட வாசிப்பாளர்களின் வசதிற்கேற்ப எளிய மொழியிலேயே சொல்லியிருக்கிறார் ஆசிரியர். அதனை இயன்றவரை நேரடியாக மொழிபெயர்த்திருக்கிறேன். இந்தப் புத்தகம் நைஜீரியாவின் வட மாகாணங்களில் வாழும் மக்கள், அந்த நிலப்பரப்பின் வரலாறு மற்றும் புவியியல் பயணமாக அமையக்கூடும். உள்ளார்ந்த வாழ்வையும், உணர்வுகளையும், பிரச்சனைகளையும், வலிகளையும், ரகசியமாக ஒளிரும் கண்ணீரையும் பற்றிப் பேசும் 'தீக்கொன்றை மலரும் பருவம்' எனும் தமிழாக்கம் செய்யப்பட்ட புதினத்தை உங்கள் முன் படைக்கிறேன். நன்றி.

பேரன்புடன்

லதா அருணாச்சலம்

லாகோஸ், 4.4.2019

பாகம் ஒன்று

ஹஜியா பிந்த்தா ஜுபைரூவின் இரண்டாம் பிறப்பு

(1956 -2011...அதற்கும் அப்பால்)

1

“உயரே வீசி எறியப்பட்ட கல், நிச்சயம் நிலம் வீழ்ந்தே தீரும்”

ஹஜியா பிந்த்தா ஜுபைரு தனது ஐம்பத்தைந்தாவது வயதில் இரண்டாவது முறையாகப் பிறப்பெடுத்தாள். கருத்த உதடுகளும், தலையில் சிறிய எறும்புப் புற்று போல குட்டையான, முடிக்கற்றைகளை உடைய போக்கிரி ஒருவன் அவள் வீட்டின் சுற்றுச்சுவர்களைத் தாண்டிக் குதித்து, குழம்பிக் கிடக்கும் அவள் இதயக் குட்டையில் கால் பதித்த போது தான் ஹஜியா மீண்டும் பிறந்தாள். அன்று காலை கண் விழித்தவுடன் கரப்பான் பூச்சிகளின் விசித்திரமான வாடை நாசியைத் தாக்கிய போதே ஏதோ துர் சம்பவம் நடக்கப் போகிறதென்று உணர்வு எச்சரித்தது. பல வருடங்களுக்கு முன்பு, முன் பின் அறிந்திராத அந்நியன் ஒருவனுடன் அவள் திருமணத்தை உறுதி செய்து விட்டு திடீரென தந்தை அறிவித்த அன்றும் இதே போன்ற உள்ளுணர்வு அவளுக்குத் தோன்றியது. மத வெறியர்களால் பற்ற வைக்கப்பட்ட இனக் கலவர நெருப்பில் அந்த அந்நியன், கணவன் ஜுபைரூவின் உடல் கொளுத்தப்பட்ட அன்று, பின்னொரு நாளில், அவளது அன்னையின் சாயல் போலக் கனிவான முகமும், பண்பான நடத்தையும் கொண்ட அவளது மகன் யாரூ போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட அன்று, பிடிவாத குணம் கொண்ட மகள் ஹுரைரா, தன் உதவாக்கரைக் கணவன் விவாகரத்து செய்து அனுப்பி விட்டதாக அழுது புலம்பிக் கொண்டே வீடு திரும்பிய அன்று... இப்படியாக அவள் வாழ்வின் பல துர் சம்பவங்கள் நடந்த வேளைகளில் இந்த உணர்வை பிந்த்தா அனுபவித்திருக்கிறாள்.

காலையில் இந்த அருவருப்பான வாசனையை முகர்ந்த பிந்த்தா, வீட்டைக் கழுவிச் சுத்தப்படுத்துவதில் முனைப்பாக இருந்தாள். மூலை முடுக்கெல்லாம் டார்ச் விளக்கின் வெளிச்சம் பாய்ச்சிப் பூச்சிகளைத் தேடிக்

கொண்டிருந்தாலும், அந்த மும்முரமான வேட்டை எப்போதும் போலவே இன்றும் எந்தப் பலனையும் அளிக்கப் போவதில்லை என்று மனதின் குரல் அவளை அச்சுறுத்திக் கொண்டே இருந்தது.

அலமாரிகள் அங்குமிங்கும் நகர்த்தப்படும் சப்தம், உள் அறையில் பள்ளிக்குத் தயாராகிக் கொண்டிருந்த அவளுடைய தங்கை மகள் ஃபைஸாவின் கவனத்தை ஈர்த்தது. ஊதா மற்றும் வெள்ளை வண்ணச் சீருடை உடுத்தி, உதட்டில் மினுமினுவென்ற சாம்பல் வண்ண லிப்ஸ்டிக் தீட்டியபடி, ஒப்பனை முடித்து அறையை விட்டு வெளியே வந்த ஃபைஸா, கதவோரம் சாய்ந்தபடியே பிந்த்தாவின் நடவடிக்கைகளை விட்டேத்தியான பார்வையுடன் நோட்டமிட்டாள்.

"ஹஜியா, எதைத் தேடுகிறீர்கள்?"

படுக்கைக்குப் பக்கத்திலிருந்த சிறிய மேசையைத் துழாவிக் கொண்டிருந்த பிந்த்தா முதுகைப் பிடித்துக் கொண்டே சிரமத்துடன் தலையைத் தூக்கிச் சொன்னாள். "இந்தக் கரப்பான் பூச்சிகள்தான், அந்தத் துர்நாற்றம் வீசிக்கொண்டே இருக்கிறது. என்ன செய்வது?"

ஃபைஸா முகத்தைச் சுளித்தாள். "ஒன்று கூட கைகளில் அகப்படாது."

நிமிர்ந்து அவளைப் பார்த்த பிந்த்தாவின் கண்கள் கோபத்தில் விரிந்தன.

"இது போல உதட்டுச் சாயம் அப்பிக் கொண்டு வருவதற்கெல்லாம் அனுமதிக்கும் பள்ளி, எந்த மாதிரியான பள்ளியோ புரியவில்லை, பார்த்தால் டிஸ்கோவுக்குச் செல்வது போல இருக்கிறாய் ஃபைஸா."

எதுவும் பேசாமல் திரும்பி நடந்த ஃபைஸாவை அழைத்தாள். "ஏய், இங்கே வா, அந்த லிப்ஸ்டிக்கைக் கொஞ்சம் துடைத்துக் கொண்டு போ, பார்த்தால் நோய் வந்தவள் போல இருக்கிறாய். உன்னுடைய சீருடை கூட இடுப்புப் பக்கத்தில் ஏன் இத்தனை இறுக்கமா இருக்கிறது? இப்படி எல்லாம் அணிந்து கொண்டு போக வெட்கமாக இல்லையா?"

"வெட்கமா?? நீங்கள் பழங்காலத்திலேயேயே இருக்கிறீர்கள். இந்தக் கால நாகரிகம் ஒன்றுமே தெரியவில்லை." தன் உதடுகளைக் குவித்து, கைக்குட்டையால் வழித்துக் கொண்டாள் ஃபைஸா.

"இப்போது அணிந்திருக்கும் ஹிஜாப் துணியை விட நீளமானதை எடுத்துத் தலையில சுற்றிக் கொண்டு போகிறாயா அல்லது வீட்டிலயே இருக்கிறாயா?"

எறும்புக் குழியில் கால் வைத்து விட்டவவள் போல் இரு கால்களையும் மாற்றிமாற்றித் தரையில் ஊன்றிக் கொண்டிருந்த ஃபைஸா கோபத்தில்

தனக்குள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டே நகர்ந்தாள்.

"உங்களைப் போன்ற பெண்கள் எல்லாம் எப்படி உடுத்திக் கொள்கிறீர்கள் தெரியுமா, மேல இருக்கும் தேவதைகளுக்கு உங்களை சபிக்கவே நேரம் போதாது. உன்னைப் பார்த்தால் பதினைந்து வயதுப் பெண் மாதிரியாகவா தெரிகிறது? பார்க்கிறவர்களைத் தூண்டுவது போல இருக்கிறாய். கொஞ்சமாவது இறைவனுக்குப் பயப்படு. இவ்வளவு ஆணவம் கூடாது பெண்ணே."

தன் அறிவுறையை ஃபைஸா ஏற்றுக் கொண்டாளா என்று தெரிந்து கொள்வதற்காகவே வரவேற்பறையில் வந்து அவளுக்காகக் காத்திருந்தாள் பிந்த்தா.

அங்குள்ள சிறிய இருக்கையில் அமர்ந்து, பிரெட்டை சாப்பிட்டு வயிற்றை நிரப்பிக் கொண்டிருந்த குட்டிப் பெண் உம்மி, ஒன்றும் புரியாமல் "என்னவாயிற்று ஹஜியா?" என்று குழப்பத்துடன் கேட்டாள்.

"என்னுடைய செல்லப் பேத்தி எப்படி இருக்கிறது?" கொஞ்சிப் பேசிக் கொண்டே, உம்மியின் வாயிலும், உடையிலும் சிதறிக் கிடந்த ரொட்டித் துகள்களை அப்புறப்படுத்தினாள் பிந்த்தா.

"நான் நன்றாக இருக்கிறேன் ஹஜியா, காலையில் எழுந்தவுடன் ஃபைஸா என்ன செய்தாள் தெரியுமா? சொல்லவா?"

உதடுகளை கடித்துக் கொண்டு தலையாட்டிப் பேசிய உம்மியைப் பார்த்தபோது, எட்டு வயதிற்கு இந்தப் பெண் கொஞ்சம் அதிகப்பிரசங்கியாக இருக்கிறாளோ என்று எப்போதும் போல இன்றும் பிந்த்தாவுக்குத் தோன்றியது.

"தெரியாதே செல்லம், என்ன செய்தாள் ஃபைஸா?" நகர்ந்து, அவள் காதில் மெல்லிய குரலில் உம்மி ரகசியம் போலச் சொன்னதில் முக்கால் பாகம் பிந்த்தாவுக்குப் புரியவில்லை. ஆனாலும் தலையாட்டி வைத்தாள். ஏதோ சாதித்தது போலச் சிறுமி உம்மி பெருமிதம் கொண்டாள்.

கோபத்தில் உதட்டைக் கடித்துக்கொண்டே வெளியே வந்தாள் ஃபைஸா. ஒல்லியான அவள் தேகத்தை, நீண்ட ஹிஜாப் கொண்டு மறைத்திருந்தாள். அதன் நுனியின் ஃபிரில் அவள் முழங்கால் வரை தொங்கியது. "வா, போகலாம்" என்று உம்மியின் கையைப் பிடித்து இழுக்காத குறையாய் அழைத்துக் கொண்டு கிளம்பினாள்.

"முதலில் போய் சாப்பிடுங்கள், அப்புறமாகப் போகலாம்" என்று இடுப்பில் கை வைத்துக் கொண்டு அதிகாரமாய்ச் சொன்ன பிந்த்தாவை

சற்றும் கண்டு கொள்ளாமல், "அதெல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே வீட்டை விட்டு வெளியேறி விட்டாள் ஃபைஸா.

"போய் வாருங்கள்" என்று சத்தமாகச் சொல்லி அவர்களை வழியனுப்பி வைத்து விட்டு வந்த போது, கரப்பான் பூச்சிகளின் வாடை அவள் புலன்களிலிருந்து முற்றிலும் நீங்கிவிட்டிருந்தது.

உள்ளே வந்து கம்பளத்தில் அமர்ந்து தன் பிரார்த்தனையைத் துவங்கினாள். சொந்த ஊரில், இரண்டு வாரங்களுக்கு முன், அவள் வயதை ஒத்த பால்ய சினேகிதி, மாரடைப்பு வந்து, சட்டெனத் தரையில் சுருண்டு விழுந்து இறந்து போன செய்தி கேட்டதிலிருந்து, மனதின் சமநிலையும் நம்பிக்கையும் பிறழ்ந்து, பிந்த்தா இப்படி அடிக்கடி பிரார்த்தனையில் ஈடுபடுகிறாள். தான் ஒரு முழுமையான வாழ்வு வாழ வேண்டும், எப்போது அது நிறைவுறுகிறதோ அப்போது, இறைவன் தன் இரு கைகளாலும் அவளை அன்புடன் ஏந்திக் கொள்ள வேண்டுமென்பதே அவள் விருப்பம். இப்படியெல்லாம் ஒருமுகமாக கவனம் குவித்துப் பிரார்த்திக்கையில் கூட, இடையில் சைத்தான் போல சில நினைவுகள் வந்து குறுக்கிட்டு விடுகின்றன. இன்று மாலையே தைத்து முடித்துத் தருகிறேன் என்று வாக்குக் கொடுத்து வாங்கி வைத்திருக்கும் கண்டியாவின் உடை, மதரஸாவிற்குப் போக வேண்டும் என்னும் நினைப்பு, அங்கு கற்றுக் கொடுக்கப்படும் பாடங்கள், இப்படியாக நினைவுகளால் அலைக்கழியும் மனதிற்கு அமைதியுறும் வேளையே வருவதில்லை.

அவசர அவசரமாகக் குளித்து முடித்து சாப்பிட்டவள், படுக்கைக்குப் பக்கத்திலிருக்கும் மேசையில், *Az Zahabi* யின் ஆங்கில மொழிபெயர்ப்பான *The Major Sin* என்னும் புத்தகத்தின் மேல் பத்திரமாக வைத்திருந்த மூக்குக் கண்ணாடியை எடுத்து அணிந்து கொண்டாள். தையல் மிஷினை எண்ணெய் விட்டு சுத்தம் செய்தபின் கண்டியாவின் பத்திக் பிரிண்ட் போட்ட துணியை எடுத்து தைக்கத் தொடங்கினாள். மோட்டார் இல்லாத மிஷினில் பெடல் செய்து கொண்டிருந்த அவள் கால், முதுகுத் தசை எல்லாம் வலித்தது. ஆடையில் கையை இணைத்துத் தைப்பதற்காக வளைந்து அமர்ந்தது வலியை மேலும் கடுமையாக்கியது.

அதற்குள் மதரஸா செல்லும் நேரம் நெருங்கி விட்டதால் எழுந்து ஹிஜாப் போர்த்திக் கொண்டு, கைப்பையைத் தோளில் மாட்டியவாறு வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியேறினாள்.

—

உடல்நிலை சரியில்லாததால் குரு உஸ்தாஜ் நூரா அன்று வரவில்லை. பெண்கள் அனைவரும் ஒவ்வொரு குழுவாக அமர்ந்து பழைய பாடங்களைப் படிக்க முடிவு செய்தனர். ஆனால் ஹுடித், தாரிக், ஃபிக், இதில் எதிலிருந்து ஆரம்பிப்பது என சர்ச்சை எழும்பியது. பிந்த்தா தன் முன்னால் குவியலாக தன் புத்தகங்களை வைத்துவிட்டு, மூக்குகண்ணாடியின் விளிம்பிற்கு மேலே மற்ற பெண்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். நீளமான, ஒத்துப்போகாத, கிண்டல் தொனித்த விவாதத்திற்குப்பின் குழுக்களாக பெண்கள் வெளியேறினர். பிந்த்தா வயதான பெண்களின் குழுவுடன் புறப்பட்டாள். எல்லோருமே தங்கள் வீடு வரை முதுமை பற்றியும், சொல்பேச்சுக் கேளாத இளைய தலைமுறை பற்றியுமே பேசிக்கொண்டு வந்தார்கள்.

பிந்த்தா கேட்டைத் திறந்து வீட்டின் காம்பவுண்டினுள் நுழைந்தாள். எப்போதாவது அதிகாலையில் அவள் தூவும் தானியங்களைக் கொத்தவரும் குருவிகளையும், புறாக்களையும் தவிர யாருமே நுழைய முடியாத அந்த வீட்டின் முன்னாலிருக்கும் வெறுமையான காலியிடத்தைத் தாண்டி வீட்டின் கதவருகே வந்த போது, அது லேசாகத் திறந்திருந்ததைக் கண்டு ஆச்சரியமும் அச்சமும் அடைந்தாள்.

'சுபானல்லாஹி, என்ன இது' என்று மனம் அலறியது, உடனே, ஃபைஸா சிக்கிரம் வீடு திரும்பியிருப்பாள் என்று தோன்றியது. 'என்ன பெண் இவள், இப்படித்தான் அக்கறை இல்லாமல் வீட்டைத் திறந்து போடுவதா' என்று எரிச்சல் பட்டுக்கொண்டே கதவை நன்றாகத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள்.

ஒரு வலிய கரம் அவள் பின்புறத்திலிருந்து சுற்றி வளைத்து வாயை அழுத்தமாகப் பொத்தியது. "ஜாக்கிரதை, நீ சத்தம் போட்டால் உன்னை வெட்டி விடுவேன். கரகரப்பான ஆண் குரல்... அந்தக் குரல் அவ்வளவாகக் கத்தவில்லை. ஆனால், வயதின் காரணமாக இழந்திருந்த பலத்திற்குப் பின் எஞ்சியிருந்த பலவீனமும், வாழ்க்கை வழங்கியிருந்த துயரங்களுமாய் நிரம்பிக் கிடந்த அவளது இதயத்தை வெடிக்க வைக்க அந்த மெல்லிய குரலே போதுமானதாக இருந்தது. அவன் கையிலிருந்த கத்தியின் முனை அவள் தொண்டையை மெலிதாகக் கீறியது. நெருக்கத்தில் அவனிடமிருந்து வீசிய போதைப் புகையின் நெடியை அவளால் உணர முடிந்தது. அந்த நெடி, அவள் வாழ்க்கையில் நிகழ்ந்த பல்வேறு சம்பவங்களை நினைவூட்டி பெரும் சுழலெனத் தாக்கியது. பயத்தில் முனகிக் கொண்டே அவள் போராடினாள்.

"பணம்... தங்கம்... இருப்பதையெல்லாம் எடுத்துக் கொடு."

சொல்லியவனின் கைகள் அவளை வலிமையாகப் பற்றின. அவள் இல்லையென்று தலையாட்டிய போது, அவனது இடது கை அவள் மார்பை

மேலும் இறுக்கியது, வலது கையில் அவள் கழுத்தின் மேல் வைத்திருந்த கத்தி லேசாக சதையைப் பதம் பார்த்ததில் கொஞ்சம் ரத்தம் பீறிட்டு வந்தது. இப்போது அவள் மூச்சு விடுவதற்காகச் சற்றே அனுமதித்தான். வீட்டிலிருந்த டிவிடியும், செட்டாப் பாக்ஸும் காணாமல் போயிருந்தன. அங்கிருந்த காக்கி நிறப் பையில் தான் அவற்றை அவன் வைத்திருக்கக்கூடும். அந்தப் பை கொள்ளும் அளவே பொருட்களைத் திருடிச்செல்ல வந்திருக்கிறான் என்று அவளுக்குப் புரிந்தது.

"தயவு செய்து என்னை விட்டு விடு. நான் வயதானவள், அமைதியான வழியில் இறைவனை அடைவதற்கு வேண்டிக் கொண்டு இருக்கிறேன், என்னை தயவு செய்து கொன்று விடாதே."

அவன் குரல், வலுவான கரங்கள் இரண்டையும் கொண்டு அவன் ஒரு இளைஞன் என்று தெரிந்து கொண்டாள் பிந்த்தா.

"பணம்...ஃபோன்...தங்கம்" அவன்குரல்அவள்காதிலும், இதயத்திலும் பெரும் அச்சத்தை விளைவித்தது. அவனது பிடியிலிருந்து அவளால் விலக முடியவில்லை. அவனது கைகள் அவளது மார்புகளை அழுத்திக் கொண் டிருந்தன. பயம் அப்பிக்கிடந்த அந்த நொடியிலும், கணவன் இறந்த பிறகு, இந்தப் பத்தாண்டுகளில் ஒரு ஆணின் அருகில் நெருக்கமாக இருப்பது இப்போது தான் எனும் எண்ணம் அவளுள் படர்ந்தது.

'சுபானல்லாஹி...சுபானல்லாஹி' இப்படி வேண்டிக்கொண்டிருப்பது அவள் மனதைத் தூய்மைப்படுத்தும் என்று நம்பினாள். இந்த ஆண்கள் மனதில் இப்படியெல்லாம் ஏன் கொடிய எண்ணங்களை விதைக்கிறாய் என்று உடன் சாத்தானையும் திட்டிக் கொண்டிருந்தாள்.

"ஃபோன் எங்கே?"

தன்னுடைய தோளைச் சுற்றியிருந்த ஹிஜாபின் மடிப்புக்குக் கீழிருந்த பையை அவள் கை காட்டிய போது அதை எடுத்துத் தர அனுமதித்தான். ஆனால், முன்பொரு முறை, ஒரு பெண்ணை இப்படி அனுமதித்த போது அவள் அவனுடைய கண்களில் வாசனைத் திரவியத்தை தெளித்து விட்டது நினைவில் வந்து போனது. அதனால் அவனே பிந்த்தாவின் முக்காட்டை தலைக்கு மேலே இழுத்தான். அதை மறுத்துப் போராடிய சிறிய போராட்டத்தில் அவளுடைய மூக்குக்கண்ணாடி கைப்பையிலிருந்து நழுவி அவள் காலடியில் விழுந்து உடைந்தது.

"சத்தியமாக உன்னை நான் கொல்லப் போகிறேன்."

அவனால் அதைச் செய்ய முடியும் என்றும் அவளுக்குத் தெரிந்தது. இப்போது அவனை அனுமதிப்பதைத் தவிர அவளுக்கு வேறு வழியில்லை.

அவள் முக்காட்டை உருவி எறிந்தவன், கைப்பையைத் துழாவி, அதிலிருந்த அலைபேசி, சுருட்டி வைத்திருந்த கொஞ்சம் பணம் எல்லாவற்றையும் எடுத்து தன் பாக்கெட்டில் போட்டுக்கொண்டான்.

"தங்கம் வேண்டும்." அப்போதுதான் அவன் முகத்தைப் பார்த்தாள் பிந்த்தா.

அவனுக்கு சுமார் இருபத்தைந்து வயதிருக்கும், கருத்த உதடுகள் கொண்டவன், குட்டையான சுருட்டை முடி ஒரு சிறு எறும்புப் புற்று போல் தலையில் பரவியிருந்தது. மீண்டும் வந்து அவளைப் பின்புறத்திலிருந்து கைகளை வளைத்துப் பிடித்துக் கொண்டான். கத்திமுனையில் அவளை படுக்கையறை வரை அப்படியே நடத்திச் சென்றான். கழுத்தில் பரவிய அவனது மூச்சும், அவன் உடலின் வெம்மையும் பிந்த்தாவை பலவீனமாக்கின. சிலமுறை அவள் கால்கள் மடங்கின. நான்கு கால் விலங்கு நடப்பது போல அவள் உடலைப் பற்றிக் கொண்டு நடந்தான். அவள் உடலின் பின்புறம் அவனது ஜீன்சில் உராய்ந்ததில் அவன் உறுப்பு கிளர்வடைந்து பெருத்திருப்பதை தன் உடலின் மீது உணர்ந்தாள் அவள்.

படுக்கை அறையில் நுழைந்ததும் அவளை விடுவித்தான். பெட்டியைத் திறக்கக் குனிந்தபோது அவளது பின்புறம் முழுமையாக அவன் கண்ணில் பட்டது. நகைகளைக் கையிலெடுத்துக் கொண்டு அவன் புறமாகத் திரும்பிய போது இவள் அப்படி ஒன்றும் வயதானவள் இல்லை என்று அவனுக்குத் தோன்றியது. இடுப்பும் மார்பும் மட்டும் கொஞ்சம் பெரியதாக இருப்பது போலுள்ளது என்று நினைத்துக் கொண்டான். அவ்வளவாக அம்மா ரகம் மாதிரி தெரியவில்லை. ஆனால் அவள் வாயைத் திறந்த போது தெரிந்த தங்கப் பல்லைக் கண்டதும் அவன் முகம் சட்டென மாறிப் போனது.

அவளை நோக்கி வந்தவனிடம், "மகனே, நான் உன் அம்மா வயது இருப்பேன், விட்டுவிடு."

"என் அம்மாவைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? ஒன்றுமே தெரியாது."

அவன் கத்தியை சட்டைக்குள் போட்டுக் கொண்டே, கையை உயர்த்திக் கொண்டே அவள் பக்கமாக வந்தான். ஜீன்ஸ் பாக்கெட்டிலிருந்து கைக்குட்டையை எடுத்துக் கொண்டு அவளருகே வந்த போது அச்சத்தில் உறைந்து போனாள் பிந்த்தா.

"உனக்கு ரத்தம் வடிகிறது பார்" அவள் கழுத்தின் அருகே நெருங்கி, கத்தி கீறிய இடத்தை கைக்குட்டையால் மெதுவாகத் துடைத்தான்.

"இந்தக் காயம் அப்படி ஒன்றும் ஆழமானது இல்லை, புரியுதா?"

அவள் மார்பு இப்போது அவனுக்கு மிக அருகில், ஒரு அங்குல இடைவெளியில் இருந்தது. அவள் கண்களை அவன் உற்று நோக்கியபோது மூச்சு படபடத்தது.

"இப்போது நான் கிளம்புகிறேன், சரியா? இப்படி எல்லாம் நடக்கும் என்று நான் நினைக்கவில்லை...நான்...அப்படி...சும்மாதான்..." என்று ஏதேதோ கோர்வையில்லாமல் பேசியபடியே சட்டென்று திரும்பி அறையை விட்டு வெளியேறினான்.

அவள் வீட்டிலிருந்த பொருட்களையெல்லாம் எடுத்துக் கொண்டு போய்விட்டான். அவளுள் அவன் விதைத்துச் சென்ற விழிப்பின் விதை, வெடித்து முளை விட்டு வளர்ந்து பிணவாடை வீசும் மலராக மலரப் போவதும், அதன் வாடை கற்பனை செய்ய முடியாத பேரதிர்வுகளை அவள் வாழ்வில் உண்டாக்கப் போவதையும் அப்போது பிந்த்தா அறிந்திருக்கவில்லை.

—

இந்தத் திருட்டு நடந்தது பற்றி எதுவும் அறியாத ஹதீஸா, அடுத்த நாள் காலை தன் அம்மாவைப் பார்ப்பதற்காக 'கானோ' நகரிலிருந்து வந்திருந்தாள். வீட்டிலிருந்து காணாமல் போன பொருள்களும், அம்மாவின் மூக்குக் கண்ணாடி உடைந்த மர்மமும் நிச்சயமாக அவளைக் குழப்பத்தில் ஆழ்த்தப் போகிறது.

பையை அறையின் ஓரத்தின் வைக்கப் போனவளைப் பார்த்து "சித்தீ" என்று கத்திக்கொண்டே அவள் மீது பாய்ந்தாள் உம்மி. குதித்தோடி வந்து அவள் மடியில் அமர்ந்த உம்மி, "சித்தி, நேற்று நம் வீட்டுக்குத் திருடன் வந்துவிட்டான் தெரியுமா" என்று விஷயத்தைப் போட்டுடைத்தாள்.

"இன்னாலில்லாஹி வ-இன்னா இலைஃகி ராஜ்ஜிவூன்..."

உம்மியை கையால் நகர்த்திவிட்டு நிமிர்ந்த ஹதீஸா, வறண்ட புன்னகையுடன் கையசைத்தவாறு அவளை எதிர் கொண்ட அம்மாவின் பக்கம் திரும்பினாள்.

"என்னவாயிற்று ஹஜ்ஜியா?"

"என்ன நடந்ததென்று சொல்கிறேன்." தன் அறையிலிருந்து சடாரென வெளியே வந்தாள் ஃபைஸா, "நாங்கள் பள்ளிக்குச் சென்றதும் வீட்டை உடைத்துக் கொண்டு வந்த திருடர்கள், டீவீடி, செட்டாப் பாக்ஸ், இன்னும்

என்னென்ன பொருட்களோ தெரியவில்லை, எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள்."

"வீட்டுக்கு வந்தவர்களை இப்படியா வரவேற்பது? இந்தப் பெண்களை என்ன செய்வது... இங்கிருந்து நகருங்கள்"என்று கோபத்துடன் அவர்கள் இருவரையும் விரட்டினாள் பிந்த்தா

இப்படியாக, அதிக ஆரவாரமில்லாமல், அதே சமயம் குறை சொல்லும் படியாகவும் இல்லாமல் தன் தாய் வீட்டில் ஹதீஸா வரவேற்கப்பட்டாள்.

சற்று நேரம் கழித்து, ஒய்வாக அம்மாவின் படுக்கையில் அமர்ந்து கொண்டே Major sins புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தவள், அதிலுள்ள விவரங்களைப் படித்து ஆச்சரியமடைந்து, படிக்கப் படிக்க தலையை ஆட்டி, அவ்வப்போது புத்தகத்தின் வரிகளை வாய்விட்டுப் பாராட்டியும் கொண்டிருந்தாள்.

"அம்மா, இப்படியெல்லாம் கொடும் பாவங்கள் இருக்கிறதென்று எனக்கு இதுவரை தெரியவே இல்லை."

பதில் ஏதும் வராததால், புத்தகத்திலிருந்து தலையைத் தூக்கிப் பார்த்தாள்.

ஹஜியா பிந்த்தா இன்னும் பிரார்த்தனைக் கம்பளத்தில் அமர்ந்து, பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். அவளை முழுவதுமாக மூடியிருந்த மஞ்சள் ஹிஜாபின் நுனி பிரார்த்தனைக்குப் பிறகு வாசிப்பதற்கென எடுத்து வந்து பக்கத்தில் வைத்திருந்த புனித நூலின் மீது படர்ந்திருந்தது. பிந்த்தா, வீட்டின் பழுப்பு வண்ணச் சுவரின் பக்கம் திரும்பி அமர்ந்திருந்ததால் ஹதீஸாவால் அன்னையின் முகத்தைக் காண முடியவில்லை.

மறுபடியும் புத்தகத்துள் அமிழ்ந்து போனாள் ஹதீஸா. காகிதவனத்தினுள் எப்போதோ காலமாகியிருந்த ஷேக் விதைத்திருந்த தங்கக்கட்டிகளை பறித்தாள். தனக்குத் தெரியாத விஷயங்கள் எவ்வளவு இருக்கிறது என நினைத்து பெருமூச்சுடன் புத்தகத்தை மூடினாள். புத்தகத்தை மூடி வைத்தவள் அதன் அட்டையின் முதுகுப்பக்கதிலிருந்த நுண்ணிய ஓவிய வடிவத்தைக் கையால் வருடிப் பார்த்தாள். ஒரு நூற்றாண்டுக்குப் பிறகும் வாசிப்பவர் மனதில் வியப்பை உருவாக்கும் புத்தகத்தை எழுதுவதென்பது எப்பேர்ப்பட்ட அனுபவமாக இருக்கும் என்று சிந்தித்துக்கொண்டிருந்தாள். கவனமாக அதை ஸ்டூலில் வைத்த போது, கை தவறி பிந்த்தாவின் கண்ணாடியைத் தட்டி விட்டவள், அது கீழே விழும் முன்னே பிடித்து விட்டாள்.

"அம்மா, உங்கள் கண்ணாடி எப்படி உடைந்தது?"

முக்காடுக்குள்ளிருந்த பிந்த்தாவின் தலை மட்டும் அசைந்தது. பதி லேதும் வரவில்லை

"ஹஜியா"

"ம்ம்"

"வந்ததிலிருந்து நானே பேசிக் கொண்டு இருக்கிறேன், நீங்கள் ஒரு வார்த்தை கூட பேசவில்லையே?"

"என்னை விடு...என் மனது ஏனோ இன்று தெளிவாக இல்லை...என்ன கேட்டாய்?"

"உங்க கண்ணாடி, அதற்கு என்னவாயிற்று?"

"உடைந்து போய்விட்டது."

"அது தெரிகிறது, அது எப்படி என்றுதான் கேட்டேன்."

"சுவரில் இடித்துக் கொண்டேன்."

ஹதீஸா விழித்தாள். "அதெப்படி சுவரின் மீது போய் இடித்துக் கொள்ள முடியும்?"

"இருட்டாக இருந்தது"

"ஓஓ..."

காலையில் அவள் வந்தபோது, அம்மாவை விட, முற்பகலின் இளங் கதிர் வெம்மை அவளை இதமாக வரவேற்றது போல உணர்ந்தாள். அம்மா ஏன் இப்படி எதிலம் கவனமில்லாமல் அலைந்து கொண்டிருக்கிறாள் என்று குழப்பமாக இருந்தது. அபுஜாவின் புறநகர் பகுதிக்கு அம்மா குடிபெயர்ந்த இந்த ஏழு மாதங்களாகத் தான் வந்து பார்க்கவில்லை என்ற குற்ற உணர்வு ஹதீஸாவுக்கு இருந்து கொண்டிருந்தது. ஆனால், இப்போது, வந்ததே தேவையற்றதோ என எண்ணத் தொடங்கிவிட்டாள்.

பிந்த்தாவின் இளைய மகள் ஹதீஸா, இருபத்தேழு வயதிலேயே கணவனையும், மூன்று குறும்புக்கார ஆண் குழந்தைகளையும் நல்ல முறையில் கவனித்துக் கொள்கிறாள். வீட்டை அழகாக வைத்துக்கொள்ள மிகவும் பிடிக்கும். யாராவது எதையாவது இடம் மாற்றி வைத்துவிட்டால் போதும், ஹதீஸாவுக்கு, வீட்டை ஒழுங்கு செய்ய ஒரு வாய்ப்பு வழங்கியது போலாகி விடும். எப்போதும் வீட்டிலுள்ள பொருட்களை இடம் மாற்றி ஒழுங்குபடுத்திக் கொண்டும், தோட்டத்தில் ஏதோ செடிகளையும், புதர்க ளையும் பிடுங்கிக்கொண்டும், பின் கிடைத்த இடங்களிலெல்லாம் வேறு

ஏதோ செடிகளை நட்டு வைத்தும் பொழுது போக்கிக் கொண்டிருப்பாள். பெண்பிள்ளையைப் போல் சைகைகள் செய்து பேசும் கண்ணாடியணிந்த அவள் கணவன் சாலிசு மாலை வீடு வரும்போது நாற்காலி, டீப்பாய் எல்லாம் இடம் மாறியிருக்கும். எத்தனையோ முறை கடிந்து கொண்ட போதும், ஹதீஸா அதைப் பொருட்படுத்துவதே இல்லை என்று புரிந்து கொண்டவன் இப்போதெல்லாம் கிடைத்த இடத்தில் அமர்ந்து கொள்கிறான்.

கடந்த முறை பிந்த்தா அவளைப் பார்க்க வந்திருந்தபோது, பிரான்ஸ் நாட்டில், முகத்தை மறைக்கும் புர்க்கா தடை செய்யப்பட்டிருந்தது குறித்து கடும் கோபத்திலும், விரக்தியிலும் இருந்தாள். அவள் அன்று கறுப்பு நிறக் கையுறையும் காலுறையும் போட்டிருந்தாள். உடல் முழுதும் சுற்றியிருக்கும் நிகாபை அப்போதுதான் உபயோகிக்கப் பழகியிருந்தாள். இம்முறை, வண்ண வண்ண மணியலங்காரங்களும் லேஸும் வைத்துத் தைக்கப்பட்ட நீளம் குறைவான ஹிஜாப் அணிந்திருந்தாள்.

பிந்த்தா ஒரு நீண்ட பெருமூச்சை விட்டாள். ஹதீஸாவும் அவளைத் தொடர்ந்து பெருமூச்சு விட்டாள். திரும்பவும் அந்தக் கண்ணாடியை எடுத்த இடத்திலேயே வைத்து விட்டுத் தன் அம்மாவை நோக்கினாள். அவள் முகம் இன்னும் சுவரைப் பார்த்துக்கொண்டு இருந்தது.

"ஹஜியா, இந்தக் கண்ணாடி உடைந்ததற்கும், வீட்டில் திருட்டு நடந்த தற்கும் சம்பந்தமில்லயே?"

ஹஜியா இப்போது புன்னகைத்தாள். அந்தப் புன்னகை ஹதீஸாவை சமாதானப்படுத்தியதைக் காட்டிலும் அமைதியைக் குலைத்தது.

"இல்லவே இல்லை..."

"என்னதான் நடந்தது ?"

"நான் சுவரில் முட்டிக் கொண்டேன்."

"அதுவல்ல, நான் திருட்டு நடந்ததைப் பற்றிக் கேட்டேன்."

"ஓ, பெரிதாக ஒன்றுமில்லை...ஏதோ ஒரு திருட்டுப்பயல் போதை மருந்து வாங்கும் செலவுக்காக நம் வீட்டை உடைத்துக் கொண்டு உள்ளே வந்து பொருளையெல்லாம் எடுத்துக்கொண்டு போய்விட்டான்."

"அப்படியா? எவையெல்லாம் எடுத்துக்கொண்டு போயிருக்கான்?"

மீண்டும் சுவருக்கு முகத்தைக் காட்டியவாறு திரும்பிக்கொண்டாள் பிந்த்தா.

ஹதீஸா அவள் அம்மாவின் பக்கமாகச் சாய்ந்து, சுவர்களை ஊடுருவிய

படி, கவிந்துகொண்டிருக்கும் இருளில் ஏதோ மர்மத்தைத் துழாவி அலையும் தன் தாயின் இலக்கற்ற கண்களைப் பார்த்தாள்.

ஹதீஸா தன்னைத் துளைப்பது போல் பார்ப்பதை உணர்ந்த பிந்த்தா, அவள் பக்கம் முகத்தைத் திருப்பிக் கேட்டாள்.

"நீ எப்போதாவது அவனை நினைத்துப் பார்ப்பாயா?"

"யாரை? அப்பாவையா?'

"இல்லை, உன் சகோதரனை..."

"யார், முன்க்கைலாவையா?"

அமைதியில் ஆழ்ந்தாள் பிந்த்தா.

"ம்ம், இன்னொருவன்..."

ஹதீஸாவின் விழிகள் விரிந்தன.

"யாரூ..."

"சில நேரங்களில் நினைத்துக்கொள்வேன்...அவன் உயிருடன் இருந்திருந்தால் இந்நேரம் என்னவாக இருப்பான் என்று..." தனது எண்ணங்களை மௌனம் விழுங்கட்டும் என்று அமைதியாக இருந்தாள் பிந்த்தா.

அந்த மௌனம் ஹதீஸாவின் குழப்பத்தை அதிகரித்தது.

உண்மையிலேயே யாரூவைப் பற்றித்தான் பேசுகிறோமா? அவன் இறந்துபோன இந்தப் பதினைந்து வருடங்களில் இப்போதுதான் முதல் முறையாக அவனைப் பற்றி அம்மா பேசுகிறாள்... நினைத்துப் பார்த்தால் அவனது சவப்பெட்டியோடு அவனது பெயரையும், சேர்த்தே புதைத்து விட்டாற் போலிருந்தது. அவனது நினைவுகளையும் கூடத்தான். ஹதீஸா உடனே தன் அம்மாவிடம் நெருங்கி, "அம்மா, நீங்கள் நலமாகத்தானே இருக்கிறீர்கள்" என்று கேட்டாள்.

அதற்குள், வீட்டுக்குள் வந்த ஃபைஸா, "ஹதீஸா அத்தை" என்று ஆரம்பிக்கும் முன், அப்படிச் சொல்லாதே, உனக்கு எத்தனை தரம் சொல்வது, என்னுடைய பெயர் கதீஜா. அதுதான் சரியான பெயர். க- தி -ஜா. சொல்லு பார்க்கலாம்."

"கதீஜா அத்தை...ஆனால் எல்லோரும் ஹதீஸா என்றுதானே சொல்கிறார்கள்...பார்க்கப்போனால் நீ என் அத்தை உறவு கூட இல்லதானே?"

"இறைவா, இந்தப் பெண்...உனக்கு மரியாதை கொஞ்சம் கூட இல்ல, கதீஜா தான் சிதைந்து ஹதீஸா ஆகி விட்டது...அப்புறம் மறந்து விடாதே,

நான் உன் அத்தை இல்லையோ என்னவோ, ஆனால் உன்னுடைய தோழி இல்ல, அதை ஞாபகம் வைத்துக்கொள்.”

“சரிங்க கதீஜா அத்தை” சொல்லிக்கொண்டே, கேன்னிவுட் படங்களிலும், சோயாயா நாவல்களிலும் வரும் நாயகிகள் போல ஃபிரில்கள் தரையில் புரள, கையை மடி மேல் வைத்து ராணி போல அமர்ந்தாள் ஃபைஸா. அந்தப் புத்தகங்களின் வாசிப்புக்கும், படங்களுக்கும் தான் அடிமையாகிவிட்டதை யாரிடமும் மனம் திறந்து அவளால் ஒப்புக்கொள்ள முடியாது. அதுவும் பிந்த்தாவிடம் சொல்லவே முடியாது. தன் தலையில் எந்நேரமும் உலவிக்கொண்டிருக்கும் நிழல்களிலிருந்து தப்பிக்க இவற்றில் தான் அடைக்கலமாயிருந்தாள் ஃபைஸா.

பிந்த்தாவின் தங்கை அஸபே ஜாஸ் நகரில் நடந்த வன்முறையில் தன் மகனையும், கணவனையும் இழந்த பிறகு, கிராமத்துக்கே திரும்பிவிட்டாள். ஆனால், அவள் இரண்டாவது திருமணம் செய்துகொள்ள முடிவு செய்த போது, அதற்குத் தேர்ந்தெடுத்த மனிதனை தனது அப்பாவாக ஏற்றுக் கொள்ள ஃபைஸாவால் இயலவில்லை. தன் அப்பா இறந்துவிட்டதும், எப்போதோ அவருக்கு மனைவி என்பதெல்லாம் தேவையற்றுப் போய் விட்டது என்னும் உண்மையை அறிந்திருந்தாலும், இந்த மனிதனை அவளுக்குப் பிடிக்கவில்லை. நாகரிகமான தந்தைக்குப் பதிலாக, துருத்திய பற்களோடும், அழுக்குப் பாதங்களோடும் வலம் வரும் சற்றும் நாசூக்கற்ற அந்தக் கிராமத்து மனிதனை அவளுக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. கிராமத்துக்குச் செல்லவே விருப்பப்படாதவள் அங்கே போய் எப்படி வாழப்போகிறாள்?

ஜாஸ் நகரத்தில் நிகழ்ந்த இளம் பிராயத்தின் வாழ்வை உலுக்கிய கொடிய நிகழ்வுகளிலிருந்து மனதை மடை மாற்ற, இங்கு தங்கி சினிமா பார்ப்பதும், கானோவிலிருந்து வரும் கதைப்புத்தகங்களைப் படிப்பதையும் விட, கிராமத்திலிருந்தால் அலி நுஹு போன்ற உயர்வர்க்க ஆணை அவள் நினைத்துக் கூட பார்த்திருக்க முடியுமா? அந்த சினிமா நடிகன் மீது அவள் கொண்டிருந்த காதலுக்கு சாட்சியாக கண்ணாடியின் ஓரத்தில், அலமாரிக் கதவில், பழுப்பு வண்ணச்சுவரில் கதவின், ஜன்னல்களின் மரச்சட்டங்களில், தனது நோட்டுப் புத்தகத்தில், அலமாரிக்குள் ஒளித்துவைத்திருக்கும் ஓவியக்கலை வகுப்புக்கான நிலைச்சட்டம் என்று எல்லாவற்றிலும் அலியின் படம் போட்ட ஸ்டிக்கரை ஒட்டி வைத்திருந்தாள்.

அலி நுஹு இந்தக் கிராமத்துப் பெண் பற்றி என்ன நினைத்தால் என்ன?

அபுஜா நகரத்தின் எல்லையோரத்தில், மிக விசாலமான மராரபா

என்னும் புறநகரில் வசிப்பது, நகரின் இதயப்பகுதியில் வசிப்பதிலிருந்து நிச்சயம் வேறுபட்டது. ஆனால், குறைந்த பட்சம், தன் அழகிய கனவுகளை இங்கு அவளால் பராமரிக்க முடிகிறது. முகத்துக்கு அலங்காரம் செய்யவும், சினிமா பார்க்கவும், சோயாயா நாவல் வாசிக்கவும் முடிகிறது. அந்த நாவல்களில், பெரிய காரில் உலா வரும் கம்பீரமான ஆண்கள், நிலவைப் போன்ற கண்களையும், கழுகு போன்ற கூரிய நாசியுடைய பெண்களிடம் காதல் கொள்வதை வாசிக்கமுடிகிறது. அந்தப் பெண்கள் ஹதீஸா அத்தை போலவே அழகானவர்கள்.

"உங்கள் கையில மருதாணி ரொம்ப அழகாக இருக்கிறது." ஹதீஸாவின் மென்மையான உள்ளங்கையில் வரையப்பட் டிருந்த நுணுக்கமான மருதாணி வடிவத்தை ஆச்சர்யமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். புன்னகைத்துக்கொண்டிருந்த ஹதீஸாவை நிமிர்ந்து பார்த்து, "நான் சோயாயா நாவல் எழுதினால் உங்கள் முகத்தைத்தான் புத்தகத்தின் முகப்புப் படமாக வைப்பேன்" என்றாள்.

கடகடவென சிரித்தாள் ஹதீஸா. "முட்டாள் பெண்ணே, அப்புறம் என் பொறாமை பிடித்த கணவன், உன்னைக் கொன்றுவிட்டு, அத்தனை புத்தகங்களையும் எரித்து விடுவார் தெரியுமா? ஆமாம், இதையெல்லாம் யார் படிக்கிறார்கள் இப்போது?"

"இந்தப் பெண்தான் அதையெல்லாம் படிக்கிறாள்."

இருவரும் திரும்பிப் பார்த்தபோது பிந்த்தா அங்கே நின்று கொண்டிருந்தாள்.

பிந்த்தா நேராக அவர்களைப் பார்த்து "ஆப்பிரிக்கா மேஜிக்ல படம் பார்க்காத நேரம் எல்லாம், இந்தப் புத்தகங்களைத்தான் காலையிலிருந்து இரவுவரை படித்துக்கொண்டே இருப்பாள். இதெல்லாம் இவளுக்கு எங்கிருந்து கிடைக்கிறதென்று யோசித்துக் கொண்டிருந்தபோது, அந்தக் குள்ளப் பெண்கள்தான் கொண்டு வந்து தருகிறார்கள் என்று தெரிந்தது."

"என்ன சொல்றீங்க ஹஜியா," ஃபைஸா உடனே மறுத்தாள்.

"எந்தக் குள்ளப் பெண்கள்?"

"அது ஏதோ இரண்டு குள்ளமான பெண்கள்...அவர்களிடம்தான் சினேகம் இப்போது...இங்கே பக்கத்தில்தான் குடியிருக்கிறார்கள்."

"உங்களுக்கு அவர்களைப் பிடிக்கவில்லை போலத் தெரிகிறதே ஹஜியா?"

"அந்தப் பெண்களுக்கு வயதுக்கு மீறின சூட்டிகை. எனக்கென்னவோ

ஃபைஸா அவர்களோடு பழகுவதை நிறுத்திவிட்டால் நன்றாக இருக்கு மென்று தோன்றுகிறது."

ஹதீஸா முகத்தைச் சுருக்கினாள், "ஃபைஸா, ஒழுங்காக நடந்து கொள், அந்தமாதிரி கெட்ட சகவாசம் வேண்டாம் உனக்கு. வெட்கம் கெட்ட பெண்கள்."

உதட்டைச் சுழித்துக்கொண்டு, முகத்தைத் திருப்பிக்கொண்டாள் ஃபைஸா.

"எப்படியோ, இப்பதான் செட்டாப் பாக்ஸ் போய்விட்டதே, அந்த மாதிரி உபயோகமில்லாத சேனல் எல்லாம் பார்க்க வழியில்லை இனி."

ஹஸீதா தன் தலை முக்காட்டை சரி செய்து கொண்டாள்.

"உபயோகமில்லாத சேனல்களா? ஹா!! எப்படியோ, அல்ஹாஜி முன்க்கைலா இன்னொன்று வாங்கிக் கொடுத்துவிடுவார்...இன்ஷால்லாஹ்!"

"உன்கிட்ட அப்படியா சொன்னான்?" அப்படிக் கேட்ட ஞாபகம் இல்லாததால் பிந்த்தாவின் குரல் சற்று ஓங்கி ஒலித்தது..

"இல்லை...இதெல்லாம் அவர்தானே வாங்கிக் கொடுத்தார். அதனால், திருட்டுப் போனதையும் இன்ஷா அல்லா, அவரே மறுபடி வாங்கிக் கொடுப்பார்னு நினைக்கிறேன்."

இப்போது ஹதீஸா தன் தாயின் பக்கம் திரும்பினாள் "இந்த கொள்ளை பற்றி போலீஸில் புகார் கொடுத்து விட்டீர்களா?"

"போலீஸா?" பிந்த்தா சிரித்தாள். "நான் இறைவனிடத்தில் புகார் கொடுத்துவிட்டேன்."

"எப்போதிருந்து அல்லாஹ் போலீஸாக மாறினார் ஹஜியா?"

"அவர் தன் வழியில் நீதியை வழங்குவார். குற்றமற்ற நிரபராதிகளைச் சுட்டுக்கொல்லும் காவலர்களுக்கும் கூட அவர் தண்டனை தருவார்."

பிந்த்தாவின் குரலில் இருந்த குரோதம் ஹதீஸாவை பயமுறுத்தியது.

இத்தனை வருடங்களாக நினைத்துப் பார்த்திராத யாரூவின் நினைவைத் தோண்டி எடுத்ததால்தான் இதுபோலப் பேசுகிறாள் என்று தோன்றியது.

"இருந்தாலும், முறைப்படி போலீஸுக்கு சொல்லி இருக்கவேண்டும், என்னவாகும் என்று நமக்கே தெரியாது."

அப்போது மாலை நேரத் தொழுகைக்கான அழைப்பு ஒலித்தது...அதில்

கவனத்தை திருப்பிக் கொண்டாள் பிந்த்தா, "ஃபைஸா, உன் தங்கையைத் தேடு, பக்கத்து வீட்டில் எங்காவது விளையாடிக்கொண்டு இருப்பாள், போய் அழைத்துக்கொண்டு வா."

"நானா?" இருக்கையிலிருந்து துள்ளி எழுந்தாள் ஃபைஸா. தனது முகத்திரையை தோளில் போட்டுக்கொண்டே நகர்ந்தாள். அவள் போன பின்னும்கூட அறையெங்கும் அடர்த்தியான வாசனைத் திரவியத்தின் மணம் கமழ்ந்தது. ஒரு கணம் அதை மூச்சிழுத்து உணர்ந்த ஹதீஸா, பின் கையை ஆட்டி, அதன் வாசனையிலிருந்து விடுவித்துக் கொள்ள முயன்றாள். அவள் கண்கள், அறையை நோட்டமிட்டன. சோபையிழந்த திரைச்சீலைகள், மூலையில் துவைக்காமல் குவிந்து கிடந்த அழுக்குத் துணிகள், குப்பையாக்கி கிடந்த தரை எல்லாம் அவள் கண்ணில் பட்டது.

"ஹஜியா, உங்க கட்டிலை நகர்த்தி, இந்த அறையைக் கொஞ்சம் மாற்றி அமைக்க உங்களுக்கு உதவி செய்யட்டுமா?"

உடனே, ஹதீஸா எழுந்து கொள்ளும் முன், புனித நூலை எடுத்து அவள் கையில் கொடுத்தாள் பிந்த்தா. பின்னர் எழுந்துபோய் தொழுகைப் பாடங்களைச் சொல்லத் தொடங்கினாள்.

ஹதீஸா, ஒரு பெருமூச்சுடன் புனித நூலை திரும்ப மேசையின் மேல் இருந்த புத்தகத்தின் மேல் வைத்துவிட்டு, தன் அங்கியை அள்ளிக்கொண்டு அறையைவிட்டு நகர்ந்தாள்.

—

தூக்கம் பிடிக்காமல் சலனப்பட்ட மனதுடன் படுக்கையில் புரண்டு படுத்துக்கொண்டிருந்தாள் ஹதீஸா.

"என்னவாயிற்று ஹஜியாவுக்கு?"

சின்னப்பெண் உம்மியின் மெல்லிய குறட்டை அறையை நிறைத்துக் கொண்டிருந்தது. அவளுக்கு அருகில் படுத்தவாறு கைபேசியில் ஒளிரும் விளக்கு வெளிச்சத்தில் புத்தகம் படித்துக் கொண்டிருந்த ஃபைஸா, முகத்தை விலக்கி, பெருமூச்சுவிட்டாள்.

"ஹஜியா? எனக்கும் தெரியவில்லை..." மீண்டும் முகத்தைப் புத்தகத் துக்குள் புதைத்துக்கொண்டாள் ஃபைஸா.

அவள்புறம் திரும்பி "எப்போதிருந்து இப்படி இருக்காங்க?" என்று கேட்டாள்.

"எப்போதிருந்தா? தெரியவில்லை... நேற்றிலிருந்து என்று நினைக்கி றேன்."

"இந்தத் திருட்டைப் பத்தி ஏனோ அதிகம் பேசமாட்டேனென் கிறார்கள். அப்புறம் யாரூவைப்பத்தி திடீரென்று ஏன் பேசுகிறார்கள் என்றும் தெரியவில்லை...அவனைப்பற்றி இதற்கு முன்பு பேசியதே இல்லை."

"யாரூ? இறந்து போன உங்கள் சகோதரனா?"

நெற்றியை விரலால் தேய்த்தபடியே, தலையாட்டினாள் ஹதீஸா. "கண்ணாடி உடைந்து போனதற்கு அவர் சொன்ன காரணமும் நம்பும் படியாக இல்லை. உண்மையில் என்னதான் நடந்தது?"

'என்ன நடந்தது?' ஃபைஸாவும் புத்தகத்தைப் போர்வையின் மேல் கவிழ்த்து வைத்துவிட்டு, சிறு பெருமூச்சுடன் யோசித்தாள். புத்தகத்தின் அட்டையில் ஒரு அழகான பெண்ணின் முகப்புப் படம் பளிச்சிட்டது. அட்டையில் "பியாயர் ஆரே" என்று அச்சிடப்பட்டு இருந்தது. அவள் கைபேசியின் ஒளிர்திரை அறையெங்கும் படர்ந்து இருளை விரட்டியது. போர்வையை இழுத்து மார்பு வரை போர்த்திக்கொண்டாள்.

"என்ன நடந்ததென்றால், நான் ஸ்கூலில் இருந்து வந்தபோது, வாசல் கதவு திறந்து கிடந்தது. டிவிடி, செட்டாப் பாக்ஸ் இரண்டையும் காணவில்லை. ஹஜியாவின் கண்ணாடி தரையில் உடைந்து கிடந்தது. அதை எடுத்துக்கொண்டு போய் அவர்கள் கிட்டக் கொடுக்கும்போது ஒரு மாதிரியாக உட்கார்ந்திருந்தாங்க." பேச்சை நிறுத்தி, ஹஜியா போலவே தானும் விறைப்பாக, பார்வை நிலைகுத்தி அமர்ந்து காண்பித்தாள் ஃபைஸா.

"என்ன நடந்தது என்று நான் கேட்டபோது, ஹ்ம்ம்ம், என்று பெரு மூச்சு விட்டுக்கொண்டு வீட்டிற்குள் திருடன் புகுந்துவிட்டான் என்று சொன்னார்கள்."

ஹதீஸாவிடமிருந்து நெடுநேரம் பதிலேதும் வராததால் ஃபைஸா கட்டிலில் அவளுக்குரிய இடத்தில் திரும்பிப் படுத்துக் கொண்டாள். உம்மி ஏதோதோ சப்தம் எழுப்பியபடியே ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள். ஃபைஸாவும் ஹதீஸாவும் அவள் பக்கமாகப் பார்வையைத் திருப்பி னார்கள்.

ஹதீஸாவும் படுக்கையில் சாய்ந்தாள். "ஒரு ஆண் இல்லாத வீட்டில் நுழைந்து திருடிச்செல்வது இந்தத் திருட்டுப் பயல்களுக்கு மிக சுலபமான காரியம்...அம்மா உண்மையாகவே தனியாத்தான் இருக்கிறார்களா? பத்து வருடங்களாக ஆண் துணை இல்லாமல் எப்படிக் காலம் கழிக்கிறாள்?"

"அம்மாவோடு பேசிக்கொண்டு இருப்பாரே ஒருவர், அவர் என்னவானார்?"

"அந்த ஆளா? ஃபைஸாவின் குரலில் ஏளனம் தொனித்தது. யா அல்லாஹ், அந்த அசிங்கம் பிடித்த கிழவன், மாலம் ஹரூணா, அவருக்கு ஏற்கெனவே இரண்டு மனைவி இருக்கிறார்கள்."

"ஹஜியாவும் வயசானவர்கள்தானே? அவரைப் பிடித்திருக்கிறதா அவங்களுக்கு?"

"பிடிக்குமா? ஐயோ, அவரை எப்படிப் பிடிக்கும்?"

சிறிது நேரம் ஹதீஸா ஒன்றும் பேசவில்லை. ஃபைஸாவின் மெல்லிய குறட்டை ஒலி கேட்டதும் அவளை எழுப்பி, ஃபோனின் திரையில் ஒளிரும் வெளிச்சத்தை அணைக்கச் சொன்னாள்.

"எனக்கு இருளில் தூங்கப்பிடிக்காது" தூக்கக் கலக்கத்தில் பேசியவள் மீண்டும் உறங்கிவிட்டாள்.

ஹதீஸா அகால இரவின் ஒலிகளைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

எங்கோ சுவற்றின் பிளவில் ஒளிந்து கத்திக்கொண்டிருக்கும் சில் வண்டின் தனித்த குரல் கேட்டது. பிறந்த குழந்தையின் அழுகுரல் போல இருந்த பூனையின் மியாவ் சப்தம் பயத்தை ஏற்படுத்தியது. சிறிது நேரம் ஒலித்த அந்த சப்தம் அடங்கியபின் அமைதி நிலவியது. அதன்பின், நிலவு வெளிச்சத்தில் சண்டையிட்டுக் கொண்டிருந்த இரண்டு பூனைகளின் அலறல் அமைதியை ஊடுருவி ஒலித்தது. கடைசியில் எல்லாம் அடங்கி, கூரிய நிசப்தம் குடிகொண்டது. இப்போது ஃபைஸாவின் சன்னமான குறட்டை நேரம் செல்லச்செல்ல பயங்கலந்த முனகலாக மாறிக்கொண்டிருந்தது.

"இல்லை...வேண்டாம்..."ஃபைஸா தன் கனவில் தோன்றிய நிழலுருவங்களுடன் ஆக்ரோஷமாகச் சண்டையிட்டு, கால்களை உதைத்தபடி போர்வையை உதறித் தள்ளினாள். பயந்துபோய் எழுந்த ஹதீஸா, அங்கிருந்து ஓடி விடுவதா இல்லை அந்தப் பெண்ணை எழுப்புவதா என்ற குழப்பத்தில் இருந்தபோதே, அடிபட்ட நாய்போல முனக ஆரம்பித்தாள் ஃபைஸா. பின் ஒரு சிசு தாயின் கருவில் மடிந்துகொள்வது போல கால்களை மடித்துப் படுத்துக்கொண்டவள் விரைவில் அமைதியாகிவிட்டாள். மென்மையான விரல்கள் கிடாரின் தந்தியை மீட்டுவதுபோல, அவளது மூச்சின் ஒலி இரவை மீட்டிக்கொண்டிருந்தது.

—

2

“பறக்க இயல்வதால் வண்ணத்துப்பூச்சி தன்னை ஒரு பறவையாகப் பாவித்துக் கொள்கிறது.”

1973 ஆம் வருடம், சஹாரா பாலையின் மணற்புழுதிக் காற்று வீசும் பருவத்தின் காலையொன்றில் முதல்முறையாக, கரப்பான்பூச்சிகளின் அச்சுறுத்தும் நெடிக்குக் கண்விழித்தாள் பிந்த்தா. அப்போது அவளுக்குப் பதினாறோ, பதினேழோ வயதிருக்கும். பிந்த்தாவின் அம்மாவுக்கு படிப்பு இல்லையென்பதால், எந்தத் தேதிகளையும் அவள் கணக்கிட்டு வைக்க இயலவில்லை. கிபியாவில் வாழும் மற்றவர்களைப் போலவே ஏதோ ஒரு நினைவோடு அல்லது நிகழ்வோடு தொடர்புபடுத்தியே நாட்களைக் கணக்கிடுவாள். அப்படியாகத்தான், மற்றவர்களின் பேச்சிலிருந்து, பிரிட்டனின் விக்டோரியா மஹாராணி, நைஜீரியாவுக்கு வந்த வருடத்தில்தான் பிறந்ததாக விவரம் சேகரித்து வைத்திருந்தாள் பிந்த்தா.

அன்றைய காலத்தில், சூரியன் உதயமாகும் முன்பே எழுந்து ஹரிக்கேன் விளக்கைப் பற்றவைத்து விடுவாள். தூங்கிக்கொண்டிருக்கும் தங்கை அஸபே சிணுங்குவதைப் பொருட்படுத்தாமல் அவள் படுக்கை யையும் இழுத்து உதறினாள். விளக்கின் வெளிச்சத்தில், பாய்க்கு அடியில், பாத்திரமாய் உபயோகிக்கும் சுரைக்காய் ஓடுகளுக்குள், துணிகள் வைத்திருக்கும் ஒரே சிறிய அலமாரிக்குள் என்று குடிலின் உள்ளே அனைத்து இடங்களையும் விடாமல் தேடிக் கொண்டிருந்தாள். எட்டுக்கால் பூச்சியின் உரிந்து கிடந்த தோல்தான் முதலில் கண்ணில் பட்டது. பின், இறந்து கிடந்த பெரிய வண்டு, சுவர்களின் பிளவு களில் எல்லாம் துடைப்பத்தின் ஈர்க்குச்சியை விட்டுத் தீவிரமாகத் தேடிய பின்னும் கரப்பான்பூச்சிகள் எதுவும் கிடைக்காததால் தன் முயற்சியை கைவிட்டாள்.

வெளியே சென்று, கைகால்களைக் கழுவிய பின் காலைப் பிரார்த்தனையும், தொழுகையையும் சொல்லி முடித்தாள். அதன்பின், வழக்கம் போல, சூரியனின் இளம் கதிரொளி படரும் காலையில், அதிர்ந்து பேசாத, ஊமையைப் போல் வாழ்ந்து கொண்டிருக்கும் தன் தாயுடன் இணைந்து வீட்டு வேலையைத் துவங்கினாள். இருவரும் அமைதியாக, தானியமாவை மெல்லிய துணியால் சலித்து எடுத்தார்கள். அவளின் கண்ணியமான, ஒல்லியான ஆனால் இடுப்பு பெருத்த ஃப்யூலானி தாயார், பேசுவதேயில்லை. பிந்த்தா குடும்பத்தின் மூத்த மகள். அதனால் அவர்கள் வழக்கப்படி அவளை யாரும் பெயர் சொல்லி அழைக்கமாட்டார்கள். அப்படிப் பெயரிட்டு அழைப்பது, முறையற்றது ஆகும். ஆனால், ஒவ்வொரு முறையும் அம்மாவின் முகத்தில் கண் இமைக்கும் நேரத்தில் மின்னலெனத் தோன்றி மறையும் ரகசிய அன்பை அப்படியே சேமித்துக்கொள்ள ஆசைப்படுவாள் பிந்த்தா. அம்மாவின் இதழ்கள் தன் பெயரை உச்சரிப்பதைக் கேட்க எதை வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராக இருந்தாள்... எதை வேண்டுமானாலும்...

சூரியவெளிச்சம் பிரகாசமானவுடன் காமு (தானியப்பொடியாலான உணவு) நிறைந்த தட்டைத் தலையில் சுமந்துகொண்டு, அழகிய மஞ்சள் ஆடை அணிந்த இடுப்பு அசைந்தாட அக்கம்பக்கத்து வீடுகளில் காமுக்களை விற்கக் கிளம்பினாள். அனைத்தையும் விற்றுமுடித்தவுடன், வீட்டிற்கு ஓடி, முகம் கழுவி, புளிப்புக் கஞ்சியையும், பருப்பு உருண்டைகளையும் சாப்பிட்டுவிட்டு, கோணித் துணியைக் கத்தரித்துத் தைத்த துணிப்பையைத் தோளில் மாட்டிக்கொண்டு பள்ளிக்கு ஓடுவாள்.

நடந்து சென்று பாலாரபா வீட்டை அடைந்தபோது பிந்த்தாவுக்காக அவள் வாசலிலேயே காத்திருந்தாள். இருவரும் சேர்ந்து ஹஜ்ஜோ வீட்டிற்குச் சென்று அவளையும் அழைத்துக்கொண்டு சாலிஹாவின் வீட்டுக்குப் போனார்கள். சாலிஹா பீன்ஸ் கேக்குகளை விற்று முடிக்காததால் வீடு திரும்பியிருக்கவில்லை. அதனால் அவளுக்காகக் காத்திராமல் பிந்தத்தா லோவின் இடத்தை நோக்கி நடந்தார்கள்.

பள்ளிக்கூடம் என்பது, அங்கிருந்த புளிய மரத்தடியில் இரண்டு பாய் விரிக்கும் அளவே இருக்கும் இடம். அங்கு ஒரு கரும்பலகை மரத்தின் மீது சாய்த்து வைக்கப்பட்டிருக்கும். அவர்கள் ஆசிரியர் மாலம் நவாபா எப்போதும் பிந்த்தாவைப் புத்திசாலி என்று பாராட்டுவார். அவள் அப்பா அனுமதிக்கும் பட்சத்தில், படிப்பைத் தொடர்ந்து, ஒரு நாள் அவள் சுகாதார அதிகாரியாக வரும் சாத்தியம் உண்டு என்றெல்லாம் கூறுவார். ஒவ்வொரு முறையும் அவர் அப்படிச் சொல்லும்போதெல்லாம், விரல்களைக் கடித்துக்கொண்டே, ஒரு சிறிய புன்னகையுடன் முகத்தை வேறுபுறம்

திருப்பிக்கொள்வாள் பிந்த்தா. அது நிறைவேறவே இயலாத கனவென்று அவளுக்கு அப்போதே தெரியும். ஆனால், மாலம் நவாபா அதைப் பற்றி மிகுந்த ஆர்வத்துடன் இருந்தார். அவர்தான், தந்தையிடம் பேசி, இந்தளவுக்காவது பள்ளிப் படிப்பைத் தொடர அனுமதி வாங்கியிருந்தார். கிபியாவின் நன்மைக்கு பிந்த்தாவின் அறிவு பயன்படக்கூடும் என்று சொல்லிக்கொண்டிருந்தார். அவள் அப்பா, எப்போதும் போலக் கொஞ்சம் சம்சயத்துடனேயே இருந்தாலும், பின் உடன்பட்டார். ஆனால், அதன்பின் பல நாட்களுக்கு முகத்தை சுளித்துக்கொண்டு தான் இருந்தார்.

பள்ளி முடிந்ததும், பெண்கள் மூவரும், சாலிஹாவைச் சந்திக்கச் சென்றனர். அவள் தன் வீட்டின் முன்னாலிருந்த முருங்கைமரத்துக்கடியில் சுற்றிக்கொண்டிருந்தாள். எதுவும் விற்காமல் சும்மா இருக்கும்போது, தலைவலி, காய்ச்சல், முதுகுவலி எல்லாம் ஒரு சேர அவளைத் தாக்கி பள்ளி வரவிடாமல் செய்துவிடும். பள்ளி செல்லும் வாய்ப்புக் குறைந்தவுடன், அவளின் அத்தனை துயரங்களும் சட்டென்று விடை பெற்றுச் சென்றுவிடும். இப்போது, அந்தக் கஷ்டங்களின்றி அவள் இருப்பதைக் கண்டவுடன், பெண்கள் அனைவரும், அங்கிருந்த ஈச்சமரத்தினடியில் "காடா" விளையாடத் தயாரானார்கள். சிரித்துக்கொண்டே அந்தக் காட்டுக்குள் ஓடியவர்கள், பள்ளிப்பைகளை மரத்தடியில் வைத்துவிட்டு விளையாடத் தயாரானார்கள். பிந்தாலோ, மிக வலிமையானவள் என்பதால், மற்ற மூவரும் ஒரு குழுவாகப் பிரிந்து, கைகோர்த்து அரை வட்டமடித்து நின்றார்கள். அவர்கள் கைகளில் அவள் சிக்கும்போதெல்லாம் குப்புறத் தள்ளிவிட்டு, ஆட்டம் பாட்டத்துடன் குதித்து விளையாடினார்கள். அடுத்து சாலிஹா, அதன் பின் பிந்த்தா என ஆட்டம் தொடர்ந்தது. ஒவ்வொரு முறையும் அவர்கள் தள்ளிவிடும் போது, அப்போது தான் அரும்பத் தொடங்கியிருந்த தனது சிறு மார்புகள் குலுங்குவதை அவளால் உணரமுடிந்தது.

தனது நரைத்த, நீண்ட தாடியை நீவிக்கொண்டே, இவர்கள் விளையாட்டையும். பிந்த்தாவின் இளம் முலைகள் குலுங்குவதையும் கவனித்துக் கொண்டிருந்த மாலம் தெளடா "ஏன் இப்படிக் கீழ்த்தரமான பெண்கள் போல் நடந்து கொள்கிறீர்கள்? வீட்டில் செய்வதற்கு ஒரு வேலையும் இல்லையா?" என்று கடிந்து கொண்டார்.

விலைமகள் ஒருத்தி திருட்டு முக்காட்டுத் துணியைக் கைகளுக் கிடையில் ஒளித்து வைத்துக் கொண்டதைப் பற்றிய பாடலை அவர்கள் பாடினாலோ, குதித்து விளையாடுகையில் அவர்களுடைய சிறு முலைகள் குலுங்கினாலோ இவருக்கென்ன பிரச்சனை என்று வியந்தபடி, பெண்கள் அனைவரும் அவரவர் பைகளைத் தூக்கிக்கொண்டு கிளம்பினார்கள். அன்றிரவு, நிலவொளியில் பப்பாளி மரத்தடியில், கைகொட்டி விளையாடும்

தாஷே விளையாட்டு விளையாடலாம் என்று முடிவெடுத்துவிட்டுக் கலைந்து போனார்கள்.

மாலம் தெளடா, பிந்த்தாவின் அப்பா, மாலம் ஸைனி மைகர்மாவுடன் பேச நடந்து சென்றுகொண்டிருந்தார்.

அன்று மாலை வழக்கத்தை விடவும் அப்பா சோர்வாக வீடு திரும்பினார். முகச் சுருக்கங்களும், போலியோ தாக்கியிருந்த கால்களின் ஊனநடையும் மேலும் வெளிப்படையாகத் தெரிந்தது. பாத்திரங்களைக் கழுவிக்கொண்டிருந்த பிந்த்தா, ஓடிச்சென்று அவர் முதுகில் சுமந்திருந்த மண்வெட்டியை வாங்க முனைந்தாள். ஆனால் அவரோ அந்த உதவியை ஏற்காமல் உள்ளேயிருக்கும் அவள் அம்மாவை அழைத்தார்.

தங்கள் மகள் எவ்வளவு பெரிய பெண்ணாக வளர்ந்து விட்டாளென் பதையும், தெருவில் நான்கு பேர் கவனிக்கும் அளவுக்கு மார்புகள் குலுங்க எப்படி விளையாடிக்கொண்டிருக்கிறாள், அவளுக்குத் திருமணம் செய்து குடும்பம் நடத்தத் தொடங்கும் வேளை வந்துவிட்டது என்றும் அம்மாவிடம் கத்திக்கொண்டிருந்தார். அவள் பரிமாறிய உணவுத்தட்டை வேகமாகத் தட்டி விட்டபின் கோபத்துடன் வெளியேறினார். பிந்த்தா ஓடிச்சென்று அவள் அம்மாவின் காலடியில் வீழ்ந்து அழுதாள். அம்மா தன் முகத்தை சுவரின் பக்கம் திருப்பிக் கொண்டபோதும், அவளது கரங்கள் தன்னிச்சையாக வயிற்றைத் தடவிக்கொடுத்தன.

அதற்குச்சரியாக இரண்டு தினங்களுக்குப் பின் பிந்த்தா, ஜாஸ் நகரத்தில் ரயில்வேயில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் மாலம் தெளடாவின் மகன் ஜு பைருக்கு மணம் முடித்து வைக்கப் பட்டாள்.

—

இம்முறை, வரவேற்பறையில் யாரோ நடப்பது போலக் கேட்ட சப்தத்தில் பிந்த்தா கண்விழித்தாள். நசுக்கப்பட்ட பிராணி ஒன்றின் கீச்சென்ற அலறல் போல, மரச்சட்டங்களை தரையின் டைல்ஸில் இழுக்கும் ஒலி கேட்டது. ஹதீஸா, ஃபைஸாவுக்கு ஏதோ வழிமுறைகள் சொல்வதும் அவள் அதையே திரும்பச் சொல்வதுமாக இருந்தாள்.

"ஃபைஸா, அந்த முனையைப் பிடி."

"நான்? இந்த முனையா?"

"இந்தப் பக்கம் நகர்த்து"

"இந்தப் பக்கமா?"

"ஹப்பா!! ஃபைஸா, என்னதான் செய்கிறாய்?"

"என்ன செய்கிறேனா? ஹதீஸா அத்தை, நீங்க சொல்வதைத்தானே செய்கிறேன்?"

அதிகாலைப் பிரார்த்தனைக்குப் பின் உறங்கச்சென்ற ஹஜியா பிந்த்தா, வரவேற்பறையிலிருந்து வந்த சப்தங்களைக் கேட்டுக்கொண்டிருந்தாள். வழக்கத்துக்கும் அதிகமாக அன்று அவள் வயிறு கனமாக இருந்ததைப் போல் உணர்ந்தாள். படுக்கையில் படுத்தபோது, ஏதோ ஒரு பெயரறியாத பறவையின் பாடல் ஜன்னல் வழியே மிதந்து வந்தது. ஆழ்ந்த குரலில், எழுச்சி மிக்க பாடலாக இருந்தது. உடல் கனமாக இல்லாமலிருந்தால் அவள் அந்தப் பறவையைப் பார்க்க நிச்சயமாக எழுந்து ஜன்னலருகில் சென்றிருப்பாள்.

அந்தப் பறவையின் ஒலி அவள் மனதிற்கு ஏதோ ஒரு வகையான நிம்மதி அளித்தது. கண்களை மூடி அந்த உணர்வை அப்படியே உள்வாங்கிக் கொண்டாள். அவளது வாழ்வின் பெரும் பகுதியில் உடனிருந்து மறைந்து போன கணவன் ஜுபைரு என்ற அந்நியனின் முகம் அவள் நினைவில் மோதியது. ஒவ்வொருமுறையும் அவனை நினைக்கும்போது அவன் புன்னகை புரிவது போலிருக்கும். அந்தப் புன்னகை காணக்கிடைப்பது மிக அரிது. உயிரோடிருந்தவரை அப்படி ஒருநாளும் இருந்ததில்லை. அவனது தொடுகையின் நினைவுகள் பல ஆண்டுகளாக மனதில் செல்லரித்துப் போயிருந்தன. தோளை அழுத்தமாகப் பற்றிக்கொள்வதும், அவளை நோக்கிக் குனியும் போதெல்லாம், வாயிலிருந்து முனகல் ஏதும் வராமலிருக்க பற்களால் கீழுதட்டை அவன் கடித்துக் கொள்வதுமே நினைவுக்கு வரும். பொய்சொல்லும் போதெல்லாம் அவன் கைகளைப் பிசைவதும், அங்கியைக் கழற்றும் முன் எப்போதும் பாக்கெட்டை இரண்டு முறை தட்டிக் கொள்வானென்பதும் தெளிவாக நினைவில் உள்ளன. ஒரு வலிமையான கரம் அவளைச் சுற்றி இறுக்கி அவள் மார்பைத் தொடுகிறது. வலிமையான ஒரு உடல் அவள் பின்புறம் நிற்கிறது. அவளது பின்புறத்தை அந்த ஆணின் கனத்த உறுப்பு அழுத்துகிறது. வேட்கை நிரம்பிய, வெப்பமான மூச்சுக்காற்று அவள் புறங்கழுத்தில் படர்கிறது. அடர்ந்த கோரை முடித் தலையுடன் ஒரு இளமையான முகம். பிந்த்தா உணர்ச்சிகளின் வெள்ளத்தில் தன் தொடைகள் இரண்டும் பின்னிக்கொண்டதையும், அவளது பெண்ணுறுப்பு இளகி ஈரமாவதையும் அறிந்து கொண்டாள்.

"சுபானல்லாஹ்!" சட்டெனத் தலையை உலுக்கிக்கொண்டாள் பிந்த்தா. அவள் பார்த்த உருவங்கள் யாவையும் சலனமான நீரில் மறையும் பிம்பங்களாகக் கலைந்தன. எழுந்து அமர்ந்து புனிதநூலை வாசிக்க

எண்ணியவள், உடைந்து வேலைக்காகாமல் போன மூக்குக்கண்ணாடியை நினைத்தவுடன் புத்தகத்தை எடுத்த இடத்திலேயே மீண்டும் வைத்தாள். ஆனால், அதன் பின்னும் மனம் தளராமல், பக்கங்களைத் திருப்பி வாசிக்க முனைந்தாள். அழகான நெளிவுகளுடன் இருந்த அரேபிய எழுத்துகளெல்லாம் ஒன்று சேர்ந்து தெளிவற்ற வடிவங்களாகக் கண்களுக்குத் தெரிந்தன. ஒரு பெரு மூச்சுடன், புனித நூலிற்கு ஒரு முத்தம் பதித்தபின் அதை மேசைமேல் திரும்பவும் வைத்துவிட்டு வரவேற்பறையில் என்ன நடக்கிறதென்று பார்க்க நகர்ந்தாள்.

சுவரின் பக்கவாட்டில் மாட்டியிருக்கும், அழகான சிவப்புப் பூக்களின் பின்னணியில் கொட்டிக்கொண்டிருக்கும் நீர்வீழ்ச்சி ஓவியச் சட்டத்தைக் கழற்றி வேறு எந்த சுவரில் மாட்டுவது என்று ஃபைஸாவும் ஹதீஸாவும் யோசித்துக் கொண்டிருந்தார்கள். ஃபைஸா ஓவியச்சட்டத்தைக் கையில் வைத்துக்கொண்டிருக்க ஒரு முடிவுக்கு வந்தவள் போல ஹதீஸா பழுப்பு வண்ணச் சுவரில் ஆணி அடித்துக்கொண்டிருந்தாள்.

உம்மி, கையில் ஒரு அட்டைப்பெட்டி நிறைய ஆணிகளையும், கண்களில் நம்பிக்கையையும் நிறைத்துக்கொண்டு நின்றிருந்தாள். "ஹதீஸா சித்தி, நீங்கள் செட்டாப் பாக்ஸை திரும்ப வாங்கித்தருவீங்களா?"

தன் கீழுதட்டைக் கடித்துக்கொண்டு, சுவரில் ஆணியடிப்பதில் கவனமாக இருந்தாள் ஹதீஸா. யாரும் பதிலளிக்காதபோது பொறுமை யிழந்து தன் கையிலிருந்த ஆணிப்பெட்டியை கலகலவென ஆட்டினாள் உம்மி. "இன்று சனிக்கிழமை, எனக்குக் கார்ட்டூன் பார்க்கவேண்டும்."

கதவருகில் நின்றுகொண்டு அறையில் நிகழும் மாற்றங்களைப் பார்த்துக்கொண்டிருந்தாள் பிந்த்தா. மேசை, நாற்காலிகள் வேறிடத்துக்கு மாற்றப்பட்டிருந்தன. டிவி. ஸ்டாண்டு ஒரு மூலைக்கு இடம் பெயர்ந் திருந்தது. எப்போதும் அதன் பக்கவாட்டில் வைக்கப்பட்டிருக்கும் பூக் குவளை, இப்போது அதன் தலைமேல் அமர்ந்திருந்தது. டைனிங்டேபிள் இருக்கவேண்டிய மூலையில் தையல் மெஷின் நகர்த்தி வைக்கப்பட்டு இருந்தது.

"காலை வணக்கம் பெண்களே." மெதுவான குரலில் அவர்களைப் பார்த்துச் சொன்னாள் பிந்த்தா.

மூவரும் அவள்புறம் திரும்பினர்.

ஹதீஸாவின் ஊடுருவும் பார்வை, பிந்த்தாவை சங்கடப்படுத்தியது. "ஹஜ்ஜியா, நன்றாக இருக்கிறீர்களா?"

"நான் நன்றாத்தானே இருக்கிறேன், ஏன்?"

"இல்லை, நீங்கள் வித்தியாசமாகத் தெரிந்தீர்கள்...அதனால்தான் உங்களை எழுப்பவில்லை. ஆனால், இப்போது எழுந்துட்டீங்க. இங்கே முடிந்தவுடன் அடுத்து உங்கள் படுக்கை அறையையும் மாற்றி விடலாமென்று இருக்கிறேன்."

"அதெல்லாம் ஒன்றும் தேவையில்லை."

அப்படி சடாரென அவர்களைக் கடிந்துகொள்ள எண்ணவில்லை பிந்த்தா. ஒருவாறு தன்னை சமாளித்துக்கொண்டு, "தயவு செய்து மாற்றவெல்லாம் வேண்டாம், கொஞ்சம் சுத்தம் மட்டும் செய்தால் போதும்" என்று குரலில் குழைவை வரவழைத்துக் கொண்டு சொன்னாள்.

தான் கடுமையாகத்தான் பேசிவிட்டோம் என்பதை உணர்ந்தாள் பிந்த்தா. எழுந்ததிலிருந்து மனதில் மோதிய பிம்பங்களும், அவை எழுப்பிய உணர்வுகளும், வெறுமையும் நினைத்தே பார்க்க முடியாத அளவுக்கு அவளை வீழ்த்தியிருந்தன. அதுவும், நீண்ட காலமாக அவளால் கைவிடப்பட்டிருந்த உடல், மகனை நினைவூட்டிய ஒரு இளைஞனால் கிளர்ந்தெழுந்தது என்பது கூடுதல் எரிச்சலை ஏற்படுத்தியது.

சுத்தியல் கையோடு ஹதீஸா அப்படியே நின்றாள். ஒரு வளைந்த ஆணியை எடுத்து பற்களுக்கிடையில் வைத்துக் கொண்டாள் உம்மி.

"ஃபைஸா, நான் குளிக்க வேண்டும், போய் தண்ணீர் எடுத்துக் கொண்டு வா," பொறுமையிழந்த பிந்த்தா ஆணையிட்டாள்.

"நானா? வெந்நீர் கொண்டு வருவதா?"

"ஆமாம், போய்த் தொலை."

உம்மியின் திறந்த வாயிலிருந்து கீழே விழுந்த ஆணி, தரையில் மோதி கிணுங் கிணுங் என்ற சப்தத்துடன் அங்கு நிலவிய அமைதியைக் கிழித்தது. பிந்த்தா தன் அறைக்குத் திரும்பிச்சென்றாள்.

பிந்த்தாவின் எரிமலை வெடிப்பு போன்ற கோபத்திலிருந்து அவர்கள் மீளும் முன்பே, வாசல் கேட்டைத் திறந்துகொண்டு யாரோ அவசரமாக வரும் காலடி ஓசை கேட்டது. ஒரு பெண்மணி உள்ளே நுழைந்து வணக்கம் சொன்னாள்.

ஃபைஸாவின் முகம் மலர்ந்தது, "காலை வணக்கம் கண்டியா."

"ஹஜியா எங்கே?" கண்டியாவின் முகமும், தலையிலிருந்த ஹிஜாப் முக்காடும் வேர்வையில் நனைந்திருந்தது.

"ஏதாவது பிரச்சனையா?" ஹதீஸா அக்கறையுடன் கேட்டாள்.

நான்கு நாட்களுக்கு முன்பாகவே தயாராகி விடும் என்று சொன்ன ஆடை இன்று வரை தயாராகவில்லை என்று குற்றம் சொல்லியாவாறு அறையை நோட்டமிட்ட கண்டியா, மூலையில் இருந்த தையல் மெஷினுக் கருகில் போய் நின்றாள். பாதி வேலை மட்டுமே முடிந்து, மீதி தைத்து முடிக்கப்படாமல் துண்டுகளாகக் கிடந்த இருந்த தன் துணிகளைக் கையில் எடுத்துக்காட்டினாள்.

"என் துணி இப்படி நான்கு நாட்களாகக் கிடக்கிறது, இதற்குக் கூலியாக நான் முழுப்பணத்தையும் முன் பணமாவே கொடுத்துவிட்டேன் தெரியுமா? இன்று ஒரு கல்யாணத்துக்கு நான் அணிந்து கொண்டு போக வேண்டியது. இப்போது, கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் என்னைப் பார்ப்பதையே தவிர்த்துக் கொண்டிருக்கிறாள் அவள்."

அந்தத் துணியைக் கண்களில் அலட்சியத்துடன் பார்த்த கண்டியா, அதைத் தரையில் போட்டுவிட்டு ஃபைஸாவைக் கவனியாது, கோபத்துடன் வெளியேறினாள்.

கண்டியாவின் ஆடையைப் பற்றி அம்மாவிடம் கேட்க ஹதீஸா உள்ளே போனாள். கட்டிலின் ஓரத்தில் படுத்திருந்த பிந்த்தாவின் உடலைச் சுற்றிலும் ஹிஜாப் சுருண்டு கிடந்தது. தன்னைப் பார்த்ததும் சுவர்ப்பக்கமாக திருப்பிக் கொண்ட அம்மாவின் முகத்தின் இருண்ட, இலக்கற்ற பார்வையை அவளால் தெளிவாகப் பார்க்க முடிந்தது.

—

மகன் முன்க்கைலா வந்த நேரத்தில் பிந்த்தாவின் மனநிலை சற்று அமைதியுற்றிருந்தது. தையல் இயந்திரத்துக்கு எண்ணெய் விட்டுக்கொண்டே "குழந்தைகளை ஏன் அழைத்து வரவில்லை" என்று மகனிடம் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"அவர்கள் விளையாடிக்கொண்டு இருக்கிறார்கள்."

முன்க்கைலா, சாவிக்கொத்தை விரல்களால் சுழற்றியவாறே, நாற் காலியின் முன்பக்கமாக சாய்ந்து உட்கார்ந்திருந்தான். அவனது பருமனான விரல்களும், கழுதில் மடிப்புமடிப்பாகத் தொங்கியதைகளும், தொப்பை போட்டிருந்த வயிறும் பிந்த்தாவுக்கு இனமறியாத பயத்தை ஏற்படுத்தின. அவனது கறுத்த நிறத்தை தந்தையிடமிருந்து பெற்றிருந்தான். அவனுடைய குள்ளமான உருவத்தைக் கூட அவளால் ஏற்றுக்கொள்ள முடிந்தது, ஆனால் வழுக்கை விழுந்துகொண்டிருந்த தலை முப்பத்தி நான்கு வயதைவிட அதிக வயதான தோற்றத்தைக்கொடுத்தது.

"இந்தப் பொறுக்கிகள் எப்படி ஒருவர் வீட்டுக்குள் புகுந்து திருடுகி றார்கள் என்றே புரியவில்லை." சாவியைச் சுழற்றியபடியே முன்க்கைலா சொல்லிக்கொண்டிருந்தான்.

தையல் இயந்திரத்தின் ஷட்டில் கொக்கிகளுக்கும், பெடலுக்கும் எண்ணெய்விட்டு, பெடலின் மீது பாதங்களை வைத்து அழுத்திப் பார்த்தாள் பிந்த்தா. அது சீராக வேலை செய்கிறது என்று அறிந்தபின் அதன் பக்கத்திலிருந்த அட்டைப் பெட்டிக்குள்ளிருந்து ஒரு துணியை எடுத்து தைக்கத்துவங்கினாள். கண்ணாடி அணியாததால் தையல் சரியாக விழுந்திருக்கிறதா என்று குனிந்து பார்த்தபோது அவள் நெற்றி இயந்திரத்தின் மேல் பாகத்தில் உரசியது. துணியிலும் தையலிலும் எண்ணெய் படியவில்லை என்று உறுதி செய்தபின், கண்டியாவின் தைத்து முடிக்காத துணியைக் கையிலெடுத்தாள்.

"ஹஜியா, நீங்கள் ஏன் கண்ணாடி போடவில்லை? உங்களுக்குப் பிடிக்கவில்லையா?" முன்க்கைலா காலால் தரையில் தாளம் போட்டுக் கொண்டிருந்தான்.

"ஓஓ, நான் சுவரில் மோதியபோது என் கண்ணாடி உடைந்துவிட்டது."

"அது எப்படி?"

"இருட்டாக இருந்தது. ஆனால், பயப்படவேண்டாம். எனக்கு ஒன்று மில்லை, நன்றாக இருக்கிறேன்."

"உங்களுக்கு இன்னொரு கண்ணாடி வாங்க வேண்டும். தயவு செய்து இனிமேல் கவனமா இருங்கள் ஹஜியா."

"நிச்சயமாக," புன்னகையுடன் பதிலளித்தாள்.

டிவி ஓடிக்கொண்டிருந்தது. பின் அவளும் வீட்டில் சிறு மாற்றம் செய்தபோது கிடைத்த குமிழி உறையை எடுத்து குமிழிகளை விரலால் அழுத்தி உடைத்தாள்.

"அண்ணா, நாம் கொஞ்ச நேரம் வெளியில் போய் நடந்துவிட்டு வரலாமா?"

"ஓ,போகலாமே, முன்க்கைலாவும் ஹதீஸாவும் எழுந்து வீட்டின் முன்புறம் உள்ள காலியிடத்துக்கு வந்தார்கள்.

எப்போதுமே ஒரு முகச்சுளிப்புடன் அவன் இருப்பது போலப்பட்டது. அப்படித் தன்னைக் காட்டிக்கொள்வது அவனுக்குப் பிடித்த மாதிரியும் இருப்பதாக ஹதீஸாவுக்குத் தோன்றியது. தலையில் ஸ்கார்ஃபை சரி செய்து கொண்டே பேசினாள். "ஹஜியா கண்களை ரொம்ப சிரமப்படுத்திக் கொள்கிறார், இந்தத் தையல் வேலையை நிறுத்தி விட்டார்களென்றால் பரவாயில்லை என்று தோன்றுகிறது. தைக்காத துணிக்காக யார்யாரோ இங்கே

வந்து அவர்களை அவமானப்படுத்துவது போலப் பேசுவது எனக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை."

"அவர்கள் சுறுசுறுப்பா இருக்கவேண்டுமென்றுதான் இதைச் செய்கிறார்கள். நான் அவர்களை நன்றாகவே கவனித்துக்கொள்கிறேன்." ஹதீஸாவுக்கு எதுவுமே தெரியாது என்பதுபோல, முன்க்கைலா சாவிக் கொத்தை நளினமாக விரல்களில் சுழற்றிக்கொண்டே தன் தாய் வசதியாக வாழ வேண்டுமென்பதற்காக என்னவெல்லாம் செய்திருக்கிறான் என்று சொல்லிக்கொண்டு வந்தான். அவர்கள் வசித்து வந்த ஜாஸ் நகரத்தில் வன்முறையும் கொலைகளும் முடிவுக்கு வரவே வராது என்று உணர்ந்து, இந்த நகரத்தில் வாடகைக்கு வீடெடுத்து அம்மாவைக் கூட்டி வந்ததையும், வந்தவுடன் வயதான காலத்தில் அவருக்குப் பொழுதுபோக வேண்டுமென கேபிள் டிவி போட்டுக்கொடுத்து அதற்கும் மாத வாடகை கட்டுவதையும் சொன்னான்.

"இத்தனை நேரத்தை வைத்துக்கொண்டு வேறு என்ன செய்ய முடியும் அவர்களால்?"

அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டேயிருந்த ஹதீஸாவுக்கு மிக ஆச்சரியமாக இருந்தது. ஒரே ஒரு ஜீன்சும் ஒற்றை சட்டையும் மட்டும் வைத்துக் கொண்டு ஒரு செமஸ்டர் முழுக்கக் காலந்தள்ளிய அந்த ஒல்லியான கல்லூரி மாணவன்தான் இவன் என்று நம்பமுடியவில்லை. அஹம்மது பெல்லோ பல்கலைக்கழகத்தின் அந்த நாட்கள் மிகவும் கடுமையானது. இருபத்தைந்து வயதில், முன்க்கைலா பொருளாதாரப் பட்டதாரியாகத் தேர்வாகி வந்தவுடனே அவனுக்கு வேலை கிடைக்கவில்லை. ஒரு அந்நிய செலாவணி நிறுவனத்தில் பயிற்சிக்காகப் போனபோது, வெளிநாட்டுப் பணத்தை மாற்றுவது, விற்பது எப்படி என்று நன்கு கற்றுக்கொண்டான். அப்போது அதிர்ஷ்டவசமாக, சில அரசியல்வாதிகளின் நட்பு அவனுக்குக் கிடைத்து அவர்களின் நம்பிக்கையைப் பெற்றான். அவர்களும் இவன் மூலமே தங்கள் அந்நியச் செலாவணி வியாபாரத்தை நடத்த முடிவெடுத்தார்கள்.

"ம்ம், அம்மா ஒரு டீச்சர் வேலைக்குப் போகலாம். இங்கே சில ஆரம்பப் பள்ளிகள் இருக்கிறது. பகுதி நேரமாகக் கூடப் போகலாம். பாடம் சொல்லி தருவதுதான் அவர்களுக்கு எப்போதும் பிடிக்குமே."

எதுவுமே பேசாமல் கைகளை உடலின் குறுக்காக ஆட்டிக் கொண்டிருந்தான் முன்க்கைலா. அம்மா மிகவும் திருப்தியான வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்னும் அவன் நினைப்பை ஹதீஸாவின் வார்த்தைகள் தகர்த்துக் கொண்டிருந்தது.

"இதோ பார், இந்த வயதில் எந்த விதமான அவமானமும் அவர்களுக்கு

வரக்கூடாது. அவர் சௌகர்யமா இருக்கணும். வாழ்க்கை முழுவதும் கஷ்டப்படக்கூடாது."

"ஹஜியாவுக்கு அப்படி ஒன்றும் வயதாகவில்லை, தெரியும்தானே?"

"தெரிகிறது...அது தெரிகிறது...ஆனாலும்" அவன் தோளைக் குலுக்கினான்.

"ஒருவேளை, அவர்கள் இன்னொரு திருமணம்கூட செய்து கொள்ளலாம்"

"மறுமணமா?! ஹப்பா!! ஹதீஸா, மறுமணம்?!"

"ஆமாம், ஏன் கூடாது? அவர் வயதுள்ளவர்கள் எல்லாம் மறுமணம் செய்து கொள்கிறார்கள்."

முன்க்கைலா ஒரு பக்கமாக தலையைச் சாய்த்து யோசித்தான். எப்படி யோசித்தாலும் அவனுக்கு அது பிடிக்கவில்லை.

தெரியாத்தனமாக கசப்பான இலையைக் கடித்துவிட்டவன் போல அவன் முகம் இறுக்கமாவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஹதீஸா. "இங்கே பார், நான் ஒரு பெண், ஒரு பெண்ணுக்கு ஆணின் துணை எவ்வளவு அவசியம் என்று எனக்குத் தெரியும். ஹஜியா மிகத் தனிமையில் இருக்கிறார்கள். இந்த விஷயத்தில் அவர்களும் திறந்த மனதோடுதான் இருக்கிறார்கள். சில நாட்களுக்கு முன்பு கூட யாரோ ஒரு ஆண் அவர்களோடு பழக ஆசைப்பட்டதை என்னிடத்தில் சொன்னார்கள்."

"ஆஆ இங்கேயா?" அதிர்ச்சியில் அவன் திறந்த வாயை மூடவில்லை. தன் அப்பாவைத் தவிர வேறொரு ஆணுடன் அம்மாவைக் கற்பனை செய்து பார்ப்பதே அவனுக்கு அச்சமூட்டுவதாக இருந்தது.

"கவலைப்படாதே, நான் நாளை வரை இங்கேதான் இருப்பேன். சரியான நேரம் பார்த்து இந்த விஷயத்தைப் பற்றி அவர்களோடு பேசுகிறேன். என்ன சொல்கிறார்கள் என்று கண்டிப்பாக உனக்குத் தெரிவிக்கிறேன்."

மூச்சை ஆழமாக இழுத்துக் கொண்டு, மேலும் சற்று வேகமாகத் தன் சாவிகளை சுழற்றினான் முன்க்கைலா. அவளைப் பார்த்து, "உன் கணவன் உன்னை நன்றாகப் பார்த்துக் கொள்கிறார். உன்னைப் பார்த்தால் மூன்று குழந்தைகளுக்கு தாய் என்று யார் சொல்வார்கள்?" என்றான்.

அழகாய்க் குனிந்து, கால்களை சிறிது மடக்கி பக்குவப்பட்ட நாடக நடிகை போல் 'நன்றி' என்று ஹதீஸா சொன்னபோது இருவருக்குமே சிரிப்பு வந்துவிட்டது. "ஆனால், இப்படியெல்லாம் நல்ல விதமாப் பேசுவதால், என்னுடைய ஹஜ் பயணத்துக்கு நீ பணம் கொடுக்கவேண்டும் என்று நினைவுபடுத்துவதை விடமாட்டேன் தெரியுமா?"

"அதற்கான நேரம் வரும்போது நிச்சயமாகக் கொடுப்பேன் ஹதீஸா. அம்மா முதலில் செல்லவேண்டுமென்று நினைத்தேன். இறையருளால் அவர்கள் கடந்த வருடம் போய்விட்டுத் திரும்பியிருக்கிறார்கள். உனக்கும், உன்னுடைய கிறுக்குத் தங்கைக்கும் கூடத்தருவேன், கொஞ்ச காலம் காத்திருக்கவேண்டும். ஏனென்றால், நான் கட்டிக்கொண்டிருக்கும் வீட்டில் அத்தனை பணத்தையும் போடவேண்டியிருக்கிறது."

அதன் பின், வீட்டைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டான். சொந்த வீட்டில் குடியேற வேண்டுமென்ற அவன் ஆசையும், இப்போதுள்ள வீட்டிற்கு வாடகையாகக் கொடுத்துக் கொண்டிருக்கும் பெருந்தொகையைப் பற்றியும் சொன்னான், புதிய வீட்டில் ஹஜியாவுக்காக கட்டும் பகுதியையும், ஹதீஸா அதை வந்து பார்த்து மெச்சவேண்டுமென்றும் ஆர்வமாகக் கூறினான். தன் மனைவியும், குழந்தைகளும் அவளைப்பற்றி விசாரித்துக் கொண்டே இருப்பதைச் சொல்லி, அவளை அபுஜாவுக்கு வரச்சொல்லி அழைத்தான். பேச்சில் அதிக கவனம் கொடுக்காமல் ஹதீஸா பெருமூச்சு விட்டபோது சட்டெனப் பேசுவதை நிறுத்தினான்.

"என்ன விஷயம்?"

"ஹஜியா யாரு பேரைச் சொன்னாங்க."

"அப்படியா?"

ஏற்கெனவே கறுப்பாக இருக்கும் முன்க்கைலாவின் முகம் மேலும் கறுத்துப்போனது. தான் அணிந்திருந்த தூய வெள்ளை அங்கியைப் பற்றிக் கூடக் கவலைப்படாமல், அங்கிருந்த சுவரில் சாய்ந்து, கன்னத்தைக் கையில் தாங்கிப் பிடித்துக்கொண்டான்.

அங்கு பெரும் அமைதி நிலவியது. வீட்டின் முன்னால் காலியாகக் கிடந்த நிலப்பரப்பில் எந்த வண்ண மலர்ச்செடிகளை இட்டு நிரப்பலாம் என்று கற்பனை செய்து பார்த்தாள் ஹதீஸா. அந்த இடம், அம்மாவின் கடந்த பத்தாண்டு கால வாழ்க்கை போலத் தரிசாகத் தெரிந்தது.

அடுத்த நாள் காலை ஹதீஸா போர்வையை உதறிவிட்டு எழுந்து மணி பார்த்த போது ஏழே முக்கால் ஆகியிருந்தது. அவள் குழந்தைகள் கபீர், இஷாக் இருவரும் நேரத்திலேயே பள்ளி செல்லத் தயாராக வேண்டும், அப்பாவின் பெயர் வைக்கப்பட்ட இளைய மகன் ஜுபைரும் அவர்களோடு அமர்ந்து காலை உணவு சாப்பிட அடம்பிடிப்பான். அதனால், காலையில் நீண்ட நேர உறக்கம் என்பது அவளுக்குப் பழக்கமில்லை.

அடுத்த அறையிலிருந்து ஃபைஸாவின் மெல்லிய குறட்டை ஒலி மிதந்து வந்தது. எட்டிப் பார்த்தபோது, போர்வையை ஓரமாகத் தள்ளி விட்டு ஒரு கால் உம்மியின் மீதும், மறுகாலைப் படுக்கையில் பரத்திக்

கொண்டும் தூங்கிகொண்டிருந்தாள். ஆழ்ந்த உறக்கத்திலிருந்த உம்மி இதை அறியவில்லை.

எழுந்து வந்த ஹதீஸா, முகத்தைக் கண்ணாடியில் பார்த்தபோது, அதில் ஒட்டியிருந்த அலி நுஹுவின் ஸ்டிக்கர் கண்ணில் பட்டது. முகத்தில் தெரிந்த எண்ணெய் மினுமினுப்பை உள்ளங்கைகளால் தேய்த்துத் துடைத்தாள். பின் சமையலறைக்குள் சென்று, மேசை, டிராயர்கள் எல்லாம் துழாவி ஒரு நூடுல்ஸ் பாக்கட்டை எடுத்தவள் ஏனோ சலிப்புடன் அதை அங்கேயே வைத்துவிட்டாள். என்ன சமைப்பதென்று அம்மாவைத்தான் கேட்க வேண்டும்.

அம்மாவின் அறையில், படுக்கை மீது இரவுஉடை கிடந்தது. அம்மா குளித்துக்கொண்டிருந்ததால், ஹதீஸா படுக்கையில் அமர்ந்தபடி காத்திருந்தாள்.

குளியலறையிலிருந்து அவள் வெளியே வந்ததும், 'நன்றாகத் தூங்கினாயா' என்று பரஸ்பரம் விசாரித்துக் கொண்டார்கள்.

"உங்கள் கழுத்தில் என்ன காயம் ஹஜியா?"

அந்தத் திருட்டுப் பயல் கத்தியால் கீறியிருந்த இடத்தைத் தொட்டுப் பார்த்தாள் பிந்த்தா. அது சிறிய கீறல் தான். விரைவில் காய்ந்து மேல் தோல் உதிர்ந்து விடும். "அது சும்மா ஒரு கீறல் தான், அப்புறம் நீ உன் தங்கையிடம் பேசினாயா?" கண்ணாடியின் முன் உள்ள ஸ்டூலில் அமர்ந்த பிந்த்தா, ஆறிக் கொண்டிருக்கும் காயத்தைப் பார்த்தாள். சட்டென்று ஒரு வினாடியில், அதன் காய்ந்த மேல் தோலை உரித்து விட்டு, புதிதான தோலைப் பார்த்தாள்.

"இல்லை, இங்கே வந்ததிலிருந்து அவளுடன் பேசவில்லை, இப்போது அழைக்கவா?"

"வேண்டாம் விடு, ஹுரைரா ரொம்ப பிடிவாதக்காரி, அப்படியே விடு அவளை, அவள் கணவன் ஒருநாள் என்னை அழைத்து அவள் செய்யும் கெடுபிடிகளை எல்லாம் சொல்லிப் புகார் செய்தார். அவளிடம் பேசுவதாக வாக்குக் கொடுத்திருக்கிறேன். ஆனால் அவள் என் அழைப்பை எடுக்கவே மாட்டாள்."

"ஹுரைரா...ஹதீஸா சிரித்துக்கொண்டாள். அவள் கோபத்திற்கு அவள் ஒரு ஆணாகப் பிறந்திருக்க வேண்டும்."

"நல்ல வேளை, அவள் உங்கள் அப்பாவை விட மோசமாக இருந்திருப்பாள்"

"என்னது? ஹஜியா?"

"ம்ம், உண்மையைத்தானே சொன்னேன்"

சிறிது நேரம் மௌனமாக இருந்த ஹதீஸா, பின் "உங்களுக்கு என்ன

சாப்பிடவேண்டுமென்று சொல்லுங்க, அதை சமைப்பதற்குத் தேவையான பொருட்களை வாங்க ஃபைஸாவை கடைக்கு அனுப்பவேண்டும்"

"மாசா" சமைக்கலாமா? முகத்தில் பவுடர் போட்டுக்கொண்டே பிந்த்தா முறுவலித்தாள். "தபாவா அருமையான மாசா சமைப்பார்கள். அவர்கள் கடை ஃபைஸாவுக்குத் தெரியும்"

"சரி. அப்போ இன்றைக்கு மாசா தான்"

ஃபைஸாவின் அறைக்குள் நுழைந்தபோது, அவள் ஏற்கெனவே எழுந்து தூக்கம் நிரம்பிய கண்களைப் பஞ்சால் துடைத்து சுத்தம் செய்து கொண்டிருந்தாள். அவளிடம் வாங்கவேண்டிய பொருட்களின் பட்டியலைச் சொல்லியபின் கொஞ்சம் பணமும் கொடுத்துவிட்டு பாத்திரத்தில் நீரைக் கொதிக்க வைக்க சமையலறைக்குள் நுழைந்தாள் ஹதீஸா.

முகத்துக்கு அலங்காரம் செய்து முடித்து, ஹிஜாப்பை எடுத்துத் தலையில் அணிந்துகொண்டு, உணவு வாங்கிவரும் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு நகர்ந்தாள் ஃபைஸா.

"ஹஜியா...ஹஜியா...ஹதீஸா அத்தை!! இங்கே வந்து பாருங்கள்..." வாசலிலிருந்து அவள் கத்திய சப்தத்தில் பயத்தை விட உற்சாகமே மிகுந்திருந்தது.

இரண்டு பெண்களும் வீட்டினுள்ளிருந்து ஓடி வந்து பார்த்தார்கள். பிந்த்தாவின் ஹிஜாப்பின் மடிப்புகள் உயரப் பறக்கத் துடிக்கும் பறவையின் சிறகுகள் போல படபடத்தன. வாசலில், திருட்டுப் போயிருந்த செட்டாப் பாக்ஸ், டிவிடி இரண்டுமே இருந்தன. அதனருகில் ஒரு பிளாஸ்டிக் பையில், அலைபேசியும், சில நகைகளும் பத்திரமாக வைக்கப்பட்டிருந்தன.

"நம் டீக்கோடர் கிடைத்து விட்டது" தூக்கத்திலிருந்து விழித்தெழுந்த சிறுமி உம்மி மகிழ்ச்சியில் கத்திக்கொண்டே பாட்டிக்கும் சித்திக்கும் இடையில் நுழைந்து ஓடினாள்.

கூர்ந்து கவனித்தாள் ஃபைஸா. "ஆனால் இது ஹஜியாவின் பழைய அலைபேசி இல்லையே."

—

3

"சலவை சோப்பைக் கண்டுபிடிக்கும் முன்னரே கொக்கின் நிறம் தூய வெண்மைதான்."

தையல் இயந்திரத்தின் 'விர்ர்ர்ர்ர்" என்று ஓடும் மோட்டாரின் ஓசை வீட்டை நிறைத்தது.அப்பொழுதுதான் மின்சாரம் வந்திருந்தது. எந்த நேரத்திலும் திரும்பப் போய்விடும் என்று தெரிந்ததால் முழு வீச்சில் வேலை செய்துகொண்டிருந்தாள் பிந்த்தா. சிறிய ஒட்டுத் தையல் போட வேண்டிய வேலை தவிர்த்து ஒரு வழியாகக் கண்டியாவின் ஆடையை தைத்து முடித்துவிட்டாள். மிகக் குறுகிய நேரத்தில் வேலையை முடித்திருந்தாள்.

பின் எழுந்து டிவி, செட்டாப் பாக்ஸ், டிவிடி ஆகியவற்றை தூசி தட்டினாள். முன்தினம், முன்க்கைலாவுடன் அவன் வீட்டிற்குச் செல்லும்முன் அவற்றை நேர்த்தியாக அதனதன் இடத்தில் வைத்துவிட்டுச் சென்றிருந்தாள் ஹதீஸா. மூலையில் இருந்த சிறிய புத்தக அலமாரியைச் சுத்தம் செய்தபோது, ஹெமிங்வேயின் *The Old Man and tha Sea* அவள் கண்ணில் பட்டது. ஆனால் அதை விடுத்து டேனியல் ஸ்டீல் நாவலை எடுத்து சோஃபாவின் மேல் வைத்தாள். வீட்டு வேலைகளும் முடிந்தது. ஃபைஸாவும் உம்மியும் பள்ளிக்குச் சென்றுவிட்டதால், ஓய்வாகப் புத்தகத்தைக் கையிலெடுத்து வாசிக்க ஆரம்பித்தாள். அதன் அச்செழுத்துகள் சற்றுப் பெரியதாக இருந்ததால் கண்ணாடி இல்லாமல் அவளால் வாசிக்க முடிந்தது. யாரோ கதவைத் தட்டும் சப்தம் அவள் வாசிப்பைக் கலைத்தது. 'கேட் திறக்கும் ஓசைகூட கேட்காத அளவுக்கா புத்தகத்தில் மூழ்கிப் போனோம்?' என்று நினைத்தவாறே எழுந்துபோய்க் கதவைத் திறந்தாள்.

இரண்டு நாட்களுக்கு முன்பு வீடு புகுந்து அவளைத் தாக்கிய திருடன், இம்முறை கடுமை குறைந்த முகத்துடன் கதவருகில் நின்று

கொண்டிருந்தான். "ஹஜியா, உங்களை நான் ஒன்றும் செய்யமாட்டேன். தயவு செய்து பயப்படாதீங்க," கோரை முடியை மறைத்துத் தொப்பி அணிந்திருந்ததால், அவன் கிருதா மட்டுமே தெரிந்தது .

அப்படியே பின்னால் நகர்ந்து வேகமாகக் கதவை மூடப்போன வளுக்கு, கைகூப்பியபடி அவன் இறைஞ்சி நின்றதையும், அவன் விரலில் அணிந்திருந்த மோதிரம் காலைக் கதிரொளி பட்டு மின்னுவதையும் தவறாது கவனித்தாள்.

"நான் கத்தப் போகிறேன்" ஆனால் படபடவென்று சத்தமாக அடித்துக் கொள்ளும் இதயத் துடிப்புக்கு முற்றிலும் மாறாக அவள் குரல் சிறிய முனகலாகத்தான் வெளிப்பட்டது.

"தயவு செய்து கதவை மூடாதீர்கள்" ஓரடி பின்னே தள்ளி நின்று, சரண டைந்தவன் போல கைகளிரண்டையும் மேலே தூக்கி நின்றான்.

"உனக்கென்னதான் வேண்டும்?"

"உங்களுக்குப் புரியுமா, நான் உங்களைக் கஷ்டப்படுத்த வரவில்லை... நான் இப்போ..."

வினாடிக்கும் குறைவான நேரத்தில் இருவரின் கண்களும் சந்தித்து மீண்டன. அவனைப் பார்க்கையில், அவள் ஆசிரியையாக இருந்த போது, கால்களை மாற்றி மாற்றி நின்று கொண்டு சிறுநீர் கழிக்கப் போவதற்கு எப்படி அனுமதி கேட்பது என்று தவித்து நிற்கும் வகுப்பின் புதிய மாணவர்களின் ஞாபகம் வந்து போனது.

"நான் உங்க வீட்டுல திருட வரலை இப்போ, புரியுதா?"

அவள் அவன் கண்களை நேராகப் பார்ப்பதை உணர்ந்தவன், மேலும் ஓரடி பின்னால் நகர்ந்தான் .இப்போது வெராந்தாவின் விளிம்புக்கே போய் விட்டான்.

பிந்த்தா, இன்னும் கொஞ்சம் கதவைத் தள்ளித் திறந்தாள்.

"நான் உங்க பொருள்கள், டிவிடி, செட்டாப் பாக்ஸ், தங்கம் எல்லாமே கொடுத்துட்டேன்."

"மற்ற பொருட்கள் எங்கே?"

"ஆமாம்...ஆமாம்...அதை எல்லாம் நான் விற்று விட்டேன். ஆனால் எல்லாவற்றையும் நான் திருப்பித் தந்து விடுவேன், உங்க ஃபோன் உட்பட"

அவள் பதில் ஒன்றும் சொல்லாத போது, "உங்களுக்குப் புரியுதா?

உங்கள் ஃபோனை வாங்கியவன் எங்கேயோ பயணம் போய்விட்டான், ஆனால் நான் நிச்சயமாக திரும்ப வாங்கிவிடுவேன், அதுவரை இருக்கட்டும் என்றுதான் உங்களுக்கு இந்த ஃபோனைக் கொடுத்தேன்."

"எனக்கு எதுவுமே தேவையில்லை. என்னை விட்டுவிடு"

என்ன செய்வதென்றே தெரியாமல் குழப்பத்துடன் அவன் நிற்பதைப் பார்த்தவளின் கண்கள் சற்றே கனிந்தன. பல வருடங்களுக்கு முன், முதல் முறையாக மாரிஜுவானா நெடியோடு வந்து நின்று அவளது அனைத்து எண்ணங்களிலும் கறை பூசிய யாரூவை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு நினைவு படுத்தினான் அவன்.

"மன்னித்துக் கொள்ளுங்கள்." திரும்பவும் கைகளைப் பிசைந்தவாறு, "நான் உங்க ஃபோனைக் கொண்டு வந்து கொடுத்து விடுகிறேன், மற்ற நகைகளையும் கூடக் கொண்டு வந்து தந்து விடுகிறேன்."

திரும்பி நடந்து சென்றுவிட்டான்.

மீண்டும் கதவை மூடியபோதுதான், தன் முகம் கண்ணீரால் ஈரமாகி யிருப்பதை அறிந்தாள். அவள் இதயத்தை முற்றுகையிட்டிருக்கும் குழப்பமான உணர்வுகளின் சாட்சியாக அது இருந்தது.

சிறிய காவல் நிலையத்தைக் கடந்து அதற்கு அடுத்தாற்போலிருந்த கட்டி முடிக்கப்படாமல் பாதியிலேயே நின்றுபோன கட்டிடத்திற்குள் அவன் நடந்து சென்றான். அதன் முன்பக்கம் வாசல் போலத் தோன்றும் பகுதி முழுவதும் அலுமினியக் கூரைத் தகடுகளால் மறைக்கப்பட்டு இருந்தது. யாரோ ஒருவருக்குத் திடீரென்று கிடைத்த பணத்தில் பல அடுக்கு வணிக வளாகம் கட்டலாம் என்று நினைத்து ஆரம்பிக்கப்பட்ட இடம் அது. பல கடைகளைக் கட்டுவதற்காக அந்த நிலம் வாங்கப்பட்டு, பின் கையிலிருந்த பணம் கரையும் முன் ஒரு தளம் மட்டுமே கட்ட முடிந்திருக்கின்றது. பாசி படிந்து கிடக்கும் செங்கல் சுவர்கள் கணக்கற்ற மழைக்காலங்களைப் பார்த்திருந்தது,

சான்சிரோ என்று அழைக்கப்படும் அந்த இடம் மிகவும் தனித் தன்மை வாய்ந்தது. அங்கு நடக்கும் நிழல் நடவடிக்கைகள் யாவற்றையும் கண்டும் காணாமலும் இருக்கும் காவல் நிலையத்தால் அந்த இடத்தின் புகழ் பரவியிருந்தது. மாலையானதும் அங்கு வந்து குவியும் மோட்டார் சைக்கிள்கள் வாயிலை அடைத்துக்கொண்டும், அதற்கப்பால் தெரு வெங்கும் நின்றுகொண்டிருக்கும். அதை ஓட்டி வருபவர்கள் கஞ்சாவை அனுபவித்தபடியே அதன் புகையினூடே தெரியும் உலகத்தைப் பற்றி வாக்குவாதம் செய்துகொண்டிருப்பார்கள். போதையின் உச்சத்தில்

விளையும் தத்துவங்களும், கால்பந்து அணிகள் பற்றிய வாதங்களும் நித்தமும் அங்கு நிறைவேறும். பதப்படுத்திய கஞ்சா இலைகளுக்காகப் போதைப் பொருள் வணிகர்கள் எப்போதும் அங்கு வருவார்கள். சான்சிரோ தரமான கஞ்சா இலைகளுக்கு மிகப் பிரசித்தம். நாட்டு மருந்துகள், மூலிகை திரவம், மற்றும் கலப்படப் போதை இலைகளை விற்கும் இளைஞர்களும் அங்கு உண்டு. ஆனால்,கோரைமுடி ரௌடி ரெஸாவுக்குக் கஞ்சா இலை தான் பிரதானம்.

முன்பு கட்டிடத்தின் வாசலாக இருந்த இடம் இப்போது ஒரு காம்ப வுண்டாக மாறிவிட்டிருந்தது. அந்த இடத்தில் பளு தூக்கும் உடற்பயிற்சி செய்துகொண்டிருந்த இளைஞர்களைக் கடந்து, கடைசியாக இருந்த கடையின் கதவில் தொங்கிக் கொண்டிருந்த பூட்டில் சாவியை நுழைத்துத் திருப்பினான், முதலில் திறக்காமல் பின் அடுத்த சாவியைப் போட்டதும் திறந்து கொண்டது பூட்டு. இந்தப் பூட்டை மாற்ற வேண்டும் என்று நினைத்துக்கொண்டான். வழக்கத்துக்கு மாறாக, அவர்கள் பக்கத்து வீட்டுக்காரர்களான போலீஸ், அங்கு புதிதாகப் பணியேற்ற அதிகாரியின் ஆணைப்படி, இந்த இடத்தை ரெய்டு செய்தபோது பூட்டுகளை எல்லாம் உடைத்துவிட்டார்கள். போலீஸின் பணி என்ற போர்வையில், அவர்களுடைய உயர் தரமான மற்றும் மட்டமான சரக்குகள் அனைத்தையும் மூட்டையாகக் கட்டி எடுத்துச் சென்று, அவருக்குத் தெரிந்த மற்றொரு வியாபாரிக்கு விற்று விட்டதாகத் தகவல் கிடைத்தது, மற்ற இடங்களில் இதுபோல நடப்பது சாதாரண விஷயம். ஆனா, இதுவரை அப்படிப் பட்ட நிகழ்வுகள் ஏதுமில்லாத சான்சிரோவில் இது நடந்தது மிகவும் அதிர்ச்சியளிப்பதாக இருந்தது.

அறைக்குள் போனவன் அங்கிருந்த பஞ்சு மெத்தையின் மேல் பொத்தென்று சரிந்தான். அந்த மெத்தையின் ஓரமாக இருந்த சுவர் முழுக்க *AC Milan Squad* குழுவின் விளையாட்டு உறுப்பினர்களின் பெயர்கள் அச்சிடப்பட்ட பெரிய போஸ்டர் ஒட்டப்பட்டிருந்தது. அந்தப் பெயரில்தான் அந்த இடம் முழுவதும் பெயரிடப்பட்டு இருந்தது, ஏனென்றால் கோரை முடிக்காரன் அந்த அணியின் மிகப் பெரும் விசிறி.

"ரெஸா, என்ன விஷயம்?" பபாவோ கட்டுஸோ நண்பன் மட்டுமல்ல, அவனுக்கு வலது கை போன்றவன். கதவருகில் மேல் சட்டை இல்லாமல் நின்றிருந்தவனின் தசைகள் வியர்வையில் மின்னிக் கொண்டிருந்தன. அவனது நண்பர்கள் அவனை ரெஸா என்றுதான் அழைப்பார்கள். ரெஸா, ரேஸரிலிருந்து திரிந்த சொல் ஆகும். ஒரு முறை கஞ்சா போதையின் பாதிப்பில், சட்டைப் பையில் ஒளித்து வைத்திருந்த ரேஸர் பிளேடை எடுத்து மாற்றாந்தாய் சகோதரனின் கையை அறுத்ததிலிருந்து இந்தப்

பெயரைப் பெற்றான் ரெஸா, இது நடந்தது பதினோரு வருடங்களுக்கு முன்பு. அப்போது அவனுக்குப் பதினான்கு வயதுதான் நிறைந்திருந்தது.

"எனக்கு ஒரு சிகரெட் கொடு கட்டூஸோ" சட்டையைக் கழற்றி மெத்தைமேல் வீசியெறிந்து விட்டு. தனக்குப் பிடித்தமான சிகரெட்டை உருவி எடுத்துக் கொண்டான்.

ரெஸா புகைத்து முடிக்கும்வரை அவனுக்குப் பின்னால் நின்றவாறு காத்திருந்தான் பபாவோ. இத்தாலியக் கால்பந்து வீரன் கட்டூஸோ போலக் குள்ளமாக, முகத்தில் குறுந்தாடியுடன் இருந்ததால் பபாவோவை கட்டூஸோ என்றும் அழைத்தனர். அவனுடைய பதினேழாம் வயதிலிருந்து சான்சிரோவில் வசிக்கிறான். எத்தனையோ நிகழ்வுகள் நடந்து முடிந்த இந்த எட்டு வருடங்களில் ஒருமுறை கூட வீட்டுக்குத் திரும்பிப் போவதைப் பற்றி அவன் பேசியதேயில்லை. வீடென்பது அவனுக்குத் தொலைதூர நினைவாக மட்டுமே எஞ்சியுள்ளது. அதில், குளியலறையில் அவன் ரகசியமாக போதை புகைக்கும் போது பார்த்துவிட்ட அப்பா, பெல்ட்டை எடுத்துக்கொண்டு அவனை நோக்கி வருவதும், சண்டையில் அவரைக் குத்திக் கீழே தள்ளிவிட்டு ஓடி வந்ததும் தான் நினைவில் மங்கலான பிம்பங்களாக உள்ளன. அந்தக் கைகலப்பில் அவன் அப்பாவின் இடுப்பு எலும்பு உடைந்ததாகக் கேள்விப்பட்டான். அவன் அம்மாவும் அவனுக்கு இரண்டு வயதாக இருந்தபோதே இறந்து விட்டார். எனவே வீடு திரும்பாமலிருக்க அவனுக்கு இந்த வாய்ப்பு எளிதாக இருந்தது. இரண்டு மாதங்கள் அங்குமிங்கும் அலைந்து விட்டு, எப்படியோ சான்சிரோ வந்து சேர்ந்து ரெஸாவை சந்தித்தவன் அதன் பின் நிரந்தரமாக இங்கேயே தங்கி விட்டான்.

"உனக்குப் புரியுமா கட்டூஸோ, எல்லாவற்றிற்குமே ஏதோ ஒரு காரணம் இருக்கிறது."

ரெஸா சுவரின் மீது சாய்ந்து அமர்ந்து கொண்டான். போதையின் மயக்கத்தில் உதிக்கும் விசித்திரமான தத்துவங்களை அவன் சொல்ல ஆரம்பிக்கப் போகிறான் என்று கட்டூஸோ நினைத்தான். கதவின் கைப்பிடி மேல் சாய்ந்து நின்றவன், தன் கைகளுக்கு ஏதாவது கிடைக்குமா என்று அறையை நோட்டமிட்டான்.

"என்ன நடந்தது?" தன் பாக்கெட்டில் இருந்த கஞ்சா சுருட்டை எடுத்துப் பார்த்துவிட்டு மீண்டும் அதை அங்கேயே வைத்துவிட்டுக் கைகளை நெஞ்சுக்குக் குறுக்காகக் கட்டிக் கொண்டான் கட்டூஸோ.

சிகரெட்டை நிதானமாகப் புகைத்து முடித்தான் ரெஸா. தலையைக் குலுக்கிக்கொண்டே, "நான் ஒரு பெண்ணின் வீட்டில் திருடப் போனேன்

அல்லவா, அவள் என் அம்மா போலவே இருந்தாள். அவளுக்கும் தங்கப்பல் இருந்தது. அப்படியே என்னுடைய அம்மா போல...புரிந்ததா?''

கட்டுஸோவின் கண்கள் தெறித்து நின்றன. முதல்முறையாக ரெஸா தன் தாயைப் பற்றிப் பேசுவதைக் கேட்கிறான். பரபரப்புடன் தன் சட்டைப் பையைத் தட்டிக்கொண்டவன், பின் நிதானமடைந்து வழக்கம்போல விரல்களை மடக்கி நெட்டை எடுப்பதில் கவனமானான்.

''வெளியே போ, நான் தூங்கவேண்டும்'' பேசிக் களைத்தவன் போலத் தென்பட்டான் ரெஸா. மெத்தையில் கிடந்த தன் சட்டையை அப்புறப்படுத்தி விட்டுத் தூசு தட்டினான். அதன்பின் கட்டுஸோ வெளியேறுவதற்காகக் காத்திருந்தான்.

ஆனால், கட்டுஸோ சாயம் போன நீலநிறக் கம்பளத்தில் அமர்ந்து கொண்டு கொட்டாவி விட்டுக்கொண்டே ''எனக்கும் தூக்கம் வரும் போல இருக்கிறது'' என்றான்.

''உன்னுடைய அறைக்குப் போ!''

கட்டுஸோ பெருமூச்சுடன் எழுந்தான். காரணமே இல்லாமல் தன் சட்டைப் பையைத் தட்டிக்கொண்டே ஏதோ பாடலை முணுமுணுத்தபடி அங்கிருந்து நகர்ந்து சென்றான்.

—

தனது பத்தாவது வயதில்தான் ஹஸன் 'ரெஸா' பப்பாலே தன் தாயை முதல் முறையாகப் பார்த்தான். காரில், அவனுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த அப்பா, நிமிடத்திற்கொரு முறை அவன் புறம் திரும்பி தலையை தடவித் தந்து களைப்பாக இருக்கிறதா என்று கேட்டுக் கொண்டேயிருந்தார். அவன் கன்னத்தைக் கிள்ளி, தலையை இருபக்கமும் திருப்பி, அவன் முகத்தில் விழுந்திருந்த குழிகளை, தன் ஒற்றை நல்ல கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தார். வியாபாரம் படியும் முன் விற்பனைக்குச் செல்லும் மாடுகளை ஆய்வது போலவே இருந்தது அவர் செய்கை. அவனைப் பார்க்கும் ஒவ்வொரு முறையும் அவர் முகத்தில் சோகத்தின் நிழல் படர்ந்து மறையும். தன் கையில் வைத்திருந்த பிஸ்கட்டை மேலும் நிறைய எடுத்து உண்ணும்படி அவனை வற்புறுத்திக் கொண்டே இருந்தார்.

அவனை அழைத்துப் போவதற்காக அப்பா வந்த போது வகுப்பில் இருந்தான். உன் அப்பா வந்திருக்கிறார், போய் விட்டு வா, பயணம் சிறக்கட்டும் என்று அவளுக்கே உரிய நாடகத்தனமான சைகையுடன்

தலையை ஆட்டி வழியனுப்பி வைத்தாள் அவன் ஆசிரியை. அவன் வெளியே வந்த போது, கடும் வெயிலில் கூட மலர்ச்சியாய் நின்று கொண்டிருந்தார் அப்பா.

"வா, உன்னுடைய அம்மாவைப் பார்க்கப் போகிறோம்" அவன் கையைப் பிடித்து அழைத்துச் சென்றார்.

வீட்டிற்குப் போனதும் அவனைக் குளிக்க வைத்து, கடந்த ஈத் பண்டி கைக்கு வாங்கித் தந்திருந்த இள நீல நிற அங்கியை அவனுக்கு அணிவித்தார். அதன் பின், அதுவரை, அவன் செவி வழியாக மட்டுமே உணர்ந்திருந்த அம்மாவைப் பார்க்க லஃபியா நகருக்குக் காரில் பயணமானார்கள்.

வாயிலிருந்த பிஸ்கட் தூள்களைப் புறங்கையில் துடைத்துக் கொண்டே, மிக வெகுளியாக அப்பாவைப் பார்த்துக் கேட்டான், "அம்மா இனிமேல் நம்முடனேயே தங்கி விடுவார்களா?"

"அவங்க உன்னோடு இருக்க வேண்டும் என்று நீ விரும்புகிறாய், இல்லையா?" குனிந்து, அவன் உதடுகளைக் கைக்குட்டையால் துடைத்து விட்டார். அப்போது அவருடைய பழுதான ஒரு கண்ணை மேலும் நெருக்கத்தில் பார்த்தான். நெடுஞ்சாலைக் கொள்ளைக்காரர்கள் அவரை எந்த அளவு கடுமையாகத் தாக்கியிருக்கக் கூடுமென்றும், அப்போதும் கூடப் பணப் பையை விடாமல் எப்படி இறுகப் பற்றிக் கொண்டிருந்திருப்பார் என்றும் பல வருடங்களுக்கு முன் நடந்த நிகழ்வுகளை அவனால் கற்பனையில் காண முடிந்தது.

"நீங்கள் என்னுடன் இருந்து என்னைக் கவனித்துக் கொள்ள வேண்டுமென்று நான் ஆசைபடுகிறேன் என்று சொல் சரியா?"

டிரைவருக்குத் தூக்கம் வரும் போல இருந்தது. ஒரு கோலா மிட்டாயை வாயில் போட்டுக் கொண்டே, காரின் ஸ்டீரியோவை அவன் இயக்கிய போது அதிலிருந்து "மூசா டான் க்வைரோ" வின் குரல் வழிந்தது.

"அவங்க ஏன் நம்மை விட்டுப் போனார்கள் அப்பா?"

ஒரு நீண்ட பெருமூச்சுடன் கார் சீட்டில் சாய்ந்தவர், "அது உனக்குப் புரியாது மகனே" என்று மட்டுமே சொன்னார்.

"ஆனால், புலாமா சொன்னான், அவங்க அம்மா ஏதோ சொன்னார்கள்..."

"ஷ்ஷ்ஷ், உன் அம்மாவைப் பற்றித் தம்பி சொல்வதை எல்லாம் கண்டு கொள்ளாதே, எப்படியிருந்தாலும் அவள் உன்னுடைய அம்மா."

ஆனால், அம்மாவை மாற்றாந்தாய் சகோதரர்கள் இகழ்ச்சியாகப்

பேசுவது கேட்டு அவன் மனம் மிக அல்லல் படும். அவனுடைய மாற்றாந்தாயில் ஒருத்தியான தலாத்து, அவளைப் பற்றி, "கானோ நகரத்தி லிருந்து ஜெட்டா வரை பெயர் போனவள்" என்று சொல்லுவாள். அரபுக் காரர்களுடன் அவளுக்கு இருப்பதாகச் சொல்லப்படும் தொடர்புகள் பற்றி சப்தமில்லாமல் பேசிக் கொள்வார்கள்.

அவன் அப்பா, பபாலே மரிகோ, கால்நடைகளை வடக்கு மாகாணத்து ஃபுலானி மக்களிடம் குறைந்த விலைக்கு வாங்கி, தெற்கு, கிழக்குப் பக்கம் வந்து ஈக்போ மக்களுக்கு அதிக விலைக்கு விற்று வியாபாரம் செய்து வந்தார். அப்படி ஒரு பயணத்தின் போது, அவனும், நண்பர் புபா மொஹம்மதுவும் நெடுஞ்சாலையில் கொள்ளைக்காரர்களால் தாக்கப்பட்டனர். அதில் ஒரு கண்ணை இழந்துவிட்ட போதிலும், புபாவின் பதினேழு வயது அழகிய மகள் மைமுனா மீது நன்றாக இருக்கும் மறு கண்ணைப் பதித்து வைத்திருந்தான். கட்டாயமாகத் திருமணம் செய்து வைக்கப்பட்ட பிறகு, இரண்டாண்டுகள் மட்டுமே அவனுடன் வாழ்ந்தாள் மைமுனா. அதன் பின் ஆறு மாதக் குழந்தையை விட்டுவிட்டு, ஜெட்டா செல்லும் விமானத்தில் ஏறினாள். நிச்சயமாக அது புனித ஹஜ் பயணத்திற்காக அல்ல.

மைமுனா ஜெட்டாவிலிருந்து வருகிறாள் என்று அறிந்ததுமே, பபாலே அவளைப் பார்ப்பதற்கு மகனை அழைத்துச் செல்ல முடிவெடுத்தார். அவளுக்கு ஏற்பட்டு இருக்கும் அவப் பெயரைப் போக்கவும், அவளைத் தன் வழிக்குக் கொண்டு வரவும் இது உதவும் என்று அவர் நினைத்தார்.

அவளது முகம், மென்மையான சருமம், பாதாம் வடிவக் கண்கள், அவர்கள் இன வழக்கப்படி இடது கன்னத்தில் இருந்த தியாகச் சூட்டின் தழும்பு எல்லாவற்றையும் அவன் பார்த்தான். அவளது வாசனைத் திரவியங்களின் நறுமணம் அவனைத் தழுவியது.அவனுடைய தலையைக் கோதி, இரு கரங்களாலும் முகத்தை அவள் வருடிய போது அவனுடைய பிஞ்சு இதயம் குட்டிக் கரணமடித்துத் துள்ளியது.

"நீ நன்றாக வளர்ந்து விட்டாய்" மாலை நேரத் தென்றல், வயல்களின் மேல்வீசிச் செல்வதைப்போல அவள் குரல் அவன் காதுகளைத் தாலாட்டியது."

"எந்த வகுப்பு படிக்கிறாய்?"

"ஆறாம் வகுப்பு."

தங்கப் பல் தெரிய அவள் புன்னகைத்தது அவனை மிகவும் வசீகரித்தது. மீண்டும் தன்னைப் பார்த்துப் புன்னகைக்க மாட்டாளா என்ற ஏக்கத்திலும் நம்பிக்கையிலும் அவன் நின்று கொண்டிருந்தான்.

"நான் யாரென்று உனக்குத் தெரியுமா?"

தெரியும் என்று தலையசைத்தான்.

என்ன செய்வதென்று தெரியாமல் ஒரு சிறிய பூனைக்குட்டியை வாஞ்சையுடன் பார்ப்பது போல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தவள், தன் விரலில் அணிந்திருந்த வெள்ளி மோதிரத்தைக் கழற்றினாள். அதை அவன் உள்ளங்கைகளில் வைத்து, பின் அவன் விரல்களை மடக்கி அதைப் பத்திரப்படுத்தினாள். அந்தச் செயலை மிக நேர்த்தியாக அவள் செய்ததில் அவன் மனம் கட்டுண்டு போனது.

இவை அனைத்தையும் தன் ஒற்றைக் கண்ணால் பார்த்துக் கொண்டிருந்த அப்பாவைக் கடந்து அவள் திரும்பிச் சென்ற போது, அவளை நெருங்கி அவள் தோளின் மேலாடையை அவர் பற்றினார்.

"மைமூனா" அவர் குரல் கிசு கிசுப்பாக, கெஞ்சலாக ஒலித்தது. அவரது கீழுதடுகள் துடித்தது. ஆனால் வேறெந்த வார்த்தையும் பேசவில்லை.

அவரை மேலும் கீழும் பார்த்தாள். "ஏய் அழுக்குப் பிடித்த கிழவா, உன்னுடைய அசிங்கமான கையை என் மீதிருந்து உடனே எடு" என்று சீறி விழுந்தவள், தனது ஆடையை வெடுக்கென்று இழுத்துக் கொண்டாள்.

அவள் பின்னாலேயே ஓடிய சிறுவன், அவளுடைய ஜில்பாப் அங்கியைப் பற்றிக் கொண்டு தயக்கமும், நிச்சயமின்மையும், பயமும் கலந்த குரலில் இறைஞ்சினான், "அம்மா, என்னை உங்களுடன் அழைத்துக் கொண்டு போவீர்களா?"

அவனைக் குனிந்து பார்த்த அவள் கண்களில் துக்கத்தின் சாயல் மெலிதாகத் தெரிந்தது. மிக மிக மெதுவாகத் தன் ஆடையிலிருந்து அவன் பிடியைத் தளர்த்தினாள். அவன் நினைவுகளில் எப்போதும் எதிரொலிக்கும் தேய்ந்து மறைந்த அவள் காலடி ஓசைகளுக்கிடையே சுழலும் வாசனைத் திரவியத்தின் நறுமணம், மின்னும் தங்கப் பல், அவளது அழகிய முகம் யாவும் நீருக்கடியில் தெரியும் பிம்பங்களாகப் பளபளத்துக் கொண்டிருக்கின்றன.

—

"ரெஸா" கத்திக் கொண்டே ஒரு பையன் ஓடி வந்தான்.

படுக்கையில் புரண்டபடி முகத்தைத் தலையணையில் புதைத்துக் கொண்டு தன் வியர்வை வாசத்தையே முகர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன விஷயம்?"

அவனிடமிருந்து சிறு முனகலை மட்டுமே கேட்டதால், அந்தப் பையன் ரெஸா எழுவதற்காகக் காந்திருந்தான்.

"ஷனி, என்ன விஷயம்?"

"ஈப்ரோ வந்தால் சொல்லச் சொன்னாய் அல்லவா, அவன் தேநீர்க் கடைக்குப் போய்க் கொண்டிருப்பதைப் பார்த்தேன்."

காம்பவுண்டில் எழுந்த உற்சாகக் குரல்கள் அறை வரை கேட்டது. இளைஞர்கள் பயிற்சி செய்து கொண்டிருந்த கான்க்ரீட் கனமுடைய டம்பெல்ஸ் "தட்" என்ற பெருத்த ஓசையுடன் கீழே விழுந்தது. தேடிக் கொண்டிருந்த யாரோ ஒருவர் பிடிபடும் போது எப்போதும் எழும் கல கலப்பான சூழலின் அடையாளம் அது.

கையைப் பிசைந்து கொண்டு நின்றான் ஷனி.

மறுபடியும் முணுமுணுத்துக் கொண்டே இருந்தான் ரெஸா, "இப்போது நீ போ ஷனி, நாம் அப்புறமாகப் பார்க்கலாம்."

தோளைக் குலுக்கிக் கொண்டே ஷனி நகர்ந்தான்.

படுக்கைக்கு அருகில் இருந்த கண்ணாடித் துண்டொன்றில் முகத்தை பார்த்த ரெஸா, கன்னத்திலும் புருவத்திலும் இருந்த ஈரத்தைத் துடைத்தான். சட்டையை அணிந்து கொண்டு, கதவைத் திறந்து வெளியே வந்தான். காம்பவுண்டினுள், பெஞ்ச் மேல் படுத்துக்கொண்டு பளு தூக்கிக் கொண்டிருந்தான் கட்டூஸோ. அவன் தசைகள் முறுக்கேறியிருந்தது..பலர் அவனைச் சூழ்ந்து நின்று கொண்டு, உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அவர்களைக் கடந்து வெளியேறி மார்க்கெட் சாலை வழியாக நடந்தான் ரெஸா.

"நானும் உன்னுடன் வரலாமா?" கூட்டத்திலிருந்து பிரிந்து வந்த ஷனி அவனை நம்பிக்கையோடு பார்த்தான்.

அவனைப் பார்த்தான் ரெஸா. எப்போதும் ஷனியின் அம்மாவின் கவலை அவனுடைய நோஞ்சான் உருவத்தைப் பற்றியதாவே இருக்கும். அவளுடைய துக்கம் நிரம்பிய புலம்பல்கள் ஷனிக்கு எரிச்சலை ஏற்படுத்தும். அதுவும், ரோட்டோரத்தில், கொசை விற்றுக் கொண்டிருக்கும் அவளுக்கு உதவி செய்கையில், இந்தக் குறையை அவன் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். திறந்த வெளியில் அடுப்பைப் பற்ற வைத்துக் கிழங்கும் மீன்ஸும் சுட்டு விற்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. அது பெண்களுக்குத்தான் பொருத்தமான வேலை என்று நினைப்பான். ஆனால் அதை நம்பித்தான் அவன் வாழ்வு உள்ளது. அவனுடைய கரங்கள்

மிகவும் ஒல்லியாக இருக்கிறதென்று கடைக்கு வருபவர்களிடம் கூட அவள் சொல்வது வெறுப்பாக இருக்கும். அந்தத் தொழிலும் பிடிக்காது. அளக்கும் படி அளவே அவன் தந்தையின் உருவம் சிறியதாக இருந்ததை அவன் அம்மா மறந்தே விட்டாள் என்று தோன்றும்.

இது போன்ற பெண்கள் செய்யும் வேலையைச் செய்கிறாயே என்று ஏளனமாகப் பேசும் நண்பர்களைத் தவிர்க்க முடியாத பொழுதில் எங்காவது, ஏதாவது பெரிதாக சாதித்தே ஆக வேண்டும் என்னும் வேட்கை கண்களில் மின்ன நிற்கும் சிறு பையன் ஷனியைக் காண முடியும். ஆனால் பல வருடங்களுக்கு முன் ஏற்பட்ட தந்தையின் அகால மரணத்திற்கும், இப்போதும் அவனுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கும் தாய்க்கும் இடையில் அவன் சிக்கிக் கொண்டான். அவன் ஒரு இன்ஜினீயரோ, டாக்டரோ ஆக வேண்டுமென்பது அம்மாவின் விருப்பம். அவனுக்கோ ரெஸாவுடன் சுற்றிக் கொண்டு அவ்வப்போது பெரிய பணம் பார்க்க வேண்டுமென்று ஆசை.

அவன் தோளைத் தட்டிக் கொடுத்தான் ரெஸா.

"வேண்டாம், நான் சீக்கிரம் வந்து விடுவேன்."

ஷனியின் கண்களில் தெரிந்த ஏமாற்றத்தைக் கண்ட ரெஸா, "நீ எனக்காக செய்ய வேண்டிய விஷயங்கள் சில இருக்கின்றன, அதை இன்னொரு நாள் செய்யலாம்" என்று அனுப்பி வைத்தான்.

அந்தி கவிழும் வேளையில், அண்மையிலிருந்த இருண்ட காவல் நிலையத்தை கடந்து நடந்து சென்றான் ரெஸா. அங்கு வெளியே போடப் பட்டிருந்த பெஞ்சில் அமர்ந்துகொண்டு, மீசையைத் தடவியபடியே தெருவை மேலும் கீழும் நோட்டமிட்டுக் கொண்டிருந்தார் புதிய காவல் அதிகாரி தௌடா பலேரி. அவருக்கு முகத்தைக் காட்டாமல், வேறு புறமாக முகத்தைத் திருப்பிக்கொண்டு நடந்தான் ரெஸா. மாலை நேர வியாபாரத்திற்கு உணவைத் தயார் செய்ய அடுப்பைப் பற்ற வைத்துக் கொண்டிருந்த ஷனியின் அம்மாவையும் கடந்து சென்றான். மாலைப் பிரார்த்தனைக்காக மசூதியில் கூடியிருந்த மக்களையும் கடந்தான். வேறு ஒரு தெருவில் நுழைந்து பல குறுக்குப் பாதைகளில் நடந்து, தார் போடப்பட்டிருந்த தெருவை அடைந்தான். அங்கிருந்து பொடிநடையாக நடந்தவன், சற்று நேரத்தில் மஹமூதின் தேநீர் கடை வாசலில் நின்றான். கண்ணாடியில்லாத பெரிய ஜன்னலின் வழியாக கடையினுள்ளே பார்த்த போது, அங்கு அமர்ந்திருந்த ஆண்கள் ரொட்டி, தேனீர், குளிர்பானம் போன்றவற்றைப் பரிமாறியிருந்த மேசையைச் சுற்றி அமர்ந்திருந்தார்கள். அவர்களோடு அமர்ந்து சூடான தேநீரை அருந்திக் கொண்டிருந்த

ஈப்ரோவைக் கண்டதும் கடையினுள் நுழைந்தான் ரெஸா.

"மஹ்மூத், எனக்கும் ஒரு கோப்பைத் தேநீர் கொடு" ரெஸா ஈப்ரோவுக்கு அருகே போய் அமர்ந்து கொண்டான்.

சூடான தேநீரை ஒரு குவளையிலிருந்து அடுத்த குவளைக்கு மிகவும் லாவகமாக ஊற்றிக் கொண்டிருந்தான் மஹ்மூத். காத்திருக்கும் வாடிக்கையாளர் பக்கமாக குவளையைத் தள்ளிக் கொண்டே மறு கையால் பால் பவுடரை எடுத்து அடுத்த குவளை தயாரிக்க ஆரம்பித்தான். ரெஸாவுக்கு நினைவு தெரிவதற்கு முன்பிருந்தே மஹ்மூத் இங்கு கடை வைத்திருக்கிறான்.

"தேநீரா, போர்ன்விட்டாவா?"

"தேநீர் மஹ்மூத், தேநீர்."

இஞ்சிச்சாறு கலந்து முன்பே அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்த தேனீரைக் கலயத்திலிருந்து குவளைக்கு அவன் ஊற்றியதைப் பார்த்துக் கொண்டிருந்த ரெஸா, பின் ஈப்ரூ பக்கமாக பார்வையைத் திரும்பினான். மேசையின் முன் குனிந்து வாயில் பிரெட்டைத் தள்ளிக் கொண்டு நேராக, முன்னால் எதையோ வெறித்துப் பார்த்தபடி அவன் அமர்ந்திருந்தான்.

"ரெஸா!!"

கையிலிருந்த காப்பிக் குவளையைப் பழைய உடைந்த மேசையின் மீது வைத்து விட்டு, கிரீஸ் அப்பிய தன் கையை ரெஸாவை நோக்கி நீட்டினான். அவன் கையைக் குலுக்கினான் ரெஸா. நீண்ட காலமாக ஜெனெரேட்டரை பழுது பார்த்து, அதன் பாகங்களைக் கழற்றி மாட்டி வேலை செய்ததின் காரணமாக ஈப்ரோவின் கரங்கள் மிகக் கடினமாகியிருந்தன.

ரெஸாவின் புன்னகை மின்னற்பொழுது நேரமே இருந்தது. "பயணம் போய் விட்டு வந்து விட்டாயா?"

"ஆமாம்."

"அப்புறம்,உன் பெற்றோர் எப்படி இருக்கின்றனர்?"

"ஓஓ, நலம்."

மஹ்மூத் சூடான தேநீர்க் கோப்பையையும், அதனுடன் ஒரு ரொட்டித் துண்டையும் ரெஸாவின் முன் வைத்தான்.

ஈப்ரோ தன் கோப்பையைக் கீழே வைத்தான். "சரி, நான் முடித்து விட்டேன், வீட்டுக்குக் கிளம்புகிறேன்."

"இன்னும் கொஞ்ச நேரம் இருக்கலாமே, ம்ம்... "

ஈப்ரோ எழ முற்பட்டான். ஆனால், ரெஸா தன் உள்ளங்கையை அவன் தொடை மேல் அழுத்தமாக வைத்தான். "இரு போகலாம், உனக்கும் சேர்த்து நானே காசு தருகிறேன். புரிகிறதா?

ஈப்ரோ அமர்ந்தான். அவன் பார்வை கடையின் மூலை முடுக்குகள் எங்கும் அலைந்தன. முழங்கால்களுக்கு நடுவே கைகளைப் புதைத்துக் கொண்டான். ரெஸா, சாப்பிட்டு முடித்து, அவனுக்கும் சேர்த்துப் பணம் கொடுத்தவுடன், கடையிலிருந்து இருவருமே வெளியேறி, கவிந்திருக்கும் இருளில் நடந்தார்கள்.

ஒருவருக்கொருவர் மிகவும் அருகில் நின்று கொண்டிருந்தார்கள். அவனை விட உயரமாக, கறுப்பாக இருந்த ஈப்ரோ, மாலைக் காற்றை அனுபவித்தவாறே கடந்து செல்லும் வாகனங்கள் உமிழும் வெளிச்சக் கீற்றில் கொசுக்கள் பறப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஈப்ரோவின் முதுகைத் தட்டிக் கொண்டே, நான் கொடுத்த ஃபோன் எப்படி இருக்கிறது என்று கேட்டான் ரெஸா.

"நன்றாக வேலை செய்கிறது."

"உன்னிடத்தில் இப்போது இருக்கிறதா?"

ரெஸாவை முறைத்துப் பார்த்தான் ஈப்ரோ. கோபத்தில் அவன் மூக்கு சிவந்தது. அதைப் பற்றியெல்லாம் கவலை கொள்ளாத ரெஸா அவனை நோக்கிக் கை நீட்ட, சட்டைப் பையிலிருந்து வெறுப்புடன் ஃபோனை எடுத்துக் கொடுத்தான். கையில் வாங்கி, அதை ஆட்டிப் பார்த்துப் பரிசோதித்துத் திருப்தி அடைந்தான் ரெஸா. பின் அதை ஸ்விட்ச் ஆஃப் செய்து, அதன் பேட்டரியையும், சிம் கார்டையும் எடுத்து ஈப்ரூவிடன் திருப்பிக் கொடுத்தான்.

"எனக்கு ஃபோன் மட்டும் தான் வேணும். உன்னுடைய பணத்தைக் கொடுத்து விடுகிறேன்" என்று சொல்லி விட்டுத் தன் சட்டைப் பையில் ஃபோனை வைத்துக் கொண்டான்.

"நான் அதை உபயோகிக்க ஆரம்பித்து விட்டேன்."

"ம்ம், அது தெரிகிறது," நட்சத்திரங்கள் இறைந்து கிடந்த வானத்தை அண்ணாந்து பார்த்து விட்டு, தொங்கிப் போன முகத்துடன் இருக்கும் ஈப்ரூவையும் பார்த்தான். "கவலைப்படாதே, உனக்கு இன்னொன்று வாங்கித் தருகிறேன். நாளைக்கு என்னை வந்து பார், சரியா," சொல்லிக் கொண்டே சட்டைப் பையில் கைகளை நுழைத்துக் கொண்டு நடக்க

ஆரம்பித்து விட்டான் ரெஸா. விரையும் வாகனங்கள் வாரி இறைத்துச் செல்லும் வெளிச்சத்தில், அவன் ஒரு நிழலுருவமாக நடந்து செல்வதைக் குழப்பத்துடன் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தான் ஈப்ரோ.

—

காலை பதினொரு மணிக்கு, கடந்த இரு முறையும் செய்தது போலவே மீண்டும் அவள் வீட்டின் மதில் சுவரைத் தாண்டினான் ரெஸா. மதரஸா செல்லாமலிருந்தால் வீட்டில் அவள் மட்டும் தனியாக இருப்பாள் என்று அவனுக்குத் தெரியும். முன்னால் ஒரு சுற்று சுற்றிப் பார்த்து விட்டு, சுவருக்கு அப்பால் எட்டிப் பார்த்தான். பெட்டூனியா மலர் பாத்திகளுக்கு நீர் விட்டுக் கொண்டிருந்தாள். முதல் முறையாக அழையா விருந்தாளியாக நுழைந்த போது இந்தச் செடிகள் வீட்டில் இல்லை.ஒரு மஞ்சள் குவளையில் தண்ணீரை மொண்டு ஊற்றிக் கொண்டிருந்தாள். குவளையைக் கீழே போட்டவள், இடுப்பில் ஒரு கையை வைத்துக் கொண்டு நிமிர்ந்தாள். மறு கையின் விரல்களிலிருந்து நீர்த் திவலைகள் சொட்டிக் கொண்டிருந்தன. அவள் திரும்பிய போது இருவரின் கண்களும் சந்தித்தன. சுவருக்குப் பின்னாலிருந்து அவன் முன்னே வந்து நின்ற போது பயத்தில், மார்பின் மீது கை வைத்துக் கொண்டாள்.

"வணக்கம்." அவன் குரல் கொஞ்சம் குழறினாலும், சற்றே குனிந்து, கைகளை மேலே தூக்கிக் கொண்டுப் பணிவாக நின்றான்.

படபடக்கும் நெஞ்சின் மீது கைகளை வைத்துக் கொண்டாள்.

"நான், ஹாங்ங்... கொடுத்த வாக்குப்படி நான் உங்கள் ஃபோனைக் கொண்டு வந்திருக்கிறேன், புரிந்ததா" ஒரு கையை மேலே தூக்கியவாறே, மற்றொரு கையால் சட்டைப் பையில் இருந்த ஃபோனை எடுத்தான். அவள் அதைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கையிலேயே வைத்துக் கொண்டிருந்தான். பார்த்துக்கொண்டே இருந்த அவளும் தலையாட்டினாள். முன்னே நகர்ந்து அவளிடம் ஃபோனை நீட்டினான்.

"நடந்ததெற்கெல்லாம் மிகுந்த வருத்தப் படுகிறேன்."

மோப்பசக்தியால் தன் இருப்பிடத்தை உறுதி செய்து கொள்ளும் விலங்குகள் போல, ஃபோனின் மீது கட்டை விரலைத் தேய்த்தபடி இது தன் உடமைதான் என்று சோதித்து மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டாள்.

"நான் இப்படியெல்லாம் செய்யவே மாட்டேன். இது போல வீடு புகுந்து கொள்ளையடிப்பது எல்லாம் இல்லை, புரிந்ததா, என் ஆட்கள்

யாருமே இனிமேல் உங்களுக்குத் தொந்தரவு தர மாட்டார்கள், சரியா."

அவள் அவனைப் பார்த்தாள். யாரைவைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்ததால் அவள் கண்ணோரம் ஈரம் துளிர்த்திருந்தது. "மிக்க நன்றி."

தலையாட்டிக் கொண்டே, வெளியே செல்லத் திரும்பினான்.

"நில்."

அவள் புறமாகத் திரும்பினான்,

"உன் பெயர் என்ன? எனக்குச் சொல்லவே இல்லை."

"ரெஸா, அப்படித்தான் என்னைக் கூப்பிடுவார்கள்."

"ரெஸா" ஏதோ புது வகையான இறைச்சித் துண்டைச் சுவைப்பது போல் அவன் பெயரை வாய்க்குள் சொல்லிப் பார்த்தாள். "உன் நிஜப்பெயர் என்ன?"

ஒரு காலத்தில் அவனுக்கென்று ஒரு பெயர் இருந்தது. ஒவ்வொரு நாள் காலையும் வகுப்பில் வருகைப் பதிவேட்டிற்காக அழைப்பார்.

"ஹஸன் பப்பாலே" அந்தப் பெயர் அவன் ஞாபகங்களின் எதிரொலி போல ஒலித்தது. ஆனால் அனைவரும் 'ரெஸா' என்றுதான் கூப்பிடுவார்கள்."

"ஹஸன், அதை நினைவில் வைத்துக் கொள்கிறேன்."

அவன் தலையசைத்தான். ஏதோ முணுமுணுத்தபடி அங்கிருந்து வெளியேற எத்தனித்தான். அவள் ஏதோ சொல்லத் தயங்கினாள். விரல்களால் நெற்றியைத் தேய்த்துக் கொண்டாள். "தண்ணீர் அல்லது ஏதாவது குடிக்கிறாயா? இப்போதைக்கு நான் தனியாகத்தான் இருக்கிறேன்." வீட்டின் முன்புறம் உள்ள காலியிடத்தை வண்ணங்களால் நிரப்ப மிகவும் பிரியத்துடன் ஹதீஸா நட்டு வைத்திருந்த ஈரமான பெட்டூனியா மலர்ச் செடிகளின் வரிசைகளையும், பிரகாசமான காலையில் அந்த மலர்களின் அழைப்பில் ஈர்க்கப் பட்டு வந்திருந்த சிறிய பறவைகளையும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்தத் துல்லியமான கணத்தில் தான், ஏறக்குறைய அரை நூற்றாண்டு இரவுகளாக மொட்டாகவே இருந்த அவள் வாழ்வின் இதழ்கள் மெல்ல மலரத் துவங்கின என்பதைப் பின்னொரு நாளில் பிந்த்தா நினைத்துப் பார்க்கப் போகிறாள்.

—

4

"விழுந்த இடத்தைப் பற்றிக் கவலைப்படாதே; சறுக்கிய இடத்தை அடையாளம் கண்டுகொள்"

1976ம் வருடம், பிப்ரவரி மாதம் 13ம் தேதியன்று, பளீரென்று மின்னற்கோடாய் தன்னுள் ஊடுருவிய முதல் பிரசவ வலியை உணர்ந்தாள் பிந்த்தா. அவளுடைய அப்போதைய நிலைக்கு சற்றும் தொடர்பில்லாத சில நிகழ்வுகளால் அந்த நாள் மறக்கவியலாத நாளாகப் போனது. அவளுடைய மதியத் தூக்கம், இடைவெளி விட்டு விட்டு எழுந்த வலியால் தடைபட்டுப் போனது. ராட்சத எறும்புகள் அவளது உடல் உறுப்புகளைத் துளைப்பது போல அந்த வலி பரவியது. வலி சற்றே குறைந்ததும் படுக்கையில் சாய்ந்தவாறே, வீட்டின் முற்றத்தில் விளையாடும் குழந்தைகளின் சத்தத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.அவள் இதுவரை அறிந்தேயிராத பல மொழிகளில் அவர்கள் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அவள் பக்கத்து வீட்டிலிருக்கும், மம்மா போலா, யோருபா இனத்தைச் சேர்ந்தவள். அவளுக்கு ஹவுஸா மொழியில் ஓரிரு வசைச் சொற்கள் மட்டுமே பேசத் தெரியும். அங்கு ஐந்து பெண்கள் இருக்கிறார்கள். ஐவரும் தங்கள் கணவருடன் வசிக்கிறார்கள். அனைவரும் அவரவர் கணவனுடன் வித்தியாசமான மொழியிலே பேசுகிறார்கள்.அந்தப் பெரிய வீட்டைச் சுற்றியுள்ள முற்றத்தில் வெறுங்காலுடன் ஓடி விளையாடும் பிள்ளைகளின் உற்சாகக்கூவலால் அவளுடைய முன் மதியத் தூக்கம் எப்போதும் தடைப்பட்டு விடும்.

ஆனால், அன்று காலை, ஜுபைரு முகம் வாடி, சோர்ந்த முகத்துடன், தளர்ந்த நடையுடன் வீட்டிற்கு வந்த போது அவள் தூக்கம் கலைந்து விட்டது. படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தாள்.

"அவர்கள் அவரைக் கொன்று விட்டார்கள்" ஜுபைரு மூலையிலிருந்த ரேடியோவை எடுக்கப் போனான்.

"யாரை?" அவளையறியாமல், வயிற்றின் மீது பாதுகாப்பாய் தன் கையை வைத்துக் கொண்டாள்.

"முர்த்தாலா, நாட்டின் தலைவரைக் கொன்று விட்டார்கள்" ரேடியோவின் குமிழைத் திருப்பினான். கரகரவென சப்தம். இறுதியாக ஏதோ ஒரு நிலையத்தில் இருந்து கரகர சப்தத்தோடு கீதம் இசைத்தது. தன் சொந்த வீட்டில் துக்கம் நிகழ்ந்து விட்டது போல ஜுபைரு மிகவும் துயரத்தோடு அமர்ந்திருந்தான். ரத்த சம்பந்தம் கொண்ட உடன்பிறந்த சகோதரனை இழந்தவன் போலத் துக்கம் பாவித்துக் கொண்டிருந்தான். ஆற்றாமையால் தலையிலிருந்த தொப்பியைக் கழற்றி தரையில் விட்டெறிந்தான். சுத்தமாக மழிக்கப்பட்டிருந்த அவனது தலையில் முத்து முத்தாக வியர்வைத் துளிகள் பூத்திருந்தன.

"இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ரஜி உன்" "முர்த்தாலா எப்போது? எப்படி?"

"அவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டார்கள்."

பாழடைந்த கோவிலின், பராமரிக்கப்படாத புராதன சிலைகளைப் போல அசையாமல் அவர்கள் அமர்ந்திருக்க, ரேடியோ ராணுவ சங்கீதத்தை முழங்கிக் கொண்டிருந்தது.

சஹாராப் பாலைவனத்திலிருந்து கிளம்பி அட்லாண்டிக் சமுத்திரத்தின் கடற்கரை வரை பரவும் கடுமையான வறண்ட புழுதிப்புயல் போல, அந்தச் செய்தி நாடெங்கிலும் பரவியது. பயந்து போன பெற்றோர்கள் வெளியே சென்றிருந்த குழந்தைகளை விட்டிற்கு அழைத்து வந்துவிட்டார்கள்.

"ஜுபைரு! ஜுபைரு!" பக்கத்து வீட்டுக்காரர் நாம்டியின் தடித்த உருவம், திறந்திருந்த கதவின் படபடத்துக் கொண்டிருந்த திரைச்சீலைக்குப் பின்புறம் தெரிந்தது. ஜுபைரு வெளியே வந்து பார்த்தபோது, தலை குனிந்து, கைகளைக் கட்டிக் கொண்டு நின்றிருந்தார் நாம்டி. செய்தி வெளியானதுமே, மற்ற கடைக்காரர்களைப் போலவே அவரும் மார்க்கெட்டிலிருந்த தன் துணிக் கடையை மூடி விட்டு வந்துவிட்டார்.

"செய்தி கேட்டீர்களா, முர்த்தாலா இறந்து விட்டாராமே? உண்மை தானே?"

கதவில் சாய்ந்து கொண்டு குனிந்து தன் கால்களையே பார்த்துக் கொண்டிருந்தான் ஜுபைரு.

"ஓஓ, முர்த்தாலா!! அந்த நல்ல மனிதன் இப்படி இறந்திருக்கக் கூடாது ஜுபைரு" சிவில் யுத்தத்தின் போது முர்த்தாலா முஹம்மது எவ்வாறெல்லாம் மறைந்து தப்பித்து வாழ்ந்தார் என்னும் வரலாறைக் கேட்டு வியந்திருக்கிறார் நாம்டி. முர்த்தாலாவின் இரண்டாவது டிவிஷன் படைகள் மேற்கு மாகாணங்களின் கிளர்ச்சியாளர்களை அழித்துக்கொண்டிருந்த போது, நாம்டி, ,அபா நகரில் வசித்து வந்தார். அவர் கேட்ட கதைகளின் படி, துப்பாக்கிக் குண்டு மழையினூடே நடந்து, ரத்த ஆற்றில் நீந்தி, எந்த வித சேதாரமும் இல்லாமல் தப்பி வந்தவர் முர்த்தாலா.

"நானும் அப்படித்தான் கேள்விப்பட்டேன்." தனக்குத் தெரிந்த பிட்ஜின் ஆங்கிலத்தில் ஜுபைரு பேசினான்.

"கடவுளே" கெட்ட கனவிலிருந்து எழுந்தவர் போல தன்னை உலுக்கிக் கொண்டார் நாம்டி.

"இனி என்ன நடக்கப் போகிறதோ?"

ஜுபைரூவும் தோளைக் குலுக்கினான். ஏனென்றால் நாட்டில் இப்போது என்ன நடக்கிறது, இனிமேல் என்ன நடக்கப் போகிறது என்று யாருக்குமே சரியாகத் தெரியவில்லை.

அப்போது ஜோசப் வந்து சேர்ந்தார். இரவில் குடித்துக் கொண்டு சத்தமாகப் பாடுவதற்கும், மனைவியையும், பிள்ளைகளையும் அடிக்கும் வீர தீரத்திற்கும் காம்பவுண்டில் பிரசித்தமானவர். சில மாதங்கள் முன்பு வரை போலீசில் வேலை பார்த்தவர் திடீரென்று ஒரு நாள் அந்த யூனிஃபார்ம் அணிவதை நிறுத்தி விட்டார். நிறுத்த வேண்டிய கட்டாயம். அவன் பணி நீக்கம் செய்யப் பட்டிருந்தான். குடிபோதையில் அவர் செய்யும் அட்டகாசங்கள் இரவு நேர வழக்கமாகிப் போனது.

"நைஜீரியத் தோழர்களே, நாம் அனைவரும் ஒன்றாக இருக்கிறோம்." கிளர்ச்சியாளர்கள் ஒவ்வொரு படுகொலைக்கும் பின்னாலும் சொற்பொழிவாற்றி இறுதியில் இந்த வசனம் சொல்லித்தான் முடிப்பார்கள். அதை ஒரு இறுமாப்புடனும், வெற்றிச் சிரிப்புடனும் உரக்கச் சொல்லிக்கொண்டிருந்தான் ஜோசப். "ஜெனரல் முர்த்தாலா ரமத் மொஹமத் இறந்தார்."

"இறைவா!!" நாம்டியின் உடல் நடுங்கியது.

"நல்லது!" ஜோசப் மறுபடி சிரித்தார்.

ஜுபைரு அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்னை ஏன் அப்படிப் பார்க்கிறாய்? இது நல்லது இல்லையா என்ன? என்னை அவன்தானே போலீஸ் வேலையிலிருந்து நீக்கினான்? எனக்குத்

தகுதி இல்லாமல் போய் விட்டதா? நேரில் பார்த்திருந்தால், நானே அவனை சுட்டிருப்பேன்..."

எழுந்து போய் அவரது தாடையில் ஒரு குத்து விட்டான் ஜுபைரு. ஒரு வினாடி ஜோசப் ஆடிப்போய்விட்டார். ஆக்ரோஷமான நாய்கள் போல கத்திக்கொண்டு மூர்க்கத்தனமாக அவர்கள் சண்டையிட்டது அதிக நேரம் நீடிக்கவில்லை. தனது கிழிந்த உதடுகளையும் பொருட்படுத்தாது, மீண்டும் ஜோசப்பைத் தாக்க முற்பட்டபோது, உள்ளே பிந்த்தாவின் பனிக்குடம் எந்த முன்னறிவிப்புமின்றி தானாக உடைந்தது. பயந்து போன பிந்த்தா பெருங்குரலெடுத்து அலறினாள். மம்மா போலாவும், ஜோசப்பின் மனைவி மம்மா புலூவும் ஓடி வந்தார்கள். அவர்கள்தான், பல மணி நேரங்களுக்குப் பிறகு, உடல் முழுக்க குருதிச் சகதியோடு, கோபக்கார குட்டி ராட்சஷன் போல கத்திக் கொண்டு பிறந்த பிந்த்தாவின் முதல் குழந்தையைக் கையில் ஏந்தினார்கள். ஒரு வாரத்திற்குப் பின் குழந்தைக்கு முர்த்தாலா என்று ஜுபைரு பெயர் சூட்டிய போது பலர் ஆச்சரியப்பட்டுப் போனார்கள். ஆனால், அன்னையர்கள் மீது சமூகம் விதித்திருந்த சம்பிரதாயமான 'குன்யா' விற்குக் கட்டுப்பட்டு அந்தப் பெயரை அழைக்காமல், பிந்த்தா 'பையா' என்று தன் மகனை விளித்தாள். இப்படியாகத்தான் ஒரு புகழ்பெற்ற ராணுவ ஜெனரல் மரணமடைந்த நாளில், யாரு என்று அழைக்கப் பட்ட, பிந்த்தாவின் மூத்த மகன் முர்த்தாலா ஜுபைரு ஜனித்தான்.

—

இரண்டாவது மகன் முன்க்கைலா பிறந்த பிறகுதான், தானும் வெளியே சென்று உலகத்தை எதிர்நோக்க வேண்டுமென்று பிந்த்தா தீர்மானித்தாள். அவளுக்குத் திருமணமாகி மூன்றாண்டுகளாகி விட்டது. அவளது திருமணத்தன்று, திருமண ஆலோசகரான தஸ்மியா சொன்ன அறிவுரைகள் நினைவுக்கு வந்தாலும் இப்போது அதைக் கண்டு கொள்ளவில்லை பிந்த்தா.

"உங்கள் உறவு முடிந்ததும் உன் இடுப்பைச் சற்று உயரமாக வைத்துக் கொள். அப்போதான் உன் கர்ப்பப்பைக்குள் உயிரணுக்கள் அடைய ஏதுவாக இருக்கும்." பிந்த்தா அதிர்ச்சியில் உறைந்து போய் தஸ்மியாவின் இடுங்கிய கண்களையும்,சுருங்கிய தாடையையும் பார்த்தாள். இது போல எத்தனை இளம் மணப்பெண்களுக்கு, அவள் தன் அறிவுரைகளை வாரி வழங்கியிருப்பாள் என்று ஆச்சரியப்பட்டாள். தஸ்மியா சிரித்தபோது, அவளுடைய பொக்கை வாய் இருட்டான குகை போலத் தெரிந்தது. அவள் கணவன் பல வருடங்களுக்கு முன் இறந்து விட்டான். அவளுடைய மூன்று பிள்ளைகளும் கூடப் பத்தாண்டுகளுக்கு முன்பு காலமாகி விட்டார்கள்.

பிந்த்தாவை செல்லமாகத் தட்டினாள் தஸ்மியா. "எப்படி என் கண்ணைப் பார்க்கிறாய் நீ? உன்னுடைய கணவனை இப்படியெல்லாம் பார்க்காதே, முக்கியமாக உறவின் போது, நீயும் அவனைப் பார்க்காதே, உங்கள் உறுப்புகளை இருவரும் பார்த்துக் கொள்ளாதீர்கள். உனக்கு நல்ல பிள்ளைகள் பிறக்க வேண்டுமென்றால் இதையெல்லாம் கடை பிடித்தாக வேண்டும்." தன் பாவாடையின் முடிச்சிலிருந்து ஒரு மிட்டாயை எடுத்துத் தன் பொக்கைவாயில் அழுந்தக் கடித்தாள். அங்கிமிங்குமாக அசையும் அவள் தாடையைப் பார்த்தாள் பிந்த்தா. "அப்புறம் அவன்மேல் நீயாகப் பாயாதே. உன்னை வேசி என நினைத்துக் கொள்ளப் போகிறான்." பொங்கி வந்த அழுகையைக் கட்டுப்படுத்திக்கொண்டே பிந்த்தா தலையாட்டி வைத்தாள். ஒரு ஆணிடம் நெருக்கமாக இருக்கப் போகும் சூழல், அதுவும் முன் பின் அறியாத அந்நியனுடன் என்பது அவளுக்கு சற்றும் உவப்பாக இல்லை.

"அப்புறம், அவனுடைய சட்டைப் பையில் சில்லறை தேடுவது பற்றி மறந்து விடாதே, நீ சிக்கனமாக இருந்தாயென்றால், இந்தச் சில்லறைகள் நல்ல தொகையாக மாறும். அதை வைத்து உன் அம்மாவுக்கு நல்ல பொருள் ஏதாவது வாங்கிக் கொடுக்கலாம், புரிகிறதா?" பிந்த்தா அவளை முறைத்துப் பார்த்தாள். தொண்டையைச் செருமிக் கொண்ட தஸ்மியா, "இந்தக் காலத்து சின்னப் பிள்ளைகளுக்கு எல்லாம் தெரியும் என்று நினைப்பு" என்று சொல்லிக் கொண்டாள்.

மூன்று வருடங்களாகி விட்டது. அவளைப் பொருத்தவரை, இந்த மூன்று வருடங்கள் நிச்சயமாக அவளுக்கு சில உரிமைகளைத் தந்திருக்கிறது. நிர்ணயிக்கப்பட்ட விதிகளை மீறுவதற்கான சில உரிமைகள். அதுவும் கணவனிடம்...அப்படி அவள் உறுதி செய்து வைத்திருந்த இரவில், உடையெல்லாம் கிழிந்து, காயமான உதடுகளுடன் வீடு வந்து சேர்ந்தான் ஜுபைரு. அவன் உள்ளே வந்தபோது வராந்தாவில் கிழங்கு மாவை சலித்துக் கொண்டிருந்தாள் பிந்த்தா. கோபத்தில் அவன் மூக்கு விடைத்தது. கீழே பாயில் அமர்ந்தவன் ரேடியோவை எடுத்துத் திருகினான். பிந்த்தாவும் தொடர்ந்து வந்து அவனருகில் அமர்ந்தாள்.

"என்ன நடந்தது?'

மாவுக்கையை தன் உடையில் துடைத்துக் கொண்டாள். அவளை நோக்கி அவன் முஷ்டியை நீட்டிய போது சற்றே வளைந்து கொண்டாள் பிந்த்தா. அவன் கை தரை விரிப்பில் 'தட்' என்ற ஓசையுடன் மோதியதில், ஏறக்குறைய விழித்து விட்டான் குழந்தை. சிணுங்கல்கள் அடங்கி, மீண்டும் குழந்தை தூங்கிய போது, ஜுபைரு பெருமூச்சுவிட்டான்.

"எனக்கு வேலை போய் விட்டது."

அதிர்ச்சியில் தன் இரு கைகள் இரண்டையும் மாறி மாறி அறைந்து கொண்டாள் பிந்த்தா. "ஐயோ, இது எப்படி நடந்தது?"

"என்னுடைய மேலதிகாரியை நான் அடித்து விட்டேன்" படபட வென்று சொன்னான். "அவன் என்னை முட்டாள் ஆடு என்று இழிவாகப் பேசினான். கோபத்தில் அவனை அடித்து மூக்கைப் பெயர்த்து விட்டேன்."

"ஆனாலும், ஆனாலும் நீங்கள் ஏதாவது..."

"நான் ஏதாவது? என்ன? நான் என்ன செய்ய வேண்டுமென்று நீ சொல்லத் தேவையில்லை...முதலில் என்ன நடந்தது என்றே உனக்குத் தெரியாது, அதனால வாயை மூடிக் கொண்டு இரு...கேட்கிறதா?"

அப்போது தன்னைச் சுற்றியிருந்த சிறிய போர்வையை, பிஞ்சுக் கால்களால் உதறிக் கொண்டே முன்க்கைலா சத்தமாக அழத் தொடங்கி யிருந்தான். அவனைக் கையிலெடுத்து, பாலூட்ட ஆரம்பித்தாள் அவள். தலையை அப்படியும் இப்படியும் ஆட்டியபடியே மீண்டும் கத்தினான். தோளில் அவனைப் போட்டு ஏப்பம் வர வைத்தவுடன், மீண்டும் மடியில் இருத்திப் பாலூட்ட முயற்சி செய்தாள். தலையைத் திருப்பிக் கொண்ட குழந்தை, அழுகையை நிறுத்தவேயில்லை

"என்ன செய்கிறாய் சனியனே? குழந்தையைக் கொல்ல நினைக் கிறாயா?"

தன் கன்னத்தில் வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்தபடி, குழந்தையைத் தோளில் சாய்த்துக் கொண்டாள் பிந்த்தா. அவனது கத்தல் காதை அடைத்தது. சற்று நேரம் அறைக்குள் குறுக்கும் நெடுக்கும் நடந்த ஜுபைரு புயலென வெளியேறினான். சிறிது நேரத்தில் மீண்டும் உள்ளே வந்தான். அவனுடைய மூர்க்கத்தனம் திடுக்கிட வைத்தது. மீண்டும் வெளியேறும் முன் உடை அலமாரிக்குச் சென்று அணிந்திருந்த கஃப்தானை மாற்றிக் கொண்டான்.

இவையெல்லாம் நடந்து இரண்டு நாட்களாகி விட்டது. இரவு, படுக்கையில் அவன் புரண்டு படுத்துக் கொண்டிருந்த போது, காலைச் சுரண்டித் தன்னை அழைக்கப் போகிறான், உடனே தன் உடலைத் தயாராக்கி அவனுக்கு உடன்பட வேண்டுமென்றும் பிந்த்தா உணர்ந்து கொண்டாள். அவளது உடலில், மார்புகளில் அவனது கைகள் அலையப் போகிறது, பின்னும் அவள் மீது அவன் உடல் இயங்கும்போது, முனகல் வெளிப்படாமலிருக்கத் தன் உதடுகளைக் கடித்துக் கொள்வான், கண்களை மூடிக்கொண்டு, மூச்சைப் பிடித்துக் கொண்டு மனதிற்குள் மெதுவாக

அவள் எண்ண ஆரம்பிப்பாள். அறுபதுக்கும், எழுபதுக்கும் இடையிலான ஏதோ ஓர் எண்ணிக்கையில் அவன் தளர்ந்து அடங்கிய பின், அவள் மீதிருந்து இறங்குவான். ஜுபைரு நடைமுறை வாழ்க்கையோடு ஒத்துப் போகக் கூடியவன். இந்த உடல் நெருக்கத்தை திருமண வாழ்வு அளித்த செலவற்ற இன்பமாக நினைத்துக் கொள்பவன். அவனைப் பொருத்தவரை கொண்டாட்டங்கள் ஏதுமின்றி வாழ்வில் எப்போதும் நடக்கும் ஒரு நிகழ்வாகத்தான் இதை எடுத்துக்கொள்வான்.

ஆனால் பிந்த்தா மாற்றங்களை விரும்புபவள். எப்போதும் புத்துணர் வுடன் வித்தியாசமாக இருக்க வேண்டுமென்று நினைப்பவள். அன்றிரவு கூட அவன் அழைத்ததும், உடனே உடன்படாமல் சிறு விளையாட்டில் ஈடுபட்டாள். அவன் உடலை வருடிக்கொடுத்து முத்தமிட்டாள். அந்தத் தொடுகை அவனையும் கிளர்த்தியது. ஆனால், அவர்களின் மெல்லிய குரல், முன்னறையில் உறங்கும் முதல் பையன் யாரூவை எழுப்பி விடுமென்ற பயம் இருவருக்கும் எப்போதும் இருக்கும்.

"என்ன கிரகத்தையெல்லாம் செய்கிறாய்?" அவன் எரிந்து விழுந்தான். பாதி உறுமலும் பாதி கிசுகிசுப்பாகவும் உமிழ்ந்த அவன் குரல் அவளை சம்மட்டி போல் தாக்கியது. அதன் பின் எந்த வித சடங்குகளுமின்றி அவன் உறவு கொள்ளத் தொடங்கினான். முகத்தை சுவற்றுப் பக்கமாகத் திருப்பிக் கொண்ட பிந்த்தா, மனதில் எண்ணிக்கையைத் தொடங்கினாள். அவள் இருபது எண்ணிக் கொண்டிருந்த போது, மூடியிருந்த அவள் கண்களிலிருந்து தன்னிச்சையாக கண்ணீர் நழுவி உருண்டோடியது.

—

5

"முதியவரை உண்ட பின், வாயில் நரைமுடி வருகிறதென்று முறையிடுதல் கூடாது"

முன்க்கைலாவின் இல்லத்தில் ஒரு நாள் தங்கியிருந்த பின் ஊர் திரும்பினாள் ஹதீஸா. வீட்டின் மூலை முடுக்குகளில் பிந்த்தா ஏற்றி வைத்திருந்த ஊதுவத்திகளால் வீடெங்கும் நறுமணம் படர்ந்திருப்பதை அறிந்து கொண்டாள். அந்த நறுமணத்தோடு ஒரு அமைதியான சூழல் வீட்டில் குடிகொண்டிருப்பதையும் உணர்ந்தாள். அம்மாவின் நடத்தையிலிருந்த விவரிக்க முடியாத ஒரு நாணம், ஐம்பதுகளில் இருக்கும் பெண்ணை விட ஃபைஸாவின் வயதிற்குப் பொருத்தமானதாகத் தெரிந்தது. வேறு ஏதும் விசித்திரம் நடந்திருக்க வாய்ப்பில்லை என்றே தோன்றியது.

முன்க்கைலாவின் இரு பெண் குழந்தைகளைச் சந்தித்து வந்த உற்சாகத்தில் இன்னும் மிதந்து கொண்டிருந்தாள் ஹதீஸா. அவன், அம்மாவிற்காக வாங்கி அனுப்பியிருந்த கண்ணாடியை எடுத்துக் கொடுத்தாள். மூலையில் அணைந்து போயிருந்த ஊதுவத்தியின் இடத்தில் வேறொன்றை ஏற்றிக் கொண்டிருந்த அம்மாவைப் பார்த்தாள்.

அழகிய பெட்டியில் இருந்த அந்தக் கண்ணாடியை, மிகுந்த பணிவுடன் ஏற்றுக் கொண்டாள் பிந்த்தா. நன்றி என்று தாழ்ந்த குரலில் சொன்னாள்.

"அதை நீங்கள் எடுத்துப் பார்க்கவில்லையா?"

"ஓ, அப்புறமாகப் பார்க்கிறேன்" ஹதீஸா தன் அம்மாவை உற்று நோக்கினாள். பார்வையிலிருந்த கேள்வியை உணர்ந்த பிந்த்தா, அவளைப் பார்த்துப் புன்னகை செய்தாள். பெட்டியைத் திறந்து, கண்ணாடியை எடுத்து அணிந்து பார்த்தாள். உடனே, அதைக் கழற்றி திரும்பவும்

பெட்டிக்குள் வைத்து விட்டாள். "நன்றாக இருக்கிறது" குளியலறைக் கதவை ஓரக்கண்ணால் பார்த்தாள் பிந்த்தா "நான் இப்போது குளிக்கப் போக வேண்டும்."

"நீங்கள் புத்துணர்வாக இருந்ததைப் பார்த்து ஏற்கெனவே குளித்து விட்டீர்கள் என்று நினைத்தேன். அப்புறம், உங்க சென்ட் மிக காட்டமாக இருக்கு ஹஜியா. எப்படி இந்த செண்ட், ஊதுவத்தி வாசம் எல்லாம் பொறுத்துக் கொள்கிறீர்கள்? மூச்சுத்திணறல் வந்து விடும் போல இருக்கிறது." பிந்த்தா சிரித்துக்கொண்டே குளியலறை நோக்கி நடந்தாள்.அம்மாவின் சங்கடமான நிலையைப் பார்த்தவுடன், ஃபைஸாவைப் பார்க்கும் சாக்கில் அங்கிருந்து நகர்ந்தாள் ஹதீஸா. படுக்கையில் குப்புறப் படுத்துக்கொண்டு, வாசித்துக்கொண்டிருந்த புத்தகத்தில் மூழ்கியபடி தனக்குத்தானே சிரித்துக் கொண்டிருந்தாள். "ஏ, பெண்ணே, அந்தக் குப்பைப் புத்தகத்தைத் தூக்கிப் போடு." "குப்பையா?"

"ஆமாம், இந்த ஹஜியா ஏன் இப்படிக் கிறுக்குத்தனமாக நடந்து கொள்கிறார்கள்?"

"ஹஜியாவா?" எனக்கு எதுவும் தெரியாது. நான் ஸ்கூலில் இருந்து வந்ததிலிருந்து இப்படித்தான் இருக்கிறார்கள்."

கதவில் சாய்ந்து கொண்டே, "சரி, அவங்க குளித்து விட்டு வந்ததும், என்ன விஷயம் என்று நானே அவங்களைக் கேட்கிறேன்."

"குளிக்கிறார்களா? இந்தக் குறுகிய நேரத்தில் நேரத்தில் அவங்க குளிப்பது மூணாவது தடவை."

அம்மா, தன் வாசனைத் திரவியங்களிலும், குளியல்களிலும் எதையோ கழுவி சுத்தம் செய்து மூடி மறைக்கிறார் என்று சந்தேகமில்லாமல் உணர்ந்தாள் ஹதீஸா.

வெளியே வந்தவள், இரண்டு நாட்களுக்கு முன் தாய் வீட்டின் வெற்றிடத்தை உயிரோட்டமாக்கத் தான் நட்டு வைத்த பெட்டூனியா மலர்ப் பாத்திகளின் அருகில் சென்றாள். சில இடங்களில் காய்ந்து போனாற் போல இருந்தது. அதனால், தேவைக்கும் அதிகமாகவே செடிகளுக்கு நீர் வார்த்து விட்டு, இந்த மலர்ச் செடிகள் வளர்ந்து நிற்கும் போது எப்படி இருக்கும் என்று கற்பனை செய்தாள்.

குளியலறையிலிருந்து வெளியே வந்த பிந்த்தா, ஈரம் பாய்ந்த மலர்ச் செடிகளின் அருகே மனம் மயங்கி நிற்கும் மகளைக் கண்டாள். தன்னி டமிருந்து கசியும், ஆட்சேபணைக்குரிய பொருந்தா உறவின் வாடையை மகள் சிறிதளவு கூட முகர்ந்து கண்டுபிடித்து விடக்கூடாது என்று

விரும்பினாள். தூரத்தில் நின்று கொண்டே, எல்லாம் சரியாக இருக்கிறதா என்று ஹதீஸாவைக் கேட்டாள். திரும்பிய ஹதீஸாவின் பார்வையைத் தவிர்த்தாள் பிந்த்தா. "நாளைக்கே கிளம்பணுமா என்ன?"

"ஆமாம்"

"இன்னும் கொஞ்சம் நாள் இருக்கலாமே?"

ஹதீஸா உள்ளூர சிரித்துக் கொண்டாள்

அம்மாவின் வார்த்தைகள் மனதிலிருந்து வரவில்லை என்று அவளுக்குப் புரிந்தது.

"என்னுடைய கணவர் ஃபோன் செய்து, நான் நாளைக்குத் திரும்பி வருகிறேன் என்று சொல்லியிருந்ததை நினைவு படுத்தினார். குழந்தைகளும் நிச்சயமாக என்னை ரொம்ப மிஸ் பண்ணுவார்கள்."

"ஆமாம், குழந்தைகள்."

"கபீர் கையில் ஏதோ வெட்டுக் காயம் பண்ணிக் கொண்டானாம், போய்ப் பார்க்கவேண்டும்." தன் மூத்த மகனை அன்புடன் பெயர் சொல்லி அழைத்துக் கொஞ்சும் மகளின் சுதந்திரத்தின் மீது மெலிதான பொறாமை கொண்டாள் பிந்த்தா. அது போன்ற அனுபவத்தை அவள் தன் தாயிடமிருந்தும் பெற்றதில்லை, அவளும் தன் மகனுக்கும் அளித்ததில்லை.

"மூத்த மகனைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவது ஒரு மாதிரியாக இல்லையா உனக்கு?"

ஹதீஸா அம்மாவைத் திரும்பிப் பார்த்து சிரித்தாள்.

"ஹ ஹா, ஹஜியா, இது இருபத்தியோராம் நூற்றாண்டு. என்னையும் என்னுடைய குழந்தைகளையும் உங்களைப் போலக் கட்டுப்பெட்டித் தனத்தில் எல்லாம் நான் கட்டிப் போடமாட்டேன்."

இதயம் கனக்க, கண்களில் ஈரத்துடன் அங்கிருந்த தூணில் சாய்ந்தவாறு, மரத்தின் கிளைகளில் அங்குமிங்கும் குதித்துக் கொண்டிருந்த புல்புல் பறவைகளின் பக்கம் பார்வையைத் திருப்பினாள் பிந்த்தா. மகளின் பேச்சு மகிழ்ச்சியையும் துக்கத்தையும் ஒரு சேரத் தந்தது. அவளும் சில விஷயங்களில் மாற்றம் கொண்டு வரத்தான் விரும்பினாள். மகன் யாரூவுக்கு அன்பை வாரி வழங்க வேண்டுமென்றும், ஒவ்வொரு தாயும் தன் மகனை எப்படிப் பாதுகாப்பாய் வளர்ப்பாளோ அப்படியே தானும் இருக்க வேண்டுமென்றும் அவள் விருப்பப்பட்டாள். இன்று, அந்த மகன் இறந்து பதினைந்து வருடங்கள் கழித்து, வீட்டின் வேலி தாண்டி வந்த யாரோ ஒரு

துஷ்டனின் கண்களில் அவனைத் தேடிக் கொண்டிருக்கிறாள். அவனுடைய கண்களில் யாரூவின் பிம்பத்தைக் கண்டதால் தான் அந்தக் கடும் குற்ற உணர்வைத் திரை போட்டு மறைக்கிறாள். அவள் மிகவும் நேசித்த மகன், ஆனால் அந்த நேசத்தை வெளிக்காட்ட ஒருபோதும் அனுமதிக்கப்படாத தாய் அவள்.

அன்றைய மதியத்தில் அந்தப் பதட்டமான, ஆவேசமான நிகழ்வு நடக்க வேண்டும் என அவள் நினைத்தே பார்க்கவில்லை, குறைந்த பட்சம், அந்த மாதிரியாகவாவது இல்லாமல் இருந்திருக்கலாம். நடந்தவை எல்லாமே இப்போது மங்கலாகத் தெரிந்தது. அவள் கழுத்திலிருந்த தழும்பைப் பார்த்து என்னை மன்னித்து விடு என்று அவன் சொன்னது நினைவில் இருந்தது. அவளுள் நீறு பூத்திருந்த தாபங்கள் பெரும் சுடராக பற்றிக் கொண்டது. அவனுடைய கண்களிலும் அதே நெருப்பு எரிந்தது. அவனாக அதை அணைக்கும் வரை எரிந்து கொண்டே இருந்தது. அவள் இதயம் வேகமாகத் துடித்தது. அவளுடைய மார்புகளை அவன் கைகள் வருடிய போது நகர எத்தனித்தாள். அவளது முயற்சி மிக பலவீனமாக இருந்தது. உடலைச் சுற்றி அவன் கைகள் வளைத்த போது, அவனது இதழ்களைக் கண்டடைந்தாள் அவள்.

நீண்ட நேரம் கழித்து, மூச்சு வாங்க படுக்கையில் அருகருகே படுத்திருந்த போதுதான் அவமானம் உறைத்தது. எழுந்து உடைகளை பொறுக்கிக் கொண்டாள். வீட்டை விட்டு வெளியேறும் முன் சற்று நேரம் நின்று கொண்டிருந்தான். கதவருகில் நின்ற அவள் கண்களைப் பார்ப்பதைத் தவிர்த்தான். திரைகளை விலக்கி அறையை விட்டு அவன் வெளியேறும் வரை இருவரும் அப்படியே நின்று கொண்டிருந்தார்கள். அவனது காலடி ஓசைகள் காதில் விழாத போது, அவன் சென்று விட்டதை அறிந்து நிம்மதியாக மூச்சு விட்டாள். ஒரு அந்நியனின் விழிகளில் அவள் யாரூவைத் தேடிய போது, இதுவரை அடக்கி வைத்திருந்த ஆசைகள் கட்டுடைத்துப் பெருகியதின் விளைவாகத்தான் கள்ள உறவின் தாங்கவியலாத வீச்சம் உடலில் குடி கொண்டது என்று அவளுக்குத் தெரிந்தது.

"அம்மா, நீங்கள் ஒன்றும் சொல்லவில்லை"

பிந்த்தா சொன்னாள். "நீங்கள் எல்லோரும் அதிர்ஷ்டசாலிப் பெண்கள்."

"உண்மையாகவா?"

"ஆமாம், எங்கள் காலத்தில், பெண்கள் அவர்களுடைய முதல் ஆண் குழந்தையைப் பெயர் சொல்லி அழைத்தால் ரொம்பக் கோபப்படுவார்கள். சில பெண்கள் இரண்டாவது, மூன்றாவதாகப் பிறந்த பையன்களைக் கூடக்

பெயர் சொல்லி அழைக்கமாட்டார்கள்.

"இப்போது இது உங்கள் காலமில்லையே ஹஜியா?"

"நல்லது, இதை நல்ல விதமா உபயோகித்துக் கொள்" இந்த வார்த்தை களை மிக ஆத்மார்த்தமாக பிந்த்தா சொன்னதை உணர்ந்த ஹதீஸா அவளைத் திரும்பிப் பார்த்தாள். ஆனால் பிந்த்தா, தூணின் ஒரு பக்கமாக முகத்தைச் சாய்த்தவாறு, பறவைகள் வந்தமர்ந்திருந்த மதிலைப் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மாலைத் தென்றல் ஓர் இனிய நறுமணத்தை ஹதீஸாவின் பக்கமாக ஏந்தி வந்தது. அளவுக்கதிகமாக பூசப்பட்டிருக்கிறது என முடிவு செய்யும் முன், அந்த நறுமணத்தை ஆழமாக சுவாசித்தாள்.

"உங்க சென்ட் வாசனை நன்றாக இருக்கிறது ஹஜியா." பிந்த்தா சற்று நேரம் மௌனமாக இருந்தாள்.

"நன்றி."

"திடீரென்று சென்ட், ஊதுபத்தி உங்களுக்குப் பிடிக்க ஆரம்பித்து விட்டது"

"ம்ம்ம், அவை எல்லாம் எப்போதும் எனக்குப் பிடிக்கும்"

"ஆமாம். ஆனால் நான் திரும்பி வந்ததிலிருந்து, நிறுத்தாமல் ஊதுவத்தி பற்ற வைத்துக் கொண்டே இருக்கிறீர்கள்..." மூன்று முறை குளித்தது பற்றிக் குறிப்பிடாமல் நிறுத்தினாள்.

பிந்த்தாவின் நீண்ட மௌனம், அதைப் பற்றிப் பேச விருப்பமில் லாததை உணர்த்தியது. கடைசியில், தன் ஹிஜாப்பை இறுக்கமாகக் கட்டிக் கொண்டே, "உன்னுடைய அக்கா ஹுரைராவுடன் நீ பேச வேண்டும். அவள் தன்னுடைய முதல் திருமண வாழ்க்கையைக் கெடுத்தது போல இரண்டாவதையும் கெடுத்துக் கொள்ளப்போகிறாளோ என்று எனக்கு பயமாக இருக்கிறது."

நறுமணப் பொருள்களுடன் உண்டான பிந்த்தாவின் திடீர் ஆசை பற்றித் துவங்கி, ஹுரைராவின் கிறுக்குத்தனமான நடவடிக்கை வரை அவர்கள் உரையாடல் சுழன்றது. கவிந்து கொண்டிருந்த இருள், இரவு உணவைத் தயாரிக்க வேண்டிய தேவையை அறிவுறுத்தி அவர்களை வீட்டிற்குள்ளே நகர்த்தியது.

—

6

"சட்டையை உரித்த பின்னும் பாம்பின் இயல்பு மாறுவதில்லை."

அவன் கைகள் அவள் ஆடைகளுக்குள் அளைந்த போது, உடல் ரோமங்களை மழித்து, அவள் தன் அழகை மேலும் நேர்த்தி செய்திருக்கிறாள் என்பதை உணர்ந்து ஆச்சரியப்பட்டான். அவனுடைய ஆனந்த அதிர்ச்சி அவளுக்கு வேடிக்கையாக இருந்தது. அவளது ஆடைகளைக் களைந்த போது வலுவற்ற எதிர்ப்பையே வெளிக்காட்டினாள். அவளெதிரே இருந்த ஸ்டூலில் அவன் அமர அனுமதித்தாள். அவளை நோக்கி அவன் மண்டியிட்ட போது வெட்கத்தில் கால்களைக் குறுக்கிக் கொண்டாள். அவள் தொடைகளில் கை வைத்து முன்னேறியவன், அதுவரை காணாத ஒரு உலகுக்கு அவளை இட்டுச் சென்றான். அவள் உடலில் இதுகாறும் பூட்டி வைத்திருந்த ஏதோ ஒன்று அவனது இதழ்களால் திறக்கப்பட்டது. அவர்கள் இருவர் மட்டுமே வீட்டில் இருந்ததால், அதைத்தான், அந்த அனுபவத்தைத்தான் அவள் எப்போதும் விரும்பி வேண்டியிருந்ததால், மேலும் கிளர்ந்தெழும் உணர்வுகளைக் கட்டுப்படுத்த இயலாததாலும் அவள் இன்பத்தின் உச்சத்தில் அனத்தினாள். அவள் கண்களிலிருந்து இறங்கிய கண்ணீர் அவள் முகத்தில் வழிந்தோடியது.

இருவரும் படுக்கையில் இருந்தார்கள். இருவருக்குமே மற்றவர் கண்களை சந்திக்கும் தைரியம் இன்னும் வரவில்லை. அவனுக்கு முதுகைக் காட்டி திரும்பியிருந்த பிந்த்தா, இன்னும் சற்று விலகிச் சென்றாள்.

"நான் மோசமான பெண் இல்லை, தெரியுமா?"

முகத்தைச் சுருக்கினான் ரெஸா. "நான் உன்னை எப்போதும் அப்படிச் சொன்னதில்லை. உன்னைப் பற்றி நான் மிக உயர்வாகத்தான் நினைத்துக்

கொண்டு இருக்கிறேன்...உனக்குப் புரிகிறதா?"

"நமக்குள் நடந்த விஷயத்தால், நீ என்னைப் பற்றி எந்த விதமான அபிப்ராயமும் ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது, நான் கண்ணியமான, மரியாதைக்குரிய பெண் தெரியுமா? என் கணவரைத் தவிர வேறு எந்த ஆணுடனும் இதுவரை இருந்ததில்லை."

"எனக்குப் புரிகிறது, என்னை நம்பு. நான் உன்னை அது போல தப்பானவளாக எப்போதும் நினைத்தது இல்லை. அப்படிச் சொல்வதை நிறுத்து." எழுந்து கட்டிலின் முனைக்குச் சென்று கால்களைத் தொங்க விட்டவாறு அமர்ந்தான். "இது எப்படி நடந்தது என்று எனக்கே தெரிய வில்லை."

பெருமூச்சை வெளிப்படுத்தினாள். "நீ கடந்த முறை வந்ததிலிருந்து தான். இனிமேல் என்னைப் பார்த்ததுமே, இப்படி முறையில்லாத உறவில் இவள் இருக்கிறாள் என்று நெற்றியில் எழுதி ஒட்டியிருப்பதைக் கண்டுபிடித்து விடுவார்கள். அந்தக் களங்கத்தின் வாசத்தை அனைவரும் உணர்வார்கள் என்றும் தோன்றிக் கொண்டே இருக்கும்."

அவன் சிரித்துக் கொண்டான். "உன்னிடமிருந்து நல்ல வாசனைதான் வருகிறது. உன்னுடைய நெற்றியிலும் ஒன்றும் எழுதி ஒட்டியிருக்கவில்லை"

"இல்லை, உனக்குப் புரியாது, இதெல்லாம் உனக்குப் பழக்கமானதாக இருக்கலாம். ஆனால் எனக்கு அப்படி இல்லை. பல நாட்கள் அவமானமும், குற்ற உணர்வும் மனதை அறுத்தது. என்னைப் பார்த்தாலே என்ன நடந்தென்று கண்டுபிடித்து விடுவார்களோ என்ற பயத்தில் மதரஸா வகுப்புகளுக்குக் கூடப் போகவில்லை. நீயும் வராத போது, நடந்ததற்காக, அது நடக்க நான் அனுமதித்ததற்காக நீ என்னை தூற்றிக் கொண்டிருப்பாய் என நினைத்தேன். அப்புறம் ஒரு வாரமாகி விட்டது. நான் உனக்கு ஏற்றவள் இல்லையென்றும் தோன்றியது. என்னைப் போல வயதான பெண்ணிடத்தில் அவ்வளவு சுவாரஸ்யமாக என்ன இருந்து விடப் போகிறது?"

"இல்லை, இல்லை, நீ வயதானவள் இல்லை, அப்படிச் சொல்வதை நிறுத்து." அவளருகே சென்று அவளை அணைத்துக் கொண்டான். அப்புறம் நான் உன்னைத் தூற்றவே இல்லை. உன்னுடைய நிலையை எனக்கு சாதகமாக்கிக் கொண்டேன் என்று நீதான் என்னைத் தப்பானவன் என முடிவு செய்திருப்பாய் என்று நினைத்தேன். எதை எதிர்பார்த்துத் திரும்பி வருவது என்றும் குழப்பமாக இருந்தது. இப்படியெல்லாம் நடக்க வேண்டும் என்று எந்த விதமான திட்டமும் நான் போடவில்லை. உனக்குப் புரிகிறதா?"

"யாருக்கும் இந்த விஷயம் தெரியக் கூடாது."

"நான் யாருக்கும் சொல்ல மாட்டேன், இது சத்தியம். "

"ம்ம், சரி, உன்னை ஏன் ரெஸா என்று கூப்பிடுகிறார்கள்?"

அவன் நமுட்டுச் சிரிப்புடன் நகர்ந்து அவளுக்கு முதுகைக் காட்டி அமர்ந்தான்.

"அது ரொம்பப் பழைய கதை, அப்போது நான் சின்னப் பையன்" அவள் திரும்பி அவன் உடலைப் பார்த்தாள். அவனுடைய இறுக்கமான தசைகளும், செதுக்கியது போல் இருந்த உடலும் அவன் எவ்வளவு இளமையானவன் என்பதையும் அதே நேரம், தான் எவ்வளவு வயதானவள் என்பதையும் அவளுக்கு நினைவூட்டியது. போர்வையை இழுத்து தன் உடலை மறைத்துக் கொண்டாள்.

"எனக்குப் பல சகோதரர்கள் இருக்கிறார்கள். என் அப்பாவின் மகன்கள். அவன் தொண்டையைச் செருமிக் கொண்டான். பல வருடங்களாக நினைத்தே பார்த்திராத ஞாபகங்களின் மீது படிந்திருக்கும் தூசியைச் சுத்தம் செய்வது போலிருந்தது அவன் செய்கை. சற்று நேரம் அமைதியாக இருந்தான்.

"அவர்கள் என்னைக் ஏளனம் செய்து கொண்டே இருப்பார்கள். ஏனென்றால்...ஏனென்றால்...ம்ம் நான் வித்தியாசமானவன்." சொல்ல வந்ததை விழுங்கினான்...அவனை நெருங்கி அவன் முதுகை ஆறுதலாகத் தடவிக் கொடுத்தாள். அதன் மேல் அரிவாள் வடிவிலிருந்த தழும்பு கண்ணில் பட்டது.

"எப்போதும் என்னைப் பற்றித் தப்பாகவே பேசுவார்கள்...மோசமான வசைச் சொற்களால் என்னைக் கிண்டல் செய்வார்கள். எப்போதுமே... புரிகிறதா? ஒரு நாள் ஸ்கூல் முடிந்து வரும்போது புலுமா என்னிடத்தில் ஏதோ சொல்ல வந்தான். அவன் என்னைவிட வயதில் மூத்தவன். எப்போதும் என்னுடன் சண்டையிட்டுக் கொண்டே இருப்பான். ஏனென்றால், அவன் வந்து சண்டையிட நான் அனுமதித்துக்கொண்டே இருந்தேன்.ஆனால், அன்று எனக்கு தைரியம் வந்தது. முதல் முறையாக, எனக்குத் தோன்றியது, புரிகிறதா, எனக்கும் துணிச்சல் வந்தது. அவனை நன்றாக அடித்து உதைத்தேன். என்னை அடிக்கக் கல்லை எடுத்துக்கொண்டு ஓடி வந்தான்...நான் ஒரு பிளேடால் சதை பிய்ந்து போகும் அளவு அவன் கையை அறுத்து விட்டேன். அவன் அம்மா தலாத்து என் அப்பாவிடம் போய், மூர்க்கத்தனமான ரேஸரைப் பெற்றிருக்கிறாய் நீ என்று கத்தினாள். அதிலிருந்து என்னை, ரெஸா என்று கிண்டலாகப் பட்டப் பெயர் வைத்துக் கூப்பிட ஆரம்பித்தார்கள். நானும் கண்டுகொள்ளவில்லை."

"ஓ, இதுதான் கதையா?"

அவன் திரும்பி அவளைப் பார்த்துப் புன்னகைத்தபோது, என்ன ஒரு முரட்டுத்தனமான அழகான இளைஞன் இவன் என நினைத்தாள். ஒருவரை ஒருவர் முகத்தை பார்த்துக் கொண்டார்கள்... அவர்கள் இதயம் நினைப்பதை, வார்த்தைகளால் வெளிப்படுத்த இயலாதவற்றைக் கண்கள் பேசிக்கொண்டன.

பார்வையை விலக்கிக்கொண்ட பிந்த்தா யோசித்தாள். தன் முதல் மகனை நினைவூட்டிய ஒருவனுடன் தான் படுக்கையைப் பகிர்ந்து கொண்டது எவ்வளவு பைத்தியகாரத்தனம். யாரூ இறக்கும் போது இவனை விட வயதில் அதிமானவனாகவே இருந்திருப்பான் என்று தோன்றியது. தன் முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டாள்.

"எது வரை பள்ளியில் படித்தாய்?"

"மேல்நிலை கடைசி வருஷம் படிக்கும்போது பள்ளியிலிருந்து என்னை நீக்கி விட்டார்கள்"

"ஏன்?"

"ஒரு ஆசிரியரோட மூக்கை உடைத்து விட்டேன்" தலையை உலுக்கிக் கொண்டான். "நான் சில பையன்களுக்குக் கஞ்சா இலை விற்றுக் கொண்டு இருந்த போது அவர் என்னைப் பார்த்து விட்டார். அசெம்பிளிக் கூட்டத்தில் எல்லோருக்கும் முன்னாடி எனக்குக் கசையடி கொடுக்கத் திட்டம் போட்டார். அதனால்தான் அடித்தேன்."

"சரி, வேறு ஏதாவது ஸ்கூலில் சேர்ந்து படிப்பை முடித்திருக்க வேண்டியதுதானே, எது தடுத்தது உன்னை?"

"என் தலை முழுக்க உலோகங்கள்தான் இருந்தன. நிறையக் கத்தி சண்டை நிறைய கஞ்சா இலை, அப்புறம் ஏராளமாக முட்டாள்தனம், இவையெல்லாமே இருந்தன. விரல்களால் தன் தலையில் அடித்துக் கொண்டான். பத்து வருடங்கள் என்பது நீண்ட காலம். இப்போது என் தலை முழுக்க புகை நிறைந்து இருக்கிறது. புரிகிறதா?"

அவளது ஆழ்ந்த மௌனம் அவன் மனதுடன் ஒரே அலைவரிசையில் ஒத்திருந்தது. தோளைத் திருப்பிப் பார்த்தபோது, அவள் தன் முகத்தைக் கைகளால் மூடியபடி அமர்ந்திருந்தாள்.

"என்ன விஷயம்? ஏதாவது கவலையா?"

அவனுக்காகக் கூட சில கண்ணீர்த் துளிகள் இருந்தன என அவளால்

சொல்ல இயலவில்லை. ஆனால், கடந்த கால ஞாபகங்களைப் பூசிக் கொண்டு உதிரும் கண்ணீரின் பெரும் பகுதி மகன் யாரூவிற்குத்தான் சமர்ப்பணம். சிறு விம்மலுடன் போர்வையால் தன் முகத்தைத் துடைத்துக் கொண்டாள். அவன் பால் மிகுந்த கழிவிரக்கத்தோடு உறுதியான குரலில் சொன்னாள்.

"உன்னால் பள்ளிக்குத் திரும்ப முடியும். என்னாலேயே செல்ல முடிந்தது. உன்னால் முடியும், நீ ஒரு ஆண். உனக்கு அது எளிது "

"நீ போனாயா?"

யாரென்றே தெரியாத ஒருவனோடு திருமணம் செய்து வைப்பதற்காக என்னைப் பள்ளியிலிருந்து நீக்கினார்கள். இரண்டு குழந்தைகள் பெற்ற பின், வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த முதியோர் பள்ளியில் என்னை சேர்த்து விடச் சொல்லிக் கணவரிடம் கேட்டேன். முதலில் தயங்கினார், அப்புறம் நான் கெஞ்சி எப்படியோ சம்மதிக்க வைத்தேன். என்னுடைய குழந்தைகளை வளர்த்துக்கொண்டே நான் படித்தேன். அப்புறம் ஹுரைரா, இப்போது திருமணமாகி ஜாஸ் நகரத்தில் இருப்பவள் பிறந்தாள். அவளுக்கு அடுத்து, பிறந்தவுடனே இறந்து போன ஜைனாப், கடைசியாக ஹதீஸா. அத்தனையும் ஆரம்பப் பள்ளி ஆசிரியப் பயிற்சி படித்தபோது. இருபது வருடம் ஜாஸில் நான் பள்ளியில் ஆசிரியையாக வேலை பார்த்தேன். என்னுடைய மகன் இங்கே என்னைக் குடியமர்த்தியதால் நான் வேலையை விட வேண்டி இருந்தது."

அவளை புது பிரமிப்புடன் பார்த்தான்..

"உன்னை சல்யூட் செய்கிறேன் ஹஜியா"

வலது முட்டியை இடது உள்ளங்கையில் தட்டி, ரவுடிப் பையன்கள் தங்களுக்குள் தெரிவிக்கும் சல்யூட்டைப் போல் செய்து காட்டினான். பிந்த்தா, தலையை ஆட்டி வாய் விட்டு சிரித்தாள். அவள் சிரிப்பதையே பார்த்தவன், அம்மாவின் சிரிப்பு எப்படி இருக்கும், இதைப் போலத்தான் இருக்குமா, இல்லை, எப்போதாவது அம்மா இதைப் போல் சிரித்திருப்பாளா என்று மனதிற்குள் ஆச்சரியப்பட்டுக் கொண்டான். அவள் சுற்றியிருந்த போர்வை நழுவி விழுந்து, திரட்சியான மார்புகளை வெளிப்படுத்தியது. தன் அம்மாவை விட வயதான பெண்மணியுடன் தனக்கு ஏன் பாலியல் ஈர்ப்பு வந்தது என வியந்தான்.

அவர்களுக்கிடையே நிகழ்ந்து கொண்டிருந்த அந்த மாயப் பிணைப்புக் கிடையில் அவன் அலைபேசி குறுக்கிட்டது. அந்தச் சிறிய உபகரணம் ஒரு கிறக்கமூட்டும் பாப் பாடலைச் சிணுங்கியவுடன் அவசரமாக ஓடி அதை

எடுத்தான்.

"வணக்கம் சார்." கட்டிலிலிருந்து எழுந்து பிந்த்தாவை விட்டு விலகிச் சென்றான்.

அவள் பக்கத்து மேசையில் இருந்த பத்தகத்தை எடுக்க நினைக்க போது, *Az Zahabi* யின் *The Major Sins* புத்தகத்தின் மீது கைபட்டது. விவேகமற்ற செயலால் கறை படிந்திருந்த தனது விரல்களை பின்னே இழுத்துக் கொண்டாள். ஆடைகளை அணியத் தொடங்கியவள் அவன மெல்லிய குரலில் பேசிக்கொண்டிருப்பதைக் கவனிக்காதவள் போல நடித்துக்கொண்டிருந்தாள்.

"சார், இவர்களை என்ன செய்வது? அந்தப் புது ஆள் ரொம்பத் தொல்லை கொடுக்கிறான் சார். சரிங்க சார், சரிங்க...ஆகட்டும். ஃபோனை பேண்ட் பாக்கெட்டில் திணித்துக்கொண்டே தன் சட்டையைத் தேடினான். என்னுடைய முதலாளி அழைத்தார். நான் உடனே போக வேண்டும்"

ஏதோ சொல்வதற்காக வாயைத் திறந்தவளின் குரல், வாசலில் கேட்ட சத்தத்தில் அப்படியே தடைப்பட்டது. சின்னவள் உம்மி எப்போதும் கேட்டை இப்படித்தான் பலமாக உள்ளே தள்ளிக்கொண்டு வருவாள் என்று அவளுக்குத் தெரியும். அவளைப் பின்தொடர்ந்து ஃபைஸாவும் வருவாள் என்பதை அறிவாள். கட்டிலைத் தாண்டிச் சென்று அவசரமாக ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். பள்ளிப் பையைத் தரையில் இழுத்துக் கொண்டே உம்மி வந்து கொண்டிருந்தாள். அவள் சட்டையின் முன்புறம் அழுக்காகி இருந்தது. பின்னால் ஃபைஸா, அவள் கற்பனையிலாடும் ரசிகர்களுக்கு இலவசக் காட்சி தருவது போல இடுப்பை ஆட்டி ஆட்டி அசைந்து வந்து கொண்டிருந்தாள்.

"சீக்கிரம், என் பேத்தி வந்து விட்டாள்." ரெஸா சட்டையைக் கண்டுபிடித்துத் தோளில் மாட்டிக் கொண்டான். "ஓடு...பின் வாசல் வழியாக ஓடி விடு."

"என் ஷூ வீட்டின் முன்னால் கிடக்கிறது." அவன் குரல் மட்டுமல்ல. முகபாவனை கூட ஜாக்கிரதை உணர்வோடு இருந்தது.

"நேரமில்லை."

பிந்த்தா அவனை வரவேற்பறை வழியாகச் சமையலறைக்குள் அழைத்துச் சென்று அங்கிருந்து பின்கட்டுக் கதவு வழியாக அவனை வெளியேற்றிக் கதவைச் சாத்தினாள். அவன் சுவரைத் தாண்டிக் குதித்து அங்கிருந்த சந்தில் மறைவதை சாவித் துவாரம் வழியே பார்த்து நிச்சயம் செய்துகொண்டாள். அதற்குள் ஃபைஸா கதவை ஓங்கித் தட்டிக்

கொண்டிருந்தாள். உடையைச் சரி செய்து கொண்டே மீண்டும் வேகமாக முன்னறைக்கு ஓடிவந்து இருவருக்கும் கதவைத் திறந்தாள் பிந்த்தா. உம்மியின் கண்களில் உலர்ந்த கண்ணீர்த் தாரை இருந்தது

"ஆண்கள் அணியும் ஷூ வெளியே கிடக்கிறது?" கேட்டவாறே, திரைச்சீலையை விலக்கி வீட்டிற்குள் ஒளிக்கீற்றை வரவேற்றாள் ஃபைஸா. அவளை நேர்கொள்வதை இயன்றவரை தவிர்த்துவிட்டுத் தன் அறைக்குள் ஓடி வந்து கதவைத் தாழிட்டாள் பிந்த்தா. இரண்டு ஊதுவத்திகளைப் பற்ற வைத்தவள், மயக்குறும் மணத்துடன் புகை வளையங்கள் வீட்டின் கூரைமேல் குவிவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆயினும், பாவத்தின் நச்சு கலந்த ஆவி இன்னும் அங்கு படர்ந்திருப்பது போலவே உணர்ந்தாள். மேலும் இரு ஊதுவத்திகளைப் பற்ற வைத்தவள் தன் புத்தி கெட்ட தன்மையை நீரில் கழுவிப் போக்க குளியலறையை நோக்கி நகர்ந்தாள்.

—

ரெஸா, சான்சிரோவுக்குள் நுழைந்த போது, சூரியன் மேற்கின் அடிவானத்தில் மந்தமாக ஒளிர்ந்து கொண்டிருந்தது சூரியன். சான்சிரோவுக்கும் அதைச் சுற்றியுள்ள சுறுசுறுப்பான மார்க்கெட் பகுதிக்கும் இடையில் அமைக்கப்பட்டுள்ள கூரைத் தகட்டுத் தடுப்பையும் கடந்து, பெரும் கூச்சலும், கஞ்சா இலையின் கூரமான நெடியும் அவனை வரவேற்றது. வாயிலில் நின்றவாறே, அந்தச் சிறிய எல்லைக்குக்குள் குழுமியிருந்த டஜனுக்கும் மேற்பட்ட இளைஞர்களை நோட்டமிட்டான். மூலையில் நின்று புகைத்துக் கொண்டு சிலரும், மற்றும் சிலர் பளு தூக்கும் பயிற்சியிலும் ஈடுபட்டிருந்தார்கள். முன் பகுதியில், அறைகளாக மாறிப் போன நான்கு கடைகளின் முன்னால் அமர்ந்திருந்த இளம் பெண்கள், பனை எண்ணெயில் மிதந்து கொண்டிருக்கும் நூடுல்ஸ், காலாவதி தேதிக்கு அண்மையில் இருக்கும் பழைய, காய்ந்து போன கிழங்குகள் போன்றவற்றை விற்க வந்தது போல பாவனையுடன் அங்கிருந்த ஆண்களைப் பார்வையில் வட்டமடித்துக் கொண்டும் வம்பு பேசிச் சிரித்துக் கொண்டுமிருந்தார்கள். சற்று தூரத்தில், வேலிகளாலும், பெரிய எண்ணெய் கேன்களாலும் மறைக்கப்பட்டு கழிப்பறையாக உபயோகித்துக் கொண்டிருக்கும் இடத்தில் ஒருவன் உணவு விற்கும் பெண் ஒருத்தியின் உடலைத் தொட்டுத் தடவிக் கொண்டிருந்தான். கழுதைப் புலியைப் போல சிரித்துக் கொண்டிருந்தாள் அவள்.

சான்சிரோவையே வீடாக நினைத்து வசிக்கும் ஐந்தாறு பேரைத் தவிர அங்கு வருபவர்கள் பெரும்பாலும் போதை வஸ்து வாங்க வருபவர்கள்

அல்லது திருட்டுத் தனமாக விற்க வருபவர்கள்.

"ஆஹா, ரெஸா வந்து விட்டான். அவனையே கேளுங்கள்."

பழைய எண்ணெய் கேன் மேல் ஏறி அமர்ந்திருந்த கட்டூஸோ ரெஸாவைப் பார்த்ததும் கீழே குதித்து அவனிடம் வந்தான்.

"ரெஸா, மிலான் அணி எத்தனை முறை சாம்பியன் லீக் போட்டியில் வெற்றி அடைந்திருக்கிறது? எத்தனை முறை?"

அனைவரது கண்களும் ரெஸாவை நோக்கின.

"ஏழு."

ஆரவாரத்தோடு அவன் சொன்னதை ஆமோதித்தார்கள். சில இளைஞர்களோ காலிக் கேனைத் தட்டியபடி ஏளனத்துடன் ஆர்ப்பரித்தார்கள்.

"நான் சொன்னேனல்லவா, சொன்னேன், முட்டாளே.!"கட்டூஸோவின் குரல் கும்பலின் கூச்சலை விட உயர்ந்து ஒலித்தது. "ஒன்றும் தெரியாத போதும் வாக்கு வாதம் செய்ய வந்து விட்டாய். எப்போதிருந்து நீ கால்பந்து விளையாட்டுப் பார்க்க ஆரம்பித்தாயடா, பொறுக்கி."

"நீதானடா கழுதை, முட்டாள் பயலே!" ஜோ கத்தினான். அவனுக்குக் குச்சி போல மெலிந்த தேகம். ஒரு கண்ணை மறைத்தவாறுதான் எப்போதும் குல்லா அணிந்திருப்பான். சான்சிரோவிற்கு வந்த புதிதில் தான் ஒரு மாணவன் என்று சொல்லிக்கொண்டான் ஜோ. ஆனால் எப்போதும் குடி போதையில் இருப்பான். எந்தப் பள்ளியில் படிக்கிறான் என்றோ, எந்த ஊரைச் சேர்ந்தவன் என்றோ ஒருவராலும் அறிய முடியவில்லை.அப்படியே சான்சிரோவில் தன்னை இணைத்துக் கொண்ட ஜோ ,பின், சுவரில் வளர்ந்த பூஞ்சைக்காளான் போல அதன் நிரந்தரமான அங்கமாகிப் போனான்.

தன்னைச் சுற்றி உற்சாகமாகக் கத்திக் கொண்டிருப்பவர்களையும், மூலையில் நின்று கொண்டு புகைப்பவர்களையும், கோந்தை முகர்ந்து கொண்டிருப்பவர்களையும், நீண்ட தாழ்வாரத்தின் ஓரத்தில் நின்று கொண்டு, தெருவில் சுற்றும் விற்பனைப் பெண்ணொருத்தியின் முலைகளைக் கசக்கிக் கொண்டிருந்த இளைஞன் ஒருவனையும் ரெஸா கவனித்தான்.

"இங்கே என்ன வாக்குவாதம்?"

உடனே மீண்டும் அங்கு ஒரு சலசலப்பு தொடங்கியது. ரெஸா அவர்கள் சொல்வதை புரிந்துகொள்ள முயற்சி செய்தும் முடியாததால், வெறுப்புடன் அந்த இடத்தைவிட்டு நழுவ முயன்றான்.

"Man U தான் எப்போதுமே!" ஒருவன் வெறித்தனமாகக் கத்தினான். அவன் உண்மையான பெயர் மூஸா டன்லாமி. அவனுடைய திருட்டுப் புத்தியினால் வெறுத்துப் போன அவன் தாய் அவனை சபித்து வீட்டை விட்டு வெளியேற்றிய நாளில் இருந்து சான்சிரோவில் தான் வசித்து வருகிறான். அவன் வீட்டிற்கு சாப்பாட்டு வேளையிலோ, அல்லது அவன் தம்பி தங்கைகளின் பள்ளிக் கட்டணத்தை அம்மா பத்திரமாக வைத்திருக்கும் போதோ குறி தவறாமல் வீட்டிற்கு வந்து எப்படியாகினும் அந்தப் பணத்தைச் சுருட்டிக் கொண்டு போய் விடும் தந்திரம் அறிந்தவன். இந்த நேரந்தவறாமை அவன் அப்பாவிடமிருந்து தான் வந்திருக்க வேண்டும் என ஊர்க்காரர்கள் கேலியாகப் பேசுவார்கள். வேலைக்காக ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டிருக்கும் அவனுடைய அப்பா வருடம் தவறாமல் வந்து மனைவியைக் கர்ப்பமாக்கி விட்டு மீண்டும் காசைத் துரத்த ஓடி விடுவான் என்று சொல்லிச் சிரிப்பார்கள்.

ஜோ மூஸாவைப் பார்த்து சீறினான். "சத்தியமாக நீ ஒரு முட்டாள் ஆடு தெரியுமா?"

"Man U தான் எப்பவுமே... அப்பன் பெயர் தெரியாத கோழையே, குடிகார நாயே. உன் உடலில் எப்போதும் பியர் நாற்றம் வீசும். உன் வார்த்தைகளில் மலத்தின் வீச்சம்," மூஸா கத்தினான்.

ஜோ அவனை அடிக்கப் போய் விட்டான். ஆனால் டான் அசபே குறுக்கே வந்து தடுத்து விட்டான்.

"அடேய், நீ இங்கு என்னை ரொமான்ஸ் பண்ண வந்து விட்டாயா ? என் மேல் இருக்கும் கையை எடுடா பொட்டை"

ஜோ வை விட்டு விலகி ஓரமாகப் போய் நின்றான் டான் அசபே.

டான் அசபேயின் பாலியல் விருப்பங்கள் குறித்து அங்கு பல வதந்திகள் உண்டு. அதுவும், மளிகைக் கடைக்காரன் ஒபின்னாவுடன் அவன் நட்பு பாராட்டத் தொடங்கியது வதந்தியின் நெருப்புக்கு எண்ணெய் ஊற்றியது போலானது. ஒபின்னா மீது சிறுவர்களை பணத்துக்கு ஆசை காட்டி அழைப்பதாகக் குற்றச்சாட்டு உண்டு. டான் அசபே ஆண்களின் குளியலறையை எட்டிப் பார்ப்பதாகவும் சொல்வார்கள். மேலும் அங்கு அனைவரும் அனுபவிக்கும் ரீட்டாவுடன் ஒரு முறை கூட உறவு கொள்ளாதவன், அந்த விஷயத்தில் எந்தப் பெண்ணுடனுமே அவனை யாரும் பார்த்தது இல்லை. இந்தக் காரணங்களால் எல்லோரும் அவனைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்திருந்தார்கள். ஒவ்வொரு முறையும் அவன் மீது குற்றச்சாட்டு எழும்போது, பதிலேதும் சொல்லாமல் யாரும் அணுக முடியாத இடத்திற்கு அசபே நழுவிச் சென்றுவிடுவான்.

கட்டுஸோவை இழுத்துக் கொண்டு தன் அறைக்குள் சென்ற ரெஸா "கட்டுஸோ, எத்தனை முறை சொல்லி இருக்கிறேன், இந்த இடத்தைக் கொஞ்சம் ஒழுங்காக வைத்திரு என்று, இப்போது வந்திருக்கும் போலீஸ் அதிகாரியை நாம் இன்னும் சரி பண்ணவில்லை, உனக்குத் தெரியும்தானே?"

இந்தப் பையன்கள் இப்போதுதான் வந்தார்கள், கையில் கட்டியிருந்த மஞ்சள் பட்டையை இழுத்துக் கொண்டே பதில் சொன்னான் கட்டுஸோ.

"இன்று எவ்வளவு பணம் வந்தது?"

"இன்று எல்லாவற்றையும் விற்று விட்டேன், யுனிவர்சிட்டியில் இருந்து வந்தானே ஜானி, அவன் வந்து எல்லாப் பொருளையும் வாங்கிக் கொண்டான்"

"கடனுக்கு இல்லையென்று நினைக்கிறேன், சரியா?

தன் பாக்கெட்டிலிருந்த சுருட்டி வைத்திருந்த பெரிய பணக்கற்றையை ரெஸாவின் கையில் வைத்தான் கட்டுஸோ.

"நமக்கென்று கொஞ்சம் சரக்கு எடுத்து வைத்தாயா? நாளைக்கு நாமும் கொஞ்சம் உற்சாகமாக வேண்டும், புரிகிறதா?" சொல்லி விட்டு மிகத் தீவிரமான ஈடுபாட்டுடன் சுருண்டிருந்த நோட்டுகளை நீவி நேராக்க ஆரம்பித்தான்.

அவனையே பார்த்துக் கொண்டிருந்த கட்டுஸோவிற்கு, அந்த வேலையில் ரெஸாவிற்கு ஏதோ மகிழ்ச்சி இருப்பதாகத் தோன்றியது.

"ஆம், வைத்திருக்கிறேன், என்னை நம்பு."

நோட்டுகளை எண்ணி ரெஸா தன் பாக்கெட்டில் வைக்கும் வரை காத்திருந்தான் கட்டுஸோ.

"புதிதாக வந்திருக்கும் போலீஸ் அதிகாரி உன்னைப் பார்க்க வேண்டும் என்று சொன்னார் ரெஸா. அவர் காத்திருக்கிறேன் என்று கூடச் சொன்னார்."

"எதற்காக என்னைப் பார்க்க வேண்டுமாம்?"

"தெரியவில்லை, கான்ஸ்டபிள் இரண்டு முறை வந்து பார்த்து விட்டுப் போய் விட்டார். இந்த மனுஷன் தான் ரொம்பக் கடுமையானவன் என்று காட்டிக் கொள்கிறான். வல்லாஹி, அவன் நெருப்போடு விளையாடுகிறான்"

"கவலைப்படாதே கட்டுஸோ, நான் முதலாளியிடம் பேசிவிட்டேன், புரியுதா? நிச்சயமாக அந்த விஷயமாகத்தான் என்னைப் பார்க்க வேண்டு மென்று சொல்கிறார்."

"முதலாளியிடம் பேசிவிட்டாயா?" தன் தாடியைச் சொறிந்து கொண்டே கேட்டான் கட்டுஸோ. இந்த முறை ஆரோக்கியமற்ற தன் பிரவுன் நிற கேசத்திற்குக் கருப்புச் சாயம் பூசியிருந்தான். அவனுடைய கறுத்த தோலில், மேலும் கறுப்பாக மின்னியது அவன் தாடி.

"ஆமாம். கொஞ்சம் ஆட்களை ஏற்பாடு செய்யச் சொன்னார், ஏதோ ஊர்வலம் போகப் போறோம்."

"அப்படியென்றால் தேர்தல் வருகிறதா என்ன?"

"ஆமாம், கூடிய சீக்கிரம். அதனால், ஆட்களை தயாராகக் கொண்டு வா. நாளைக்கு நமக்கெல்லாம் ஒரு பஸ் ஏற்பாடு பண்ணிவிட்டேன், புரிகிறதா?"

கட்டுஸோ தலையாட்டினான்.

"இவ்வளவு பணம்தான் இருந்ததா?"

"உண்மையாகவே இவ்வளவுதான்."

"சரி. நான் போய் அந்த முட்டாள் போலீஸ்காரனைப் பார்த்து விட்டு வந்துவிடுகிறேன்"

"நானும் உன்னுடன் வருகிறேன்."

"வேண்டாம், தேவையில்லாமல் கவலைப்படாதே. ஒரு பிரச்சனையும் இல்ல," அறையை விட்டு வெளியேறினான் ரெஸா.

"புது ஷூ என்ன விலை...?"

குனிந்து தன் காலணிகளைப் பார்த்தவன் அலட்சியமாக சொன்னான், "அதிக விலையில்லை."

"பழைய ஷூ என்ன ஆனது?"

"தொலைந்து விட்டது." ஊடுருவும் கேள்விகளால் கட்டுஸோ தன்னை உலுக்குவதற்குள் அந்த இடத்தை விட்டு வேகமாக நகர்ந்தான்.

—

ரெஸா உள்ளே நுழைந்த போது, போலீஸ் அதிகாரி தெளடா பலேரி, தன் சிறிய அலுவலகத்தில் ஒரு பழைய மேசைக்குப் பின் உட்கார்ந்து கொண்டு ஃபோனில் பேசிக்கொண்டிருந்தார். மறுமுனையில் ஒரு பெண்தான் பேசிக் கொண்டிருக்கிறாள் என்பது அவருடைய குழைந்த குரலில் இருந்தே தெரிந்து போனது. அவனை நிமிர்ந்து பார்த்த பலேரி, முகத்தைக் சுருக்கிக்

கொண்டு, அப்புறமாகக் அழைக்கிறேன் என்று சொல்லி ஃபோனை வைத்தார். அலுவலகம் முழுவதும் பெயிண்ட் வாசம் அடித்தது. புது வண்ணத்தில் மின்னிக் கொண்டிருந்த சுவர்களை நோட்டமிட்டான் ரெஸா. காவல் நிலையங்களின் ஏதோவொன்று அவனுக்குப் பிடிபடுவதே இல்லை. உணரமுடியாத குற்றங்களின் தடயங்கள் அங்கு கசியும் ஈரக்காற்றில் கலந்திருப்பதாகத் தோன்றும்.

புதிய அதிகாரி, புதிய பெயிண்ட், அங்கிருந்த எதுவும் அவனை ஈர்க்க வில்லை. அவனைப் பொறுத்தவரை, அங்கு வருபவர்களின் தர வரிசை எப்படி இருந்தாலும் அவர்கள் வெறும் போலீஸ் அதிகாரிதான்.

"ரெஸா?"

"போலீஸ்?"

பலேரியின் புருவத்தின் மையத்தில் சிறு கோபம் சுழன்றது. அவர் விரும்பும் கிறிஸ்டியைத் திருமணத்திற்கு சம்மதிக்க வைக்கும் முயற்சியில் சமாதானமாகப் பேசிக் கொண்டிருக்கும்போது, இந்த கஞ்சா விற்பவனின் வரவு அவருக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை.முதலில் படித்து முடித்து ஐந்து வருடங்கள் வேலையில்லாமல் இருந்ததால் அவருடைய காதலை அவள் ஏற்கவில்லை.மனம் நொந்து போய் போலீஸ் வேலைக்கு விண்ணப்பித்து, துணை சூப்பிரண்டண்ட் ஆக வேலை கிடைத்ததும், ஒரு போலீஸ் அதிகாரியைத் திருமணம் செய்யத் தயங்கினாள். பலேரி மிகவும் பொறுமை இழந்து விட்டார். இப்போது, தன் முதல் பணியையே கடினமாக மாற்றும் இந்த போதை வியாபாரியை சகித்துக் கொள்ள வேண்டும். ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அவருக்கெதிரில் சாவகாசமாய் அந்த ரவுடி அமர்வதைப் பார்த்துக் கொண்டிருந்த பலேரியின் கோபம் மேலும் கூடியது.

"உனக்கு ஏதாவது பிரச்சனை வேண்டுமா?"

"ஒரு பிரச்சனையும் வேண்டாம் ஆஃபிஸர், நீங்கள் என்னைப் பார்க்க வேண்டும் என்று சொன்னீர்கள்?"

"ஆமாம், ஆமாம், நீ எனக்குத் தொல்லை தருகிறாய், அது எனக்குப் பிடிக்கவில்லை"

"நானா? தொல்லையா? எப்படி?"

இருவருக்குமிடையே இருந்த மேசையை பலேரி பலமாகத் தட்டியது வெளியே இருந்த காவலருக்கும் கேட்டது. ஓடி வந்தார்.

"ஏதாவது பிரச்சனையா சார்?"

ஒன்றும் இல்லையென தலையசைத்து அவரை வெளியே அனுப்பினார் ஏஎஸ்பி.

"இங்கே பார், என்னுடைய மேலதிகாரி எனக்கு போன் செய்து கேட்கிறார். இந்த சான்சிரோவில் நடக்கும் கேடு கெட்ட வியாபாரத்தைப் பற்றி அவருடைய மேலதிகாரி கேள்விகளால் துளைக்கிறார் என்று சொல்கிறார். நீ எனக்குத் தொல்லை கொடுக்க நினைக்கிறாய், அப்படித்தானே?"

"ஒரு விஷயம் நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள், உங்களுக்கு முன் இருந்தவர்களோடு எங்களுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை புரியுதா?, ஆனால் நீங்கள் இப்போதுதான் வந்திருக்கிறீர்கள், உடனே எங்கள் இடத்தை ரெய்ட் விட்டு என்னுடைய எல்லா சரக்கையும் பறிமுதல் செய்து, எங்கள் ஆட்களுக்குக் கடுமையான தொந்தரவு கொடுத்திருக்கிறீர்கள். என்னுடைய பணத்தை எடுத்துக்கொண்டு, அறையைப் பூட்டிவிட்டுச் சென்று விட்டீர்கள்."

"ஆமாம், ஆமாம், ஆமாம், எனக்கு எல்லாம் தெரியும்." கையிலிருந்த பேனாவை மேசையில் தட்டிய பலேரி தன் எரிச்சலை அதன் தாளத்தில் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். அவனைப் பாராமல் நிமிர்ந்து சுவரையும், அங்கு தொங்கிக் கொண்டிருக்கும் காலண்டரையும் பார்த்துக் கொண்டிருந்தார். இந்தப் புது பணியில் சேர்ந்து மூன்று வாரமாகிறது. அதற்குள், தன் வேலையைச் சரியாகச் செய்யும் உரிமையை விட்டுக் கொடுத்து, சகிக்க முடியாத இந்த கஞ்சா வியாபாரியுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டியிருக்கிறது. ரெஸாவை நோக்கித் திரும்பியவர், சரி, இனி மேல் எந்தப் பிரச்சனையும் வேண்டாம். உன்னுடைய தொழிலை நீ பார். ஆனால், அக்கம்பக்கத்தில் இருக்கிறவர்களுக்கும், எனக்கும், என்னுடன் வேலை செய்பவர்களுக்கும், மற்ற யாருக்கும் எந்தத் தொல்லையும் தராமல் நீ உன்னுடைய தொழிலைப் பார்த்துக்கொள். ஒவ்வொரு வாரமும் சரியாக நான்கு மணிக்கு உங்க பாதுகாப்புக்காக ஒரு தொகையை இங்கு கொண்டு வந்து தந்து விடு. அப்புறம் நீயும் உன் நண்பர்களும் புகைத்துச் சீரழிந்து போய்த் தொலையுங்கள். சண்டை இல்லை, சச்சரவு இல்லை."

முடியாதென்பது போல ரெஸா தலையாட்ட, பலேரி அவனை முறைத்தார்.

"நீங்கள் நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள்..என்னுடைய சரக்கு, பணம் இரண்டையும் நீங்கள் எடுத்துக் கொண்டு போய் விட்டீர்கள். உங்கள் ஆட்கள் அத்தனை பொருளையும் ஜங்ஷனுக்குக் கொண்டு போய் சிறு பையன்களுக்கு விற்று விட்டார்கள்.நீங்கள் என்னிடத்தில் பாதுகாப்புப் பணம் கேட்கிறீர்களா? மற்றவர்கள் யாரும் என் பொருள் மேல் கை

வைத்ததில்லை. அதனால் அவங்களுக்குப் பணம் கொடுத்தேன். ஆனால் நீங்கள்? உங்களுக்குக் கிடையவே கிடையாது. புரிகிறதா?"

ரெஸாவின் துணிவைக் கண்டு அதிர்ந்து போனார் பலேரி. மேசையின் முன் பக்கம் சாய்ந்து, "ஒரு இரவு இங்கே ஜெயிலில் இருக்க இஷ்டமா உனக்கு? உன்னை இங்கேயே சுட்டுப் பொசுக்கினால் கூட ஒன்றும் நடக்காது தெரியுமா? அவர் குரலின் ஒலியை விட, அதில் ஒளிந்திருந்த கையாலாகத்தனம்தான் சத்தமாக வெளிப்பட்டது."

"வெளவால் பார்க்காத இரவா?" எந்தக்கவலையுமின்றி வார்த்தைகளை உச்சரித்தான் ரெஸா. "உங்களுக்குப் பாதுகாப்புத் தொகை வேண்டுமா? முதலில் என் சரக்கையும், பணத்தையும் திருப்பிக் கொடுங்கள்.. உங்கள் இஷ்டத்திற்கு நீங்கள் நடக்கும் போது, நாங்கள் மட்டும் சொல்வதைச் செய்ய வேண்டுமா, இப்படி எல்லாம் வேலை செய்ய முடியாது ஆஃபிசர்."

கையிலிருந்த பேனாவை படக்கென உடைத்தார் பலேரி. "சரி, சரி, நீ தர வேண்டாம், என்ன நடக்கப் போகிறதென்று பார்."

ரெஸா தோளைக் குலுக்கினான் "நான் இந்தத் தொழிலில் பல வருடங்களாக இருக்கிறேன், நீங்கள் போலீஸில் சேர்வதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே. எங்களுக்கு சிலரைத் தெரியும், அது உங்களுக்கும் தெரியும். நான் நியாயமாகத்தான் சொல்கிறேன், ஆனால் எங்களைத் தொந்தரவு செய்ய வேண்டுமென்று நீங்கள் நினைத்தால் பரவாயில்லை. அல்லாஹ் உங்களைக் காப்பாற்றட்டும்," மர நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளி விட்டபோது அது கான்க்ரீட்டில் உராய்ந்து க்ரீச்சிட்டது. அந்தக் குமட்டும் காவல் நிலைய நெடியிலிருந்து தன்னை விடுவித்ததற்காக மனதில் நன்றி சொல்லி விட்டு, கடும் கோபத்தில் இருக்கும் ஆஃபிசரைப் பார்த்துக் கொண்டே ரெஸா வெளியேறினான். நிலையத்திற்கு வெளியே அமர்ந்திருந்த ஐந்து சீருடை ஆட்களையும், இவனுடைய கவனம் பெறவேண்டித் திருட்டுத்தனமாக அவர்கள் செய்த சைகைகளை அவன் சற்றும் கண்டுகொள்ளவில்லை.

—

7

"சிறு துரும்பென உள்நுழையும் தீமை, பின் விருட்சமெனப் படர்ந்து விடுகிறது."

வாசல் கேட்டில் சலசலப்பைக் கேட்ட பிந்த்தா ஜன்னலைத் திறந்து எட்டிப் பார்த்தாள். குள்ளப் பெண்கள் கரீமா, ஆபிதா இருவரும், ஏதோ அவர்கள் வீட்டிற்குள் நுழைவது போல சிரித்துக் கொண்டே சாவகாசமாக நடந்து வந்து கொண்டிருந்தார்கள். ஃபைஸா ஏற்படுத்திக் கொண்ட புதிய பழக்கத்தைப் போலவே அவர்களும் இடுப்பை ஆட்டி ஆட்டி அசைந்து வந்தார்கள். திரைச் சீலைக்குப் பின்னிருந்து அவர்களைக் கூர்ந்து நோக்கிய பிந்த்தா, "இந்தப் பெண்கள் ஃபேஷன் என்னும் பெயரில் தங்களை ஏன் இப்படி சீரழித்துக் கொள்கிறார்கள்? அதுவும் அவர்களைப் பார்த்து சீண்டுவதற்கு எந்த ஆண்களும் இல்லாத இடத்தில்கூட இப்படியா இருப்பார்கள் என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டாள். ஏளனத்துடன், உதட்டைப் பிதுக்கிக் குரல் வெளிப்படாமல் தன் அதிருப்தியை வெளிப்படுத்திக் கொண்டு திரையை இழுத்து விட்டாள். காலையிலிருந்து தையல் வேலையில் ஈடுபட்டதால், மெஷினின் ஊசி குதித்துக் கொண்டே இருப்பதை இடையறாமல் பார்த்துக் கொண்டிருந்த கண்களுக்குச் சற்று ஓய்வு தர வேண்டிப் படுக்கையில் சாய்ந்து கண்களை மூடிய சில விநாடிகளில் அந்தப் பெண்கள் கதவைத் தட்டும் ஓசை கேட்டது. தன் அறையிலிருந்து வெளி வந்த ஃபைஸா புன்னகையுடன் அவர்களை எதிர் கொண்டாள்.

"கரீமா, ஆபிதா"

குள்ளப் பெண்கள் இருவரும் புன்னகைத்தனர். அவர்களும் ஃபைஸாவும் ஒரே வகுப்பில் இருந்தாலும், சடாரென ஃபைஸா நாணலைப்

போல உயரமாக வளர்ந்து விட்டதால், இந்தப் பெண்கள் அவளை விட மிகச் சிறியவர்களாகத் தோற்றமளித்தார்கள். அவர்கள் இருவரும், ஒரே தந்தைக்கும், இரு வேறு தாய்களுக்கும் பிறந்த பெண்கள். ஆனால் எப்போதும் தங்களை இரட்டையர் போலவே காண்பித்துக் கொள்வார்கள், ஒரே மாதிரியான உடையில், வண்ணம் மட்டும் வெவ்வேறாக இருக்கும்படி, அதுவும் கரீமா அடர் வண்ணங்களையே எப்போதும் உடுத்துமாறு பார்த்துக் கொள்வார்கள். அழகான தோற்றத்தைக் கொண்ட பெண்கள் அதை அறிந்தவுடன் தங்களை மெல்லிய அகந்தையோடு வெளிப்படுத்துவது போல, இருவரும் நடந்து கொள்வார்கள். அவர்களுடைய குள்ளமான உருவத்தைப் பற்றி இந்த உலகம் என்ன பேசிக் கொள்கிறது என்பதைப் பற்றி இருவருக்கும் கவலையில்லை. அதேபோல், இருவரின் நெருக்கத்தைப் பற்றி தங்கள் அன்னையர் என்ன நினைக்கின்றார்கள் என்பதைப் பற்றியும் கவலையில்லை.

கரீமா மூன்று நாட்களுக்கு மூத்தவள். ஆனால் அவள் அன்னை ஆயிஷா, இரண்டாவது மனைவி. அவர்கள் அப்பா, அல்லாஜி பாபாங்கிடே, ஜைனாப் என்னும் பெண்ணை முதலில் மணந்தார். ஒரு வருடமாகியும், குழந்தை பாக்கியம் இல்லாததால், இரண்டாவதாக ஆயிஷாவை மணம் செய்து கொண்டார். இருவரும் யார் முதலில் குழந்தை பெற்றுக் கொள்வது என்று போட்டி போட்டுக்கொண்டு கணவனுக்குத் தினமும் ஆசை காட்டி நெருங்கிக் கொண்டிருந்தார்கள். இரு மனைவியரின் ஆசைகளையும் பூர்த்தி செய்து உடல் நலிந்த அவர் ஒரு சமயத்தில், அலுவலகத்தில் வேலையாக வெளியூர் போகிறேன் என்று பொய் சொல்லிவிட்டு ஹோட்டல் அறையில் தங்கி ஓய்வு எடுத்துக் கொள்வார். கரீமாவுக்குப் பெண் குழந்தை பிறந்தவுடன், ஜைனாப், தன் வயிற்றில் இருக்கும் குழந்தை, மந்திர மாயத்தால் எப்படியாவது ஆண் பிள்ளையாக மாறிவிடக் கூடாதா என்று பேராவல் கொண்டாள்.

ஆபிதா பிறந்ததற்குப் பின், இரு மனைவியருக்குள்ளும் யார் முதலில் ஆண் குழந்தை பெறுவது என்னும் போட்டி தொடங்கியது. தன் மூன்றாவது முயற்சியில் ஜைனாப் வெற்றி பெற்றாள். பின் யாருக்கு அதிகப் பிள்ளைகள் என்னும் போட்டி துவங்கி, கடைசியில் இருவருக்குமாக சேர்ந்து பதின்மூன்று பிள்ளைகள் என்ற கணக்கில் போட்டி நிறைவடைந்தது. குழந்தைகள் வளர வளர இரு அன்னையர்களும் ஒரு வரையொருவர் பார்த்து முறைத்துக் கொள்வதைத் தவிர வேறெந்தப் பேச்சு வார்த்தையில்லை. ஆனால், கரீமாவும் ஆபிதாவும், ஒற்றுமையுடன் வெராந்தாவில் பொம்மைகளோடு விளையாடுவதைப் பார்த்து இருவருமே அதிர்ச்சி அடைந்தார்கள். எட்டு வயதான பிறகும், அன்னையரின் தவறான

தூண்டுதலின் பேரில் மற்ற உடன்பிறப்புகளைப் போல், இவர்கள் இருவரும் சண்டையைத் தொடராமல் நல்ல ஒற்றுமையுடன் இருந்த போதுதான் யாரும் எதிர்பார்க்காத ஒரு வேலையை இரண்டாவது மனைவி ஆயிஷா செய்தாள். ஜைனாப்க்கு சூனியம் பிடித்திருக்கிறது என்று யாரோ தவறாக சொல்லியதின் பேரில், அந்த ஐயத்தை நீக்கும் பொருட்டு அவளை விளக்குமாறால் நன்றாக அடித்துத் துவைத்து விட்டாள். அன்று மிகப் பெரிய சண்டை நடந்தது. அந்த ரகளையைப் பார்த்து ஓடி வந்து அவர்களை விலக்கி விட்ட பக்கத்து வீட்டுக்காரர்கள், இந்த இரு சிறுமிகளும் டிரஸ்ஸிங் டேபிள் முன் அமர்ந்து அலங்காரம் செய்து கொண்டு, கண்களில் இளம்பருவக் கனவுகள் பிரகாசமாக மின்ன ஒற்றுமையாக அமர்ந்து சிரித்துக் கொண்டிருப்பதைப் பார்த்துக் குழம்பிப் போனார்கள்.

"என்ன செய்கிறாய் ஆமின்?"

தன் ஹிஜாப்பின் லேஸ் நுனிகளை வருடிக்கொண்டே ஆபிதா கேட்டாள். சகோதரிகள் எப்போதுமே ஃபைஸாவை அவள் இரண்டாவது பெயரிலேயே அழைப்பார்கள். முன்பு அவள் பெயர் ஃபைஸா அமினு. ஆனால் அமின் என்பது கொஞ்சம் நளினமாக இருந்தது. குடும்பப் பெயரை சிதைக்காமலும், அதே வேளை நவீனமாகவும் பெயர் மாற்றிக் கொள்ள ஆசைப்பட்டாள். வெறுமையான உணர்வுகளாக மீந்திருக்கும் பிரியமான அப்பாவின் நினைவுகளையும் பெயருடன் வைத்துக்கொள்ள நினைத்தாள்.

"நானா? தூங்கலாம் என்று நினைத்தேன்..." வாங்க, என்னுடைய அறைக்குப் போகலாம்."

"ஹஜியா என்ன சொல்வார்கள்?"

கரீமா தன் ஸ்கார்ஃபை தோளில் எடுத்துப் போட்டுக் கொண்டாள்.

"ஹஜியாவா! உள்ளே இருக்கிறார்கள்" ஹஜியா பிந்தாவுக்கு வணக்கம் சொல்லி விட்டு வருவதாக அவளது அறையை நோக்கி இருவரும் நகர்ந்தனர். தன் புத்தி கெட்ட செயலைப் பறை சாற்றிக் கொண்டிருக்கும் அறையின் உட்புறமாக அந்தப் பெண்களை அனுமதிக்கும் எண்ணம் சற்றும் இல்லாத பிந்த்தா அறை வாயிலிலேயே அவர்களை எதிர் கொண்டாள். முழந்தாளிட்டு வணங்கிய பின், தங்கள் அன்னையரைப் பற்றி விசாரித்த பிந்த்தாவுக்குப் பணிவுடன் பதிலளித்தார்கள். அந்தப் பேச்சு வார்த்தைகளுக்கு இடையே பிந்த்தாவின் கண்கள் ஆபிதாவின் கையிலிருந்த சோயாயா (காதல் கதைகள்) நாவல்கள் மீதே இருந்தது.

"இது போன்ற புத்தகங்களைப் படித்து சலித்துப் போகவில்லையா உங்களுக்கு? உங்கள் வாழ்க்கையை எந்த விதத்தில் இந்த புத்தகங்கள்

உயர்த்தப் போகிறது?"

"நான்தான் கொண்டு வரச் சொன்னேன் ஹஜியா," அந்தப் பெண்களின் மீதான பிந்த்தாவின் நம்பிக்கையின்மையையும், அவர்கள்தான் தனக்கு தப்பாக சொல்லிக் கொடுக்கிறார்கள் என்னும் அவளது கணிப்பையும் நன்றாகவே அறிந்து வைத்திருந்த ஃபைஸா, பரிந்து பேசிக்கொண்டு பின்னால் வந்து நின்றாள்.

"இப்போதெல்லாம் இந்தப் புத்தகங்களை மட்டும்தான் படிக்கிறாள். எப்போதாவது, இதைப் போல் எழுதவேண்டுமென்ற கனவும்கூட அவளுக்கு இருக்கிறது."

அவர்களிருவரையும் கண்களை உருட்டி விழித்துப் பார்த்தாள் பிந்த்தா. "அவளுக்கு டாக்டராக வேண்டுமென்றுதான் விருப்பம், தெரியுமா?"

அந்தப் பெண்கள் பதிலேதுமளிக்கவில்லை. உம்மி எங்கே என்று விசாரித்தபோது அவள் பக்கத்து வீட்டுக்கு விளையாடப் போயிருக்கிறாள் என்று தெரிந்ததும் பிந்த்தாவுக்கு சற்றுத் திருப்தியாய் இருந்தது. கரீமாவும், ஆபிதாவும் எழுந்து, மிகக் கவனமாகக் கால்களை மாற்றி மாற்றி முன்னால் வைத்து கவனமாக அசைக்காமல் இடுப்பை ஃபைஸாவின் அறையை நோக்கி நடந்து சென்றார்கள்.

கதவை மூடிய உடனே ஓடி வந்து,"எங்கே பார்க்கிறேன், கொடுங்கள்" என்று அந்தப் பெண்களிடம் ஓடி வந்தாள் ஃபைஸா.

ஃபைஸாவின் கண்களில் தெரிந்த பரிதவிப்பு ஆபிதாவுக்கு வேடிக்கையாக இருந்தது.. ஒவ்வொரு புத்தகங்களையும் எடுத்து அதன் தலைப்புகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள். "காதலா, வெறுப்பா?,"எனது தவறு என்ன?',"பொன் கட்டிலின் உரிமையாளன் பில்கிஸு" போன்ற வைகள் இருந்தன. ஃபைஸா உதட்டைப் பிதுக்கினாள். "பொன் கட்டில் இரண்டாம் பாகத்தைத் தவிர மற்ற புத்தகங்களை நான் ஏற்கெனவே படித்து முடித்து விட்டேன்."

"பரவாயில்லை நீ அதிர்ஷ்டக்காரி தான்." கரீமா படுக்கை மீது அமர்ந்தாள். "இரண்டாம் பாகத்தை வாடகைக்கு எடுத்துச் சென்ற பெண் இப்போதுதான் திருப்பிக் கொடுத்தாள். வீட்டுக்குப் போனதும் எடுத்து என் தங்கையிடம் கொடுத்தனுப்புகிறேன்."

இரண்டு வருடங்களாக வாங்கிச் சேர்த்ததில் அவர்களிடம் குவிந்து கிடக்கும் ரொமான்ஸ் நாவல்களை வைத்து சகோதரிகள் இருவரும் லாபகரமான வாடகை நூலகம் ஆரம்பித்து விட்டார்கள். நாளொன்றுக்குப் புத்தகத்தின் வாடகையாக ஒரு தீப்பெட்டியின் விலைக்கு இணையான

தொகையை நிர்ணயித்திருந்தார்கள். ஆனால், ஃபைஸாவுக்கு மட்டும் எப்போது வேண்டுமானலும் இலவசமாக எடுத்துக் கொள்ளும் சலுகையை வழங்கியிருந்தனர்.

"வாங்கிய மற்ற புத்தகங்களை எல்லாம் வாசித்தாயிற்றா?" கரீமாவின் அருகில் அமர்ந்து கொண்டே, ஆபிதா கேட்டாள்.

மற்ற புத்தகங்களை மனமில்லாமல் தயக்கத்துடன் திருப்பிக் கொடுத்த ஃபைஸா, அந்தப் பெண்களுக்கு நேராகத் தரையில் அமர்ந்தாள்.

"மற்ற புத்தகங்கள்?"

"மூன்று முடித்து விட்டேன், மீதி சீக்கிரம் படித்து விடுவேன். *Anty balki Funtua* எழுதிய வேறு புத்தகம் ஏதாவது இருக்கிறதா?

"இருக்கிறதே ;*What with the lass door*" இன்னும் பல."

"எனக்கு அவங்க கதைகள் ரொம்பப் பிடிக்கும், அவங்க புதிதா எழுதிய ஏதாவது இருந்தால் தாருங்கள்"

"நிச்சயமாக"

நிச்சயமாத் தருவோம், ஆனால், இந்தப் புத்தகங்களைக் கொடுத்து விடு...நிறையப் பேர் இதற்கு வரிசையில் காத்துக்கொண்டு இருக்கிறார்கள்"

நிச்சயமாக, அப்புறம் எங்களுக்குப் பணமும் வேண்டும். கானோவில் இருக்கும் அத்தை தான் புத்தகங்கள் வாங்கி அனுப்புகிறார், அவருக்கு நாங்கள் பணம் தர வேண்டும் அல்லவா?"

"நிச்சயமா...கரீமா, தன் கை விரல்களின் மருதாணி நிறத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

ஃபைஸா, இருவரும் ஓயாமல் "நிச்சயம், நிச்சயம் என்று உச்சரிப்பதை மனதில் சரியாக வாங்கிக் கொள்ள அவர்கள் முகத்தை மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஏன் இருவரும் எல்லா விஷயங்களிலும் ஒன்று போலவே இருக்கவேண்டும் என்று நினைக்கிறார்கள் என்று ஆச்சரியத்துடன் யோசித்தாள்.

அதே வேளை, அதற்காகவே அவர்களை ரசிப்பாள். அவர்களுடைய, உடன்பிறந்தவர்களின் படையும், உயிரோடு இருக்கும் பெற்றோர்களும் அவள் மனதில் ஒருவித பொறாமையை விதைத்தது.அப்போதெல்லாம் மிகத் தனிமையாக உணர்வாள் ஃபைஸா.

"என்ன?" ஆபிதா ஃபைஸாவைப் பார்த்துக் கேட்டாள்.

."ஒன்றுமில்லை."

"அவள் பாய் ஃபிரண்டை மிஸ் செய்கிறாள்," கரீமா சிரித்தாள்.

ஃபைஸா முறைத்தாள் "இல்லவே இல்லை."

"ஆமாம், அவளுக்கு இன்னும் பாய்ஃபிரண்டு இல்லை."

"இருக்கிறான்."

"ஆமாம், பாலா மஹ்மூத்."

பாலா மஹ்மூத் வகுப்பிலேயே அருமையான பையன். ஃபைஸா, எப்போதவாது அசைன்மெண்ட் முடிக்கவில்லை என்றாலோ, வகுப்பில் அவளுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டாலோ மிக ஆர்வமாக உதவ முன்வருவான். அவற்றையெல்லாம் ஃபைஸா ஒதுக்கித் தள்ளி விடுவாள். உண்மையில், அவனை அந்த மாதிரி நினைத்துப் பார்த்ததேயில்லை. அலி நுஹு வின் நினைவுகள், வேறு எவரையும் அவள் மனதில் அனுமதிக்கவில்லை. பாலா மஹ்மூத் தானாக முன் வந்து அதிகம் பேசாத பையன்.

"பாலா மஹ்மூத் நல்ல பையன்."

"ஆமாமாம், நாங்கள் குழந்தைங்க பார்." கரீமா கேலியாகச் சிரித்துக் கொண்டே ஒன்றும் தெரியாதவள் போல் கையசைத்தாள்.

"அவன் என் பாய் ஃபிரண்டு இல்லை"

"நிச்சயமா, சரி..."

அவள் அலி நுஹுவைக் காதலிக்கிறாள். ஆபிதா சிரித்தாள். கரீமாவும் அவளோடு சேர்ந்து கொண்டாள். இருவரும் தங்கள் உள்ளங்கையைத் தட்டி ஹைஃபைவ் சொல்லிக் கொண்டார்கள். வெட்கத்துடன் சிரித்துக் கொண்டே, அப்படியெல்லாம் ஒன்றுமில்லை என்று அந்த நடிகன் மீது தனக்கிருந்த ஈர்ப்பை மறுத்தாள்.

"அது சரி..அதனால்தான் சுவரெல்லாம் அவன் படமா இருக்கிறது".

"என்னுடைய அறையிலா...ம்ம்"

"இப்போ...என்ன !! என்ன?"

ஃபைஸா வெட்கிச் சிரித்தாள்.

"இட்ஸ் கூல், ஐ திங்க் ஹீ ஈஸ் க்யூட்" அவ்வப்போது ஆங்கிலத்துக்குத் தாவுவாள் ஆபிதா.

"அப்படியெல்லாம் இல்லை" கரீமாவின் குரலில் தேவையற்ற வெறுப்பு இழையோடியது.

ஃபைஸாவின் கண்கள் விரிந்தன. குள்ள சகோதரிகளுடன் பழகிய இந்த ஏழு மாதங்களில், இருவரிடையேயும் ஒரு விஷயத்தில் கருத்து வேறுபாடு எழுவது இதுவே முதல்முறை. அவர்களின் வரலாறை அறிந்திருந்த ஃபைஸா ஏதோ சொல்ல வாயெடுத்து பின் பேச இயலாது நிறுத்திக் கொண்டாள். ஆபிதா பேசினாள், "அவனுக்கென்ன குறை?"

"நாவல் பழம் போன்ற உதடுகள்"

"அவன் உதடுகள் நன்றாகத்தான் இருக்கிறது"

தான் பேசுவது ஃபைஸாவுக்கே ஆச்சரியமாக இருந்தது. தன் உயர்ந்த குரல், கரீமாவின் வாயை அடைக்கும் என்று நம்பினாள்.

"அவன் சரியான திமிர் பிடித்தவன்" அவனை இகழ்வதை கரீமா நிறுத்தவில்லை.

"திமிரா, இல்லவே இல்லை."

அப்படித்தான்.

"நிச்சயமாக இல்லை."

"இல்லவே இல்லை."

சகோதரிகளின் முறைப்பும் வாதமும் மூன்று வினாடிகளே நீண்டிருக்கக் கூடும். ஆனால், குழப்பமான மனநிலையிலிருந்த ஃபைஸாவுக்கு அந்த சண்டை ஒரு மணி நேரம் நீடித்தது போல் இருந்தது. கரீமா, சகோதரியிடமிருந்து விலகி அமர்ந்து தான் கொண்டு வந்திருந்த புத்தகங்களிலிருந்து ஒன்றை எடுத்துப் புரட்ட ஆரம்பித்தாள். ஆபிதா, எழுந்து போய், கண்ணாடி முன் நின்று பார்த்துக் கொண்டாள். அந்தக் கன்னாடி முழுக்க அலி நுஹு வின் படங்கள் ஒட்டப்பட்டிருந்தன. ஃபைஸா புத்தகத்தை எடுத்துப் பிரித்து, விட்டஇடத்திலிருந்து மீண்டும் வாசிக்கத் தொடங்கிவிட்டாள்.

ஆபிதா, கையால் மூக்கைத் தட்டி அழகு பார்த்து, தன் தோற்றத்தில் திருப்திப்பட்டுக் கொண்டாள். பின், வேறு ஏதேனும் சுவாரஸ்யமான விஷயம் கிடைக்காதா என்று சுற்றும்முற்றும் பார்த்தபோது, படுக்கையின் ஓரமாக வைக்கப் பட்டிருந்த ஃபைஸாவின் நோட்டுப் புத்தகம் கண்ணில் பட்டது. அதைக் கண்டு கொள்ளாமல்தான் இருந்திருப்பாள், ஆனால் அதன் மேல், " ஃபைஸா ஆமினின் ரகசியப் புத்தகம்" என்று கிறுக்கியிருந்தது தான் ஆர்வத்தைத் தூண்டியது. மற்ற இருவருக்கும் முதுகைக் காட்டியவாறு

கட்டிலில் அமர்ந்து அந்தப் நோட்டைப் பிரித்தாள். தரையில் கிடக்கும் ஒருவனைப் பல பேர் சூழ்ந்து நின்றுகொண்டு, அவனை மட்டையால் அடிப்பது போல் பல உருவங்கள் வரையப்பட்டிருந்தன. கீழே கிடந்தவனின் முகம் கொஞ்சம் தெளிவாக, தாடியுடன் இருப்பது போல் தெரிந்தது.

ஆழ்மனதில் கர்ஜித்துக் கொண்டிருக்கும் நிழல்கள் தூக்கத்தை விரட்டியடித்து, கனவுகளை வேட்டையாடும் போதெல்லாம் அதைப் பற்றி ஃபைஸா எழுதி வைத்திருந்தாள். அண்மையில், விழித்திருக்கும் பொழுதிலும் கூட அவை அவளை ஆக்கிரமிப்பதைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தாள். பக்கங்களைப் புரட்டிக்கொண்டே வாசிக்கத் துவங்கினாள் ஆபிதா. அறையை ஆக்கிரமித்திருந்த அமைதி ஃபைஸாவை சங்கடப் படுத்திய போது திரும்பி மறுகோடியில் குனிந்து அமர்ந்திருந்த ஆபிதாவைப் பார்த்தாள்.

"ஆபிதா, ப்ளீஸ்."

நிமிர்ந்து ஃபைஸாவின் கவலை தோய்ந்த முகத்தைப் பார்த்த ஆபிதா நோட்டை மூடி படுக்கையினடியில் செருகி வைத்தாள். ஒருவரை ஒருவர் அர்த்தமுடன் பார்த்துக் கொண்டனர். ஆபிதாவின் கண்களில் பளிச்சிடும் புரிதலை அறிந்து கொண்டாள் ஃபைஸா, ஆபிதா தன் தோழியின் ரகசியங்களையும், பெயரிட முடியாத அவளது மனப் போராட்டங்களின் சிறு பகுதியையும் அறிந்து கொண்டதில் அவள் மீது இரக்கம் கொண்டாள். அந்த முக்கியமான கணம் அவர்களுக்கிடையே புரிதலையும் நம்பிக்கையையும் பின்னியது. பல வருடங்களாக யாருடனும் ஏற்பட்டாத நெருக்கத்தை ஆபிதாவிடம் உணர்ந்தாள் ஃபைஸா.

தன் விரல் நகங்களை ஆய்வு செய்து விட்டு முகத்தை சுருக்கினாள் கரீமா. "எனக்கு ரேஸர் வேணும்".

எழுந்து சென்று தன் ஒப்பனைப் பெட்டியிலிருந்து தேடி, ஒரு பிளேடு உறையை எடுத்து அவளிடம் கொடுத்தாள் ஃபைஸா. படுத்தபடி, கூரையைப் பார்த்துக் கொண்டிருந்த ஆபிதா கேட்டாள்.

"ம்ம், நீ எழுத்தாளராகப் போகிறாய்?"

"நானா? ஒருவேளை நடக்கலாம்." இதுவரை எவருமே அறிந்திராத தன் ரகசிய அச்சங்களும், பயங்கரமான கனவுகளும் அவளுக்குத் தெரிந்து போனதை நினைத்து கூச்சப்பட்டாள்.

"ஏன்?"

"ஏன் ? எனக்குத் தெரியவில்லை ஆபிதா."

மிகக் கவனமாக நகங்களை வெட்டி, முன்னால் இருக்கும் கைக்குட்டையில் வெட்டிய நகத்துண்டுகளைப் போட்டுக் கொண்டிருந்த தன் சகோதரியைப் பார்த்தாள் ஆபிதா. பின், ஃபைஸாவின் பக்கம் திரும்பிக் கேட்டாள். "எதைப் பற்றியெல்லாம் எழுதப் போகிறாய்?"

ஃபைஸா பெருமூச்சு விட்டாள். "நான், ஒருவேளை ,வேறு ஏதாவது பற்றி, வேறு இடங்களைப் பற்றி, வேறு மனிதர்களைப் பற்றி, காதலைப் பற்றி,மக்கள் அமைதியாக, மகிழ்வுடன் இருப்பதைப் பற்றி.. சுவருக்கு அப்பால் வெகு தூரத்தில் தெரிந்த புல்வெளிகளில் கற்பனையில் மட்டுமே அவள் ஏற்றி வைக்கும் விளக்குகள் ஒளிர்ந்து கொண்டிருப்பதைக் கண்டாள்.

"நான் அழகானவற்றை எழுத விரும்புகிறேன்."

கரீமா, குறும்பாகப் புன்னகைத்துக் கொண்டே, "அழகானதைப் பற்றிப் பேசும் போது, எனக்கு அழகான ஒரு பையன் நினைவுக்கு வருகிறான்."

"யார்?" ஆபிதா ஆவலுடன் கேட்டாள்.

"ரெஸா..."

கரீமாவின் புன்னகையில் போக்கிரித்தனம் தெரிந்தது.

"ரெஸா?"

"ஆமாம், நிச்சயமாக அழகான பையன்."

உடனே, "ஓஓ, அடச்சே" என்று உரக்கக் கத்தினாள் கரீமா.

அவர்கள் பார்த்த போது, ஆள் காட்டி விரலை அறுத்துக் கொண்டு, அதில் வழியும் ரத்தத்தை முகத்தில் சிறு புன்னகையுடன் ரசித்துக் கொண்டிருந்தாள் கரீமா, ஃபைஸாவின் விழிகள் விரிந்து, அதிர்ச்சியில் அவள் உதடுகள் நடுங்கியது. ஏதோ செய்யக்கூடாததை செய்தபின் பிடிபட்டு விட்டது போல் உடல் முழுவதும் ஆடியது. அடிபட்ட பூனையைப் போல் அழுது தேம்பியவளைப் பார்த்துப் பயந்து போன சகோதரிகள் இருவரும் நெருங்கி நின்று கொண்டார்கள்.

"என்னவானது இவளுக்கு?" நடுங்கிய குரலில் கேட்டாள் கரீமா.

"எனக்குத் தெரியவில்லை."

ஃபைஸாவின் நெற்றியிலும், மேலுதட்டிலும் வியர்வை முத்துகள் அரும்பத் தொடங்கியதைப் பார்த்த ஆபிதா அவளை நெருங்கித் தொடப் போனாள். இரவின் அடர் இருளைக் கிழித்துக்கொண்டு ஓலமிடும் விரக்தியுற்ற பிசாசைப் போல அலறினாள் ஃபைஸா.

—

ஜாஸ், நவம்பர் 28, 2008

"அம்மா ஃபைஸா, எழுந்திரு கண்ணே, தொழுகை நேரம்..."அவளும், அவளுடைய, பத்து வயது தங்கை அமினாவும் உறங்கும் அறை வாசலில் நின்று அப்பா மிக மெல்லக் கதவைத் தட்டினார். அவளுடைய சகோதரனின் அறைக் கதவையும் தட்டிய பின், அதிகாலை வெளிச்சத்தில், மசூதியை நோக்கி நடந்தார். அங்கிருந்து, மன்ஷாவியின் உருக்கும் குரலில், புனித குரான் புத்தகத்திலிருந்து சுரா அன் நிஸா பாடல் காற்றில் மிதந்து வந்து அவள் காதில் விழுந்தது.

அப்பா மூஸா அமினூவுடன் ஃபைஸா மிக நெருக்கமாக இருப்பாள். ஒருவேளை, முதல் மகன் ஜமீலு பிறக்கும் முன் அப்பாவும் அம்மாவும் அனுபவித்த நீண்ட காத்திருப்பு அதற்குக் காரணமாக இருக்கலாம். அமைதி போர்த்தி நின்ற மலைத்தொடர்களை, மழை பொழிந்து அலம்பிவிட்ட அழகிய காலைப் பொழுதில் ஜமீலு பிறந்தான்... அஸபே ஜமிலூவை சமாதானப்படுத்தும் போதெல்லாம் அடிக்கடி இப்படிச் சொல்வதைக் கேட்டிருக்கிறாள். ஜமீலு ,அஸபேயின் செல்லப் பிள்ளை என்பது அனைவருக்கும் தெரியும். அவள் சொல்வது போல அன்று மழை பெய்ததா என்று நிச்சயமாகத் தெரியவில்லை. அவள் அம்மாவுக்கே கூட பல விஷயங்கள் நிச்சயமாகத் தெரியாது...ஆனால், பனிரெண்டு வருடங்களாக குடும்பத்தாரிடையே நிலவிய அவளது கருவுறும் வாய்ப்பைப் பற்றிய அனைவரது சந்தேகங்களையும் ஜமீலு துடைத்தெறிந்தான் என்பது மட்டும் உறுதியாகத் தெரியும்.

அவனுக்குப் பின் இரண்டு வருடங்கள் கழித்துப் பிறந்த ஃபைஸா, தந்தையின் மென்கரங்களில் பத்திரமாக ஒப்படைக்கப்பட்ட போது அவளைப் பார்த்து நெகிழ்ந்து போனார் அவர்.

சின்னஞ் சிறிய சட்டைப் பொத்தான் போன்ற நாசியையும், முத்துப் போன்ற கண்களையும் பார்த்து அவர் கண்கள் நிறைந்து போயின...

"என் அன்னையின் கண்கள் இவளுக்கு."

பேரப்பிள்ளைகளைக் காணவேண்டும் என்னும் ஏக்கத்தில் வருடக் கணக்காய் காத்திருந்து பின் அவர்களைப் பார்க்காமலேயே மறைந்த போன தன் தாயின் பெயரையே அவளுக்குச் சூட்டினார். ஃபைஸா குழந்தையாக இருக்கும் போது அவளைத் தோளில் அமர்த்திக்கொண்டு, அக்கம்பக்கமெல்லாம் சுற்றுவார். காண்போரிடமெல்லாம், இவள் என் தாய் என்று அறிமுகப்படுத்துவார். சற்று வளர்ந்து பெரியவளான ஃபைஸா, வீட்டின் முன்புறம் அமைந்திருக்கும் திண்ணையில் அமர்ந்து கொண்டு சூரியன் மறையும் திசை நோக்கிப் பார்த்துக்கொண்டிருப்பாள்.

கவியும் அந்தியின் பொன்னிற ஒளியின் வரைவு போல அவள் தந்தை கடையை மூடியபின் வீடு திரும்பிக்கொண்டிருப்பார். ஜானின் பிரதான மார்க்கட்டில் குழந்தைகளுக்குத் தேவையான பொருட்கள் விற்பனை செய்யும் கடை வைத்திருக்கிறார். சில நாட்களில் கடையில் இருப்பு வைத்துக் கொள்வதற்காகப் பொருட்கள் வாங்க லாகோஸ் நகரத்திற்குச் சென்று விடுவார். அப்போதெல்லாம் அவர் அவளுக்காக வாங்கிக் கொடுத்த பொம்மையைக் கையில் வைத்துக் கொண்டு அந்தியின் வண்ணங்களை மிகுந்த ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருப்பாள். பின் எழுந்து அம்மாவைப் பார்க்க உள்ளே போவாள். அம்மா, எப்போதும் சமைத்துக் கொண்டே இருப்பார், அப்போதெல்லாம் அம்மா முதுகில் துணியால் சுற்றிக் கட்டி வைத்துள்ள அமீனா, சினமுற்ற சிறு காட்டு விலங்கு போல கீச்சிட்டுக் கொண்டே இருப்பாள்.

ஃபைஸாவுக்குப் பதின்மூன்று வயதான பின்பும் கூட, அப்பா அவருடைய தட்டிலிருக்கும் நல்ல இறைச்சித் துண்டங்களை அவளுக்குத் தந்து விடுவார். அதைப் பார்த்து ஜமீலு கோபத்தில் குமுறுவான். அதன் பிறகு அவர்கள் அமர்ந்து, பள்ளியைப் பற்றியும், அவருடைய வியாபாரத்தைப் பற்றியும் பேசிக் கொண்டிருப்பார்கள். அம்மா, ஒரு மூலையில் அமீனாவோடு அமர்ந்து அவளுக்கு சிறுவர் கதைகளை சொல்லிக் கொண்டிருப்பாள்.

நவம்பர் மாதத்தின் அந்தக் காலையில் செய்தி கிடைத்தபோது அவளுக்கு அப்பாவுடனேயே இருக்கவேண்டும் போலத் தோன்றியது.. காலை பிரார்த்தனையை முடித்துக்கொண்டு வந்தவர், முதல்நாள் நடந்த கவுன்சில் தேர்தலின் முடிவுகளை பிபிசி ஹௌஸா ரேடியோவில் அறிந்து கொள்ளலாம் என எண்ணி ரேடியோவை அவர் திறக்கையில் உமரு சாண்டா அவர்கள் பக்கத்து வீட்டுக்காரர், தடதடவென ஓடி வந்து வீட்டிற்குள் புகுந்தார்.

"மொத்த ஊரும் கலவரமாகக் கிடக்கும்போது நீ இன்னும் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

உமரு சாண்டாவின் அரைவேக்காட்டு மனைவியே அவர் சொல்வதையெல்லாம் அதிகமாகக் கண்டுகொள்ளமாட்டார். அப்பாவும் ஏனோ அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. தேர்தலுக்காக பெரிய போலீஸ் படையே குவிக்கப்பட்டிருக்கையில் மறுபடியும் ஒரு கலவரம் எப்படி வரக்கூடும்? ஆனால் வெகு அருகில் கேட்ட துப்பாக்கிக் குண்டு சத்தம் சாண்டா சொல்வதை மெய் என்று நிரூபித்தது. சாண்டா தன் வீட்டைக் காலி செய்துகொண்டு எப்போதோ வெளியேறி விட்டான். அவன் 2001,2002, 2004 கலவரங்களின் போது இங்கு வசித்தவன் என்பதால் இந்தப்

பகுதி பாதுகாப்பானதல்ல என அவனுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் இனத்தவரைச் சார்ந்தவர்கள் அங்கு குறைவான எண்ணிக்கையிலேயே இருந்தார்கள். அபாயத்தை உணர்ந்த மூஸா முக்கியமான, விலை மதிப்பான சாமான்களைக் கட்ட ஆரம்பித்தார். ஜமீலு படுக்கையை எடுத்து சுருட்டினான். குழந்தை அமீனா அன்னையின் உடைக்குள் பதுங்கிக் கொண்டாள். அவர்கள் இருவருமே அழுது கொண்டிருந்தார்கள்.

குண்டு சத்தம் மிக அருகில் முழங்கியது. உமரு சாண்டாவின் மனைவியின் மரண ஓலம் வேலிக்கு அப்பால் இருந்து அவர்கள் காதைத் தாக்கியபோது, நடக்கவிருக்கும் கொடுங்கனவைத் தவிர்க்கக் கொஞ்ச நஞ்சமிருந்த அவர்கள் நம்பிக்கையும் முடிவை அறிந்தாற் போல் சிதைந்து தேய்ந்தது,

"எங்கே அவன்? எங்கே?" கதவை யாரோ பலமாகத் தட்டும் சப்தம் கேட்டது. கூச்சல்களுக்கும், கடுங்கோபத்தில் கத்திக் கொண்டிருக்கும் குரல்களின் இரைச்சல்களுக்கும் நடுவே என்ன நடக்கிறதென்றே நிச்சயமாகத் தெரியவில்லை. மூசா அந்த செயலற்ற நிலையிலிருந்து சட்டென மீண்டார்.

"குளியலறைக்குச் செல்லுங்கள், சீக்கிரம்..."

அப்பாவின் குரலில் இருந்த பயமும், நம்பிக்கையின்மையும் ஃபைஸாவைத் தாக்கியது. மனவுறுதி வேண்டி அவள் அப்பாவின் கண்களைப் பார்க்க முயன்றபோதெல்லாம் அவர் முகத்தை வேறு புறம் திரும்பிக்கொண்டார். குளியலறையில் ஐவரும் நெருக்கியடித்துக் கொண்டு அமர்ந்தபின் கதவைத் தாளிட்டனர். யான் அவெய்க்கி மார்க்கெட்டுக்கு, இறைச்சிக்காகக் கொல்லப்போகும் மாடுகளைத் திறந்த லாரியில் நெருக்கமாக அடைத்துக்கொண்டு செல்வதை ஃபைஸா பார்த்திருக்கிறாள். அதைப் போல அந்தச் சின்னஞ்சிறு குளியலறையில் அவர்கள் காத்திருந்தார்கள். இரவு முழுவதும் அவர்கள் கழித்திருந்த சிறுநீர் கழிவறைப் பீங்கானில் ஃபளஷ் செய்யப் படாமல் நிறைந்திருந்தது. அதைவிட பயத்தின் வாடையில் ஃபைசாவின் தலை சுற்றியது. அவள் குனிய நினைத்தாள். ஆனால் ஜமீலு மீது மோதிக் கொண்டாள்.

"பார்த்து" மெல்லிய கிசுகிசுப்பான குரல்.

"உஷ்ஷ்ஷ்!!!" அந்த கிசுகிசுப்பான குரலிலும் பதற்றம் நிரம்பியிருந்தது. அமீனா சிணுங்கத் தொடங்கினாள், பெருங்குரலெடுத்து அவள் அழும் முன் இறுக அணைத்துக்கொண்டு அவளது அழுகையைத் தணித்தாள் அசபே. உடன் தன் அழுகையையும் அடக்கிக்கொண்டாள்.

"அவளை அமைதியாக்கு" மூஸாவின் குரலில் கோபம் ஏறியிருந்தது .

அஸபே பெண்னை அணைத்துக்கொண்டு, அவள் வாயை தன் கைகளால் பொத்தினாள். பின், தாளமுடியாத பயத்திலும், துயரத்திலும் அவளே தேம்பத் தொடங்கினாள். அவளுடைய சீரான விசும்பல் ஓசை நிசப்தத்தை நிரப்பிக்கொண்டிருந்தது.

அமீலு நெளிந்து, வளைந்து, டாய்லட் சீட்டின் மேல் ஏறிக் குத்துக் காலிட்டு, அமர்ந்தான். அவன் காலி செய்திருந்த இடத்துக்கு எப்படியோ தன்னைக் குறுக்கி ஊர்ந்து இடம் பெயர்ந்தாள் ஃபைஸா.

வீட்டின் முன் கதவு உடைத்துத் திறக்கப்பட்ட அதே வேளையில், உறுமிக் கொண்டிருக்கும் எரிமலை போல அஸபேயின் வயிற்றில் ஏதோ உருளத் தொடங்கியது. "எனக்கு டாய்லட் போகணும்"

ஜமிலூவின் பாதம் சறுக்கியதில் அவன் அப்பாவின் முதுகின் மேல் சட சட வென்ற ஓசையுடன் விழுந்தான். வெளியே நடந்து கொண்டிருந்த கலவரத்தில், இவர்கள் சத்தம் அடங்கிப் போனது.

"எல்லோரும் புனித வரிகளைச் சொல்லுங்கள்" மூசா கட்டளை யிட்டார்.

இயந்திரத்தனமாக நினைவிலிருந்த வரிகளை உச்சரித்தாள் ஃபைஸா.

"இங்கே, கழிவறையிலா?" நம்ப முடியாதவனாக ஜமீலு கேட்டான்.

"இல்லை, உங்கள் இதயத்தில்"

கதவுகள் உடைபடுவதையும், மேசை நாற்காலிகளைத் தள்ளி விடுவதையும், டிவி, கண்ணாடிப் பொருட்கள் நொறுக்கப் படும் ஓசையைக் கேட்டவுடன் உறைந்து போனார்கள். யாரோ ஒரு வெறியன் வெட்டரி வாளால் சுவற்றில் ஓங்கிக் குத்தினான். கான்க்ரீட் சுவரில் உலோகம் மோதும் கடுங்கோபச் சத்தமும், அவனது வெறுப்பு நிறைந்த கூக்குரலும் ஃபைஸாவின் நரம்புகளில் ஊடுருவியது. மலத்தின் வீச்சம் மிதந்து அந்த சிறிய அறையில் படர்ந்தது. ஃபைஸா அம்மாவைத் திரும்பிப் பார்த்தாள். அம்மாவின் வாய் எதையோ அர்த்தமில்லாமல் முணுமுணுத்துக் கொண்டிருந்தது. அந்த மங்கலான ஒளியில் அவள் முகம் கண்ணீரிலும் வியர்வையிலும் பள பளத்துக் கொண்டிருந்தது.

தனது கரங்களை வேறு யாருடைய கரங்களோ தேடிப் பற்றுவதை உணர்ந்த ஃபைஸா அது அவளது அப்பாவென அறிந்து கொண்டாள். அவற்றை மென்மையாக அழுத்தியவர் உடனே விட்டுவிட்டார். ஆனால் அந்தக் கரங்களின் நடுக்கத்தைத் தன் கரங்களில் இன்றும் கூட உணர்ந்து கொண்டிருந்தாள் ஃபைசா.

அவர்கள் குளியலறைக் கதவை உடைத்து உள்ளே வந்த போது, கைகளை தலைக்கு மேல் தூக்கிக்கொண்டு அப்பாதான் முதலில் வெளியேறினார். தன் தொடைகளுக்கிடையில் சூடான நீர் வழிந்து கால்களுக்குக் கீழே குளமாகத் தேங்கியதை ஃபைஸா உணர்ந்தாள்.

"என் குழந்தைகளை விட்டு விடுங்கள்" வீட்டுக்குள் புகுந்திருந்த ஆயுதக் கூட்டத்தின் முன் மண்டியிட்டார் மூஸா.

"அவனைக் கொல்லுங்கள்...கொல்லுங்கள், கொன்று போடுங்கள்! எதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" அது ஒரு பெண்ணின் குரல்..

அந்தகப் பெண்ணின் குரலை தன் வாழ்நாள் முழுவதும் மறக்கப் போவதில்லை என்று ஃபைஸாவுக்குப் புரிந்தது. அதிலிருக்கும் வன்மத்தை அவள் எப்போதும் மறக்கப் போவதில்லை. இதுவரை யாரென்றே அறியாத, எந்த சம்பந்தமுமில்லாத மனிதர்களைக் கூடக் கொலை செய்யத் தூண்டும் வெறுப்பின் பிணித் தொற்றை அன்றுதான் நேரடியாகக் கண்டறிந்தாள். அந்த வெறுப்பு பாரபட்சமில்லாமல் தெரிந்தவர்களையும் கூடக் கொலை செய்ய வல்லது, ஒரே தட்டில் உண்டு பழகியவர்களை, துக்கத்தில் உடனிருந்து அழுதவர்களை, மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டவர்களை, உறவினர்களை விட நெருக்கமானவர்களை, யாருடன் பசுமையான நிழற்பந்தல் போல நட்பை பாவித்தார்களோ, வளர்த்தார்களோ, அவர்கள் அனைவரையும் கொல்லத்தூண்டும் வெறுப்பு அது. அந்தப் பெண்ணின் குரல், ஒரே மூச்சில், அந்த நிழற்பந்தலைக் கிழித்து சட சடவென அதன் சிதைவுகளைச் சரித்துத் தள்ளியது. அவர்கள் கால்களுக்குக் கீழே சிதையுண்ட இலைகளைப் போலப் பழகிய காலங்கள் கனத்து வீழ்ந்தன.

ஃபைஸா ஒரு அடி எடுத்து முன்னே வந்தாள். அவளுடைய கணித ஆசிரியர் ஜேக்கப் ஜேம்ஸின் முகம் தெரிந்தது. எப்போதும் நேர்த்தியாக ஆடை அணிபவர். அவர் சட்டை எப்போதும் இஸ்திரி செய்யப்பட்டு இருக்கும். அதை பேண்ட்டுக்குள் செருகிவிட்டு, மிக அழகாக முடிச்சிடப்பட்ட டை கட்டிக்கொண்டு இருப்பார். முரட்டுத் தோலால் ஆன ஷூக்களையே எப்போதும் அணிவதால் மற்ற மாணவர்கள் அவரைக் கிண்டல் செய்வதும் உண்டு. அவர்கள் சொல்லும் ஜோக்குகளுக்கு எப்போதும் புன்னகைப்பார். ஆனால், அன்று அந்தக் காலை வேளையில் அவர் கொஞ்சம் கூடப் புன்னகைக்கவில்லை. வெட்டரிவாளை வேகமாக உயர்த்திக் கீழே இறக்கியபோது, போர்ச்சாயம் அப்பியிருந்த அவருடைய கோர முகம், வியர்வையிலும் குரூரத்திலும் மின்னியது. பளிச்சென்ற, வெது வெதுப்பான, பிசுபிசுப்பான செங்குருதி ஃபைஸாவின் முகமெங்கும் வாரி அடித்து, அவளுடைய அப்பா அவளுக்குப் பரிசாக அளித்திருந்த

இளஞ்சிவப்பு இரவு ஆடையின் மீது சிறு சிறு புள்ளிகளாகத் தெறித்து விழுந்தது.

—

அவள் கனவுகள் பழுப்பு நிறங்களாலானவை. துருவேறிய நிறம் கொண்ட நீர், நினைவுகளில் சேகரமாகியிருந்த நிழற்படங்களின் மீது பெருக் கெடுத்தோடுவது போலவும், கனவுகள் யாவும் அடர்பழுப்பு நிற ஓடையில் மூழ்குவது போலவும் இருந்தன. ஆனால், ரத்தம் பீய்ச்சியடித்துப் பொங்கி வழியும் போது, மலைப்பூட்டும் சிவப்பு வண்ணமாக மாறி விடுகின்றன. அன்றிரவு, அந்த ஓசைகளும் அவள் மண்டையில் எதிரொலித்தன. உலோகம் மனித சதையை வெட்டும் போது எழும் சத் சத் என்னும் ஓசை, உடையும் தொடை எலும்புகள், இரண்டாகப் பிளந்த மண்டையோடுகள், முதலில் வெளிப்படும் பெரும் வலியின் ஓலங்கள், பின் முனகல், அலறல். அதன் பின் பேரிரைச்சல் கொண்ட அமைதி.

மூச்சுத் திணற எழுந்த ஃபைஸா, தன்னை பயத்துடன் வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் உம்மியைப் பார்த்து மேலும் திடுக்கிட்டாள்.

"நீ தூக்கத்தில் அலறிக் கொண்டிருந்தாய்."

விழித்துப் பார்த்த ஃபைஸா வியர்வையில் நனைந்து உடலோடு ஒட்டிக் கொண்டிருந்த ஆடையைப் பார்த்து அதிர்ச்சியடைந்தாள். இறங்கி, ஆடையை மாற்றிக் கொண்டு, கட்டிலில் தன்னைத் தானே கட்டிக் கொண்டு அமர்ந்தாள். உம்மி அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"எனக்கு பயமாக இருக்கு ஃபைஸா அக்கா"

அவள் தலையைத் தடவினாள் ஃபைஸா, "எனக்கும் தான் பயமாக இருக்கிறது." அவள் கையை பிடித்துக் கொண்டாள்.

மற்றொரு கையால் தூங்கப் போகும் முன் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை எடுத்துக் கொண்டாள். அட்டையிலிருக்கும் காதல் வயப்பட்ட பெண்ணின் முகத்தைப் பார்த்த்தும், தானும் அந்தப் பக்கங்களுக்குள் தொலைந்து போக விரும்பினாள். அந்த வார்த்தைகளுக்குள், அந்தக் கதைகளுக்குள் அன்பு மட்டுமே பெருகி இருக்கும். மெல்லிய, இனிய பேச்சுக்கள் அன்பின் அர்ப்பணிப்பில் போர்த்தப்பட்டிருக்கும். திருமணங்கள் மற்றும் மகிழ்வான முடிவுகள் மட்டுமே இருக்கும். வலியின் நிறம் தோய்ந்த கனவுகளும், குருதியும், வெட்டி வீசப்பட்ட சதைகளும் அதில் இல்லவே இல்லை.

கையைக் கோர்த்துக்கொண்டு இருவரும் ஹஜியா பிந்த்தாவின் அறைக்குச் சென்றார்கள். உம்மி கதவைத் தட்டினாள்.

"ஹஜியா, எங்களுக்கு பயமா இருக்கு."

ஃபைஸா மெல்லக் கதவைத் திறந்து பார்த்தாள். பிந்த்தா எழுந்து அமர்ந்து கண்களைக் கசக்கிக் கொண்டு தூக்கத்தை விலக்கினாள். தன் தங்கை மகளையும், பேத்தியையும் பார்த்தவளின் பார்வை, ஃபைஸாவின் கையிலிருந்த புத்தகத்தின் மீது சற்று நேரம் நிலைத்தது. தலையை ஆட்டி, தொண்டையைக் கனைத்தவள், இருவரையும் தன் படுக்கைக்கு வரும்படி சைகை காட்டினாள்.

இருவரும் அவளை ஒட்டிப் படுத்துக் கொண்டார்கள். கெட்ட கனவுகளையும், இதயத்தில் பயத்தை விதைத்த துர்ச்சாத்தானையும் விரட்ட, பிரார்த்தனை செய்யச் சொன்னாள் பிந்த்தா. விரைவில் உம்மியின் சீரான சுவாசத்தின் ஒலி, சில்வண்டுகளின் ரீங்காரத்துடன் இணைந்து கொண்டது. ஆனால், தனக்கு முதுகைக் காட்டிக் கொண்டு, ஒரு கையை முகத்துக் கீழேயும், மறுகையை புத்தகத்தின் மீதுமாக வைத்தபடி படுத்திருந்த ஃபைஸாவைப் பார்த்தவள், இந்தப் பெண் உறங்கவில்லை என்று புரிந்து கொண்டாள்.

"இவை கடந்து விடும். இந்த துர்க்கனவுகள் கடந்து விடும்." அவள் தோளை மென்மையாக அழுத்தினாள்.

முகத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள் ஃபைஸா.

"நீங்கள் இன்னும் அதைப் பற்றி நினைத்துப் பார்ப்பதுண்டா?"

சற்று நேரம், தன்னையும், வாழ்வின் அர்த்தத்தைத் தேடும் இந்தப் பெண்ணையும் விதி எவ்வளவு குரூரமாக இணைத் திருக்கிறது என்று எண்ணினாள் பிந்த்தா. ஏறக்குறைய பத்து வருட இடைவெளியில், இருவருமே தங்கள் வாழ்வின் முக்கியமான ஆண்மகனை, ஜாஸில் பற்றியெரிந்த மதமென்னும் ஊழித்தீயிற்கும், இனக் கலவரத்துக்கும் பறிகொடுத்தவர்கள். முதன் முதலில் 2001 ம் வருடம் செப்டெம்பர் 7ம் தேதி ஆரம்பித்த கலவரத்தின் போது, வீட்டை விட்டுச் சென்ற ஜுபைரூ திரும்ப வரவில்லை. அப்போது ஃபைஸா நடை பழகும் குழந்தை. இன்றும், ஜுபைரூவின் இறந்த உடல் கண்ட துண்டமாக வெட்டப்பட்டு, தெருவில் எரிக்கப்பட்டதை நினைவு கூர்வாள் பிந்த்தா.

"இனிமேல் கூடாது செல்லம்" நடந்து முடிந்தவைகளை நினைத்துக் கொண்டு தேங்கிக் கிடப்பதற்காக இல்லை இந்தச் சின்னஞ்சிறு வாழ்க்கை.."

ஃபைஸா தலையாட்டினாள்.

"ஆனால் நீங்கள் இன்னும் அவரை நினைத்துக் கொள்வீர்கள் இல்லையா?"

பிந்தா பெருமூச்சு விட்டாள். "ஆமாம், எப்போதும் நினைத்துக் கொள்வேன்."

தனக்குக் கீழே இருந்த புத்தகத்தை மெதுவாகத் தட்டினாள் ஃபைஸா "உங்களுக்கு அவர் மேல் நிறையக் காதல் இருந்திருக்க வேண்டும், அப்படித் தானே?"

"காதல்?" அந்த வார்த்தை நாவில் விநோதமாகக் கனப்பதை உணர்ந்தாள். வாழ்க்கை முழுவதும் ஒருவருடன் இருக்கும்போது, காதலிக்கிறோமா, இல்லையா என்பதெல்லாம் முக்கியமில்லை."

"நேசிக்காத ஒருவருடன் எப்படி வாழ முடியும்?"

"எங்கள் காலத்தில் பெற்றவர்கள் சொல்லிக் கொடுக்கும் முறைப்படி தான் வாழ்வோம். அவர்கள் என்ன சொன்னாலும் கேட்டுக் கொள்வோம். உன்னைப் போன்ற சின்னப் பெண்கள்தான் காதலைப் பற்றிப் பேசுகிறீர்கள், அந்தக் காதல் இந்த உலகத்துக்கு அப்படியென்ன நன்மை செய்து விட்டது?"

பேச்சற்றுப் போய் அசையாமல் படுத்திருந்த ஃபைஸா, அருகில் உறங்கும் உம்மியின் சீரான சுவாசத்தைக் கவனித்தாள். வெளியே கீச்சிட்டுக் கொண்டிருந்த சில்வண்டுகள் தனிமையுற்ற இரவின் மீது தங்கள் கதைகளை எழுதிக்கொண்டிருந்தன.

—

8

"எத்தனை கனமாக இருந்த போதிலும் யானைக்குத் தந்தங்கள் சுமையல்ல."

சான்சிரோ முழுவதும் பதட்டத்தின் சாயை சூழ்ந்திருந்தது. இளைஞர்கள் தங்களுக்குள் பகிர்ந்து வசிக்கும் அறையொன் றிலிருந்து கஞ்சாப் புகை பிரவாகமாய் மிதந்து உயரே இருக்கும் பரண் வரை பரவிக் கொண்டிருந்தது. அந்தப் பரணில் தான் சில இளைஞர்கள் அவர்கள் சொத்துகளையே அடுக்கி வைத்திருந்தார்கள். தங்கள் மீது கண்படுவதைத் தவிர்க்க போலிச் சாமியார்களிடமிருந்து பெறப்பட்ட பாம்புத் தோல் தாயத்துகள், உயிருள்ள முதலைகளுடன் ஆட்டம் போடும் பிரசித்தி பெற்ற நாடோடி வியாபாரி ஒருவனிடமிருந்து வாங்கிய சர்வரோக நிவாரணி மூலிகை மருந்துகள் போன்றவை இருந்தன.அது போக பிளாஸ்டிக் பையில் சுற்றி வைக்கப்பட்ட கற்றை நோட்டுகளும் அவ்வப்போது இருக்கும்.

பபாவோ கட்டூஸோவின் கந்தலான படுக்கையில் படுத்துக் கொண்டிருந்த டான் அசபே மேலே பரணில் திணித்து வைக்கப்பட்டிருந்த பொட்டலத்தை வெறித்துக் கொண்டிருந்தான். மிகுந்த பயத்துடன் அவனையே பார்த்துக்கொண்டிருக்கும் எவரையும் அவன் கண்டுகொள்ளவில்லை. ரெஸா அங்கிருந்த ஆறேழு பேரைக் கடந்து டான் அசபேயின் அருகில் வந்து அரிவாள் வெட்டுப்பட்ட ஆழமான அவன் தலைக்காயத்தை ஆராய்ந்தான். அங்கிருக்கும் நாட்டு வைத்தியன் டோகோ , காயத்திலிருந்து கசியும் ரத்தத்தைக் கட்டுப்படுத்துவதற்காகப் பூசியிருந்த பொடி முற்றிலும் நனைந்திருந்தது.

"இது அவனுடைய ரத்தத்தை நஞ்சாக்கிக் கொண்டிருக்கிறது" சாய்ந்து படுத்திருக்கும் டான் அசபேயின் முன் உப்புத் கலந்த வெந்நீர் பாத்திரமும்,

கையில் சிறிய துண்டுத் துணியும் வைத்துக் கொண்டு குத்துக்காலிட்டு அமர்ந்திருந்தான் ஷனி. பள்ளிக்குச் சென்றிருந்தால் தான் டாக்டராகி இருப்போம் என்னும் கற்பனை இப்போதும் அவனுக்குள் உயிர்ப்புடன் இருந்தது.

"அவன் மீது கை வைக்காதே, என்னுடைய மருந்தை எல்லாம் வீணாக்கி விடாதே" போதைப் பொடி நிரப்பிய சிகரெட்டை இழுத்துக் கொண்டே சிவந்த விழிகளுடன் கோபமாகச் சொன்னான் டோகோ. ஷனியின் கையிலிருந்த ஈரத்துணி அசபேவின் தலைக்கும், பாத்திரத்துக்கும் நடுவில் அப்படியே ஊசலாடியது.

"உன்னுடைய மூலிகை அவனுக்கு தொற்று ஏற்படுத்தி விடும் டோகோ."

"பொடிப்பயல் நீ, உனக்கு என்ன தெரியும்? அவனை விட்டுத் தள்ளிப் போ." தன் ட்ரௌசரின் பின் பக்கத்திலிருந்த தூசைத் தட்டியபடியே எழுந்தான் டோகோ. "இதற்குத்தான்!! இந்த இடத்தின் பிரச்சனையே இதுதான், யாருமே சொல்பேச்சு கேட்கமாட்டார்கள். வெட்டுக்காயம் படாமலிருக்க இந்த தாயத்தைக் கட்டு என்று நான் சொன்னால், இவன் போதையில் சொல்கிறான் என்றுதான் எல்லோரும் நினைப்பார்கள். இப்போது என்ன நடந்ததென்று பாருங்கள்."

"டோகோ, தயவு செய்து ஆரம்பிக்காதே" கட்டுஸோ அவனை முறைத்தான்.

"ஏன் கூடாது, நீங்கள் இந்த வேலையை எடுப்பதற்கு முன்னால் இந்த தாயத்தைக் கட்டிக்கொள்ளுங்கள் என்று சொன்னேன், யாரும் எங்களைத் தாக்க முடியாது, வேண்டாம் என்று ரெஸா சொல்லிவிட்டான். இப்போது என்ன நடந்தது பார்?" உடம்பில் எந்த ஆயுதத்தின் வெட்டுக்காயமும் படாமலிருக்க, சில தாயத்துகளையும், மந்திரத் தகடுகளையும் அவர்களுக்கு தரத் தயாராக இருந்தான் டோகோ. ஆனால் அதற்கான தொகையை வாங்காமல் விடமாட்டான். பல ஊர்களின் மாலம்களிடமிருந்து பெற்ற தாயத்துக்களின் ஆற்றலை விரிவாகக் கேட்டறிந்து, அது வேலை செய்கிறதா என்று முதலில் தன்னை தானே சோதனைக்கு உட்படுத்திக்கொள்வான். இந்த "டவ்வுரி" வைத்தியத்தின் தேடலுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவன் டோகோ. டவ்வுரி தாயத்துக் கட்டிக்கொண்டால், எந்த உலோகத்தாலும் தோலைக் கிழித்து உடலின் உள்ளே நுழைய முடியாது என்பது ஒரு நம்பிக்கை. அவர்கள் செய்யும் தொழிலுக்கு இந்த வகையான தாக்குதல்கள் இடையூறு செய்யாமலிருக்க இந்த ஆற்றல் மிகப்பெரும் வரமாக அமையும். அதற்கு அவன் ரகசியமாக உபயோகிக்கும் மூலிகைகள்,

யாருமே அறிந்திராத இடத்திலிருந்து பெறப்பட்ட அடர்த்தியான வேர்கள், மற்றும் பல திரவங்கள் கொண்டு நாட்டுமருந்து தயாரிப்பில் அவன் மேற்கொள்ளும் ஆய்வு பற்றி எவராலும் அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால், இதன் பயனாய், சுற்று வட்டாரங்களில் சிறந்த நாட்டு வைத்தியன் என்னும் பெயரைப் பெற்றிருந்தான். சான்சிரோவில் வசிக்கும் பலரும் வயிற்று வலி, காய்ச்சல், தலைவலிக்கெல்லாம் தீர்வாக இவனையே அணுகுவார்கள்.

ஒரு முறை, நெருக்கடியான சூழ்நிலை நேரும் போதெல்லாம் உருவத்தை மறையச் செய்யக்கூடிய சக்தி வாய்ந்த மந்திர தாயத்தைப் பெறும் முயற்சியில் இறங்கிய டோகோ, அதற்குத் தேவையாகப் பலரின் பணத்தைச் சுருட்டிச் சென்று விட்டான். அந்தக் குற்றத்தை ஒப்புக்கொள்ள நேர்ந்த போது அவனையே அந்தத் தாயத்துகள் கைவிட்டதில் அவற்றின் மீதிருந்த நம்பிக்கை கேள்விக்குறியானது. அவன் அன்னையின், சான்சிரோ இளைஞர்களின், அக்கம்பக்கத்தில் குடியிருப்பவர்களின் பணத்தை எல்லாம் தாராளமாகக் கொள்ளையடித்தான். தேவையான தொகை சேர்ந்தவுடன், ஒரு மாலமுடன் சேர்ந்து சிறுத்தையின் கண்ணோடு இன்னும் சில பொருட்கள் சேர்த்த ஆற்றல் மிகுந்த தாயத்தை, தேடிக் கிளம்பிவிட்டான். ஒரு வாரம் அவர்கள் சொன்ன அத்தனை வழிமுறைகளையும் சிரத்தையுடன் கடைப் பிடித்தான். தண்ணீரைத் தொடாமல் இருந்தான். அனலில் வேக வைத்த உணவுப் பண்டங்களைத் தவிர்த்தான். சுவருக்கும், சில செங்கல்களுக்கும் இடையே குறுகிய இடம் அமைத்து படுத்துக் கொண்டான், ஏனென்றால், அந்தத் தாயத்தின் சக்தியை அடைவதற்கு அவன் மல்லாந்தே படுத்திருக்க வேண்டும். குழந்தைகளின் வாந்தியும் மலமும் தாயத்தின் சக்தியை செயலிழக்க வைக்கும் என்று கூறியிருந்ததால், அவர்கள் பக்கமே செல்ல மாட்டான். ஏழு நாட்கள் கடுமையாக அவனைத் தயார் செய்த பின்பு தாயத்தை அணிந்து பார்த்த போது அவனது உருவம் மறையவில்லை. கோபத்தில் தாயத்தை உரித்துப் பார்த்த போது அதனுள் சுருட்டி வைத்திருந்த பழைய செய்தித்தாள்களின் துண்டுகளைத் தவிர வேறெதுவும் காணவில்லை.

"சரி, உன் உளறலை நிறுத்து டோகோ. நமக்கு எவ்வளவு கிடைத்ததோ அதே அளவு நாமும் திருப்பி கொடுத்து விட்டோம்" ரெஸாவின் குரலில் அதிகாரம் தொனித்தது.

"ஆமாம்", முஷ்டியை உள்ளங்கையில் குத்திக்கொண்டே கட்டூஸோவும் ஆமோதித்தான். அவன் குரலில் சன்னமான பெருமை தெரிந்தது.

"ச்சே! அடித்த பையனின் கையை வெட்டி எறிந்திருக்க வேண்டும்."

டான் அசபே இருமினான். அவன் வசதியாக இருக்குமாறு தலைக்குக்

கீழே இருந்த இறுக்கமான தலையணையைத் தட்டி சற்றே இளக்கினான் ஷனி.

"இவனை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்வதுதான் நல்லதென்று நினைக்கிறேன்" டோகோ கடைசி இழுப்பை இழுத்து விட்டுத் தலையை சிலுப்பிக் கொண்டான். "என்னுடைய பாக்கிப் பணம் கிடைக்குமா?"

ரெஸா அவனைப் பார்த்தான். மற்றவர்களைப் போல நீயும் கொஞ்சம் பொறுமையாக இரு. நம் முதலாளி பணம் கொடுத்து செட்டில் செய்வதற்குள் பேரணியை எப்படிக் கலைத்து விட்டார்களென்று பார்த்தாய் அல்லவா?"

"என்ன சொல்கிறாய்? பணம் இப்போது கிடைக்காதா?...த்தா, இந்த உடைந்த மண்டையுடன் நாள் பூராவும் வெய்யிலில் நின்றுகொண்டு வந்தால், இப்போது பணம் இல்லையென்று சொல்கிறாய். அடைத்து வைத்த கோழி மாதிரி தலையை வெளியே நீட்டிக் கொண்டு பஸ்சில் வர வேண்டியிருந்தது. குறுக்கே இருக்கும் பாலத்தில் எல்லாம் கிட்டத்தட்ட என் தலை மோதியிருக்கும் தெரியுமா? "

"டோகோ, போதும், இத்துடன் நிறுத்து" கட்டுஸோ விரல்களை சொடுக்கு எடுத்தான்.

"அதெல்லாம் நடக்காது கட்டுஸோ எனக்கு என் பணம் இப்போதே வேண்டும்."

"சரி, வந்து எடுத்துக் கொள்" சந்தேகத்துக்கிடமின்றி ரெஸாவின் குரலில் சவால் தொனித்தது. டோகோவின் கண்களை நேருக்கு நேராகப் பார்த்தான். அவன் கண்களைத் தவிர்த்த டோகோ, முணுமுணுத்துக் கொண்டே அடுத்த புகைக்குப் பொடியை நிரப்ப ஆரம்பித்தான்.

"இன்னும் யாருக்குமே பணம் கிடைக்கவில்லை," ரெஸாவின் குரல் அறையெங்கும் எதிரொலித்தது. இப்போது நான் முதலாளியைச் சந்திக்கத்தான் கிளம்பிப் போகிறேன். நான் வரும் வரை எல்லோரும் பொறுத்திருங்கள்" வெளியே வந்தவன், காம்பவுண்டில் நிறுத்தியிருந்த தாக்கப்பட்ட பேருந்தை நோட்டமிட்டுக் கொண்டிருந்த போது, கட்டுஸோ வந்து நின்றான்.

"ரெஸா, நாம் டான் அசபேயை ஆஸ்பத்திரிக்கு இட்டுச் செல்ல வேண்டும், இங்கே வைத்திருப்பது சரியானதாகத் தெரியவில்லை."

கொஞ்சம் யோசித்தவன், பின் கத்தினான், "நீ இந்த மாதிரி மோசமான நிலையில இருந்ததே இல்லயா கட்டுஸோ?"

"இதை விடவும் மோசமாக இருந்திருக்கிறேன் ".

பேருந்தின் முன் கண்ணாடியில், கல் வீசித் தாக்கியதில் சிலந்தி வலை போல விரிசல் விழுந்திருந்ததை ஆய்வு செய்து கொண்டிருந்தான். "அடுத்த முறை இந்த டான் அசபே தெளடு வை எந்தக் கூட்டத்துக்கும் கூட்டிக் கொண்டு வராதே, இதற்கெல்லாம் அவன் ஒத்து வரமாட்டான்."

அடிபட்டிருந்த பேருந்தைக் கடைசியாக ஒரு முறை பார்த்து விட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தான் ரெஸா. மாலைக் கதிரவனின் ஒளி அவன் கண்களில் மின்னியது.

—

மைத்தாமா போய்ச் சேர்ந்தான் ரெஸா. மிக உயரமான சுற்றுச் சுவரால் சூழப்பட்ட அந்த மிகப் பெரிய வீட்டின் அழகான பசும் புல்வெளியில் மயில்கள் உலவிக் கொண்டிருந்தன. வீட்டினுள்ளே இருந்த ஒரு அரங்குக்குள் அழைத்துச் செல்லப்பட்டான். அங்கு பலர், பெரும்பாலும் வயதில் மூத்தவர்கள் காத்திருந்தனர். ஒரு பெரிய நவீன தொலைக்காட்சித் திரையில், பார்சிலோனாவுக்கும், ஒசாசுனாவுக்கும் இடையேயான போட்டி ஓடிக் கொண்டிருந்தது. சுவரில் சாய்ந்துகொண்டே அதைப் பார்த்தபடி நின்றான் ரெஸா.

"செனேட்டர் மிக முக்கியமான சந்திப்பில் இருக்கிறார். நீ கொஞ்சம் காத்திருக்க வேண்டும்" சொன்னவன் ரெஸாவை நீண்ட நாட்களாகத் தெரிந்தவன் போல வாயெல்லாம் பல்லாகச் சிரித்தான். பதிலுக்கு ரெஸாவும் புன்னகைத்தான்.

"தேர்தல் நெருங்குகிறது இல்லையா, அதனால் இவர்களை எல்லாம் சந்திப்பதில் மிகவும் பிஸியா இருக்கிறார்."

அந்த மனிதன் மீண்டும் சிரித்தான், ரெஸாவை பேசச் சொல்லித் தூண்டுவது போலிருந்தது அந்தச் சிரிப்பு. ரெஸா எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தான்.

"இதுதான் அரசியல்."

அறையிலிருந்த ஏழு தலைகளும் அந்த மனிதனைத் திருப்பிப் பார்த்தன. ரெஸா எதுவுமே பதிலளிக்காததால், அந்த ஏழு தலைகளும் தொலைக் காட்சியை மறுபடி பார்க்க ஆரம்பித்துவிட்டன. ரெஸாவை நெருங்கி அமர்ந்தவன், "மிகச் சிக்கலான பேரணி இன்று" என ஆரம்பித்தான். இப்போதுதான் ரெஸா அவனை ஏறெடுத்துப் பார்த்தான். தன் தலையிலிருந்த ஸன்னா தொப்பியை சரி செய்து கொண்டான் அந்த மனிதன். அந்தத் தொப்பி

ஒரு காலத்தில் நன்றாகத்தான் இருந்திருக்கக் கூடும். சிவப்பு, மஞ்சள், நீலம் வண்ண நூல்களால் எம்பிராய்டரி செய்யப்பட்டு இருந்தது. இப்போது பல சலவைகள் கண்டு நூல் ஆங்காங்கே பிரிந்து தொங்கியது.

"ஆமாம்" ரெஸா தலையாட்டினான்.

"நம் செனேட்டருக்குத் தொல்லை கொடுப்பவர்கள் எல்லாம் அவமானப்படப்போகிறார்கள் இன்ஷா அல்லாஹ்."

மீண்டும் தன் பழைய தொப்பியைச் சரி செய்துகொண்டான். "அந்த எதிரிகள்தான் இன்று பேரணியைக் கெடுத்தார்கள் தெரியுமா? அல்லாவின் அருள் மட்டும் இல்லையென்றால், இந்நேரம்..."

அந்தப் பேரணியைப் பற்றி வித விதமான ஒலிகளுடன், சைகை களுடனும் நாடகத்தன்மையுடன் அவன் விவரித்தது ஏதோ ஒரு சினிமாவிலிருந்து உருவப்பட்ட காட்சி போலிருந்தது. அந்த நாடகத்தின் முக்கிய நாயகனாக இருந்த ரெஸாவுக்கே அப்படியெல்லாம் நடந்தது போல நினைவில்லை. அந்த மனிதன் சொன்னதில் அவன் இல்லவே இல்லை. அங்கு காத்திருந்தவர்களில் ஒருவர், ரெஸாவைப் போலவே இவன் நாடகத்தில் எரிச்சலுற்று தொழுகை நேரம் என்னும் சாக்கில் வெளியே எழுந்தார். மற்றவர்களும் அவரைப் பின் தொடர்ந்தனர்.

"நாமும் மசூதிக்குப் போவோமா?" சந்தேகத்துடன் எழுந்தான் அந்த ஆசாமி.

"நீங்கள் செல்லுங்கள், நான் பிறகு வருகிறேன், அவன் காலி செய்த லெதர் சோஃபாவில் காலை நீட்டி அமர்ந்தான் ரெஸா. தொலைக்காட்சியின் புறமாக முகத்தைத் திருப்பியவனின் ஓரக்கண்ணில், வெளியே செல்ல முனைந்த மனிதன் கதவருகில் தயங்கி நிற்பது தெரிந்தது."

சற்று நேரம் கழித்து மற்றவர்கள் திரும்பி வந்தவுடன் வேண்டுமென்றே இருக்கையைக் காலி செய்யாமல் அமர்ந்து கொண்டே இருந்தான் ரெஸா. அங்கேயே நின்று கொண்டிருந்த அந்த ஆசாமி, ரெஸாவின் முகத்தில் தெரிந்த கோபத்தைக் கண்டவுடன் நகர்ந்து போய் வேறு சோஃபாவின் அகலமான கைப்பிடியில் அமர்ந்து கொண்டான்.

பக்கத்து அறையிலிருந்து ஒவ்வொருவராகப் போவதும் வருவதுமாக இருந்தார்கள். யாராவது வெளியே வரும்போதெல்லாம், ஒரு இளைஞன் உள்ளிருந்து தலையை நீட்டி, அனைவரையும் ஒரு பார்வை பார்த்து, காத்திருப்பவர்களில் ஒருவரை உள்ளே வருமாறு சைகை செய்து அனுப்பி வைப்பான்.

திரையில் கால்பந்து போட்டி முடிந்தபோது, கொட்டாவிகளை அடக்க மிக சிரமப்பட்டான் ரெஸா. சீரான இடைவெளியில் ஒவ்வொரு கொட்டாவியாக வரும் போது அதிக அலுப்பை உணர்ந்தவன், இருக்கையின் பின்புறம் மேலும் மேலும் சரிந்து அமர ஆரம்பித்தான். ஹஜியா பிந்த்தாவின் ரோமங்கள் மழித்த தேகமும், தங்கப் பல்லும் நினைவில் மோதியது. அப்போதுதான், தனது நறுமணத்தைக் காற்றில் கலந்து அவன் மீது படர விட்டு நீங்கிச் சென்ற பெண்மணியின் ஞாபகம் அவன் மனதில் தோன்றியது. புகையெனத் தோன்றிக் கொண்டிருக்கும் நினைவுகளில் அவள் தங்கப்பல் இன்றும் பளிச்சிட்டுக் கொண்டிருக்கிறது.

—

2003 ம் வருடம், அவனுக்கு பதினேழு வயதாக இருந்தபோது மீண்டும் தன் அன்னையைக் காண நேர்ந்தது. அவள் வந்த வேளையில் தெருவிலிருந்த காலியிடத்தில் கால்பந்து விளையாடிக்கொண்டிருந்தான் ரெஸா. அந்த மைதானத்தின் ஒரு பக்கம் கற்பாறைகள் இருந்ததால் அந்த இடத்தில் நால்வர் கொண்ட இரு அணிகளாகப் பிரிந்து *monkey post* விளையாடிக் கொண்டிருந்தார்கள். இருபக்கமும் மூன்றடி இடைவெளியில் வரிசையாக வைக்கப்பட்டிருந்த கற்கள்தான் கோல் போஸ்ட் அவற்றுக்கிடையே பந்தை நுழைத்து விட்டால் கோல் கிடைக்கும். ரெஸா ஆக்ரோஷத்துடன் விளையாடிக் கொண்டிருந்தான். சட்டை அணிந்திராத அவன் வெற்றுடம்பு மாலைக் கதிரொளியில் தக தகவென ஜொலித்தது.

அங்கிருந்த கற்பாறைகளுக்குப் பின்னால் அவள் நெடுநேரமாகக் காத்திருந்தது போலத் தெரிந்தது. அங்குதான் தங்கள் முறை வரும் வரை மற்ற சிறுவர்கள் காத்திருப்பார்கள். அவர்களுக்குப் பந்தை வீசும் போதுதான் அவளை கவனித்தான் ரெஸா. அவள் தழைய அணிந்திருந்த ஜில்பாப் ஆடையிலிருந்து முன்னால் ஊசலாடிக் கொண்டிருந்த கண்ணைப் பறிக்கும் பிரகாசமான அலங்கார வேலைப்பாடுகள் தான் அவன் கண்களைக் கவர்ந்தன. அதிலுள்ள சிறிய கண்ணாடித் துண்டுகள் சூரியனைக் கையகப் படுத்தியது போலிருந்தது. அதன் பின் அவள் முகத்தைப் பார்த்தான், அந்த முகத்தில் பெருமிதம் பொங்கிக் கொண்டிருந்தது. முடிவெடுக்க முடியாமல் சற்று நேரம் தயங்கி நின்றான் ரெஸா.

அப்படியே நின்று கொண்டிருந்தவன் கடைசியில் அவளை நோக்கி நகர்ந்த போதுதான் புன்னகைத்தாள். பாறைகளுக்கு அருகில் வைத்திருந்த சட்டையை எடுத்து அணிந்து கொண்டு சென்றான். அவனையே கவனித்துக் கொண்டிருந்த நண்பர்கள், அவன் நகர்ந்தவுடன் கிசுகிசுப்பாகப் பேசத்

துவங்கி விட்டனர்.

ஏழு வருடங்களுக்கு முன் எப்படி இருந்தாளோ இப்போதும் அதே அழகுடன் தான் இருந்தாள். ஆனால் சிரிக்கும் போது மட்டும் கண்களைச் சுற்றி சிறு சுருக்கங்கள் தோன்றின. அங்கு கமழ்ந்த நறுமணத்தின் விரல்கள் அவனை நோக்கி நீண்டு அவள் பக்கம் ஈர்த்தன. அதைத் தவிர்த்தவன் புழுதி அப்பியிருந்த தன் கால்களை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"நீ சிறப்பாக விளையாடுகிறாய்."

நிமிர்ந்து அவள் புன்னகைப்பதைப் பார்த்தவன் உடனே தலையைக் குனிந்து, பற்களைக் நறநறத்தவாறு மீண்டும் தனது கால்களை வெறிக்க ஆரம்பித்தான்.

"என் அப்பாவும் உன்னைப் போலத்தான். கோபம் வரும் போதெல்லாம் பற்களை நறநறவென்று அரைப்பார். என்னைப் பார்த்ததில் உனக்கு அவ்வளவாக மகிழ்ச்சி இல்லை போலத் தெரிகிறது, அப்படித்தானே?"

"உங்களுக்கு என்ன வேண்டும்?"

அவன் குரலில் இருந்த அலட்சியம் அவளைத் திடுக்கிட வைத்தது. இந்தக் கோபம் தானாகவே சென்று அவள் முகத்தில் அறையக்கூடாதா என்றிருந்தது அவனுக்கு. ஏனென்றால் அவனால் அந்தக் காரியத்தைச் செய்ய முடியாது. கடந்த முறை, 96ம் வருடம், அவள் பார்த்த சாதுவான பாலகனல்ல அவன் என்பது அவளுக்குப் புரிய வேண்டும். இப்போது அவன் தன் வயதை மீறி வளர்ந்தவன். பல வருடங்களுக்கு முன் அம்மாவின் ஜில்பாபை ஏக்கத்துடன் பிடித்துத் தொங்கிய அந்தப் பால்ய பிராயத்தின் ஹஸன் பபபாலேவை இந்த ரெஸா விழுங்கிவிட்டான். அவள் பெருமூச்சுடன் முகத்தைச் சுற்றிக் கட்டியிருந்த ஸ்கார்ஃபை சரி செய்து கொண்டாள். "

"நீண்ட காலமாகி விட்டது"

"உங்களை மறுபடியும் நாடு கடத்திட்டாங்களா?"

சில வினாடிகளுக்கு மூச்சற்றுப் போனவள், "இல்லை, அப்படி யெல்லாம் இல்லை, உன்னைப் பார்ப்பதற்காக மட்டுமே வந்தேன்." அவளை நிமிர்ந்து பார்த்த போது இருவரின் கண்களும் சந்தித்துக் கொண்டன.

"நான் வீட்டுக்குப் போயிருந்தேன், உன்னை இங்கே பார்க்கலாம் என்று அவர்கள்தான் சொன்னார்கள்." மைதானத்தில் இருந்த மற்றவர்களை ஒரு பார்வை பார்த்தாள்.

"இதோ பார், நாம் இந்த இடத்தை விட்டுக் கிளம்பலாம்."

திரும்பி அவர்களை நோட்டமிட்டுக் கொண்டிருந்த நண்பர்களைப் பார்த்தான், இந்நேரம், இவள் யாரென்று அவர்கள் கணித்திருக்கக் கூடும், அவனைப் பெற்றவுடன் இழிச்சொல்லுக்கு ஆளாக்கி புறக்கணித்து விட்டுப் போன அரேபியாவின் அருமை விபசாரிதான் அவளென்று தெரிந்து கொண்டிருப்பார்கள். கால்பந்து மைதானத்தைக் கடந்து, சற்றுத் தூரத்திலிருக்கும் மாங்காய்த் தோப்பு வரை அவளுடன் நடந்து சென்றான். இருவருமே, தங்களுக்குள் ஏதோ ஒப்பந்தம் போட்டது போல ஒரு மரத்தடியில் நின்றார்கள். பறவைகள், பாதி கடித்து விட்டு மீதியை வேருக்கருகில் அழுகிப் போவதற்காகப் விட்டுச் சென்றிருந்த பழத்தை காலால் எத்தினான்.

"இப்போது நீ பள்ளிப் படிப்பை முடித்து விட்டாய் அல்லவா?"

அவன் ஏளனமாகச் சிரித்தான்.

"என்ன விஷயம்?" உண்மையான அக்கறையுடன் அவள் கேட்டது போலிருந்தது. தலையை இப்படியும் அப்படியும் ஆட்டிக் கொண்டே சொன்னான்.

"என்னை நீக்கி விட்டார்கள்."

"எதனால்?"

"நான் சில பையன்களுக்கு கஞ்சா விற்றேன். பிறகு ஒரு வாத்தியாருடைய தாடையைப் பெயர்த்து விட்டேன்."

"யா, சலாம், ஏன் அப்படி எல்லாம் செய்தாய்?"

"ஏனென்றால் எனக்குப் பிடித்தது புரியுதா?" இம்முறை அவள் கண்களை அவன் நேருக்கு நேராக சந்தித்தான். வேறுபுறம் திரும்பிக் கொண்டவள் குளிர்ந்த காற்று ஆன்மாவை உலுக்கியது போல் தன்னைத் தானே கட்டிக் கொண்டாள்.

"ஹஸன், என் மகனே..."

"என்னை அப்படி அழைக்காதே."

அவள் தன் தொண்டையில் உருண்ட துக்கத்தை மிகுந்த சிரமத்துடன் விழுங்கினாள். "ஹஸன், என் மீது கோபப்படுவதற்கு உனக்கு முழு உரிமை உண்டு, எனக்குப் புரிகிறது. உன்னுடைய அப்பாவுக்கும் எனக்கும் இடையில் நடந்த எதற்குமே நீ காரணமில்லை, அதற்காக உன்னைக் கஷ்டத்தில் தள்ளியது என்னுடைய மிகப் பெரிய தவறுதான். ஆனாலும்

நான் உன் அம்மா அல்லவா, அதனால்...”

மரத்தின் பட்டைகளை விரல்களால் நோண்டிக் கொண்டிருந்தவன் சட்டென்று கொத்தாக ஒரு பட்டையை உரித்தெடுத்தான். அதனடியில் தங்கியிருந்த எறும்புக் கூட்டத்தின் மீது மங்கலான சூரிய வெளிச்சம் சட்டெனப் பாய்ந்ததால் பயந்து போன எறும்புகள் அங்குமிங்கும் திக்கற்று ஊர்ந்தன. அவனால் முற்றிலுமாக உரித்துப் பிய்த்தெறிந்து வீசிய மரப் பட்டைச் சிராய்கள் காலடியில் சிதறின.

“இப்போது நான் போக வேண்டும், எங்கிருந்து வந்தீர்களோ, அங்கேயே நீங்களும் போகலாம், புரிகிறதா?”

“தயவு செய்து இன்னும் கொஞ்ச நேரம் இருக்கிறாயா? ”

அவள் குரலின் பிரயாசைக்குப் பின்னால் இருந்த வெறுமையே அவளை பாலைவனத்தைத் தாண்டி அவனைக் காண துரத்தியிருக்கிறதென உணர்ந்தான். ஆனால், அவளுடைய ஜில்பாபை நம்பிக்கையுடன் பற்றியிருந்த தனது பிஞ்சு விரல்களை இரக்கமின்றி எப்போது விடுவித்துச் சென்றாளோ அப்போதிலிருந்து அவனுள் பற்றி எரிந்துகொண்டிருக்கும் சினம் அவள் பாலிருந்த பச்சாதாபத்தை விழுங்கிச் செரித்திருந்தது.

எதையோ சொல்ல வாயெடுத்த அவள் உதடுகளைக் குரோதத்துடன் பார்த்தான். ஏதோ முக்கியமான ஒன்றைச் சொல்ல விரும்புகிறாளென்று கண்ணீர் நிரம்பிய அவள் கண்களிலிருந்து அறிந்து கொண்டான். ஆனால் அது என்னவென்று தெரிந்து கொள்வதில் அவனுக்கு அக்கறையில்லை. இனிமேல் எப்போதும் இருக்கப் போவதில்லை..

“நீ வருவாயென்று தெரிந்திருந்தால் அந்த சனியன் பிடித்த மோதிரத்தை எடுத்துக் கொண்டு வந்திருப்பேன்.”

அவன் வேகமாக நகர்ந்தபோது அவள் சத்தமாக அவன் பெயரைச் சொல்லி அழைக்கும் சப்தம் கேட்டது. அந்தக் குரல் அவன் இதயத்தைப் பின்னோக்கி இழுத்தது, அவன் வேகமாக ஓடினான். அவள் குரலில் இருந்த தவிப்பை, வெறுமையை, நீண்ட காலமாக அவன் மனதில் சுழன்று கொண்டிருக்கும் அந்த நறுமணம் அனைத்தையும் விட்டு எவ்வளவு தூரம் விலகிச் செல்ல முடியுமோ அவ்வளவு தூரம் விலகி வேகமாக ஓடிக் கொண்டிருந்தான்.

—

கதவிலிருந்து வெளிப்பட்ட அந்த இளைஞன், "இப்போது நீ உள்ளே சென்று செனேட்டரைப் பார்க்கலாம்" என்று ரெஸாவை அழைத்தான்.

கண்களைத் திறந்து பார்த்த ரெஸா, கைக்கடிகாரத்தையும், அந்த இளைஞனையும் பார்த்தான். இந்த நடுராத்திரியில் டை கட்டிக் கொண்டிருக்க என்ன அவசியம் என்று நினைத்தான். அந்த பளபளப்பான உடை அணிந்தவனைப் பின்தொடர்ந்து, செனேட்டரின் அறைக்குள் நுழைந்தார்கள். அந்த வயதான மனிதர், அழகிய சாய்விருக்கையில் அமர்ந்திருந்தார். இருக்கைக்கு நேர் எதிரே, தரையிலிருந்து கூரையைத் தொடும் அளவு உயரமான புத்தக அலமாரி இருந்தது. அவர், மூக்குக் கண்ணாடி அணிந்து, தன் மடியிலிருந்த ஒரு ஃபைலைத் தீவிரமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். ரெஸா மண்டியிட்டு அவருக்கு வணக்கம் சொன்னான். செனேட்டர் கையை உயர்த்தினார். இரு இளைஞர்களும் அவருக்காகக் காத்திருந்தனர். புத்தக அலமாரியில் அடுக்கியிருந்த புத்தகங்களின் தலைப்பை ஆராய்ந்தான் ரெஸா, அரசியல், தத்துவம், கட்டிடக்கலை தொழில்நுட்பம் எனப் பல வகையான புத்தகங்கள் அடுக்கப்பட்டிருந்தன. சுவரில் ஈஃபில் கோபுரத்தின் படம் மாட்டியிருந்தது. அந்தக் கோபுரத்தைச் சுற்றி நின்ற மனிதர்கள், கையில் கைத்தடியுடனும், தொப்பி அணிந்து கொண்டும், பெண்கள் மிக ஆடம்பரமான உடையும், விசித்திரமான தொப்பியும் அணிந்திருந்தார்கள். மற்றொரு சுவரில் அரை நிர்வாணத்தில் இருக்கும் பெண்ணின் அழகிய ஓவியம் மாட்டியிருந்தது. அவளுடைய கவர்ச்சியான மார்புகளை விட அந்தக் கண்களும், அவை வெளிப்படுத்திய அபரிமிதமான வெகுளித்தனமும் அவன் மனதை மிகவும் பாதித்தது.

செனேட்டர் புபா மைக்குடி ஒரு கட்டிடப் பொறியாளர். அவருடைய கட்டுமானக் கம்பெனியின் பெயர் புல்வார்க் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ். எந்த அரசு ஆட்சியில் இருந்தாலும் அவருக்குத் தேவையான அரசு காண்ட்ராக்ட் கிடைத்து விடும். நீண்ட வெள்ளை அங்கிக்குப் பின்னே தெரிந்த தொப்பையைத் தடவிய படியே கண்ணாடியை சரி செய்து கொண்டார். தன்னுடைய ஒல்லியான உருவத்தை லெதர் இருக்கையில் சரித்துக் கொண்டவர், ஃபைலைக் கீழே வைக்கும் முன் மூக்கைத் தேய்த்துக் கொண்டார்.

"ரெஸா" அப்போதுதான் அறையில் யாரோ இருப்பதை உணர்ந்தவர் போன்ற பாவனையுடன் மூக்குக் கண்ணாடியின் ஃப்ரேம் வழியே அவனைப் பார்த்தார்.

ரெஸா மீண்டும் அவரை வணங்கினான், இம்முறை மேலும் கூடுதல் மரியாதையுடன். ஆனால் அவரோ முன்னால் சாய்ந்து, கைகுலுக்க கையை

நீட்டினார். அவருடைய பிடி மிகவும் வலுவற்றதாக இருந்தது. இந்த அதிகார பலம் கொண்ட மனிதனின் கைகளை அப்படியே நசுக்கினால் என்னவாகும் என்று ஒரு நொடி பைத்தியகாரத்தனமாக யோசித்தான்.அவர் மிக சிறிய உருவம் கொண்டவர், வயதானவர், முகத்தில் வேண்டுமென்ற அளவு சுருக்கங்கள், நரைத்த புருவம், குரலில் நடுக்கம். அறுபத்தொன்பது வயதானவர். ஆனால் தாடியில்லாத அவர் முகம் சிறு பையனுடையதைப் போல இருந்தது. கண்ணாடி ஃபிரேமுக்கு மேல் தெரிந்த அவர் கண்கள் பின்னிரவிலும் மிகவும் உயிர்ப்புடன் இருந்தது. இவர் போல பணக்காரனாக வாழ்ந்து வயது முதிர வேண்டும் என ஆசைப்பட்டான். அவன் மனதில் இருந்த வயதான தன் ஒற்றைக்கண் தந்தையின் பிம்பத்தை இவர் வீழ்த்தினார்.

"ஓ ரெஸா," செனேட்டரின் குரல் உற்சாகமாக ஒலித்தது. "பேரணியால் நாள் முழுவதும் வேலையா?"

"ஆமாம் அல்ஹாஜி" ரெஸா கம்பளத்தின் மீது அமர்ந்தான்.

ஆனால், நிலைமை எப்படி உன் கையிலிருந்து கட்டுக்கடங்காமல் போனது?"

"அல்ஹாஜி, அவர்கள் எங்களை நோக்கி வந்துவிட்டார்கள். பேரணியைக் கலைக்க வேண்டுமென்பதுதானே அவர்கள் நோக்கம்"

"ஆமாம், அதுதான் அவர்கள் முக்கிய நோக்கம், ரவுடிப் பையன்கள், அவர்களுக்குப் பின்னால் யார் இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும், அவர்களை விரைவில் கவனித்துக் கொள்ளலாம், கவலைப்படாதே."

"எப்போது வேண்டுமென்றாலும், நீங்கள் ஒரு வார்த்தை சொல்லுங்கள் அல்ஹாஜி".

ஏதோ ரகசியம் பேச வருபவர் போலே அவன் முன்னால் குனிந்து, "இதோ பார் ரெஸா, அரசியல் என்பது மிகவும் தந்திரமான வேலை, நீ உன்னுடைய துருப்புச் சீட்டுகளை கவனமாக இறக்க வேண்டும். உனக்குத் தெரியுமா? நான் ஏன் இந்தப் பேரணியை ஏற்பாடு செய்தேன் என்று? யார் என் பக்கம் இருக்கிறார்கள், யார் எனக்கு எதிராக இருக்கிறார்கள் என்று அறிந்து கொள்ளத் தான்.இந்த உறுப்பினர் பதவியை வைத்துக் கொண்டு நான் என்ன செய்யப் போகிறேன் என்று நினைக்கிறாய்? உனக்குத் தெரியும், நான் பதவிகளையெல்லாம் விட உயர்ந்தவன்."

ரெஸா தலையாட்டினான்.

திரும்பவும் தன் இருக்கையில் சாய்ந்து கொண்டு தொண்டையை செருமிக் கொண்டார். "இரண்டு முறை பார்லிமெண்ட் செனேட்டராகவும்,

மூன்று முறை மந்திரியாகவும் இருந்திருக்கிறேன். எனக்கு ஏறக்குறைய எழுபது வயதாகிறது. அதனால் தான் இப்போது போட்டியிடும் இந்த இளைஞனை பார்லிமெண்ட்டுக்குப் போக அனுமதிக்கிறேன். ஏனென்றால் அவன் தகுதியானவன். இல்லையா ரெஸா?"

"மிகவும் சரி"

அன்றைய பேரணிக்கு முன், அந்த இளைஞன் அவ்டி பலாரபியை ரெஸா பார்த்த்தில்லை. செனேட்டருடைய உறவுக்காரன் என்று கேள்விப்பட்டு இருக்கிறான்.

"இங்க வா மோசஸ்" அறையின் மூலையில் சுவரைப் பார்த்துக் கைகட்டி நின்று கொண்டிருந்த அந்த மனிதனை அழைத்தார்.

"உனக்கு ஆடியைத் தெரியுமல்லவா? அவன் மிகவும் தகுதியான இளைஞன் தானே?

"நிச்சயமாக அவர் தகுதியானவர் சார்."

"பார்த்தாயா?" செனேட்டரின் குரலில் வெற்றிப் பெருமிதம் தொனித்தது. "இளைஞர்களுக்கு வழி விட்டு வாய்ப்பு கொடுக்காததுதான் இந்த நாட்டின் பிரச்சனை. அதுவும் முக்கியமாக நமது கட்சியில். அதனால் தான் சமூக விரோதக் கும்பலை உள்ளே விட்டு பேரணியைக் கலைக்க வருகிறார்கள். அவர்களை சரியான முறையில் கவனிப்போம். நாய்கள், எனக்குத்தானே அவர்கள் சவால் விடுகிறார்கள்?"

"அவர்களை எப்படிக் கவனிப்பது அல்ஹாஜி?"

"ரெஸா, ரெஸா..."

அவருடைய சிறிய உருவத்துக்கு மாறாக சிரிப்பு பலமாக இருந்தது.

"இதனால்தான் உன்னை எனக்கு மிகவும் பிடிக்கும்.,"

"செயலுக்கு எப்போதும் தயாராக இருப்பாய்." கவலைப்படாதே, நேரம் வரட்டும், சரியா?

தன் பாக்கெட்டைத் தட்டிப் பார்த்தவர் திரும்பினார்.

"மோசஸ், மூஸாவை தேனீர் எடுத்துக் கொண்டு வரச் சொல், ரெஸா, உனக்கு?"

"வேண்டாம் அல்ஹாஜி."

"வேண்டாமா?' உனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை.. இல்லைதானே? "

"இன்னும் இல்லை அல்ஹாஜி."

"பிறகு ஏன் தேனீர் அருந்தி விட்டுப் போகக் கூடாது? உனக்கு மிக நல்லது. என்ன?"

மூஸாவை அழைத்து வர மோசஸ் சென்று விட்டான்.

அல்ஹாஜி மைக்குடி எழுந்து, சோம்பல் முறித்து, பின் அறைக் குள்ளேயே நடக்கத் தொடங்கினார்.

'இந்த மனிதர் இப்போதைக்கு தூங்கமாட்டார் போல' என்று கவலைப் பட்டான். சான்சிரோவில் வேறு எல்லோரும் காத்திருக்கிறார்கள்.

"அல்ஹாஜி, இன்னொரு விஷயம்..."

அவருடைய இருக்கைக்குப் போய் அமர்ந்தார். "என்ன விஷயம்?"

"ஏதோ கொஞ்சம், பையன்களுக்காக, அங்கு ஏற்பட்ட சண்டையால் எங்களுக்கு இன்னும் கணக்கு சரி செய்யவில்லை"

"ஓஓ, ஆமாம், நான் நினைத்தேன். நான் அப்போதே கேட்டேன் என்று நினைத்து விட்டேன். பரவாயில்லை, சோஃபா கைப்பிடியின் பின் பக்கத்திலிருந்து ஒரு சூட்கேஸை எடுத்து அதிலிருந்து மடித்து வைக்கப்பட்டிருந்த ஒரு கற்றை நோட்டுகளை எடுத்தார்.

"ஒரு பையனுக்கு மிக மோசமாக அடிபட்டிருக்கிறது, அவனை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்ல வேண்டும்."

கண்ணாடி விளிம்பில் அவனைப் பார்த்த செனேட்டர், மேலும் ஒரு கற்றையைக் கூட்டினார்.

"ரெஸா, உனக்கு ஏதாவது கஷ்டம் இருந்தால் தான் நீ இங்கே வருகிறாய், இல்லாவிட்டால் இங்கு வருவதே இல்லை தெரியுமா?"

"நீங்கள் எப்போதும் ஏதோ ஒரு வேலையாகவே இருக்கிறீர்கள் அல்ஹாஜி."

"ஆனால் நாம் எத்தனை வருடங்களாக ஒன்றாகச் சேர்ந்து வேலை செய்கிறோம்? இந்த அரசியல் எல்லாமே, உங்களுக்கு உதவத்தான் இல்லையா? என்னிடம் தேவையான பணம் இருக்கிறது, நான் வயதானவன். இந்த நாட்டில் மோசமான தலைவர்கள் இருப்பது நம் துரதிர்ஷ்டம். ஆனால் நீ ஒரு முறை கூட அழைத்து 'நல்ல காரியம் செய்கிறீர்கள்' என்று என்னிடம் சொல்வதே இல்லை, உனக்கு ஏதாவது தொல்லை என்றால் தான் வருகிறாய்."

"நான் அழைத்தேன் அல்ஹாஜி, ஆனால் எப்போதும் உங்கள் ஆட்கள் உங்களுடன் பேச விடமாட்டார்கள்."

"என் ஆட்கள்? சில வேளைகளில் நீ பேசுவது எனக்குப் புரிவதே இல்லை, வல்லாஹி, நீ என் ஆட்களில் ஒருவன் இல்லையா? அல்லது, நீ என்னுடன் இப்போது இல்லையா?"

"ஐயோ அல்ஹாஜி, நான் உங்களுடன்தான் இருக்கிறேன்."

"நல்லது, நல்லது." நோட்டுக் கற்றைகளை அவனிடம் கொடுத்தார். அவற்றை வாங்கிப் பாக்கெட்டில் திணித்துக் கொண்டான்.

"அந்தப் போலீஸ்காரன் எப்படி இருக்கிறான், இப்போதெல்லாம் உனக்குத் தொல்லை கொடுப்பதில்லை என்று நம்புகிறேன்"

"அவ்வளவாக இல்லை. ஆனால், சமீபத்தில் ஒரு ரெய்டு விட்டு, சரக்கையெல்லாம் எடுத்துப் போய் வேறொரு இடத்தில் விற்றுவிட்டார்."

"பார்த்தாயா, எந்த மாதிரி அநியாயத்தை எதிர்த்து நாம் போராடுகிறோம் என்று?" உள்ளங்கைகளை விரித்து ஏதோ உறுதிமொழி வேண்டுபவர் போல நின்றார்.

"அதனால் தான் நாம் எப்போதும் விட்டுக் கொடுக்கக் கூடாது."

"மிகவும் சரி அல்ஹாஜி, அந்த ஆள் வேலைக்குப் புதிது."

செனேட்டர் சூட்கேஸைப் பட்டென்று மூடி, சோஃபாவின் பின்னே வைத்தார். "படித்தவர்கள் நிறைய பேர் ஏதேனும் செய்ய வேண்டும் என்று காத்திருக்கும் போது, போலீஸ் படையில் படிக்காதவர்களை பணிக்கு எடுக்கிறார்கள். அவன் திரும்பவும் உன்னைத் தொந்தரவு செய்தானென்றால் என்னிடம் சொல், நான் என்ன சொல்கிறேனென்று இப்போது புரிகிறதா?, மக்கள் நன்றாக இருப்பதைஅவர்கள் விரும்புவது இல்லை"

மூஸா, இருபதுகளில் இருக்கும் இளைஞன், தேனீர்க் குவளைகளை எடுத்துக்கொண்டு வந்து, சோஃபாவின் பக்கத்தில் இருந்த சிறிய ஸ்டூலில் வைத்தான். கதவருகில் காத்திருந்த மோசஸ் மூஸா வெளியேறியதும் கதவைச் சாத்தினான்.

"மோசஸ், என்னுடைய நேரடித் தொடர்பு எண்ணை ரெஸாவுக்குக் கொடு. இவன் என்னுடைய திறமை வாய்ந்த இளைஞர்களில் ஒருவன்."

"ஆகட்டும் சார்" அவனுடைய பாக்கெட்டிலிருந்து ஒரு கார்டை உருவி ரெஸாவிடம் கொடுத்தான் மோசஸ்.

"இந்த எண்ணை அழைத்தால், மோசஸ் எடுப்பார். மோசஸ் என்னுடைய காரியதரிசி. எப்போதும் என்னுடன்தான் இருப்பார்.

அவருக்கு நன்றி சொல்லிக் கொண்டே தேனீர் அருந்த அமர்ந்தான் ரெஸா. இந்த நள்ளிரவில் இது ஏன் தேவை? யாரோ ஒருவர், மிகப் பெரும் செல்வந்தர், அரசியல் பலம் பொருந்தியவர், இந்த இரவு இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறது என்பது போல ஏன் அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்று வியந்து போனான் ரெஸா. கடைசியில் ஒரு வழியாக அவன் சான்சிரோவுக்குக் கிளம்பியபோது அதிகாலை ஒரு மணி ஆகியிருந்தது. அந்த இரவில், நாய்கள் வெகு நேரத்துக்கு முன்பே ஊளையிட்டுக் களைத்து உறங்கப் போயிருந்தன.

—

9

"நிலத்திலிருந்து பறந்து எறும்புக்குழியின் மீது அமரும் பறவைக்குத் தெரிவதில்லை தான் இன்னும் நிலத்தில்தான் இருக்கிறோமென்று..."

தையல் இயந்திரத்தின் விர்ர்ர் என்ற சப்தம் அமைதியை அறையின் மூலைக்கு துரத்திவிட்டிருந்தது. இயந்திரத்தின் பெடல்களில் மேலும் கொஞ்சம் எண்ணெய் விட்ட பிந்த்தா பக்கத்திலிருந்த அட்டைப் பெட்டியைத் துழாவி ஒரு துணி மூட்டையை கண்டெடுத்தாள்.

"இப்போது இதைத் தைக்கப் போகிறீர்களா?"

கையிலிருந்த ரிமோட்டால் துணி மூட்டையைச் சுட்டி சைகையில் கேட்டாள் ஃபைஸா. சோஃபாவில் அவளும், அதன் கைப்பிடி மேல் உம்மியும் அமர்ந்து தொலைக்காட்சியில் ஏதோ பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

மூக்கின் மீது சரிந்திருக்கும் கண்ணாடியின் ஃபிரேமுக்கு மேலாக அவர்களைப் பார்த்தாள் பிந்த்தா.

"நான் என்ன செய்துகொண்டிருக்கிறேன் என்று உனக்குத் தோன்றுகிறது?"

அங்கிருந்த மற்றொரு சோஃபாவில் இரு பெண்கள் அமர்ந்திருந்தனர். பழைய ஹிஜாப் ஒன்றைச் சுற்றிக்கொண்டு வந்திருந்த கண்டியாவும், சுருங்கிய முகமும், அறுபது மழைப் பருவங்களையும், அறுபத்தியொரு புழுதிப் புயல் காலங்களையும் கண்டு குழியாகிப் போன கண்களுடைய மல்லமா உம்மாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

கண்டியா தொண்டையைக் கனைத்துக்கொண்டாள் "மல்லமா உம்மா, நாம் கிளம்பலாம் என்று நினைக்கிறேன்."

மல்லமா உம்மாவோ, தன் சுருங்கிப் போன தோல் போர்த்திய விரல்களில் கருப்பாக இருந்த மருதாணியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். இது போன்ற சவாலான நேரங்களைச் சந்திக்க நேரும்போதெல்லாம் இப்படித்தான் செய்வாள். இந்த அறுபது வருடங்களில் மருமகப் பிள்ளைகள், பேரக்குழந்தைகள் எனப் பள்ளிக்குச் செல்ல அடம்பிடிக்கும் பல பிள்ளைகளைச் சமாளித்திருக்கிறாள். அதனால் ஹஜியா பிந்த்தாவின் பிரச்சனை அவளுக்கு விசித்திரமானது அல்ல. இருக்கையின் நுனிக்கு வந்தவள், "நாங்கள் உனக்காக காத்திருக்கிறோம். நீயோ நாங்கள் இருப்பதையே கவனிக்காதது போல வந்தவுடன் நேராக, மெஷினில் போய் அமர்ந்து கொண்டாய்."

அவளை நிமிர்ந்து பார்த்த பிந்த்தா, ஃபைஸாவின் பக்கம் திரும்பினாள்.

"ஃபைஸா, நீ சமையலறைக்கு போய் கஸ்கோ தயார் செய் போ"

"நானா? ஹஜியா, எனக்கு டிவி பார்க்க வேண்டும்."

"முன்க்கைலாவும் அவள் குடும்பமும் வரும்முன் கஸ்கோ தயாராக வேண்டும்."

முனகிக் கொண்டே எழுந்து போனாள் ஃபைஸா. அவள் நகர்ந்தவுடன், அவள் காலி செய்த இடத்தில் தன்னை நிறைத்துக்கொண்டு ரிமோட்டை கையிலெடுத்தாள் உம்மி.

"இப்போது நீ எதற்குக் காத்திருக்கிறாய்? உன் வயதுப் பெண்கள் யாராவது இங்கே இருக்கிறார்களா?"

"ஹ்ம்ம்..ம்ம், ஹஜியா" பிந்த்தாவின் உக்கிரப் பார்வையில் உம்மியின் பிடிவாதம் கரைந்து போக, சிணுங்கிக்கொண்டே அவ்விடத்தை அகன்றாள்.

பிள்ளைகள் சென்றதும், சற்று நேரம் தையல் இயந்திரத்தின் சப்தம் மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது.

பிந்த்தா இயந்திரத்தின் இயக்கத்தை சற்று மட்டுப்படுத்த, கிடைத்த வாய்ப்பை சட்டெனப் பயன்படுத்திக்கொண்டாள் மல்லமா உம்மா.

"ஹஜியா பிந்த்தா, இப்போதெல்லாம் நீ மதரஸாவுக்கு வராமலிருப்பதை நினைத்து நாங்கள் அனைவரும் கவலைப்படுகிறோம் தெரியுமா? "

தைத்திருந்த ஆடையை ஆராய்ந்து கொண்டிருந்த பிந்த்தாவின் புருவம் சுருங்கிப் போனது.

"வல்லாஹி, நான் உங்களை மிகவும் மதிக்கிறேன் மல்லமா உம்மா,

ஆனால் என் வீட்டிற்கு நீங்க கண்டியாவுடன் வந்தது சரியாகப்படவில்லை."

"ஹ்ம், தன் பெருத்த உடலின் மீது ஹிஜாபை இழுத்துச் சுற்றிக்கொண்ட கண்டியா, "மல்லமா உம்மா, நான் கிளம்புகிறேன்' என்று எழ முற்பட்டாள். அவள் தொடையின் மீது கையை வைத்து அழுத்தினாள் மல்லமா உம்மா.

"நீங்கள் இருவரும் சிறுபிள்ளைகள் போலச் சண்டையிடுவதை நிறுத்திக் கொள்ளவேண்டும்."

"இங்கே வந்து என்னுடைய பேத்தியின் முன்னால் என்னை அவமானப் படுத்திய இந்தப் பெண்மணி, இப்போது என் மீது அக்கறையுள்ளவள் போல நடிக்கிறாள்."

"இது நடிப்பில்லை," கண்டியா ஏதாவது சுருக்கென்று பேசிவிடும் முன் உம்மா பேசத் துவங்கிவிட்டார்.

"அன்று சொன்னதெல்லாம் கோபத்தில் சொன்னது, கோபத்துக்குப் பதிலாகக் கோபம் கொள்ளுதல் கூடாது என்று மொஹம்மது நபிகளார் சொன்னதை மறந்து விட்டாயா?"

"நபிகளாரை இங்கு இழுக்காதீர்கள் உம்மா, அவரை விட்டு விடுங்கள்."

உம்மா புன்னகைத்தாள். "உனக்குத் தெரியும் பிந்த்தா, நபி,அவர் மீது சாந்தி உண்டாகட்டும், எந்த விஷயத்திலும் நம்மால் அவரைத் தவிர்க்கவே முடியாது. அவர் சொன்னபடி தான் நாம் வாழ்கிறோம். ஒருவருக்கொருவர் வெறுப்பு கொள்ளுதல் கூடாது என்று அவர் போதித்திருக்கிறார்."

பிந்த்தா இயந்திரத்தை இயக்கத் துவங்க, வந்திருந்த பெண்கள் இருவரும் மீண்டும் காத்திருக்க வேண்டியதாயிற்று. இயந்திரம் நின்றதும், உம்மா தொண்டையை சரிப்படுத்திக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

"உஸ்தாஜ் நூராவும், பிறகு அங்கு படிக்கிற மாணவிகள் அனைவரும் உனக்கு உடல் நலம் சரியில்லையோ என்று கவலைப்பட்டார்கள். ஆனால், உன் பக்கத்து வீட்டுக்காரர்கள் நீ நல்ல உடல்நிலையோடு இருப்பதாக சொன்னார்கள். அதனால், நேரில் பார்த்து மதரஸாவுக்கு ஏன் வருவதில்லையென்று விசாரித்து விட்டுப் போகலாம் என்று வந்தோம்."

அப்போது சட்டென மின்சாரம் நின்று போனதில் பிந்த்தாவுக்குக் கோபம் பொங்கியது. மோட்டாரை துண்டித்து விட்டு பெடல் ஒயரை இணைத்தாள்.

"எனக்குக் கொஞ்சம் உடல் நிலை சரியில்லை, பெரிதாக எதுவும் இல்லை, சிறிய ஒரு சுகவீனம்."

பிந்த்தா பெடலின் மீது கால் வைத்தாள்.

"பார்த்தாயா? நாமெல்லாம் இன்று நலமாக இருக்கிறோம், நாளை முடியாமல் போய் விடலாம். அதனால் தான், கருணையுள்ள அல்லாஹ்வை நேரில் தரிசிக்க நம்மைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும். நேரம் நழுவிவிட்டால் அதைத் திரும்பப் பெற முடியாது. மரணம் எப்போது நம் வாழ்வின் கதவைத் தட்டும் என்பதும் நமக்குத் தெரியாது. மதரஸாவை நோக்கி நீ எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும், தேவதையின் சிறகுகள் மீது நடப்பதற்கு ஒப்பானது. அதற்குத் தகுந்த சன்மானத்தை அல்லாஹ் உனக்கு அளிப்பார். இது உனக்கு நன்றாகத் தெரியும் ஹஜியா பிந்த்தா, ஆனாலும் நீ பின்னோக்கி செல்கிறாய்."

பெருமூச்சுவிட்டாள் பிந்த்தா. பாவங்களின் சுமை அவளை அழுத்தியது. இங்கே இவள், ஐம்பத்தி ஐந்து வயதில், தன் இளைய பிள்ளையை விட இள வயதுடைய ஒரு போதைப் பொருள் வணிகனுடன் கூத்தடிக்கிறாள். இறை விசுவாசத்தின் கைகள் நீண்டு அவள் கண்ணீர் சுரப்பிகளைத் தூண்டிவிட்டன. ஊசியில் நூலைக் கோர்க்கும் பாவனையில் குனிந்து அந்தப் பெண்களிடமிருந்து தன் கண்ணீரை மறைத்துக் கொண்டாள்.

"உனக்கு ஒன்றுமில்லையே பிந்த்தா?" கனிவுடன் கேட்டாள் உம்மா.

"நலமாக இருக்கிறேன் மல்லமா உம்மா, நன்றி."

நிமிர்ந்த பிந்த்தா, நடுங்கும் தன் மனதை திரையிட்டு மூட, பெடலின் மீது காலை வைத்து தீவிரமாக அழுத்தினாள். நடுங்கும் அவள் வார்த்தைகளே அவளைக் காட்டிக் கொடுத்தன. ஊசிக்குக் கீழே துணியைச் சீராகச் செலுத்த முயன்றாள், ஆனால் கடகடவென்ற சத்தத்துடன் மிக வேகமாக ஓடியது இயந்திரம். அவள் விரல்களுக்கிடையிலிருந்த துணி சரேலென வழுக்கிச் சென்றது.

அவள் தன் கட்டுப்பாட்டை இழந்தவுடன் உடனடியாக அங்கு சிறு அமளி ஏற்பட்டது. பிந்த்தாவின் விரல்களில் ஊசி ஓடி சுரீரென்று குத்தும் வலி அவள் நரம்புகளில் ஊடுருவியது.

"இன்னாலில்லாஹி வ-இன்னா இலைஃகி ராஜ்ஜிஊன்!" வலியில் பிந்த்தாவின் முகம் கோணியது . பெண்கள் பதறி எழுந்தனர் . சமையலறையிலிருந்து ஓடி வந்த ஃபைஸா, விரல்களில் வழிந்த ரத்ததைப் பார்த்ததும் அப்படியே உறைந்தாள் .

காயம் பட்ட விரல்களின் மீது ஒரு துணியைச் சுற்றிக்கொண்டு, ஃபைஸாவுக்கு மறுபுறமாகத் திரும்பி நின்றாள் பிந்த்தா. ஆனால், ஊசி துளைத்த வலியினால் ஏற்பட்ட எரிச்சல் மூளை வரை துளைக்க அப்படியே

முழங்காலிட்டு மடங்கிச் சரிந்தாள். வந்திருந்த இரண்டு பெண்களுக்கும் என்ன செய்வதென்றே புரியவில்லை. வலியில் துடித்துக்கொண்டிருக்கும் பிந்த்தாவைக் கவனிப்பதா, மேலுதட்டில் வியர்வை அரும்ப புழுதிப்புயலில் சிக்கி அலைவுறும் போபாப் மரத்தின் கடைசி இலை போல நடுங்கிக் கொண்டிருக்கும் ஃபைஸாவை கவனிப்பதா என்று திணறினர்.

—

முன்க்கைலா தன் மனைவி, குழந்தைகளுடன் வந்திறங்கியபோது சமையலறையில் இருந்தாள் பிந்த்தா. மசாவும், தாஷே குழம்பின் வாசமும் வீட்டின் மூலை முடுக்குகள் எங்கும் நிரம்பிக் கிடந்தது. சமையலை அப்படியே நிறுத்தி விட்டு, வெளியே வந்தவள், கட்டுப்போட்டிருந்த விரல்களைக் கவனமாகக் கையாண்டபடியே இளைய பேத்தியை வாங்கி உயரத் தூக்கிப்போட்டு விளையாடினாள். பதினெட்டு மாதக் குழந்தை கத்திக்கொண்டே அவள் தோளில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள். நான்கு வயது சாரா, பிந்த்தாவின் கால்களைக் கட்டிக்கொண்டு தன் உடலை அவள் மேல் சாய்த்துக்கொண்டாள். அவர்கள் தாய் ஸாதியா, பெருமித்துடன் சிரித்துக்கொண்டிருந்தாள். பிந்த்தாவுக்கு அவள் வணக்கம் வைக்கும் போது, அவளது மெல்லிய, சல்லடை போன்ற நீல நிற முக்காட்டையும், அதிலிருந்த அலங்கார மணிகள் தோளிலிருந்து மார்பு வரை தொங்கிக் கொண்டிருந்ததையும் பார்த்து முகம் சுளித்தாள் பிந்த்தா. அவள் கூந்தலும் தலையில் கட்டியிருந்த ஸ்கார்ஃபுக்குக் கீழே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.. ஸாதியா அதை சரி செய்து கொண்டாள்.

ஸாதியாவை, முதன் முதலாக 2005 ஆம் வருடம் முன்கைலா ஜாஸ் நகரத்துக்கு அழைத்து வந்தபோது அவளைப் பிடிக்காமல் போக பிந்த்தாவுக்குப் பல காரணங்கள் இருந்தன. அந்தப் பெண் மிக மென்மை யானவளாக, பலமற்றவளாகத் தெரிந்தாள். பளபளப்பான கூந்தல், மெல்லிய விரல்கள், குறுகிய இடுப்பு, நன்றாக மூச்சு விடக் கூட இயலாத அளவு வளைந்த சிறிய மூக்கு. மற்றும் அவளுடைய அகலமான கண்கள் அப்படியே அவளின் அத்தனை பலவீனங்களையும் காட்டிக் கொடுப்பவை போல இருந்தது. மொத்தத்தில், கறுத்த, குண்டான, தட்டையான மூக்குடன் இருந்த முன்க்கைலாவுக்குப் பக்கத்தில் இந்த அழகு தேவதை நின்றால், அவன் ஒரு விலங்கு போலத் தோற்றமளித்தான். முன்க்கைலாவிடம் பணம் மட்டும் இல்லையென்றால், ஸாதியா அவனைத் திருமணம் செய்திருக்கமாட்டாள். அதற்கு அவள் பணக்காரத் தந்தையும் நிச்சயம் அனுமதித்திருக்கமாட்டார் என்று அவள் முடிவுக்கு வந்தாள்.

வரவேற்பறையின் கம்பளத்தில் அனைவரும் அமர்ந்தனர். ஃபைஸா குனிந்து உணவுப் பாத்திரங்களில் இருந்த மசாவை எடுத்து தட்டுகளில் வைத்துப் பரிமாறி பிந்த்தாவுக்குத் தர, அந்த உருண்டைகளை தாஷே குழம்பை ஊற்றி, அதனுடன் நல்ல இறைச்சித் துண்டங்களைச் சேர்த்தாள்.

முன்க்கைலா, தட்டை எடுக்க நீண்ட பிந்த்தாவின் வீங்கிய விரல்களைப் பார்த்தான்,

"இது ரொம்ப மோசமா இருக்கு ஹஜியா."

"ஓ, அதெல்லாம் ஒன்றுமில்லை," புன்னகையுடன் பதிலளித்தாள்.

தனக்கு குறிப்புணர்த்தியதாக அறிந்த ஸாதியா, உடனே பிந்த்தாவின் கையிலிருந்த தட்டை வாங்கிக்கொண்டு, பரிமாறும் கரண்டியை தானே எடுத்தாள், "கவலைப்படாதீங்க ஹஜியா, நான் பார்த்துக் கொள்கிறேன்."

ஸாதியாவின் கைகள் மிக நளினமாகத் தட்டுகளில் குழம்பை ஊற்றுவதை கவனித்தாள். மசா உருண்டைகளில் தேவைக்கு அதிகமான அளவில் குழம்பைப் பரிமாறியது பிந்த்தாவுக்குப் பிடிக்கவில்லை. இந்தப் பணக்காரப் பிள்ளைகளுக்கு பொருட்களின் மதிப்பு தெரிவதில்லை என்று நினைத்துக் கொண்டாள்.

"குழந்தைகளா, இங்க வந்து உங்கள் தட்டுகளை எடுத்துக் கொள்ளுங்கள்" குழந்தைகளைப் பெருமிதத்துடன் பார்த்தவாறே செல்லமாக அவர்களை அழைத்தாள் ஸாதியா.

சிறுமிகள் இருவரும் தரையில் சப்பணமிட்டு அமர்ந்து திரையில் டாம் அண்ட் ஜெர்ரி பார்த்துக்கொண்டிருந்தர்கள். தன்னை விட வயதில் இளையவர்களான அந்தச் சிறுமிகளை அதிகாரம் செய்யும் வாய்ப்புக் கிடைத்ததில் மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டாள் உம்மி. தன்னுடைய தட்டை சாராவை எடுத்து வரச் சொல்லிக் கட்டளையிட்டாள்.

ஃபைஸா அவளுடைய உணவை எடுத்துக் கொண்டு, அறையை நோக்கி நகர்ந்த போது முன்க்கைலாவின் குரல் அவளைத் தடுத்தது.

"ஃபைஸா, உனக்கொன்றும் பிரச்சனை இல்லையே, நீ ஏன் விசித்திரமாக நடந்து கொள்கிறாய்?"

பற்கள் வெளியே தெரியாதவாறு வெற்றுப்புன்னகை செய்துவிட்டு அறைக்குள் சென்றாள் ஃபைஸா.

"இந்தப் பெண்ணுக்கு என்னவாயிற்று?" பொதுவாகக் கேட்டான் முன்க்கைலா. அவன் காதருகே சென்று ஏதோ சொன்னாள் உம்மி.

புருவத்தைச் சுருக்கியவாறே அவள் சொன்னதைக் கேட்டான்,

"ஏன்? என்ன நடந்தது?"

உம்மி மேலும் அவன் காதோரம் சரிந்து ஏதோ கிசுகிசுத்தாள். அவள் கண்கள் பளபளத்தன.

"இங்கிருந்து ஓடு வம்புக்காரி!" பிந்த்தாவின் குரலில் கேலி தொனித்தது. பெரியவர்களின் சிரிப்பு வீட்டுச் சுவர்களில் எதிரொலித்தது. முகச்சுழிப்புடன் உம்மி அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

தலையாட்டிக் கொண்டே நீர் அருந்திய ஸாதியா ,கண்ணாடி தம்ளரை, அழகான கார்ப்பெட்டின் மீது மிகக் கவனமாக வைத்தாள். "ஹஜியா, இப்படி சுவையான மசா சமைப்பதற்கு நீங்கள்தான் எனக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும், வல்லாஹி!"

"நல்ல 'மசா' சமைப்பதற்கு விறகடுப்பு வேண்டும், உன்னால் அந்த சூட்டைத் தாங்க முடியாது" வெற்றுச் சிரிப்புடன் சொன்னாள் பிந்த்தா.

"என்னால் முடியாதா ஹஜியா!! ஹப்பா!"

"அடுப்பில் விறகு எப்படி அடுக்குவது என்று கூட உனக்குத் தெரியாது. அந்தப் புகை உன்னை வீட்டை விட்டு விரட்டி விடும். இந்த கேஸ், மின்சார அடுப்புப் பெண்களுக்கெல்லாம் அடுப்பு எரியும் போது மூச்சுக் கூட விட முடியாது."

வாயில் சாப்பாட்டை வைத்துக்கொண்டே, மனைவிக்கும், அன்னைக்கும் சைகையால் ஏதோ சொல்ல வந்தான் முன்க்கைலா. அவன் விழுங்கும் வரை பொறுத்திருந்தனர் இருவரும்.

"விறகடுப்பில் சமைக்கும் உணவு எவ்வளவு சுவையாக இருக்கு மென்று இவளிடம் நான் சொல்லிக் கொண்டேயிருப்பேன்."

"ஒஹ்ஹோ!, அந்த அடுப்பெரிக்கும் ரப்பர், மரம், மற்ற சாமான்களின் வாசம் உன் மனைவி மீது வீசுவதை நீ விரும்பமாட்டாய்."

"இப்போது எல்லோரும் விறகடுப்பைப் பயன்படுத்துவதை நிறுத்தி விட்டார்கள்." முன்க்கைலா யோசனையுடன் சொன்னான்.அது சூழலையும் மாசுபடுத்தும், அதனால் தான் உங்களுக்கு கேஸ் குக்கர் வாங்கிக் கொடுத்தேன்."

பிந்த்தா தலையசைத்தாள், "எனக்குத் தெரியும், நான் மிகவும் கொடுத்து வைத்தவள், பக்கத்து வீட்டு மம்மா எஃபே, அவள் பெண்ணைக் கெரோசின் வாங்க பெட்ரோல் பங்க் அனுப்பினார், அரை நாள் வரிசையில் நின்று

கொண்டிருந்தாள். அப்புறம், அங்கே வந்த ஒரு பைக்காரன் அடித்துக் கீழே தள்ளி விட்டுப் போய்விட்டான் பாவம்."

"பங்க்குகளில் மீண்டும் நீண்ட வரிசை வந்துவிட்டதாகக் கேள்விப் பட்டேன்." ஸாதியா மாமியாரைப் பார்த்துச் சொன்னாள்.

பிந்த்தாவின் கண்கள் விரிந்தன, "மீண்டுமா? அது எப்போது போனது?" "அதுவும், நம் நாட்டிலேயே எண்ணெய் எடுக்கிறோம். யா அல்லாஹ் !!"

"எல்லாமே மோசமான தலைமையால்தான்." முன்க்கைலாவின் முகச்சுளிப்பு மேலும் அதிகமானது, "மோசமான தலைமை."

அதேதான் "இவரையே மறுபடியும் அதிபர் ஆக போட்டியிடச் சொல் கிறார்கள் என்று கேள்விப்பட்டேன்."

ஏதும் சொல்லாமல், பிந்த்தா தன் கோப்பையிலிருந்த பானத்தை உறிஞ்சினாள். "அப்படி நடக்குமென்று நீ நினைக்கிறாயா?"

"பகுதிவாரியான வேட்பாளர் ஒப்பந்தப்படி அவர் போட்டியிடக் கூடாது, ஆனால், அதிகாரம் அவர் கையில் உள்ளதல்லவா? நிச்சயமா போட்டியிட ஏதோ ஒரு உபாயம் கண்டுபிடிப்பார்."

"வல்லாஹி ஃபா" பிந்த்தாவும் அதை ஆமோதித்தாள்.

"யாரா டூவா மட்டும் இறந்து போகாமலிருந்தால், இதெல்லாம் நடந்திருக்காது", கன்னத்தில்பட்டிருந்த சூப்பைத் துடைத்தபடி ஸாதியா பேச்சில் கலந்து கொண்டாள்.

வாயிலிருந்த உணவை சப்தமெழுப்பியவாறே விழுங்கினான் முன்க்கைலா.

"அவர் மட்டும் ரொம்ப வித்தியாசமானவரா என்ன? அவர்களுக்கு வேண்டியதெல்லாம் ஒன்றுதான், தங்கள் தேவைக்காகத்தான் எல்லோரும் இங்கே இருக்கிறார்கள்."

"வடக்கு மாகாணத் தலைவர்கள் நிச்சயமாக இதற்கு ஒத்துகொள்ள மாட்டார்கள்." கையிலிருந்த ஸ்பூனை முகத்துக்கு நேராக ஆட்டியபடி, அனுமதிக்கவே மாட்டார்கள் என்று உறுதியாகச் சொன்னாள் பிந்த்தா.

"ஹஜியா, முன்க்கைலாவின் குரல் மிருதுவாக ஒலித்தது, வடக்கு மாகாணத் தலைவர்கள், தெற்கு மாகாணத் தலைவர்கள், இவர்கள் எல்லாம் இந்த நாட்டுக்கு என்ன நல்லது பண்ணிவிட்டார்கள்?"

வாய் நிறைய உணவு இருந்ததால் பிந்த்தாவால் எதுவும் பேச

முடியவில்லை. சற்று நேரத்துக்கு முன் வந்த மின்சாரம் மீண்டும் போனது. குழந்தைகள் வழக்கம் போல 'ப்ச் ப்ச்' என்னும் குரலெழுப்பி சலித்துக் கொண்டார்கள். மறுபடியும் வந்து சாப்பாடு எடுத்துக் கொள்ளச் சொல்லி பேரக்குழந்தைகளை அழைத்தாள் பிந்த்தா. அவர்களுக்காக, பெரிய இறைச்சித் துண்டுகளைக் கரண்டியால் அளைந்து அனைவருக்கும் சரி சமமாகப் பரிமாறினாள்.

—

நீலவண்ண சீனத் தயாரிப்பு ஜெனெரேட்டர் மெல்ல மெல்ல ஒலியெழுப்பி, பின் பெரும் சப்தத்துடன் உயிர் பெற்றது. ஃபைஸா மாற்று ஸ்விட்சைப் போட்டதும் வீட்டில் வெளிச்சம் பரவியது. குழந்தைகள் உற்சாகமாகக் குரலெழுப்பிக் கொண்டு வீட்டிற்குள் ஓடினார்கள்.

அந்த ஜெனெரேட்டரைக் காரின் டிக்கியில் போட்டு முன்க்கைலா எடுத்து வந்திருந்தான். அங்கிருந்த சிறிய ஷெட்டில் சில அலுமினியக் கூரைத் தகடுகளால் மறைப்பு செய்து இயந்திரத்தை அங்கே பொருத்திவிட்டான். வீட்டின் உரிமையாளர் அந்த ஷெட்டைக் கட்டியிருந்தார். வேறெந்த உபயோகமும் இல்லாததால் பழைய தேவையற்ற பொருட்களையும், மரச் சாமான்களையும் அங்கே போட்டு வைத்திருந்தாள் பிந்த்தா. வீட்டிலிருந்து சற்றுத் தொலைவில் அந்த இடம் அமைந்திருந்ததால், ஜெனெரேட்டரின் ஓசை அதிகம் காதுகளை உறுத்தவில்லை. பக்கத்து வீட்டு மம்மா எம்ஃபேயின் வீட்டிலிருந்து வரும் சப்தம்தான் நள்ளிரவில் அவர்கள் மெஷினை அணைக்கும் வரை பிந்த்தாவின் உறக்கத்தைக் கெடுக்கும்.

முன்க்கைலா நிமிர்ந்து கைகளில் ஒட்டியிருந்த தூசைத் தட்டினான். மகிழ்வும் நன்றியும் மேலிட, அவன் வளமாக, நீண்ட ஆயுளுடன் இருக்கவும், அவனுடைய வயதான காலத்தில் அன்பாகக் கவனித்துக் கொள்ளும் குழந்தைகள் இருக்கவேண்டுமென்றும் ஆசிர்வாதங்களை அள்ளி வழங்கிக் கொண்டிருந்தாள் பிந்த்தா. ஒவ்வொன்றுக்கும் தொண்டையைக் கனைத்து சிரித்தபடியே 'ஆமீன்' என்று சொல்லிக் கொண்டிருந்தான் முன்க்கைலா. அவன் பணவசதியில் திளைக்க ஆரம்பித்தவுடன் இதுபோலெல்லாம் சொல்வதை பிந்த்தா கேட்டதே இல்லை.

"ஹஜியா, நாம் கொஞ்சம் பேச வேண்டும்" பேசுவதற்கு வசதியான இடமாக எது இருக்கும் என்பது போல சுற்றும்முற்றும் பார்த்தான்.

"அப்படியா?" அவன் முகத்தில் தென்பட்ட ஆழ்ந்த சிந்தனையைப் பார்த்துக் கொஞ்சம் கவலைப்பட்டாள் பிந்த்தா.

மெஷினின் கட கடவென்ற ஒலியிலிருந்து அவளை நகர்த்தி, சுவருக்கு அருகே அழைத்துச் சென்றான். கார் சாவியைக் விரல்களில் சுழற்றியபடியே நின்றுகொண்டு சற்று நேரம் இருவருக்குமிடையில் சிறு மௌனத்தை அனுமதித்தான்.

"எனக்கு ஹுரைராவை நினைத்துக் கவலையாக இருக்கிறது, ஃபோனில் அழைத்து அவள் கணவனைப் பற்றிப் புகார் சொல்லிக் கொண்டே இருக்கிறாள்."

"ஓ, இந்தப் பொண்ணும் அவளுடைய கஷ்டங்களும்." கவலையுடன் கன்னத்தில் கை வைத்துக் கொண்டாள்.

"இரண்டு நாட்களுக்கு முன்னால் ஃபோன் செய்து அவர்களுக்குள் மறுபடியும் சண்டையென்று சொன்னாள், "உன்னுடைய வாழ்க்கையை ஒழுங்காகப் பார்த்துக் கொள் என்று சொல்லி வைத்தேன் தெரியுமா?"

"ஆனால் அவள் கேட்க மாட்டாளென்று தெரியும், நேற்றிரவு ஃபோனில் அவன் கழுத்தை வெட்டப் போகிறேன் என்று கத்துகிறாள்."

"அந்தப் பெண்ணுக்குத் தேவையில்லாத குணம் இருக்கிறது, வல்லாஹி, உங்கப்பா போலவே."

"ஹப்பா, ஹஜியா!"

"உண்மைதானே? இது உனக்கும் தெரியும். இதெல்லாம் எதற்கு? ஹ்ம்ம்... இந்தப் பெண் என்ன செய்துகொண்டிருக்கிறாள் பார். ஏற்கெனவே ஒரு முறை விவாகரத்து வாங்கியிருக்கிறாள், இப்போது இந்தத் திருமணத்தையும் முறிக்க நினைக்கிறாள். இந்தத் திருமணத்தையும் இவள் முறித்துக் கொண்டால், நான் சும்மா விடமாட்டேன், எனக்கு அவள் பதில் சொல்லியே ஆக வேண்டும், வல்லாஹி!"

"நீங்களும், ஹதீஸாவும் ஜாஸ்க்குப் போய் அவளோடும், அவள் கணவ னோடும் பேசிப் பார்க்கலாமென்று நான் நினைக்கறேன், ஹதீஸாவிடம் ஏற்கெனவே இதைப் பற்றிச் சொன்னேன்."

"ஹதீஸா எப்படித் தன் கணவனோடு அமைதியாக வாழ்க்கை நடத்து கிறாள் என்று பார்க்கிறாள் அல்லவா? "

"சரி ஹஜியா, அவளைப் போனில் அழைத்து நல்ல புத்தி சொல்லுங்கள், தேவை எற்பட்டால் நீங்கள் நேரில் போய் அவளுக்குப் புத்தி சொல்லுங்கள்.."

பிந்த்தா நெஞ்சுக்குக் குறுக்காக கையை கட்டிக் கொண்டு நின்றதைக் கவனித்தான். அப்பாவிடம் வாக்குவாதம் ஏற்பட்டால் அப்படித்தான்

நிற்பாள். எப்போதும் அவனை அப்படித்தான் கட்டுப்படுத்துவாள். கையைக் கட்டிக் கொண்டு. உடல் கோபத்தில் நடுங்கும். மனதிற்குள்ளே பொங்கிப் பிரவகிக்கும் ஆத்திரம், அவளின் கடுகடுப்பான பெருமூச்சில் வெளிப்படும்.

தன்னுடைய வெண்ணிற பாம்புத்தோல் ஷூவில் இருந்த சாம்பல் சிதறல் வரைவுகளைப் பார்த்துக் கொண்டிருந்தவன் மெல்லிய குரலில் சொன்னான். "ஹஜியா, இன்னொரு விஷயமும் இருக்கிறது."

"என்ன?"

"அது ஹுரைரா பற்றியது இல்லை, உங்களைப் பற்றி."

"என்னைப் பற்றியா?" தன் இதயம் வேகமாய் துடிப்பதை உணர்ந்தாள்.

அவன் நிமிர்ந்து அவள் கண்களையும் நெளிந்திருக்கும் புருவங்களையும் பார்த்திருந்தால், அவற்றில் தெளிவாக எழுதப்பட்டிருக்கும் குற்ற உணர்வைப் படித்திருக்கலாம்.

"என்னைப் பார்க்க ஒரு மனிதர் வந்திருந்தார்."

அவள் இப்போதும் மூச்சைப் பிடித்துக்கொண்டு நின்றாள்.

"மாலம் ஹரூணா" சந்திக்க வந்தவரின் பெயரை அவன் சொன்னதும் தான் ஒருவழியாக சீராக மூச்சுவிட்டாள் பிந்த்தா.

"உங்களுக்கு ஒன்றுமில்லையே ஹஜியா? என்ன ஆயிற்று உங்களுக்கு?"

"நான் நன்றாக இருக்கிறேன்."

அவளை நோக்கினான் முன்க்கைலா. அதற்குள் அவள் நெற்றியில் எழுதியிருந்த எழுத்துக்கள் வெளியேறி, முகத்தில் சிறிய சுணக்கத்தை மட்டும் விட்டுச் சென்றிருந்தது.

"உங்களுக்கு அவரைத் தெரியும் இல்லையா?"

ஆமாம் என்பது போல அடிக்குரலில் கனைத்தாள்.

"ம்ம், அவர் உங்களைத் திருமணம் செய்து கொள்ள ஆசையாக இருக்கிறார். ஹதீஸாவுடன் நான் பேசினேன். அவளும் நீங்கள் மறுமணம் செய்து கொள்வது நல்லது என்று அபிப்ராயப்படுகிறாள். ஆனால் உங்கள் மனதில் என்ன எண்ணம் என்று எனக்குத் தெரியவில்லை."

மீண்டும் தொண்டையைச் செருமினாள்.

"ஹஜியா, நீங்க ஏதாவது சொல்லணும்."

"எனக்கு மறுமணம் தேவையென்று உன்னிடத்தில் கேட்டேனா?"

"ஆனால் ஹஜியா, பத்து வருடங்கள் என்பது மிக நீண்ட காலம்."

சற்று கோபமாக, "இந்தப் பையனைப் பார்... என்னிடத்திலேயே என் மறுமணத்தைப் பற்றிப் பேசும் அளவுக்கு வாழ்க்கையைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

"ஹப்பா! ஹஜியா, இது ஹதீஸாவோட எண்ணம், உங்களைப் பார்த்துக் கொள்ள ஒரு ஆண் துணை வேண்டுமென்று அவள் நினைக்கிறாள், மாலம் ஹரூணாவை எந்த மனநிலையில் பார்க்கிறீர்களென்றும் எனக்குத் தெரியவில்லை."

"இத்தோடு பேச்சை நிறுத்திக் கொள்ளலாம்" அவளது முகத்தின் கடு கடுப்பு மேலும் அதிகமானது.

அவள் குரலில் தொனித்த முற்றுப்புள்ளியை அவன் அறிந்து கொண்டான். இருவருமே சங்கடமாக உணர்ந்தவாறு நின்றுகொண்டிருக்க, அங்கு நிலவிய அமைதியை ஜெனெரேட்டரின் சத்தம் ஆட்கொண்டது.

"காலையில் ஃபைஸாவுக்கு வலிப்பு வந்ததாக உம்மி சொன்னாள். அது என்ன பிரச்சனை?"

"ரத்தம்... பிந்த்தா தனது ஸ்கார்ஃபை சரி செய்துகொண்டாள். "ஃபைஸாவுக்கு ரத்தம், பச்சை மாமிசம் இரண்டுமே பிரச்சனையாக உள்ளது."

—

அன்றிரவு, மாலம் ஹரூணா பிந்த்தாவின் வீட்டிற்கு வந்தார். கஞ்சி போட்ட மொடமொடப்பான அங்கி அணிந்துகொண்டு, காதோரம் ஒரு ட்ரான்சிஸ்டர் ரேடியாவை அழுத்திப் பிடித்துக்கொண்டிருந்தார். தலையில் அணிந்திருந்த தொப்பி குண்டு பல்பின் மஞ்சள் வெளிச்சம் பட்டுப் பிரகாசித்தது. அந்த ரேடியோவுடன் அவருக்கு நாற்பத்தியிரண்டு வருட வரலாறு உண்டு. அவருடைய அப்பா, 1969ம் வருடம் இறந்தபோது ஹரூணாவுக்கு பதினாறு வயது. மகனுக்கு தன் ஒரே சொத்தான ரேடியோவை விட்டுச் சென்றிருந்தார். கருப்பும், வெள்ளியும் கலந்த வண்ணத்தில், இரட்டை அலைவரிசைக் குமிழ்கள் கொண்டது. அது போன்ற ரேடியோக்கள் இப்போது உற்பத்தியில் இல்லை. அதில் செய்திகள் கேட்கும்போதெல்லாம் அவர் கண்களின் முன்னே உலகம் விரியும். முடிவில்லாத நதி போல கதைகள் காதுகளுக்குள் பாய்ந்து கொண்டே இருக்கும். 70 களில் மக்களின் உள்நாட்டுப் போர் முடிவுற்றது, 76ல் முர்த்தாலா முஹம்மது ஜெனரல்

கோவோன்னை வீழ்த்தியது, சில மாதங்களுக்குப் பின் முர்த்தாலாவே கொல்லப்பட்டது, ஜெனரல் ஒபசாஞ்சோ, 79ல் ஷாகரிக்குப் பதவியை ஒப்படைத்தது, அதன்பின் 99ல் மீண்டும் அவரே பதவிக்கு வந்தது. இது போன்ற பல நிகழ்வுகளை அந்த ரேடியோவில்தான் கேட்டிருக்கிறார். இத்தனை வருடங்களில் அவருடைய இரண்டு மனைவிகளும் கூட ரேடியோவின் அளவுக்கு அவருக்கு நெருக்கமானவர்கள் இல்லை. அதை அவரே அவர்களிடம் எந்த கூறியுள்ளார். உண்மையை மழுப்பலின்றிச் சொல்லும் நேர்மையான மனிதர் ஹரூணா.

விருந்தாளி ஹரூணா அமர்வதற்காக வெளியே வராந்தாவில் பாயை விரித்துப் போட்டாள் ஃபைஸா. அவளுக்கு நன்றி கூறிவிட்டுப் பாயில் அமர்ந்தார் மாலம் ஹரூணா. பிபிசி ஹௌஸா ஒலிபரப்பை மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தவர், வீட்டிற்குள்ளிருந்து வெளியே வர பிந்த்தா நீண்ட நேரம் எடுத்துக் கொண்டதைக் கூடக் கவனிக்கவில்லை. அவள் வெளியே வந்தபோது, அவளிடமிருந்து வீசிய வாசனைத் திரவியத்தின் நறுமணம் தான் அவர் கவனத்தை ஈர்த்தது. அவளோ, பல்பு வெளிச்சத்தில், பல்லி ஒன்று பூச்சியைக் கவ்வக் குறி வைத்துக் கொண்டிருப்பதை பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள். தரையில் தவழும் அளவு மிகப் நீண்ட ஹிஜாப் ஆடையில் தன்னைப் போர்த்தியபடி நின்ற பிந்த்தாவை மாலம் ஹரூணா பார்த்துக்கொண்டிருந்தார்.

பல்லியின் மிக வேகமான நகர்வு அவளுக்கு ஆச்சர்யத்தை அளித்தது. அதன் வாய்க்குள் மறைந்துகொண்டிருந்த பூச்சியின் இறகுகள் கூட அவ்வளவாகக் கண்ணில் படவில்லை. சுவரிலிருந்து பார்வையை நகர்த்தியவள், அந்தப் பாயில் அவரிடமிருந்து எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் தள்ளி அமர்ந்தாள்.

"இனா வுனி, வணக்கம், இன்றைய தினம் எப்படி இருந்தது?"

பதில் வணக்கம் சொன்னவர், அவள் தன்னுடைய சுத்தமாக சவரம் செய்யப் பட்ட முகத்தைப் பார்க்கவேண்டும் என விரும்பினார். காதுகளிலும், மூக்கின் துளைகளிலும் நீட்டிக்கொண்டிருந்த நரைமுடிகளை, உள்ளூர் சவரத் தொழிலாளியிடம் சென்று ஷேவிங் செய்திருந்தார். நல்லவேளையாக இப்போது வெளிச்சம் இருக்கிறதே என்று சந்தோஷப்பட்டுக் கொண்டார். அவருடைய முயற்சிகள் யாவையும் வீண் போகாது என்று எண்ணி மகிழ்ந்தார். ஆனால் பிந்த்தாவின் கவனம் மறுபுறம், மதிலின் மீது அமர்ந்து கொண்டு பளபளக்கும் விழிகளால் அவளையே விழித்துப் பார்த்துக் கொண்டிருந்த பூனையின் மீதே நிலைத்திருந்தது.

"புது ஜெனெரேட்டர் வாங்கி இருக்கிறீர்கள்."

கேள்விகளைக் கூட சாதாரணப் பேச்சுத் தொனியில்தான் எப்போதும் பேசுவார் என்று பிந்த்தா அறிந்து வைத்திருந்தாள்.

"ஆமாம், என் மகன் வாங்கி வந்தான்."

"ஓஒ, அல்லாஜி முன்க்கைலா, அவர் வந்திருந்தாரா."

"ஒன்றும் தெரியாதது போல நடிப்பதைப் பார் " என்று மனதில் நினைத்துக்கொண்ட பிந்த்தா அந்தப் பூனையையே பார்த்துக் கொண்டிருந்தாள். அது தன்னுடைய வெண்ணிற நுனி வாலை ஏதோ புரட்சிக்கொடி போல தன் ஒரு பக்கமாக நிமிர்த்தி வைத்திருந்தது.

"கொஞ்சம் பொறுங்கள்." மாலம் ஹரூணா ரேடியாவைத் தன் காதருகில் மேலும் அழுத்திக் கொண்டார். முன்னாள் பெட்ரோல் அமைச்சரின் பேட்டி ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. அவர், தற்போதைய அதிபர் ஜொனாதனுக்கே மீண்டும் வாக்களியுங்கள் என்று கேட்டுக்கொண்டிருந்தார். வட மாகாணத்தை சேர்ந்தவர் அல்ல என்றாலும் அவர்களுக்கும் நன்மையே செய்வார் என்று கூறிக் கொண்டிருந்தார். பதவியில் இருக்கும்போதே மறைந்த யாராடுவாவின் இடத்தையே அவர் நிரப்பினார். அதனால் மீண்டும் அவருக்கு வாய்ப்பளியுங்கள் என்று வடமாகாண மக்களிடம் விண்ணப்பம் விடுத்தார்.

"இவர்களை எல்லாம் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது" மாலம் ஹரூணா வியந்தார்.

பிந்த்தா அவரிடமிருந்து மேலும் விலகித் தூணின் மீது சாய்ந்து அமர்ந்தாள். மிகவும் கடுமையான குரலில், "எனக்கு ரேடியோ என்றாலே வெறுப்பு, வல்லாஹி" என்றாள்.

"என்னது, உங்களுக்கு ரேடியோ மீது வெறுப்பா! நாட்டு நடப்பு எப்படி இருக்கிறதென்று தெரிந்துகொள்ள வேண்டாமா..."

"என்ன புதிதாக நடந்து விடப் போகிறது? எப்போதும் ஒரே நிலையில் தானே இருக்கிறது? எந்தப் பக்கம் பார்த்தாலும் வெடிகுண்டு வெடிக்கிறது, எங்கும் கொலை, மற்ற இடங்களில் யுத்தமும், பட்டினியும். அதானே?"

"நீங்கள் மிகவும் எதிர்மறையாகப் பேசுகிறீர்கள் ஹஜியா, நல்லதும் நடக்கிறது அல்லவா"

"முதலில் அதைக் கொஞ்சம் நிறுத்துங்கள்."

"என்ன?"

"அந்த ரேடியோ, அதை நிறுத்துங்கள் முதலில்."

"ஹபா, பிந்த்தா..."

"நிறுத்தப் போகிறீர்களா இல்லை நான் போகவா?"

அவளைப் பார்த்துவிட்டு, ஒரு கனத்த பெருமூச்சுடன் ரேடியோவை நிறுத்தினார்.

தொலைவில் ஜெனெரேட்டர் சப்தம் எழுப்பிக்கொண்டே இருந்தது. இப்போது அந்தப் பூனை எழுந்து, முதுகை வளைத்து, மதில் மேல் நளினமாக, நீண்ட அடியெடுத்து வைத்து நடந்தது. பின் அந்த வெம்மையான இரவில், எரியும் பல்பு வெளிச்சத்திற்குக் கீழே உற்சாகமில்லாமல் அமர்ந்திருக்கும் அந்த ஜோடிக்குத் துணையாக சுவரிலேயே அமர்ந்து கொண்டது.

"நீங்க பார்க்கச் சென்றீர்களே, அவனிடத்தில் என்ன சொன்னீர்கள்?"

"யாரை? முன்க்கைலாவையா?"

அவள் பதில் அளிக்கவில்லை.

"நான் உங்களைத் திருமணம் செய்ய விரும்புவதாகச் சொன்னேன்."

"உங்களைத் திருமணம் செய்துகொள்ள அவன் என்னைக் கட்டாயப்படுத்த முடியுமென்று நினைத்தீர்களா?"

"ஹஜியா பிந்த்தா, நீங்கள் சிறு பிள்ளை போலப் பேசுகிறீர்கள். வல்லாஹி! நாம் இருவருக்கிடையே ஒரு உறவு மலர்ந்து கொண்டிருக்கிறது..."

"இதோ பாருங்கள், இதைப் பற்றி இன்னொரு நாள் பேசலாம், என்னால் இப்படி இரவிலெல்லாம் வெளியே இருக்கமுடியாது."

"ஏன்?" அவள் எழுந்தாள். "ஏனென்றால், அந்தப் பூனை என்னையே பார்க்கிறது"

"பூனை, எந்தப் பூனை?"

அதைக்காட்டினாள். அந்தப்பூனையின்கண்கள்பொன்ஆபரணங்களின் அடர்ந்த ஒளி போல மின்னிக்கொண்டிருந்தன. அதை அவர் விரட்டினாலும், நகராமல் அடம்பிடித்து அங்கேயே அமர்ந்துகொண்டு முறைத்தது. தன் செருப்பை எடுத்து அதை நோக்கி வீசுவது போலப் பாவனை செய்தார். பூனை அப்போதும் முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தது. கடைசியில் அது எழுந்து நின்றபோது, பிறகு என்ன செய்யப்போகிறது என்று பார்க்க விரும்பவில்லை பிந்த்தா. வீட்டிற்குள் ஓடியபோது, அவளது ஹிஜாபின் மடிப்புகள் காற்றிலாடும் திரைச்சீலைகள் போல படபடவென்று அடித்துக் கொண்டன.

10

"கருப்பு ஆட்டை இருள் கவியும் முன்பே தேடத் துவங்குதல் நலம்."

மடியில் கிடந்த மிருதுவான பத்திக் பிரிண்ட் துணியை தடவிப் பார்த்தாள் பிந்த்தா.வெளிர் மஞ்சள் பூச்சுடன் நுணுக்கமாக அச்சிடப் பட்டிருந்த குதிரைலாட வடிவங்கள் நீலவண்ணப் பின்னணியில் சிதறி இருந்தது. சற்று நேரம் அதன் அழகில் லயித்திருந்தாள். பின் அதை எடுத்து முகத்தில் புதைத்து நுகர்ந்தவள் புத்தாடையின் வாசத்தைத் தன் நாசியில் நிரப்பிக் கொண்டாள்.

"இது மிக அழகாக இருக்கிறது. ஆனால் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. துணிக்குப் பின்னாலிருந்து அவள் குரல் மெலிதாக ஒலித்தது."

தலையணையிலிருந்து தலையை உயர்த்தினான் ரெஸா. "ஏன்?"

"என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது." துணியை மீண்டும் மடியில் இருத்திக்கொண்டாள். அந்தப் பரிசைக் கொடுக்கும்போதே மறுத்திருக்க வேண்டுமென்று நினைத்தாள். ஆனால் அப்போது அவள் மனதையும் உடலையும் இச்சை ஆட்கொண்டிருந்தது. அந்த இச்சையின் கையொப்பங்கள் படுக்கையில் சித்திரமாக வரையப்பட்டிருக்கின்றன. அகத்தில் உணரும் மெல்லிய தணல் போன்ற வெம்மை தன் பாவத்திலிருந்து வெளிப்படுபவை எனப் புரிந்துகொண்டாள்.

"உனக்குப் பிடிக்கவில்லையா?"

"இல்லையில்லை, மிகவும் அழகாக இருக்கிறது. ஆனால் ஏனோ இது தவறாகத் தெரிகிறது."

"நான் உனக்காகத்தான் வாங்கிக்கொண்டு வந்தேன், புரிகிறதா?"

உனக்காக மட்டுமே.”

இறைஞ்சும் அவனுடைய பழுப்பு நிறக் கண்கள் அவளைப் பல ஆண்டுகள் பின்னோக்கிக் கடத்திச்சென்றன. முதல்முறையாக மகனின் சிறிய பழுப்பு நிறக் கண்களை நேருக்கு நேர் பார்த்து, பொங்கிப் பெருகிய தாய்மை உணர்வில் தான் மயங்கி நின்றதை அவளுக்கு நினைவூட்டின. ஒவ்வொரு முறையும் ரெஸாவைப் பார்க்கும் போதெல்லாம் மகன் யாரூவின் நினைவு வருவது அவளைத் தொந்தரவு செய்தது. ஆனால் ரெஸா என்பவன் யாரூ இல்லை. இவன் அவள் காதலன். அவள் பெருமூச்சு விட்டாள். முதல் முறையாக,ரெஸாவை காதலன் என்னும் குறிப்பிட்ட வார்த்தைக்குள் அடைக்கிறாள் – காதலன்.

“புரிந்துகொள், நீ இதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன்.” படுக்கையிலிருந்து எழுந்து அமர்ந்தான்.

அவனுடைய கட்டான மார்பையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருக் கிறோம் என அறிந்து தன் பார்வையை விலக்கிக் கொண்டாள் பிந்த்தா. தான் பார்ப்பதை அவனும் கவனித்து விட்டான் என்று அறிந்து முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

“சரி ஹஸன், இந்த ஒரு முறை. ஆனால் இனிமேல் எனக்குப் பரிசுகள் ஏதும் கொண்டு வர வேண்டாம்.”

“நான் இதைப் பணம் கொடுத்து வாங்கி வந்தேன், புரியுதா, வாங்கினேன், திருடிக்கொண்டு வரவில்லை”

“ஓ, இல்லை, நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை, என்ன சொல்ல வருகிறேனென்றால், உன் அம்மாவுக்கும் இதுபோல ஏதாவது தேவைகள் இருக்கலாம்...”

“எனக்கு அம்மா இல்லை.”

அதிர்ச்சியில் விரிந்த அவள் கண்களும், இறுக்கம் நிறைந்த அவன் கண்களும் சந்தித்துக்கொண்டன. படுக்கையிலிருந்து எழுந்து ஆங்காங்கே சிதறிக் கிடந்த ஆடைகளை எடுத்து அணியத் தொடங்கினாள் பிந்த்தா. ஸ்கார்ஃபைத் தேடினாள். அது, அவன் உடலுக்கு அடியில், அவனது வியர்வையில் நனைந்து கிடந்தது. அவனிடமிருந்து ஸ்கார்ஃபை வாங்கி தலையில் கட்டிக்கொண்டாள்.”

“உன் அம்மாவைப்பற்றிப் பேச விருப்பமில்லையென்றால் பரவாயில்லை.”

கட்டிலின் விளிம்பில் அமர்ந்து கொண்டாள்.

"என்னால் புரிந்துகொள்ள முடிகிறது."

தலையசைத்துக்கொண்டே வந்து அவள் கைகளைப் பற்றிக் கொண்டான். அவை கதகதப்புடன் இருந்தன.

"உன்னுடைய கைகள் மிருதுவாக இருக்கின்றன."

புன்னகைத்தவாறே தன் கரங்களில் பிணைந்திருந்த அவன் கரங்களைப் பார்த்தாள் பிந்த்தா. பின், சட்டென்று எழுந்தவன், சுற்றும் முற்றும் பார்த்து அவனுடைய ஆடைகளைத் தேடத் துவங்கினான்.

"அன்றைக்கு நடந்தது போல இன்னொரு முறை நடக்கக்கூடாது, புரிந்ததா?"

"ஓ, இப்போதெல்லாம் நான் கேட்டைப் பூட்டி வைத்து விடுகிறேன்."

கண்ணாடி முன்னால் நின்று தன் தலையிலிருக்கும் எறும்புப் புற்று முடிக்கொத்தைத் தட்டிச் சரி செய்துகொண்டான். அப்படியும் இப்படியும் முகத்தைச் சாய்த்துப் பார்த்தவன் பின் தனது தோற்றத்தில் திருப்தியுற்றவனாக அவளை நோக்கித் திரும்பினான். அவள் முகத்தில் ததும்பிய புன்னகை அவனுக்கு மகிழ்ச்சி அளித்தது. தன் பக்கத்திலிருந்த இடத்தைச் சுட்டி அவள் சைகை செய்ததும் அங்கு சென்று அமர்ந்தான்.

"உன் மனதில் ஏதோ இருக்கிறது, அப்படித்தானே? "

சட்டைப் பையிலிருந்து ஒரு கட்டு நோட்டுகளை உருவி, தயக்கத்துடன் அவள் முன்னால் வைத்தான். "நீ எனக்காக இதைப் பத்திரமா வைத்திருக்க வேண்டும்."

"ஹஸன்."

"சில நாட்களுக்கு மட்டுமே, புரிகிறதா? என் பணத்தை இருப்பு வைக்க ஒரு பாதுகாப்பான இடம் தேவை."

"இது பாதுகாப்பான இடம் இல்லை, வீட்டில் பணம் வைத்திருப்பது நல்லதல்ல."

"சான்சிரோவும் பாதுகாப்பில்லை, அந்த வேலையற்ற போலீஸ்காரன் பிடுங்கி எடுக்கிறான், அடுத்து என்ன செய்யப் போகிறான் என்றே தெரியவில்லை, அதனால்தான் வேறு எங்காவது கொண்டு போய் பணத்தை வைக்கவேண்டியிருக்கிறது. ஏதாவது தேவை ஏற்பட்டால் என்ன செய்வது?"

"நீ பேங்கில் கணக்கு ஆரம்பிக்க வெண்டும்"

"உண்மையாகவா?"

"ஆமாம் ஹஸன், உனக்கு விருப்பமில்லையா?"

"என்னுடைய பெயரை நீ சொல்லும் போது வினோதமாக இருக்கிறது, யாருமே இப்போது அந்தப் பெயரைச் சொல்லி அழைப்பது இல்லை." அவன் சிரித்தான். பல ஆண்டுகளுக்கு முன் கடைசி முறையாக அவன் அன்னை, தங்கப்பற்கள் பளபளக்கத் தன்னைப் பெயர் சொல்லி அழைத்ததை நினைத்துப் பார்த்தான். பிந்த்தாவிடமிருந்து முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

"உனக்கு விருப்பமில்லையென்றால் பரவாயில்லை."

தலையாட்டிக் கொண்டே, "உனக்குப் புரிகிறதா?..." சட்டென்று ஒரு வினாடி பேச்சை நிறுத்தி தொண்டையை சரி செய்துகொண்டான்.

"நீ, நீ ரொம்ப வித்தியாசமானவள், உன்னை ரொம்ப மதிக்கிறேன்"

அவள் கையில் பணத்தைத் திணித்தபோது அதை ஏற்றுக்கொண்டாள். படுக்கையில் அப்படியே அமர்ந்திருந்தாள். அவள் உள்மனதில் ஏதோ கரைவது போல உணர்ந்தாள்.

—

டிரெஸ்ஸிங் டேபிளின் கீழ் இழுப்பறையைத் திறந்து அதிலிருந்த ஃபோட்டோ ஆல்பத்தை எடுத்தாள். அதன் மீது படிந்திருந்த தூசியை மெதுவாகத் தட்டி, அதை மார்போடு சேர்த்து அணைத்துக்கொண்டாள். நினைவுகள் தூசி தட்டப்பட்டதில், கடந்து சென்றுவிட்ட காலத்தின் வாசத்தை உணர்ந்தாள். கண்ணீரின் உவர்ப்பைச் சுவைத்தபடி அமர்ந்திருந்த அவளால், அந்தப் புன்னகை, குறும்புக் கண்ணசைப்புகள், நித்தம் நிகழும் வாழ்க்கையின் சிறு சிறு சம்பவத்துணுக்குகள், பொக்கிஷமாகிப் போன நினைவுக் குவியல்கள் யாவற்றையும் கண்ணெதிரே காட்சியாய்க் காண முடிந்தது.

படுக்கையில் அமர்ந்து, ஆல்பத்தின் பக்கங்களை புரட்டத் தொடங்கினாள். இடையில் ஒரு பக்கத்தில், அந்தப் படம் இருந்தது. 1987ம் வருடம் எடுத்த படம். சிதிலமடைந்த சுவரின் பின்னணியில், நால்வரும் வரிசையாக நின்றுகொண்டு, அவர்கள் முகத்தைப் பார்க்க அவர்களே பயந்து போனவர்கள் போலக் கேமராவின் லென்ஸை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் படத்தை எடுத்த யொரோபா பெண்மணி, வீடு வீடாகச் சென்று படமெடுக்கும் உருவங்களின் கலைஞர், ஒளியை மையாக நிரப்பி நினைவுகளைக் கிறுக்கியவர்.

தந்தை ஈத் பண்டிகைக்குப் பரிசளித்திருந்த மலிவான பாசிமணியை ஒரு கையில் பிடித்து உருட்டிக்கொண்டு, மறுகையின் கட்டை விரலை வாயில் வைத்துச் சப்பிக்கொண்டும் ஹதீஸா நின்றிருந்தாள். பளபளக்கும் மலிவான ஒப்பனையுடன் முன்க்கைலாவுக்கு அடுத்து நின்றிருந்தாள் ஹுரைரா. அடர்த்தியான சிவப்பு லிப்ஸ்டிக்கை உதட்டில் அப்பி, நெற்றியில் மூன்று புள்ளிகள் மைப்பென்சிலால் வைத்திருந்தாள். தைரியமாக லென்ஸை எதிர்நோக்கும் பாவனையில் முன்னால் குனிந்து விழித்துக் கொண்டு நின்றான் முன்க்கைலா. அவனுடைய தோள்களுக்குப் பின்னே நின்ற அவள் செல்ல மகன் யாரூ, வாழ்க்கையை நோக்கி வினாத் தொடுக்கும் அகன்ற விழிகளுடன், கைகள் இரண்டையும் அசட்டையாகத் தொங்க விட்டுக்கொண்டு, அந்த மொத்தப் படப்பிடிப்பையும் தான் கவர்ந்து கொண்டவனாகத் தோற்றமளித்தான்.

கிபியாவின் சாதுவான ஃபுலானி பெண்மணியான தன் தாயின் சாயலில் இருக்கும் அவன் முகத்தை தன் விரலால் தடவினாள் பிந்த்தா. அந்த நாள்... அந்தப் புகைப்படம் எடுத்த மறுதினம், அவளை அணுகி கஃபொனால் மாத்திரைகள் வேண்டுமென்று கேட்டான். முகத்தைத் திருப்பிக் கொண்டாள் பிந்த்தா.

"எதற்கு இங்கே நின்றுகொண்டு கேள்வி கேட்கிறாய், நீயே போய் மேசை இழுப்பறையிலிருந்து எடுத்துக்கொள், போ."

மாத்திரையை வாயில் கவிழ்த்துக்கொண்ட பின், வாசல் கதவருகில் அமர்ந்து, வெட்டவெளியை வெறித்துப் பார்க்க ஆரம்பித்தான் யாரூ. வேறோர் இடத்தில் இருக்க விரும்புகிறவன் போல, தன் மனதெல்லாம் அன்பால் நிறையச் செய்யும் ஒரு இடத்தில் இருக்க வேண்டுபவனைப் போலப் பார்த்துக் கொண்டிருந்தான். காம்பவுண்டின் ஓரமாக ஹதீஸாவும், ஹுரைராவும் பிளாஸ்டிக் பொம்மை வைத்து பொம்மை வீடு விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

குளியலறையிலிருந்து வெளியே வந்த பிந்த்தா, அவன் கண்ணிலிருந்த வெறுமையைக் கவனித்தாள். குடும்பத்தின் மூத்த பெண்ணாகப் பிறந்த அவளும் இதேபோன்ற மனநிலையை அனுபவித்திருக்கிறாள். ஒரு ஃபுலானி பெண்மணி அவளைத் தொடமாட்டாளா, அவள் பெயரைச் சொல்லி அழைக்கமாட்டாளா, அன்பின் சிறு குறிப்புணர்த்த மாட்டாளா என்றெல்லாம் ஏக்கத்துடன் நினைத்திருக்கிறாள். அவள் தன் தாயிடம் எதையெல்லாம் அடைய ஆசைப்பட்டாளோ அதையெல்லாம் தன் மூத்த மகனுக்குத் தர விழைந்தாள். அவன் அருகில் சென்று அவனைத் தொட்டு, காய்ச்சலை உணர்ந்து, அவன் பெயரைச் சொல்லி மெல்ல

அழைத்து, கவலைப்படாதே, எல்லாம் சரியாகி விடும் கண்ணே என்று கூற ஆசைப்பட்டாள். அதைத்தான் எப்போதும் செய்ய விரும்பினாள். ஆனால் அவளால் அதைச் செய்யமுடியாது. அதனால் அவனை மிரட்டும் தொனியில் கேட்டாள்.

"இங்கே அமர்ந்து கொண்டு என்ன செய்கிறாய்?"

பதில் எதுவும் சொல்லாமல் அங்கிருந்து நகர்ந்து வீட்டின் முன்னாலிருந்த திண்ணையில் அமர்ந்து தெருவை வெறிக்க ஆரம்பித்தான். அப்போது இறுக்கமான கால் சட்டை அணிந்துகொண்டு இளம்பெண் ஒருத்தி தெருவில் நடந்து வந்து கொண்டிருந்ததை அவனும் கவனித்தான். அந்தப் பெண் மைக்கேல் ஜாக்சன் ஸ்டைலில் தன் கூந்தலை சுருட்டை செய்திருந்தாள். அவள் இடுப்பை ஆட்டி நடக்கும் போதெல்லாம் அது முதுகில் அலையலையாய்ப் புரண்டது. அப்போதுதான் சிறுவர்களின் கேலியான இசைப்பாட்டு ஆரம்பித்தது.

"பேண்ட் போட்டுட்டுப் போகுது குரங்கு, பிரி தா வாண்டோ..." என்று ஹௌஸா பாட்டைப் பாடிக்கொண்டே தெருப் பையன்கள் அவள் பின்னால் ஓடினார்கள். சிலர் அவள் முன்னால் ஓடி, டிரவுசரை அவிழ்த்து தங்கள் பின்புறத்தை ஆட்டிக்காட்டினார்கள். அந்த கேலியும் கூச்சலும், மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த பல பையன்களை ஈர்க்க, யாரூவும் தன்னிச்சையாகப் போய் அவர்களுடன் கலந்துகொண்டான். வீட்டுக்குள்ளிருந்த பர்தா அணிந்த பெண்கள் வாசலுக்கு வந்து அவர்கள் மகன்களை அழைத்துச் செல்ல முயன்றனர். ஆனால் அவர்கள் குரல், அங்கு எழுந்த சப்தச் சூறாவளியில் அமுங்கிப்போனது.

சற்று நேரத்திற்குப் பிறகு அந்தப் பெண் மீது தாக்குதல் தொடங்கியது.

ஈரமான சேற்று உருண்டைகள் அவள் அணிந்திருந்த இறுக்கமான கால்சட்டையின் மீது ஏவுகணைகள் போல வீசப்பட்டன. அழுக்கின் கறைகள் கறுப்பு நைலான் துணியில் தெளிவாகத் தெரிந்தன. அழுது கொண்டே, குனிந்தும் வளைந்தும், தன் மீது ஏவப்படும் தாக்குதல்களைக் கையால் தடுத்துக்கொண்டிருந்தாள் அந்தப் பெண். அந்தக் கூச்சல் பெரும் இரைச்சலுடன் உச்சத்தைத் தொட்டது. சில பெண்கள் வெளியே வந்து அவர்களைத் தடுக்க முற்பட்டனர், ஆனால் அனைத்து சிறுவர்களும் கும்பலாகக் கூடி இருந்ததால் தடுக்கமுடியவில்லை...

அந்தக் களியாட்டத்திலும், கூச்சலிலும், ஜூபைரூ, கூட்டத்தின் உள்ளே புகுந்து தன் மகனை இழுத்துச் செல்லும்வரை யாரும் கவனிக்கவில்லை. உடனே கலைந்த தேனீக்களைப் போல அனைத்துச் சிறுவர்களும், பக்கத்து வீட்டிற்குத் தப்பித்துச் சென்றும் சேறு நிறைந்த தெருக்களிலும் ஓடி மாயமாக

மறைந்தனர்.

யாரூவின் கையைப் பிடித்துக்கொண்டு வீட்டின் உள்ளே இழுத்து வந்தார் ஜுபைரு. காம்பவுண்டுக்குள் உரலைக் கழுவிச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்த பிந்த்தாவை கடந்து சென்றார். உரலைத் தலைகீழாகத் திருப்பி அதிலிருந்த நீர் வடிந்தவுடன் ஒரு துணியால் ஈரத்தைத் துடைத்து சுத்தம் செய்தாள் பிந்த்தா. பாத்திரத்திலிருந்த கினியா மக்காச்சோளத் தானியங்களை எடுத்து உரலில் போட்டவள், உள்ளே அடி வெளுக்கும் சத்தம் கேட்டதும் அரைக்கத் தொடங்கினாள். மகனின் அலறல் பெரிதாகக் கேட்கும் போதெல்லாம் உரலை வேகமாகச் சுற்றிக் கடுமையாக அரைத்தாள். குழவிக் கல் கனத்தில் அதிர்ந்தது, முன்க்கைலாவும், ஹுரைராவும் விளையாட்டைத் துறந்து கதவோரம் நின்று அண்ணன் அலறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஹதீஸா அம்மாவின் அங்கிக்குள் தன்ன நுழைத்துக் கட்டிக்கொண்டு, அப்பாவைத் தடுக்கும்படி கெஞ்சிக் கொண்டிருந்தாள். ஆனால், பிந்த்தா உரலில் அரைப்பதை மட்டும் நிறுத்தவே இல்லை.

அவர்கள் பக்கத்து வீட்டம்மா நிகோஸிதான் பிந்த்தாவின் அறைக்குள் ஓடி வந்து பையனை மீட்டு அவளுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். அந்தக் குறுகிய இடைவெளியில், படபடக்கும் திரைச்சீலைகளின் இடையே, யாரூவின் முதுகிலும், கால்களிலும் ரணமாக இருந்த பச்சைப் புண்களைப் பார்த்தாள். அவற்றிலிருந்து ரத்தம் சொட்டிக்கொண்டிருந்தது. முகத்தைத் திருப்பிக்கொண்டே உரலில் அரைப்பதைத் தொடர்ந்தாள். அவளறியாமல் அவள் கண்களில் இருந்து நீர் தாரைதாரையாய் வழிந்து கொண்டிருந்தது. கடைசியில், குழவிக்கல்லைக் கீழே வைத்தாள்.

"ஹதீஸா, இங்கே வா, உன் கண்ணில் என்ன விழுந்திருக்கிறதென்று பார்க்கிறேன்"

குழந்தையின் முன் மண்டியிட்டு அமர்ந்து, பயத்தில் வெளிறிப் போயிருந்த அவள் கண்களைக் கூர்ந்து கவனித்தாள். பின் அவளைத் தன் பக்கமாக இழுத்து, நெஞ்சோடு சேர்த்து இறுக அணைத்துக்கொண்டாள் பிந்த்தா.

—

சோஃபாவில் அமர்ந்து ரேடியோவின் குமிழைத் திருகிக் கொண்டிருந்தான் ஜுபைரு. அவன் முன்னே கால்களை அகட்டி பிளாஸ்டிக் கார்ப்பெட்டின் மீது அமர்ந்துகொண்டு, ஹதீஸாவும், ஹுரைராவும் மூலையிலிருந்த 14" இன்ச் திரையில் கார்ட்டூன் பார்த்துக்

கொண்டிருந்தார்கள். ஜுபைரூ, "அமெரிக்காவின் குரல், ஹௌஸா." கேட்டுக் கொண்டிருந்ததால், டிவியின் சத்தம் முடக்கப்பட்டிருந்தது.

ஜுபைரூ கோபத்தில் கத்தினான். "நான் சொல்கிறேன் கேட்டுக்கொள், இந்த நாடு உருப்படாமல் போகப்போகிறது."

தொழுகையிலிருந்த பிந்த்தா, இறைவனுக்கு தன் விண்ணப்பத்தை அளித்துவிட்டு, முகத்தைக் கைகளால் தேய்த்துக் கொண்டிருந்தாள். சுவரில் சாய்ந்துகொண்டு, தஸ்பீ மீண்டும் ஒருமுறை உச்சரிக்கத்தொடங்கினாள்.

"கற்பனையே செய்யமுடியவில்லை, ஜுபைரூ மறுபடியும் புலம்பினான். "நம்மையெல்லாம் IMF க்கு விற்கிறார்கள். SAP,SAP... எங்கே பார்த்தாலும் அதேதான். இதென்ன பைத்தியகாரத்தனமான அரசியல் கட்டமைப்பு ஏற்பாடு? இது போலப் பாழாய் போன தலைவர்கள்தான் நம் நாட்டில் இருக்கிறார்கள்."

ஜெனெரல் பபாங்கிடாவையும், புதிய அரசியலமைப்புத் திட்டங் களையும், ஜனநாயக ஆட்சி மாற்றத்திற்கான அவரது புதிய செயல் திட்டங் களையும் பற்றி பேசிக்கொண்டே இருந்தான். மேலும், மோசமான சாலைகள், பயிர் உரங்களின் விலையேற்றம், மழை பொய்த்துப்போனால் வறண்டு போய்விடும் கிணறுகள், நீர் வராத குழாய்கள் யாவற்றைப் பற்றியும் பேசிக்கொண்டே இருந்தான். ஆனால், மற்றவர்கள் யாரும் எதுவும் குறுக்கே பேசவில்லை.

தன் சட்டைப் பாக்கெட்டைத் தட்டிப்பார்த்தவனுக்கு, பிளாஸ்டிக் பேப்பரின் சர சரவென்ற சப்தம் கேட்டது. கையை விட்டுப்பார்த்தான்.

"அட! ஹதீஸா, வா, இந்த சாக்லேட்டை வாங்கிக் கொள்."

அம்மாவையும், அக்காவையும் மாறி மாறிப் பார்த்த ஹதீஸா , கைகள் இரண்டையும் தொடைகளின் இடுக்கில் வைத்துக்கொண்டாள்.

"வா வா, சாக்லேட் வாங்கிக் கொள்."

ஹதீஸா வரமாட்டாள் என்று அறிந்தபின் ஜுபைரூ எழுந்துபோய் அவள் தோளைத் தட்டினான். அவன் தொட்டவுடன் அவள் நடுநடுங்கிப் போனாள். சற்றே யோசித்தவன், பின் எந்த வித உணர்வுகளுமின்றி அந்த மிட்டாயை அவள் மடியில் போட்டுவிட்டு நகர்ந்தான். கதவருகே இருந்த பழைய கந்தலை எடுத்து செருப்பைத் துடைத்து அணிந்துகொண்டவன் வெளியே போவதாக அறிவித்துவிட்டுச் சென்றான். படபடவென்று அடித்துக்கொண்ட திரைச்சீலைகள் அவன் போய்விட்டான் என்பதை உறுதிப்படுத்தியது.

அன்றிரவு, ஜுபைருவின் அருகில் படுத்திருந்த பிந்த்தா, அவனுடைய குறட்டைச் சத்தத்தால் எரிச்சலடைந்தாள். அவனுடைய சுவாசத்திற்கு அப்பால், வெளியே வீசிக்கொண்டிருக்கும் காற்றின் ஊதல் ஓசையும், எங்கோ ஒரு தனித்த நாய் குரைக்கும் சப்தமும் கேட்டன. கட்டிலில் இருந்து இறங்கி, அறையைக் கடந்து, குழந்தைகள் படுத்துறங்கிக் கொண்டிருக்கும் வரவேற்பறையின் கதவைத் திறந்தாள். பெண்கள் இருவரும் மெத்தையின் ஓரமாய் படுத்திருந்தனர். அவர்கள் மார்பு சீராக மேலிறங்கிக் கொண் டிருந்தது. அறையின் மறுமூலையில் முன்க்கைலா இன்னொரு மெத்தை மேல் பரவிக்கிடந்தான். அவனுக்கு அருகில் குப்புறப்படுத்தபடி இருந்தான் யாரூ. அவன் உடல் இன்னும் நடுங்கிக்கொண்டிருந்தது. ஹரிக்கேன் விளக்கின் மங்கலான வெளிச்சத்திலும் அவனுடைய காயங்கள் மம்மா நிகோஸி அவனுக்கு இதமளிக்கத் தடவிவிட்டிருந்த தைலத்தின் பள பளப்பில் மின்னிக்கொண்டிருந்தன. அவனருகே குனிந்தவள் காய்ச்சல் இருப்பதை உணர்ந்தாள். அவன் கண்களைத் திறந்து அவளைப் பார்த்த போது, அதிலிருந்த கேள்விகள் அவளை நிலைகுலைய வைத்தன. எழுந்து சென்று, ஒரு கோப்பை நீரும், கஃபெனால் மாத்திரையும் கொண்டு வந்தாள். அவனை எழுப்பி அமர்த்தி, மாத்திரையை விழுங்க வைத்தாள். அதன்பின் ,இதுவரை அவள் செய்யத் துணியாத ஒரு காரியத்தை அன்று செய்தாள்.

"முர்த்தாலா" மெல்லிய குரலில் அவன் பெயரைச் சொல்லி விளித்தாள். அவனது இறுக்கமான தோள்களின் மீது ஆதுரமாகக் கைகளைப்போட்டு, நடுங்கிக்கொண்டிருக்கும் அவனைத் தன் புறமாக இழுத்து அரவணைத்துக் கொண்டாள். "என் மகனே."

அவனுடைய உடலின் இறுக்கம் மெல்ல மெல்ல உருகிக் கரைவதை அவள் உணர்ந்தாள். அவள் மீது அவன் சாய்ந்துகொள்ள, இருவரும் ஓசையின்றி அழுதார்கள். அன்னையின் அன்பைப்பற்றி எந்த நினைவுகளுமே இல்லாதவள் பிந்த்தா. ஆனால் அது போலன்றி, எதிர் காலத்தில், எப்போதாவது ஒரு நாள், அம்மா தன் பெயரைச் சொல்லி ஒரு முறையாவது அழைத்தாள் என்று மகன் யாரூ நினைவு கொள்வான் என்று நம்பினாள் பிந்த்தா.

அதன்பின், பல வருடங்களுக்கப்பால், மீண்டும் அவன் பெயரைச் சொல்லி அழைக்கத் துணிந்த தினத்தில், யாரூ உயிரற்ற பிணமாக அவள் கைகளில் கிடந்தான். அவன் உடலிலிருந்து வழிந்த குருதி தரையை நனைத்துக்கொண்டிருந்தது.

—

சிறுமி உம்மி ஓடி வந்து ஃபைஸாவின் காதுகளில் ஏதோ கிசுகிசுத்தாள். வாசித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடி வைத்துவிட்டு அறைக்கு வெளியே விரைந்தாள் ஃபைஸா. அவளைத் தொடர்ந்தாள் உம்மி. அறைக்குள் வந்து பார்த்தபோது, படுக்கையெங்கும் பழுப்பான புகைப்படங்களும் பக்கத்தில் ஒரு திறந்த ஆல்பமும், பிந்த்தா ஒரு புகைப்படத்தைக் கையில் வைத்திருப்பதையும் பார்த்தனர். மிகவும் கவனமாக பிந்த்தாவின் தோளுக்கு அப்பால் எட்டிப்பார்த்தாள் ஃபைஸா. அவள் கையிலிருந்த புகைப் படத்தை பார்த்தவள், பிந்த்தாவின் விரல் அந்த இளைஞனின் முகத்தை மறைத்திருந்தாலும் அது அவள் ஒன்றுவிட்ட சகோதரன் யாரு என்பதை அறிந்துகொண்டாள் ஃபைஸா.

"ஹஜியா, அழகிறீர்களா?"

கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அழுகையை அடக்கினாள் பிந்த்தா, "ஒன்றுமில்லை, நான் நன்றாகத்தான் இருக்கிறேன்"

ஃபைஸா அவள்முன் அமர்ந்து அவள் தோளை அணைத்துக் கொண்டாள். அவளை உதறிவிட்டு, முகத்தின்மீது கைகளைப் பொத்திக் கொண்டு குளியலறைக்கு விரைந்தாள் பிந்த்தா

—

11

"கழுதைப் புலியால் தன் உடல் வீச்சத்தை ஒரு போதும் நுகர இயலாது"

கள்ளத்தனமாக தன் சிறகுகளை வளர்த்துக்கொண்ட பிந்த்தா, அவள் எதிர்பார்த்தவாறு உயரப் பறக்கும் கழுகாக மாறாமல், ஆந்தைபோல இருளைத் தனதாக்கிக் கொண்டாள். அந்த இருளில்தான் அவளும் ரெஸாவும் இணைந்திருந்தார்கள். ஆனால் பகலில், அச்சத்தின் சிறையிலடைந்து கொண்டு பாவங்களின் துர்வாடை தன்னைப் போர்த்தியிருப்பதைப் போல உணர்ந்தாள்.

அன்று மார்க்கெட்டுக்குப் போகலாம் என்று முடிவெடுத்தாள். வாசனைத் திரவியங்களில் தேகத்தை மூழ்கடித்துக் கொண்டவள், ஆழ்ந்த மூச்சிழுத்துத் தன்னை ஆசுவாசப்படுத்தியவாறு கேட்டைத் தாண்டி வெளியேறினாள். யாராவது அவளைக் கடக்கும்போதெல்லாம் தலையைக் குனிந்து மூச்சை இறுகப் பிடித்துக்கொண்டாள். அவர்கள் தன்னைப் பார்க்கிறார்களா என்று தோள்களுக்கு மேலாக ஓரக்கண்ணால் பார்த்தாள். அப்படியெல்லாம் இல்லையென்று தெரிந்ததும், நிம்மதியாக நடந்தாள்.

கீரை வாங்கிக்கொண்டு நடந்து வந்த மல்லமா உம்மாவை நேருக்கு நேர் சந்திக்கவேண்டியதாகப் போயிற்று.

"மல்லமா உம்மா, எப்படி இருக்கிறீர்கள்? கின் வினி லஃபியா?"

"நான் நலமாக இருக்கிறேன். லஃஃபியா லு...எங்கே போகிறாய்?"

"மார்க்கெட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். கொஞ்சம் சாமான்கள் வாங்கவேண்டும்."

"கடைக்குப் போகும் வேலையெல்லாம் ஃபைஸாதான் பார்த்துக்

கொள்வாள் என்று நினைத்தேன்."

"அவளுக்கு மார்க்கெட்டில் சிரமம் ஏற்படுவதை நான் விரும்பவில்லை, கசாப்புக் கடைக்குப் போய் இறைச்சி வாங்கவேண்டும், ஃபைஸாவுக்கு அது ஒத்துக் கொள்ளாது."

"ஓஓ, உண்மையிலேயே கஷ்டம்தான், நீ அவளை உஸ்தாஜ் நூரா விடம் பிரார்த்தனைக்கு அழைத்துப் போகலாமே."

"அது உதவியாக இருக்குமென்று நினைக்கிறீர்களா"? மல்லமா உம்மா தன்னை விட்டு சில அடிகள் தள்ளியே நிற்கும்படி பார்த்துக் கொண்டாள் பிந்த்தா.

"ம்ம், முயற்சி செய்து பார்க்கலாம், அவள் பிரச்சினை நாளுக்கு நாள் மோசமாவது போலத் தெரிகிறது."

"அதற்கு ஏதாவது செய்கிறேன், இப்போது நான் கிளம்பவேண்டும்", பிந்த்தா பரபரத்தாள்.

"ஹஜியா பிந்த்தா, ஒரு நிமிஷம் நில்."

மூச்சைப் பிடித்துக்கொண்டு நின்றாள் பிந்த்தா...

"மதரஸாவில் உன்னை எப்போது பார்க்கலாம்?"

"நிச்சயமாக சில நாட்களில் வந்துவிடுவேன், இன்ஷா அல்லாஹ்."

"பார்க்கலாம், நானும் அதை நம்புகிறேன்."

மார்க்கெட் இருக்கும் திசையிலிருந்து மக்கள் திரளாக வந்துகொண் டிருந்தனர். அவர்கள் வரும் பாதைக்கு எதிரே சென்றுகொண்டிருந்த பிந்த்தா, அனைவரும் தன்னை நோக்கியே வருவதாக நினைத்தாள். சகதிகள் நிறைந்த சாலையின் நடுவே, தேங்கிக்கிடந்த மழைநீரில் பலர் மோட்டார் சைக்கிள்களைச் செலுத்தியிருந்ததால் அது சேற்றுக்குட்டையாக மாறியிருந்தது. சேற்றைத் தாண்டிக் குதித்துச் சென்றாள் பிந்த்தா. அங்கு ஒரு ஈபோ தம்பதிகள் நடத்தும் மளிகைக்கடையின் முன் இருந்த கூட்டத்தில் அவளும் ஐக்கியமாகி விட்டாள். சிறிய பறவையைப் போலிருக்கும் அந்த ஈபோ பெண் கடையினுள் அமர்ந்து உக்வு, கீரை, கறி இலைகளுக்கான ஆர்டர்களை எடுத்துக்கொண்டிருந்தாள். வெளியே அவள் கணவன், வாடிக்கையாளர்களுக்காக மீன்களை அறுத்துத் துண்டுகளாக்கி பிளாஸ்டிக் பைகளில் போட்டுக்கொண்டிருந்தான், பிந்த்தாவைப் பார்த்த்தும் அந்தப் பெண்ணின் முகம் பளிச்சிட்டது.

"ஹஜியா, பார்த்து எத்தனை நாளாகி விட்டது? என்ன வேண்டும்

உங்களுக்கு?"

அங்கு தக்காளியும், கடல் நண்டுகளும் வாங்கிக்கொண்டு நகர்ந்தாள் பிந்த்தா. பலரபியின் கடையில் தொங்கிய அணிகலன்கள் கண்ணைக் கவர்ந்தன, அங்கு சென்று உம்மிக்காக மலிவான விலையில் சில காதணிகள் வாங்கினாள். சலீசுவின் கடையில் குளிர்பானங்கள் வாங்கிக் கொண்டிருக்கும் போது, இந்த மார்க்கெட்டின் ஆரவாரத்தையும், சலசலவென்ற பேச்சு வார்த்தைகளையும் எவ்வளவு இழந்திருக்கிறோம் என்று நினைத்துப் பார்த்தாள். எங்கும் வண்ணங்கள் நிறைந்திருந்தன. காய்கறிகளின் பச்சை வண்ணம், மிளகாய், தக்காளியின் சிவப்பு, கடைகளுக்கு வெளியே தொங்கும் மஞ்சள் வண்ண வணிகப் பொருட்கள், சகதி நிறைந்த சாலையில் கொட்டப்படும் அழுகிய காய்கறிகளின் நாற்றம், பாதையின் ஓரம் கம்பி வலைகளின் மீது வைத்துக் கணப்பேற்றி சுட்டுத் தரும் மீன், அனைத்தையும் கடந்து சென்ற பிந்த்தா, உலர்ந்த இஞ்சியும், புளியும் வைத்திருக்கும் மாலம் அபுடுவின் மசாலாக்கடையை அடைந்து, அங்கு பூண்டுப்பொடி வாங்கினாள்.

கூரிய வாள் போன்ற கத்தியில் கசாப்புக் கடைக்காரன் இறைச்சியை வெட்டித் துண்டுகள் போட்டபோது ஃபைஸாவை நினைத்துக் கொண்டாள் பிந்த்தா. அந்தத் துண்டங்களை ஒரு பிளாஸ்டிக் பையில் போட்டு முடிச்சிட்டு அவளிடம் கொடுத்தான். பின் அங்கிருந்து கிளம்பி நூரா ஜங்கலி கடைக்குச் சென்று கொஞ்சம் கினி மக்காச்சோளம் வாங்கினாள்.

ஜங்கலி குனிந்து தானியத்தை அளந்து கொண்டிருக்கையில், யாரும் எதிர் பாராத வகையில் பப்பா அவென்யூவில் இருக்கும் விபச்சார விடுதியைச் சேர்ந்த பிரபல விலைமாது லார், புயலெனக் கடையினுள் நுழைந்து அவனைத் தாக்கினாள். அந்த திடீர்த் தாக்குதலையும், அந்தச் சின்னப்பெண்ணின் முரட்டுத்தனத்தையும் பார்த்த பிந்த்தா ஆச்சரியத்தில் வாயடைத்துப் போனாள். அங்கு நிகழ்ந்த தாக்குதலின் அதிர்ச்சியிலிருந்து சட்டென்று சுதாரித்துக் கொண்டவள் முன்னே சென்று, லாரின் கையை இறுகப்பற்றினாள். அவர்கள் சண்டைக்கு இடையே குறுக்கிட்டு ஜங்காலியைப் பிடித்திருந்த அவள் கையை இழுத்து விலக்கிவிட்டாள்.

"யாரது என் கையைப் பிடிப்பது? இவனை நான் கவனிக்க வேண்டும், நாய்ப்பயல்," ஆவேசமாகத் திரும்பிய லார் பிந்த்தாவின் கண்டிப்பான முகத்தைப் பார்த்ததும் அடங்கிப்போனாள். அதன் பிறகும் ஜங்கலிக்குப் பல எச்சரிக்கைகளை விடுத்துக் கொண்டே இருந்தாள் லார். ஜங்கலியின் மகள் அவள் மகளுடன் சண்டை போட்டதுதான் பிரச்சனை என்று தெரிய வந்தது.

எல்லாம் முடிந்ததும், பிந்த்தாவின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்

கொண்டு, சாலையின் பாதி இடத்தை அடைத்துக்கொண்டிருந்த கூட்டத்தின் நடுவில் புகுந்து மறைந்தாள் லார்.

தானியத்தை வாங்கிக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தாள் பிந்த்தா. பப்பா அவென்யூவின் பிரபல விலைமாதின் கையை, தன் கைகளால் பிடித்துக்கொண்டிருந்திருக்கிறாள். ஆனால், மலிவான கோக்கோ பட்டர் க்ரீம் வாசனையைத் தவிர வேறெந்த வாசனையையும் அவளிடம் உணர வில்லை என்னும் எண்ணம் அவள் மனதில் ஓடிக்கொண்டிருந்தது,

—

ஒவ்வொரு முறையும் அங்கு வருவதற்கு முன்பு ரெஸா ஃபோன் செய்ய வேண்டியிருந்தது. அப்போதுதான் பிந்த்தாவால், மதரஸா வகுப்புகளின் இடைவேளை நேரத்தில் அங்கிருந்து கிளம்பி வீட்டுக்கு வர முடியும். வீட்டின் பின்பக்கத்திலுள்ள மதில் சுவரின் ஓரம் அவன் காத்திருப்பான். சில வேளைகளில் அவர்களுக்குள் உடலுறவு நிகழாது. படுக்கையில் அமர்ந்து பல விஷயங்களைப் பேசிக்கொண்டிருப்பார்கள். அவன் வங்கிக் கணக்குத் துவக்குவது பற்றி, மீண்டும் பள்ளிப்படிப்பைத் தொடர்வது பற்றி, பாவங்களையும், மன்னிப்புகளையும், பிரார்த்தனைகளையும், இறைவனின் எல்லையற்ற கருணை பற்றி...இப்படியாகப் பல விஷயங்களைப் படுக்கையில் அமர்ந்துகொண்டு பேசிக்கொண்டிருப்பார்கள். தான் நீலப் படங்களே பார்த்ததேயில்லை என்று அவள் ஒரு முறை சொன்னதை நினைவில் வைத்து, பல டிவிடிக்களை எடுத்துவந்திருந்தான், அதைப் பார்த்துவிட்டுக் குமட்டலுடன் குளியலறைக்கு ஓடினாள் பிந்த்தா. சிரித்துக் கொண்டே அவளைப் பின் தொடர்ந்தவன் அவளுடன் அங்கேயே உறவு கொண்டான். அவளுடைய உற்சாகமான சிரிப்பு அந்த வீடியோவிலிருந்து ஒலித்த சப்தங்களுக்குப் போட்டியாக இருந்தது. குளியலறைச் சுவரின் உயரத்திலிருந்த ஜன்னலின் வழியாகக் கசிந்து வந்த ஜெனெரேட்டரின் பேரோசையால் கூட அவளது சிரிப்பை ஒளிக்கமுடியவில்லை.

மற்றொரு நாள் மிகவும் சோர்வான கண்களுடன் வீட்டிற்கு வந்தான். அங்கேயே போதைமருந்தைச் சுருட்டி சிகரெட் தயாரித்து, பாக்கெட்டிலிருந்த லைட்டரை எடுத்து அதைப் பற்ற வைத்தான்.

"என்ன செய்கிறாய்?" படுக்கையிலிருந்து எச்சரிக்கையுடன் எழுந்தாள் பிந்த்தா.

"புரிந்துகொள்" கைகளால் சைகை செய்து கொண்டே புகையை இழுத்தான். சில சமயம், வாழ்க்கை மிகக் கேவலமாக இருக்கிறது"

"இங்கெல்லாம் நீ கஞ்சா பிடிக்கக்கூடாது."

"உனக்கும் கொஞ்சம் வேண்டுமா?"

"ச்சே!!சனியன்... அதைத் தூக்கி வீசு"

"என்றாவது ஒரு நாள் நான் சாகத்தான் போகிறேன்" மயங்கிய கண்களால் எங்கோ வெறித்தான். அப்புறம் எல்லாரும், 'ஓ, அந்த நாய் செத்து விட்டான்.' சான்சிரோவில் இருக்கும் சிறு பையன்கள் அனைவரும் துக்கத்துடன் அமர்ந்துகொண்டு, பொடியைச் சுருட்டிப் பற்ற வைத்துக் கொண்டு, 'ஓஒ ரெஸா, அந்தத் தாயளி இதைச் செய்தான், அதைச் செய்தா'னென்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். புரிகிறதா?"

"என்ன உளறுகிறாய்?" அவளுக்குச் சட்டென பயம் தொற்றிக் கொண்டது.

காலத்தின் மெல்லிய விரல்கள் நீண்டு தொடுவது போல, நெடி மிகுந்த புகைப்படலம் வீட்டின் கூரையை நோக்கி நீண்டுகொண்டிருந்தது. அதனூடே, பிந்த்தாவைப் பார்த்தான் ரெஸா. நீ கூட, 'ஓ,ரெஸாவா? அவனைத் தெரியும், அந்த நாய்தானே' என்பாய்! ஆனால், எனக்காகப் பகிரங்கமாகத் துக்கம் பாவிக்க நீ சங்கடப்படுவாய். ஏனென்றால் நான் உன் நிழல் உலகத்தில் வாழ்கிறவன் அல்லவா?"

"என்ன பேசுகிறாய் நீ? எதற்காக இப்படியெல்லாம் பேசுகிறாய்?"

அவளைப் பார்த்து மடத்தனமாகப் புன்னகைத்தவன், கையிலிருந்த சிகரெட்டை முகத்துக்கு நேராக ஆட்டிக் கொண்டே பேசினான்.அதன் புகை வளையங்கள் கோர்வையில்லாத வடிவங்களைக் காற்றில் வரைந்தது.

"பாவம் என் அப்பா, அவர் என்ன சொல்வார் தெரியுமா? என் பையன் எப்போதும் தொல்லை கொடுக்கிறவன் தான், ஆனாலும் அவன் என் மகன், அந்நேரம் நன்றாக இருக்கும் அவர் ஒற்றைக் கண்ணிலிருந்து கண்ணீர் வழியும். அப்போது, ஜெட்டாவில் இருக்கும் அந்தப் பெண்மணி, யாரென்றே தெரியாத ஏதோ ஒரு அரபுக்காரன் அனுபவிப்பதற்காக உடலைக் கொடுப்பதில் சுறுசுறுப்பாக இருப்பாள். அவளுக்கு இதெல்லாம் தெரியவே தெரியாது... தேவ..."

பிந்த்தா நடுங்கினாள். அவனது கோபத்தைக் கண்டு ஆடிப்போனாள்.

விழிகளில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, புகையை இழுத்தான். அது மேலெழும்பிக் கூரையில் வளையமாக சுருண்டிருப்பதைப் பார்த்தான்.

"அப்புறம், இறைவன்? அவருடைய தேவதைகள் என்னிடம் பல கேள்விகள் கேட்கப் போகிறார்கள். அவர்கள் சொல்வார்கள், 'ஒற்றைக் கண் மனிதனின் ஈன மகனே, நீ இவனைக் கொள்ளையடித்தாய், அந்த முட்டாள் பையனின் கையைக் கீறிக் கிழித்தாய், அப்புறம், யாருடைய மகளையோ மரியாதைக் குறைவாக நடத்தினாய், சொந்த சகோதரியையே கெடுத்து விட்டு, தந்தையின் கபாலத்தை கொடுவாளால் பிளந்த கேடுகெட்ட ஒரு ஆணுக்கு கஞ்சா விற்றாய்'..."அவன் நிறுத்தினான். இதை எப்போதாவது யோசித்துப் பார்த்திருக்கிறாயா ஹஜியா? தீர்ப்புரைக்கும் நாள் பற்றி?"

அவள் பெருமூச்சு விட்டாள், "இறைவன் அனைவரையும் மன்னிப்பார்."

"நான் எதை நினைத்து அதிகம் பயப்படுகிறேன் தெரியுமா?" பேச்சை நிறுத்தி விட்டு அவளைப் பார்த்தான். "என்னைப் பார்த்து, உன் வாழ்க்கையில நீ செய்த நல்ல காரியங்களைச் சொல்லு என்று கேட்டுவிட்டால் என்னால் ஒன்று கூட நினைத்துப் பார்க்கமுடியாது," ஏதுமற்ற சூனியத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி வைப்பதைப்போல, கையிலிருந்த சிகரெட்டால் காற்றில் ஒரு குத்துவிட்டான்.

"ஏதாவது ஒன்று இருக்கும், தயவு செய்து இறப்பைப் பற்றிப் பேசாதே."

அருகில் வந்தவளிடம், சட்டென்று புகையில் சுவாரஸ்யம் இழந்தவனாக, கையிலிருந்த சிகரெட்டை அவள் எடுத்து விட அனுமதித்தான். அவனைக் கைகால்களைக் கழுவிவிட்டுத் தொழுகை செய்யவும் சமாதானப் படுத்தி ஒப்புக்கொள்ள வைத்தாள். அவன் பொறுமையிழந்தவனாக அத்தனை காரியங்களையும் அவசரமாகச் செய்தான். அவனுடைய நெற்றி, பிரார்த்தனைக் கம்பளத்தின் விளிம்புகளைக் கூட சரியாகத் தொடவில்லை.

அதன் பின் ஒரு நாள் இரவு, அனைவரும் உறங்கும் நடுநிசிப் பொழுதில், வீட்டின் ஜன்னல் கண்ணாடியை மெல்லத் தட்டினான். அவனது கிசுகிசுப்பான குரலை அடையாளம் கண்டுகொள்ளும் வரை பயந்து போனாள் பிந்த்தா. படுக்கையிலிருந்து சரிந்து இறங்கி ஓடிச்சென்று திரைச்சீலையை விலக்கிப் பார்த்தாள்.

"இங்கே என்ன செய்கிறாய்? பைத்தியமா பிடித்திருக்கிறது உனக்கு?" அவளும் மெல்லிய குரலில் கிசுகிசுத்தாள்.

"இல்ல, உன்னைப் பார்க்க வேண்டுமென்றுதான் வந்தேன்."

"இப்போது காலை இரண்டு மணி, இந்த நேரத்தில் வெளியில் என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

சிரித்துக்கொண்டே, கையிலிருந்த காகிதச் சுருளையும், பெயிண்ட்

பிரஷ்களையும் தூக்கிக்காட்டினான். "போஸ்டர் ஒட்டிக்கொண்டிருக்கும் ஆட்களோடு வந்தேன்."

"இந்த நடு இரவிலா?"

"இதுதான் சரியான நேரம், யாரும் பார்த்து ,'ஏய், என் வீட்டு சுவற்றில் ஒட்டாதே' என்று கத்த மாட்டார்கள்."

"யாருடைய போஸ்டர்?"

ஒரு கையின் அடியில் சுருளை இடுக்கிக்கொண்டு, ஒரு போஸ்டரை மட்டும் பிரித்துக்காட்டினான்.

மங்கிய வெளிச்சத்தில், தொப்பியணிந்திருந்த அதிபரின் முகம் தெரிந்தது.

"அல்லா யா இஸா... இவரா?"

ரெஸா சிரித்தான். "ஹேய், எனக்கும் இவரைப் பிடிக்காது, ஆனால் இந்தப் போஸ்டரை ஒட்டுவதற்கு எங்கள் முதலாளி பணம் தருகிறார், புரியுதா?"

"சரி சரி, குழந்தைகள் எழுந்து வருவதற்குள் இங்கிருந்து போ."

புன்னகையுடன், தன் பொருட்களை எடுத்துக்கொண்டு, எந்த சுவரை முன்பொரு நாள் தாண்டிக் குதித்து வந்தானோ அதே சுவர் இருக்கும் பின் வாசல் நோக்கி தனது வேலையைக் கவனிக்க இருளில் ஓடிப்போனான்.

அடுத்த நாள் காலை, தையல் இயந்திரத்துக்கு நூல் வாங்க மார்க்கெட் சென்ற போது, மரங்களில், மின்சாரக் கம்பங்களில், வீட்டின் முகப்புகளில் எல்லாம் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. கண்ணில் படும் இடம் எல்லாம் அவை தெரிந்தன. ஆனால், அவை வீட்டுச் சொந்தக்காரர்களின் கோபத்தை முடுக்கிவிட்டிருந்தன. முக்கியமாக, அந்த அதிபரைப் பிடிக்காதவர்கள், போஸ்டரை முழுதாகக கிழித்து எறிந்திருந்தனர். இரவெல்லாம் கடுமையாக வேலை செய்த ரெஸாவின் உழைப்பு வீணாகிவிட்டதே என்று அவளால் வருந்தாமலிருக்க முடியவில்லை.

மறுநாள் அவன் வந்தவுடன். அவன் விரல்களில் ஒட்டியிருந்த பசையையும், களைத்திருந்த கண்களில் ஒட்டியிருந்த உறக்கத்தையும் போக்க அவனுக்காக வெந்நீர் போட்டு, சூடான குளியல் எடுக்க வைத்தாள். அவன் இன்னும் வங்கிக் கணக்கு ஆரம்பிக்காததால், ஒவ்வொரு வருகையின் போதும் கொடுத்து வைக்கும் பணம் சூட்கேசில் இருக்கும் கற்பூர மணம் வீசும் அவள் துணி மடிப்புகளுக்குள் பெருகிக்கொண்டிருந்தது.

—

சில சமயங்களில், இரவு வேளையில் வெராந்தாவில் உட்கார்ந்து கொண்டு, ரேடியோவின் துணையோடு அவள் இதயத்தை வெல்லும் உயர்ந்த நோக்கத்தில் இருக்கும் மாலம் ஹரூணாவிடம் பேசி நேரம் போக்குவாள். ஒவ்வொரு முறையும் அவள் வெளியே வந்து, ஹிஜாபை அசைக்கையில் அதிலிருந்து மல்லிகை மணம் வெளியேறும். அப்போது அவர் தவறாமல் தன் ரேடியோவை அணைத்துவிடுவார்.

அவர் அரசியலை அலசி ஆராய்வதைக் கேட்டுக்கொண்டிருப்பாள் பிந்த்தா. தங்கள் சுய லாபத்துக்காகவும், பிரச்சாரத்துக்காகவும் எப்படி அரசுப் பணம் வீணாகிறதென்றும், வேட்பாளர்கள் ஒருவருக்கொருவர் எப்படி சேற்றை வாரி இறைத்துக் கொள்கிறார்கள் என்றும் சொல்லிக்கொண்டே இருப்பார். எப்போதும் அவர் சொல்வதை ஒன்றுமே பேசாமல் கவனிக்கும் பிந்த்தா சிலமுறை இடைமறித்தாள்.

"அவர்கள் புஹாரியை வெல்ல விடமாட்டார்கள், ஏனென்றால் அவர் ஊழல்வாதிகளை சரியாக முறையில் தண்டிப்பார்."

அவள் மிக நடுநிலையான கருத்தைச் சொன்னாள்.

"ஏன் வரமாட்டார்? நிச்சயம் அவர்தான் வெல்லப் போகிறார்."

மாலம் ஹரூணா பிரகாசமானார். "அவர் மிக நல்லவர், அதனால் தான் இந்த செல்வாக்கான மனிதர்கள் எல்லோரும் அவருக்கு எதிராக ஒன்று சேர்ந்து விட்டார்கள்"

"ஆனால், நாம் எல்லோரும் அவர் பக்கம், அவரை வெல்ல வைப் போம்" பிந்த்தா ஆர்வமாகச் சொன்னாள்.

மாலம் ஹரூணா சிரித்தார். "உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்ளா தீர்கள் ஹஜியா, இங்கே தேர்தல் எப்படி நடக்கும் என்று அனைவருக்கும் தெரியும், நீங்கள் யாருக்கு வேண்டுமானாலும் உங்கள் வாக்கை அளியுங்கள், ஆனால், அவர்களுக்குத் தேவையானவர்களைத்தான் வெற்றி பெற்றார் என்று அறிவிப்பார்கள், உனக்குப் பிடிக்கவில்லை என்றால் போய் கிணற்றில் குதித்துக் கொள், யாருக்கு என்ன கவலை' என்பார்கள்."

"ஓ, அதெல்லாம் முன்பு. இப்போது தேர்தல் ஆணையத்தில் மிக நேர்மையான அதிகாரி இருக்கிறார், தேர்தலை நிச்சயமாக நியாயமான முறையில் நடத்துவார்."

"ஊழல் நிர்வாகத்தை எதிர்த்து ஒற்றை மனிதரால் என்ன செய்ய முடியும்?"

"பாருங்கள், என்ன நடக்கப் போகிறதென்று."

அவர் பதில் சொல்லும் முன், ஒரு பெண்ணுருவம் பெட்டியைத் தூக்கிக்கொண்டு கேட்டைத் திறந்து உள்ளே வருவது தெரிந்தது. அந்த நிழலுருவம் அருகில் நெருங்க நெருங்க பிந்த்தா மூச்சைப் பிடித்துக் கொண்டு அடையாளம் காண முனைந்தாள்.

இறுதியாக அந்த உருவம் அவள் மகள் ஹுரைரா என்று தெரிந்தது.

"இன வுனி, ஹஜியா, எப்படி இருக்கிறீர்கள்? "

மகளின் வீங்கியிருந்த கண்களைப் பார்த்த பிந்த்தா, பின் முகத்தை திருப்பி மறுபுறம் பார்த்தாள். வெண்ணிற நுனிவால் பூனை மின்னும் விழிகளுடன் அவர்களுக்குத் துணையாக அமர்ந்துகொண்டிருந்தது

—

12

"பாம்பு பெற்றெடுப்பதும் நீண்டதாகவே இருக்கும்"

வரிசையாக மூன்றாவது நாள் காலையும் ஆம்லெட்டின் மணத்துக்கும், காப்பித்தூள் கொதிக்கையில் எழும் வாசனைக்கும் கண் விழித்தாள் பிந்த்தா. பிற குணங்களைப் போலவே காப்பிச் சுவைக்கும் அவள் தந்தையைப் போலவே பெருவிருப்பம் கொண்டிருந்தாள் ஹுரைரா. இங்கு வந்திறங்கிய மறுநாள் காலையிலேயே கடைகளைத் தேடிப்போனாள். மூன்று டப்பா காப்பிப்பொடி, ஒரு பாட்டில் ஷாம்ப்பூ, ஒரு சேனிட்டரி நாப்கின் பாக்கெட் உட்படப் பல பொருட்களுடன் அவள் திரும்பிய போதே, மகளின் இல்லற வேலைநிறுத்தம் நீண்ட நாட்கள் நீடிக்கப் போகிறதென்று அறிந்துகொண்டாள் பிந்த்தா.

தன்னை வீட்டில் பொருத்திக் கொள்வதற்காகப் பல முயற்சிகளை எடுத்துக்கொண்டாள் ஹுரைரா. சமையலறை அலமாரிகளைச் சுத்தம் செய்தும், தரையின் டைல்ஸ்களைக் கழுவியும் பளிச்சிட வைத்தாள். மதரஸாவிலிருந்து திரும்பிய பிந்த்தா, குளியலறையில் குழாய்கள் வெள்ளை வெளேரென்று மின்னுவதைப் பார்த்து அதிசயித்துப் போனாள். தண்ணீர்த் தொட்டியை விரல்களால் தடவிப் பார்த்தபோது பிசுக்குகளற்று பளபளத்தது. ஆனால், அவள் அறையை சுத்தம் செய்ய ஹுரைரா முன் வந்தபோது, தனது முறையற்ற தொடர்பின் சாட்சிகள் அவள் முன் வெளிப் பட்டு விடுமோ என்று பயந்து போனாள் பிந்த்தா. அதனால் எப்போது வெளியே சென்றாலும் அறையைப் பூட்டிக்கொண்டு செல்ல ஆரம்பித்தாள். பாத்திரங்களின் உருட்டலுக்கும், உருளைக் கிழங்குகள் பலியாவதற்கும், முட்டைகள் வறுக்கப்படுவதற்குமான சப்தங்களில் காலை உணவு நேரத்தில் அங்கு நிலவும் வழக்கமான அமைதியைக் கூட ஹுரைராவின் இரைச்சல்

குலைத்துக்கொண்டிருந்தது.

"உம்மி, இதை சாப்பிடு, நீ ஸ்கூலுக்கு லேட்டாகப் போகக் கூடாதில்லையா?"

வருடத்தில் பாதி மாதங்களுக்கு அவள் பார்வைக்கே வராத இந்த அம்மா இப்போது என்ன செய்கிறாளென்று உம்மி கவனித்துக் கொண்டிருப்பாள். தேனும், முட்டையின் வெள்ளைக்கருவும் கலந்து முகத்தின் மீது ஹுரைரா பூசிக்கொள்ளும் பொன்னிற ஃபேஸ் மாஸ்க்கை அதிசயமாகப் பார்த்துக் கொண்டிருப்பாள் உம்மி.

ஃபைஸா, சின்ன கைக்கண்ணாடியில் உதட்டைச் சுழித்துப் பார்த்துக் கொண்டோ அல்லது காலை உணவுக்கு நடுவிலோ தலையை நீட்டி, "லேட்டா? நாங்கள் எப்போதுமே லேட்டாகப் போகமாட்டோம் ஹுரைரா அத்தை!"

ஹுரைரா, மகள் பக்கம் வந்தாள். "உம்மி, உன் சீருடையின் மீதெல்லாம் ரொட்டித் தூளைசிந்துகிறாய்? ஹாபா!"

உம்மி, தன் அன்னையின் குரலில் இருக்கும் கடுமையை உணர்ந்து விக்கித்துப் போனாள். அவசர அவசரமாக ரொட்டித்தூளைத் தட்டியவள், கோப்பையை எடுத்து வாயருகே வைத்துக் கொண்டு, அதன் விளிம்பின் வழியாக, பரபரவென்று கடாயில் ஆம்லெட்டைத் திருப்பிப் போட்டுக் கொண்டிருக்கும் அம்மாவைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

பிள்ளைகள் பள்ளிக்குச் சென்றதும், கண்களின் மேல் வெள்ளரிக் காய்த் துண்டுகளை கவிழ்த்துக்கொண்டு சோஃபாவில் சாய்ந்து கொள்வாள். முகத்தில் பூசியிருக்கும் பலவிதமான கலவைகள் வழங்கப் போகும் பொலிவை முழுமையாகப் பெற்றுக்கொள்ள நேரம் எடுத்துக்கொள்வாள். "ஹஜியா, நல்லபடியாகப் போயிட்டு வாங்க," அவளைக் கடந்து அம்மா மதரஸாவுக்குச் செல்லும் போதெல்லாம் தவறாமல் சொல்வாள் ஹுரைரா. முணுமுணுத்துக் கொண்டே, கதவை இழுத்துச் சாத்திவிட்டு வெளியேறுவாள் பிந்த்தா.

மூன்று நாட்களாகியும் பேச வேண்டியதை அவர்கள் இருவருமே இன்னும் பேசத் துவங்கவில்லை.

ரெஸா ஃபோனில் அழைக்கும் வரை பேசவேண்டிய தேவை அவளுக்கு ஏற்படவில்லை.

அப்போதுதான் உஸ்தாஜ் நூரா பாடங்களை முடித்து விட்டுச் சென்றிருந்தார். உடனே, அங்கு பயிலும் மரியா, தன் பையை எடுத்து

மேசைமேல் வைத்தாள். குழந்தைகளின் ஆடை, அன்க்காரா துணி, செருப்புகள், வாசனை மிக்க ஊதுவத்தி, மேற்கத்திய நாடுகளில் இருந்து வரவழைக்கப்பட்ட உள்ளாடைகள். உலகத்தின் மூலைகளில் இருந்தெல்லாம் பெறப்பட்ட பற்பல பொருட்களால் மரியாவின் பை நிரம்பியிருக்கும்.

அங்கிருந்த பெண்கள் அனைவரும் அவளைச் சூழ்ந்து கொண்டனர். துணியைத் தடவிப் பார்த்தும், ஊதுவத்திகளை முகர்ந்தும், ஆடைகளை உடம்பின் மேல் சாற்றி பொருத்தமாக இருக்கிறதாவென்றும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"நான் கருப்பு, என் நிறத்துக்கு இது சரியாக வரும்."

"இதற்கு அடுத்த அளவு இல்லையா மரியா? இந்த ப்ரா என்னுடைய மார்புகளுக்குப் பொருத்தமாக இருக்காது, இதை விடப் பெரிய அளவு இருக்கிறதா?"

அவர்களுக்கு நடுவில் அமர்ந்துகொண்டு, பொருட்களைக் கையில் கொடுத்தவாறே "இது உனக்குக் கச்சிதமாகப் பொருந்தும்" என்று நயமாகச் சொல்வாள் மரியா.

தேன் தடவிய குரலில் வரும் அவள் வார்த்தைகள் தேர்ந்த வியாபாரி யுடையது போல இருந்த்து.

செருப்புகளில் ஆர்வம் இருப்பது போலக் காட்டிக்கொண்டு, ஓரக் கண்ணால், ஊக்கமாத்திரைகளையும், அந்தரங்க உறுப்புகளில் தடவக் கூடிய க்ரீம்களையும் பார்த்துக்கொண்டிருந்தாள் பிந்த்தா. கணவன் உள்ள பெண்களில் சிலர், அவற்றை வாங்கலாமா, வேண்டாமா என்று யோசித்துக் கொண்டே, அதன் மூடியைத் திறந்து முகர்ந்து பார்த்துக்கொண்டிருந்தனர்.

"இதை முயற்சி செய், நாளை இதற்காக நன்றி சொல்வாய் தெரியுமா" கண்டியா சிறிய ஜாடி ஒன்றை எடுத்து இன்னொரு பெண்ணிடம் கொடுத்தாள்.

பிந்த்தாவின் ஃபோன் அதிர்ந்தது. கையிலிருந்த செருப்புகளை அப்படியே போட்டுவிட்டு தன் பைக்குள் கையை விட்டு ஃபோனைத் துழாவினாள் ஃபோனை எடுத்தவள் சுற்றுமுற்றும் உள்ள பெண்களைப் பார்த்தாள். 'ஹலோ' என்று சொல்லிக் கொண்டே அவசரமாக அவள் அந்த இடத்தை விட்டு நகர்ந்ததை அவர்களும் கவனித்துக் கொண்டிருந்தனர்.

"ஹாய்" வெளியே முருங்கை மரத்தடியில் நின்று கொண்டாள்.

"இன்னும் மதரஸாவில் தான் இருக்கிறாயா?" ரெஸாவின் குரல் சற்றுத்

தெளிவற்றுக் கேட்டது.

"ஆமாம், நீ வீட்டுக்குப் போனாயா?"

"இல்லை, நீயாகப் ஃபோனில் அழைக்கும்வரை காத்திருக்கச் சொன்னாயே? இப்போது இரண்டு நாட்களாகி விட்டன.

"எனக்குத் தெரியும்."

யாரோ ஒரு பெண் அவளைக் கடந்து சென்றதால் குரலைத் தாழ்த்திக் கொண்டாள். "அவள் இன்னும் இங்கேதான் இருக்கிறாள்."

"எப்போது போகப் போகிறாள்?"

"தெரியவில்லை. அவள் கணவன் வந்து சமாதானப்படுத்தி அவளை அழைத்துக் கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கிறாள்."

"ஓ, ஓடி வந்த மனைவியா?"

"எல்லாம் விதி, உனக்கு என்னைப் பார்க்க வேண்டுமா?"

"ஆமாம்"

ஃபோனைக் காதின் ஓரத்தில் வைத்துக் கொண்டு பெருமூச்சு விட்டாள். "கவலைப் படாதே, இன்னும் இரண்டு நாட்களுக்குத்தான், நிச்சயமாக "

"சரி"

"உடம்பை நன்றாகப் பார்த்துக் கொள்கிறாயா?"

"ஆமாம்"

"அப்புறம் தொழுகை? தொழுகை செய்கிறாயா?"

"ஆமாம்"

"கவனமில்லாமல் அதை விட்டு விடாதே"

சிறு தயக்கம் தெரிந்தது. "முயற்சி செய்கிறேன்."

"பிறகு பார்க்கலாம், சீக்கிரமாக"

"சரி"

அவள் தயங்கினாள். மறுமுனையில் மிக நீண்ட மௌனம். அழைப்பு நின்றபோது, யார் முதலில் துண்டித்தோம் என்று அவளுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை.

—

அறையிலிருந்து வெளியே வந்த பிந்த்தாவின் கையிலிருந்த பிளாஸ்டிக் கூடையில் தலைமுடியை சீர் செய்து பின்னத் தேவையான உபகரணங்கள் இருந்தன.

"ஹுரைரா, வா, எனக்குத் தலை பின்னி விடு"

சோஃபாவில் சாய்ந்து பழைய பத்திரிகையைப் புரட்டிக்கொண்டிருந்த ஹுரைரா, எழுந்து அந்தக் கூடையை வாங்கிக் காலடியில் வைத்துக் கொண்டாள். ஹுரைராவின் தொடைகளுக்கிடையே தலையை வைத்து, தரை விரிப்பில் அமர்ந்துகொண்டாள் பிந்த்தா. ஜாடியிலிருந்த கூந்தல் தைலத்தை எடுத்து, தன் கைகளால் அம்மாவின் அடர்த்தியான கூந்தலில் தேய்த்து மசாஜ் செய்தாள் ஹுரைரா. கூடையிலிருந்து சீப்பை எடுத்து, முடியின் சிக்கு எடுக்க ஆரம்பித்தாள்.

"உங்களுக்கு நரை விழுகிறது ஹஜியா."

"எனக்குத் தெரியும்."

ஹுரைரா, பெரிய சீப்பை எடுத்து, மிகத் தேர்ந்த முறையில் அதன் உலோக நுனியால் பிந்த்தாவின் உச்சியில் வகிடெடுத்து, நுண்ணிய பின்னல்களைப் பின்னத் தொடங்கினாள். சற்று நேரம் அமைதி நிலவியது.

"வயோ! ஆ ஆ இவ்வளவு இறுக்கமாக வேண்டாம், ஹுரைரா, என் கூந்தலுடன் மல்லுக் கட்டாதே"

"மன்னித்துக் கொள்ளுங்கள் ஹஜியா"

கூந்தலின் மீதிருந்த பிடியைத் தளர்த்தினாள்."என் மீது கோபமாக இருக்கிறீர்களா ஹஜியா?"

"இல்லை..."

"நான் வந்ததிலிருந்து நீங்கள் எதுவுமே சொல்லவில்லை, நான் இங்கிருந்து கிளம்பவேண்டுமென்று விரும்புகிறீர்களா?"

"எந்த அம்மா, தன்னுடைய பெண் தொடர் விவாகரத்து பெற்றவளாக இருக்கவேண்டுமென்று நினைப்பாள்?"

"நான் விவாகரத்தானவள் இல்ல ஹஜியா.ஹாபா!! "

"அப்போ நீ யார்? முதல் திருமணம் ரத்தாகி விட்டது. இரண்டாவதும் தத்தளித்துக் கொண்டிருக்கிறது."

அவள் தன் முடியை வெடுக்கென இழுப்பதை உணர்ந்தாள். "என்னுடைய முடியை இழுத்துப் பிய்த்து விடாதே, உன்னை..."

ஹுரைராவின் முதல் திருமணம் நடந்து முடிந்த இருபது மாதங்களிலேயே ஆட்டம் காணத் துவங்கியது. திருமண வாழ்க்கைக்கே உரிய சாதாரணச் சண்டையில் தான் பந்தம் அவிழத்தொடங்கியது. அவள் கணவனுடைய பொருட்களுக்கு நடுவே, *'Cyprian ekwensi* யின் *Passport of Mallam Ilia* என்னும் புத்தகம் இருந்ததைக் கண்டுபிடித்தாள் ஹுரைரா. அந்தப் புத்தகம் அவனுடைய முன்னால் காதலி பரிசாகக் கொடுத்தது. அதன் முன்பக்கத்தில் "மிகுந்த காதலுடன்" என்று அவள் எழுதியிருந்ததுதான் ஹுரைராவுக்கு ஆத்திரமூட்டியது. அதில், அவர்களின் திருமணத்துக்கு இரண்டு வருடத்துக்கு முந்தைய தேதியிட்டு இருந்தாலும் கூடத் தாளாமல் அந்தப் புத்தகத்தையும் நெருப்பிலிட்டுக் கொளுத்தினாள் ஹுரைரா. அதன்பின், வாக்குவாதங்கள் முற்றின. அடிக்கடி மனத்தாபங்கள் ஏற்பட்டன. அவள் கணவனால் நிரந்தரமாக ஒரு பணியைத் தக்க வைத்துக்கொள்ள முடியாத இயலாமை மேலும் சண்டையை வளர்த்தது எனக் கூறலாம். பிந்த்தா ஆரம்பம் முதலே இந்தத் திருமணத்தை எதிர்த்ததற்கு அவன் வேலைதான் முக்கியக் காரணமாக இருந்தது.

அம்மாவின் முடியை நன்றாக நீவிவிட்டு, பின் ஒரு கற்றைமுடியை ஜாக்கிரதையாகப் பிரித்தெடுத்தாள் ஹுரைரா."என்ன நடந்தது என்று என்னை நீங்கள் கேட்டிருக்கலாம், ஆனால், அப்படி இல்லாமல், நீங்களாக ஏதேதோ நினைத்துக் கொண்டு முடிவெடுத்து விட்டீர்கள்..."

"முட்டாள்களாக இருப்பவர்கள்தான் கணவன் மனைவிக்கிடையில் என்ன நடந்தது என்று கேட்பார்கள்." இதைச் சொல்கையில் பிந்த்தாவின் குரல் அமைதியாக, தீர்க்கமாக, மிகுந்த தன்னம்பிக்கையுடன் ஒலித்தது. "நான் உனக்கு பால்ய விவாகம் செய்து வைக்கவில்லை. உன்னை நல்லபடியாக வளர்த்து, பல விஷயங்கள் கற்றுக்கொடுத்திருந்தேன், நீதான் அந்த உதவாக் கரை மனிதனைக் கணவனாகத் தேர்ந்தெடுத்தாய். எதிர்பார்த்தது போலவே அதைக் குழப்பிக் கெடுத்து விட்டாய். அல்லாஹ், கருணையுடன், இன்னொரு வாய்ப்புக் கொடுத்ததையும் சீரழித்துக் கொண்டு வந்து நிற்கிறாய்."

ஹுரைரா சீப்பை அழுத்தமாகப் பதித்து வாரினாள். முடிகளை வேரோடு பிடுங்கி எடுப்பது போல் இருந்தது பிந்த்தாவுக்கு. ஹுரைராவின் முகத்தில் தெறிக்கும் கோபத்தையும். அவள் தன் தந்தையைப் போலவே கீழுதட்டை அழுத்திக் கடித்துக்கொண்டிருப்பாள் என்பதையும் பிந்த்தாவால் கற்பனை செய்ய முடிந்தது.

"அது என்னுடைய தப்பில்லை ஹஜியா."

பிந்த்தா ஏதும் பேசவில்லை ஹுரைரா, முடியைப் பிரித்து, எண்ணெய் தடவி, மீண்டும் அழுந்தச் சீவி அடுத்த வரிசை சோளக் கருதுப்

பின்னல்களைப் பின்ன ஆரம்பித்தாள்.

"அவன் என்னை மதிக்காமல், காலில் போட்டு மிதிப்பதை எல்லாம் பார்த்துக்கொண்டு அடங்கி உட்கார்ந்திருக்க வேண்டுமென்று என்னிடத்தில் எதிர்பார்க்காதீர்கள். அது போன்ற பெண் இல்லை நான்."

ஹுரைரா, மீண்டும் முடிக்கற்றைகளைப் பிரித்துச் சீவி, இழுத்து, பின்னல்கள் போட்டுக்கொண்டு இருந்தாள். ஒவ்வொரு முறையும் சீப்பை முடியில் வைத்து இழுக்கும்போது ஏதும் சொல்லாமல் பிந்த்தா முகத்தைச் சுருக்கித் தாங்கிக்கொண்டாள். அம்மாவுக்கு வலி தருகிறோம் எனும் குரூரத் திருப்தியை ஹுரைரா அடைய அவள் விரும்பவில்லை.

கடைசியில் தொண்டையைச் செருமிக் கொண்டு சொன்னாள், "பொறுமையுடைய மனிதன் பாறைகளை சமைத்து அதன் குழம்பை அருந்துவான் என்று சொல்வார்கள். உன்னுடைய சண்டை உன் கணவனுடன், என் கூந்தலுடன் அல்ல."

"நான் உங்கள் முடியுடன் சண்டை போடவில்லை."

"ஆனால் உன் கணவனுடன் சண்டை போடுகிறாய்."

ஹுரைரா பேசவில்லை.

"உனக்கு வந்தவர்களில் இருந்து நீதான் இவரைத் தேர்ந்தெடுத்தாய், எப்படி இவருக்கு முன்னால் ஒரு ஆளைத் தேர்ந்தெடுத்தாயோ, அதே போல" வலியைக் குறைக்க நெற்றியை நீவிக் கொண்டிருந்தாள் பிந்த்தா.

"நான் உங்கள் அப்பாவைத் தேர்ந்தெடுக்கவில்லை, நாங்கள் பழகக் கூட இல்லை. ஆமாம், எங்களுக்கும் கருத்து வேறுபாடுகளெல்லாம் இருந்ததுதான். ஆனாலும் அவர் இறக்கும் வரை சேர்ந்தே வாழ்ந்தோம். நான்கு குழந்தைகளைப் பெற்று வளர்த்தோம், ஆனால் காதலைப் பற்றியெல்லாம் நாங்கள் பேசியது கூட இல்லை."

"அது அந்தக் காலம்."

"இப்போது மட்டும் என்ன மாறியிருக்கிறது? கணவன் மனைவி சண்டை போடுகிறார்கள், சமாதானம் ஆகிறார்கள். உன்னால் ஏன் முடியாது? நீ கொஞ்சம் விட்டுக் கொடுத்து அமைதியாக இரு. குள்ளமாக இருப்பவர்களின் முன்னால் குனிவது ஒரு குறையல்லை."

ஹுரைரா கடைசிப் பின்னல் வரிகளையும் முடித்து, சீப்பையும், மிசில்லாவையும் கூடையில் திரும்ப வைத்தாள். எண்ணெய் ஜாடியின் மூடியைப் பொருத்தி அதையும் மற்ற பொருட்களோடு வைத்தாள்.

கூடையைத் துழாவிக் கைக்கண்ணாடியை எடுத்தாள் பிந்த்தா. தலையை அப்படியும் இப்படியுமாக ஆட்டிப் பார்த்து, ஹுரைராவின் பின்னல் வேலையை ஆராய்ந்தாள். பின் தலையாட்டிக் கொண்டே, "ம்ம், ஏனோ கொஞ்சம் இறுக்கமாக இருக்கு" என்றாள்.

கோபத்துடன் கூடையை உதைத்துத் தள்ளினாள் ஹுரைரா. அதனுள்ளிருந்த பொருட்கள் தரையெங்கும் சிதறின. அம்மாவைத் தாங்கியிருந்த கால்களை விலக்கிக்கொண்டாள்.

"உன் அப்பாவிடமிருந்து உனக்குக் கிடைத்த இந்த முன்கோபம், உன் மகளுக்கும் வந்து விடக்கூடாது என்று வேண்டிக்கொள்கிறேன்."

எழுந்து பத்திரிக்கையை எடுத்துக்கொண்டு ஃபைஸாவின் அறைப் பக்கம் வேகமாகப் போனவளை பிந்த்தா அழைத்தாள்.

"போய் உன் கணவனுடன் சமாதானமாக வாழப்பார், இது போல மானமில்லாமல் இங்கே இருக்க வேண்டாம், வெட்கம் கெட்ட பெண்."

படீரென்று கதவை அறைந்த சப்தம் ஹுரைரா அறைக்குள் போய் விட்டாள் என அறிவித்தது. ஆனால், அவள் கோபத்தின் நிழல் முன்னறையிலேயே சுழன்று கொண்டிருந்தது. அமைதியாக இருந்த வானத்தில் கரு மேகங்கள் சூழ்ந்து கொண்டது போல..

—

மறுநாள் காலையிலும் ஹுரைராவின் கோபம் நீடித்தது. காலை உணவு சமைக்கும் போது பாத்திரங்களை சத்தமாக உருட்டிக்கொண்டிருந்தாள். என்ன நடந்ததென்று யாரும், எதையும் கேட்டுக்கொள்ளவில்லை. சமையலறை மேடையருகில் நின்றுகொண்டே சாப்பிட்டாள். வயிற்றுப் பசி அடங்கியதும் மீண்டும் அறைக்குள் சென்று படுக்கையில் படுத்துக் கொண்டாள். முட்டை வெள்ளைக்கரு, தேன் பூச்சுப் பூசிய முகமும், வெள்ளரிக்காய் திரையிட்ட கண்களும் கூரையை நோக்கிக்கொண்டிருந்தன.

படுக்கையின் மறுமுனையில் ஒடுங்கிக் கொண்டு, தன் ரகசிய நோட்டில் ஏதோ கிறுக்கிக்கொண்டிருந்தாள் ஃபைஸா. இவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்த உம்மி, எழுந்து அங்கிருந்து ஓடிவிட்டாள்.

ஃபைஸாவின் கைகள் நடுங்கத் துவங்கியது. நோட்டுப் புத்தகத்தைப் பட்டென்று மூடி வைத்துவிட்டு சுவற்றோடு ஒண்டிக்கொண்டாள்.அவள் கண்கள் கூரையில் நிலைத்தது, பின் அலி நுஹுவின் ஸ்டிக்கர்கள் ஒட்டப்

பட்ட கண்ணாடி மீது, அதன் பின் சோர்வாகச் சுழன்று வெளிச்சத்தைக் கூறு போட்டுக் கொண்டிருந்த மின் விசிறியின் மீதென அங்குமிங்கும் வேகமாகச் சுழன்றன. அதன்பின் தேம்பியழ ஆரம்பித்தாள்.

தன் கண்களின் மீதிருந்த வெள்ளரிக் கீற்றை ஜாக்கிரதையாக விலக்கி என்ன நடக்கிறதென்று பார்த்தாள் ஹுரைரா. எரிச்சலுடன் எழுந்து, அறையை விட்டு வெளியேறினாள். முன்னறையில் அமர்ந்து, டிவியை ஆன் செய்து சேனல்களை மாற்றி மாற்றிப் போட்டுக்கொண்டிருந்தாள்.

அறையில் அமர்ந்து, *Priscilla Cogan* ன், *Compass of the heart* புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தாள் பிந்த்தா. இடையிடையே தலையை உயர்த்தி உம்மி தன் பொம்மைக்கு உடை அலங்காரம் செய்துகொண்டிருப்பதைக் கவனித்தாள். பொம்மையின் தலையில் துணியைச் சுற்றியும், பின் அதைக் கீழே படுக்கவைப்பதும், தட்டிக் கொடுப்பதுமாய் இருந்தாள். புன்னகையுடன் அதை ரசித்துக் கொண்டே, புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தாள் பிந்த்தா. முன்னறையிலிருந்து தொலைக்காட்சி சத்தம் கேட்டதும், பொம்மையைத் தூக்கிக் கொண்டு அங்கே ஓடினாள் உம்மி. முகத்தைச் சுளித்துக்கொண்டே, சேனல்களை மாற்றிமாற்றிப் போட்டுக் கொண்டிருந்த ஹுரைராவைப் பார்த்தாள்.

"மம்மி ,நாம் கார்ட்டூன் பார்க்கலாமா?"

கார்ட்டூன் சேனலுக்கு மாற்றிய ஹுரைரா, ரிமோட்டை அருகிலிருந்த இருக்கையில் விசிறினாள். தனக்குக் கொஞ்சம் தொலைவில், தரையில் அமர்ந்துகொண்டு சுவாரஸ்யமாகக் கார்ட்டூன் பார்க்கும் உம்மியை கவனித்தாள். மகளின் அழகிய புன்னகையும், கன்னத்தில் விழும் குழியையும், ஆர்வம் மின்னும் அவள் கண்களையும் பார்த்தாள். கலகலவென உம்மி சிரித்த போது, தனது கோபம் மெல்ல மெல்ல நீர்மையாவதை உணர்ந்தாள் ஹுரைரா.

முதன்முறையாக குழந்தையைப் பார்த்த கணத்தை நினைத்தாள். மருத்துவமனையில், பஞ்சுப் பொதி போன்ற மென்மையான வெண்ணிற சால்வையில் சுற்றி, குழந்தையை அவளிடம் கொண்டு வந்து காட்டிய போது, தாயாக இருப்பதன் ஆனந்தம் என்னவென்பதை அறிந்தாள். தற்சமயம், அவள் மனதார வெறுக்கும் மனிதனின் ஜாடையை உம்மி கொண்டிருந்தாலும், தன்னுள் ஒரு ஒளி பரவி நிறைப்பதை உணர்ந்தாள் ஹுரைரா.

தொலைக்காட்சியின் திரை சட்டென்று வெறுமையானது. இருவரும் தன்னிச்சையாக அண்ணாந்து எரியும் பல்பைப் பார்த்தபோது அது அணைந்திருந்தது. மீண்டும் ஒரு மின்வெட்டு.

'ஒஓ' வென்று சலிப்புடன் சத்தமிட்டாள் உம்மி. ஒரு பெருமூச்சுடன் எழுந்து கதவைத் திறந்துகொண்டு ஜெனெரேட்டர் ஷெட்டுக்குப் போனாள் ஹுரைரா. ஜெனெரேட்டர் வைத்த நாளிலிருந்து வெளிவரும் புகையால் கருமையாகிவிட்ட ஷெட்டின் ஒரு பகுதியையும், மெஷினிலிருந்து கசியும் எண்ணெயின் கறை திட்டுத்திட்டாக நிலத்தில் படிந்திருப்பதையும் கண்டாள். ஆனால், மெஷினை மட்டும் காணவில்லை. ஷெட்டின் பின்புறம் சென்று தேடினாள். கேட்டைப் பார்த்தபோது அது உள்புறம் தாழிடப்பட்டு இருந்தது. பின் மதில் சுவரைச் சுற்றிலும் பார்வையை ஓட்டினாள்.

"ஜெனெரேட்டரைக் காணோமா, என்ன சொல்கிறாய்? ஹுரைரா சொன்னதும், அறையிலிருந்து ஓடி வந்தாள் பிந்த்தா.

ஹுரைரா அவளைப் பின் தொடர்ந்தாள். "நாம் போலீஸுக்குச் சொல்ல வேண்டும்."

ஷெட்டுக்கு உள்ளேயும் அதன் பின்புறமும் சென்று பார்த்த பிந்த்தா, உண்மையாகவே ஜெனெரேட்டர் களவு போய்விட்டதென உறுதி செய்தாள். உடனடியாக ரெஸாவை அழைக்க வேண்டும் என்று மட்டுமே அவளுக்குத் தோன்றியது. என்னுடைய ஃபோனை எடுத்துக் கொண்டு வா ஃபைஸா"

உம்மிதான் அந்தக் காலடித் தடங்களைக் கண்டுபிடித்தாள். பெரிய பாதங்கள் கொண்ட எவனோ ஒரு திருடன், அவள் வீட்டு மதிலைத் தாண்டிக் குதித்திருக்கிறான். மீண்டும் ஒரு முறை...

—

13

"அடுப்படியில் தாய் இருக்கையில், மகனின் கிண்ணங்களில் உணவுக்கு எப்போதும் குறைவில்லை"

சான்சிரோவில், கையில் கற்றை நோட்டுகளை வைத்துக்கொண்டு, பெஞ்ச்சில் அமர்ந்திருந்தான் ரெஸா. அங்கிருந்த ஆண்கள் ஒவ்வொருவராக அவன் முன்னே வர, அவர்களுக்கு தலா ஆயிரம் நைராப் பணம் வழங்கிக்கொண்டிருந்தான். பேரணியில் கூக்குரல் இட்டதினாலும், துள்ளலுடன் ஆட்டம் போட்டதிலும் மிகுந்த களைப்பாகிக் கொட்டாவி வந்தது. அனைவருமே களைப்பாக இருந்தனர். கண்ணில் இருந்த தூசியைத் துடைத்துக்கொண்டே தொடர்ந்து பணம் வழங்கிக்கொண்டிருந்தான்.

சுட்டெரிக்கும் வெயிலில் வரிசையில் காந்திருந்த ஆட்கள் திடீரென்று கட்டுப்பாடிழந்தனர். பணம் கிடைக்கிறதென்ற உற்சாகத்தில் வரிசை கலைந்து ஒருவரையொருவர் தள்ள ஆரம்பித்தார்கள். கூச்சலும் குழப்பமும் சாலையோர மார்க்கெட்டிலிருந்து வரும் சப்தத்துடன் போட்டி போட்டன. பெஞ்ச்சின் மீது ஏறி நின்ற ரெஸா, தலைக்கு மேலே நோட்டுகளை உயர்த்திப் பிடித்துக்கொண்டு, "இப்போது எல்லோரும் அமைதியாக , ஒழுங்காக இருக்க வேண்டும். இல்லையென்றால் நான் யாருக்கும் பணம் தரப் போவது இல்லை" என்று கத்தினான்.

கூலிக்காக பேரணிக்கு வந்திருந்த ஒரு பையன், புரட்சியாளன் போல முஷ்டியை உயர்த்தி, "முடியாது, முடியவே முடியாது, அதுவும் இத்தனை ஆர்ப்பாட்டத்துக்குப் பிறகு பணம் இல்லையென்று சொல்வதா?" என்று கூவினான்.

ரெஸா அவனை முறைத்துப் பார்த்தான். "நீ ஏதோ சொல்ல வந்தாய்

போல இருந்ததே."

ரெஸாவின் கண்களில் தெரிந்த மிரட்டலைக் கண்டு, மீண்டும் கூட்டத்தினுள் பதுங்கிக்கொண்டான் அந்த ரவுடி.

"இப்படி முட்டாள்தனமாக நடந்து கொள்வதெல்லாம் எனக்குப் பிடிக்காது, புரியுதா? கட்டூஸோ இங்கு இருந்திருந்தால் அவனிடத்தில் தான் நீங்கள் பேசியிருக்கவேண்டும். இந்தச் சின்ன ரொக்கத்துக்காக, முட்டாள் சிறுவர்கள் வந்து சத்தம் போடுவதெல்லாம் எனக்கு ஒத்து வராது. பேரணியில் இருந்த எல்லோருக்கும் பணம் கிடைக்கும், ஒழுங்காக இருங்கள்."

ரெஸாவின் கோபம் அங்கு நிலவிய குழப்பத்தைத் தணித்தது. வேலையை முடித்தவுடன் தன் அறைக்குத் திரும்பினான் ரெஸா. படுக்கையில் சரிந்தவன், எதிரே சுவரில் மாட்டியிருந்த AC Milan அணியின் பெரிய போஸ்டரை, சலிப்புடன் பார்த்தான். பதினெட்டு மாதங்களாக அறையின் சூனியத்தைத் திரைபோட்டு மறைத்திருந்த போஸ்டர் சற்றே நிறம் மங்கியிருந்தது. அதிலிருந்து பார்வையை விலக்கிக் கதவைப் பார்க்கவும், ஷனியும், ஜோவும் உள்ளே நுழைந்துகொண்டிருந்தார்கள்.

திரையை விலக்கிப் பிடித்துக்கொண்ட ஷனி "அந்த பஸ் டிரைவர்கள் இருவரும் உன்னைப் பார்க்கவேண்டுமென்று சொல்கிறார்கள்" என்றான்.

இருவரையும் கடந்து வெளியே வந்தான் ரெஸா. இரு டிரைவர்களும் தெனாவட்டாக நின்று கொண்டிருந்தார்கள். ஒருவன் யோருபா இனம், மற்றொருவன் கனூரி. ஆனால் இருவருமே ஒரே சாயலில் இருப்பது போலவே ரெஸாவுக்குத் தோன்றியது. அதே தொய்ந்த முகம், வியர்வைக் கறை படிந்த ஒரே மாதிரியான டிரவுசர் சட்டை, கூரிய கண்கள். தொழிலால் ஒட்டிப் பிறந்த இரட்டைப் பிறவிகள்.

கனூரி மனிதன், தொண்டையைச் செருமி, நிலத்தில் காறி உமிழ்ந்தான்.

"எங்கள் பாக்கியைக் கொடு."

பாக்கெட்டில் கையை விட்டு கொஞ்சம் பணத்தை எடுத்து எண்ணி அவனுக்குக் கொடுத்தான் ரெஸா. மேலும் சில நோட்டுகளை யோருபாக்காரனுக்காக எண்ண ஆரம்பித்தான்.

கொடுத்த பணத்தை எண்ணிப் பார்த்த கனூரி இன ஆள், "ஹலோ பிரதர், அந்த டயர் பஞ்சர் ஆனதற்கான பணம் போட்டுக்கொடுக்கவில்லையே?" என்று கேட்டான்.

"என்ன டயர் பஞ்சர்?"

"திரும்பி வரும் வழியில் பஞ்சராகி விட்டது."

"அதற்கு நான் என்ன செய்ய முடியும்? அது என் தவறா?"

"உங்கள் ஆட்களைத்தானே லாரியில் ஏற்றிக்கொண்டு வந்தோம், பிறகு உனக்கே தெரியும், நாம் தேவைக்கும் அதிகமானவர்களை ஏற்றிக் கொண்டு வந்தோம்."

"லஸிஸி, இனிமேல் எங்களுடன் சேர்ந்து வேலை செய்ய உனக்கு இஷ்டமில்லையென்று தோன்றுகிறது" எரிச்சலுடன் சொன்னான் ரெஸா.

"ஆஆ அப்படியெல்லாம் இல்லை."

திரும்பவும் தொண்டையைச் செருமினான் கனூரி மனிதன், நல்ல வேளையாகத் துப்பவில்லை.

"ரெஸா முதலாளி, நீங்களும், லஸிஸியும் நீண்ட காலமாகச் சேர்ந்து வேலை செய்கிறீர்கள், இது ஒரு அல்ப விஷயம்."

ரெஸா மேலும் இருநூறு நைரா நோட்டுகளை அவர்கள் கையில் திணித்தான். லஸிஸி நன்றி சொல்லிவிட்டு நகர்ந்தான். பஸ்ஸை நோக்கிச் சென்ற அவர்களின் தேய்ந்த செருப்புகளின் தடங்கள் கூட ஒன்று போலவே இருந்ததைக் கவனித்தான் ரெஸா. அனல் காயும் வாகனத்தை நோக்கி, அவர்கள் உணவைச் சம்பாதித்துத்தரும் அந்த உலோக இருப்பிடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். என்றாவது ஒரு நாள் அங்குதான் அவர்கள் எலும்புகள் குப்பைகளாகப் பொறுக்கிக் கழிக்கப்படும். எண்ணற்ற மனிதர்களின் கதைகள் போல, விரைந்தோடும் காலத்தின் சக்கரங்களால் அதே சாலையில் நசுக்கப்பட்டு அவர்கள் கதைகளும் மறக்கப்படும். தலையைக் குலுக்கிக்கொண்டு தன் அறைக்குள் மீண்டும் நுழைந்தான் ரெஸா.

ஜோவும் ஷனியும் அவனைப் பின் தொடர்ந்தார்கள். கதவருகிலேயே நின்றார்கள். ஏதோ முக்கியமான விஷயத்தை ஆரம்பிக்கப் போகிறான் என்பது ஜோவின் முகத்திலிருந்த தீவிரத்தில் தெரிந்தது.

"நம் தோழர்களை என்ன செய்வது?"

பதிலேதும் சொல்லாமல் படுக்கையில் சரிந்தான் ரெஸா.

கால்களைப் பின்னிக் கொண்டான் ஷனி. "ஒரு இரவு முழுவதும் ஜெயிலில் இருந்திருக்கிறார்கள், அதில் நிச்சயமாக பாடம் கற்றுக்கொண்டி ருப்பார்கள்."

"ஜெயில் என்ன உங்கள் அப்பன் வீடா?"

ரெஸாவின் சினத்தைக்கண்டு அதிர்ச்சியடைந்த இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டார்கள். இருவர் முகத்திலிருந்த குழப்பம், அந்த சமயத்திலும் வேடிக்கையாக இருந்தது. ஜோ சிரிக்கத் தொடங்கினான். ஷனியும் அவனோடு சேர்ந்துகொண்டான். முழங்கால் மடிய அமர்ந்து நெடுநேரம் அடக்க முடியாமல் சிரித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள் இருந்த அழுத்தம் குறையும் வரை சிரித்துக்கொண்டிருந்தனர். அவர்களுடைய கோணங்கித்தனத்தைப் பார்த்த ரெஸாவும் மெலிதாய் புன்னகைத்தான்.

"உங்கள் எல்லோரையுமே முதலிலேயே எச்சரித்திருந்தேன். போலீஸ்காரன் பலேரி, நமக்குத் தொல்லை தர எப்போது வாய்ப்புக் கிடைக்குமென்று பார்த்துக்கொண்டு இருக்கிறான், இந்த முட்டாள்கள் கட்டுஸோவும், டோகோவும் போய் சண்டையை ஆரம்பித்து விட்டார்கள்."

ஜோ சிரிப்பை நிறுத்தினான். "எல்லாம் நடந்து முடிந்துவிட்டது ரெஸா, தயவு செய்து கொஞ்சம் பொறுமையாக இரு."

"அவர்களுக்கு சண்டை போடவேண்டுமென்று இருந்தால் வேறு எங்காவது போயிருக்கலாம். இங்கே சான்சிரோவில் அது நடந்திருக்கக் கூடாது, புரிகிறதா? அவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்து, போலீசை இங்கே வர வழைத்திருக்கிறார்கள்" தலையை சிலுப்பினான் ரெஸா. "எப்படி இவ்வளவு முட்டாள்களாக இருக்கிறார்கள்?"

தரையில் அமர்ந்து காலை மடித்துக்கொண்டான் ஷனி. "இனிமேல் இது போல நடக்காது, இன்ஷா அல்லாஹ்."

ரெஸா தன் அத்தனை எரிச்சலும், வெறுப்பும் தெரியும்படி முகத்தைச் சுளித்துக்கொண்டான். "உங்களுக்குப் புரியாது, எந்த விஷயத்துக்கும் போலீஸிடம் போக எனக்குப் பிடிக்காது. எதற்குமே! இப்போது அவர்களைப் பிணை எடுக்கப்போனால், அந்தப் போலீஸ்காரன் எனக்கு ஏதோ பெரிய உபகாரம் செய்பவன் போல நினைத்துக் கொள்ளப் போகிறான்."

ஜோ தலையைக் குனிந்தான். "இனிமேல் இதுபோல நடக்காது."

பெருமூச்செறிந்தவாறு ரெஸா எழுந்தான். கதவைத் திறந்து வெளியேறி கேட்டை நோக்கி நடந்தான்.

போலீஸ் நிலையத்துக்கு வெளியே ஒரு பெஞ்ச்சில், ஏசிபி பலேரி தௌடா, அவருடைய ஆட்கள் சிலருடன் அமர்ந்திருந்தார். கழுத்திலிருந்த சவரக் கொப்புளங்கள் தரும் எரிச்சலைக் கைகளால் நீவிக்கொண்டு, மிகவும் மோசமான மனநிலையில் இருந்தான். ரெஸா வருவதை பார்த்தவன், வேறுபுறம் திருப்பிக்கொண்டு, தாடையைச் சொறிந்தவாறு முகத்தைச் சுளித்துக்கொண்டிருந்தான். அவர்களுக்கு முன் நின்று ரெஸா வணக்கம்

சொன்னபோது, பலேரி சின்னதாக உறுமினார்.

"உங்களைத்தான் பார்க்க வந்தேன் OC."

சற்று நேரங்கழித்தே எழுந்த பலேரியைப் பின்தொடர்ந்து அந்த எளிய ஆஃபீஸ் அறைக்குள் நுழைந்தான் ரெஸா. கடந்த முறை வீசிய பெயிண்ட் நெடிக்குப் பதிலாக, கொசுவர்த்தி சுருளின் கருகிய வாசமும், ஷூக்களின் முடை நாற்றமும் அறையை நிரப்பியிருந்தன. வெளியே, மற்ற அலுவலர்கள் சிறுநீர் கழிக்க உபயோகிக்கும் கட்டிடத்தின் மூலையிலிருந்து, காற்று வீசும் போதெல்லாம் மிதந்து வரும் சிறுநீர் நாற்றம் அறையைத் தாக்கியது.

"என்னுடைய ஆட்களைப் பிணையில் எடுக்க வந்திருக்கிறேன்."

பலேரி இருக்கையில் நன்றாகச் சாய்ந்து ஒரு பேனாவைக் கையிலெடுத்துக் கொண்டார். தனது நிச்சயிக்கப்பட்ட வெற்றியைச் சுவைக்கும் திருப்தியுடன், பேனாவைத் திருகிக்கொண்டிருந்தார்.

"அப்போ, அவர்கள் உன் ஆட்கள்?"

"ஆமாம்."

"அப்படியா!" நாற்காலியில் ஒரு முறை சுழன்றார். "ஓ அப்படியா!"

சுவரில் மாட்டியிருந்த மலிவான கடிகாரம் , உயிரற்ற கருவி போல் களைப்புடன் மணியடித்தது. அதைத் திரும்பிப் பார்த்தான் ரெஸா. கடிகாரத்தின் முகப்பில், ஒரு மிடுக்கான போலீஸ் அதிகாரியின் முகம், வாழ்த்துகள் என்னும் வாசகத்தோடு பதிக்கப்பட்டு இருந்தது. அதன் கீழ் எழுதப்பட்ட வாசகங்களை ரெஸா அமர்ந்திருந்த இடத்திலிருந்து படிக்க முடியாத அளவு சிறிய எழுத்துகளாக இருந்தது. பலேரியை நோக்கித் திரும்பினான் ரெஸா.

பலேரி ஆரம்பித்தார், "இங்கே பார், இந்தப் பயல்கள் மக்களு டைய அமைதியைக் கெடுத்திருக்கிறார்கள், பயங்கரமான ஆயுதம் வைத்திருந் தார்கள், மற்றவர்கள் உடம்பை மிகக மோசமாத் தாக்கியிருக்கிறார்கள்" இவர்களை நீதிமன்றத்துக்குத்தான் அழைத்துக் கொண்டு போகணும்'

"நீதிமன்றத்துக்கா?"

"ஆமாம்."

"அது சரி", ரெஸா எழுந்தான்."அப்படி இருக்கும் பட்சத்தில், நாம் பேசுவதற்கு ஒன்றுமே இல்லை, உங்களுக்குப் புரிகிறதா?"

பலேரியின் முகத்தில் சட்டென மின்னி மறைந்த எச்சரிக்கையைப்

பார்த்துவிட்டான் ரெஸா. இந்தப் பேச்சு வார்த்தையின் மூலம் கிடைக்கப் போகும் உபரிப் பணத்தை இழக்கும் எண்ணம் அவரைத் தொந்தரவு செய்திருக்கசவேண்டும், வார இறுதி நெருங்குகிறது.அந்த வேளையில் ஒவ்வொரு போலீஸ்காரரும் விரைவாக பணம் சம்பாதிக்க எவ்வளவு முனைப்பாக இருப்பார்கள் என்று தேர்ந்த ரவுடிகள் நன்றாகவே அறிந்து வைத்திருப்பார்கள்.

கதவருகில் செல்கையில், அவருடைய திக்கித் திணறும் குரல் அவனுக்குக் கேட்டது. "ஆனால்...அந்த அளவுக்கு நாம் போக வேண்டிய தில்லை."

"எவ்வளவு?" ரெஸா திரும்பினான்.

பலேரியின் கண்களில் போலீஸ் என்னும் பெருமிதம் பளிச்சிட்டது. ஆனால், பேராசையும், தவிப்பும் அதை ஒரு கணத்தில் விழுங்கிச் செரித்தன.

பலேரி தனக்கு வேண்டிய விலையை சொன்னதும், ரெஸா ஆயிரம் நைராத் தாள்கள் ஐந்தை எண்ணி அவரது மேசை மீது வைத்தான். அதை எடுத்து உடனே பாக்கெட்டில் திணித்துக்கொண்டார். இருக்கையைக் காட்டி மீண்டும் அமருமாறு சைகை செய்தார்.

ரெஸா அமர்ந்தான்.

"இதோ பார்," இறைஞ்சுபவர் போலக் கையைக் கூப்பினார். "இது ஒரு சிறிய விஷயம். நீ கொடுக்க வேண்டிய மாமூலைக் கொடுத்திருந்தால், இது எதுவுமே நடந்திருக்காது. உன்னுடைய ஆட்கள் சண்டை போட்டு ஒருவருக்கொருவர் கொல்ல முயற்சிக்கும் போதே நாங்கள் புகுந்து நிலைமையை சரி செய்திருப்போம். இதற்குத் தேவையே இருந்திருக்காது."

ரெஸா, தன் ஷூவை சிமெண்ட் தரையின் மீது தட்டிக்கொண்டே கவனித்தான்.

"அப்புறம் கேள்..." பலேரி தொடர்ந்தார்..."இது போன்ற விஷயங்கள் எப்படி வேலை செய்கிறதென்று நம் அனைவருக்குமே தெரியும். நீ எனக்குக் கொஞ்சம் சொறிந்து விட்டால், நானும் உனக்கு செய்கிறேன்... அவ்வளவுதான், ஆனால், நீ! ஒஹ், ரொம்பப் பிடிவாதக்காரனாக இருக்கிறாய்."

"புரிந்து கொள் OC, கடந்த முறையே இதைப் பற்றி நாம் பேசினோம், எனக்கு உங்களிடத்தில் ஒரு பிரச்சனையும் இல்லை, ஆனால் நீங்கள் என்னுடைய சரக்கை எல்லாம் தூக்கிக்கொண்டு போய் ஜங்ஷனில் இருக்கும் ஆட்களுக்கு விலை பேசிவிட்டீர்கள், என்னுடைய பணத்தையும்

எடுத்துக்கொண்டு, ஆட்களுக்கும் தொல்லை கொடுத்திருக்கிறீர்கள். அது மரியாதையான செயல் இல்லை. முற்றிலும் சரி இல்லை"

"சரி சரி... நடந்தது நடந்து போனது, இப்போது அதை விட்டுவிடலாம், மேலே யோசிக்கலாம்..."

"நீங்கள் என்னுடைய சரக்கையும், என் பணத்தையும் திருப்பித் தந்தால் மட்டுமே, புரிகிறதா? இப்போதைக்கு, என் ஆட்களை விடுதலை செய்யுங்கள், என் பொருட்களைத் திருப்பிக்கொண்டு வரும்போது நாம் மேலே நடக்க வேண்டிய வேலை பற்றிப் பேசுவோம்."

பலேரி தலையசைத்து விட்டு தன் கீழுதடுகளைக் கடித்துக்கொண்டார். அவருடைய ஆஃபிசர்களில் ஒருவரை அழைத்து சான்சிரோ ஆட்களை விடுதலை செய்யச் சொன்னார்.

ரெஸா வெளியே காத்திருக்க, கட்டூஸோவும், டோகோவும் தங்கள் உடைமைகளை எடுத்துக்கொண்டு, சோர்ந்து மயங்கிய விழிகளுடன் லாக் அப்பிலிருந்து மெதுவாக நடந்து வந்தார்கள். இரவெல்லாம் மூத்திரத்தில் நனைந்த ஆடைகளின் வாசத்துடன், பயங்கலந்த தவிப்பின் வாசமும் பூசி வந்தார்கள். நடந்த சம்பவங்கள் தவிர்க்க முடியாதது என்று புரிந்து கொண்டதும் ரெஸாவிற்கு அவர்கள் மீதிருந்த கோபம் தணிந்தது. கஞ்சா போதையும், வாட்டசாட்டமான இளைஞர்களின் கொதிக்கும் மன நிலையும் இணையும் போது மோதல்களும், ஆர்ப்பாட்டங்களும் நிகழத்தான் செய்யும்.

வெளியே அமர்ந்திருந்த மூன்று போலீஸ்காரர்களின் உள்ளங்கை களைத் தட்டியபடி அவர்களுடன் சிரித்துப் பேசி ஒரு ஜோக்கைப் பகிர்ந்து கொண்டான் ரெஸா. அவர்கள் 'ஹிஹி' என்று வழிந்தபோது, பாக்கெட்டில் கையை விட்டு ஆயிரம் நைரா நோட்டை எடுத்தான்.

"உங்களுடைய குளிர்பானச் செலவுக்கு."

மிக தயாள குணத்துடன், அவர்கள் அனைவருக்கும் என்று சைகை செய்தான். அவன் கையிலிருந்த நோட்டை பட்டென்று வாங்கி தன் சட்டைப் பையில் போட்டுக் கொண்டார் ஒருவர். பின் பலேரியின் அறைக்கதவை திருட்டுத்தனமாக எட்டிப் பார்த்தார்.

"ரெஸா, ரெஸா," அவர்கள் சத்தமாகக் கத்தி அவனுடன் சேர்ந்து கைக் கொட்டினர்.

கட்டூஸோ கோபம் நிறைந்தவனாக, போலீஸ் நிலையத்தை விட்டு வெளியேறினான், "என்னை ஒரு இரவு முழுதும் லாக்கப்பில் கழிக்க வைத்து விட்டாய்."

ரெஸா வெளியே நடக்கத் தொடங்கினான். "அடுத்த முறை இதைவிட மோசமாகச் செய்வேன்."

ஆனால், டோகோ போன்றவர்களுக்கு சிறையிலிருந்து ஒரே இரவிலேயே பிணையில் எடுத்து வந்தது பெரிய பரிசாகத் தெரிந்தது. பணிவுடன் மிகவும் மரியாதையாகத் தலையசைத்தான். "நன்றி ரெஸா."

"அடுத்த முறை சண்டை போட வேண்டுமென்று விரும்பினால், வேறு எங்காவது கொண்டு போய் வைத்துக் கொள்ளுங்கள். த்தா...சான்சிரோ உங்கள் யுத்த பூமியில்லை, தெரிகிறதா?"

ரெஸாவின் ஃபோன் சிணுங்கியது. அதன் திரையைப் பார்த்தவன், கட்டூஸோவையும் டோகோவையும் நோட்டமிட்டான். டோகோ, குனிந்து அவன் ஜீன்சில் இருந்த தூசியைத் தட்டிக்கொண்டிருந்தான். ஆனால் கட்டூஸோ, நெட்டி முறித்துக்கொண்டு அவனையே பார்த்துக் கொண்டிருந்தான். திரும்பி நின்று காதில் ஃபோனைப் பொருத்திய ரெஸா பேசியபடியே அவர்களைக் கடந்து தொலைவில் சென்றான்.

ஃபோனைத் திரும்ப பாக்கெட்டில் திணித்துக் கொண்டு வந்தபோது, அவன் பல்லைக் கடிப்பதை கட்டூஸோ கவனித்தான்.

ஆனால் டோகோ தான் முதலில் கேட்டான்,

"என்ன விஷயம்?'

"யாரும் நெருங்கக் கூடாது என்று நான் எச்சரித்து வைத்திருந்த வீட்டில் ஏதோ ஒரு தாயளி உள்ளே நுழைந்து கொள்ளை அடித்திருக்கிறான்."

"எந்த வீடு?" கட்டூஸோ மீண்டும் விரல்களுக்கு சொடக்கெடுத்தான்.

"ஹஜியா பிந்த்தாவின் வீடு"

"பச்சைக் கலர் கேட் உள்ள வீடு?"

"ஆமாம், அதேதான். யார்?"

"எதை எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள்?"

"அவர்கள் வீட்டு ஜெனெரேட்டரைத் தூக்கியிருக்கிறார்கள்"

"ஓ, அப்படியா?" கட்டூஸோ, அடித்தொண்டையில் சப்தமெழுப்பி, கையை மடக்கி முஷ்டியை உள்ளங்கையில் குத்தினான்.

"ஜெனெரேட்டரையும் அதைத் தூக்கிய தகப்பன் பெயர் தெரியாத நாயையும் கண்டுபிடியுங்கள். அந்தக் கேடு கெட்டவனை என் முன்னால் கொண்டு வாருங்கள், புரிந்ததா? ஜெனெரேட்டர் ரிப்பேர் வேலை

செய்யும் ஈப்ரூவைக் கேட்டுப்பாருங்கள். யார் யாரெல்லாம் விற்றார்கள், வாங்கினார்கள் என்று அவனுக்குத் தெரிந்த விவரங்களைக் கேளுங்கள், எனக்கு அந்தச் சில்லறைத் திருடன் உடனே வேண்டும்."

—

அன்று மாலையே அவனைக் கண்டுபிடித்து விட்டார்கள். ஆனால் அவன் சில்லறை இல்லை, மரும்ஃபு, நீளமான கால்களை உடையவன், தன்னை ஒரு கால்பந்து வீரன் என்று சொல்லிக் கொள்ளும் பைத்தியம். ஒவ்வொரு நாளும் காலையும் மாலையும், பூட்சை அணிந்துகொண்டு, சிவப்புநிறப் பட்டியை முழங்காலில் சுற்றிக்கொண்டு மிக ஆடம்பரமாக மைதானத்துக்குள் ஓடச்செல்வான். அவ்வப்போது தான் திருடிய பொருட்களை விற்க சான்சிரோவுக்கு வருவான், உள்ளூர் மருந்துக்கடையில் திருடிய ஆணுறைகள் கூட விற்பான். ஒரு கால்பந்து முகவர் அவனை பெல்ஜியம் ஜெயண்ட் க்ளப் அல்லது ஆண்டர்லெட் அணியினரின் கால்பந்து வீரர் தேர்வில் அவனைச் சேர்க்க ஏற்பாடு செய்து தர முடியும் என்று சொன்னபோது தனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்ததாக எண்ணி மகிழ்ந்தான். ஆனால், அதற்கு ஆகும் செலவை அம்மாவின் அரவை மெஷினோ, அப்பாவின் காவல்காரப் பணியின் சம்பளமோ நிச்சயமாக சமாளிக்க முடியாது. அதனால், தேவையின் காரணமாக மதில்களைத் தாண்டிக் குதிக்க ஆரம்பித்தான் மரும்ஃபு. அவன் திருடியதை சவரக்காரன் எல்விஸ்க்கு விற்க முயன்றபோது சான்சிரோவுக்கு தகவல் எட்டியது.

மாலையின் மங்கிய வெளிச்சத்தில் நின்றுகொண்டிருந்த ரெஸா, கையிலிருந்த கஞ்சாவை கடைசி இழுப்பு இழுத்துவிட்டு அதை கட்டுஸோவிடம் கொடுத்தான். அவனும் நீளமாக ஒரு முறை புகைத்து விட்டு அடுத்தவனுக்குக் கடத்தினான். இறுதியாக அது டோகோவிடம் வந்தபோது அதைக் கடைசியாகப் புகைத்துவிட்டு, ஷூவின் கீழே போட்டு மிதித்து அதன் மீது கையிலிருந்த வெட்டரிவாளால் மண்ணைக் கிளறி எடுத்துப்போட்டு மூடினான். ஜோ, தன் கையிலிருந்த சிறிய ஜின் பாட்டிலிலிருந்து ஒரு வாய் உறிஞ்சியபின் மீண்டும் அதை மூடி பின்புற பாக்கெட்டில் திணித்துக்கொண்டான். ரெஸா முன்னால் நடந்தான். குடியிருப்புப் பகுதியின் காம்பவுண்டுக்கு முன்னால் இருளிலும் தூசியிலும் நின்றிருந்த மம்மா மரும்ஃபுவின் அரவை மெஷினைக் கடந்துசென்றார்கள். சீட்டுப் பிடிக்கும் பாபா அல்லாடே, தன் இரு மனைவிகளுடனும் பகிர்ந்து கொள்ளும் அறையைக் கடந்து, ஒத்த சாயலுடைய இரட்டைக் குழந்தைகளின் அறையைக் கடந்து, மம்மா மரும்ஃபுவின் அறையைக் கடந்து,

இறுதியாக மூலையிலிருந்த கோழிக் கூண்டைக் கடந்து சென்றார்கள். இடது புறமாக இருக்கும் கடைசிக் கதவை எட்டி உதைத்துத் திறந்தார்கள். அங்கே மாலை பயிற்சி வகுப்புகளை அப்போதுதான் முடித்துக்கொண்டு வந்திருந்த மருஃபு, உணவு உண்டுகொண்டே சேம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டியின் மறு ஒளிபரப்பைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

முதலில் அவன் முகத்தில் தெரிந்த அச்சம், தன்னை யாரென்று அடையாளம் கண்டுகொண்டதும், பெரும் திகிலாக மாறுவதை ரெஸா பார்த்தான். அவன் படுக்கையின் பின் அறைகுறையாக ஜெனெரேட்டர் மறைந்திருந்ததைப் பார்த்ததும் புன்னகைத்தான் ரெஸா. மருஃபுவை நெருங்கினான், வெளியே கட்டுஸோ, ஜோ, டோகோ மூவரும் காவலிருப்பதால் எந்த இடையூறும் ஏற்படாது என்பது அவனுக்கு நிச்சயமாக தெரியும்.

மருஃபுவின் எதிர்ப்பு மிக வலுவற்றதாக இருந்தது .அவன் ரெஸாவின் தாடையில் ஒரு குத்து விட்டான். ஆனால் ரெஸா மிகத் துல்லியமாக அவனைத் தாக்கினான். அந்தத் தாக்குதல் மிகத் துரிதமாக நிகழ்ந்தது. மம்மா மருஃபு நடைபிறழ்ந்தவள் போல் ஓடிவந்து கத்திக் கதறுவதற்கு வெகு நேரத்துக்கு முன்பே சேதாரம் நிகழ்ந்து முடிந்துவிட்டது. பெருங்குரலெடுத்து கத்திய அவளது ஓலம், மயங்கிய கதிரவனையும், அப்போது தான் கூண்டுக்குள் நித்திரையில் ஆழ்ந்திருந்த கோழிளையும் நடுநடுங்க வைத்தது .

—

14

"கொம்புகளுள்ள எதையும் கோணிப்பையில் மறைத்து வைக்கக்கூடாது"

ஆ! எல்லாவற்றிற்கும் பாட வேண்டுமா?" தரையில் அமர்ந்து டிவி பார்த்துக்கொண்டிருந்த உம்மி புலம்பினாள். திரையில், ஹிந்தி திரைப்படப் பாணியைக் காப்பியடித்து, ஹௌஸா தயாரிப்பாளர்கள் ஆடலும் பாடலும் சேர்த்திருந்தார்கள்.

"இது நம்பும்படியாகவே இல்லை. வல்லாஹி!!" படுக்கையில் தன் சகோதரிக்குப் பக்கத்தில் சுருண்டு கொண்டாள் கரீமா. ஆபிதா வெளிர் நீல வண்ண லேஸிலும், கரீமா அடர் நீல வண்ணத்திலும் இருந்தார்கள்.

அவர்களைப் பார்த்து ஃபைஸா குழம்பிப் போனாள். "இந்தப் படம், மோசமாக இருக்கிறதா?"

ஆபிதாவுக்கும் படம் பிடிக்காததால் ஃபைஸாவுக்கு அவளே பதிலளித்தாள்.

"நிச்சயமாக !கணவன் வீட்டுக்குத் திரும்புகையில், மனைவி யாரோ ஒரு முட்டாளுடன் படுக்கையில் இருப்பதைப் பார்த்துவிட்டு, கையாலாகாதவன் மாதிரி பாட்டுப் பாடிக்கொண்டிருக்க முடியுமா என்ன? "

"இது தொழுகை நேரம்" ஹுரைராவைத் தாண்டி, அறையில் அமர்ந்தபடி இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த பிந்த்தா, அந்தக் கூட்டத்தைக் கலையுமாறு மென்மையாகக் குறிப்பால் உணர்த்தினாள்.

"அட, தொழுகை நேரமாகிவிட்டதா? வாங்க, நாம் போகலாம்." எழுந்துகொண்டாள் ஃபைஸா. அலி நுஹு அந்தப் படத்தில் இல்லாததால் படம் பார்ப்பது தனக்குப் பெரிய உற்சாகம் தரவில்லை என்று அறிந்து

கொண்டாள். குட்டைச் சகோதரிகள் எழுந்து வருவதற்காகக் காத்திருந்தாள். பின் அவர்கள் மூவரும் இடுப்பை அசைத்தவாறு நடந்து போனார்கள்.

ஆபிதா எரிச்சலுடன் முணுமுணுத்தாள். "இந்த மோசமான படத்தைப் பார்ப்பதற்குப் பதிலாக நான் என்னுடைய நாவலைப் படித்துக் கொண்டிருந்திருப்பேன்."

"நிச்சயமாக."

அவர்கள் அறைக்குள் சென்று மறைந்ததும் கதவைச் சாத்தினாள் ஹுரைரா. தன் அம்மாவை ஒரு கேள்விக்குறியோடு நோக்கினாள். அவளது அனுமானத்தை தலையாட்டிக் கொண்டே உறுதிப்படுத்தினாள் பிந்த்தா. "இந்தப் பெண்களோடுதான் ஃபைஸா நட்பு வைத்திருக்கிறாள்."

"அடப்பாவமே!" வியந்து போய் தலையாட்டிக்கொண்டே உச்சுக் கொட்டினாள் ஹுரைரா. பிந்த்தாவும் எழுந்தாள். அது ஹுரைராவின் மாத விடாய்க் காலமாதலால், அவள் முன்னறையிலேயே மகள் உம்மியுடன் விடப்பட்டாள். தனது மனக்குறையை சகித்துக் கொண்டே, அந்த சலிப்பான படம் மெல்ல உச்சகட்டத்துக்கு நகர்வதைப் பார்த்துக்கொண்டிருந்தாள் ஹுரைரா.

ஃபைஸாவின் அறையில், மாலைப் பிரார்த்தனையை ஒவ்வொருவராக முறை வைத்து செய்ய ஆரம்பித்தார்கள். ஆபிதா பிரார்த்தனைக் கம்பளத்தில் அமர்ந்தபோது, ஃபைஸா படுக்கையில் சாய்ந்து, குள்ளப்பெண்கள் இருவரும் தங்கள் ஹிஜாப்க்குக் கீழே மறைத்துத் திருட்டுத்தனமாகக் கொண்டு வந்திருந்த புது நாவலை எடுத்துப் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்தாள். கரீமா கண்ணாடியின் முன் நின்றுகொண்டு முகத்தைத் தடவிக் கொண்டிருந்தாள். அடுத்து ஃபைஸா கம்பளத்தில் அமர்ந்து சலாத் சொல்லி முடித்தாள். அடுத்து கரீமாவின் சுற்று...சலாத் சொல்லிவிட்டு அமர்ந்தவள், நீண்ட நேரம் ஏதோ வேண்டிக்கொண்டிருந்தாள்.

அவள் முடிக்கும்வரை காத்திருக்க முடியாமல் பொறுமையிழந்தாள் ஃபைஸா "வோய்!! என்ன இவ்வளவு நீண்ட பிரார்த்தனை...எதை வேண்டி இவ்வளவு ஆர்வமான பிரார்த்தனை?"

"சில விஷயங்கள்."

"ஆண்கள்?"

கரீமா புன்னகைத்தாள். "இருக்கலாம், ஏன்? நல்ல கணவன் வேண்டுமென்று பெண்கள் பிரார்த்திப்பது இல்லையா?"

"நிச்சயமாகப் பிரார்த்திக்கலாம்."

ஃபைஸாவுக்கு உற்சாகம் தொற்றிக் கொண்டது. "யார் அது?"

அவளிடம் மட்டும் தான் ரகசியங்களின் களஞ்சியம் இருப்பதுபோலக் கண்ணடித்துச் சிரித்தாள் ஆபிதா. "அவளுக்கு நிறையப் பேர் இருக்கிறார்கள்."

"ஆமாம், உனக்கும்தானே", கரீமாவின் அடக்கமான புன்னகையிலும் குரலிலும் பெருமிதம் தொனித்தது. பின் ஃபைஸாவின் பக்கம் திரும்பினாள். "உனக்கு எத்தனை பேர் இருக்கிறார்கள் ஆமின்? "

ஆபிதா சிரித்தாள், "அவள் இன்னும் பாலா மஹ்மூதின் மீதுதான் ஆர்வம் கொண்டிருக்கிறாள்"

"நான்? பாலா மஹமூத்?? கிடையவே கிடையாது."

"கரீமா யார் மீது ஆர்வமாக இருக்கிறாள் என்று உனக்குத் தெரியுமா?"

"கரீமா, யாரது?"

"சொல்லட்டுமா கரீமா?'

கரீமா சிரித்துக்கொண்டே தோளைக் குலுக்கினாள். ஃபைஸாவின் படுக்கையில் புரண்டு படுத்துக்கொண்டாள்.

"ரெஸா" ஆபிதா கிசுகிசுத்தாள்.

"ரெஸா? அந்த சான்சிரோ இளைஞனா?"

"ஆமாம், அவனேதான் "

"அவன் மிக மிக அழகாக இருக்கிறான் அல்லவா?" கரீமாவின் விழிகளில் கனவுகளின் வெண்புகைச் சுடர் மிளிர்ந்தது.

"அழகுதான்? ஆனால் அவன் ..."

ஆமாம், எனக்குத் தெரியும், நன்றாகத் தெரியும். ஆனால் திருமணம் பற்றி எல்லாம் நான் நினைக்கவில்லை. ஒரு ஈர்ப்புதான்.. நீ எப்படி அலி நுஹுவைப் பற்றி நினைக்கிறாயோ அது போலத்தான்."

"நான்? அலி நுஹு?"

"நிச்சயமாக."

"அன்று ஒரு நாள் அவனைப் பார்த்த்தேன் ஃபைஸா, உனக்குத் தெரியுமா? கரீமா தன்னைப் பற்றிப் பேச்சைத் திருப்பினாள். "அவன் என்னைப் பார்த்தான், அதில் ஏதோ ஒன்று இருந்தது என்று சொல்ல முடியும்"

"ஏதோ ஒன்று?"

"ஆமாம், ஒரு தொடர்பு...ஒரு தீப்பொறி."

உம்மி ஒரு தட்டு நிறைய குஸ்குஸ் எடுத்துக்கொண்டு வந்து, அறையின் நடுவே வைத்துவிட்டுப் போனாள். பின் திரும்பவும் தண்ணீர்க் குவளையும், டம்ளர்களும் கொண்டுவந்து வைத்துவிட்டு முன்னறைக்கு ஓடிச் சென்றுவிட்டாள். மூவரும் கால்களை மடக்கி தட்டைச் சுற்றி அமர்ந்து கொண்டு அமைதியாகச் சாப்பிட்டார்கள். இடையிடையே நிமிர்ந்தபோது ஃபைஸாவின் விழிகள் ஆபிதாவின் விழிகளைச் சந்தித்தன.

"என்ன?"

ஆபிதா தோளைக் குலுக்கினாள். "உனக்கு என்னவாயிற்று?"

"எனக்கு ஒன்றுமில்லை."

கரண்டிகள் சப்தமெழுப்பின. தட்டிலிருந்த உணவு காலியாகிக் கொண்டிருந்தது. கரீமா தட்டிலிருந்து முகத்தை நிமிர்த்தி ஃபைஸாவைப் பார்த்தாள். "ஆமின், நீ எவ்வளவு சீக்கிரம் இந்தப் புத்தகங்களைப் படித்து முடிப்பாய்?"

"ம்ம், நானா? இன்று சனிக்கிழமை, நீ திங்கட்கிழமை பள்ளியில் இவற்றை வாங்கிக் கொள்ளலாம்"

"அப்படியா? நல்லது. நான் உனக்கு ஒரு இங்கிலீஷ் தருகிறேன்.

"இங்கிலீஷ் புத்தகமா?"

"ஆமாம், *Mills and Boon.*"

"சரி." நிமிர்ந்தபோது, போது ஆபிதா மீண்டும் தன் கண்களையே பார்த்துக்கொண்டிருப்பதை அறிந்தாள். ஆபிதாவின் கண்களில் பரிவு பளிச்சிட்டுக் கொண்டிருந்த்தைப் புரிந்துகொண்டாள். அது இரக்கம் அல்ல, அவளுக்கென்றே பிரத்யேகமாக ஒளிரும் கலங்கரை விளக்கம் போல அந்தப் பார்வை சுடர்விட்டது. அதன் காரணம் தன்னுடைய ரகசியப்புத்தகத்தை அவள் பார்த்துவிட்டது தான் என்பதும் ஃபைஸாவுக்குத் தெரியும். குனிந்து, தட்டிலிருந்து மறைந்துகொண்டிருக்கும் குஸ்குஸ் கவளங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஆபிதாவும் தன்னை ஃபைஸா எப்படிப் பார்த்தாள் என்று தெரிந்து கொண்டாள். சற்று நேரத்திற்கு முன் கரீமா சொன்ன, அந்தத் தொடர்பு, தீப்பொறி பற்றி அவளும் உணர்ந்தாள்.

"இப்போதும் உனக்குக் கனவுகள் வருகின்றனவா?"

ஃபைஸா தலையாட்டினாள்.

கரீமா அவள் சகோதரியையும் ஃபைஸாவையும் பார்த்தாள். "கனவு? எதைப் பற்றி?"

"ஒன்றுமில்லை, வெறும் கனவுகள்" ஆபிதா தண்ணீர் அருந்தினாள்.

கரீமாவின் கண்களில் குற்றம் சாட்டும் தோரணை இருந்தது. ஆனால் வெளியே கேட்டருகில் இருந்து வந்த பெரும் கூச்சலில் எல்லாமே மறைந்து போனது. யாரோ கதவை உடைத்துக்கொண்டு வரும் நோக்கத்தில் இருப்பதுபோல் தெரிந்தது. விழிகள் விரிய, பயந்து நின்றாள் ஃபைஸா. அறையிலிருந்து ஓடி வந்த பெண்கள், முன்வாசல் கதவின் அருகில் நின்று கொண்டு, ஹுரைரா வாசலை எட்டிப்பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார்கள்.

பிந்த்தா அறையிலிருந்து வெளிப்பட்டாள். "யார் அங்கே?"

"யாரோ சில ஆண்கள்."

"அது ரெஸா" ஹுரைராவுடன் கதவுக்கருகில் நின்ற கரீமா, அவள் கண்களுக்குப் பழக்கப்பட்ட உடலமைப்பை வைத்து அந்த மங்கிய வெளிச்சத்திலும் அவனை அடையாளம் கண்டுகொண்டாள்.

அவர்களைத் தள்ளிக்கொண்டு கரீமா முன்னுக்கு வந்தாள். அவள் கற்பனைகளில் தொடர்ந்து வரும் அந்த ஆண்மகனை ஒரு கணமாவது தரிசித்து விடவேண்டுமென்ற தவிப்பில் இருந்தாள். அனைத்துப் பெண்களும் முன்வாசல் கதவின் முன் கூடியிருந்தனர். மிதமிஞ்சிய ஆர்வத்தின் பெருஞ்சுழல் அவர்கள் அச்சத்தை அடித்துச் சென்றுவிட்டது.

ரெஸாவும் அவனது சகாக்களும், மிக உற்சாகமாக இருந்தனர். அவர்களது ஆரவாரமான நடத்தையிலிருந்தே அது தெரிந்தது. வந்தவர்கள், மனக்கலக்கத்துடன் நின்றுகொண்டிருந்த பெண்களுக்கு முன் நேராகச் சென்று ஜெனெரேட்டரை இறக்கிவைத்தனர். சான்சிரோ இளைஞர்கள் குனிந்து வணக்கம் சொன்னார்கள். பிந்த்தா தன் மகிழ்ச்சியை மறைத்துக் கொண்டு, இதழோரத்தில் மட்டும் சிறு புன்னகை நெளிய பதில் வணக்கம் சொன்னாள். ரெஸாவைப் பார்ப்பதைத் தவிர்த்து, ஜெனெரேட்டரின் மீதே பார்வையைப் பதித்திருந்தாள். அதை எப்படி மீட்டார்கள் என்ற கதையை டோகோ சொல்லிக்கொண்டிருந்தான். கட்டுஸோவும் டோகோவும், கொடிக்கம்பியில் தொங்கிய பழைய கந்தலை எடுத்துவந்து மெஷினை சுத்தமாகத் துடைத்தார்கள். கரீமா அவர்களை நோக்கி, ரெஸாவை நோக்கி மெல்ல நகர்ந்துகொண்டிருந்தாள்.

இறுதியில் தன் மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்த இயலாத பிந்த்தா, கைகளைத் தட்டி ஆரவாரித்தாள். "இறைவனின் கருணைக்கு நன்றி. அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் ஆசீர்வாதம் வழங்கட்டும்,"

அம்மாவின் தோளுக்கு மேல் எட்டிப்பார்த்தாள் ஹுரைரா.

"இப்போதும் வேலை செய்கிறதா இது?"

ரெஸா, முன்னால் சென்று, டீசல் டேங்க் மூடியின் திருகைக் கழற்றித் திறந்து, அந்தக் கருவியை ஒரு உத்வேகத்துடன் குலுக்கியபோது, டேங்க்கின் உட்சுவர்களில் டீசல் விசிறியடிக்கும் சளசளவென்ற ஓசை கேட்டது. அப்போதுதான் அவன் நகக்கண்களில் வழிந்துகொண்டிருந்த ரத்தத்தைப் பார்த்து பிந்த்தா நடுங்கிப் போனாள். உடனே ஓடிச் சென்று அவன் கைகளை பற்றிக்கொள்ள வேண்டும் போல இருந்தது.

சொட்டிக்கொண்டிருக்கும் குருதியைப் பற்றிக் கண்டுகொள்ளாமல் ரெஸா சுறுசுறுப்பாக வேலையில் ஈடுபட்டான். மீதமிருக்கும் கொஞ்சம் எண்ணெயும் கார்புரேட்டருக்குள் வடிவதற்காக ஜெனெரேட்டரை சற்றே சாய்த்துப்பிடித்தான். மீண்டும் மெஷினை அதனிடத்தில் வைத்து, ஸ்க்ரூவைத் திருகி மூடியைப் பொருத்தினான். கால்களை சற்றே அகல வைத்து வாட்டமாக நின்று, ஸ்டார்ட்டரை இழுத்தான். பெருத்த சப்தமெழுப்பி விட்டு நின்றுவிட்டது. மீண்டும், மீண்டும் பலமுறை முயற்சி செய்தபின், இறுதியாக மெல்லத் திக்கிய மெஷின் பின் கர்ஜிக்கத் தொடங்கியது...

"அல்லாஹு அக்பர்" சிறுமி உம்மி மிக வியப்படைந்தாள்.

ஃபைஸா இம்முறை, ரெஸாவின் கையில் வழிந்துகொண்டிருந்த குருதியைப் பார்த்து அதிர்ச்சியடையவில்லை. ஏனென்றால் அவள் கவனம் முழுவதும் அந்த செருப்புகளின் மீதிருந்தது. அன்றொரு நாள் அவர்கள் வீட்டின் முன் கிடந்த அதே ஜோடி தான் இவை என்பது அந்தக் குறை வெளிச்சத்திலும் அவளுக்கு நன்கு அடையாளம் தெரிந்தது. எப்படி மர்மமான முறையில் தோன்றியனவோ, பின் அதே மர்மத்துடன் அவை மறைந்தும் போயிருந்தன.

—

15

"விவேகமான பறவையை வார்த்தைகளால் மட்டுமே வளைத்துப் பிடிக்கலாம்"

கொதிக்கும் எண்ணெயில் விழுந்த கொஸை பொன்னிறமாக மாறிக்கொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தாள் ஆபிதா. எரியும் அடுப்பின் முன் நின்றிருந்த ஷனியின் அம்மா ஜும்மாலோ, பீன்ஸ் குழம்பில் உப்பைச் சேர்த்து கரண்டியால் கிளறிக்கொண்டிருந்தாள். கரண்டியை எடுத்து உள்ளங்கையில் சிறிது தட்டி, கையை உயர்த்தி, நாக்கில் குழம்பை விட்டு ருசி பார்த்தாள். சுவையில் திருப்தியுற்றவள், தலையை ஆட்டிக் கொண்டே "சில வாடிக்கையாளர்களுக்கு உப்பு தூக்கலாக இருந்தால்தான் பிடிக்கிறது" என்றாள்.

ஜும்மாலோவின் களைத்த கண்களைப் பார்த்து புன்னகை செய்த ஆபிதா, எந்த வகையில் அவளுக்கு உதவி செய்வது என்று யோசித்தாள். அங்கிருந்த ஈர விறகை காலால் எத்தி எரியும் நெருப்பின் நடுவில் திணித்தாள். அடுப்பிலிருந்து சரசரவென வெண்ணிறப் புகை சீறி எழுந்து காலை வேளையின் இளங்காற்றுடன் கலந்தது. தங்கள் சிறிய உள்ளங்கையில் பணத்தைப் பற்றிக்கொண்டு, கொஸை வாங்கக் காத்திருந்த சிறுவர்கள் சற்றுப் பின்வாங்கி, காற்றில் கைகளை முன்னும் பின்னும் வீசிப் புகையை விரட்ட முயன்றனர்.

கரீமா அதைக் கண்டு அயரவில்லை. புகை அவள் பக்கமாக மிதந்து வந்தபோதும் அங்கேயே நின்றுகொண்டிருந்தாள்.

"அந்த விறகு இன்னும் காயவில்லை."

ஜும்மாலோ கொஞ்சம் ப்ளாஸ்டிக் பைகளை எடுத்து நெருப்புக்குள் திணித்தாள். "கரீமா, இந்த இடத்தை விட்டுத் தள்ளிப் போ"

கரீமா அசையவில்லை. "ஒரு புகையைக் கூடத் தாங்கமுடியாத பெண்ணாக இருந்து என்ன பிரயோஜனம்?"

"ஆமாம், ஆமாம்," ஆபிதா அவளை உற்சாகப் படுத்தினாள்.

கரீமா காலையிலிருந்தே கடுகடுப்புடனேயே இருந்தாள். அந்த மன நிலையிலிருந்து அவளை வெளியே கொண்டு வரவே, காலை உணவுக்கு கொஸை வாங்கச் செல்லும்போது அவளையும் இழுத்துக் கொண்டு வந்தாள் ஆபிதா. ஆபிதா பேச முயன்ற போதும் கரீமா பதிலேதும் சொல்லவில்லை. அவள் சீக்கிரம் சரியாகி விடுவாள் என்று ஆபிதாவுக்குத் தெரியும். எப்போதும் அப்படித்தான் நடக்கும்.

பொறித்த கொஸை உருண்டைகளை எண்ணெயில் திருப்பிப் போடும் ஜல்லிக் கரண்டியை எடுக்க கையை நீட்டினாள் ஆபிதா. அவளுக்கு முந்திக் கொண்டாள் கரீமா. அவள் பின்னால் நின்று கொண்டு, ஏதோ வாழ்நாள் முழுவதும் செய்து கொண்டிருக்கும் தேர்ந்த வேலையைப் போலத் தன் சகோதரி கொஸையை மிக நேர்த்தியாகத் திருப்பிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள் ஆபிதா.

அவள் திறமை ஜும்மாலோவின் மனதைத் தொட்டது. "எனக்கு உதவியாளராக உன்னை வேலைக்கு எடுத்துக் கொள்ளலாம் போல இருக்கிறதே கரீமா, வல்லாஹி, அவ்வளவு அழகாக வேலை செய்கிறாய்."

கரீமாவின் முகம் எந்தவித உணர்ச்சியையும் வெளிப்படுத்தவில்லை, 'நான் ஒரு பெண்' என்ற வார்த்தையை மட்டும் உதிர்த்தாள். அங்கு சூழ்ந்திருந்த புகைக்கு மறுபுறமாக முகத்தைத் திருப்பிய ஆபிதா, தெருவின் ஓரத்தில், ஹிஜாப் அணிந்த ஹஜியா பிந்த்தா, சான் சிரோவின் வாயிலின் முன் வட்டமிட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். அவள் சுற்றும் முற்றும் ரகசியமாகப் பார்த்துக் கொண்டிருந்ததும், அந்த வயதான பெண்மணியின் முகம் கவலையில் தோய்ந்திருந்ததையும் தொலைவிலிருந்தும் கூட ஆபிதாவால் கண்டு கொள்ள முடிந்தது. கடைசியில், பிந்த்தா ஃபோனை எடுத்துக் காதில் வைப்பதையும் பார்த்தாள்.

தன் சகோதரியின் கவனத்தை ஏதோ ஒரு விஷயம் கவர்ந்திழுக்கிறது என்பதை கரீமா உணர்ந்தாள். பார்வையைத் திருப்பி பிந்த்தாவைப் பார்த்ததும் அவளுக்கும் ஆர்வம் பொங்கியது. கொஸையைத் திருப்பி போடும் வேலை பாதியில் நின்று போனதும், இந்தப் பெண்கள் எதைப் பார்க்கிறார்கள் என்று திரும்பினாள் ஜும்மாலோ. கரீமாவின் கைகளிலிருந்து

கரண்டியைப் பெற்றுக் கொண்டு வேலையைத் தொடர்ந்தவளின் கண்கள் அவ்வப்போது ஹஜியா பிந்த்தாவையும் நோட்டமிட்டுக் கொண்டிருந்தன.

தெருவோரத்தில், தன் அறையில் இருந்த ரெஸா சட்டை எடுத்து அணிந்து கொண்டு முகத்தைத் துடைத்துக் கொண்டான். உடைந்த கண்ணாடித் துண்டை எடுத்து முகத்தைப் பார்த்தவன் அதன்பின், வாசலில் அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்த பிந்த்தாவிடம் ஓடி வந்தான். அவள் முகத்தில் துயரமும் பயமும் அப்பியிருந்தன. தோளைத் திருப்பிப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். தூக்கக் கலக்கம் தெரிந்தது. கண்களின் கருவளையம், மயங்கிய விழிகள்..

"நீ தூங்கிக் கொண்டிருந்தாயா?'

"என்ன? பிரச்சினை ஒன்றும் இல்லையே?"

"ஆமாம்," அவள் தலையசைத்தாள். "ஆமாம் ஆமாம், அதாவது, ஒரு பிரச்சனையும் இல்லை."

"உண்மையாகவா? கவலையாகத் தெரிகிறாய்"

"உன் கையைப் பார்க்க வேண்டும்."

அவள் குரலில் இருந்த அவசரத்தில் அரண்டு போனவன், ஊமையைப் போல தன் இரு கைகளையும் நீட்டினான், அவனது உள்ளங்கைகள் காலை வானத்தை நோக்கியிருந்தன.

"நேற்று இரவில் உன் கையில் காயமாகி விட்டதென்று நினைத்தேன்."

"எனக்கா? நான் நன்றாகத்தான் இருக்கிறேன்."

"உன் கையில் ரத்தம் இருந்தது."

தன்புறமாகக் கைகளைத் திருப்பிப் பார்த்தான். யோசனையில் அவன் முகம் சுருங்கியது.

"நீ அடிதடியில் இறங்கியிருக்கிறாய், அப்படித்தானே?"

"இல்லை, அப்படியில்லை."

"ஆனால் உன் கையில் ரத்தம் பார்த்தேன்"

"ஓ, அது ஒன்றுமில்லை, அவனுக்கு ஒரு பாடம் கற்பித்தேன்."

"நீ, நீ ஒன்றும்..." அவளால் வார்த்தைகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

ஆனால் அவள் கண்களில் தேங்கி நின்ற அந்த வார்த்தையைக் கண்டு பிடித்துப் புன்னகை செய்து கொண்டே, "இல்லை, இல்லை, இன்னும் சில நாட்களுக்கு அவன் யாரையும் தொல்லை செய்ய மாட்டான், அவ்வளவுதான்." என்றான்.

"நீ யாரோடும் சண்டை போடுவதை நான் விரும்பவில்லை ஹஸன்."

"சரி"

"உனக்கு ஒண்ணும் ஆகவில்லைதானே, நிச்சயமாக?"

"நான் நலமாக இருக்கேன் வல்லாஹி"

"சரி, உன்னைப் பார்க்க வந்தேன், நன்றி சொல்லி விட்டுப் போகவும் தான்"

அவள் கண்களை அவன் ஊடுருவிப் பார்த்த போது தலையைக் குனிந்து கொண்டாள். இரவு முழுவதும் அவனை எண்ணியே கவலைப்பட்டதை அவன் அறிந்து கொள்வதை விரும்பவில்லை பிந்த்தா

"நான் உடனே போயாக வேண்டும், அவர்கள் எல்லோரிடத்திலும் கடைக்குப் போய் ரொட்டி வாங்கிக் கொண்டு வருகிறேன் என்று சொல்லி விட்டுக் கிளம்பி வந்தேன்."

"எனக்கு உன்னைப் பார்க்க வேண்டும்"

அந்த இடத்தைச் சுற்றிலும் பார்வையிட்டாள். அழுக்கான சாலையின் நடுவே சாக்கடை நீர் தங்கு தடையில்லாமல் ஓடிக் கொண்டிருப்பதையும், ஈர நிலத்தில் புதைந்திருந்த ப்ளாஸ்டிக் பைகள் எட்டிப் பார்ப்பதையும், தன் காலடியில் கிடந்த ஈரமான சேற்றையும் பார்த்தாள். பெருமூச்செறிந்தவாறே சொன்னாள்.

"எனக்கும்தான்."

"எப்போது?"

"எனக்குத் தெரியவில்லை."

அவன் பெருமூச்சு விட்டான்.

"இன்று காலை நீ பிரார்த்தனை செய்யவில்லையா?"

இப்போது அவன் தலையைக் குனிந்து கொண்டான்.

"போனவுடன் தயவு செய்து உன் பிரார்தனையைச் செய்."

அவன் தலையாட்டினான். அவள் திரும்பி நடக்க ஆரம்பித்தாள்.

அவனை அப்படியே இழுத்து நடுங்கும் தன் கரங்களுக்குள் பொத்தி வைத்துக் கொள்ள வேண்டும் என்னும் ஆசை அவளைத் துரத்திக் கொண்டிருந்தது.

தெருவின் மறு கோடியில், ஆபிதா, திரும்பி கரீமாவைப் பார்த்தாள். இருவரும் திரும்பி, நடந்த அனைத்தையும் தங்கள் தோளுக்கு மேலே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த ஜும்மாலோவைப் பார்த்தார்கள். ஜல்லிக் கரண்டியை மீண்டும் கையில் எடுத்துக் கொண்ட கரீமா கடாயிலிருந்த கொஸை திருப்பும் வேலையை மிக சிரத்தையுடன் தொடர்ந்தாள். அங்கு திரண்டிருந்த வெண் புகை, அவளது கடும் சினத்தைக் கண்டு மிரண்டு விட்டது போல, வானில் எங்கோ கலைந்து சென்றன.

—

படுக்கையில் கிடந்த வாடிப் போன தந்தையைப் பார்த்ததும் அதிர்ந்து போனான் ரெஸா. மண்டியிட்டு அமர்ந்து அந்த வயதானவரின் கைகளைப் பற்றிக் கொண்டான். என்றோ ஒரு காலத்தில் மாடுகளைக் கயிற்றில் கட்டியிழுத்து வந்த வலுவான கைகளைப் போலன்றி, இப்போது மிகவும் பலவீனமாக இருந்தன. பனிரெண்டு மாதங்களுக்கு முன்பு பார்த்தவர், இப்போது தளர்ந்த சருமத் தொகுப்பாகவும், துருத்திக் கொண்டிருக்கும் எலும்புக் கூடாகவும் மாறிப் போனதை அவனால் நம்ப முடியவில்லை.

காலையில் பிரார்த்தனைக் கம்பளத்தில் அமர்ந்து, அல்லாவிடம் வேண்டுதல்கள் வைத்துக் கொண்டிருக்கும் போது அழைப்பு வந்தது. நோயில் நலிந்து கிடக்கும் அவனுடைய அப்பா அவனைப் பார்க்க வேண்டுமென்று அழைத்தார். உடனே அவசரமாகக் குளித்து முடித்து, ஒன்றரை மணி நேரம் பயணம் செய்து, பிறந்த ஊரான அக்வாங்கா வுக்கு வந்திருக்கிறான்.

அவன் நினைவில் இருந்ததை விடத் தெருக்கள் மிகக் குறுகலாக இருப்பது போலத் தோன்றியது. அவன் அப்பாவின் வீடு சிமெண்ட் கான்கிரீட்டால் ஆன கூண்டு போல இருந்தது. அங்கங்கே சுவர்களில் பூச்சு உதிர்ந்து செதில் செதிலாகக் காட்சியளித்தன. அப்பாவின் மனைவிகள் தலாத்து, லுபாபட்டு இருவரும், அவனுக்கு உணவும், பானமும் கொடுத்து உபசரிக்கையில், பொறுமையுடன் அவர்களை சகித்துக் கொண்டான். அவர்கள் முகத்தைப் பார்த்தபோது அந்த நேர்மையற்ற கண்களில் மறைந்திருக்கும் நயவஞ்சகம் தெளிவாகத் தெரிந்தது. அவன் தந்தையின் அறைக்கு நகர்ந்தான்.

அந்த முதியவரின் உலர்ந்த கைகளைப் பிடித்துக்கொண்டு,

மருந்தின் மயக்கத்தில் உறங்கிக் கொண்டிருப்பவர் கண் விழிப்பதற்காகக் காத்திருந்தான்.

அந்தக் கைகள், அனுதினமும் காலை வேளையில் அவனை உயரத் தூக்கிக் காற்றில் வீசி விளையாடி, பின் நெஞ்சோடு இறுக அணைத்துக் கொள்பவை. இப்போது அவரது குறுகிய மார்புக் கூடு உயர்ந்தும் தாழ்ந்தும், தள்ளாடியபடி மூச்சு விட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ரெஸா நாற்காலியில் சாய்ந்து, கண்ணுக்கு நேராகத் தெரிந்த வெற்றிடத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். லுபாபட்டு மூடிய கிண்ணத்தை எடுத்துக் கொண்டு வந்து படுக்கையருகில் வைத்தாள்.

"அவர் எப்படி இருக்கிறார்?" ரெஸா முணுமுணுத்தான்.

"டாக்டர் லினஸ் என்ன சொன்னாரென்றால்..."

"எந்த டாக்டர் லினஸ்?

"அவர்தான், அந்த மருந்துக்கடையில் இருப்பவர், டாக்டர் லினஸ்."

"அவன் டாக்டர் இல்லை, மருந்து விற்பவன்."

லுபாவின் கண்கள் படபடவென்று அடித்துக் கொண்டன. கால்கள் பின்னிக் கொண்டன. "ம்ம், உன் அப்பாவுக்கு நீண்ட நாட்களாக மலேரியா இருக்கிறதென்று அவர் சொன்னார்,"

"அவனுக்கு ஒரு மண்ணும் தெரியாது, அவன் பாரசிட்டமால், அமாக்சிலின் மருந்துகள் விற்கிறவன், அவனுக்கு இதெல்லாம் ஒன்றும் தெரியாது."

மீண்டும் அவள் இமைகள் படபடத்தன.

"இறைவா, அவரை ஆஸ்பத்திரிக்கே அழைத்துக் கொண்டு போகவில்லை என்று மட்டும் சொல்லாதீர்கள்."

மீண்டும் அவள் இமைகள் துடிக்க ஆரம்பித்ததைப் பார்த்ததும், எழுந்து அறையை விட்டு அகன்றான். வீட்டிற்குப் பின்புறம் சென்று சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்தான்.

ரெஸாவாக மாறுவதற்கு வெகு காலம் முன்பு அவனுக்கு ஒரு முறை மிக மோசமான உடல் நலிவு ஏற்பட்டது. அவனது பதின்மூன்று வயது உடலினுள், மலேரியாவும், டைபாய்டும் புகுந்து அவனை நாசமாக்கிக் கொண்டிருந்தன. அவன் அப்பாவோ, எங்கோ தொலை தூர கிராமத்தில்

மாடுகளைப் பிடிக்கப் போய் விட்டார். பழைய, கந்தலான படுக்கையில் நாள் கணக்காகப் படுத்துக்கொண்டு, உடலும் மனமும் வீணாகிப் போக, இறைவனிடம் இறப்பை யாசித்துக் கொண்டிருந்தான்.

மயக்கமான நிலையில் அவனுடைய மாற்றாந்தாய்கள் இருவரும் அவன் வாயில் ஏதோ மருந்தைத் திணிப்பதும், அவ்வப்போது அவன் புறமாக உணவுத் தட்டைத் தள்ளி விடுவதும் மங்கலாகத் தெரியும். கண்களை மூடிக் கொண்டவன், தான் சொர்க்கத்தில் இருக்கிறோம் என்று உறுதியாகத் தெரியும் வரை விழிக்க மறுத்து விட்டான். பின் முடிவற்ற ஒரு காலத்திற்குப் பிறகு, மிதப்பது போல் உணர்ந்த நிலையில், கண் விழித்துப் பார்த்தபோது, அவன் அப்பாவின் ஒற்றைக் கண், அன்பும், அக்கறையும் நிறைந்து அவனை நோக்கிக் கொண்டிருந்தது.

"என்னை நன்றாகப் பிடித்துக் கொள் மகனே, என் மீதே இறந்து விடாதே."

அடுத்த முறை கண்விழித்த போது அவன் மருத்துவமனையில் இருந்தான், மிகுந்த களைப்புற்றிருந்த அவன் அப்பா, அருகில் ஒரு நாற்காலியில் சரிந்து உறங்கிக் கொண்டிருந்தார்.

அந்த வயதானவர், புன்னகையுடன் விழித்து, அவன் கரங்களைப் பற்றிக் கொண்டு, "மகனே ஹஸன்" என்றார்.

"அப்பா, நான் இறந்து போய் விடுவேனென்று நினைத்தேன்." அவன் குரல் மிகவும் பலவீனமாக இருந்தது.

அவன் கையை அழுத்தினார் அவர். "இல்லை, இல்லை, அப்படி நடக்க நான் விடவே மாட்டேன். நீ வளர்ந்து பெரிய மனிதனாகப் போகிறாய். என் வயதான காலத்தில் என்னைப் பெருமைப்பட வைக்கப் போகிறாய் மகனே."

அன்று அவனுடைய கன்னத்தில் அவர் முத்தமிட்டார்.

சிகரெட்டின் கடைசிப் புகையை இழுத்த பின்பு, அதைக் கால்களின் கீழே போட்டு நசுக்கினான். பின், அப்பாவை மருத்துவமனைக்குக் அழைத்துச் செல்வதற்காக வாடகைக் காரைத் தேடிக் கிளம்பிப் போனான்.

அன்னையும் சகோதரியும் உடன் வர, முதுகுக்குப் பின் கைகளைக் கட்டிக்கொண்டு, ஒரு அரசியல்வாதி, அரசுத் திட்டத்தின் கட்டுமானத்தை

ஆராய்வது போல மதில் சுவரை ஆராய்ந்து கொண்டிருந்தான் முன்க்கைலா. அடிக்கடி தன் சுத்தமான ஷூவை நிலத்தில் தட்டிக் கொள்வதை உம்மியும் ஃபைஸாவும் கதவருகில் நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

முகத்தைச் சுருக்கியபடி தலையாட்டிக் கொண்டான்.

மதில் சுவரின் மீது, முள் கம்பிகள் போட வேண்டும்.

தோளை உயர்த்தி மதிலைப் பார்த்த பிந்த்தா, பின் குனிந்து தன் கால்களைப் பார்த்துக் கொள்வதை ஃபைஸா கவனித்தாள். பாக்கெட்டுக்குள் கையை விட்டு ஃபோனை எடுத்த முன்க்கைலா, எண்களை அழுத்திக் காதில் பொருத்தினான்.

சற்று நேரத்துக்குப் பின் பணியாளர்கள் வந்து சேர்ந்தார்கள். மதில் சுவரை கவனமாகப் பார்த்த பின், ஒரு மூலைக்குச் சென்று முன்க்கைலாவுடன் பேச்சு வார்த்தை நடத்தினர். கொஞ்சம் பணத்தை எடுத்து எண்ணிப் பார்த்த பின், அவர்கள் கையில் கொடுத்து விட்டு அவசரமாக வீட்டை விட்டு வெளியேறினான் முன்க்கைலா.

ஆட்கள் வேலை செய்ய வரும் போதெல்லாம், பிந்த்தா, கையில் ஒரு புத்தகத்துடன் தனது அறையில் முடங்கிக் கொள்வாள். அவள் வாசித்த புதினங்களும், சுய முன்னேற்ற புத்தகங்களும், *Az Zahabi* யின் *The Major Sins* புத்தகத்தின் மீது அடுக்கடுக்காக உயர்ந்து கொண்டே போயின. அவற்றில் *Hemingway* எழுதிய புத்தகம்தான் அவளுக்கு மிகப் பிடித்தமானது. அடிக்கடி அதை எடுத்து வாசிப்பாள். பெரிய மீனுக்கு எதிரான வயதான மனிதனின் போராட்டம் அவளுக்கு ஒரு புதிய அர்த்தத்தைக் கொடுத்தது. ஏனென்றால், முதுமையின் பலவீனம் ஏற்படுத்தும் அழிவை எதிர்த்த ஒரு போராட்டத்தோடு அவளால் தன்னைப் பொருத்திப் பார்க்க முடிந்தது. அவள்தான் அவர், ஒரு விதத்தில் அவள் இதயத்தின் ஒரு பக்கம், அந்தப் பொன்னான காலத்தை இன்னும் சற்று நீட்டித்துக் கொள்ளப் போராடிக் கொண்டிருக்கிறது.

"ஹஜியா, முள் கம்பி வேலி போட்டு விட்டார்கள்." உறங்குவதிலேயே அதிக நேரத்தைக் கழிக்கும் ஹுரைராவையே எழுப்பி விடுமளவுக்கு கத்திக் கொண்டு ஓடி வந்தாள் உம்மி. திரைச் சீலையை விலக்கிப் பார்த்த உம்மியின் கண்கள் உற்சாகத்தில் விரிந்தன.

"இங்கிருந்து ஓடி போ" சீறிய பிந்த்தா சுவரின் பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அன்றிரவு , மாலம் ஹுசைனா தன் ரேடியோவுடன் வந்து வாராந்தாவில் அமர்ந்து கொண்டார். பிந்த்தா சற்று நேரமெடுத்தே வந்தாள். ஹிஜாபை

அசைத்து தன் வருகைக்கான கட்டியம் ஏதும் கூறாமல் அமைதியாக வந்தமர்ந்தாள். ரேடியோவைப் பற்றி அவள் ஏதும் புகார் சொல்லாததால், அதை அணைக்காமல் காதில் வைத்து அழுத்திக் கொண்டார் ஹரூணா. செய்திகளில் மிக ஆர்வமாக இருந்தவர் பிந்த்தா தனக்கு வணக்கம் சொல்லாததைக் கூடக் கண்டு கொள்ளவில்லை. அங்கிருந்த தூணில் சாய்ந்து அமர்ந்து அவர் பேசுவதற்காகக் காத்திருந்தாள் பிந்த்தா.

"அல்லாஹ் தான் காப்பாற்ற வேண்டும்" பெருமூச்சு விட்டுக் கொண்டே ரேடியோவை அணைத்தார்.

"என்னென்ன அபத்தங்களெல்லாம் இந்த நாட்டில் நடக்கிறது தெரியுமா?"

அவள் எதுவுமே பேசவில்லை.

சுவரின் மேல் நின்ற பூனை, அதன் மீது முட்கம்பிகளே இல்லாதது போன்ற பாவனையில் வளையங்களின் இடையே நுழைந்து மிகக் கம்பீரமாக நடை போட்டுக் கொண்டிருந்தது. தனது நறுமணம் பொருந்திய கனவுகளைச் சிறைப்படுத்திய, வலுவூட்டப்பட்ட அந்த மதில் சுவரை முதல் முறையாக நிமிர்ந்து பார்த்தாள். மியாவ் என்று ஒரு முறை கத்திய பூனை, பின் எப்போதும் போல அங்கு அமர்ந்து தன் கண்காணிக்கும் வேலையைத் துவங்கியது.

"இந்த நாட்டில் என்னென்ன நடக்கிறது தெரியுமா ஹஜியா!!" எப்போதும் போல கேள்விகளை சாதாரண வார்த்தைகளாக உச்சரிக்கும் தொனியிலேயே இப்போதும் பேசினார்.

அவள் பதிலளிக்கவில்லை.

"இந்த ஆட்கள், மோட்டார் சைக்கிளில் சென்று, உள்ளூர்த் தலைவர் களையெல்லாம் சுட்டுத் தள்ளுகிறார்கள். இந்த போகோ ஹராம் ஆட்களைப் பத்திக் கேள்விப்பட்டிருப்பீர்கள் இல்லயா!!"

அவள் இப்போதும் ஏதும் பேசவில்லை.

அவளுடைய பதிலுக்காகக் காத்திருந்து சலித்துப் போனவர், தொண் டையைச் செருமினார். "போர்னோ மாகாண கவர்னர் ஒக்காடா(வாடகை மோட்டார் சைக்கிள்கள்) அனைத்தையும் தடை செய்யப் போவதாகச் சொல்கிறார்கள். அதன் பின் அதில் சவாரி போய், இது போலச் சுட்டுக் கொல்ல முடியாது அல்லவா, இவர்களை ஒடுக்கி, அடியோடு ஒழித்து விட்டதாகச் சொன்னார்கள், ஆனால், இப்போது என்ன நடக்கிறதென்று பாருங்கள்."

பிந்த்தா மெல்லக் கனைத்தாள்.

சற்று நேரம் கழித்து, மாலம் ஹரூணா, தன் தாடியை நீவினார். "காதல் என்பது அற்புதமான உணர்வு, இல்லையா."

இப்போது தலையை உயர்த்தி அவரைப் பார்த்தாள். அவளது ஆர்வத்தை, இரவின் நிழல் முக்காடிட்டு மறைத்திருந்தது.

"ஆமாம், ஆமாம், காதல் இல்லாத இந்த உலகத்தைக் கற்பனை பண்ணிப் பாருங்கள். மிகவும் பயங்கரமாக இருக்கும், பயங்கரம்!! மக்கள், மக்களையே வெறுப்பார்கள், ஒருவரை ஒருவர் கொன்று குவிப்பார்கள். ஒரே கலவரமாக இருக்கும்...வல்லாஹி."

"அதுதானே இப்போது நடந்து கொண்டிருக்கிறது?" அவள் குரலில் ஒரு விருப்பமின்மை ஒலித்தது. பேச விரும்பாத சூழலில் பேசியாக வேண்டுமே என்னும் மனநிலையில் ஒலிக்கும் குரல்.

"என்ன!!" மீண்டும் கேள்விகளை சாதாரண வார்த்தைகளாகச் சொல்லும் அதே தொனி...ஆனால் இப்போது அவர் பேசும் முறை பிந்த்தாவுக்குப் பழகி விட்டது.

"இப்போது மக்களே மக்களைக் கொல்வதில்லையா? மோட்டார் சைக்கிளில் போய்க் கொல்கிறார்களே, இதெல்லாம் என்ன?"

"ஓஓ, ஆனால் பாருங்கள், அது வேறு மாதிரி, இப்போது நானும் நீங்களும் காதலால்தானே இப்படி இங்கு அமர்ந்திருக்கிறோம். இங்கே.. அன்பு!! உண்மையாகவே... அன்பால்தான்...வல்லாஹி கூவா."

அவரை, அவரது தாடியை, அவர் முகத்தின் மீது மங்கிய வெளிச்சம் படர்த்தியிருந்த நிழலை, எல்லாவற்றையும் பார்த்தாள் பிந்த்தா. ஏற்கனவே இரண்டு மனைவிகளும், ஒரு ரேடியோவையும் வைத்திருக்கும் இந்த வயதான மனிதனுடன், இரவு நேரத்தில் இங்கு அமர்ந்து கொண்டு என்ன செய்கிறோம் என்று ஆச்சரியம் கொண்டாள்.

"காதலைப் பற்றிப் பேசும் வயது உங்களுக்கில்லை."

"எனக்கா? வயதாகி விட்டதா? யா அல்லாஹ்! நம் திருமண நாள் இரவு வரை காத்திரு, நான் எவ்வளவு பலசாலி என்று அப்போது தெரிந்து கொள்வாய்" அவளைப் பார்த்துக் கண்ணடித்துக் கொண்டே சத்தமாக சிரித்தார்.

"என்னை என்னவென்று நினைத்துக் கொண்டீர்கள்?"

"ஹ்ம்ம்ம்!"

"எந்த மாதிரி பெண் என்று நினைத்து என்னிடத்தில் இப்படிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?"

"ஆ ஆஹ், பிந்த்தா, நான்..."

"அபத்தம்," கடும் சீற்றத்தில் அவள் மூச்சு வாங்கிய போது, மதில் மேலிருந்த பூனை கூட அரண்டு போனது. தாடியைச் சொறிந்து கொண்டிருந்த மாலம் ஹரூணாவை அந்தப் பூனையுடன் தனியே விட்டு விட்டு விருட் டென்று எழுந்து, தன் ஹிஜாபை சுருட்டிக் கொண்டு வீட்டிற்குள் சென்று விட்டாள் பிந்த்தா.

—

காலை நேரத்தின் நிசப்தத்தில் ஹுரைரா சமையலறையில் பதுங்கிக் கொண்டு, காஃபியும், டீயும் தயாரித்துக் கொண்டிருந்தாள். ஆம்லெட்டும் உருளைக்கிழங்கு வறுவலும் செய்து, காலை நேரத்தைத் தொந்தரவு செய்யவில்லை. ஒரு தட்டில், ரொட்டித்துண்டுகளையும், காப்பிக் குவளைகளையும் வைத்து எடுத்துக்கொண்டு அமைதியாக அறைக்குள் சென்றாள். சம்மணமிட்டு அமர்ந்திருந்த ஃபைஸாவிற்கும், உம்மிக்கும் எதிரே தரையில் அவளும் அமர்ந்தாள். மூவரும் அமைதியாக உணவு உண்டனர். கோப்பைகளின் கிளிங் சத்தம் கூட அதிகம் எழவில்லை.

"ம்ம்மி, நான்" - உம்மி ஏதோ சொல்ல வாயெடுத்த போது உஷ்ஷ் என்று அவளை அடக்கினாள் ஹுரைரா. மீண்டும் பேச முயன்றவள் ,ஹுரைராவின் கூரிய பார்வையைக் கண்டு அமைதியாகி விட்டாள். அம்மாவிடமிருந்து பார்வையைத் திருப்பி ஃபைஸாவைப் பார்த்த உம்மிக்கு எதுவுமே விளங்கவில்லை. என்ன வேண்டுமென்று சைகையில் கேட்டாள் ஹுரைரா. சர்க்கரை டப்பாவை நோக்கிக் கையை நீட்டினாள் உம்மி. முறைத்துக் கொண்டே தலையை ஆட்டினாள் ஹுரைரா.

பிந்த்தா அவள் அறையிலிருந்து தட தடவென்று நடந்து வருவது கேட்டது. வாயருகே காஃபியைக் கொண்டு சென்ற ஃபைஸாவும், அங்கு மிங்கும் விழிகளை உருட்டிக் கொண்டிருந்த ஹுரைராவும் அப்படியே உறைந்தார்கள். உம்மி அவர்களிருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண் டிருந்தாள். சமையலறைக்குள் நுழைந்த பிந்த்தா, கோபத்தில் பாத்திரங்களை உருட்டிக் கொண்டிருக்கும் சப்தம் கேட்டது. பின், அங்கிருந்து அவள் வெளியேறும் சப்தமும் கேட்டது. அங்கு வந்து, கதவருகே நின்று, அவர் களுடைய காலை உணவில் கலந்து கொள்வதா வேண்டாமா என்று அவள் யோசித்துக் கொண்டிருப்பதைப் போல் அவர்கள் கற்பனை ஓடியது.

இறுதியாக டைல்ஸ் மீது தட தடத்த காலடித் தடங்கள், அவளுடைய அறைக்கே திரும்புவதைக் கேட்டார்கள்.

பெண்கள் இருவரும் மெல்ல ஊர்ந்தவாறு பள்ளிக்குத் தயாரானார்கள். அவர்கள் செல்லும் போது, முன்னறையில் சாய்வு நாற்காலியில் பிந்த்தா நிலைகுத்தி அமர்ந்திருந்ததைப் பார்த்தார்கள். அவர்களைக் கண்டதும் அவள் வேறுபுறமாக முகத்தை திருப்பிக் கொண்டாள்.

"இனா க்வானா, ஹஜியா" ஃபைஸா காலை வணக்கம் சொன்னாள்.

மெதுவாக ம்ம்ம் என்று தொண்டையிலிருந்து ஒலி மட்டுமே பதிலாக வந்தது.

ஃபைஸா, உம்மியின் கையைப் பிடித்துக்கொள்ள, இருவரும் மெல்ல அந்த இடத்தை விட்டு நகர்ந்து, ஓசையேற்படுத்தாமல் கதவைச் சாத்திக் கொண்டு சென்றார்கள். ஹுரைராதான், பிந்த்தாவின் மோசமான மனநிலையைத் தவிர்க்க படுக்கையறையிலேயே சிறைப்பட்டுக் கிடந்தாள்.

முன்மதிய நேரத்தில் பிந்த்தாவுக்கு ஒரு ஃபோன் அழைப்பு வரும் வரைதான் இந்த நிலை ...

குளித்து முடித்து, முகத்திற்குப் பவுடர் இட்ட பின், இதழில் கொஞ்சம் லிப்ஸ்டிக் தீட்டிக் கொண்டாள் பிந்த்தா. உடலைப் பிடிக்கும் அளவான பிளவுஸ் அணிந்து கண்ணாடி முன் நின்றவள், மார்புகளை எடுப்பாகக் காட்டுமாறு உள்ளாடையை சரி செய்தாள். கைப்பையில் ஒப்பனைச் சாதனப் பையையும், பர்ஸையும் போட்டுவிட்டு, தலையில், ஹிஜாப்பைச்சுற்றினாள். வெளியே செல்கையில், கண்ணாடியில் தெரிந்த தன் உருவத்தைப் பார்த்துத் தயங்கி நின்றாள். மீண்டும் பார்த்தாள்.

ஹிஜாபை அவிழ்த்து விட்டு, அலமாரியிலிருந்து நீண்ட ஜில்பாப் எடுத்து தன் ப்ளவ்ஸின் மீது போர்த்திக் கொண்டாள். தலையையும், மேலுடம்பையும் துப்பட்டாவால் சுற்றி மறைத்தாள். பின், கைப்பையை எடுத்துக் கொண்டு, அறையைப் பூட்டினாள்.

வீட்டை விட்டு நீண்ட தொலைவு வந்த பின், மோட்டார் சைக்கிள் டாக்ஸியான ஒக்காடாவை நிறுத்தினாள்.

ஒக்காடா ஓட்டுனர், வாகன இயந்திரத்தை உதைத்து உயிர்ப்பித்தான்.

"உனக்கு ஷகாலி ஹோட்டல் தெரியுமா?"

அவன் தெரியுமென்று தலையாட்டியதும், பின் சீட்டில் தன் ஹிஜாபை மடித்து, மிகவும் கண்ணியமாக அமர்ந்தாள்.

மோட்டார் சைக்கிள் சாலையில் பறந்தது.

16

"கருமையான நீரில் கண்களுக்குத் தெரியாமல் நீர் யானையை மறைய வைக்க முடியும்"

மார்புக்கு மேல் போர்வையைச் சுற்றி அமர்ந்து கொண்டிருந்த பிந்த்தா, அந்தச் சிறிய ஹோட்டல் அறையைச் சுற்றிலும் நோட்டமிட்டாள். கிளிஞ்சல் வடிவ லேம்ப்ஷேட், சோம்பலாக சுற்றிக் கொண்டிருந்த மின் விசிறி, *D'banj* பாடலை ஒளிபரப்பிக் கொண்டிருந்த சிறிய டிவி, எல்லாவற்றையும் பார்த்தாள். அந்த வீடியோவில் கவர்ச்சியாக ஆடிக்கொண்டிருந்த பெண்களின் வெட்கம் கெட்ட தனத்தைக் கண்டு வியந்தாள்.

குளியலறையிலிருந்து ரெலா வெளிப்பட்ட போது, தன் முகத்தைத் திருப்பிக் கொள்ளும் முன், அவன் மார்பிலிருந்த தழும்புகளைப் பார்த்து விட்டாள் பிந்த்தா. மெலிந்து விட்டான் போலிருந்தது. முகத்திலும் கண்களிலும் கருமை தெரிந்தது.

அவளைப் பார்த்துப் புன்னகைத்தான், "உனக்கும் குளிக்க வேண்டுமா?"

குளியலறை இருக்கும் பக்கமாகப் பார்த்துவிட்டு மீண்டும் அவன் பக்கம் திரும்பினாள்.

"ம்ம், எத்தனை முறை இந்த மாதிரியெல்லாம் செய்திருக்கிறாய்? அதாவது, பெண்களை ஹோட்டல் அறைக்கு அழைத்துக் கொண்டு வருவது?

தோளைக் குலுக்கினான். அப்படியெல்லாம் இல்லவே இல்லை என்று அவன் மறுத்த போது, தன்னிடம் முதல் முறையாகப் பொய் சொல்கிறான் என்று அவளுக்குத் தெரிந்தது.

அவள் இதயத்தின் ஆழத்தில் ஏதோ ஒன்று மெலிதாகச் சுழன்றது. சுழற்றி அடிக்கும் அந்தக் காற்றைப் பார்க்க முடிந்திருந்தால் அது பொறாமையாகத்தான் இருக்கும் என்று அவளுக்குப் புரிந்தது. மற்ற பெண்களிடம் கோபம் கொள்ளும் வயது அவளுக்கு இல்லை. அவனுடைய பெண் சினேகிதிகளில் ஒருத்தியாகத் தன்னை அவள் என்றும் நினைத்துப் பார்க்க விரும்பவில்லை. அப்படி நினைக்கவும் கூடாது. தலையைக் குலுக்கிக் கொண்டாள்.

"நான் முதல் முறையாக ஹோட்டல் அறைக்கு வந்திருக்கிறேன்."

அவன் மெலிதாகச் சிரித்தான். ஆனால் அதில் ஒரு பிடிவாதம் தெரிந்தது. "இங்கே ஏகாந்தமாக இருக்கும், எல்லோரும் அவரவர் வேலையைப் பார்ப்பார்கள், புரிகிறதா..."

அவளருகே வந்து அமர்ந்தான். "உனக்குப் பசிக்கவில்லையா?"

அவன் வாங்கி வைத்திருந்த மாட்டிறைச்சி வறுவலை எடுத்தாள். அவளுக்கு முன்பாகவே அங்கு வந்து அறையை ஏற்பாடு செய்திருந்தான். ஆனால் அவள் வந்தவுடன், அவர்களிருவரின் பசியும் வேறொன்றிற்காக இருந்தது. அவன் கதவைத் தாழிட்ட உடனே, அவனது இதழ்களை அழுந்தப் பற்றினாள். முதலில் ஆச்சரியப் பட்டவன் பின் அதே உற்சாகத்துடன் அவளை எதிர்கொண்டான். அவர்களின் இதழ்கள், கைகள், உடல்கள் ஒன்றோடு ஒன்று பின்னிக் கொண்டன. பல நாட்களாக அவர்கள் மீது திணிக்கப்பட்டிருந்த விலக்கம், எந்த வகையிலும் அவர்களை மாற்றவில்லை என்று நிரூபிப்பது போல ஆவேசத்துடன் உறவு கொண்டார்கள்.

எந்த ஆண்மகனுக்காகவும் தான் இதுபோல் ஏங்கியதில்லை என்று அவனிடம் உளறி விட விரும்பாமல், இறைச்சியை எடுத்து வாயிலிட்டுச் சுவைத்தாள். கொஞ்சம் கடினமாக இருந்தாலும் மிக சுவையாக இருந்தது.

"உன்னுடைய அப்பா எப்படி இருக்கிறார்?"

ரெஸா தலையசைத்தான். சட்டென்று அவனை வருத்தம் தொற்றிக் கொண்ட்து. "சிறுநீரகத்தில் தான் ஏதோ பிரச்சினை என்று சொல்கிறார்கள். இன்னும் சில பரிசோதனைகள் செய்ய வேண்டும்."

"ஓஓ, வருத்தமாக இருக்கிறது ஹஸன். அதிக வயதானவரா?"

அண்ணாந்து கூரையைப் பார்த்தான் ரெஸா. "எழுபத்தி இரண்டு அல்லது எழுபத்தி ஐந்து இருக்கலாம், சரியாகத் தெரியவில்லை."

"அவர் மீது உனக்கு மிகுந்த அக்கறை உண்டு. அப்படித்தானே?"

இந்தக் கேள்வியை இதுவரை யாருமே அவனிடம் கேட்டதில்லை. சிறிது நேரம் யோசித்தான். "என்னுடைய அப்பா, அவர் வடக்கே பொட்டிஸ்கம், சொக்கொட்டோ நகரங்கள் வரை பயணம் போய் மாடுகளை வாங்கிக் கொண்டு வந்து, மறுபடியும் கிழக்கு மாகாணங்களுக்குப் பயணம் செய்து ஈக்போ மக்களுக்கு விற்பார். அவர் ஒருவருக்கு மட்டும்தான் என் மீது அக்கறை இருந்தது."

அவனுக்குத் தொண்டையை அடைத்தது. அவனை அரவணைத்துக் கொண்டு, அவர் சீக்கிரம் குணமடைந்து விடுவார் என்று ஆதரவாகச் சொன்னாள்.

மீண்டும் படுக்கையில் அருகருகே படுத்துக் கொண்டு, ஒருவர் மற்றொருவரின் சுவாசத்தின் ஓசையைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவள் மறுபடியும் கண் விழித்தபோது நேரம் மதியம் நான்கு மணிக்குப் பக்கமாக இருந்தது.

"நான் கிளம்ப வேண்டும், நேரமாகி விட்டது" என்று எழுந்தாள்.

"கட்டாயம் போக வேண்டுமா?"

"ஆமாம், விளையாடாதே."

தன் கைப்பையை எடுத்துத் துழாவி, அதிலிருந்து ஒரு ரசீதை எடுத்து அவன் கையில் கொடுத்தாள். கையைக் கட்டிக்கொண்டு அவன் முக பாவனையையே கவனித்துக் கொண்டிருந்தாள்.

"WAEC , மேற்கு ஆப்பிரிக்கத் தேர்வுக் கழகம். எனக்காகவா?"

புன்முறுவலுடன் தலையசைத்தாள்.

"அட," நெற்றியைச் சுருக்கிக் கொண்டு அந்தத் தாளைப் பார்த்தவனின் முகம், திகைப்பிலிருந்து, மகிழ்ச்சிக்கு மாறி, பின் ஆழ்ந்த யோசனையில் மூழ்கியது.

"நீ படிப்புக்குத் திரும்ப வேண்டியது முக்கியம் என்று நினைக்கிறேன் ஹஸன்."

அவன் தலை இன்னும் அந்த ரசீதைப் பார்த்தவாறே குனிந்திருந்தது.

"உன்னைப் பணம் கட்டச் சொன்னால், நீ தாமதம் செய்வாய், அதனால்தான் உரிமையுடன் நானே கட்டி விட்டேன்."

மீண்டும் பையில் கை விட்டு, ஒரு பழுப்பு நிற உறையை எடுத்தாள்.

"இப்போது நீ செய்ய வேண்டியதெல்லாம், இந்த விண்ணப்பத்தைப்

பூர்த்தி செய்துவிட்டு, சில வகுப்புகளில் கலந்து கொண்டு, தேர்வு எழுதுவது மட்டும் தான்." அந்த உறையை அவனிடம் நீட்டினாள்.

"ஆமாம், ஆமாம், ரசீதை நேர்த்தியாக மடித்து, ஜீன்ஸ் பாக்கெட்டில் வைத்துக் கொண்டான். முகத்தை மூடிக் கொண்டு பெருமூச்செறிந்தான்."

"இது உனக்கு அவ்வளவாக மகிழ்ச்சி தரவில்லைதானே?"

"இல்லையில்லை, நான் சந்தோஷமாக இருக்கிறேன், அது என்ன விஷயம் என்றால், நான் கொஞ்சம் யோசிக்க வேண்டும். புரிகிறதா?"

அவள் தலையசைத்தாள். "எனக்குத் தெரியும். நன்றாக யோசித்துப் பார்."

சற்று நேரம் இருவரும் மௌனமாக இருந்தார்கள்.

அந்த தர்மசங்கடமான சூழலை தளர்வாக்கும் பொருட்டு பேச்சைத் மாற்றினாள் பிந்த்தா.

"காம்பவுண்டு மதிலின் மீது முள் கம்பி வேலி போட்டுருக்கிறது" ஜெனெரேட்டர் திருட்டுக்குப் பின், முன்க்கைலா ஆட்களைக் கூட்டி வந்து வேலி போட்ட விஷயத்தை விளக்கினாள்.

"அப்போ, அடுத்த முறை வரும் போது, வேறு வழி ஏதாவது தேட வேண்டும்" அவன் சிரித்தான்.

பிந்த்தாவும் உடன் சிரித்தாள். பின், படுக்கையிலிருந்து இறங்கினாள்.

"இங்கே வெந்நீர் கிடைக்கும் என்று நினைக்கிறேன். எனக்குக் குளிக்க வேண்டும்"

—

ஜாஸ், ஆகஸ்ட், 1995.

ஜங்ஷனில் இருக்கும் பையன்களோடு சேர்ந்து யாரூவும் சுற்றுகிறான் அந்த நாட்களில் பெட்ரோல் தட்டுப்பாடு நிலவியதால், அவர்கள் எல்லோரும் சாலையோரம் நின்று , வண்டியில் போவோர் வருவோர்க்கு, கறுப்பு மார்க்கெட்டில் பெட்ரோல் விற்று நல்ல பணம் பார்க்கிறார்கள் என்றும் கேள்விப்பட்டாள் பிந்த்தா.

இந்த விஷயத்தைப் பல முறை ஜுபைரூவிடம் சொன்ன போதும், ம்ம் என்ற உறுமலைத் தவிர அவனிடமிருந்து வேறேந்தப் பதிலுமில்லை.

புதிதாகத் துவங்கியிருந்த, சுய்யா, (இறைச்சி வறுவல்) கடையை நடத்துவதிலுள்ள பிரச்சனைகளே அவன் மனதை ஆக்கிரமித்திருந்தன. முதலில் 1982ஆம் ஆண்டு துவங்கிய கடை, அரசு தனிப் பிரிவு task force, போலீசாரால் 1985ஆம் ஆண்டு நொறுக்கித் தள்ளப்பட்டது. தங்களுக்குப் பிடிக்காத எதையும் அடியோடு அழித்து விடுவதென்ற முடிவில்தான் தனிப்படை அலைந்து கொண்டிருந்தது. அதன் பின் வருடக்கணக்காக, 'மஜாலிஸா'வில் போய் அமர்ந்து கொள்வான் ஜுபைரு. அங்கு வேலையில்லாவர்கள் நாள் பூராவும் அமர்ந்து, வெட்டியான விவாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள். மதியமானதும், அடர்த்தியான பாலும் தானியமும் கலந்து செய்யப்படும் ஃபுராடா நோனோ பானத்தைக் குடித்துக்கொண்டு, மாலையானதும் இருண்ட முகத்துடனும், காலி பாக்கெட்டுடனும் திரும்புவார்கள்.

ஜுபைரு, புதிய சுய்யா கடை ஒன்றை மீண்டும் திறக்கும் வரை பள்ளி ஆசிரியையாக இருந்த பிந்த்தாவின் சொற்ப சம்பளத்தை வைத்து மிகக் கடினமான சூழலில் குடும்பத்தை நடத்தினார்கள். சில வருடங்கள் புதிய கடையில், வியாபாரம் நல்ல முறையில் நடந்தது. அதன் பின் ஒரு போலீஸ் அதிகாரியுடன் பிரச்சனை எழுந்ததில் நிலைமை மாறிப் போனது. ஜுபைரு, கடை நடத்துவதற்கான லைசன்ஸ் வாங்க வேண்டுமென்று போலீஸ் கட்டாயப்படுத்தினார். ஆனால்,அதன் ரசீதைக் கொடுக்கவே மாட்டார். எப்போதெல்லாம், அவர் கையில் பணம் தீர்ந்து போகிறதோ, அப்போதெல்லாம் ஜுபைருவிடம் வந்து, லைசன்ஸைப் புதுப்பிக்கச் சொல்லிப் பணம் கேட்பார். ஒருநாள் இருவருக்கும் நடந்த கைகலப்பில், போலீஸின் இரண்டு பற்களை ஜுபைரு உடைத்ததுடன், எல்லாம் முடிந்து போனது.

கடையிலுள்ள பொருட்களையெல்லாம் அபகரித்து, ஜுபைருவையும் லாக்கப்பில் வைத்து விட்டார்கள். பெருந்தொகையைப் பிணையாகக் கொடுத்து ஒரு வாரம் கழித்து அவனை மீட்டார்கள். அதன் பின் பல வியாபாரங்களை முயற்சி செய்து பார்த்துவிட்டான். பழைய துணிகளை வாங்கி விற்றான், மோட்டார் சைக்கிள் டாக்ஸி ஓட்டினான். பைக்கை இடித்த பின் அதுவும் நின்று போனது, அதன் பின் பல மாதங்கள் அவன் நொண்டிக் கொண்டிருந்தது தான் கிடைத்த பலன். பின் கிராமத்து உழவர்களிடமிருந்து வெங்காயம் வாங்கி விற்று நஷ்டமடைந்தான். முடிவாக, அங்வான் ருபுக்கா ஜங்ஷனில் மற்றுமொரு சுய்யா கடை அமைக்க இடம் கிடைத்து நடத்திக் கொண்டிருக்கிறான். வருமானத்திற்காக அவன் போராடிக் கொண்டிருக்க, பிந்த்தாவின் சம்பளமும் கடந்த எட்டு மாதங்களாகத் தரப் படவில்லை. அதனால் ஆசிரியர்கள் ஆறு மாதமாகப் போராட்டத்தில்

ஈடுபட்டிருக்கிறார்கள்.

இறுதியாக, மகனிடம் தானே பேசிப் பார்க்கலாம் என்று முடிவு செய்தாள். மகனென்றே ஒப்புக் கொள்ளக் கூடாது என்று அவளுக்கு அறிவுறுத்தப் பட்டு வளர்க்கப் பட்ட மகன். ஜங்ஷன் பையன்கள் கறுப்பு மார்க்கெட்டில், திருட்டுத்தனமாகக் கஞ்சா விற்கிறார்களென்றும், அந்த வழியாக நடந்து செல்லும் பெண்களை அவர்கள் கேலி செய்து தொல்லை கொடுப்பதாகவும் உலவிய வதந்தியைக் கேட்டதிலிருந்து, நிச்சயமாக யாரூவிடம் இது பற்றிப் பேச வேண்டும் என முடிவெடுத்தாள்.

ஆனால், இரவு உணவின் போது இரு கைகளிலும் பருத்த ப்ளாஸ்டிக் பைகளை ஆட்டிக் கொண்டே, சிரித்த முகத்துடன் முன்க்கைலாதான் வந்தான்.

எப்போது வேண்டுமானாலும் பள்ளி திறக்கக்கூடும் என்பதால், பாடத் திட்டத்தை தயார் செய்து கொண்டிருந்த பிந்த்தா, நிமிர்ந்து பார்த்தாள். அரசுக்கும், யூனியனுக்கும் இடையே பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருந்தது. இதற்கு முன்பும் பல முறை நடந்திருக்கிறது. இந்த முறை ஏதாவது மாறுதல் ஏற்படுமா என்பது நிச்சயமில்லை.

"எங்கிருந்து வந்தது இது?"

பாக்கெட்டில் கையை விட்டு ஒரு கற்றை பணத்தாள்களை எடுத்து அவள் கண்முன் காட்டிய போது, முன்க்கைலாவின் புன்னகை மேலும் விரிவடைந்தது. "என்னுடைய தேர்வுக் கட்டணம்" மகிழ்ச்சியில் பொங்கினான்.

"என்ன!! தேர்வுக் கட்டணமா!! உங்கள் அப்பாவுக்கு எங்கிருந்தோ பணம் கிடைத்து இருக்கிறது." கண்களில் மின்னும் புன்னகையுடன் கைகளை வானை நோக்கி உயர்த்தினாள்.

"அப்பா இல்லை, யாரூ கொடுத்தது."

அவள் கைகள் சட்டெனக் கீழிறங்கியது. "என்னது? யாரூவா?"

"இந்தப் பணத்தையும் பையிலிருக்கிற பொருள்களையும் அவன்தான் கொடுத்தான். அப்புறம் உங்களுக்குக் கொடுக்கச் சொல்லி இதைக் கொடுத்தான்" பாக்கெட்டிலிருந்து சிறிய நோட்டுக் கட்டு ஒன்றை உருவினான்.

அந்தப் பணத்தைப் பார்த்தபோது, ஹதீஸாவின் தேய்ந்து போன செருப்புகளையும், ஹுரைராவின் பல்வலியையும் ஞாபகத்திற்கு வந்தது." "அதை அப்படியே மேசை மீது வை." அப்படி சொன்னதற்காகத் தன் மீதே

வெறுப்பு கொள்வோம் என்பது அவளுக்குத் தெரியும்.

ஒவ்வொரு முறையும் யாரூ வீட்டிற்கு வரும்போதெல்லாம் கஞ்சாவின் நெடி வட்டமிடுவதை உணரத் தொடங்கினாள். இரவு நேரங்கழித்து வருபவன் அதிகாலையிலேயே வீட்டை விட்டுக் கிளம்பிச் சென்று விடுவான். செல்லும்போது, அவளிடம் வந்து, ஒரு விரலைத் தரையில் ஊன்றி முட்டுக் கொடுத்துக் கால்கள் மடங்க முழங்காலிட்டு அமர்ந்து காலை வணக்கம் சொல்வான். ஒவ்வொரு முறையும் 'ம்ம் 'என்று ஒலியெழுப்பி விட்டு முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொள்வாள். சில சமயங்களில் நகராமல் அங்கேயே இருப்பான்.அவள் ஏதாவது சொல்லக் கூடும் எனக் காத்திருப்பவன் போல... அல்லது அவளிடம் மேலும் ஏதோ சொல்ல விரும்புவன் போல...ஆனால், அவன் கண்களை அவள் கண்களை ஒருபோதும் நேருக்கு நேராக சந்தித்ததில்லை என்பதால், இவற்றையெல்லாம் அவள் அறியவே இல்லை. ஒவ்வொரு முறையும் அவன் எழுந்து வெளியே செல்லும் போது, அவள் இதயம் மூன்று முறை இறுகிப் பிசைவதாக உணர்வாள்... எப்போதும் மூன்று முறை...

ஆனால், பணமும், பை நிறையப் பொருட்களும் வந்து கொண்டே இருந்தன. ஜுபைரூவும் அதிகமாக வெட்கப்படவில்லை, ஏனென்றால்.. மனைவியின் பணத்தில் அவன் சாப்பிடவில்லை. இது மகனிடமிருந்து வருகிறது. அவனுடய "மூத்த" மகனிடமிருந்து.

ஒரு டிசம்பர் மாத அதிகாலை, புழுதிப்புயல் ஜன்னல் கண்ணாடியில் மோதிக் கொண்டிருந்த நேரத்தில், தொழுகைக்காக பிந்த்தா எழுந்து வந்த போது, அந்த நெடியை உணர்ந்தாள். சற்று நேரம் அசையாமல் நின்றாள். நாசித் துவாரங்கள் உணர்ந்த நெடியைப் பின் தொடர்ந்து சென்றவள் யாரூவின் அறையின் முன் நிற்கையில் இதயம் வேகமாகத் துடித்தது. அவள் பயந்து கொண்டிருந்த விஷயம் உண்மையாகி விட்டது. கதவிடுக்கிலிருந்து கஞ்சாவின் நெடி கசிந்து கொண்டிருந்தது. கதவைத் தட்டிய போது, அவள் கை முட்டிகளுக்கிடையில் கதவின் சட்டங்கள் கிடு கிடுவென ஆடியதை உணர்ந்தவள். அவன் திறக்கும் வரை தட்டிக் கொண்டே இருந்தாள்.

குடியிருப்பிலிருக்கும் மற்ற ஆண்கள் அனைவரும் காலை நேரத் தொழுகைக்காக மசூதி சென்றுவிட்டதால், பெண்கள் மட்டுமே திரைச் சீலையை விலக்கி என்ன நடக்கிறதென்று எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவனைப் பளாரென்று அவள் அறைந்தபோது முகத்தைக் குனிந்து கொண்டான்.

"என் வீட்டிற்குள்ளேயா? யாரூ? இதுதான் நீ உன் தம்பிக்குக் கற்றுக் கொடுக்கும் பாடமா, உதவாக்கரைப் பையனே! ஆண்களெல்லாம்

மகூதிக்குப் போயிருக்கிறார்கள், நீ இங்கே உன் கேடு கெட்ட வாழ்க்கையை ஊதிப் புகைத்துக் கொண்டிருக்கிறாய்...அதுவும் என் வீட்டுக் கூரையின் கீழ்...

மிகக் குறுகிய நேரமே அவள் கண்களைப் பார்த்தான். பிந்த்தா மீண்டும் அவன் கன்னத்தில் அறைந்தாள். அதன் பின் சினம் அவளது கைகளுக்கு உயிர் கொடுத்து விட்டது. மாறி மாறி, அவனை அடித்துக் கொண்டே இருந்தாள். அவளிடமிருந்து தப்பியோடி ஒரு சிறிய அறைக்குள் ஒளியப் போனான். கால்கள் தட்டி விட அப்படியே மல்லாந்து அங்கிருந்த மெத்தையொன்றின் மேல் விழுந்தான். அடிப்பதை நிறுத்தி விட்டு அவனைப் பார்த்தாள் பிந்த்தா. அவளைப் போலவே அவனும் மூச்சு வாங்கிக் கொண்டிருந்தான். அவன் கண்களில் கோபமும் வலியும் தெரிந்தன. உடனே அவன் முகத்தைத் திரும்பிக் கொண்டாலும், அந்த வலி மட்டுமே அவள் நினைவுகளில் தங்கிப் போனது. காலமெல்லாம் அந்த வலிதான் மனதில் நிரந்தரமாக வாழ்ந்து கொண்டிருக்கிறது.

அந்த இரவுதான் யாரூ தன் சொந்த வீட்டில் தங்கியிருந்த கடைசி இரவு. பிந்த்தா அவனை உயிருடன் பார்த்ததும் அதுவே கடைசி முறை. துணிமணிகள் அனைத்தையும் பொறுக்கிச் சிறு பையில் திணித்துக் கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பிப் போய்விட்டான். அவனுடைய ஜங்ஷன் நண்பர்கள் ஒருவன் வீட்டில் தங்கியிருப்பதாக முன்க்கைலா சொல்லிக் கொண்டிருந்தான்.

அங்கேதான் போலீஸ் அவனைப் பார்த்திருக்கிறார்கள்... யாரூ தங்கியிருந்த அறையின் உரிமையாளனை ஒரு திருட்டு சம்பவத்தில் சந்தேகப்பட்டுத் தேடி வந்த போலீசார் கதவை உடைத்து அறையின் உள்ளே நுழைந்ததும் அங்கு யார் இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளக் கூட அக்கறையின்றி, கண் மண் தெரியாமல் உடனே துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்..

அவனுடைய நண்பர்கள், ஈரம் உலராத ரத்தம் வழிந்து கொண்டிருக்கும் யாரூவின் இறந்த உடலை வீட்டுக்கு எடுத்து வந்தபோது, பிந்த்தா தன் மகனை இரு கைகளாலும் ஏந்திக் கொண்டு அவனுடைய பெயரை உரக்கக் கூவி அழைத்தாள். "யாரூ!!!" பெருங்குரலெடுத்து அவள் கதறிய ஓலம், உயரப் பறந்து கொண்டிருந்த பறவைகளை ஒரு கணம் அதிர்ச்சியில் உறைய வைத்த பின் நேராகச் சென்று ஆகாயத்தின் அடிவயிற்றைக் கீறிக் கிழித்தது.

—

17

“நலிந்த எலும்பென்ற சொல் கேட்கையில் முதிர்பெண்டிர் மனதில் சஞ்சலம் எழும்பும்”

பழக் கிண்ணத்தில் அடுக்கியிருந்த ஸ்ட்ராபெர்ரிப் பழங்கள் ஏதோ ஒரு வகையில் ரெஸாவின் மனதை ஈர்த்தன. அதன் வடிவம், சிவப்பு நிறத் தோல், அதன் மீது தெளித்தாற் போலிருந்த மஞ்சள் புள்ளிகள்... இவற்றில் ஏதோ ஒன்று மனதைக் கவர்ந்தது. வேற்று நாட்டில் விளையும் இந்தப் பழங்களின் சுவை எப்படி இருக்கும் என்று நினைத்துப் பார்த்தான் ரெஸா. அதன் பச்சை வண்ண அரும்புகள் மேலே தெரியும்படி நேர்த்தியாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. செனேட்டர் புபா மைக்குடியின் கை, கிண்ணத்தின் மேற்புறம் சற்று அலைந்து பின் ஒற்றைக் கனியின் மீது மையம் கொண்டதைக் கவனித்தான். அவர் அந்தக் கனியை எடுத்துச் சுவைக்கும் போது அவர் முகபாவத்தைக் கவனித்தான். அவரது சுவை நரம்புகள் எந்த விதமான அனுபவத்தை அடைந்திருக்கும் என வியந்தான்.

“நீ எனக்குப் பிறந்த நாள் பரிசு எதுவும் கொண்டு வரவில்லை ரெஸா.” செனேட்டர் பழத்திலிருந்து மேலும் ஒரு துண்டைக் கடித்தார். எழுபது வயதாகிறது, தெரியுமா?”

சொகுசான கம்பளத்தில் சாய்ந்து அமர்ந்தார், அவரது முழங்கைகளைத் தாங்கியபடி அழகான வேலைப்பாடு கொண்ட தலையணைகள் இருபுறமும் இருந்தன. அவர் முன் கனி வகைகளும், தின்பண்டங்களும் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. ஸ்ட்ராபெர்ரியைத் தவிர, ஆப்பிள், திராட்சை, வெண்ணெய் பழம், வாதுமைப் பழங்களும் இருந்தன. அருகில் இன்னொரு கிண்ணத்தில் ஆவி பறக்கும் சூடான அவித்த வேர்க்கடலைகள் இருந்தன.

"செனேட்டர், எனக்குத் தெரியாது." ரெஸா விழுங்கினான்.

"இந்த வாழ்த்து அட்டைகளைப் பார்" வரிசையாக அடுக்கி வைக்கப் பட்டிருக்கும் வித விதமான வாழ்த்து அட்டைகளை நோக்கிக் கையைக் காட்டி சைகை செய்தார். சில சிறியதாக, கலைநயமிக்கதாக இருந்தன. ஒரு அட்டை மட்டும் சிறு குழந்தை உயரத்துக்கு இருந்தது.

அவற்றை ரசிக்கும் பாவனையில் ரெஸா தலையாட்டினான்.

எழுந்து சென்று ஒரு வாழ்த்தைக் கையிலெடுத்தார். மெல்லிய ஃபிரேமுடைய தன் கண்ணாடியை அணிந்து கொண்டு வாசிக்க ஆரம்பித்தார். "உங்கள் வாழ்க்கை எங்கள் ஆசீர்வாதம்." ஆங்கிலத்தில் அதை வாசித்தவர் சற்றே நிறுத்தித் தொண்டையைச் செருமிக் கொண்டார். "அதனால் தான் உங்கள் ஆயுள் பெருக இறைவனிடம் வேண்டிக் கொள்கிறேன். இனிய பிறந்த நாள் வாழ்த்துகள் தாத்தா."

என்ன சொல்வதென்று தெரியாமல் மீண்டும் தலையாட்டி வைத்தான் ரெஸா.

"அது என் பேத்தியிடமிருந்து வந்த வாழ்த்து," செனேட்டரின் குரலில் பெருமை இழையோடியது. "ஐந்து வயதுதான், ஆனால் மிக அறிவான குழந்தை"

"உண்மை, மிக அறிவாளி போலத் தெரிகிறது."

அவர் முன்னால் அடுக்கி வைக்கப்பட்டிருந்த திண்பண்டங்களைத் திருப்தியுடன் நோட்டமிட்டவர், ஒரு ஆப்பிளைக் கையிலெடுத்தார். மீண்டும் சாய்ந்து அமர்ந்தவர், முகத்துக்கு நேராக ஆப்பிளை ஆட்டிக் கொண்டே இருந்தார். "உனக்குத் தெரியுமா, இந்த சின்னக் குழந்தைகளுக்காகத்தான் நாம் தீவிரமாக வேலை செய்ய வேண்டும். எப்படி வேண்டுமானாலும் ஆட்சி நடத்தலாம் என்று நினைக்கும் திறமையில்லாத முட்டாள்கள் கையில் குழந்தைகளின் எதிர்காலத்தை அடகு வைத்து விடக்கூடாது. பேசிக்கொண்டே 'கர்ரக்' என்று ஆப்பிளைக் கடித்து, பெரிய துண்டை மென்றார்."

"நிச்சயமாக சார்."

பழங்களை எடுத்துக் கொள்ளுமாறு ரெஸாவுக்குச் சைகை செய்தார். பழக்கிண்ணத்தை அவன் முன் நகர்த்தியவர், எதை வேண்டுமானாலும் தேர்ந்தெடுத்துக் கொள் என்று சொல்பவர் போல மீண்டும் தலையசைத்தார்.. அவன் கண்கள் ஸ்ட்ராபெர்ரியின் மீது அலைந்ததை கவனித்துக் கொண்டிருந்தார்.

"ஒன்றுக்கும் ஆகாத இந்த ரசாயனப் பொருளை உறிஞ்சி உறிஞ்சி உங்களை நீங்களே கொல்லுகிறீர்கள்" ஆப்பிளைத் தன் முகத்துக்கு முன் ஆட்டியவாறே பேசினார். "நம்முடைய மூதாதையர்கள் அனைவரும் கனிகளைத்தான் உண்டார்கள். அவர்கள் எவ்வளவு நீண்ட காலம் உயிர் வாழ்ந்தார்கள் தெரியுமா? என் தந்தை, அல்லாஹ் அவர் ஆன்மாவை அமைதி கொள்ளச் செய்யட்டும், அந்தக் காலத்தில், 1937 ம் வருடம், அஜாரே நகரிலிருந்து கானோ நகரத்துக்குத் தலையில் பொருட்களைச் சுமந்துகொண்டு பயணம் செய்வார். அவர் பெரிய வியாபாரி. ஜன்னா தொப்பிகளை மெடுகுரியிலிருந்து வாங்கிக் கொண்டு போய் அதை கானு வில் விற்பார். பின் அங்கிருந்து ஜாரியாவுக்குப் பயணம் போய் அங்கே கிடைக்கும் சிறந்த பின்னல் வேலைப்பாட்டுத் துணிகளை வாங்கி வந்து மெடுகுரியிலும், கானோவிலும் விற்பார். அந்த உழைப்பு அவரைப் பெரிய செல்வந்தராக்கியது. வல்லாஹி."

"அஜாரேவிலிருந்து கானுவிற்கு நடந்தே போனாரா?" ரெஸா வியந்தான்.

"ஆமாம், அப்படித்தான் போவார். அவர், என் தந்தை அந்திம காலம் வரை நன்றாக வாழ்ந்தார். ஒரு முறை வழிப்பறிக் கொள்ளைக்காரர்களிடம் மாட்டிக் கொண்டார். மடியில் நிறையப் பணத்தைக் கட்டிக் கொண்டு நடந்து போய்க் கொண்டிருந்தபோது யாரோ அவரைப் பின் தொடர்வதைப் பார்த்துவிட்டார். முள் மீது காலை வைத்து விட்டவர் போல நடித்துக் கொண்டே அந்தத் திருடர்கள் அனைவரும் பின்னால் எங்கெங்கே எப்படி நின்று கொண்டிருக்கிறார்கள் என்று நன்றாகக் கவனித்துக் கொண்டார்___.

அப்போது, மூஸா, தேநீர் கோப்பைகளை எடுத்து வந்தான். அந்தக் கலை நயமிக்க கோப்பையில் நீல வண்ணத்தில் வரையப்பட்டிருந்த பூக்களின் வடிவங்களை ரசித்தான் ரெஸா. தேநீர்க் கெண்டியின் மூக்கிலிருந்து சீரான ஆவி பறந்து கொண்டிருந்தது. செனேட்டர் அமர்ந்திருந்த கம்பளத்தின் முன்பாக தேநீர் தட்டை வைத்தான் மூஸா.

"நல்லது மூஸா, நன்றி" செனேட்டர் அவனுக்கு முகமன் கூறினார்.

மூஸா கூச்சத்துடன் தலையசைத்தான். அப்போது செனேட்டரின் மகன் உள்ளே நுழைந்தான்.அவன், ரெஸாவை விட வயதில் இளையவன். அவனை விட ஒல்லியான உடல்வாகு. தன் தந்தையின் அருகில் வந்து அவன் அமர்ந்த போது, இருவரும் ஒத்த சாயலில் இருப்பது ரெஸாவுக்கு நன்கு தெரிந்தது. வந்தவன் ரெஸாவைத் துளியும் கண்டுகொள்ளாததால், அவனும் மிக அமைதியாக, அவர்கள் பேசுவதைக் கவனிக்காதவன் போல அமர்ந்து கொண்டு, 1937ம் வருடம், செனேட்டரின் தந்தை, வழிப்பறித் திருடர்களை

எவ்வாறு எதிர் கொண்டிருப்பாரென்று யோசித்துக் கொண்டிருந்தான்.

"அப்பா, அந்த பயணம் பற்றி என்ன சொல்கிறீர்கள்?"

அஹ், ஹம்ஜா, மறுபடியும் பயணமா?'

"அப்பா, இதைப் பற்றித்தான் ஏற்கெனவே பேசி விட்டோமே?'

"ஹம்ஜா, இந்தப் பயணம் அவ்வளவு முக்கியமானது இல்லையே?"

"நான் என் நண்பர்களுடன் செல்கிறேன் அப்பா, ப்ளீஸ்'

"ம்ம், ஆனால் இதற்கு நான் பணம் தர மாட்டேன்"

"ஓ!! அப்பா, என்ன பேசுகிறீர்கள்? நான் கையில் பணமில்லாமல் தனியாக அலைவதுதான் உங்கள் விருப்பமா?"

"நீ அடுத்த மாதம் உன் கல்லூரிக்குப் போகப் போகிறாய், அதற்கு முன்பு ஏன் இப்படி உலகம் சுற்ற வேண்டுமென்று நினைத்தேன்"

"ஹபா!! அப்பா, எனக்கு போரடிக்கிறது, நான் இதற்கு முன் மாட்ரிட் போனதே இல்லை. எனக்கு ஸ்பானிஷ் கற்றுக் கொள்ள வேண்டும்."

"ஒரு வாரப் பயணம் இல்லையா?"

ஆமாம்"

"ஒரு வாரத்தில் எப்படி ஸ்பானிஷ் மொழியை கற்றுக் கொள்வாய்?"

"அது கற்றுக் கொள்ள ஒரு ஆர்வத்தை ஏற்படுத்தும் அல்லவா, நான் சில இடங்களைப் பார்க்க வேண்டும், ம்ம்'

"ஓ, சரி சரி... போய் வா."

"நன்றி அப்பா, எனக்கு செலவுக்குக் கொஞ்சம் பணம் வேண்டும்'

"ஹம்ஜா, உன்னுடைய இந்த வற்புறுத்தல்..."

"வீசாவைப் பற்றியும் நீங்க உங்க ஆட்களுடன் பேசணும்."

வாயில் ஒரு திராட்சையைப் போட்டுக் கொண்டே, மையமாகத் தலையசைத்தார் செனேட்டர்.

"ஹம்ஜா, என்னைச் சந்திக்க ஒரு விருந்தாளி வந்திருக்கிறார்... தெரிகிறதா?"

அந்த இளைஞன் ரெஸாவைப் பார்த்து அரைகுறையாகத் தலையாட்டினான். பின் அவனுடைய ப்ளாக் பெர்ரி ஃபோனின் பட்டனைத்

தட்ட ஆரம்பித்து விட்டான். ஹம்ஜாவின் மென்மையான விரல்களைப் பார்த்த ரெஸா, இந்தக் கைகள் சொந்த வீட்டின் கொல்லைப்புறத் தோட்டத்தைச் சுத்தம் செய்யக் கூட மண்வெட்டியைப் பிடித்திருக்காது என்று நினைத்துக் கொண்டான்.

ஃபோனைத் தட்டிக்கொண்டே, தந்தையிடம் நெருங்கி தாழ்ந்த குரலில் ஏதோ பேசினான். அப்போதும் அவர்கள் பேசுவது ரெஸாவின் காதில் விழுந்தது. பின், ஒரு ஆப்பிளை எடுத்து அவன் கடித்த போது எழுந்த பலமான 'கர்ரக்' சப்தத்தில், தந்தையையும் மகனும் அவன்புறம் திரும்பிப் பார்த்தார்கள்.

தனது கோப்பையில் தேநீர் ஊற்றி, அதை உறிஞ்சியவாறே மெல்லிய குரலில் மகனிடம் பேசிக்கொண்டிருந்த செனேட்டரைப் பார்க்கையில் எங்கோ ஒரு மருத்துவமனைக் கட்டிலின் குறுகிய படுக்கையில் படுத்து வாடிக்கொண்டிருக்கும் தன் தந்தையை அவனால் நினைக்காமலிருக்க முடியவில்லை. அந்தப் படுக்கையில் அண்மையில் யாரோ ஒருவர் உயிரிழந்திருக்கவும் கூடும். ஹம்ஜா அறையை விட்டு நீங்கிய போது செனேட்டரின் முகத்தில் தவழ்ந்த குறும்புன்னகையையும், கண்களில் ஒளிர்ந்த பெருமிதத்தையும் பார்த்தவாறிருந்தான் ரெஸா.

"ஹம்ஜா, சிறு பிள்ளை" செனேட்டர் சிரித்துக் கொண்டார். அவன் கதவை மூடியதும், ரெஸாவின் பக்கம் திரும்பியவர் அவனைத் தேநீர் அருந்துமாறு சைகை செய்தார். நன்றி சொல்லிவிட்டு பவ்யமாக மறுத்து விட்டான் ரெஸா. தேநீரை, வெறுமனே பொழுதைப் போக்க அருந்தும் முறை அவனுக்கு விளங்குவதே இல்லை. 'ரொட்டித் துண்டுகள் இல்லாமல் வெறும் தேநீரா?'

"உங்கள் மகன் படிக்கிறாரா?"

"ஆமாம், இப்போதுதான் பட்டப் படிப்பை முடித்தான், உடனே, அவன் உயர் கல்விக்குப் போக வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன், இந்தப் பையன் மாட்ரிட் போய் ஒரு வாரத்தில் ஸ்பானிஷ் கற்றுக் கொள்ளப் போகிறானாமே, நம்பமுடிகிறதா?" தலையைக் குலுக்கிக் கொண்டார். "அவன் அப்படியே எங்கப்பாவைக் கொண்டிருக்கிறான், எப்போதும் அவனுக்குப் புதிய இடங்களைப் பார்க்க வேண்டும்."

"உங்கள் மகன் மாட்ரிட் நகரிலா படித்தார்?"

"இல்லை இல்லை, லண்டனில் பட்டப் படிப்பை முடித்தான். உனக்கு மாட்ரிட் தெரியுமா ரெஸா?"

"ஓ, எனக்கு ரியல் மாட்ரிட் மட்டும் தான் தெரியும்"

"அந்தக் கால்பந்து அணிதானே?"

"ஆமாம்."

"செனேட்டர் தேநீரை உறிஞ்சினார். ரெஸா, ஆப்பிளை முடித்தான். அவர்கள் UCLA என்று பேசிக் கொண்டது அவன் காதில் விழுந்தது. ஆனால் அது என்னவென்று கேட்க விரும்பவில்லை.

"UCLA" ரசிக்கும் பாவனையில் தலையசைத்தான்.

"ஆமாம், அவன் முதுகலைக் கல்விக்காக."

"அதுவும் லண்டனில் இருக்கிறதா?"

செனேட்டர் சிரித்தார். "அது US ரெஸா, UCLA அமெரிக்காவில் உள்ளது."

ரெஸா புன்னகைத்தான். "நான் மீண்டும் படிக்கப் போகலாமென்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்."

தலையாட்டிய செனேட்டர், ரெஸாவின் முன் தன் கோப்பையை உயர்த்திக் காட்டினார். அவசரமாக ஏதோ சொல்ல நினைத்தார். ஆனால், வாயில் தேநீர் இருந்ததால் சற்று நேரம் எடுத்துக் கொண்டார். பின், மேலும் தேநீர் அருந்தினார். "மிக நன்று ரெஸா, மிக நன்று" கோப்பையை ஜாக்கிரதையாகத் தட்டில் வைத்தவர், மீண்டும் சாய்ந்து கொண்டார். அவர் கண்கள் இங்குமங்கும் அலைந்து கொண்டிருந்தன.

"என்னுடைய GCE தேர்வை மறுபடியும் எழுதலாம் என்று நினைக்கிறேன், பார்க்கலாம் எப்படிப் போகிறதென்று, உங்களுக்குப் புரியும்"

அவர் தலையசைத்தார். "அப்படியென்றால், நீ ஸ்கூலுக்குப் போயிருக்கிறாய்?"

சிரித்துக் கொண்டே, "ஆமாம்" என்றான்.

"ரெஸா, இதற்குத்தான் நாம் போராடுகிறோம் தெரியுமா? நினைத்துப் பார், உன்னைப் போன்ற ஒரு புத்திசாலிப் பையன், பள்ளிக்குச் செல்ல முடியவில்லை, ஒன்று மாற்றி ஒன்றாக ஏதோதோ காரணங்கள். இந்த நியாயமின்மைக்குத்தான் நாம் போராடுகிறோம். உன் போன்றவர்களுக்கு நல்ல எதிர்காலம் அமைய வேண்டுமென்பதற்காகத்தான் இந்த வயதிலும் நான் களத்தில் இருக்கிறேன்"

"மிகவும் உண்மை சார்."

"உன் தொழில் எப்படிப் போகிறது?"

"இறைவனுக்கு நன்றி, பரவாயில்லை."

"அந்தப் போலீஸ்காரன், இப்போது எதுவும் தொல்லை தருவதில் லையே?"

"இல்லை."

தொண்டையைச் செருமிக் கொண்டே அமர்ந்தார். தேநீரை உறிஞ்சியவர், கோப்பையில் ஏதும் மீதமில்லை என்று அறிந்து, குவளை யிலிருந்து மேலும் கொஞ்சம் ஊற்றிக் கொண்டார். "உனக்குத் தெரியுமா? என் உறவினர் பெல்லோ, ஏழு வருடங்களாகப் பல்கலைக்கழகத்தில் படித்தார். எல்லாம் இந்தத் தேவையற்ற வேலை நிறுத்தம் தான் காரணம். இப்போது முடித்து மூன்றாண்டுகள் ஆகியும் வேலையேதும் கிடைக்காமல் இருக்கிறார்."

ஒரு வினாடி ரெஸாவின் விழிகள் விரிந்தன.

"அன்றைக்கு ஒரு மனிதர் வந்தாரே, அவருடைய தம்பி ஐந்து வருடமாக வேலை தேடிக் கொண்டு இருக்கிறார், ஆனால் இன்னும் கிடைக்கவில்லை என்று சொன்னார், ஐந்து வருடங்கள்!!! இந்த நாட்டில்..."

"என் சகோதரனுக்கும்..." ஏன் இப்போது அந்த உதவாக்கரை, மாற்றாந்தாய் சகோதரன் புலாமாவை பற்றிப் பேசுகிறோம் என்று மனதில் வியந்து கொண்டே ரெஸா பேச்சை ஆரம்பித்தான். "அவன் டிப்ளமோ படித்திருக்கிறான், ஆனால் இன்னும் வேலை கிடைக்கவில்லை."

"பார்த்தாயா?" செனேட்டர் இப்போது கோப்பையில் பாலை ஊற்றினார். குவளையின் அடியிலிருந்து வெண் புயலொன்று சுழன்று மேலெழும்பி, தேநீரை வெளுக்க வைத்து, பின் மிக நுட்பமாகத் தன் நிறத்தால் அந்தத் திரவம் முழுவதும் ஆக்கிரமிப்பதைக் கவனித்தார்.

"நிறையப் பேர் பல வகையான பள்ளிக்குப் போய் படிக்கிறார்கள், அவர்களுக்கு வேலை கிடைக்காத போது, வெறுப்பில் துப்பாக்கியைக் கையிலேந்தி, யாரையோ கொள்ளையடிக்கப் போய் விடுகிறார்கள்."

பழக்கிண்ணத்தை நோக்கினான் ரெஸா. ஆப்பிளின் பச்சை வண்ணத் தை, ஸ்ட்ராபெர்ரியின் சிவப்பு வண்ணத்தை, அதன் மீதுள்ள மஞ்சள் புள்ளிகளை, இரவின் நிழல் போன்ற திராட்சை வண்ணத்தை, இறுதியாக முந்திரியின் கனிந்த மஞ்சள் வண்ணம், அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

"அதாவது, உன் சகோதரனும் படித்திருக்கிறான்?'

ரெஸா தலையசைத்தான்.

"நீயா, அவனா...யார் இப்போது நல்ல நிலைமையில் இருக்கிறீர்கள்?

ரெஸா மருத்துவமனையில் இருக்கும் தந்தையையும், அவருக்கு மருந்துகள் கூட வாங்கித் தர இயலாத அளவுக்குக் கூட அதிகாரமற்று தன் சகோதரன் இருக்கிறான் என்பதையும் நினைத்துப் பார்த்தான். புலாமா திருமணம் செய்து கொண்டதையும், அவனுடைய ஆசிரியர் வேலை யிலிருந்து கிடைக்கும் சொற்பச் சம்பளம் மாதக் கடைசியில் வயிற்றுக்கும் வாய்க்குமே போதாமல் இருக்கிறதென்று தான் கேள்விப் பட்டதையும் செனேட்டரிடம் சொல்ல விரும்பவில்லை. அப்பாவின் மகனை விடத் தான் ஓரளவு நல்ல முறையில் இருப்பதையும் சொல்ல விரும்பவில்லை அவன்.

"நீயே பார்!" அவருடைய குரலில் வெற்றிப் பெருமிதம் தொனித்தது. "பள்ளிக்குப் போனவனை விட நீ நன்றாக இருக்கிறாய். அத்தனை வருடங்கள், அத்தனை பணம் வீணாகப் போனதே, எதற்காக? அதனால் தான் தொழில் முனைபவர்களாக இருக்கும் உன் போன்ற இளைஞர்கள், வியாபார புத்தி கூர்மை உள்ளவர்கள் கற்பனையைத் துரத்திக் கொண்டு ஓடக்கூடாது. அதனால் தான் அந்தப் போலீஸ்காரன் உன் தொழிலுக்கு இடையூறு செய்த போது நான் தலையிட்டேன். நீ பில் கேட்ஸ் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறாய் இல்லையா?"

ஆமாமென்று தலையசைத்தான் ரெஸா.

"அவர் பார், உலகத்தின் மிகப் பெரும் பணக்காரர், ஆனால் பள்ளிப் படிப்பைப் பாதியில் விட்டவர் தானே? நம்மிடத்தில் இருக்கும் பிரச்சனை என்னவென்றால், தேவையற்ற ஆர்வம். யாரோ ஒருவர் பள்ளிக்குப் போனால், அனைவருக்கும் அதே போலச் செய்ய வேண்டும். அதனால் நாம் உழவர்களை, தொழிலதிபர்களை மற்றும் பல வகையான திறமை சாலிகளை இழக்கிறோம். அவர்கள் எல்லோரும் அவசரமாகப் பள்ளி சென்று விடுகிறார்கள், ஆனால் வெளியே வரும்போது, அவர்கள் செய்ய எதுவுமில்லாமல் போய் விடுகிறது."

ரெஸா பழத்தை மீண்டும் கடித்தான்.

"என் மகன் ஹம்ஜாவையே எடுத்துக் கொள், உன்னிடம் இருக்கும் தொழில் பற்றிய அறிவு அவனுக்கு இருந்திருந்தால், இவ்வளவு செலவு செய்து அவனைப் படிக்க அனுப்பி இருப்பேனா? அவன் கையில் பணம் கொடுத்து ஏதாவது தொழில் துவங்கச் சொல்லியிருப்பேன்."

செனேட்டர், தேநீரைக் கலக்கிப் பின் அதை எடுத்து உறிஞ்சினார். அழகான தலையணையில் சாய்ந்து கொண்டவர், பேத்தி அனுப்பியிருந்த வாழ்த்து அட்டையைக் கையிலெடுத்து மீண்டும் வாசித்தார். அவருக்கு மட்டும் சொல்லப்பட்ட ரகசிய நகைச்சுவை ஒன்றைக் கேட்டவர் போல, தனக்குள் சிரித்துக் கொண்டார்.

அப்போது கதவைத் திறந்து உள்ளே வந்த ஹம்ஜா, அவரைச் சந்திப்பதற்காக சில பெரிய மனிதர்கள் காத்துக் கொண்டிருப்பதாகச் சொன்னான். எதற்காகத் தன்னை இவர் அழைத்தார்? அதைச் சொல்வதை விட்டு மற்ற விஷயங்களையே ஏன் பேசிக்கொண்டிருக்கிறார் என்று ரெஸாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"ரெஸா, உன் வயதான அப்பாவுக்கு உடல்நிலை சரியில்லை என்று சொன்னாய், எப்படி இருக்கிறார்?'

"அல்ஹம்துல்லில்லாஹ், தேறிக் கொண்டு வருகிறார்."

"வீட்டுக்கு அனுப்பி விட்டார்களா?"

"இன்னும் இல்லை"

"அவரை நல்லபடியாகக் கவனித்துக் கொள் ரெஸா. இவ்வுலகை விட்டு நீ நீங்கிச் செல்லும் போது உன் மனம் நிம்மதியாக இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்."

ரெஸா தலையசைத்தான்.

"உனக்குத் தெரியுமா, உன் சொர்க்கம் என்பது உன் பெற்றோரின் பாதங்களுக்கு அடியில் உள்ளது. அவர்கள் உன்னிடம் மகிழ்ச்சியாக இல்லையென்றால், அதை மிதித்து விடுவார்கள். மகிழ்ச்சியாக இருந்தாலோ, தங்கள் பாதங்களை உயர்த்தி, நீ சொர்க்கத்தை அடையும் பாதைக்கு வழி விடுவார்கள். முதியவரை நன்றாகப் பார்த்துக் கொள் ரெஸா, என்ன கேட்கிறதா? காஜி கோ?"

பையில் கையை விட்டு கொஞ்சம் பணத்தை எடுத்து ரெஸாவின் கைகளில் வைத்தவர் மீண்டும் அவனிடம் தந்தையை நன்றாக்க கவனித்துக் கொள் என்று அறிவுறுத்தினார்.அவருக்கு நன்றி சொல்லி விட்டு அங்கிருந்து நகர ஆயத்தமானான் ரெஸா.

"ரெஸா, உட்கார்," மீண்டும் அவனை அமரச் சொல்லிக் கைகாட்டினார். "உன்னை ஏன் அழைத்தேன் என்று உனக்குத் தெரியுமா?"

"தெரியாது செனேட்டர்."

"இங்கே பார், ஒரு முக்கியமான காரியத்தை எடுக்கும் போது, நம்மைச் சுற்றி வலிமையான ஆட்கள் இருப்பது அவசியம். அப்படித்தானே?"

ரெஸா ஆமோதித்தான்.

"ரெஸா, நீ மிக வலிமையானவன், உன்னை ஒரு காரியம் செய்யச் சொல்லப் போகிறேன், மிக முக்கியமானது. மிகவும் தீவிரமானது "

"சொல்லுங்கள், எதுவானாலும் செய்வேன்"

"அதுதான்!! இதனால் தான் உன்னை எனக்கு மிகவும் பிடிக்கும். வேலை செய்ய வேண்டிய சூழ்நிலை வந்தால் நீ தயங்குவதில்லை.கேள்விகள் கேட்டு நேரத்தை வீணாக்குவதில்லை. நீ என்ன செய்ய வேண்டுமென்று நான் சொல்கிறேன்..."

முன்னால் சாய்ந்தவர் அதே நிலையில் சில வினாடிகள் சிலை போல அசையாமலிருந்தார். ஆட்காட்டி விரலைத் தன் கண்களுக்கு முன் உயர்த்திப் பிடித்திருந்தார்.

"எந்த நேரத்திலும் நீ தயாராக இருக்க வேண்டும் நான் மோசஸிடம் சொல்கிறேன். உனக்கு அவனைத் தெரியும் அல்லவா? என்னுடைய பி.ஏ? அவன் உன்னைத் தொடர்பு கொண்டு நீ செய்ய வேண்டியதை சொல்வான். அவன் எதைச் சொன்னாலும் அதை நீ செய்ய வேண்டும். நான் சொல்வதைக் கேட்டாயா?"

ரெஸா மீண்டும் தலையாட்டினான்.

அது மிகவும் நாசூக்கான காரியம், அதனால் நீ மிகவும் கவனத்துடன் செயல்பட வேண்டும்."

"ஒன்றும் பிரச்சனையில்லை செனேட்டர்."

"சரி, இப்போது நீ போகலாம், நானும் அந்த பெரிய மனிதர்களைக் கவனிக்கிறேன். எந்த நேரத்திலும் தயாராக இரு, அவ்வளவுதான், சரியா?"

அவருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, பணத்தை பாக்கெட்டில் திணித்துக் கொண்டான் ரெஸா. வெளியேறும் போது, முன்னறையில் காத்திருந்த "பெரியவர்"களைப் பார்த்தான். அவர்கள் மூவரும் முக்கியமானவர்களாகத் தெரிந்தார்கள், அவர்களிடமிருந்து விலையுயர்ந்த வாசனைத் திரவியத்தின் நறுமணம் மிதந்து வந்தது. ஒரு மனிதரின் முகம் மட்டும் அடிக்கடி தொலைக்காட்சியில் வரும். அவர் ஏதாவது மந்திரியாகவோ அல்லது அது போன்ற பதவியிலோ இருக்கக் கூடும். ஆனால் செய்திகள் பார்ப்பதில் துளியும் தன் நேரத்தை வீணடிக்காத ரெஸாவுக்கு அவர் யாரென்று உறுதியாகச் சொல்லத் தெரியவில்லை.

18

"கடல் வண்ணத்தை மாற்ற ஒரு வாளி சாய நீர் போதுமானதல்ல"

மரத்தால் செய்யப்பட்ட மாதிரி பொம்மைத் தலைகளுக்கு ஜன்னா தொப்பிகள் அணிவித்து, வாடிக்கையாளர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. அந்த பொம்மைத் தலைகளின் மத்தியில் அமர்ந்திருந்தார் மாலம் ஹரூணா. கைகளால் செய்து உருவாக்கிய அந்தப் போலித் தலைகளை வைத்துத்தான் தொப்பிகளுக்கு அளவும், வடிவும் கணிப்பார். தொப்பிகளை சலவை செய்து, அதன் உள்புற வேலைப்பாடுகளும் தெரியும்படி திருப்பி உலர வத்திருந்தார். கடையின் மொத்த இடத்தையும் தொப்பிகளின் வரிசை ஆக்கிரமித்திருந்தது. கடைக்கு வெளியே இருக்கும் குறுகிய தெருவை நோக்கிச் செல்வதற்காக ஒரு சிறிய சந்து போன்ற பாதை மட்டும் இருந்தது. தெருவில் வியாபாரிகளும் வாடிக்கையாளர்களும் மார்க்கெட்டிலிருந்து வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தார்கள்.

அலமாரி அடுக்குகளில் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த கண்கவர் வண்ணத் தொப்பிகளுக்கு நடுவே தண்ணீர் புகாத பிளாஸ்டிக் உறையில் சுற்றி வைக்கப்பட்டிருந்த ஹரூணாவின் நம்பிக்கைக்குரிய ரேடியோ, மதிய வேளைச் செய்திகளை முழங்கிக் கொண்டிருந்தது. ஆனால், அவரோ தன்னைச் சுற்றிக் குவிந்து கிடந்த தொப்பிகளை ஒவ்வொன்றாக எடுத்து மர உருவத் தலைகளில் பொருத்திப் பார்ப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார். தொப்பிகளைச் சலவை செய்யும் தொழிலில் அவர் ஈட்டிய வெற்றிக்குப் பின் ஒரு ரகசியம் உள்ளது. சூரிய ஒளி பட்டுத் தக தகக்கும் கண்ணாடிப் பாட்டில்கள் போல, அவர் கைவண்ணத்தில் தொப்பிகள் மிளிரும். புதர்களிலிருந்து எடுத்த வெள்ளைப் போளம் என்னும் பிசினை

நூல்களுக்கிடையில் நுணுக்கமாக இட்டு இழைத்துத் தேய்ப்பதும், பின் சூடான, கனத்த இஸ்திரிப் பெட்டியால் கவனமாக அழுத்தி எடுப்பதும்தான் அந்த நுணுக்கம். மெடுகுரியின் பாலைவன எல்லைகளில் இந்த ரகசியத்தைக் கற்று வந்த அவரது நண்பனிடமிருந்து, மாலம் ஹரூணா தானும் அந்தக் கலை நுட்பத்தைக் கற்றுத் தேர்ந்தார்.

மரரபா வணிக வளாகத்தின் ஒரு மூலையில் மடங்கி இருக்கும் அவரது கடையைத் தேடி தலைநகரிலிருந்து ஒரு கூட்டமே அணி வகுத்து வந்தது. ஆடம்பரமான தொப்பிகள் அணிவதன் மூலம் தங்கள் செல்வத்தை வெளிச்சம் போட்டுக் காட்டும் ஆர்வம் கொண்டவர்கள் அவரிடம் குவிந்தனர். சட்டசபையில் அங்கம் வகிக்கும் அரசியல் பிரமுகர் ஒருவரின் சிபாரிசால் தொப்பிகளைப் பளிச்சென மின்ன வைக்கும் மாலம் ஹரூணாவின் புகழ் எங்கும் பரவியது.

இப்பொழுதெல்லாம் மூன்று பணியாளர்களும் அவருடைய கண் காணிப்பில் சலவை செய்வதும், பிசினை இழைப்பதையும் செய்து விடுகிறார்கள். தொப்பிகளின் அளவைக் கச்சிதமாகக் கணித்து மரத் தலைகளில் பொருத்திப் பார்ப்பது மட்டும் தான் மாலம் ஹரூணாவின் பணியாகும். யாரோ ஒருவர் தொலைவில் நடந்து வந்து கொண்டிருந்தால் கூட, கடையில் அமர்ந்தபடியே எந்த பொம்மையின் தலையிலிருக்கும் தொப்பி அவருக்குப் பொருத்தமாக இருக்கும் என்பதை அறிந்து கொள்ளும் ஞானத்தை பரிசாகப் பெற்றிருந்தார் ஹரூணா. இரவுகளில், ரேடியோவை எடுத்துக் கொண்டு யாரையோ, எதற்காகவோ தேடிப் போகாத நாட்களில், கடைக்கு வந்து கதவை உட்புறம் தாழிட்டு அமர்ந்து, தொப்பியை அழகு படுத்தும் இறுதிக் கட்டப் பணிகளில் மூழ்கி விடுவார். காலையில் பணிக்குத் திரும்பும் வேலையாட்கள் பளிச்சென்ற தொப்பிகள் அழகான வரிசையில் அடுக்கி வைக்கப் பட்டிருப்பதைக் கண்டு வியந்து போவார்கள்.

மதிய வேளை தொழுகைக்குப் பின், பணியாட்கள் அவரவர் வேலை யை செய்து கொண்டிருக்க, ரேடியோவை எடுத்துக் கொண்டு, தனது நண்பர் மாலம் பாலாரபேவை சந்திக்கக் கிளம்பி விடுவார். மாலம் பாலாரபே, காதணிகள், கழுத்து மாலை, கைக்கடிகாரம் போன்ற சிறிய ஆபரணங்கள் விற்கும் கடை வைத்திருக்கிறார்.

துரித உணவு விடுதி ஒன்றின் முன்னாலுள்ள மைல்கல் அருகில் மிகச் சரியான இடத்தில் பாலாரபேயின் கடை அமைந்திருந்தது. அங்கு வருபவர்கள், தங்கள் சினேகிதிகளை மகிழ்விக்க ஏதாவது பரிசு வாங்க வரு வார்கள். அவர்களிடம் எப்படியோ பேரம் பேசி பொருட்களை இரட்டை விலைக்கு விற்று விடுவார். சில வேளைகளில், தெருவின் எதிரிலுள்ள

ஷகாலி ஹோட்டல் விருந்தாளிகள் கூட அவர் கடையில் விற்கும் பொருட்களைப் பார்வையிட வருவார்கள்.

அன்று மதியம், மாலம் ஹரூணா, தெரு மூலையில் திரும்பியதும், வெயிலால் சாயமிழந்திருந்த நிழற்குடையின் கீழ் பாலாரபே அமர்ந்திருந்ததைக் கண்டார். காதோரத்தில் ரேடியோவை அழுத்திப் பிடித்துக்கொண்டு, நண்பரின் அருகில் சென்று சலாம் சொன்னார்.

"மாலம் ஹரூணா, வாங்க வாங்க" வணக்கம் சொல்லியபடி, தான் அமர்ந்திருந்த பென்ச்சில் அவருக்கும் இடம் தந்தார், மாலம் பாலாரபே. அந்த நிழற்குடையை சந்தேகமாகப் பார்த்தபடியே அமர்ந்தார் ஹரூணா. "உன் குடைக்கு ஆயுள் முடிந்து விட்டது. புதிதாக ஒன்று வாங்கிப் போடு."

ஏற்கெனவே தனது ரேடியோவில், மற்றொரு அலைவரிசையில் ஹௌஸா ஒலிபரப்பைக் கேட்டுக் கொண்டிருந்த பாலாரபே, ஹரூணாவின் ரேடியோ தெளிவாக ஒலிப்பதைக் கேட்டு தனது ரேடியோவை அணைத்தார்.

"நிச்சயமாக வாங்கி விடுகிறேன், இன்ஷா அல்லாஹ்."

"ரேடியோவில் ஒண்ணும் புதுசா இல்லை."

"ஒன்றுமில்லை, காலையில் சொன்னதையே மீண்டும் ஒலிபரப்பு செய்கிறார்கள்."

"இந்த அரசியல்வாதிகள்தான் குழப்பம் செய்கிறார்கள்." தாடியை நீவிக் கொண்டே, தொப்பியைக் கழற்றி பென்ஞ்சில் வைத்தார் பாலாரபே.

மூன்று வருடங்களுக்கு முன்பு இருவரும் மாலம் ஹரூணாவின் கடையில் முதல் முறையாக சந்தித்துக் கொண்டார்கள். பாலாரபேயின் தொப்பியை மற்றொரு சலவைக்காரர் நாசம் செய்து விட்டார். அப்போது யாரோ ஒருவர் மாலம் ஹரூணாவை சிபாரிசு செய்யவே, அவரைத் தேடி வந்தார். மாலம் ஹரூணாவுக்கும் அவர் மீது ஏதோ ஒரு மரியாதை தோன்ற, தொப்பியை வாங்கிக் கொண்டார். யாருடைய தொப்பியை சலவைக்கு ஏற்றுக்கொள்வது என்பதைத் தேர்ந்தெடுக்கும் வசதியான நிலையில் இருந்தார் ஹரூணா. மிக அழுக்கானவற்றை கோபத்துடன் நிராகரித்து விடுவார். தொப்பியின் வேலையை முடித்துக் கொடுத்தபோது, அதில் பளிச்சிடும் வண்ண நூல் வேலைப்பாடுகளையும் மிகக் கச்சிதமாகத் தலையில் பொருந்துமாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவையும் கண்டு அசந்து போனார் பாலாரபே. இரண்டு வாரங்களில் நடக்கவிருக்கும் தன் மூன்றாவது திருமணத்திற்காக புதிய தொப்பி வாங்கும் எண்ணம் இருந்ததையும், இப்போது இந்தத் தொப்பியையே பத்திரமாகப் பாதுகாத்து உபயோகித்துக் கொள்ளப் போவதாகவும் சொன்னார்.

இப்போது மாலம் ஹரூணா அசந்து போனார். "மூன்றாவது திருமணமா?? மாஷா அல்லாஹ்!"

மனைவிமார்கள் எண்ணிக்கையைப் பற்றி பேசியதின் அடிப்படையில் அன்றிலிருந்து இருவருக்கும் துவங்கியது ஆழமான நட்பு.

மாலம் ஹரூணா புலம்பத் தொடங்கினார். "மிலிட்டரி உறுப்பினர் களின் உதவியுடன் தேர்தல் நடத்தும் இந்த யோசனை, எனக்கென்னவோ அவ்வளவு சரியாகப்படவில்லை"

அஹ்ஹோ! பலாபரே வியந்தார். "இந்த மனிதன் ஜெகா, அவன் ஏதாவது நியாயமாக செய்வானென்று எல்லோரும் நினைத்தோம், ஆனால், வாக்காளர்கள் பதிவிலேயே மிக மோசமான நிர்வாகம் செய்திருக்கிறார்கள்."

"அதிகாரம்! அதிகாரம்! அதிகாரம் அவ்வளவு நயவஞ்சகம் நிறைந்தது. நான் சொல்றேன் கேள், ஒரே ஒரு முறை இவர்களுடைய காரியங்களில் சேர்ந்து வேலை செய்துவிட்டால் போதும், எவ்வளவு புனிதமானவர்களாக இருந்தாலும் ஏதோ ஒரு வழி கண்டுபிடித்து அவர்களையும் ஊழல்வாதிகளாக மாற்றி விடுவார்கள். அதனால்தான் சொல்கிறேன், அவர்கள் எப்படியோ அரசியல் செய்யட்டும் என்று விலகிக் கொண்டு இந்தக் கஷ்டத்திலிருந்து புஹாரி தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.."

"இப்படி எல்லோருமே ஒதுங்கி நின்றால் யார் வந்து நிர்வாகத்தை சீர் செய்வார்கள் என்று நினைக்கிறாய்?"

"இந்தப் பேராசைக்காரர்களிடமிருந்து இறைவன் தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும், வல்லாஹி"

"இறைவன்! ஹ்ம்ம், நம்மைக் காப்பாற்றிக்கொள்ள நாம் ஒரு விரலைக் கூட உயர்த்த விரும்பாத போது இறைவன் வந்து ஏன் காப்பாற்ற வேண்டும்?" மாலம் பாலாரபே எதிர்பார்ப்போடு நின்றார். ஹரூணா சொல்வதைத் தவறென்று நிரூபிக்க, இன்னொரு சொல் ஆயுதத்தை எடுத்து வீசும் தோரணையில் இருப்பது போல் நின்றார்.

ஆனால் மாலம் ஹரூணா அவரைக் கவனிக்கவில்லை. எதிரே ஷாகாலி ஹோட்டலின் முன், மோட்டார் சைக்கிள் டாக்ஸியிலிருந்து இறங்கிய பெண்ணின் மீது அவரது கண்கள் பதிந்தன. அந்தப் பெண்ணை ஹிஜாப் அணிந்தே பார்த்துப் பழகியிருக்கிறார். ஆனால், இன்று ஹிஜாப் அணியாத போதும், தூரத்திலிருந்தே அவளை யாரென்று அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. அவள் தன் கைப்பையைத் துழாவிப் பணம் எடுத்து ஓக்காடா ஓட்டுனருக்கு வாடகை கொடுக்கும்போது, அவளிடமிருந்து லாவண்டர் நறுமணம் காற்றில் மிதந்து வருவதை அவரால் உணர முடிந்தது.

"சுபானல்லாஹி!!" பிந்த்தா தன் முகத்திரையை சரி செய்துகொண்டு ஹோட்டலின் உள்ளே அவசரமாக நுழைந்த போது மல்லம் ஹரூணா பெரும் வியப்பில் ஆழ்ந்தார்.

"என்ன?" மாலம் பாலரபே த்தின் நண்பனை முகத்தைப் பார்த்து ஹோட்டலின் வாசலைப் பார்த்தார். அதற்குள் பிந்த்தா உள்ளே சென்று விட்டிருந்தாள்.

"ஒன்றுமில்லை... ஒன்றுமில்லை, மாலம் ஹரூணா தன் தாடியை நீவிக் கொண்டே தலையை ஆட்டினார்.

—

ரெஸா கதவைத் திறந்ததும், பிந்த்தா அவனைத் தாண்டி உள்ளே நேராக கட்டிலுக்குப் போய் தன் ஹிஜாபை கழட்டி தன் பக்கத்தில் வைத்ததைப் பார்த்தவுடன், அவன் சிரிப்பு உறைந்தது.

"என்னவாயிற்று ஹஜியா?" அவனைப் பார்த்துவிட்டு முகத்தை திருப்பிக் கொண்டாள்.

"ஒன்றுமில்லை."

கதவைத் தாழிட்டு விட்டு அவளருகே வந்தான். பக்கத்தில் அமர்ந்து மெல்ல அவள் தோளைக் கைகளால் வளைத்துக் கொண்டான்.

"பணம் கொண்டு வந்திருக்கிறேன்"

பைக்குள் கையை விட்டு பணத்தை எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

"நான் ஏன் உன்னை ஒரு வங்கிக் கணக்கு ஆரம்பிக்கச் சொல்கிறேன்னு இப்போது தெரிகிறதா? நீயே ஒரு ஏடிஎம் மெஷினுக்குப் போய் தேவையான பணத்தை எடுத்துக் கொள்ளலாம். எனக்குத் தெரிய வேண்டுமென்று கூட அவசியம் இல்லை."

"ஒரு பிரச்சனையுமில்லை, உன்னை நான் நம்புகிறேன்" பணத்தை வாங்கி பக்கத்தில் வைத்தான்.

"உன்னுடைய அப்பா எப்படி இருக்கிறார்?"

"அவர் தேறி வருவதாக சொல்கிறார்கள்... நான் மறுபடியும் ஒரு முறை போய்ப் பார்க்க வேண்டும். இன்னும் பல பரிசோதனைகள் செய்ய வேண்டும், அதுக்கு நான் பணம் கொண்டு வர வேண்டுமென்று சொன்னார்கள், புரியுதா?

பின், 'தேங்க் யூ' என்று ஆங்கிலத்தில் சொன்னான்.

அவனுடைய மார்பில் செல்லமாகக் குத்தினாள். "எனக்கு நன்றி யெல்லாம் சொல்லத் தேவையில்லை, இது உன் பணம்தானே?"

"அதை பத்திரமாக வைத்திருந்து தேவைப்படும் பொழுது கொண்டு வந்து கொடுப்பதற்கு நன்றி" அவள் காது மடல்களில் இதழை உரசினான். "என் பணத்தையும், அதனோடு மற்றும் சிலவற்றையும் நான் சேமித்து வைக்கும் வங்கியாக இருப்பதற்கு நன்றி"

அவன் கண்களில் மின்னிய குறும்பைப் பார்த்துப் புன்னகை செய்த பிந்த்தா, அவனை அப்படியே தள்ளி விட்டாள். கட்டிலில் மல்லாக்க விழுந்தவனின் சிரிப்பு அறையின் கூரையில் பட்டு எதிரொலித்தது.

அவளும் சத்தமாக சிரித்தாள். "அய்யோ, நான் என்ன செய்து விட்டேன்? இந்தச் சிறு பையனைக் கெடுத்து விட்டேனே"

"யார் யாரைக் கெடுத்ததென்று தெரியவில்லையே?" அவளைத் தன் பக்கமாக இழுத்தான். படுத்துக் கொண்டே, மேலே சுழலும் மின்விசிறியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சோம்பலான அரிவாள் போல மிக மெதுவாகக் காற்றைத் துண்டாடிக் கொண்டிருந்தது அது. அவள் பால் தான் உணரும் ஈர்ப்பை அவனால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. சில வேளைகளில் பிந்த்தாவுடனான நெருக்கம் அவன் மனதைத் தொந்தரவு செய்தது. முக்கியமாக, பிந்த்தாவை நினைக்கும் போது சில வேளைகளில் அவனுடைய அம்மாவின் நினைவு வந்து விடுகிறது, அல்லது அம்மாவை நினைக்கையில் பிந்த்தாவின் ஞாபகம். அவ்வப்போது அது அவனை மிக சங்கடத்துக்குள்ளாக்கியது. எல்லாமே பிந்த்தா ஒரு பெருமூச்சு விடும் வரைதான். அவள் பக்கமாகத் திரும்பி, முழங்கையை ஊன்றி, ஒருக்களித்துப் படுத்தவாறு தலை நிமிர்த்தி அவளைப் பார்த்தான்.

"என்ன விஷயம்? உன்னிடத்தில் ஏனோ ஒரு விலக்கம் தெரிகிறது."

அவள் எழுந்து அமர்ந்தாள். அவனும் எழுந்து கொண்டான்.

"இறந்து போன என் கணவனைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன்"

"ஓ, அப்படியா?"

"காலையில் எழுந்ததிலிருந்தே அவர் நினைவுகள் மனதில் சுற்றிக் கொண்டிருக்கிறது."

"அவரைப் பத்தி என்ன நினைத்துக் கொண்டிருந்தாய் ?"

வருத்தம் தோய்ந்த புன்னகையுடன் தலையைக் குலுக்கிக் கொண்டாள்.

"மற்றெவரையும் விட அவரோடு தான் என் வாழ்க்கையின் பெரும்பகுதியை கழித்திருக்கிறேன் தெரியுமா? எனக்கு பதினாறு பதினேழு வயது இருக்கும்... அப்போதே அவருடன் திருமணம் நடந்து முடிந்து விட்டது.

"நீ அவரைக் காதலித்தாயா?"

"காதல்?" மீண்டும் அந்த வார்த்தையின் அர்த்தம் பற்றி சிந்தித்த போது, ஏதுமற்ற வெறுமையில் சுழல்வதைத்தான் உணர்ந்தாள். "இல்லை, அப்படியெல்லாம் இல்லை, எங்க திருமணத்திற்கு முன்பாக அவரை அதிகமாகத் தெரியாது. அப்போ அவர் ஜாஸில் ரயில்வேயில் வேலை செய்து கொண்டிருந்தார். எப்போதாவது ஒரு முறைதான் கிபியா வருவார். அப்போது நாங்கள், ரயில்வேயில் வேலை பார்க்கும் மாலம் தெளடா பையன் வந்திருக்கிறார் என்று பேசிக் கொள்வோம். என் வாழ்வின் பெரும்பகுதியை அவருடன் தான் கழிக்கப் போகிறேன் என்று நினைத்துக் கூடப் பார்த்ததில்லை." கண்ணில் வழிந்த நீரைத் துடைத்தவள் முகத்தை மூடிக் கொண்டாள்.

ரெஸா எழுந்து ஜன்னலருகே சென்றான். திரையை விலக்கியவன், வெளியே தெரிந்த காட்சிகள் மனதை ஈர்க்காததால் மீண்டும் அதை இழுத்து விட்டான். திரும்பி பிந்த்தாவைப் பார்த்தான். அறையிலிருந்த நாற்காலியை இழுத்து அவள் நேரெதிராக அமர்ந்தான். "அல்லாஹ் அவர் ஆன்மாவை சாந்திப் படுத்தட்டும்" என்றான்.

நிமிர்ந்து அவனைப் பார்த்து புன்முறுவலித்தாள் பிந்த்தா. "ஆமீன், நன்றி"

"அவர் எப்போது இறந்தார்? இதைப் பற்றி நீ எனக்கு எதுவுமே சொன்னதில்லையே."

"அவர் 2001, செப்டெம்பர் 7 ம் தேதி இறந்தார். 2001, உனக்குத் தெரியுமா? அன்று காலையில் கரப்பான் பூச்சி வாசத்திற்கு நான் எழுந்த போதே ஏதோ சரியில்லை என்ரு மனதில் தோன்றியது. எப்போதெல்லாம் துர்ச்சம்பவங்கள் நடக்கப் போகிறதோ அப்போதெல்லாம் நான் கரப்பான் பூச்சி வாசத்தை உணர்வேன்." பேச்சை நிறுத்தியவள் கால்களை உடலோடு சேர்த்துக் குறுக்கி அமர்ந்து கொண்டாள். "ஆனால் அன்று காலையில் அவர் நல்ல மனநிலையில் இருந்தார். குளித்து முடித்து அறைக்குள் வந்தவர் என்னுடைய உள்ளாடை பெரியதாக இருக்கிறதென்று கிண்டல் செய்து சிரித்துக் கொண்டிருந்தார். அதை நினைத்து தனக்குள் சிரித்துக்கொண்ட பிந்த்தா, பின், கண்களிலிருந்து உருண்டோடும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

"இதைப் பத்திப் பேச வேண்டாம், புரியுதா..."

"பரவாயில்லை, அந்த சம்பவம் நடந்த நாளில் இருந்து நான் இது பற்றி யாரிடமும் பேசியதே இல்லை, தெரியுமா,"

தேம்பிக் கொண்டே மூக்கை உறிஞ்சிக் கொண்டாள். "அவர் வந்து என்னுடைய பின்புறத்தின் அளவைப் பத்திக் கேலி செய்து வேறு ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார். அப்புறம் உட்கார்ந்து ரேடியோ கேட்டார். பொதுவாக எப்போதுமே அதிகம் பேசாத விஷயங்களை அன்று பேசினார். கேலி, கிண்டல் இது போலப் பேச்சுகள். பிறகு கிளம்பி அவருடைய சுய்யா கடைக்குப் போய் விட்டார்."

"அப்புறம் சற்று நேரத்தில், நகரத்தில் கலவரம் என்றும், கிறிஸ்தவர் களும், இஸ்லாமியர்களும். சண்டை போட்டுக் கொள்வதாகவும் சொன்னார்கள். ஆனால், நான் அதை வெறும் வதந்தியென்று நினைத்தேன். அது போல எதுவுமே ஜாஸில் நடந்ததில்லை, அப்படி எப்படி மக்கள் சண்டை போட்டுக் கொள்வார்கள்? ஆனால் அதுதான் உண்மை. அங்கு நடந்த பல கலவரங்களுக்கு அதுதான் முன்னோடி இரண்டு நாட்களுக்குப் பிறகு பெரிய மசூதியில் நூற்றுக்கணக்கான உடல் களுக்கிடையில் அவருடைய உடலையும் கண்டெடுத்தார்கள். இறந்து போனவர்களின் உடலையெல்லாம் சேர்த்து அங்கே கொண்டு போய் போட்டு விட்டார்கள், அவரை வெட்டிப் போட்டிருந்தார்கள். அவர் பிணத்தைக் கொளுத்தியிருந்தார்கள் தெரியுமா?

ரெஸா முகத்தை மூடிக் கொண்டான்.

"அவரை அப்படி வெட்டிப் போட்ட இளைஞர்கள் எல்லோருமே அவருக்கு மிகப் பரிச்சயமானவர்கள் தானென்று சொன்னார்கள். தினமும் இரவில் அவர் கடையில சுய்யா வாங்கி சாப்பிட்டவர்கள். அவர்களெல்லாம் அவரைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவார்கள். அவரும் அந்தப் பையன்கள் எல்லோருடைய பேரையும் அழைத்துப் பேசும் அளவு அந்நியோன்னியமான பழக்கம். ஆனால், அவர்களே அவரோட உடலை வெட்டிக் கூறு போட்டு விட்டார்கள். அதன் பின் தீ வச்சுக் கொளுத்துவதற்கு முன்னால் அவருடைய உடல் மேல் மீது சிறுநீர் கழித்திருக்கிறார்கள்."

பிந்த்தா உடைந்து கதறி அழுகையில், ரெஸா முன்னே சென்று அவளை அரவணைத்துக் கொண்டான். மீண்டும் ஒரு பெருமூச்செறிந்தான்

"அல்லாஹ் அவரின் ஆன்மாவை அமைதியுறச் செய்யட்டும்."

அன்றைக்கு அவர் வெளியே போகும் போது கடைசியாக நான் என்ன சொன்னேன் தெரியுமா, "தியில் பொரித்த மாமிச வாடை வீசும் உடம்புடன் வீட்டுக்குத் திரும்பி வராதீர்கள் என்று சொன்னேன்."

அவனது கரங்களில் எந்தப் பெண்ணும் இதுவரை அழுததில்லை. அந்த நேரத்தில் என்ன செய்ய வேண்டும் என்று அவனுக்கு சற்றும் புரியவில்லை. அவளை அப்படியே தாங்கிக்கொண்டு, அழுது ஓயட்டும் என்று விட்டு விட்டான்.

அழுது ஓய்ந்ததும், எழுந்து குளியலறைக்குச் சென்று முகம் கழுவினாள் பிந்த்தா. திரும்பி வந்தவள் புன்னகை செய்ய முயற்சி செய்தாள்.

ஏதாவது ஆறுதலாகச் சொல்ல வேண்டுமென்று அவனுக்குப் புரிந்த்து. ஆனால் சரியான வார்த்தைகள் கிடைக்கவில்லை. அதனால் மனதில் தோன்றியதைச் சொன்னான்.

"டிவி பார்க்கிறாயா?"

மீண்டும் புன்னகைத்தவள், அவனருகில் அமர்ந்து தோளில் தலையைச் சாய்த்துக் கொண்டாள். "என்னை மன்னித்து விடு."

ஒரு நைஜீரியப் படம் பார்த்தார்கள். அதில் தலையும் புரியவில்லை வாலும் புரியவில்லை. களைப்படைந்த பிந்த்தா, தன் ஸ்கார்ஃபை சரி செய்து கொண்டாள்.

"நான் இப்போது வீட்டுக்குப் போக வேண்டும், என்னை மன்னித்து விடு, இதைப் பற்றியெல்லாம் பேசி உன்னுடைய பொழுதையே வீணாக்கி விட்டேன்."

"தயவு செய்து போகாதே, அவள் கையைப் பிடித்துக் கொண்டான். உன் மகள் எப்போது ஊருக்குக் கிளம்பகிறாள்?

"அதைப்பத்தி ஒன்றுமே தெரியவில்லை.."

"அவளுடைய கணவனிடம் நீ அனுப்பி வைக்க வேண்டும் தானே?'

"ஹூம்! இந்தப் பெண் ஹுரைராவை என்ன செய்வதென்றே புரியவில்லை."

"இந்த ஹோட்டல் ஏற்பாடெல்லாம் அதிக செலவாகிறது, புரியுதா, என்றைக்கும், எப்போதும் நினைக்கும் போதெல்லாம் உன்னைப் பார்க்க முடிவதில்லை."

"எனக்குப் புரிகிறது ஹஸன், நிச்சயமாக ஏதாவது செய்கிறேன், சரியா? அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

"அப்புறம், மறுபடியும் படிப்பைத் தொடர்வது பற்றி முடிவு செய்து விட்டாயா?"

தொண்டையை செருமிக் கொண்டே அவளிடமிருந்து நகர்ந்து சென்றான். "இன்னும் இல்லை. சில விஷயங்கள் இருக்கிறது, புரிகிறதா"

"என்ன விஷயம்?"

"ஏதோ இருக்கிறது. முடிக்க வேண்டிய சில விஷயங்கள் இருக்கிறது."

ஏதும் பேசாமல், தன் கைகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள் பிந்த்தா. ஜன்னலருகே சென்ற ரெஸா, திரைகளை விலக்கிப் பார்த்தான், கீழே, தரைத்தளத்தில், நீர்தெளிப்பான் இங்குமங்கும் சுழன்று அழகிய பசும் புல்வெளியில் மழையைப் போல் பொழிந்து கொண்டிருந்தது.

"இது முக்கியம் என்று நினைத்தேன். அதனால் தான் உன் பெயரை நான் பதிவு செய்தேன்."

"தெரியும் தெரியும்," திரும்பி அவள் முகத்தைப் பார்த்துப் பேசினான்., "பணம் சம்பாதிக்க முடியாத போது, பள்ளிக்கு ஏன் போக வேண்டும்?"

"அங்கு போய் கல்வி கற்பதற்காக."

"பணமில்லாமல் படிப்பை மட்டும் வைத்துக்கொண்டு என்ன செய்வது?"

"பணம் மட்டுமே முக்கியம் இல்லை. தெரியுமா?"

"ஏதாவது பெரிதாக சாதிக்க வேண்டுமென்றுதான் அனைவரும் பள்ளிக்குப் போகிறார்கள், புரியுதா? புலாமாவைப் பார், ஒன்றுக்கும் உதவாத டிப்ளமோ படிப்பை வைத்துக் கொண்டு, அவனால் மனைவிக்குக் கூட சாப்பாடு போட முடியவில்லை."

"புலாமா யார்?'

"அவன் என் அப்பாவின் மகன். புரியுதா? அவன் அத்தனை வருடம் படித்து எதிலேயோ டிப்ளமா வாங்கியிருக்கிறான், என்ன படிப்பு என்று கூட எனக்கு சரியாகத் தெரியாது. ஆனால், இப்போது எங்கள் நோயாளி அப்பாவுக்குக் கூட அவனால் உதவி செய்யமுடியவில்லை. நான்தான் செய்கிறேன். நான்!! மேல்நிலைப் படிப்பு கூட முடிக்காத நான்தான் எல்லாமே செய்கிறேன், சொல்வது புரிகிறதா?"

அவள் மருதாணிச் சாயம் பூசிய தன் கைகளையும், பழுப்பும் சிவப்பும் கலந்த தன் நகங்களின் நிறங்களையும் பார்த்துக் கொண்டிருந்தாள். நிமிர்ந்து பார்த்தபோது, திரையில் மிஸ்டர். இபு தன்னை முட்டாளாக்கிக் கொள்வது போல் நடித்துக்கொண்டிருந்தார். அது அவளை சற்றும் சுவாரஸ்யப்படுத்தவில்லை. கிளிஞ்சல் வடிவ விளக்குத்திரையையும் அதன்

மீதுள்ள அழகான வேலைப்பாட்டையும் பார்த்துக்கொண்டே கீழுதட்டைக் கடித்தவாறு இருந்தாள்.

"நான் கிளம்ப வேண்டுமென்று நினைக்கிறேன்" ஆனால் அவள் நகரவில்லை.

ரெஸா ஜன்னல் பக்கம் திரும்பினான். பனியன் அணிந்து கொண்டு, குத்துக்காலிட்டு அமர்ந்த நிலையில் தோட்டக்காரர் ஒருவர் வேலிகளை நறுக்கி சீராக்கிக் கொண்டிருந்தார். தன் கத்தரியை மிக லாவகமாக அவர் பயன்படுத்துவதையும், சிறு கிளைகளையும், இலைகளையும் துண்டுகளாக வெட்டி மலை போல் குவிப்பதையும் பார்த்தவன் தன்னையே மறந்து போனான். அந்த ராட்சதக் கத்தரியால், யாரோ ஒருவரின் தொண்டையை சர்ரென்று கிழித்தால் பீரிடும் குருதிப் பெருக்கைக் கற்பனை செய்து பார்த்தவன் உடனே தலையைக் குலுக்கிக் கொண்டான்.

படுக்கையில் அமர்ந்து கொண்ட பிந்த்தா, "உன்னை ஏன் உன்னுடைய சகோதரனோடு ஒப்பிட்டுப் பேச வேண்டும்?"

சற்று நேரம் அவன் ஒன்றும் பேசவில்லை. "எத்தனை பட்டதாரிகள், டையைக் கட்டிக்கொண்டு, ஒன்றுக்கும் உதவாத அந்த ஃபைலைக் கையில் தூக்கியபடி வேலைக்கு அலைவதைப் பார்க்கிறோம்? வாழ்க்கையில் வேறு ஏதாவது வேலையை எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக, மக்கள் இவற்றிலெல்லாம் நேரத்தை வீணடிக்கிறார்கள்."

அவனையே பார்த்தாள். ரெஸாவின் உடம்பிற்குள் வேறு யாரோ புகுந்து பேசுவது போல் இருந்தது

"என் குழந்தைகள் எல்லோரும் படித்தார்கள். என் மகன் முன்க்கைலா, அவன் படிப்பு மட்டும் இல்லாது போயிருந்தால் நாங்கள் எந்த நிலையிலிருந் திருப்போம் என்று எங்களுக்கே தெரியாது"

"நான் உன் மகன் அல்ல, புரிகிறதா?"

பிந்த்தாவின் விழிகள் விரிந்தன. சட்டென சுருங்கிப் போனாள். அந்தப் படுக்கையின் மீது தன்னை மிக மிக சிறுமையாக உணர்ந்தாள்.

தொலைக்காட்சியின் சப்தம் அறையை நிரப்பிக் கொண்டிருக்க, அந்தத் தருணம் முடிவில்லாத வெறுமையில் நீண்டு கொண்டிருப்பது போலிருந்தது பிந்த்தாவுக்கு. இறுதியாக, எழுந்து தன் முகத்திரையை எடுத்து தலையைச் சுற்றிக்கட்டி அதன் மறுமுனையை தோளில் மடித்துப் போட்டுக் கொண்டவள், கதவை நோக்கி அடியெடுத்து வைத்தாள். சட்டென்று அவள் முன் குதித்தோடி வந்து இரு கைகளையும் இடுப்பில் வைத்துக்கொண்டு

நின்றான் ரெஸா. இருவரும் ஒரு சங்கடமான அமைதியில் நின்றனர்.

"தயவு செய்து போகாதே."

"வழியை விடு ஹஸன்" கண்டிப்புடன் சொன்னாள்.

"நான் சொன்னது, அதாவது அந்தப் பொருளில் சொல்ல நினைக்க வில்லை.."

"பரவாயில்லை, ஒன்றும் பிரச்சினையில்லை."

"போகாதே..."

"இங்கே பார் ரெஸா, உன்னுடைய வாழ்க்கையை புகைத்தே அழிக்க நீ முடிவு செய்துவிட்டாயென்றால், அதில் நான் சொல்வதற்கு எதுவுமே இல்லை...அப்படி சொல்ல நான் உன் அன்னை இல்லையே?

அவனைக் கடந்து சென்று கதவைத் திறந்து வெளியேறினாள். நீள வராந்தாவில் நின்று, முகத்திரையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள். சீருடை அணிந்த ஒரு பணிப்பெண் அவளை நோக்கி வருவதைக் கண்ணுற்றவள் பெருமூச்சுடன் அவ்விடத்திலிருந்து விரைந்து அகன்றாள்.

வெளியே, வெயிலில் சாயமிழந்து கிடந்த குடையின் நிழலில் பெஞ்ச்சில் அமர்ந்துகொண்டு சாலையின் மறுபக்கத்தையே பார்த்துக் கொண்டிருந்தார் மாலம் ஹரூணா. புகழ் பெற்ற பாடகர் மம்மன் ஷத்தாவின் பாடல், கையிலிருந்த ரேடியோவில் ஒலித்துக் கொண்டிருந்தது, ஷத்தா, குறும்புத்தனமான குரலில், "காக்ரபதாவ்" பாட்டினூடே காதலில் போட்டியிடுவதைப் பற்றி பல வகையான கிண்டலைப் பொழிந்து கொண்டிருந்தார்.

மாலம் பாலாபரே, அவருடைய பொருட்களின் நடுவில் நின்று கொண்டு ஒரு பருத்த பெண்மணியிடம் பேரம் பேசிக் கொண்டிருந்தார். ஏதோ நகைச்சுவையாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அதையெல்லாம் மனதில் வாங்கிக் கொள்ளாமல் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார் மாலம் ஹரூணா. இப்போது ஒலிபரப்பாகும் ஷத்தாவின் கோபம் தொனிக்கும் பாடல் வரிகளையும் கூட அவர் கவனிக்கவில்லை. ஹோட்டலிலிருந்து பிந்த்தா வெளிப் பட்டதும் சட்டென எழுந்து நின்றார், அவளை நோக்கி நகர எத்தனித்தவர் பின் அப்படியே நின்று விட்டார்.

"ஏதாவது பிரச்சனையா?" காதணிகள் நிரம்பிய வளையத்தை ஒரு கையில் பிடித்துக் கொண்டே அவர் புறம் திரும்பிக் கேட்டார் பாலாபரே.

"இல்லை, ஒன்றுமில்லை..." ஆனால் அந்த நடைபாதைக் கல்லிலிருந்து

குதித்து, சாலையோரமாகப் போய் நின்றுகொண்டார். பிந்த்தா ஒரு ஒக்காடவை நிறுத்தி, அதன் பின் சீட்டில் ஏறி அமர்ந்தாள். அந்த இயந்திரம் அவளை ஏற்றிக்கொண்டு பறந்தது. அதிலிருந்து கிளம்பிய வெண்புக, அங்குமிங்கும் அலைந்து பின் காற்றில் மெதுவாகக் கரைந்து போனது.

"பெஞ்ச்சில் அமர்ந்து கால் மேல் கால் போட்டபடி பாதங்களை ஆட்டிக் கொண்டிருந்தவர் அட!!! என ஐம்பதாவது முறையாக ஆச்சரியப்பட்டார். ஒரு வழியாக ஆச்சர்யங்கள் அடங்கி, தன் வழக்கமான செயலைத் துவங்கும் வேளையில், அதே ஹோட்டலிலிருந்து ரெஸா வெளியேறுவதைக் கண்டார். மீண்டும் குதித்திறங்கி சாலையோரம் வந்தவர், குறுக்கே நடந்து அதைக் கடப்பவர் போல அங்கேயே நின்று கொண்டிருந்தார். ரெஸாவும் ஒரு ஒக்காடாவை நிறுத்தி அதில் தொற்றிக் கொண்டு விரைந்ததைப் பார்த்தவருக்குத் தன் தலையில் அணிந்திருக்கும் ஜன்னா தொப்பியைக் கழற்றித் தரையில் வீசி எறிந்து கால்களால் மிதிக்க வேண்டும் போல மனதில் ஒரு வெறியெழுந்தது. ஆனால், தொப்பியைக் கழற்றி, முற்றிலும் மழித்திருந்த தலையின் மேல் வழிந்து கொண்டிருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு மீண்டும் தொப்பியை அணிந்து கொண்டார். அந்த பருத்த பெண்மணியுடன் மேலும் பேரம் பேசிக் கொண்டிருந்த பாலாபரேயிடம் கூட விடை பெறாமல், அந்த இடத்தை விட்டு அகன்றார்.

—

பாகம் 2

ஹஸன் 'ரெஸா' பபாலேயின் முறையற்ற கல்வியறிவு

(1986-2011 அதற்கும் அப்பால்....)

19

"நொண்டிக் கழுதைகளுக்கு ஏற்றதல்ல பந்தயக் குதிரைகளின் மைதானம்"

கடந்த சில நாட்களாக உற்சாகமின்றி மந்தமாகக் கிடந்த சான்சிரோ இப்போது நாடோடிப் பாடகன் மம்மன் கோலோவின் ஆர்ப்பரிக்கும் இசையால் தட்டியெழுப்பப் பட்டு, புழுதியில் மூச்சிறைக்க நிற்கும் மூர்க்க விலங்கென தலை சிலுப்பி நின்றது.

அங்கு எழுந்த சப்தத்தை ரெஸாவும் கேட்டான். சற்றுத் தொலை விலிருந்து மாலைத் தென்றலின் தோளில் அமர்ந்து புறப்பட்டு வந்த சங்கீதம், அங்கு நடமாடிக் கொண்டிருந்தவர்களின் காதுகளிலும் விழுந்தது. போதைக்கும், மயக்கத்திற்கும் தன்னை ஒப்புக் கொடுத்த இளைஞர்கள் பரவசக் கூச்சலோடும், சிரிப்போடும் ஆடிப் பாடிக் கொண்டு வந்தனர்..

மம்மன் கோலோவால் மட்டுமே, கையிலிருக்கும் தன் பழைய கஞ்சிராவின் தாளத்தாலும், பாம்பாட்டியின் வித்தை போலத் தேர்ந்த வசியத் திறமையாலும் உறங்கிக் கொண்டிருக்கும் மிருகம் போலக் கிடந்த சான்சிரோவை இப்படி வெறித்தனமாகக் கிளர்ந்தெழ வைக்க முடியும். வாயிலின் அருகே நின்று அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்தான் ரெஸா. அவன் எதிர்பார்த்தது போலவே, இருபதுக்கும் மேற்பட்டவர்கள், மம்மன் கோலோவின் கொச்சையான பாடல் வரிகளுக்கும், கஞ்சிராவின் தாளத்திற்கும் நிலை மறந்து நடனமாடிக் கொண்டிருந்தனர். காற்று சுமந்து நிற்கும் கனமான போதை நெடியை ஆழ்ந்து அனுபவித்தான் ரெஸா. உள்ளே ஊதிக் கொண்டிருந்தவர்களும் பாடலுக்கேற்பத் தன் உடலை அசைப்பதைப் புன்னகையுடன் கவனித்தான். மூலையில் சிலர் போதை சுருட்டைப் புகைத்துக் கொண்டு அதனுடன் கூடக் கோந்தை உறிஞ்சிக்கொண்டும், இருமல் மருந்தை முகர்ந்து கொண்டுமிருந்தார்கள். அவ்விடத்தில்,

உணவும், பானமும் விற்கும் பெண்கள் விற்பனைப் பொருட்களை அடுக்கி வைத்திருக்கும் பெரிய தட்டைத் தலையில் வைத்துக்கொண்டு அது கீழே விழாதவாறு மிக நளினமாகக் கையாண்டவாறு நின்றுகொண்டு நடனத்தைக் கண்டு களித்துக் கொண்டிருந்தார்கள்.

கூட்டத்திற்கு நடுவே மகிழ்ச்சியின் ஊற்று பெருகியோடுவதைக் கண்டான் ரெஸா. தனது மெலிந்த கரங்களால் கஞ்சிராவை ஓயாமல் தட்டிக் கொண்டும், சிலவேளைகளில் அதை தலைக்கு மேல் உயர்த்திப் பிடித்துக் கொண்டும் புன்னகை மாறாமல் பாடிக் கொண்டிருந்தான் மம்மன் கோலோ. ரெஸாவைப் பார்த்தவுடன், மேலும் பிரகாசமான புன்னகையுடன் தனது பாடல் வரிகளுக்குள் சாமர்த்தியமாக அவன் பெயரை இணைத்துப் பாடினான்.

அவனைப் புகழ்ந்து பாடும்போது, ரெஸாவும் கும்பலின் மத்தியில் போய் நின்று உற்சாகமாக நடனமாடினான். கைகளிரண்டையும் உயர்த்தி, காற்றை வெட்டுவது போல் கைகளை ஆட்டி ஆடினான். போதை நிறைந்த ஆரவாரமான கூக்குரல்கள் அதை ஆமோதித்தவாறு கத்தி ஒலியெழுப்பின. கோலோவின் வியர்வை வழியும் நெற்றியில் ஒரு ஐம்பது நைராத் தாளை ஒட்ட வைத்து விட்டு, மேலும் சற்று நேரம் ஆட்டம் போட்டபின் கூட்டத்தை விலக்கி வெளியேறினான் ரெஸா.

கதவருகில் நின்றுகொண்டே இசைக்கேற்பத் தலையாட்டிக் கொண்டிருந்தான் கட்டூஸோ. முகத்தை இறுக்கமாக வைத்தவாறு இரு இளைஞர்களுக்கு போதை சுருட்டை விற்று அவர்கள் கொடுத்த பணத்தை வாங்கிப் பெட்டியில் போட்டுக்கொண்டிருந்தான் .ரெஸாவைப் பார்த்து மரியாதையுடன் கையசைத்துக் கொண்டே அவ்விடத்தை விட்டு நகர்ந்தனர் அவ்விருவரும். அவர்களுக்குத் தலையசைத்துக் கொண்டே, கட்டூஸோவின் தோளைத் தட்டிக் கொடுத்தான் ரெஸா. அவனுடைய விறைப்பான தோள்களில் உருண்டு திரண்டிருந்த தசைகளை ரெஸாவின் கைகள் உணர்ந்தது.

"ரெஸா, வந்து விட்டாயா? வயதான உன் அப்பா எப்படி இருக்கிறார்?"

"கிழவர் இன்னும் கொஞ்ச நாள் வாழ்வார் என்று நினைக்கிறேன்" சொல்லிக் கொண்டே முன்பக்கம் நிறைந்திருந்த கூட்டத்தின் பக்கம் செல்லத் திரும்பினான்

"கோலோ இங்கே இருக்கிறான்."

"ஆமாம், வியாபாரமும் நன்றாகப் போகிறது, அந்தப் பயல் வரும் போதே கூட பூதத்தையும் அழைத்துக் கொண்டு வருவான் போல இருக்கு."

கோலோவால், தனது கஞ்சிராவின் தாளத்தைக் கொண்டே எந்த விதமான முன்னறிவிப்புமின்றி சட்டென்று ஒரு கூட்டத்தைக் கூட்டி விட முடியும். அது சான்சிரோவின் வியாபாரத்திற்கு மிக உகந்தது. மம்மன் கோலோ ஒரு வேடிக்கையான மனிதன். அவன் ஜாரியா மாகாணத்தைச் சேர்ந்தவன் என்று ஒரு வதந்தி உலவுகிறது. எவருமே எதிர்பாராத நேரத்தில், கஞ்சிராவைத் தட்டிக்கொண்டு, உற்சாகத்தோடும் ஆரவாரத்தோடும், கைவசம் எங்கெங்கிருந்தோ புனையப்பட்ட சாகசக் கதைகளுடன் இங்கு பிரசன்னமாகி விடுவான். ஊர்வன வகைப் பிராணிகளைக் கையில் சுமந்து கொண்டு சுற்றும் நாடோடி ஒருவன், படுக்கையை நனைக்கும் சிறுவர்களின் பழக்கத்தை ஒழிப்பதற்காக அவர்களை உயிருள்ள கழுதைப் புலியின் முதுகின் மேல் ஏற்றி இறக்கும் கதைகளைச் சொல்வான். எக்கோ நகரின் விலைமாதுகளுடன் தான் உல்லாசமாக இருந்ததை, கழுதைக் கறியை உண்ணும் எஜும்க்போ மக்களை, சஹாராவின் அருகிலிருக்கும் புராதன அகதேஜ் மசூதியைப் பற்றி, புஸா மீனவர்களிடமிருந்து தப்பித்து வந்ததை, மற்றும் கெப்பி நகரின் திருட்டுச் சுரங்கங்களில் தான் வாழ்ந்த நாட்கள் எனக் கதை கதையாகச் சொல்வான். ஆனால், சிறு வயதிலேயே அவனை அனாதையாக விட்டுச் சென்ற பெற்றோர்களைப் பற்றி மட்டும் ஒரு போதும் எதுவுமே சொல்லமாட்டான். தன் வீர தீர சாகசங்களை விவரிக்கும் கதைகளைச் சொல்லி, போதும் போதுமென்கிற அளவுக்கு அந்த இடத்தை மயக்கியபின், விடிவதற்கு முன் எழுந்து சொல்லாமல் கொள்ளாமல் மறைந்து விடுவான். அப்போதுதான் அவனது இன்மையை அங்கிருப்பவர்கள் உணர்வார்கள் என்பது அவனது கணிப்பு. பின் வரும் நாட்களில் ,மயங்கிய கண்களுடன் நிழலில் அமர்ந்து கொண்டு, மம்மன் கோலோ பரிசாக அளித்துச் சென்ற அழகிய பூவையும், நாட்களையும் பற்றி அந்தப் பையன்கள் பேசிக் கொண்டே இருப்பார்கள்.

இரு நாட்களுக்கு முன், ரெஸா அவன் நோயாளித் தந்தையைப் பார்ப்பதற்காக கிளம்பிச் சென்ற பின், விவரிக்க முடியாத ஒரு சோகம் சான்சிரோவில் நிலவிக் கொண்டிருந்து. ஏதாவது சுறுசுறுப்பான நிகழ்வு நிகழ்ந்தாலொழிய மாற்ற முடியாத நிலையில் அந்த இடம் உழன்று கொண்டிருந்து. இப்போதோ மகிழ்ச்சியில் கும்மாளமிட்டுக் கொண்டிருக்கும் அந்த இடத்தைப் பார்த்துக் கொண்டே தலையாட்டினான் ரெஸா.

"ஆமாம், ஏதோ ஒரு மந்திர பூதத்தோடுதான் வருகிறான்."

சொடக்கெடுத்துக் கொண்டே கேட்டான் கட்டுஸோ. "உன் தந்தை இப்போது தேறி வருகிறார் என்று சொன்னாய்."

ஆமாம், வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள், இனிமேல் அவ்வப்போது போய் செக் அப் செய்து கொண்டால் போதும், புரியுதா?" திரும்பி கட்டூஸோவின் அறைக்குள் நுழைய முயன்றான் ரெஸா, ஆனால் அந்த குண்டனோ வழி விடத் தயங்கினான்.

"வா, கொஞ்சம் பண விஷயத்தைப் பற்றிப் பேசணும்" அவன் தடுப்பதை கண்டுகொள்ளாதவன் போலவே பேசிய ரெஸா. அவனைத் தள்ளிக் கொண்டு அறைக்குள் போன போது அங்கு ரீட்டா அமர்ந்திருந்தாள். அந்த அறையின் கசங்கிய படுக்கை விரிப்பின் மீது அனேகமாக அனைத்து இளைஞர்களும் அவளை அனுபவித்திருக்கிறார்கள். அவசரமாக எழுந்து அமர்ந்து, கலைந்த தலையைச் சரி செய்வது போலப் பாவனை செய்தாள் ரீட்டா. அவள் கேசம் நீளமாக அடர்த்தியாக, மின்னியது. அது போலி முடி.

"ரெஸா "அவன் கண்களைத் தவிர்த்தாள்.

வெளியே தெரிந்த அவள் வழவழப்பான தொடைகளைப் பார்த்தவன், உடனே புடைத்தெழும் தன் ஆணுறுப்பைப் யாரும் அறியாதவாறு பிடித்துக் கொண்டான்.

"ரீட்டா" முடிவு செய்ய இயலாது ஒரு கணம் நின்றவன், பின் திரும்பி கதவை நோக்கி நடந்தான்.

வெளியே டான் அசபே நடந்து வந்து கொண்டிருந்தான். அவன் ரீட்டாவிடம் இது வரை போனதில்லை, போகும் ஆசையும் அவனுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ரெஸா வெளியே போக வழிவிட்டான்.

அவன் குனிந்த போது, பேரணி வன்முறையின் போது அவன் தலையில் பட்டிருந்த அரிவாள் வெட்டுக் காயம் தெரிந்தது.

அந்தக் காயத்தின் தழும்பு ரெஸாவின் கவனத்தை ஈர்த்தது. சந்தேகத்துடன், "உன் காயம் ஆறி வருகிறது" என்று சொன்னான்.

"ஆமாம், ஆறிக் கொண்டிருக்கிறது" சொல்லிக் கொண்டே மேலும் குனிந்தான். அவனைக் கடந்து தனது அறைக்குச் சென்றான் ரெஸா. கட்டூஸோ அவனுடன் இணைந்து கொண்டான்.

இரு ஆண்களும் தர்மசங்கடமாக உணர்ந்தார்கள். வெளியே, மீண்டு மொரு மகிழ்ச்சிக் கூவல் ஓங்கி ஒலித்து, பின் கோலோவின் கஞ்சிரா ஓசையிலும் உச்சஸ்தாயிக் குரலின் முன் மற்ற சப்தங்கள் அடங்கிப் போனது.

"உனக்கு வேணும்னா..."

"தேவையில்லை!" ரெஸா சத்தமிட்டான். "இப்போது பணத்தைப்

பற்றிப் பேசலாம். படுக்கையில் சரிந்து அமர்ந்தான் ரெஸா.

கட்டுஸோவும் அறையினுள் நுழைந்து அவனருகில் அமர்ந்தான். கணக்கு முடித்த பின் அவனுக்குக் கொடுக்கப்பட்ட பணக்கட்டு ஒன்றை எடுத்து பாக்கெட்டில் வைத்துக் கொண்டான் ரெஸா.

"நாளை வெளியூர் சென்று நல்ல சரக்காகப் பார்த்து வாங்கி வருகிறேன், புரியுதா?"

எதனாலோ ரெஸா படபடப்பாக இருக்கிறான் என நினைத்த கட்டுஸோ. அவனிடம் நெருங்கி, ஒரு நமுட்டுச் சிரிப்புடன் சைகை செய்து கொண்டே, "உனக்காக ஒன்று கொண்டு வரப் போகிறேன் இப்போது" என்ற போது அவன் கண்களில் குறும்பு மின்னியது. "ரொம்ப அருமையான பொருள் தெரியுமா?"

கட்டுஸோ வருவதற்குக் காத்திருந்த ரெஸா, அறையின் சுவரில் புதிதாக ஒட்டியிருந்த AC Milan போஸ்டரைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஊருக்குப் போவதற்கு இரண்டு நாளைக்கு முன்தான் மாற்றியிருந்தான். பழைய போஸ்டரை வழியனுப்பும் விழா ஷனி ஒருவன் முன்னிலையில் மட்டும் நடைபெற்றது. அவனுக்குத்தான் அதைக் கிழித்தெறியும் பணி வழங்கப் பட்டது. அந்தப் போஸ்டரின் மீது ஷனிக்கு எந்த விதமான அபிமானமும் இருந்தில்லை. காலியான இடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்றும், வெற்றிடங்கள் வண்ணமயமாக்கப்பட வேண்டுமென்பதையும் சற்றும் அறியாதவன் ஷனி. அதை சிறு சிறு துண்டுகளாக் கிழித்து எவ்வித சலனமுமின்றி குப்பைத் தொட்டியில் போட்டவன் அவன்.

ஒரு நைலான் பையில் சுற்றி எதையோ எடுத்து வந்து அவனிடன் தந்தான் கட்டுஸோ. அப்போதும் சிரித்துக் கொண்டிருந்தான்.

"இதில் கொஞ்சம் எடுத்து, ஒரு கோப்பை ஃபுரா பானத்தில் கலந்து சாப்பிடு... உன் சக்தியை அதிகரிக்கும்."

ஐயத்துடன் அவனைப் பார்த்தான் ரெஸா.

"உண்மையாகத்தான் சொல்கிறேன், வேண்டுமென்றால் ரீட்டாவை இங்கு வரவழைக்கிறேன், வேலை செய்கிறதா என்று முயற்சி செய்து பாரேன்."

"வேண்டாம், வேண்டாம்", அந்தப் பையை மெத்தையில் தூக்கி வீசியெறிந்தான் ரெஸா.

"அப்புறம், யாரிடம் போகப் போகிறாய்?"

ரெஸா முறைத்துப் பார்த்தபோது சிரித்துக் கொண்டே அவன் தோளில் தட்டினான் கட்டுஸோ. வலிமையாக விழுந்த அடியில் சற்றே பின் வாங்கினான் ரெஸா, மேலும் சிரித்துக் கொண்டே, அறையில் அவனுக்காகக் காத்திருந்த பெண்ணைப் பார்க்கச் சென்றான் கட்டுஸோ.

கதவில் சாய்ந்தவாறு வெளியில் நடந்த கேளிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருந்தான் ரெஸா. கோலோவின் குரலில் களைப்புத் தெரிந்தாலும், நிறுத்தாமல் பாடிக்கொண்டிருந்தான். அவனுடைய பாடலுக்கு, மிதக்கும் கடல் தாவரங்கள் போல மயக்க நிலையில் இளைஞர்கள் அனைவரும் ஆடிக்கொண்டிருந்தார்கள். அவர்களை நிறுத்தச் சொல்லலாம் என்று ரெஸா நினைத்துக் கொண்டிருக்கும்போது கான்ஸ்டபிள் பக்கோ வருவதைப் பார்த்தான். தெருநாயைப் போலப் பதுங்கிப் பதுங்கி வந்து கொண்டிருந்தார். அங்கு போலீஸைப் பார்த்து விட்ட சிலர், கத்த ஆரம்பித்தார்கள். 'வாரா, வாரா' ஓடு, ஓடு...''

சிலர் ஓடத் துவங்கிவிட்டார்கள். அவர்களை நிற்கச் சொல்லி ரெஸாவின் குரல் ஓங்கி ஒலித்தது. இசை நின்று போனது. பையன்கள் அனைவரும் போலீஸைத் திரும்பிப் பார்த்த போதுதான் அவரே குழப்பத்துடன் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. ரெஸா முன்னே வந்தான்.

அவன் முன் வந்து நின்று பணிவுடன் புன்னகைத்தார் போலீஸ்,

''ரெஸா, உன்னுடைய கொண்டாட்டத்தை அதிகம் சத்தமில்லாமல் நடத்திக் கொள் என்று சொல்லச் சொன்னார் அதிகாரி''

சட்டென்று அமைதி நிலவியது. அப்போது, போதை தலைக் கேறியிருந்த ஒருவன் தள்ளாடிக் கொண்டே முன்னால் வந்து தரையில் விழுந்தான். கஞ்சிரா மீண்டும் தலைக்கு மேல் ஆரவாரமாக உயர்ந்தது, மம்மன் கோலோ பாடத் தொடங்கினான்..

''போலீஸ்...ஒரு த்தா...அவனோட அப்பனோட...''

கூட்டம் ஆர்ப்பரித்தது. வந்திருந்த பணிவான போலீஸ் கடுமையான வசைச் சொற்களில் சுருண்டு போனார். அவர் அவ்விடத்தை விட்டு நீங்கிச் சென்றதும், கூட்டத்தைக் கலைந்து போகுமாறு கேட்டுக் கொண்டான் ரெஸா.

பாம்பாட்டியின் மகுடியிலிருந்து மிதந்தோடும் மெல்லிய நாதம் போல தலைக்கு மேலே சுழன்று கொண்டிருந்த கஞ்சாப் புகையின் வளையத்திற்கேற்ப ஆடியபடியே, அங்கிருந்து அகன்றார்கள் சிலர். மற்றவர்கள் ஒரு மூலையில் அடைக்கலமாகி, நெடி மிகுந்த புகையை இருண்டிருந்த வானத்தை நோக்கி ஊதிக் கொண்டிருந்தார்கள்.

அறைக்கு முன்னிருந்த பெஞ்ச்சில் ரெஸாவோடு வந்து அமர்ந்து கொண்டான் கோலோ. உடனே அங்கிருந்த இளைஞர்கள் அனைவரும் ஓடி வந்து அவர்களைச் சூழ்ந்து கொண்டார்கள். பெஞ்ச்சில் இடமில்லாத போது தரையில் சிலர் அமர்ந்து கொண்டார்கள்.

கோலோ, சமீபத்தில் கெப்பி சுரங்கத்தில், எந்த விதமான நீதியும் நேர்மையற்ற சீன கான்ட்ராக்டர்களுக்காகத் தங்கத்தை வெட்டியெடுக்கும் வேலை செய்தபோது தாங்கள் எப்படியெல்லாம் சுரண்டப்பட்டோம் என்று சொல்ல ஆரம்பித்தான். அதனோடு, சீனர்களின் குரல் அவனுக்கு வேடிக்கையாக இருந்ததைச் சொன்னவன் அதை மிமிக்ரி செய்தும் காட்டி சான்சிரோவின் இளைஞர்களை சந்தோஷப்படுத்திக் கொண்டிருந்தான்.

ஆனால், அமர்த்திருக்கும் இடத்திற்குப் பின்னால் உள்ள அறையில் என்ன நடக்கிறதென்று ரெஸாவுக்குத் தெரிந்திருந்ததால், அங்கு நிறைந்திருந்த சந்தோஷக் கூக்குரல்களுக்குப் பின்னால், கட்டூஸோவும் ரீட்டாவும் எழுப்பும் உணர்ச்சிகரமான முனகல்கள் அவனுக்குக் கேட்பது போல உணர்ந்தான்.

அனைவரையும் அமைதியாக இருக்கும்படி கையமர்த்தினான் கோலோ. "வல்லாஹி, அந்த சீனாக்காரர்கள் பாடுவதைக் கேட்க நான் எத்தனை பணம் வேணும்னாலும் கொடுப்பேன், ஏனென்றால், அது எத்தனை அசிங்கமாக இருக்குமென்று எனக்குத்தான் தெரியும்" கஞ்சிரா தாளத்தோடு, கீச்சென்ற குரலில் அவர்களைப் போலவே குரல் மாற்றிப் பாட, மொத்தக் கூட்டமும் சிரித்துக்கொண்டிருந்து.

ரெஸா எழுந்து அவன் அறைக்குள் சென்று பிந்த்தாவை ஃபோனில் அழைத்தான். ஓயாமல் மணி அடித்துக்கொண்டிருந்தது. மீண்டும் டயல் செய்தான். ஆனால் எந்த பதிலும் வராதபோது, எரிச்சலுடன் ஃபோனை திரும்பவும் பாக்கெட்டில் செருகிக்கொண்டான்.

வெளியே வந்து, இளைஞர்களுடன் சேர்ந்து அமர்ந்தான் ரெஸா. அஸ்தமனப் பொழுதின் கதிரொளி, தொடுவானத்திலிருந்து தங்கத் துகள்களை அள்ளி வானெங்கும் இறைத்தாற்போல் பரவிப் படரும் நேரம் வரை கூட்டத்தை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தான் கோலோ.

அப்போது மருஃபு நொண்டிக் கொண்டே உள்ளே நுழைந்தான். சட்டென்று நிசப்தமாகி விட்ட அந்த சூழலை, கான்க்ரீட் தரையில் பட்டுத் தெறிக்கும் கைத்தடியின் க்ளிக் எனும் ஓசை நிறைத்தது. பெரிதாகக் கட்டுப் போட்ட இடது காலைத் தரையில் ஊன்றும் போதெல்லாம் வேதனையில் முனகினான். இன்னும் எவ்வளவு தூரம் என்று முன்னால் பார்த்துக் கொண்டே நடந்தான். அவனை முதலில் பார்த்த டோகோ, அதிர்ச்சியை

மறைத்துக் கொண்டு விறைப்பாக அவனை எதிர்கொண்டான்.

"ஏய், திருடா. உனக்கு இங்கே என்ன வேண்டும்? "

"என்ன திருடினான்?" கோலோ பல்லைக் காட்டினான்.

"ம்ம், ஆணுறைகள்!"

"வாயை மூடு டோகோ" ரெஸா கத்தினான்.

ஆனால் கோலோ கெக்கலித்தான். அவன் சிரிப்பு அங்கிருந்த மற்றவரையும் தொற்றினாலும், ரெஸாவின் முகத்திலிருந்த சினத்தைப் பார்த்து, அடக்கமாக சிரித்துக் கொண்டார்கள்.

மரும்பு நேராக நிற்க முயற்சி செய்தான். "எனக்கு ரெஸாவிடம் பேச வேண்டும்."

"சரி, அப்படியென்றால் பேசு" சிரமப்பட்டுத் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டான் ரெஸா,

"என்ன பேசுவதென்றாலும் இவர்கள் முன்னாலேயே பேசலாம், உனக்குப் புரியுதா?"

நொண்டிக் கொண்டே முன்னால் சென்று தரையில் அமர்ந்த மரும்பு, ஹஜியா பிந்த்தாவின் வீட்டு மதில் சுவரைத் தாண்டியதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டே இருந்தான். "வல்லாஹி, அந்த வீட்டை தொடக்கூடாதென்று நீங்கள் சொல்லி வைத்திருந்தது எனக்குத் தெரியாது, தெரிந்திருந்தால் நான் போயிருக்கவே மாட்டேன்"

ரெஸா பதிலொன்றும் கூறாததால் மீண்டும் மீண்டும் விளக்கம் சொல்லியபடி மன்னிப்புக் கேட்டுக் கொண்டே இருந்தான்.

"இங்கே பார் ரெஸா" தொண்டையைச் செருமிக் கொண்டே சொன்னான் கோலோ. "அவன்தான் மன்னிப்புக் கேட்டு விட்டானே, உனக்கே தெரியும், நாம் எல்லோருக்கும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் மதில் சுவரைத் தாண்ட வேண்டிய நிலை வரும். ஆனால், அவன் இனிமேல் உன் பாதையில் குறுக்கே வரமாட்டேன் என்று சொல்லி விட்டான் இல்லையா, தயவு செய்து மன்னித்து விடு."

மரும்பு, ரெஸாவின் முன் தலை குனிந்து அமர்ந்திருக்க, சுற்றியிருந்த இளைஞர்களும் அவனுக்காகப் பரிந்து பேசினர்.

அனைத்தையும் செவி மடுத்த ரெஸா நீண்ட பெருமூச்சு விட்டுக் கொண்டே கைகளில் சொடக்கெடுத்தான்.

"நாம் செய்யும் வேலையில் ஓர் ஒழுங்கு இருக்க வேண்டும், இல்லையா? எதையும் எப்படி வேண்டுமானாலும் செய்ய முடியாது, புரிகிறதா?"

அங்கிருந்த இளைஞர்கள் தலையாட்டினர்.

"ஒரு வீட்டைத் தொடக்கூடாதென்றால் அதில் ஒரு காரணம் இருக்கும். நாம் முட்டாள்கள் இல்லை. ஆனால், இதெல்லாம் தெரிந்தும் கூட மரும்பு அந்தப் பெண்மணியின் வீட்டிற்கு ஜெனரேட்டரைத் திருடப் போயிருக்கிறான். அந்தச் செயலுக்கு விளைவுகள் உண்டு. இந்நேரம் மரும்பு இறந்தே போயிருப்பான். ஆனால். இது மரும்பு, கால் பந்தாட்ட வீரன், நம் நண்பன். அதனால்தான் ஒரு பாடம் மட்டும் புகட்டினோம்."

"அவன் இப்போது பாடம் கற்றுக் கொண்டான்" கோலோ முன் வந்து சொன்ன போது, மற்றவர்களும் ஆமோதித்தார்கள்.

"ஹப்பா, ரெஸா, என்னை மன்னித்து விடு, அந்த நேரத்தில் எனக்குள் சாத்தான் புகுந்து விட்டது" கெஞ்சும் பார்வையில் அவனைப் பார்த்தான்.

பெஞ்ச்சிலிருந்து எழுந்த ரெஸா, சுற்றிலும் உள்ள எதிர்பார்ப்பு நிறைந்த முகங்களைப் பார்த்தான். தோளைக் குலுக்கிக் கொண்டான். "அந்த சாத்தான், கீத்தான் மேலேறி வந்ததென்று இன்னொரு தடவை என் முன்னால் வந்து நின்றால் நீ உயிரோடு இருக்க மாட்டாய். புரிந்ததா... போய்த் தொலை"

டோகோ, முன்னால் குதித்து, தன் கத்தியை உருவி மரும்புவின் கழுத்துக்கு ஒரு அங்குலத் தொலைவில் வைத்துக் கோடு போல வரைந்தான். திடுக்கிட்ட மரும்பு சட்டெனப் பின் வாங்க அனைவரும் சிரித்தனர்.

"இத தொழுகை நேரம்" கோலோ எழுந்தான். "அதற்குப் பின் நான் கஞ்சா எடுத்துக் கொள்ளப்போகிறேன்"

—

பின்னர், தன் அறையில் அமர்ந்து கொண்டு புலன்களை விரல்களின் வழியே திசையறியாத கரைகளுக்குச் செல்ல அனுமதித்துக் கொண்டே, 'கொட்டுனு' நகரப் பெண்களைப் பற்றி மம்மன் கோலோ சொல்வதை செவியில் வாங்கிக் கொண்டிருந்தான் ரெஸா. ஏனோ அவனுக்குத் தன் தாயின் நினைவு வந்தது.

என்றோ பால்யத்தில் ஒரு நாள், அவள் ஜில்பாபைப் பிடித்துக்கொண் டிருந்த அவன் விரல்களை விடுவித்துக் கொண்டபோது அவள் தொட்டதை

ஞாபகத்தில் தேடிப் பார்த்தான். ஆனால் அவளிடமிருந்த அந்த தனித் துவமான நறுமணம் மட்டுமே நினைவில் மீந்து நின்றது. அதுதான் அவனை அவள் கடைசி முறையாகத் தொட்டது. அந்தக் கசப்பான நினைவுகள்தான், மூன்று வருடங்களுக்கு முன் மீண்டும் அவள் வந்தபோது நடந்த நிகழ்வுகளின் தலையெழுத்தை நிர்ணயித்தது.

ஏதோ அவசர வேலையென்று அவனை வீட்டுக்கு அழைத்தார் அப்பா. வீட்டுக்குள் நுழைந்த போது,முன்னறையில் கம்பளத்தில் சப்பணமிட்டுத் தன் அம்மா அமர்ந்திருப்பதைக் கண்டான். அவனைப் பார்த்துச் சிரித்தபோது மின்னிய தங்கப்பல் பார்வையில் விழுந்ததும் அங்கிருந்து வெளியேறி நடக்கத் தொடங்கினான். பின்னால் அவள் அழைக்கும் குரல் கேட்டவுடன் மிக வேகமாக நடக்கத் துவங்கியவன் சகதி நிறைந்த குறுகிய தெருக்களில் ஓடிக் கொண்டே இருந்தான்..

இப்போது, படுக்கையில் அமர்ந்து கொண்டு, கோலோவின் வார்த் தைகள் எதையோ தூண்டி விட, அந்த சந்திப்பில் பார்த்த முகத்தை நினைவில் கட்டமைக்க முயன்று கொண்டிருந்தான். அவன் திரும்பிக் கொண்டபோது அவள் முகத்தில் தெரிந்த அதிர்ச்சியை யோசித்துப் பார்த்தான். ஆனால் அவன் நினைவுக்குக் கிடைத்தெல்லாம் அவள் கண்களில் வரைந்திருந்த அடர்த்தியான மையும், அவள் கன்னத்தில் இருந்த தியாகச் சூட்டுத் தழும்பும், பள பளவென மின்னும் பல் மட்டுமே.

அவன்ஃபோன் சிணுங்கியது. ஒளிரும் திரையில் பெயரைப் பார்த்ததும், கையை உயர்த்தி மற்றவர்களை அமைதியாக இருக்கச் சொன்னான்.

"யல்லாபை, முகமன் கூறினான். மறுமுனையில் செனேட்டரின் குரலுடன், வேறு சத்தம் ஏதோ சப்தங்கள் கேட்டது.

"ரெஸா, என்ன?"

மீண்டும் வணக்கம் சொன்னான், அனிச்சையாக அவன் தலை மரியாதையில் குனிந்தது..

"ரெஸா, எங்கே இருக்கிறாய்? ஏதோ சத்தம் கேட்கிறதே?"

"வீட்டில்தான் இருக்கிறேன் சார், வீட்டில்தான்."

"ஓஓ, நீ உன் காதலியுடன் இருப்பாயென்று நினைத்தேன், நீங்கள் இந்தக் காலத்து இளைஞர்கள், உங்களைப் பற்றி எனக்குத் தெரியுமே" அவர் பேச்சின் ஊடே சிரிப்புத் தெறித்தது. "உன் வயதில் நான் இருந்தபோது, இந்த நேரத்திலெல்லாம் என்னை வீட்டில் பார்க்கவே முடியாது. வெளியே போய், இளம் பெண்களை ஈர்க்க முயற்சி செய்துகொண்டிருப்பேன்.

ஆனால் இப்போது, தொப்பை தள்ளும் வயதான மனிதர்களோடு ஸ்க்வாஷ் விளையாடும் நிலையில் தான் இருக்கிறேன். நீ ஸ்க்வாஷ் விளையாடுவாய் இல்லயா ரெஸா?"

தலையைக் குலுக்கினான் ரெஸா. "இல்லை சார், நான் விளையாட மாட்டேன்."

"பின் வேறென்ன செய்து கொண்டிருக்கிறாய்? ஒரு நாள் உன்னை க்ளப்புக்கு அழைத்துக் கொண்டு போகிறேன், நான் விளையாடுவதை நீ பார்க்க வேண்டும். நான் நன்றாகவே விளையாடுவேன், வல்லாஹி"

"நான் பார்க்க விரும்புகிறேன் சார்."

"ஆனால் என்னைப் பார்க்க வருகையில் உன் காதலியையும் அழைத்துக் கொண்டு வர வேண்டும் ரெஸா. எனக்கு அறிமுகப்படுத்தி வைக்க வேண்டும், சரியா?"

"ஆகட்டும் சார், என்றாவது ஒரு நாள் செய்கிறேன்."

"ஆமாம், அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும், கேட்கிறதா?"

"சரிங்க சார்."

"நல்லது, நல்லது! ம்ம், என்னோடு விளையாடுபவர் தயாராகி விட்டார், போய் அவரை ஒரு கை பார்க்கிறேன். அப்புறம் ரெஸா..."

"சொல்லுங்கள் சார்."

நீ எனக்காக செய்ய வேண்டிய பணியைப் பற்றி சொல்லியிருந்தேனே, நினைவு இருக்கிறதா? நீ வீட்டுக்கு வந்தாயே அன்று, சரியா?

"அதைப் பற்றி நீங்க விவரம் சொல்லவில்லை."

"ஆமாம், ஆமாம், எனக்குத் தெரியும், சரி, உனக்கு மோசஸைத் தெரியும் அல்லவா, என் உதவியாளர். அவரிடத்தில் ஃபோனைத் தருகிறேன், உன்னிடம் பேசுவார். அவர் என்ன நடைமுறைகள் சொல்கிறாரோ, அதைத் தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும். நான் சொல்வது கேட்கிறதா?"

"நிச்சயமாக சார்."

"இந்த விஷயம் மிகவும் முக்கியமானது, ரெஸா, கவனமாகக் கேட்டுக் கொள்."

மீண்டும் விளையாடப் போகும் முன் அவர் மோசஸிடம் ஃபோனை எடுக்கச் சொல்லியது அவனுக்குக் கேட்டது.

மோசஸ், அவர்கள் நேருக்கு நேர் அமர்ந்து பேசவேண்டியது முக்கியமானதென்றும், அதற்காக ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் சொன்னான். புன்னகையுடன் ஃபோனைக் கீழே வைத்த ரெஸா, கையிலிருந்த போதை புதைந்திருக்கும் சிகரெட்டை ஆனந்தமாக ஒரு நீண்ட இழுப்பு இழுத்தான்.

—

20

“பத்துத் தவளைகளைக் காட்டிலும் உடல் மெலிந்த யானை உயர்வானது”

ஃபைஸா தலையைக் குனிந்து தன் புத்தகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த விதத்தில் ஏதோ சரியில்லையென உணர்ந்தாள் ஹுரைரா. சற்றும் உறுதியில்லாமல் பேனாவை பிடித்துக் கொண்டிருந்த அவள் கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன. படுக்கை இருந்த இடத்திலிருந்து, அவள் என்ன எழுதிக் கொண்டிருக்கிறாள் என்று ஹுரைராவால் பார்க்க முடியவில்லை. ஆனால் அழுத்தமான கோடுகளும் வளையம் வளையமான கிறுக்கல்களும் ஏதோ ஓவியம் என்பது மட்டும் தெளிவில்லாமல் தெரிந்தது.

ஃபைஸா தலையை உயர்த்திப் பார்த்தபோது பார்வையைத் திருப்பிக் கொண்டாள் ஹுரைரா. அப்படியே சமாளித்துக் கொண்டு மீண்டும் பார்த்த போது, சுவரை நோக்கி சூனியம் தெறிக்கும் விழிகளுடன் அமர்ந்திருந்தாள் ஃபைஸா. அவள் கண்ணில் படாமல் படுக்கையிலிருந்து தவழ்ந்தவாறே இறங்கினாள். ஓரக்கண்ணால் பார்த்துக்கொண்டே அறையிலிருந்து வெளியேறும் போது, உறங்கிக் கொண்டிருக்கும் மகளையும் எடுத்துக் கொண்டு போக வேண்டுமா என்று யோசித்தாள்.

பிந்த்தாவின் அறைக் கதவைத் தட்டிய ஹுரைரா அவள் அனுமதிக்குக் காத்திராமல் உள்ளே நுழைந்தாள். நிலைக் கண்ணாடியின் முன் அமர்ந்து தன் உருவத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த பிந்த்தாவைக் கண்டு அதிர்ந்தாள். தாய், மகள் இருவரின் கண்களும் கண்ணாடியில் சந்தித்த போது அம்மாவின் பார்வையில் தெரிந்த ஆட்சேபணை கண்ணாடியைத் துளைத்து தன் இதயம் வரை ஊடுருவுவதை ஹுரைரா உணர்ந்தாள். ஆனால் அந்த எண்ணம் உடனடியாக மறைந்தது. ஒரு வேளை தன் மனம்தான் அப்படி

விளையாடுகிறதா என்று சந்தேகம் ஏற்பட்டது.

"ஹஜியா, மெல்லிய குரலில் அழைத்தாள். ஃபைஸா நல்ல மனநிலையிலதான் இருக்கிறாளென்று நிச்சயமா நம்பறீங்களா?"

"இப்போது என்ன நடந்தது?"

அவள் அன்னையின் குரலில் தொனித்த அக்கறையின்மை ஹுரைராவின் முகத்தில் அறைந்து, விலகியிருந்த திரைச்சீலை களுக்கிடையில் நீந்தி, ஜன்னல் வழியாகச் சென்று வெம்மையான முற்றத்து வெளியில் அலைந்தது.

"அவள் ராத்திரி முழுவதும், ஏதோ கனவு கண்டு உளறிக் கொண்டே இருக்கிறாள், இப்போது, அறைக்குள்ளே உட்கார்ந்து கொண்டு, கண்களா லேயே சுவரில் துளை போட்டுக் கொண்டு இருக்கிறாள். வல்லாஹி, அவளை பிசாசு பீடித்திருக்கிறது என்று நினைக்கறேன்"

இப்போது பிந்த்தா திரும்பி ஹுரைராவைப் பார்த்தாள். தன் முகத்திலிருக்கும் நம்பிக்கையின்மை மகளின் மனதை மாற்றிவிடும் என்று நினைத்தாள். "எதையாவது பிதற்றாதே, உன் வயதுக்கும் பக்குவத்துக்கும் இப்படியெல்லாம் பேசிக் கொண்டு இருக்கலாமா? என்ன நான் சொல்வது கேட்கிறதா?"

ஹுரைரா அவளையே விழித்துப் பார்த்தாள். "எங்கள் பக்கத்து வீட்டுப் பெண்ணுக்கு இப்படித்தான் நடந்தது தெரியுமா, வல்லாஹி!"

"ஹுரைரா, அறிவில்லாமல் பேசுவதை நிறுத்து"

"ஆனால் ஹஜியா, நான் நிஜமாகத்தான் சொல்கிறேன்"

"நிறுத்துன்னு சொல்றேனே" அவளை உறுத்துப் பார்த்தாள் பிந்த்தா. திறந்திருக்கும் ஜன்னலின் பக்கம் ஹுரைராவின் பார்வை செல்வதை உணர்ந்தவள், சாதுவான பார்வையுடன், உதட்டைக் குவித்துக் கொண்டு, ஏற்கெனவே மோசமான இரவால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறேன், நீ யும், உன் முட்டாள்தனமான பேச்சும் இப்போது எனக்குத் தேவையில்லை."

"மோசமான இரவா? ஏன்? என்ன நடந்தது?"

பிந்த்தா குனிந்து தன் உள்ளங்கைகளைப் பார்த்தாள். காலையில் எழுந்தபோது அதில் ரத்தக் கறை இல்லாததைக் கண்டு அவள் வியந்துதான் போனாள்.

"இல்லை, ஒரு துர்க்கனவு" எங்கோ தொலைவில் கனவுக்கும், நனவுக்கும் இடைப்பட்ட ஒரு எதிரொலி போல் ஒலித்தது அவள் குரல்.

"கெட்ட கனவா? எதைப் பற்றி? "அவள் தோள்களின் மீது ஆறுதலாகக் கை வைத்தாள் ஹுரைரா.

பிந்த்தா இன்னும் தன் கைகளையே பார்த்துக் கொண்டிருந்தாள். யாரூவின், ரத்தம் சொட்டும் இறந்த உடலைக் கைகளிலேந்திக் கொண்டு, அவன் பெயரைச் சொல்லி அழைப்பதாகக் கனவு கண்டிருந்தாள். ஆனால், காலையில் மூச்சுத் திணற எழுந்து பார்த்தபோது அவள் கையில் நிச்சயமாக ரத்தக்கறை இருக்கும் என நினைத்ததையும், அதைப் பார்த்தவுடன் உடனடியாக மனக் கண்ணில் ரெஸாவின் முகம் தோன்றியதையும் ஹுரைராவிடம் பகிர்ந்து கொள்ள முடியவில்லை.

"ஒன்றுமில்லை, அது ஒரு மோசமான கனவு, எங்கோ பார்த்தவாறு பதிலளித்தாள்.

ஹுரைரா தோளைக் குலுக்கிக் கொண்டாள். "ம்ம்,ஃபைஸாவை ஏதோ ஒரு வகையான பிசாசு பீடித்திருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது, வல்லாஹி, அது இன்னும் மோசமாகப் போகும் முன் உங்கள் உஸ்தாஜைக் அழைத்துக் காட்டுங்கள்."

"சரி, ஹுரைரா, இப்போது போய் ஏதேனும் சமைக்கிறாயா? பசியில் என் உயிர் போகும் முன்னால் ஏதாவது செய்வாயா?"

ஹுரைரா அவள் அறைக்குத் திரும்பிய போது, பச்சை வண்ணக் கம்பளத்தின் நடுவே, கூரையைப் பார்த்தவாறு படுத்துக்கொண்டிருந்தாள் ஃபைஸா. கதவருகில் நின்று ,தலையை மட்டும் முன்னே நீட்டி எட்டிப் பார்த்தாள். அவள் பெயரைச் சொல்லி அவள் அழைத்தபோது, கால்களை மட்டும் அசைத்தாள்.

"எழுந்து உன்னை சமைக்கச் சொன்னார்கள் ஹஜியா?"

சற்று நேரம் எந்தவொரு சலனமும் இல்லை. பின், புரண்டு, தானாக எழுந்து வந்தாள் ஃபைஸா. அவள் அருகே வந்தும், உடலை வளைத்து அவளிடமிருந்து விலகிக்கொண்ட ஹுரைராவைக் கடந்து சமையலறைக்குள் நுழைந்தாள்.

காலை உணவு முடிந்தும், தட்டுகளை சமையலறையில் போட்டு விட்டு ஓடி வந்து பிந்த்தாவின் பக்கத்தில் அமர்ந்துகொண்டாள் உம்மி. டிவியில் ஓடிக்கொண்டிருந்த விலங்குகளின் நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால், ஒவ்வொரு முறையும் சிங்கம், மானையோ அல்லது வேறு ஏதேனும் விலங்கின் மீதோ பாய்ந்து கொல்லும் போது கண்களை பொத்திக் கொண்டாள். அந்தச் சிறு பெண் தன் உடலோடு ஒட்டிக் கொண்டு அமர்ந்திருந்தைக் கூட அறியாத அளவு, பிந்த்தா திரையையே

வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஹஜியா, சிங்கம் ஏன் மற்ற விலங்குகளைக் கொல்கிறது?"

"எனக்குத் தெரியவில்லை உம்மி."

கீழே, கம்பளத்தில் அமர்ந்திருந்த ஹுரைரா ஏதோ சொல்ல வாயெடுத்தாள். மடியில் கைகளை வைத்துக்கொண்டு நேராக வெற்றுப் பார்வை பார்த்துக் கொண்டிருந்த ஃபைஸாவைப் பார்த்ததும், வாயை மூடிக் கொண்டாள்.

"இந்த சிங்கங்கள் ஏன் இவ்வளவு கொடுமையானதாக இருக்கு? எனக்கு சிங்கம் பிடிக்காது" தன் பாட்டியின் முகத்தைப் பார்த்தாள் உம்மி.

"பேசாமல் படத்தைப் பார்" பிந்த்தா அவளை மிரட்டினாள்.

அமைதியாகப் போய் அமர்ந்து கொண்ட உம்மியின் கண்கள், ஃபைஸாவின் உணர்வற்ற முகத்தையும், தன் அம்மாவின் குழப்பமான முகத்தையும் மாறி மாறிப் பார்த்தன. தொலைக்காட்சியிலிருந்து வந்த சப்தம் அறையை நிறைத்திருந்தாலும், அவரவர்க்கான மௌனம், நீண்டு அவர்கள் கழுத்தைச் சுற்றும் விரல்களாகப் படர்ந்திருந்தது.

"இந்தப் படத்தை நான் முன்பே டிவியில் பார்த்திருக்கிறேன்." ஹுரைரா திடீரென ஏதோ சொல்லி வைத்தாள். அதில், நாற்றமடிக்கும் இந்த மலரை, அதாவது இந்தப் பிண மலர்களைப் *(Corpse flower)* பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அது முப்பதாண்டுகளுக்கு ஒரு முறைதான் மலரும். இது பற்றி உனக்குத் தெரியுமா ஃபைஸா?"

அவளை ஒரு வெற்றுப் பார்வை பார்த்து விட்டு தலையசைத்தாள் ஃபைஸா.

"அது பிணம் போல நாற்றமடிக்குமென்று சொல்வார்கள். ரொம்பப் பெரிதாகவும், அசிங்கமாகவும் இருக்குமென்றும் கூடச் சொல்கிறார்கள். ஆனால், இந்த வெள்ளைக்காரர்களோ, பிணம் போல் நாறும் இந்தப் பூவைப் பார்க்க ஆர்வமாகக் கிளம்பி விடுவார்கள்."

"எனக்கு அந்தப் பூவைப் பார்க்க வேண்டும் மம்மி" ஆர்வமும் எதிர்பார்ப்புமாய் உம்மி எழுந்து அமர்ந்தாள்.

ஹுரைரா சிரித்தாள், "அது இந்தோனேஷியாவிலும், வேறு ஏதோ நாட்டிலும் உள்ளது."

"எனக்குப் பார்க்கணும், என்னைக் கூட்டிக் கொண்டு போவீர்களா? எனக்குப் பார்க்கணும்."

"ஆமாம், உன் உதவாக்கரை அப்பா, எனக்கு ஒரு தனி விமானம் ஏற்பாடு செய்து தந்திருக்கிறார் பார், அதில் நான், உலகம் சுற்றக் கிளம்பப் போகிறேன்."

ஒன்றும் புரியாமல் விழித்தவாறு பிந்த்தாவை நோக்கினாள் உம்மி. பிந்த்தா ஹுரைராவையும். ஃபைஸாவையும் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள். இப்போது, எரிச்சலுடன் திரையில் கண் பதித்திருந்த தன் அன்னையை மீண்டும் திரும்பிப் பார்த்தாள் உம்மி.

ஏதோ ஒரு நினைவில் பெருமூச்செறிந்தவாறு இருக்கையில் சாய்ந்து கொண்டாள் ஃபைஸா.

"ஆனால் பார், இந்தப் பூ தனித்துவமானதுன்னு நான் நினைக்கிறேன்..."

"தயவு செய்து இந்தப் பேச்சை இத்துடன் நிறுத்து!" ஹுரைராவைப் பார்த்தாள் பிந்த்தா. "உன்னுடைய இரண்டாவது திருமணம் உடைந்து கொண்டிருக்கையில், இங்கே உட்கார்ந்து கொண்டு எங்கோ இருக்கும் உபயோகமில்லாத பூவைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறாய், நீ என்ன மாதிரி மகள் என்று நான் வியந்து போகிறேன் ஹுரைரா. நீ எவ்வளவு வீணானவளாக இருந்தால், உன் கணவன் உன்னைத் திரும்பக் கூப்பிடக் கூட வராமல் இருப்பார், நீயோ, இங்கே தேவையில்லாத விஷயங்களை உளறிக் கொண்டிருக்கிறாய்."

இம்முறை அங்கு நிலவிய கனமான மௌனத்தின் அடர்த்தி அவர்கள் தோள்களில் அழுந்த இறங்குவதை உணர்ந்தார்கள். தொலைக்காட்சியின் சப்தம் கூடத் தணிவாக ஒலித்தது ஆனால் உம்மியின் துள்ளல் மட்டும் குறையவேயில்லை. ஏதோ ஃபோன் அடிப்பதாகச் சொல்லிக் குதித்து எழுந்தவள். பிந்த்தாவின் படுக்கையறைக்குள் ஓடினாள்.

"R என்பவர் அழைக்கிறார் ஹஜியா, யார் அவர்?' கையில் பிந்த்தாவின் ஃபோனுடன் திரும்ப வந்தாள் உம்மி.

"என்னிடம் கொடு" அவள் கையிலிருந்து ஃபோனைப் பறித்துக் கொண்டாள் பிந்த்தா. ஹலோ என்று ஸ்பீக்கரில் சொல்லிக்கொண்டே அவசர அவசரமாக அவள் அறைக்குள் ஓடினாள். அவள் கதவை அறைந்து சாத்திய ஓசையில் அதிர்ந்து போன ஹுரைரா, எழுந்து தனது அறையை நோக்கி நடந்தாள்.

"சொல்", போனைக் கையில் ஏந்திக் கொண்டாள்.

"நன்றாகத் தூங்கி எழுந்திருப்பாய் என்று நினைக்கிறேன்" மறு முனையில் ரெஸா.

"ஆமாம்"

"உன்னைப் பார்க்க வேண்டுமே."

சற்றே தயங்கினாள். "எதற்கு, போன முறை போல என்னைக் கோப மூட்டுவதற்குத் தானே, சரியா?" மூச்சைப் பிடித்துக் கொண்டு நின்றாள்.

அவன் சிரித்து விட்டான், "இல்லை இல்லை, உன்னுடன் இருக்க விருப்பம், அவ்வளவுதான். இம்முறை பேச்சுக்கு இடமில்லை, செயல் மட்டுமே, புரிகிறதா?"

அவள் புன்னகைத்தாள். "வெட்கம் கெட்ட பையனே, உன் இளமையான காதலிகளிடம் சொல்ல வேண்டியதை என்னிடம் சொல்லாதே, நான் அவர்கள் போல அல்ல."

"செயல் மட்டுமே" சொல்லி விட்டு, சிரித்தான். அடித்தொண்டையி லிருந்து எழும்பிய அவன் சிரிப்பு அவள் காதுகளில் நிரம்பி, முகத்தில் வெட்கத்தைப் பூசியது.

—

போதைத் தாவரத்தின் சுறுசுறுவென்ற நெடி சூழ, கனமற்று இலகுவாக மிதந்து கொண்டிருந்தாள் அவள். கண்களை விழித்தபோது, சட்டை அணியாத மார்புடன், ஜன்னலருகில் அமர்ந்து அவன் புகைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்த போதுதான் தான் எங்கிருக்கிறோம் என்பதை அறிந்தாள் பிந்த்தா, சோம்பல் முறித்துக் கொண்டே கொட்டாவி விட்டாள். "ஹஸன், இங்கே புகைக்காதே, தெரிந்தால் உன்னைக் கைது செய்து விடுவார்கள். இந்த நெடி தலைவலி உண்டாக்குகிறது."

அவளுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு அமர்ந்திருந்ததால் அவனுடைய முகத்தைப் பார்க்க முடியவில்லை. முழங்கையை ஊன்றி எழ முயன்றவளுக்கு, போர்வைக்கடியில் தான் நிர்வாணமாய் இருப்பது நினைவுக்கு வந்தது. அவளது ஆடைகள் அறையின் ஓரத்திலிருந்த நாற்காலியின் மீது இருந்தன. ஒவ்வொன்றாகக் களைந்த பின் அவற்றை சீராக மடித்து அங்கே வைத்திருந்தாள்.

"செயல் மட்டுமே" அவளை உள்ளும் புறமும் உருக வைத்த அந்த வார்த்தைகளின் இனிய நாதத்தை எண்ணி புன்முறுவல் புரிந்துகொண்டே உள்ளாடைகளை அணிந்தாள்.

"நீ ஏதோ செய்து கொண்டிருக்கிறாய் போலிருக்கிறது."

அவள் புறமாகத் திரும்பி அவன் புன்னகைத்த போது அவன் எவ்வளவு அழகு என்றும், அவனது பளபளக்கும் கண்களில் அமைதி தெரிந்தாலும் அவை வெகுதூரம் விலகி இருப்பதையும், அவன் எவ்வளவு இளைஞனாக இருக்கிறான் என்பதையும் அவள் பார்த்தாள்.

"இறைவா, நான் என்ன காரியம் செய்கிறேன்?" அவள் தனக்குத் தானே மெல்லிய குரலில் சொல்லிக் கொண்டாள்.

"என்ன?"

"எனக்குத் தெரியவில்லை, நீ சிறியவன் ஹஸன், இது சரியா என்று எனக்குத் தெரியவில்லை."

"இது ஏன் சரி என்று இருக்க வேண்டும்? அவனுடன் பழகியதால், அவள் அறிந்து வைத்திருக்கும் குரலின் தொனியில் பேசினான், அது அவனுள்ளிருந்து வெளிப்படும் சுயத்தின் குரல். கஞ்சா புகையால் விழித்துக் கொண்ட கனவுகள் மிதக்கும் கண்களுடைய தத்துவவாதி. "ஏன் எல்லாமே சரி என்றும் தவறென்றும் இருக்க வேண்டும்? எப்படி இருக்கிறதோ அப்படியே இருந்து விடக் கூடாதா என்ன?"

அவள் பெருமூச்சு விட்டாள். "இதைப் புகைத்து விட்டால், உனக்கு என்ன நேர்கிறது என்றே எனக்குப் புரிவதில்லை, ஏதேதோ தேவையற்றதைப் பேசுகிறாய்."

புன்முறுவல் பூத்தவாறு, சுருட்டை மீண்டும் இதழ்களில் பொருத்தினான், "நீயும் இதை முயற்சி செய்து பார்க்கலாமே?"

"இறைவா, வேண்டவே வேண்டாம் . நீயே இந்தப் பழக்கத்தை விட வேண்டுமென்பதுதான் என் ஆசை. இது உன்னைக் கொல்கிறது."

அவன் தோளைக் குலுக்கினான், "அதனால் என்ன? இறப்பு வரும் போது நான் இறந்து விடுவேன், நாம் எல்லோருமே அப்படித்தானே? புரிகிறதா?"

"மீண்டும் யோசனையுடன் ஆழ்ந்த மூச்செறிந்தாள்." ஏதோ ஒரு மலர் இருக்கிறதாம், தான் மலர்வதற்காக வாழ்நாள் காலமெல்லாம் காத்திருக்கும் என்று என் மகள் சொல்லிக் கொண்டிருந்தாள். முப்பது வருடம் ஆகும் என்றாள். அத்தனை காலம் காத்திருந்து மலர்ந்த பின் அதில் பிண வாடை வீசுமாம்."

"ஹ ஹா, என்ன மாதிரியான மலர் அது?"

"அந்த மலருக்கும் எனக்கும் எவ்வளவு ஒற்றுமை என்று நினைத்துக்

கொண்டிருந்தேன். என் வாழ்நாள் முழுவதும் இது போல உணர...அதாவது உன்னுடன் நான் இருக்கும் இந்த நேரத்தைப் போல... உன்னிடம் சொல்லக் கூடாத விஷயங்கள் தான், ஆனால் என் இதயத்திலிருப்பதைக் கொட்டி விட வேண்டிய தேவை இப்போது, உனக்குத் தெரியுமா, இதுவரை யாரும் என்னை இப்படி உணர வைத்தது இல்லை. அந்த மலரைப் போலத்தான் நானும் இத்தனை காலம் காத்திருந்தேன், ஆனால், மலர்ந்து நிற்கும் போது இது சரியல்ல என்று தோன்றுகிறது. நீ என்னைப் புரிந்து கொண்டாயா என்று கூடத் தெரியவில்லை எனக்கு."

அவன் மௌனமாகப் புகைப்பதைத் தொடர்ந்து கொண்டிருந்தான், முகத்தில் குழப்பமான சாந்தம் நிலவியது.

"நாற்றமடிக்கிறதா என்ன?"

அவளுடைய சிரிப்பு அவளுக்கே வியப்பாக இருந்தது. குலுங்கக் குலுங்க சிரித்துக் கொண்டே இருந்தவள், பின் மூக்கை உறிஞ்சிக் கொண்டாள். சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டவள், விழியோரத்தில் கசிந்த நீரைத் துடைத்தாள். ஆனால், வேடிக்கையாக உணர்ந்தது மறைந்து விட்ட போதும், அவள் கண்களிலிருந்து நீர் வழிந்தபடியே இருந்தது. அப்போதுதான், உண்மையிலேயே தான் அழுது கொண்டிருக்கிறோம் என்பதை அறிந்தாள்.

புகைக்காமல் சுருட்டைக் கையில் வைத்திருக்கும் வினாடிகளில், அதன் தீப்பொறியிலிருந்து எழும் புகை வளையங்களிடையே ஏதோ ஒரு ரகசியத்தை வாசிப்பதைப் போல அசையாமல் அமர்ந்திருந்தான். அவன் வாய் திறந்து பேச சில நிமிடங்கள் பிடித்தது. "எனக்கு சிறு வயதில், அதாவது நான் மிகவும் சின்னப் பையன் அப்போது, ஈத் பண்டிகை வந்த நாளில், அதற்காக வாங்கித் தந்த புது உடைகளைப் பார்த்து நாங்கள் மிக மகிழ்ச்சியாக இருந்தோம். அந்த நாட்களில் அதிக பயன்பாட்டில் இருந்த மலிவான மினுமினுப்பான ஷொனேக்கன் துணிதான் அது, புரிகிறதா?

அவளுக்கும் அது தெரியும். 1993 ஆம் ஆண்டில் அவளும் தன் குழந்தைகளுக்கு அந்தத் துணியை வாங்கியிருக்கிறாள். அப்போதைய அரசியல்வாதிகள் தேர்தல் நேரத்தில், வாக்காளர்களை ஈர்ப்பதற்காக பக்கத்து நாடுகளின் எல்லைகளைத் திறந்து மலிவுப் பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதித்தனர். உப்பு, சர்க்கரை, மித மிஞ்சிய சோடா கலந்த சலவை சோப்புகள், நீரில் அலசினாலேயே கரைந்தோடும் மலிவான சாயம் பூசிய துணிகள், நீல, இளஞ்சிவப்பு, பச்சை வண்ண பெட்ரோல் போன்ற பல வகையான பொருட்கள் வந்திறங்கின.

ஆனால், ஆட்சியை மக்கள் பிரதிநிதிகள் கையில் தரக்கூடாதென

முடிவெடுத்த ராணுவ அதிகாரம் தேர்தல் செல்லாதென அறிவித்தது. அதற்குப் பதிலாக ஷொனெக்கன் என்பவரை இடைநிலை முதல்வராக அமர்த்தினர். பின் அவரது மாளிகையிலிருந்தே துவங்கிய உள் நாட்டுக் கலவரத்தில் அவர் பதவியும் ஆட்சியும் கவிழ்ந்தது. ஆனால், தேர்தல் பிரச்சாரத்தின் போது வாங்கிக் குவித்திருந்த விசித்திரப் பொருட்களுக்கெல்லாம் அரசியல் நோக்கம் தீர்ந்த பின் மார்க்கெட்டில் புழங்கத் துவங்கின. அனைத்துக்கும் ஷொனேக்கன் என்று பெயர் சூட்டப்பட்டன.

"என்னுடையது கஞ்சி போடப்பட்ட பளிச்சென்ற வெள்ளை உடை. ஈத் பெருநாளில், தொழுகையிலிருந்து திரும்பி வந்ததும், சாப்பிடும் போது அரிசியும் குழம்பும் சிந்தி ஆடை கறையாகி விடுமென்று கழற்ற நினைத்தேன். புரியுதா? ஆனால், அமினு, என் தம்பி, மாற்றாந்தாய் மகன், அதன் மேல் தெரியாமல் மையைக் கொட்டி விட்டான்."

கதையை சொல்லி முடித்து விட்டானென்று அவள் உணரும் வரை புகை இழுத்துக் கொண்டிருந்தான். திரும்பி அவளது குழப்பமான முகத்தைப் பார்த்து பளபளக்கும் விழிகளுடன் புன்னகைத்தான்.

"நாம் எல்லோரும் ஆடையைப் போன்றவர்கள். கசக்கப்படுகிறோம், சுருங்கி விடுகிறோம், கிழிக்கப்படுகிறோம் சில வேளைகளில் அவை சரி செய்ய முடியாத அளவிற்கு இருக்கின்றன. சிலர் மீண்டும் தைக்கப்படுகிறார்கள், ஒட்டுப் போடப்படுகிறார்கள், சிலரோ தூக்கி வீசப் படுகிறார்கள். சில ஆடைகள் பாக்கியம் பெற்றவை. மற்றவை அப்படி இல்லை. துரதிர்ஷ்டத்தோடும், மைக்கறையோடும் இன்னும் என்னென்ன வெல்லாமோடோ பிறப்பவை. உனக்குப் புரிகிறதா?"

கண்களைச் சுழற்றிக் கொண்டே, அவன் சொன்னதின் பொருளைத் துரத்திக் கொண்டிருந்தாள் பிந்த்தா

"ஹஸன் ரெஸா, உனக்கு போதை ஏறி விட்டது."

ஆமோதிக்கும் வகையில் கையிலிருந்த சுருட்டுத் துண்டை உயர்த்திப் பிடித்தவன், கடைசியாய் ஒரு இழுப்பு இழுத்தான்.

"நீ இதையெல்லாம் நிச்சயமாக விட்டு விட வேண்டும், இறைவன் கருணையால் நல்ல மனிதனாக இரு."

"நான் இப்படித்தான், நானாகத்தான் இருப்பேன்" துண்டுச் சுருட்டைக் காலால் நசுக்கி ஆஷ்ட்ரேயில் போட்டுவிட்டு அவள் புறம் திரும்பினான்.

"ஸ்கூலுக்குப் போகும் விஷயம் என்னவாயிற்று?"

தன் முகத்திற்கு நேராக விரலை ஆட்டிக் கொண்டே, பேச்செல்லாம்

இல்லை, செயல் மட்டும் தான், புரிகிறதா?" என்றான்.

"நான் சொல்வதைக் கேள் ஹஸன் "

"தயவு செய்து, இப்போது வேண்டாம், என் முதலாளி ஒரு முக்கியமான வேலையொன்றைக் கொடுத்திருக்கிறார். ஒரு வேளை, அது முடிந்த பிறகு பார்க்கலாம்."

"என்ன வேலை?"

"மிக முக்கியமான வேலை, மிக முக்கியமானது, புரிந்து கொள்."

—

காதில் ரேடியோவை ஒட்டிக்கொண்டு, ஹோட்டல் வாசலையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார், நான்கு மணி நேரத்திற்கு முன் அவள் உள்ளே நுழைந்ததைப் பார்த்தார். அதற்கு சற்று முன் அந்த இளைஞன் போயிருந்தான். சில நிமிட இடைவெளிதான் இருவருக்கும். பதினைந்து நிமிட இடைவெளி.

மாலம் ஹரூணா, ஹோட்டல் வளாகத்தின் முன் அங்குமிங்கும் சற்று நேரம் அலைந்து கொண்டிருந்தார். ஆனால், எதற்காக, எதைப் பார்க்க இப்படி அலைகிறோம் என்று நிச்சயமற்றவராக இருந்தார். அங்குள்ள காவல்காரர்களால் தொல்லை நேரிடக்கூடும் என்று பயந்து, அவருடைய இடமான நண்பர் மாலம் பாலாரபேவின் நிழற்குடைக்கே திரும்பி விட்டார்.

அந்த நிழற்குடையின் கீழ் அமர்ந்து கவலை தோய்ந்த முகத்துடன் தெருவையே வெறிந்துப் பார்த்துக் கொண்டிருக்கும் தனது செய்கையால் பாலாரபே கோபமடைகிறார் என்று அவருக்குப் புரிந்தது, மாலம் ஹரூணா எந்த வித உரையாடலுக்கும் முன் வராததால், இப்போதெல்லாம் அவர் களுக்குள் பேச எதுவுமே இல்லை. ஆயினும், மதியத் தொழுகைக்குப் பின் நீண்ட நேரம் அங்கேயே சுற்றிக் கொண்டிருப்பார்,

ஐந்து நாட்களுக்கு முன் முதல் முறையாக ஹோட்டலை விட்டு பிந்த்தா வெளியேறுவதைப் பார்த்தவர், மேலும் அந்த விஷயத்தை உறுதி செய்து கொள்ள விரும்பினார், இன்று அவளுக்கு முன்பே ரெஸா வந்தடைந்ததும், தான் ஏதோ ஒன்றை கண்டறியப் போகிறோம் என்று அவருக்குப் புரிந்தது.

ஐந்தரை மணி அளவில் அவள் கேட்டருகில் வெளிப்பட்டதைக் கண்டார், சடாரென எழுந்து நின்றவர், அதே வேகத்தில் அமர்ந்து கொண்டார்.

அவரைத் திரும்பிப் பார்த்தார் பாலாரபே "என்ன, ஒன்றுமில்லையே, சரியாக இருக்கிறாயா மாலம் ஹரூணா?"

"நான் நன்றாகத்தான் இருக்கிறேன்."

பிந்த்தா ஒரு மோட்டார் சைக்கிள் டாக்ஸியை நிறுத்தி அதன் பின்சீட்டில் ஏறி அமர்ந்தாள். அவள் வீடிருக்கும் தெருவை நோக்கிய பாதையில் அது பறந்தது.

மேலும் பதினைந்து நிமிடங்கள் காத்திருந்த பின், ரெஸா வெளியே வந்து, தெருவை மேலும் கீழும் நோட்டமிட்ட பின் இடதுபுறம் திரும்பி, கூட்டம் நிரம்பியிருக்கும் ஜங்ஷன் மார்க்கெட் பக்கமாக நடந்து செல்வதைப் பார்த்தார்.

—

21

"எதுவும் தீண்டாதவரை தென்னை ஓலைகள் சலசலப்பதில்லை"

அகன்ற வரவேற்பறையில் நடை போட்டுக் கொண்டிருந்த ரெஸாவின் காலடிச்சத்தம், பொருட்களற்ற வெற்றிடத்தில் பட்டு எதிரொலித்தது. இந்த வெற்றிடம் அவனைத் தொந்தரவு செய்தது. ஜன்னலோர சுவரில் சாய்ந்து கொண்டு, விரல்களின் நெட்டை எடுத்துக்கொண்டிருந்தான் கட்டூஸோ. தலையை ஆட்டியபடி, உள்ளங்கைகளில் தன் முஷ்டியைக் குத்திக் கொண்டவனுக்கு ரெஸாவின் அமைதியற்ற மனநிலையையும், சினத்தையும் நன்கு புரிந்து கொள்ள முடிந்தது.

டோகோவும் ஜோவும் உள்ளே வந்து கதவின் இருபுறமும் ஆளுக் கொருவராய் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுக்கும் அவன் கோபம் புரிந்தது. அந்தக் கோபம் கட்டுக்கடங்காத ஆத்திரமாக மாறிக் கொண்டி ருப்பதையும் உணார்ந்தார்கள்.

"அந்தப் பெண்ணை என்ன செய்தீர்கள்?" கட்டூஸோ உறுமினான்.

ஒன்றும் செய்யவில்லை, ஒன்றுமே செய்யவில்லை. முகத்துக்கு நேராக இரு கைகளையையும் உயர்த்தியபடி சொன்னான் ஜோ.

ஜோவை நோக்கிச் சென்ற ரெஸா, அவன் கண்களைப் பார்த்தான். மதுவின் மயக்கத்தில் கிறங்கியிருந்தன..ஜோ முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்ட போதும் அவனிடமிருந்து வீசிய ஜின் நெடியை உணர்ந்தான் ரெஸா.

பக்கத்திலிருந்த சுவரை ஆத்திரத்தில் தட்டினான் ரெஸா. அது அதிர்ந்தது. ஜோ பயந்து நடுங்கினான்.

"குடிகார நாயே, த்தா, உதவாக்கரை. நீ காரியத்தை முடித்திருக்க வேண்டும், ஆனால் அவனைத் தப்ப விட்டு விட்டாய், நாயே."

"டோகோதான் அவனைச் சுற்றி வளைத்திருக்க வேண்டும். என்ன நடந்ததென்று அவனைக் கேள் ரெஸா"

"உன் வாயை மூடிக் கொள், போதும்" கத்தினான் டோகோ.

"நீ உன் வாயை மூடு" கட்டூஸோவின் குரல் வெற்றுச் சுவர்களில் மோதி எதிரொலித்தது.

அங்கு நிலவிய அமைதியில் இதுவரை பல்லைக் கடித்துக் கொண்டிருந்த ரெஸா, அதற்கு மேல் தாங்கவியலாதவனாய், ஜோவின் வயிற்றில் ஒரு குத்து விட்டான். அவன் சுருண்டு விழுந்தபோது, உதைத்து வெளியே தள்ளினான்.

"உன்னை மாதிரி குடிகாரனை இந்த வேலைக்கு வைத்திருக்கவே கூடாது, உன்னை அப்படியே கொன்று பள்ளத்தாக்கில் கொண்டு புதைக்கப் போகிறேன், சத்தியமாகச் செய்யப் போகிறேன்."

சட்டைப் பையிலிருந்த துப்பாக்கியை ரெஸா எடுக்கப் போனபோது, கட்டூஸோவும், டோகோவும் பாய்ந்து அவனைத் தடுத்தார்கள்.

"ரெஸா, தயவு செய்து வேண்டாம்" அவன் கண்களைப் பார்த்து இறைஞ்சினான் கட்டூஸோ.

துப்பாக்கியைப் பற்றியிருந்தவர்களின் கைகளைப் பார்த்தான் ரெஸா. இருவரும் மெல்லக் கைகளை விலக்கிக் கொண்டனர். ஆனால், அவனுக்கு நெருக்கமாக நின்று கண்களால் கெஞ்சிக் கொண்டிருந்தார்கள். தரையில் ஊர்ந்து கொண்டிருந்த டோகோ, எந்த திசையில் தன் விதி ஊசலாடிக் கொண்டிருக்கிறது என்று தலையை நிமிர்த்திப் பார்த்தான். ஏதாவது சொல்ல வேண்டும் எனும் யோசனை அப்போதுதான் அவனுக்கு உதித்தது.

"அவனை நான் கண்டுபிடித்து விடுவேன், எப்படியாவது அவனைப் பிடித்து விடுவேன்."

ரெஸாவின் கண்களில் தேங்கியிருந்த வெறுப்பு வெடித்துச் சிதறியது. அவனை உதைத்துத் தள்ளினான். ஏதோ முறிவது போன்ற ஓசையைக் கேட்ட போது, அவனது ஒரு பல்லைக் கழட்டி விட்டோம் என்று நிச்சயமாகத் தெரிந்தது. டோகோவை உதைத்துத் தள்ளிய முழங்காலில் அவனுக்கே வலி

தெரிந்தது.

அடுத்த ஜன்னல் பக்கமாகச் சென்று நட்சத்திரங்களால் வாரி இறைக்கப் பட்டிருந்த வானை வெறித்துப் பார்த்தான். அது ஒரு எளிய காரியம்.. அந்தப் பூங்காவின் கார் நிறுத்தத்தில், மோசஸ் குறிப்பிட்டிருந்த அந்த நபருக்காக் காத்திருந்து, அவர் அங்கு வந்த பின் கடத்திச் செல்ல வேண்டும்.

ஓர் இளம் பெண்ணுடன் மகிழ்ச்சியான மாலையைக் கழித்த பின் அவளோடு, வெளியே வந்த இளைஞன் கார் கதவைத் திறக்க முற்பட்ட போது, கையில் மயக்க மருந்து நனைத்த கைக்குட்டையோடு, அவர்களிருவரின் முன்னும் குதித்தனர். அந்தப் பெண்ணைக் கையாள்வது எளிதாக இருந்தது. அவளைப் பிடித்து, மயக்கத்தில் அவள் துவண்டு விழும் வரை மூக்கில் கைக்குட்டையை வைத்து அழுத்தினான் கட்டூஸோ. ஆனால் போதையில் தடுமாறிய ஜோ. அவனது இலக்கை சரியாகப் பிடிக்கத் தவறி விட்டான். போராடிய அந்த இளைஞன், ஜோவைக் கீழே தள்ளி விட்டு தப்பி ஓடினான். அப்போது கையிலிருந்த துப்பாக்கியை உயர்த்தினான் ரெஸா. மோசஸ் கொடுத்திருந்த துப்பாக்கி. அவன் மேற்கொண்டிருந்த பணியின் பொருட்டு செனேட்டர் அவனுக்கு வழங்கியிருந்த ஆயுதம். ஆனால் அதை உபயோகிக்கத் தயங்கினான் ரெஸா. துப்பாக்கியை விடத் தன் சுய பலத்தால் உருவான மனிதன் அவன். மேலும், அங்கே குண்டு வெடித்தால் அது பலரின் கவனத்தை ஈர்க்கக் கூடும். அவனுடைய கண்களுக்கு முன்னால் அவனது இலக்கு தப்பியோடுவதை, துவங்குவதற்கு முன்பே அவர்கள் பணி முழுமையடையாமல் நொறுங்கி விழுவதைக் கண்டான் ரெஸா. அதனால், அந்தப் பெண்ணை மட்டும் மூட்டையாகக் கட்டி எடுத்துக்கொண்டு காத்திருந்த காரில் ஏறி விரைந்தார்கள்.

அந்த இருண்ட இரவில், தானும் ஒரு நிழல் போல் கரைந்து விட விரும்பினான் ரெஸா. ஆனால், என்ன நடந்ததென்று விளக்கிச் சொல்ல வேண்டியது அவன் கடமை என்பதால் ஃபோனை எடுத்து டயல் செய்தான். மறுமுனையில் பதிலேதும் இல்லை. மீண்டும் மீண்டும் அழைத்தான், கடைசியில் ஃபோனை பாக்கட்டில் செருகிக் கொண்டான். இரண்டு நிமிடங்கள்கழித்து ஃபோன்ஒலித்தது. எடுத்து அதன்திரையைப் பார்த்தவன், திரும்பி அவனுடைய தோழர்களை ப் பார்த்தான். அவன் உதைத்துத் தள்ளிய இடத்திலேயே அமர்ந்திருந்த ஜோ, தனது தாடைக் காயங்களைத் தடவிக் கொண்டிருந்தான். தன் கை விரல்களாலேயே மண்டையை உடைத்துக் கொள்ளும் சாத்தியத்தை ஆராய்பவன் போல இருந்தான் கட்டூஸோ.

ஃபோனைக் காதருகில் வைத்தான் ரெஸா "ஹலோ சார்."

"ம்ம், மோசஸ், செனேட்டரின் உதவியாளர்," மிகவும் சிக்கனமாக,

காரியத்தில் மட்டுமே கண்ணாக இருந்தது அவன் பேச்சு.

"அவனைப் பிடித்து விட்டீர்களா?"

ரெஸா தயங்கினான். "இல்லை"

"இல்லை??"

பிடிக்க முடியவில்லை. எப்படியோ அவன் தப்பி விட்டான். அவனுடைய தோழியைப் பிடித்து வைத்திருக்கிறோம்"

"எந்தத் தோழி?"

"அவனுடன் இருந்தவள்"

"அவளைப் பற்றி நமக்கு என்ன? அந்த இளைஞனைப் பிடிக்க வேண்டுமென்பதுதான் உனக்கு இடப்பட்ட கட்டளை, என்னதான் நடந்து தொலைத்தது?"

"அது ஒரு நீண்ட கதை, அவன் ஓடி விட்டான், அவனை சுடவும் முடியவில்லை, ஆனால் அந்தப் பெண்ணைக் கொண்டு வந்து விட்டோம், அவனையும் பிடித்து விடலாம்."

"எவ்வளவு மோசமாக வேலையைக் கெடுத்து விட்டீர்கள், முதலாளி மிக மிக ஏமாற்றம் அடையப் போகிறார், அந்தப் பெண்ணை விரட்டி விடுங்கள். அவள் தேவையில்லை. அதற்கப்புறம் அந்த வீட்டை விட்டு வெளியேறித் தொலையுங்கள், முட்டாள் கற்றுக்குட்டிகள்" அதோடு தொடர்பறுந்து போனது.

பற்களைக் கடித்துக் கொண்டே நின்றான் ரெஸா. பின், அறையின் நடுவே மெதுவாக நகர்ந்து வளைவான மாடிப் படிகளில் ஏறினான்.

பால்கனியின் மூலையிலிருந்த கடைசி அறையில் இருந்தாள் அந்தப் பெண். அங்குள்ள அறைகள் அனைத்தும் நிரம்பி விட்டால், விருந்தினர்களைத் தங்க வைக்கும் அறையாக இருக்கக் கூடும். அந்த அறையை அடையும் முன் மூன்று பெரிய, உறுதியான, அழகிய வேலைப்பாடுகளுடைய கதவுகள் இடையில் இருந்தன. பூச்சற்ற சுவர்களுக்கிடையில் கதவுகளின் பச்சை வண்ணம் பளிச்செனத் தெரிந்தது. அதன் மீது சுற்றியிருந்த ப்ளாஸ்டிக் கூட ஆங்காங்கே தொங்கிக் கொண்டிருந்தது. தரையில் பதித்திருந்த பளிங்குக் கல்லின் மீது பட்டு மோதிய அவன் காலடி சப்தம், அந்த பிரம்மாண்டமான கட்டிடத்தின் சுவர்களில் எதிரொலித்தது. பூட்டியிருந்த கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்.

மயக்கமருந்து கொடுக்கப்பட்ட அந்தப் பெண், நீல வண்ணப்

பாயின் மேல் கிடந்தாள். இடுப்பளவு நீண்ட காஃப்தானுக்குக் கீழ் அவள் அணிந்திருந்த ஜீன்ஸ் உடலின் கண்ணியத்தைக் காப்பாற்றிக் கொண்டிருந்தது.

அவளிடமிருந்து ஓரடி தள்ளி நின்று, அவள் நெற்றியின் குறுக்காக ஓடும் கருத்த நரம்புகளைக் கவனித்தான் ரெஸா. அவள் இடது கையின் பின் பக்கம் கொசு கடித்த சிவப்பான காயமும், அந்த நரம்பின் ஓட்டமும் மிருதுவான அவள் சருமத்தில் தெளிவாகத் தெரிந்தது. உடைந்து விடுபவள் போல மிக மென்மையாக இருந்த அவளைக் கொல்வது மிக எளிது. அவள் தலைக்குப் பின்னால் பாயும் ஒரு தோட்டா அல்லது முகத்தின் மீது ஒரு தலையணை போதும். அப்படியே அவள் கழுத்தை இரு கைகளால் இறுக்கிப் பிடித்தால், தலை துண்டாகத் தனியே வந்து விடக் கூடும். இவ்வளவு ஏன், அதிகளவு மயக்கமருந்து கொடுத்துவிட்டால் கூடப் போதும்.

பட்டுப் போன்ற மிருதுவான, ஜடை பின்னிப் போடாத அவள் கறுப்பான கூந்தலைப் பார்த்து மிக ஆச்சரியமடைந்தான் ரெஸா. தலையின் புறமாகக் துவண்டு கிடந்த அவள் வலது கரத்தின் விரலில் மோதிரம் மின்னியது. அவள் புறமாக மண்டியிட்டு, மெல்லிய விரலிலிருந்து மோதிரத்தை சுழற்றியபோது அவள் உடலிலிருந்து வீசிய வாசனைத் திரவியத்தின் நறுமணம் அவனைத் தாக்கியது. அசல் தங்க மோதிரம். அவளது செழுமையான கூந்தலைக் கையில் எடுத்து, விரல்களால் அளைந்தான். அதன் பட்டான மென்மையையும், ஆடம்பரமான கூந்தல் தைலத்தின் நறுமணத்தையும் கைகளில் உணர்ந்தான். பிந்த்தாவின் கூந்தல் மணம் எப்படி இருக்குமென்று என்று அவன் நினைவுக்கு வரவில்லை. ஆனால், நிச்சயமாக இது போல் சிறப்பானதல்ல என்று மட்டும் தெரிந்தது.

முன்னறையில் அவளுடைய பொருட்களை எல்லாம் தரையில் பரப்பி அவற்றைச் சுற்றி மற்ற இளைஞர்கள் குழுமியிருந்தைப் பார்த்தான். விலையுயர்ந்த காலியான அவள் கைப்பை அவனுக்கு அருகில் கிடந்தது. அவளுடைய ஐ ஃபோனும், ப்ளாக் பெர்ரியும் அணைத்து வைக்கப் பட்டிருக்கிறதா என்று உறுதி செய்துகொண்டான். ஒரு அழகான சென்ட் பாட்டில் அவன் கண்களைக் கவர்ந்தது. *Caron Poivre*. அது மிக விலையுயர்ந்ததாக இருக்கக் கூடும். மேலும், கை ,முகப் பூச்சு கிரீம்கள், சிறிய பர்ஸ், அதில் நைராவும், ஸ்டெர்லிங் பவுண்டுகளுமாமாகக் கொஞ்சம் பணம், ஒரு ஏடிஎம் அட்டை, மாணவர் அடையாள அட்டை, மற்றும் ஒரு ஓட்டுனர் உரிம அட்டையும் இருந்தது. அவளைப் பற்றிய விவரங்களைப் படித்துப் பார்த்தான் ரெஸா. லைலா சர்க்கி, பிறந்த வருடம், மார்ச் *16, 1988*. பாஸ்போர்ட்டிலிருந்த அவள் முகத்தைக் கவனமாகப் பார்த்தான். ஃபோட்டோவில் முகம் சற்று மங்கலாக இருந்தாலும் கூட, அவள் பேரழகி

என்பது தெளிவாகத் தெரிந்தது.

தரையில் சிதறிக் கிடந்த பொருட்களோடு அந்த அட்டையையும் வீசி எறிந்தான்.

"அவளுடைய பொருட்களையெல்லாம் சேர்த்து எடுத்து வையுங்கள், அவளை விடுதலை செய்யப் போகிறோம்."

டோகோ நிமிர்ந்து பார்த்தான்

"அந்தப் பணத்தையெல்லாம் என்ன செய்வது?"

"உனக்குத் தர வேண்டிய முன்பணம் தந்து விட்டேன் இல்லையா?" ஆனால், அந்தப் பெண்ணின் பர்ஸின் மீது ரெஸாவின் கண்கள் நிலைத்தது. "ம்ம், இந்த வேளைக்கு உரிய மீதிப் பணம் கிடைக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை, அதனால், இந்தப் பணத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்."

சில நைரா நோட்டுகளை எண்ணி, கட்டுஸோவுக்கும், டோகோவுக்கும் கொடுத்தான், மீதி இருந்தவற்றை ஜோவை நோக்கி வீசியெறிந்தான். பவுண்டுகளைத் தன் பாக்கட்டில் திணித்துக் கொண்டான்.

விரல்களை மடித்து கைகளில் குத்திக் கொண்டான் கட்டுஸோ. "இந்தப் பெண்ணை அப்படியே விட்டு விடப் போகிறோம், அப்படித்தானே?"

"ஆமாம், நம் வேலையில் பெரிய பிசகு நேர்ந்து விட்டது."

"ஆனால் ..."

"என்னவென்று சொல்" என்று ரெஸா தூண்டிக் கேட்கும் வரை கை அமைதியாக இருந்தான் கட்டுஸோ.

"இந்தப் பெண்ணைப் பார்த்தால் யாரோ முக்கியமான மனிதரின் மகள் போலத் தெரிகிறது. ஏதாவது பேரம் பேச வாய்ப்பு இருக்கும் என்று நினைக்கிறேன்."

டோகோ பட்டென்று சொடக்குப் போட்டான். "ஆமாம், நன்றி நண்பா, நான் என்ன நினைத்தேனோ அதை நீ சொல்லிவிட்டாய். அவளுடைய குடும்பத்தைப் பணம் தரச் சொல்லுவோம். இல்லையென்றால் கொன்று விடுவோம் என்று மிரட்டலாம்."

சற்று நேரம் யோசித்தான் ரெஸா. "அப்படியென்றால் இந்தப் பெண்ணை சான்சிரோவுக்குக் கொண்டு போக வேண்டும். முதலாளி இந்த இடத்தை அவர் காரியத்துக்குத்தான் கொடுத்திருந்தார். இப்போது இது

அவர் சம்பந்தப்பட்ட வேலை இல்லை, அதனால் நாம் இவளை இங்கிருந்து வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும்."

உயரமான கூரையின் உள்புறத்தில் வரையப்பட்டிருந்த பரோக் வகை ஓவியத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான் ஜோ. பூ வேலைப்பாடுகளுக்கு நடுவே துருத்திக் கொண்டிருந்த திறந்த மின்சார ஒயர்கள் தான் அவன் கவனத்தை அதிகம் ஈர்த்தன. கட்டிடப் பணிகள் முடிந்ததும் அவற்றில் இணைக்கப் பட்டுத் தொங்கப் போகும் சர விளக்கைப் பற்றிய கற்பனை அவன் மனதுள் எழுந்தது. அதில் ஒளிரப் போகும் ஆயிரம் விளக்குகளின் ஒளி அவன் கண்களின் முன் நடனமாடுவதை அவனால் பார்க்க முடிந்தது.

"எந்தப் பணக் கொழுப்பெடுத்தவன் இதைக் கட்டியிருப்பான்?"

"பயங்கர அழகாக இருக்கிறது இல்லையா?"

சிரித்துக் கொண்டே தலையாட்டினான் டோகோ.

"நான் ஒரு பெரிய டான் ஆகி இது போன்ற வீட்டுக்கு முதலாளியாகப் போகிறேன், இப்படிப்பட்ட ஒரு மாளிகையில் இறந்து போவது எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்."

"உன் கனவில்தான் நடக்கும்."

திக்கித் திக்கி சிரித்துக் கொண்டே தொண்டையிலிருந்து விசித்திர சப்தம் எழுப்பிக் கொண்டிருந்தான் ஜோ.

"ஒரு பாழாய்ப் போன கோழிக்கூண்டில் தான் நீ சாகப் போகிறாய்."

டோகோவும் அறை அதிரும்படி சிரித்துக் கொண்டே, தரையில் அமர்ந்தான். சட்டைப் பையிலிருந்து சிகரெட்டும் லைட்டரும் எடுத்தான்.

நடுங்கும் விரல்களால் பற்ற வைத்துக் கொண்டே, வழியும் வியர்வையை புறங்கை சட்டையில் துடைத்துக் கொண்டான்.

" ம்ம், பாழாய்ப் போன கோழிக்கூண்டு.."

டோகோ, ஜோ இருவரின் சிரிப்பும் வண்ணம் பூசப்படாத சுவரில் பட்டு எதிரொலித்துக் கொண்டிருந்த வேளையில் ரெஸாவின் ஃபோன் சிணுங்கியது. அமைதியாக இருக்குமாறு கையை உயர்த்தினான் ரெஸா.

"அந்தப் பெண்ணை என்ன செய்தீர்கள்?" மோசஸ் போனில் கேட்டான்.

"அவளை விடுவித்து விட்டோம்."

"அட முட்டாளே"

ரெஸா புன்னகைத்துக் கொண்டான். உண்மையில் அவன் மோசஸை வெறுத்தான். அவன் கட்டியிருக்கும் டையின் பக்கத்தில் கத்தியை விட்டு செருக நேர்ந்தால் தான் அதை ஆனந்தமாக அனுபவிப்போம் என ரெஸாவுக்குத் தெரியும்.

மறுமுனையில் கசப்புடன் சொன்னான் மோசஸ், "போ அந்தப் பெண்ணைக் கண்டுபிடித்துத் தூக்கிக்கொண்டு வா, அவளைப் பிடித்து வைத்திருப்பதுதான் இப்போது உனக்கிடப்பட்ட கட்டளை".

"முன்பு அவளை விட்டுவிடச் சொன்னீர்களே?"

"அவளைக் கண்டுபிடிக்கவும்" இணைப்பு துண்டிக்கப் பட்டது

—

அன்றிரவு, மாலம் ஹரூணா தன் ரேடியோவை அணைத்துவிட்டு, அன்றைய செய்திகளை அலசி ஆராய்ந்து முடித்த பிறகே, நீண்ட நேரம் கழித்து வெண்ணிற நுனி வால் பூனை அங்கு எட்டிப் பார்த்தது. முள் கம்பிகளுக்கு இடையேயுள்ள வளையத்தில் நின்றபடி. மிகவும் அயர்ச்சியோடு அமர்ந்திருந்த பெண்ணையும், எப்போதையும் விட தன்னைப் பற்றிய நிச்சயமின்மையோடு குழப்பமாய்த் தெரிந்த ஆணையும் கவனித்துக் கொண்டிருந்தது.

மாலம் ஹரூணாவின் அமைதியின்மையை உணர்ந்தாள் பிந்த்தா. அங்குமிங்கும் பறந்து அவளைத் துன்புறுத்திக் கொண்டிருந்த தட்டான் களிடமிருந்து அவளைக் காக்கும் பொருட்டு, குறுக்கே வந்து நின்று, தன் கூர்ப்தானின் முனைகளால் அவற்றை விரட்டினார். அப்போது அவள் முகத்தில் தெரிந்த அதிர்ச்சியைக் கண்டதும் உடனே பின் வாங்கினார். அதன் பின், தான் விரும்பும் பெண்ணை விரோதிகளிடமிருந்து காப்பது ஒரு ஆணின் கடமை என்பது பற்றி ஐந்து நிமிடங்கள் உரையாடினார்.

அதே போல் தொடர்பற்றுப் பேசியவாறு, சிறு வயதில் மூன்று முறை அவரைத் தேள் கொட்டியதையும், நஞ்சோடு போராடிய பயங்கரமான இரவுகளையும் பற்றி உற்சாகக் கூவலோடு விவரித்துக் கொண்டிருந்தார்.

பின் சட்டெனத் தன் தொப்பியைக் கழற்றி, பிந்த்தாவின் தலையில் வைக்க முயன்றார். சற்றும் எதிர்பாராத அந்த நிகழ்வால் எழுந்து உள்ளே ஓடி விட நினைத்தாள் பிந்த்தா.

"என்னதான் ஆனது உங்களுக்கு? சாயங்காலத்திலிருந்து ஏதாவது

உடம்பு சரியில்லையா? "

"ஓ, இல்லை இல்லை, என் தொப்பியை அணிந்து கொண்டால் எப்படி இருப்பீர்களென்று பார்க்க விரும்பினேன்"

அவர் தலைக்குள் ஊடுருவி மண்டையோடு முழுவதும் பாதிக் காற்றைப் பிடுங்கி விட்ட பலூனால் நிரப்பியிருப்பதை கண்டுபிடித்து விட்டவள் போல விழித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் முறைப்பதை அவர் கண்டுகொண்டதைப் போலத் தோன்றவில்லை. "இந்த உலகத்தின் மிகச் சிறந்த தொப்பிச் சலவையாளர், நான்தான் தெரியுமா? வல்லாஹி!"

பேச்சுவாக்கில் மெடிகுரியில் தான் இஸ்லாம் பள்ளியில் அல்மஜிரி என்னும் மாணவணாக இருந்தபோது தொப்பிகள் சலவை செய்வதைக் கற்றுக்கொண்டதைப் பற்றியும், ஒரு நிலச்சுவான்தாரின் நிலத்தில் தொழிலாளியாக வேலை செய்தபின் அவர் பெண்ணையே முதல் தாரமாக மணமுடித்துக் கொண்டதையும் விவரித்துக் கொண்டிருந்தார்.

பிந்த்தாவின் மனம் அதில் லயிக்காமல் வேறு நினைவுகளில் அலை பாய்ந்தது. ஹுரைராவின் கணவன் அவளை அழைத்துச் செல்ல வராத சூழ்நிலையில் அவளிடமிருந்து எப்படி விடுபடுவது என்று யோசித்துக் கொண்டிருந்தாள். பலவிதமான சாத்தியங்களை யோசித்தும், அவை எதுவுமே நடைமுறையில் செயல்படுத்த முடியாதவை என்று உணர்ந்தாள். இதைச் செய்யாவிட்டால், தன் மகள் நிரந்தரமாக இங்கு ஃபைஸாவின் அறையில் தங்கி விட, அவளது புகுந்த வீட்டில் புழுதிப் புயல் படிந்து விடும் என்பதை ஒத்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை பிந்த்தாவுக்கு.

அவள் எதையோ நினைத்துக்கொண்டிருக்க, மாலம் ஹரூணா தன் மூன்றாவதோ, நான்காவதோ மகன் போர்ட்-ஹார் -கோர்ட் நகரில் ஒரு வெள்ளையனுக்குக் கார் ஓட்டி வாழ்க்கை நடத்துவதையும்,அங்கு ஒரு விபத்தில் காலில் அடிபட்டு இப்போது மூன்று காலுடைய நாய் போல் நொண்டி நடந்து கொண்டிருப்பதையும் சொல்லிக்கொண்டிருந்தார்.

இப்போது அவருடைய கரங்களைத் தன் தோளில் உணர்ந்தாள் அவள். முதலில் லேசாகத் தட்டிக் கொடுப்பதைப் போல..பின் மெல்ல அந்தக் கை சற்றே கீழிறங்கியது.

"கொசு" பல்லைக் காட்டினார்.

அரைமனதுடன் அந்தப் பூனை மியாவ் என்று ஒலியெழுப்பியது. முன்னங்காலில் எட்டு வைத்து பல அடிகள் நடந்து, பக்கத்து வீடான மம்மா

எஃபே வின் வீட்டுப் எல்லைப் பக்கமாக நகர்ந்து போனது.

ஆரஞ்சுப்பழத்தின் உலர்ந்த தோல்களை தணலில் வீசி புகைப் போட்டால் கொசுக்களை விரட்டலாம் என்று தொடர்பற்ற பேச்சை மாலம் ஹரூணா மீண்டும் ஆரம்பித்து விட்டார்.

அவளுடைய முதுகுப்பக்கத்தில் இருந்த கொசுவைத்தட்டி விட்டவரின் கை, இப்போதும் தேவையற்று அவ்விடத்திலேயே சற்றுத் தங்கியது.

முகச்சுழிப்புடன் அவரைப் பர்ர்த்தாள் பிந்த்தா. "மாலம் ஹரூணா, என்ன இது?"

"ஒன்றுமில்லையே," சங்கடமாகச் சிரித்தார்... "நாம் இருவரும் எங்காவது வேறொரு இடத்தில் சந்திக்கலாம் என நினைக்கிறேன்"

"எதற்காக?"

"ம்ம், குரலைத் தாழ்த்திக் கொண்டவர், நாம் வேறெங்காவது போகலாம், அதாவது, ஒருவரையொருவர் நன்கு அறிந்து கொள்ள, ம்ம்."

"என்ன சொல்கிறீர்கள்?"

அவள் குரலில் ஒலித்த கடுமையில் சற்றுத் தடுமாறினார்.

"அதாவது, எங்கோ ஒரு ஏகாந்தமான இடத்திற்குப் போகலாம் என்று சொல்கிறேன், தெரிகிறதா?

"எதற்காக?"

ரேடியோவை இயக்கி ஒலிக்க விட்டவர் அதன் குமிழ்களைச் சுற்றிப் பல அலைவரிசைகளுக்கு மாற்றிக்கொண்டிருந்தார்.

எதுவும் பேசாமல், பல அலைவரிசைகளுக்கிடையே தெளிவான குரலை அவர் தேடுவதை கவனித்துக்கொண்டிருந்தாள் பிந்த்தா. எந்த வேகத்தில் ரேடியோவை இயக்கினாரோ அதே வேகத்தில் அணைத்து விட்டார்.

"என்ன சொல்லப் போகிறீர்கள்?"

"எதைப் பற்றி?"

"அதுதான் கேட்டேனே? வெளியே எங்காவது செல்வது பற்றி?"

"இங்கே சொல்ல முடியாத எதை அங்கு சொல்லப் போகிறீர்கள்?"

"ம்ம், நாம் மிஸ்டர் பிக்ஸ், மம்மா காஸா, லா க்ரீம் மாதிரியான ஆடம்பரமான உணவகத்துக்குச் செல்லலாம்."

"எனக்குப் பசிக்கவில்லை."

"நான் இப்போதே போக வேண்டுமென்று சொல்லவில்லை, பைத்தியம். அதாவது நாளை போகலாமே?"

"எங்கள் வீட்டில் சமையலறை இருக்கிறது, அதில் சமைக்கத் தேவயான அள்வு மளிகை இருக்கிறது .எனக்குப் பசித்தால், நான் சமைத்துச் சாப்பிட்டுக் கொள்வேன்"

அவர் சிரித்தார், "பிந்த்தா பெண்ணே, ஏன் இத்தனை கடுமையாக இருக்கிறாய், ஏதோ பேச்சு வாக்கில் சொன்னேன்."

"மாலம் ஹரூணா, நான் உங்களுடன் எங்கேயும் வரப் போவதில்லை. இப்படி ஊர் சுற்றும் அளவு நான் இளம் பெண் இல்லை."

தலையைக் குனிந்து கொண்டே பெருமூச்சு விட்டார், மீண்டும் ரேடியோவை இயக்கி, அதன் குமிழ்களில் விளையாடத் துவங்கினார்.

"அதை நிறுத்துங்கள், இறைவா!"

ரேடியோவைக் கீழே வைத்து விட்டு மீண்டும் கையில் எடுத்துக் கொண்டார். தொப்பியைக் கழற்றி தலையைச் சொறிந்தார். இறுதியாக கிளம்புகிறேன் என்று அவர் சொன்னவுடன், இருவரும் எழுந்து கொண்டார்கள்.

தன் ஹிஜாபை சரி செய்து கொண்டே "போய் வாருங்கள், நல்லிரவு, காலையில் சந்திப்போம்" என்று விடை கூறினாள்.

அவள் நகர எத்தனிக்கையில் அழைத்தார், "பிந்த்தா, நாம், ஒரு வேளை, எங்காவது, ஒரு ஹோட்டல் விடுதிக்குப் போகலாமே, நீயும் நானும் மட்டும்..."

சில்வண்டுகள் கீச்சிட்டுக் கொண்டிருந்தன, ஈசல்கள் ரீங்காரமிட்டன. அந்த இரவு மெல்ல சுவாசித்துக் கொண்டிருந்தது. இறுதியில் கோபமும் வெறுப்பும் பொங்கக் கத்தினாள் பிந்த்தா.

"என்னை என்னவென்று நினைத்தீர்கள்?"

அவருடைய வார்த்தைகளை உதிர்த்துச் செல்பவள் போல, தன் ஹிஜாபைத் தட்டிக்கொண்டே வீட்டினுள் சென்று மறைந்தாள் பிந்த்தா.

ஹதீஸா நட்டு வைத்திருந்த பெட்டூனியா பூச்செடிப் பாத்திகளின் அருகே நின்றவாறு, தாறுமாறாகத் துடிக்கும் தன் இதயத்தின் ஓசையையும், மிக நுட்பமாக ஒலிக்கும் இரவின் சுவாசத்தையும் கேட்டுக்கொண்டிருந்தார்

மாலம் ஹரூணா.

—

உஸ்தாஜ் நூரா, தன் காலணிகளில் படிந்திருந்த அழுக்கை ஈரத் துணி ஒன்றினால் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தார். செருப்பின் இடுக்குகளில் ஒட்டியிருந்த சேற்றுக்கட்டிகளை மிக நுணுக்கமாகத் தேய்த்து எடுத்துக் கொண்டிருந்தார்.

அவர் பின்னால் நின்றுகொண்டிருந்த மனைவி முர்ஜா குத்தலாக் கேட்டாள், "இன்று யாரைப் பார்க்கப் போகிறீர்கள்?"

தலையாட்டினார் அவர். அவரது தலைவலியை மீண்டும் தூண்டி விட்டது அவள் செய்கை. மோசமான இரவுகளுக்குப் பிறகு எப்போதும் ஏற்படும் வலி இது. நேற்று இரவும் அது போலத்தான். வீட்டிலிருந்தும், முர்ஜாவின் தொணதொணப்புகளிலிருந்தும் தப்பி வெளியேறிச் செல்லலாம் என்று விடியலுக்காகக் காத்திருந்தார்.

மணமாகி ஐந்தாறு வருடங்களாகியும் குழந்தைச் செல்வமற்ற அவர்கள் தாம்பத்யம் முர்ஜாவின் மனதில் ஒரு பாதுகாப்பின்மையையும், சந்தேகத்தையும் விளைவித்து விட்டது. ஏதேதோ கற்பனை செய்துகொண்டு, தானாகவே ஒரு முடிவுக்கு வந்துவிடுவாள். எந்த நோக்கமுமின்றி அவர் சாதாரணமாகப் பேசும் வார்த்தைகளிடமிருந்து கூட, இரண்டாம் மனைவி பற்றிய சர்ச்சைகளை இழுத்து வம்பை வளர்ப்பாள்.

ஆனால் அவள் சந்தேகம் ஆதாரமற்றதுமல்ல. அவள் கணவன் எப்போதும் மற்றவர்களுக்கு, பெரும்பாலும் பெண்களுக்கு மத அறிவுரைகள் வழங்கும்போது, அவர்கள் வாழ்க்கைக்கும் சேர்த்தே அலோசனைகள் வழங்குவார். மேடு பள்ளங்கள் நிறைந்திருக்கும் காதல் பாதையை செப்பனிட இளம்பெண்களுக்குத் தகுந்த ஆலோசனைகள் தந்து உதவுவார். இது போன்ற உரையாடலின் மூலம்தான் பத்தொன்பது வயதில், இருபத்தேழு வயதான ஆலிம் மீது காதல் கொண்டாள் முர்ஜா. அந்த நாட்களிலேயே, கனவான்களைப் போல் கணுக்காலுக்கு ஒரு அங்குலத்திற்கு மேல் பேண்ட் அணிந்திருப்பார். மின்னும் கருந்தாடியும், பண்பாடான அரேபிய மொழி உச்சரிப்பும், எப்போதும் அன்பான சொற்களைப் பேசும் குணமும் அவரது அடையாளங்கள். அல் கஜாலி, இபுன் சினா ஆகியோரின் சொற்பொழிவு பற்றியெல்லாம் பேசுவார். மேலும் அவர் பல்கலைக் கழகம் சென்று உளவியலில் பட்டம் வாங்கியிருந்ததால் *Freud, Dewey* பற்றி உரையாடியும் அவள் மனதைக் கவர்ந்தார். ஆனால் அந்த நாட்கள் யாவும்

சிதைந்து போன அவளுடைய நம்பிக்கைகளின் முன்பு நிறமிழந்து, தொலை தூரத்து நினைவுகளாக மட்டுமே விஞ்சியிருக்கின்றன.

கடந்த இரவு, அல்ஹாஜி மோமோவுடைய அழகிய மகள் லாமிண்டேவைப் பிடித்திருந்த சாத்தானை விரட்டியடிக்கச் சென்றிருந்தார். அவளைப் பீடித்திருந்த அந்தப் பொல்லாத ஆவி பொது இடங்களிலெல்லாம் அவள் ஆடைகளை அவிழ்க்க வைத்து விடும். இதனால்தான் முர்ஜாவின் அலைபாயும் மனம் விபரீத எண்ணங்களால் நிரம்பி வழிந்தன.

எங்கே போயிருந்தீர்கள் என அவள் விசாரித்த போது, களைத்து மயங்கிருந்த கண்களோடு அவர், "அதுதான் அந்தப் பெண்..."

அவரை அவ்வளவு மட்டுமே வாயைத் திறக்க அனுமதித்தாள்.. சொல்லி முடிக்கும் முன்பே, அருவி போல் கொட்டத் தொடங்கி விட்டாள். ஏற்கெனவே நீண்டிருந்த அவர் இரவு, மேலும் நீளமாகியது.

மறுநாள் காலை, அவளுடைய பொறாமைக் கூண்டிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள அவர் முயற்சி செய்துகொண்டிருந்த போதுதான், ஒரு சிறுவன் வந்து அவரை யாரோ பார்க்க விரும்புவதைக் கூறி வெளியே வருமாறு அறிவித்து விட்டுச் சென்றான்.

"யார்? யார் அவரைப் பார்க்க விரும்புவது?" சிறுவனை மிரட்டினாள்.

"மாலம் ஹருணா."

"ம்ஹ்ம்ம்," இருக்கையில் அமர்ந்து கொண்டு முகச் சுழிப்புடன் சுவரைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மேசை மீது கொஞ்சம் பணத்தை வைத்துவிட்டு, அங்கிருந்த *Qassasul Anbiya* என்னும் புத்தகத்தை எடுத்துக்கொண்டு நகர்ந்தார். அந்தப் புத்தகத்திலிருந்துதான், தன் மாணவர்களுக்கு தீர்க்கதரிசிகளின் அதிசயத்தக்க செயல்களை விளக்கிச் சொல்லித் தன் அவர்களை மகிழ்விப்பார். மனைவியை ஒரு பார்வை பார்த்தவாறே அங்கிருந்து விரைந்து நழுவினார்.

மாலம் ஹரூணாவின் பலதார மணஆதரவு நிலைப்பாடு யாவரும் அறிந்தது. ஆகையால், அவர் யாராவது புதிதாக மணவிலக்கு பெற்றவர்கள் அல்லது எதோ ஒரு கைம்பெண் பற்றிய செய்தியைக் கொண்டு வந்திருப்பார் என்றுதான் நினைத்தாள் முஜ்ரா, எனவே, வீட்டின் முன்னறைக்குச் சென்று, மூடியிருந்த கதவின் சட்டத்தில் சாய்ந்து கொண்டு, வெளியே திண்ணையில் அமர்ந்திருக்கும் ஆண்கள் இருவரும் பேசுவதைக் கவனமாக ஒட்டுக் கேட்டாள்.

"இந்த விஷயத்தை உங்களிடம் சொல்கிறேன், ஏனென்றால் நீங்கள் அவளுக்கு நல்ல போதனை செய்ய வேண்டும் உஸ்தாஜ். அவள் உங்கள் மாணவி அல்லவா, அதனால் நீங்கள் அறிவுரை சொல்லலாம் இல்லையா?"

சான்சிரோவின் பிரபு, சகிக்க முடியாத பெரிய ரவுடி, குட்டையான, கோரை முடியும், போதையைப் புகைத்துப் புகைத்து கருப்பாக மாறிப் போன உதடுகள் கொண்ட ரெஸாவுடன், ஹஜியா பிந்த்தா கொண்டிருக்கும் புனிதமற்ற தொடர்பைக் கேட்டு, தன் கணவன் 'சுபஹானல்லாஹ்' என்று முனகுவது முஜ்ராவின் காதில் தெளிவாக விழுந்தது.

—

22

"புத்தியுள்ளவன் கண்களுக்குத் தென்படுவிடும் செம்மறி ஆட்டின் நரைத்த ரோமம்"

கனவுகளில் தோன்றும் வண்ணங்களின் நிழல்களில் மேலும் மேலும் உழன்று கொண்டிருந்தாள் ஃபைஸா. அவற்றில் சிவப்பு வண்ணம் வாரி இறைக்கப்படும்போதெல்லாம் தொற்றிக் கொள்ளும் பதற்றத்தில், இரவு முழுவதும் மூச்சுத்திணறிக் கொண்டிருந்தாள். மற்ற நேரங்களில் அவற்றை சத்தமில்லாமல் தைரியமாகத் துரத்திக்கொண்டிருந்தாள்.

ஃபைஸா கத்த ஆரம்பிக்கும் முன் ஹுரைரா அவளைக் கவனித்து விட்டாள். அவள் விழித்துப் பார்த்தபோது உயிரற்ற உருவம் போல, கைகளை முன்னால் விரித்துக்கொண்டு, அறையின் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தாள் ஃபைஸா. கதவினருலிருந்து அவள் நீங்கியதும், அங்கிருந்து ஓடத் தயாராக இருந்தாள் ஹுரைரா. தோளில் மகளை வாரிப் போட்டுக்கொண்டு, பால்யத்தில் கற்ற, சாத்தானை விரட்டும் குரான் வரிகளை முணுமுணுத்துக் கொண்டே அறையைக் கடந்தாள்.

ஃபைஸாவின் கரங்கள் அவள் தோளில் விழ, சொல்லிக்கொண்டிருந்த வரிகள் அப்படியே வாயில் உறைந்தன. சிறுநீர்ப்பை வெடித்துக் கசிவதைத் தடுக்க வேண்டி, தொடைகளிரண்டையும் ஒன்றோடொன்று சேர்த்து இறுக்கிக்கொண்ட போது, தாறுமாறான தன் இதயத்துடிப்பின் சப்தத்தை ஹுரைராவால் உணரமுடிந்தது. இந்த நிகழ்வுகளுக்கு மத்தியில், ஃபைஸாவின் கரங்கள் அவள் உடலின் மீது இலக்கின்றி ஊர்ந்து கொண்டிருந்தன.

அதன் பின், தரையிலிருக்கும் கம்பளத்தை நோக்கி நடந்து அதன் மீது

கருவிலிருக்கும் சிசு போன்று மடிந்து படுத்துக்கொண்டாள் ஃபைஸா. மூக்கை உறிஞ்சியவாறே ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தவள் பிறகு அமைதியாகி விட்டாள். இரவு வேளையின் நிசப்தங்களோடு அவள் சுவாசம் இணைந்து கொண்டது.

உம்மியைப் படுக்கையில் கிடத்திவிட்டு, அவளருகில் படுத்துக் கொண்டாள் ஹுரைரா. அந்த இருளிலிருந்து, கலைந்து போன நினைவுகளிலிருந்து, எவற்றையெல்லாம் திரட்ட முடியுமோ, அவற்றையெல்லாம் உச்சரித்துப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய கிசுகிசுப்பான குரல், படபடவென அடித்துக் கொண்டிருக்கும் இதயத் துடிப்புடன் போட்டி போட்டது.

மறுநாள் காலை, நால்வரும், முன்க்கைலாவின் வீட்டிற்குப் பேருந்தில் ஏறிச் சென்றுகொண்டிருந்தார்கள். வெக்கையையும், பேருந்தின் மெதுவான ஓட்டத்தையும் புகார் செய்த ஹுரைரா, அவர்களுக்கு முன்னால் நீண்ட வரிசையில் நகர்ந்துகொண்டிருந்த கார்களை சபித்துக்கொண்டிருந்தாள்.

அவளைத் திரும்பிப் பார்த்த ஹஜியா பிந்த்தா, "நீ உன் கணவனிடமே திரும்பிப் போய் விடலாம் தானே, அங்கே ஜாஸ் நகரத்தில் இவ்வளவு போக்குவரத்து நெரிசல் இல்லையல்லவா?" என்று குத்தலாகச் சொன்னாள்.

ஃபைஸா, ஜன்னலோரத்தில் முகம் பதித்து, சாலையில் நின்றபடி, பொருட்களை விற்பவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். குளிர்ச்சியான பானங்களையும், தயிரையும் விற்றுக்கொண்டிருந்த சிறுவர்களையும், அகன்ற தட்டில் வாழைப்பழ வறுவல்களை நிறைத்து ஏந்திக்கொண்டிருந்த பெண்களையும், மலிவான கடிகாரங்கள், துடைப்பான், துண்டுகள் தொங்க விடும் கம்பிகள், இன்னும் என்னவெல்லாமோ விற்றுக்கொண்டிருக்கும் ஆண்களையும் பார்த்தாள். பதின்மூன்று வயதிற்கும் குறைவான ஒரு சிறுவன், தலையில் சுமந்திருந்த தண்ணீர் பாக்கெட்டுகள் நிரம்பிய வாளி தவறிக் கீழே விழுந்துவிடாமல் சமாளித்தபடியே, ஒரு பேருந்தின் பின் ஓடிக்கொண்டிருந்தான். பேருந்தின் ஜன்னலிலிருந்து பறந்து வந்து கீழே விழுந்த நைராத் தாளை அந்தச் சிறுவன் குனிந்து எடுப்பதைப் பார்த்தாள். சுவாரஸ்யம் இழந்தவளாக, இருக்கையின் பின் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள். ஆனால் உம்மி, தொடர்ந்து எதையெதையோ சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தாள். இரு விற்பனைப் பெண்கள் ஒருவரையொருவர் போட்டி போட்டுக்கொண்டு ஒரு காரை நோக்கி ஓடியதை, அலைபேசி ரீசார்ஜ் அட்டைகளை விற்றுக் கொண்டிருந்த ஒரு ஆணை, மிக நெருக்கமாக உரசிச் சென்ற மோட்டார் சைக்கிளை, ஆடைகள் விற்கும் நிலையத்தின் முன் தொங்கிக் கொண்டிருந்த அழகான மஞ்சள் உடையை...ஆனால், யாரும்

அவளைக் கண்டு கொள்ளவில்லை.

புலெட் சந்திப்பை அடைந்ததும், மைத்தாமா செல்ல ஒரு வாடகை வண்டி வைத்துக்கொண்டார்கள். அவர்கள் வீட்டை அடைந்தபோது, அங்கிருந்த ஒற்றைத் தீக்கொன்றை மரத்தின் மலர்கள் முற்றமெங்கும் பரவிக் கிடந்தன. அதன் கிளைகள் கைகளை நீட்டிக் கதிரொளியைத் துழாவுவது போல வீட்டின் சுற்றுச் சுவருக்கப்பால் நீண்டிருந்தன. மரத்தடியில் நின்றிருந்த ஸாரா, தன் கையில் பாதியளவு நீர் நிறைத்திருந்த கண்ணாடிக் குவளையில் மலர்களை சேகரித்துக்கொண்டிருந்தாள். ஏற்றப்படாத ஒரு மெழுகுவர்த்தி அந்தக் குவளையின் மேல் பாகத்திலிருந்து எட்டிப் பார்த்தது.

வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் சாய்ந்து அலைபேசியில் பேசிக் கொண்டிருந்தான் முன்க்கைலா. அதைப் பாக் கெட்டில் செருகிக் கொண்டே அவர்களை சந்திக்க வந்தவன், அன்னையை வணங்கி முகமன் கூற, முழங்கால் மண்டியிட்டுக் குனிந்தான். அவன் அணிந்திருந்த பொன்னிற காஃப்தானின் நுனி அவனைச் சுற்றி வளைந்தது. தன் உடல் எடையைத் தாங்கிக் கொள்ள இரு விரல்களைத் தரையில் ஊன்றிக் கொண்டான்.

இந்த வரவேற்பு உபசாரம் ஸாராவின் கவனத்தை ஈர்க்க, தீக்கொன்றை நிறைந்த கண்ணாடிக் குவளையுடன் அங்கு ஓடி வந்தாள். அவளை வாரியெடுத்து உயரத் தூக்க நினைத்தாள். ஆனால் ஸாரா தன் தன் மலர்களைப் பாதுகாத்துக் கொள்ள விரும்பினாள். எச்சரிக்கையுடன் தன் பாட்டியின் முழங்கால்களைக் கட்டிக்கொண்டாள்.

அவளுடைய குவளையை எட்டிப் பார்த்தாள் ஹுரைரா. மகளின் தலையை வருடினான் முன்க்கைலா.

"ஸாரா அடிக்கடி இது போல செய்வாள். மரம் பூத்துக் குலுங்கும்போது, அதிலிருந்து பூக்களைப் பறித்து ஒரு குவளையில் அடுக்கி, அதன் மீது ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றிவைப்பாள்."

"தீக்கொன்றை மலரும் பருவம்..." அதைச் சொல்லும்போது ஃபைஸாவின் குரலில் ஏதோ ஒரு துக்கம் இழையோடியது. அவள் கண்கள் அந்தக் கண்ணாடிக் குவளையின் மீது பதிந்தன.

ஸாரா பெருமையில் பூரித்தாள். "என் அறையில் எப்போதும் வைத் திருப்பேன், எரியும் மெழுகுவர்த்திகள் உருகித் தண்ணீர் வரை வந்ததும் அணைந்துவிடும்."

"ரத்தம்."

அனைவரும் ஃபைஸாவை நோக்கித் திரும்பினார்கள். இம்முறை, அவள் கண்முன் விரிந்த வெளியில் புகைபோலத் தெரியும் கற்பனை உருவங்களின் நெடிய உயரங்களுக்கப்பால் தெரிந்த தொலைவை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். பிந்த்தா அவளை அழைத்தபோது, திடுக்கிட்டவள், அனைவரது பார்வையும் தன் மீதே ஏன் நிலைத்திருக்கிறது என்று குழப்பமடைந்தாள்.

உள்ளே, வரவேற்பறையின் தேநீர் மேசையின் மீது கண்ணாடிக் குவளையை வைத்து, அதனுள்ளிருந்த மெழுகுவர்த்தியை ஏற்றி, அதில் மிதக்கும் மலர்களையும், எரியும் சுடரையும் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள் ஸாரா. தொலைக்காட்சியில் தெரியும் சிறுவர் நிகழ்ச்சி உம்மியை ஈர்க்காததால், அந்தக் கண்ணாடி மேசையின் மறுபுறம் வந்து அவளும் அமர்ந்துகொண்டாள். இருவரின் கண்களும் மிதக்கும் மலர்களுக்கு மேலாகக் கண்ணாடியின் ஊடே சந்தித்துக் கொண்டன.

உறங்கிக் கொண்டிருந்த காலிதாவை கைகளில் ஏந்திக்கொண்டு அமர்ந்திருந்த பிந்த்தாவின் முகம் ஜொலித்தது. ஸாராவைப் போன்று கவர்ச்சியான அழகின்றி, இவள் வித்தியாசமான அழகைக் கொண்டிருந்தாள். கரிய விழிகள், கூரான நாசி, பாந்தமான புன்னகை யாவும் இறந்துபோன அவள் மகன் யாரூவை அதிகம் நினைவுபடுத்தின. சமையலறையில் அவர்களுக்காக மதிய உணவு தயாரித்துக்கொண்டிருந்த குழந்தையின் அன்னை ஸாதியாவை சற்றும் நினைவுபடுத்தவில்லை.

மீண்டும் ஒரு அழைப்பை ஏற்றுப் பேசி விட்டு, பக்கத்திலிருந்த சிறிய ஸ்டூலில் அலைபேசியை வைத்தான் முன்க்கைலா. "இது அரசியல் நேரம், அரசியல்வாதிகள் அனைவரும் எத்தனை பணம் சேர்க்க முடியுமோ அத்தனை பணம் சேர்க்கிறார்கள். வல்லாஹி."

ஹுரைரா கேலியாகச் சிரித்தாள். "இதனால் உங்களுக்கும் நிறையப் பணம் கிடைக்கும் என்று நான் நினைக்கிறேன், சரி தானே ? பின் எதற்கு புகார் செய்கிறீர்கள்?"

"உண்மை, உண்மை, அவர்கள் டாலர்கள் கேட்கிறார்கள், நேற்றி லிருந்து டாலர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது."

"எப்படி?"

"தேவை மிக அதிகம் இருக்கும்போது இப்படி ஏற்படுவதுண்டு"

"நீ யார் பக்கம்?" கேள்விக் குறியோடு மகனைப் பார்த்தாள் பிந்த்தா.

"நான் யார் பக்கமா? ம்ம், எனக்குத் தெரியவில்லை ஹஜ்ஜியா. இந்தத்

தேர்தலில் நான் அவ்வளவு ஈடுபாட்டுடன் இல்லை"

"நீ பாரேன், புஹாரிதான் வெற்றியடையப் போகிறார்" பிந்த்தாவின் குரலில் இருந்த பேரார்வத்தைக் கண்டு முன்க்கைலா சிரித்துவிட்டான். ஹஜியாவை பார்."

"இந்தப் பெண்ணுக்கு என்னவாயிற்று?" ஹுரைரா கேட்டாள்.

அவர்கள் திரும்பிப் பார்த்த போது, ஒரு பெண்ணின் முகம் தொலைக் காட்சியின் திரை முழுவதும் வியாபித்திருந்தது.

"ஓ, நேற்று ஒரு கடத்தல் சம்பவம் நிகழ்ந்திருக்கிறது." முன்க்கைலா தெரிவித்தான்.

"அல்ஹாஜி ஷெஹு பக்கோரியின் மகனைக் கடத்த முன்றார்கள். ஆனால் அந்தப் பையன் தப்பித்துவிட, அவனுக்குப் பதிலாக அவன் உறவுக்காரப் பெண்ணைக் கடத்திவிட்டார்கள்."

அதிர்ச்சியில் தன் உள்ளங்கைகளைக் கொட்டிக்கொண்டே, "ஓஓ, என்னவொரு அழகான பெண்? வாஹ் அல்லாஹ்!" என்று கூவினாள் பிந்த்தா.

ஹுரைரா இடம்மாறி அவளிடம் வந்து அமர்ந்தாள். "யார் இந்த அல்ஹாஜி பக்கோரி? அவர் பெயர் கேட்டது போல உள்ளது."

"அஹ் ஆஹ், அல்ஹாஜி பக்கோரியைத் தெரியாதா? பெரிய தொழிலதிபர், நீ அரசியலில் அதிகம் ஈடுபாடில்லாதவள். அதனால் உனக்குத் தெரியாதது ஆச்சரியமில்லை. அவர் ஒரு தொழிலதிபர், அரசியல்வாதியும் கூட இந்தப் பெண் லண்டனில் படிப்பை முடித்துவிட்டு இப்போதுதான் இங்கு வந்திருக்கிறாள் என்று கேள்விப்பட்டேன்."

பிந்த்தா கவலையில் தன் கன்னத்தை விரல்களால் தடவிக்கொண்டே, 'அந்தப் பெண்ணைக் கண்டுபிடிக்க அல்லாஹ் உதவி புரியட்டும்' என்று சொல்லிக் கொண்டாள். அந்தப் பெண்ணுக்கு எந்த துன்பமும் நேரக்கூடாது என்று வேண்டிக்கொள்கிறேன். அவளைக் கடத்திச் சென்றவர்கள் அல்லாஹ் வின் பெருங்கோபத்துக்கு ஆளாகவேண்டும். சாபம் பிடித்தவர்கள்."

அனைவரும் 'ஆமீன்' என்று முணுமுணுத்து விட்டு அமைதியானார்கள்.

"நான் ஸாதியா அத்தைக்கு சமையலில் உதவி செய்யப் போகிறேன்." எழுந்து கொண்டாள் ஃபைஸா.

முன்க்கைலா தலையசைத்து "வாழ்த்துக்கள் பெண்ணே" என்றான்.

ஆனால் சமையலறைக்குச் செல்வதற்குப் பதிலாக, அங்கேயே நின்று,

கண்ணாடிக் குவளையிலிருந்த மலர்களையே பார்த்துக்கொண்டிருந்தாள். பார்த்துக் கொண்டிருக்கும் நேரம் நீண்டுகொண்டே போக, அவள் முகமும் கல்லாக இறுகிக்கொண்டிருந்தது. இறுதியில் தன் உடலைக் குலுக்கிக் கொண்டாள். அணிந்திருந்த ஹிஜாபை, அங்கே காலியாக இருந்த இருக்கையில் வீசி விட்டு, சமையலறை நோக்கி நடந்தாள்,

அவள் சென்றதும், முன்க்கைலா அன்னையின் புறம் திரும்பினான்.

"என்ன பிரச்சனை இந்தப் பெண்ணுக்கு?"

"சாத்தான் பீடித்திருக்கிறது" திட்டவட்டமாகச் சொன்னாள் ஹுரைரா.

அவளை விழித்துப் பார்த்தாள் பிந்த்தா. "உன் வாயை மூடிக் கொள், பெரிய உபகாரமாயிருக்கும், உன்னை யார் கேட்டது?"

"ஆனால் ஹஜியா, எனக்குத் தெரியும், வல்லாஹி!" சமையலறைப் பக்கம் பார்வையைத் திருப்பியவள், குரலைத் தாழ்த்திக் கொண்டாள்.

"ராத்திரிகளிலெல்லாம் அவள் என்ன செய்கிறாளென்று நீங்கள் பார்க்க வேண்டும், இப்படித்தான் எங்கள் பக்கத்து வீட்டுப் பெண்ணுக்கும் ஆரம்பித்தது. ஃபைஸாவுக்குப் பேயோட்ட வேண்டும்.

"பேயோட்டுவதா?" முன்க்கைலா அவளை முறைத்தான்,

"ஹுரைரா, நீ வாய்க்கு வந்தபடி பேசாதே."

"ஹபா! சாத்தான் அவளைப் பீடித்து விட்டால் என்ன செய்வாள் என்று நினைத்துப் பாருங்கள். என் மகளை நினைத்து எனக்கு பயமாக இருக்கிறது, வல்லாஹி."

பிந்த்தா சீறினாள்." அப்படியென்றால் உன் கணவன் வீட்டிற்கு கிளம்ப வேண்டியதுதானே?"

"ஹஜியா, உண்மையாகச் சொல்கிறேன், நான் ஏதாவது சொல்லும் போதெல்லாம், நீங்கள் இந்த வார்த்தைகளை என் முகத்தில் வீசுவது எனக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை."

"ஒஹ்ஹோ, தயவு செய்து வாயை மூடிக்கொள், கிறுக்குத்தனமாகப் பேசாதே."

"இல்லை, மாட்டேன், ஒவ்வொரு முறையும் நான் ஏதாவது சொல்லும் போது, நீங்கள் இதைப் பற்றி....இதைக் கொண்டு வருகிறீர்கள்.."

"எதைப் பற்றி? வெட்கம் கெட்ட பெண்ணே, எதைப் பற்றி ?

"போதும் நிறுத்துங்கள், இருவரும்..."

முன்க்கைலாவின் குரல் உறுதியாக, அதிகார தோரணையுடன் ஒலித்தது.

ஸாதியாவும், ஃபைஸாவும் உணவு மேசையை தயார் செய்தபின், பிந்த்தா கம்பளத்திலேயே தனக்கு உணவு பரிமாறுமாறு சொன்னாள். தனக்கு மேசையில் அமர்ந்து உண்ணும் பழக்கமில்லை என்பதைக் குறிப்பிட்டாள்.

குழம்பைப் பறிமாறும்போது ஸாதியாவின் மணிக்கட்டு நெளிந்து அவள் வளையல்கள் கிணுங் என்று ஒலித்ததை, ஒரு வித ஈர்ப்போடும், சிறு வெறுப்போடும் கவனித்தாள் பிந்த்தா. உணவு பறிமாறிய பின் அவர்களுடன் அமர்ந்து, பாந்தமாக முறுவலித்தவாறே உணவு உண்பதைக் கவனித்த போது, அந்த செய்கை பாராட்டத்தக்க அளவில் கண்ணியமாக இருந்தை அரைமனதுடனாவது ஒப்புக்கொள்ளவேண்டியிருந்து பிந்த்தாவிற்க்கு.

ஃபைஸாவைப் பீடித்திருக்கும் சாத்தான், ரத்தம் மற்றும் அது போன்ற வஸ்துக்களைக் கண்டால் கோபத்தில் கிளர்ந்தெழும் என்பதைத் தான் அறிந்தவள் என்ற தோரணையில், ஃபைஸா தனது தட்டில் அரிசிச் சோற்றுக்குத் தக்காளி சாஸை ஊற்றிக்கொண்டு தட்டுடன் அறையின் மூலைக்கு நகர்ந்து செல்வதை மிகுந்த ஜாக்கிரதை உணர்வுடன் கவனித்துக் கொண்டே இருந்தாள் ஹுரைரா.

சற்று நேரம் கழித்து, சமையலறையில் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்த ஃபைஸாவின் பின்னால் வந்து நின்றாள் ஸாதியா. திரும்பி அவளைப் பார்த்துப் புன்னகைத்தாள் ஃபைஸா. குறுகிய, பதட்டமான, ஆழ்மனதில் ஊன்றியிருந்த சங்கடத்தைக் காட்டிக் கொடுக்கும் புன்னகை.. விரிசலடைந்த கண்ணாடி போல... எதுவாக இருந்தாலும் ஸாதியா அதைக் கவனிக்கத் தவறவில்லை.

"நீ மிகவும் அமைதியாக இருக்கிறாய் ஃபைஸா"

"நானா? அமைதியா?"

"ஆமாம் ஃபைஸா."

தோளைக் குலுக்கினாள் ஃபைஸா.

"எனக்கு அதிகம் பேசத் தோன்றுவதில்லை."

"அது ஏன் என்று நான் கேட்கலாமா ஃபைஸா?"

"ஏன்?, எனக்கே தெரியாது வல்லாஹி."

ஸாதியா பெருமூச்செறிந்தாள். "சமீபத்தில் உடல் நலம் இல்லாமல் இருந்தாயா? ஏனோ உற்சாகமே இல்லாமல் இருக்கிறாய்."

"உடல் நலமில்லாமலா? அப்படியெல்லாம் இல்லை, நன்றாகத்தான் இருக்கிறேன்"

அவளுக்கு சற்று நெருக்கமாக நகர்ந்து, பாத்திரங்களைக் கழுவத் தொடங்கினாள் ஸாதியா. இருவரும் மௌனமாக வேலை செய்தார்கள். இடையிடையே சுத்தம் செய்யப்பட்ட ஈரமான பாத்திரங்களிலிருந்து எழும் கிரீச் சப்தமும், தண்ணீர் வாரியடிக்கும் ஓசையும், பாத்திரங்கள் மோதும் கிணுங் என்னும் ஒலியும் அந்த மௌனத்திற்குத் துணையாக இருந்தன.

உன் பிரச்சனைகளைப் பற்றிப் பேச விரும்புகிறாயா ஃபைஸா?

"பிரச்சனைகளா? என்ன பிரச்சனைகள்?"

"முன்பு ஜாஸ் நகரத்தில் நடந்தது பற்றி... உன் அப்பாவுக்கும் சகோதரனுக்கும் நிகழ்ந்தது குறித்து."

ஃபைஸாவின் கையிலிருந்த பாத்திரம் நழுவி சிங்க்கில் விழுந்ததில், தரையிலும் அடுப்பு மேடையிலும் தண்ணீர் தெறித்தது. அதைத் துடைப்பதற்காக அவள் நகர்கையில் ஸாதியா அவள் கையைப் பற்றி நிறுத்தினாள்.

"அதைப் பற்றிக் கவலைப்படாதே, வேலை முடிந்ததும் சுத்தம் செய்து கொள்ளலாம்."

முகத்தைத் திருப்பிக்கொண்டு அவளறியாதவாறு சாமர்த்தியமாகப் புறங்கையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள். ஸாதியா அதைக் கவனித்து விட்டாள். அவளுக்காகக் காத்திருந்தாள். ஆனால், ஏதோ ஒரு கவசம் ஃபைஸாவை அணுகவிடாமல் இடையே ஊர்ந்து கொண்டிருப்பதை அறிந்தாள். அந்தக் கணம் அவளிடமிருந்து நழுவிச் சென்றுகொண்டிருப்பதை உணர்ந்தாள் ஸாதியா. இந்தப் பிரச்சினையை எப்படிக் கையாள்வதென்று அவளுக்குத் தெரியவில்லை, ஆனால் இதைக் கையாளும் ஒருவரைப் பற்றி அறிந்து வைத்திருந்தாள்.

பாத்திரங்களைக் கழுவி, உலர் மேடையில் நேர்த்தியாக அடுக்கி வைத்த பின், ஸாதியா உள்ளங்கைகளை மெல்லத் தட்டிக்கொண்டு பேசத் துவங்கினாள்.

"ஃபைஸா, நீ ஒரு சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் நினைக்கிறேன்.

"சிகிச்சையா? அது என்ன?"

ஸாதியா மெல்ல சிரித்தாள். "என் மாமா ஒரு மருத்துவர், மன

நல ஆலோசகர். அவர் உன்னைப் போன்ற, அதாவது உளவியல் சிக்கல் உள்ளவர்களுக்கு உதவி செய்பவர், ஒருவேளை, நாம் அவரைப் போய் பார்க்கலாமா? உனக்கு விருப்பமிருந்தால் மட்டுமே...''

ஸாதியாவைப் பார்த்த பார்வையில், ஃபைஸாவின் முகத்தில் அவ நம்பிக்கை அப்பட்டமாகத் தெரிந்தது. சிறிது இடைவெளிக்குப் பின் ஒலித்த அவள் சிரிப்பில் விரக்தியும், துக்கத்தின் நாதமும் கலந்திருந்தது. அந்த சிரிப்பொலியைக் கேட்ட போது ஸாதியாவுக்கு அழத்தோன்றியது.

''ஸாதியா அத்தை, நான் நலமாக இருக்கிறேன், வல்லாஹி''

''அது உரையாடல் மட்டும் தான், வேறெதுவும் இல்லை''

ஃபைஸா மீண்டும் அந்த யோசனையை ஏற்றுக் கொள்ளத் தயங்கினாள்.

''நீ இப்போது எதுவும் சொல்ல வேண்டாம், ஒருவேளை, நீ அதைப் பற்றி யோசித்துப் பார்க்கலாம். நீ தயாரானதும், நானே எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வேன்.''

அப்போது, ஹுரைராவின் குதூகலமான வெடிச்சிரிப்பு மற்றவர்களின் சிரிப்பையெல்லாம் மீறி, வரவேற்பறையிலிருந்து சமையலறை வரை மிதந்து வந்து, அவர்களின் கவனத்தைக் கலைத்து திரும்பிப் பார்க்க வைத்தது. சற்று நேரத்துக்குப் பின் அடுக்கி வைத்திருந்த பாத்திரங்களை வெறித்துப் பார்த்த ஃபைஸா, தோளைக் குலுக்கிக் கொண்டாள்.

''நான் வரவேற்பறைக்குப் போகிறேன்'' என நகர்ந்தாள்.

ஸாதியா தலையசைத்தாள்.

அவர்களோடு மீண்டும் இணைந்து கொண்ட போது, அகன்ற புன்னகையுடன் தலையாட்டிக்கொண்டிருந்த பிந்த்தாவின் முகத்தில் சிரிப்பு மீதமிருந்தது வெளிப்படையாகத் தெரிந்தது. அனைவரும் தொலைக்காட்சியில் ''உலகின் விசித்திரப் பிராணிகள்'' நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தெளிவில்லாமல் அலையலையாகத் தெரியும் அந்த காட்சியில், விலங்குகள் செய்யும் முட்டாள்தனமான செய்கைகளில் இப்படி சிரிப்பு வெடியைத் தூண்டுகிற அளவு என்னதான் இருக்கிறதோ என்று வியந்தாள் ஃபைஸா.

பிந்த்தா விழியோரம் வழிந்த நீரைத் துடைத்துக்கொண்டே மேலும் சிரித்துக் கொண்டிருந்தபோது, அவள் அலைபேசி ஓசையெழுப்பியது. யார் அழைக்கிறார்கள் என்று ஒளிர்திரையில் பார்த்துவிட்டு நிமிர்ந்தபோது, எல்லோரும் அவள் இருக்கும் திசையையே நோக்கிக்கொண்டிருந்தார்கள்.

உணவு மேசைப் பக்கமாகச் சென்று, யாரும் பார்க்காமலிருக்க வேண்டி திரும்பி நின்றுகொண்டாள். ஆனால், மறுமுனையில் இருப்பவரிடம் பிறகு அழைக்குமாறு அவள் சொன்னது அங்கிருந்த அனைவரின் காதுகளிலும் தெளிவாக விழுந்தது.

—

பட்டுப்போன்ற கூந்தல் அலங்கோலமாக இருக்க, இப்போதும் பாதி மயக்க நிலையிலேயே பாயில் அமர்ந்திருந்தாள் அந்தப் பெண். அவள் நெற்றி மீது ஓடும் கரும் பச்சை நிற நரம்பு வெளுத்த தோலின் மீது பளிச்செனத் தெரிந்தது. கனத்துப் போயிருந்த விழிகளைத் திறந்து, முகமூடி அணிந்து நின்று கொண்டிருந்த இருவரையும் நிமிர்ந்து பார்த்தாள். ஒருவன் குள்ளமானவன், மற்றொருவன் உயரமானவன். இருவரும் அந்தக் காலி அறையின் குறுக்காகப் பூட்டியிருந்த கதவுக்கு அருகிலேயே நின்று கொண்டிருந்தார்கள்.

"நீ கடத்தப் பட்டிருக்கிறாய்" முகமூடிக்குப் பின்னாலிருந்து கட்டுஸோவின் குரல் அறிவித்தது. "நீ ஒத்துழைக்க மறுத்தால் உன்னைக் கொன்று விடுவோம், உன் வீட்டு மனிதர்கள் ஒத்துழைக்காவிட்டால் உன்னைக் கொன்றுவிடுவோம், கேட்கும் பணத்தை அவர்கள் எங்களுக்குத் தரவில்லையென்றால் உன்னைக் கொன்றுவிடுவோம், நீ எங்கள் பேச்சுக்கு மாறாக ஏடாகூடமாக நடக்க முயற்சி செய்தால் உன்னைக் கொன்று விடுவோம். கொன்றே விடுவோம், புரிகிறதா?" அவன் நெட்டி முறிக்கும் ஓசையால் அந்த அறையில் சட்டென நிலவியிருந்த அமைதியைக் குலைத்தான்.

தலையை இரு கைகளாலும் தாங்கிப் பிடித்துக்கொண்டாள் அந்தப் பெண்.

மயக்க மருந்தின் தாக்கம் அது. ரெஸா அறிந்திருந்தான்.

"தலைவலி போய் விடும், நீ சரியாகி விடுவாய்."

"யார் நீ? உனக்கென்ன வேண்டும்?

அவள் பேசிய ஹௌஸா மொழியில் மெலிதான அந்நியத்தன்மை இருந்தது.

"உன்னுடன் இருந்தானே ஒரு இளைஞன், அவன் உன் காதலனா?"

தலையை உயர்த்தி ரெஸாவைப் பார்த்தாள். "அவன் என் உறவுக்காரப்

பையன், காட், டேம் இட்..." கடைசி வார்த்தைகளை ஆங்கிலத்தில் உச்சரித்தாள்.

இரு ஆண்மகன்களும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"உன் உறவுக்காரனா? உங்களுக்குள்ள சரியான உறவு முறை என்ன? சொல்."

"அவன் தப்பித்து விட்டான், அப்படித்தானே?"

உள்ளங்கையில் முட்டியைக் குத்திக்கொண்டே கட்டூஸோ மிரட்டினான்.

"நீதான் முதலில் எங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும், தெரியுமா?"

"தயவு செய்து என்னைப் போகவிடுங்கள். உங்கள் பிரச்சினை என்னவென்றே எனக்குத் தெரியாது."

"பதிலைச் சொல்லு சனியனே."

அவள் அழ ஆரம்பித்தாள்.

கட்டூஸோ பொறுமையிழந்து தவிப்பதையும், எதையாவது அடித்து நொறுக்க வேண்டுமென்ற வெறியுடன் அவன் கண்கள் இங்குமங்கும் சுழல்வதையும் கவனித்துவிட்டான் ரெஸா. அவனை அறைக்கு வெளியே நடத்திச்சென்று பின் கதவை மூடினான்.

இருவரும் வரவேற்பறைக்கு வந்தார்கள். டோகோவும், ஜோவும் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பெண்ணிடமிருந்து கிடைத்த விவரத்தைப் பற்றி யோசித்துக்கொண்டிருந்தான் ரெஸா. மோசஸ், தன்னை அழைத்து அந்தப் பெண்ணைப் பிடித்து வைக்கச்சொன்னது ஏன் என்று இப்போது புரிந்தது. அவர்கள் குறிக்கோள் குறி தப்பியிருந்த போதிலும் இன்னும் உயிர்ப்போடுதான் உள்ளது.

அப்போது அந்தப் பெண்ணின் அலறலும், ஓயாமல் படபடவெனக் கதவைத் தட்டும் அதிர்வோசையும் காலியாகக் கிடந்த பரந்த மாளிகையின் வெற்றிடங்களின் மடிப்பில் பட்டு எதிரொலித்தது. மீண்டும் அவன் மாடிக்குச் செல்ல உடன் கட்டூஸோவும் ஓடி வந்தான். கதவைத் திறந்த போது, கிடைத்த இடைவெளியில் வெளியே ஓட முயற்சி செய்தாள். அவள் கைகளைப் பற்றி, பாயில் விசிறுவது எளிதாக இருந்தது. ஒவ்வொரு முறையும் அவன் கழுத்தைக் குறி பார்த்து கைகள் நீளுகையில், அவள் கண்களில் கோபம் அனலாகக் காய்ந்தாலும், மயக்க மருந்தின் தாக்கத்தில் இன்னும் தள்ளாடிக் கொண்டிருந்தாள். அவளது தாக்குதலை மிக எளிதாகக்

கையாண்ட போதிலும், தொடர்ந்து போராடிக்கொண்டிருந்தாள். அவளைப் பளீரென்று அறைந்தவுடன் அப்படியே சுருண்டு வீழ்ந்தாள். அங்கு நிலவிய அமைதியை அந்தப் பளீரென்ற சப்தம் ஆழ்ந்து நிறைத்தது. ஏனோ அந்த அமைதி, அவன் மனதில் அப்பிக்கிடக்கும் வெறுமையை ரெஸாவிற்கு நினைவூட்டியது,

அவளுடைய புறங்கைகளைப் பிடித்தபோது, அமைதியாக மூச்சைப் பிடித்துக்கொண்டு அமர்ந்திருந்தாள். பேரச்சம் அவள் கண்களில் ஊர்ந்து, அவளை மேலும் தள்ளாட வைத்ததை உணர்ந்தான். எதிர்க்கும் உறுதியைக் குலைக்கும் அளவுக்குத் தான் அவளிடம் பயத்தை ஊட்டியிருக்கிறோம் என்பதை அறிந்த அவனுக்கு ஆனந்தமாக இருந்தது.

"உன் வீட்டிலுள்ளவர்களின் பெயரையும், தொடர்பு கொள்ள வேண்டிய முகவரியையும் நீ எங்களுக்குத் தரவேண்டும்."

அவளுடைய அலைபேசியில் பார்க்கச் சொல்லி ஒரு பெயரைத் தந்தாள். அது அவள் மாமா, மிகப் பெரிய தொழிலதிபர்.

"அவர் பணம் கொடுப்பதுதான் அனைவருக்கும் நல்லது. கதவில் ஓங்கிக் குத்தினான் கட்டூஸோ."

ரெஸாவின் தோள்களுக்கு அப்பால், ஒரு கணம் அவனைப் பார்த்தவள், மீண்டும் ரெஸாவின் பக்கமே கண்களைத் திருப்பிக் கொண்டாள்.

அவளுக்கு உணவு அனுப்புவதாகக் கூறி எழுந்து கொண்டான் ரெஸா.

"தயவு செய்து நில்."

ரெஸா நின்றான். அவன் பார்வை கதவின் பக்கமே இருந்தது. நீண்டதொரு அமைதி நிலவியது. திரும்பிப் பார்த்தபோது அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

"என்ன?"

"எனக்கு மாதவிடாய் இப்போது."

அவன் கண்கள் விரிந்தன.

"உன்னைத் தொடும் எண்ணம் எல்லாம் எனக்கில்லை, புரிந்ததா?

"எனக்கு பேட் தேவை."

"ஓஓ, பேட்ஸ், சரி சரி, நிஜம்தான், சரி, பேட்ஸ்...ஓகே."

அவன் வெளியேறியதும், அறையின் வெளித்தாழ்ப்பாளைப் பூட்டினான் கட்டூஸோ.

—

உணவையும், மாதவிடாய்க்கான பேட்ஸையும் மாடிக்கு எடுத்துச் சென்ற கட்டூஸோ திரும்பி வந்து அந்தப் பெண் ரெஸாவை வரச் சொல்வதாக அறிவித்தான். மருந்துக்கடை சென்று திரும்பி வந்தும், ஜன்னலுக்குக் கீழே காலை நீட்டி அமர்ந்துகொண்டு, வீட்டுக் கூரையின் மீது வரையப்பட்டிருந்த அழகான பூ வேலைப்பாடு வடிவங்களை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தான் ரெஸா. பேட் வாங்க வெளியே சென்றவன், ஜபியின் புறநகலிருக்கும் இந்த மாளிகையை, அவர்களின் தற்போதைய செயல்தளத்தை நன்கு ஆராய்ந்தான். அவனுக்கு நிம்மதியாக சுவாசிக்கவும், கொதிக்கும் மண்டையை குளிரவைக்கவும் ஒரு இடம் தேவைப்பட்டது. மருந்துக்கடையில் சானிட்டரி பேட்ஸ் வேண்டும் என்று சொல்ல மிகக் கூச்சப்பட்டான், ஆனால் நல்ல வேளையாக அங்கு பணிபுரிபவர் அந்த வேண்டுகோளை விசித்திரமானதாகக் கருதவில்லை என்று அறிந்தபோது நிம்மதியாக இருந்தது.

திரும்பி சாவதானமாக நடந்து வருகையில் அந்த நீண்ட பாதையில், மிகப் பெரிய பங்களாக்கள் வசிப்பாரற்று இருந்தன. சிலவற்றில் இன்னும் வேலை நடந்துகொண்டிருக்க, சில கட்டிடங்கள் வேலை முடிவுற்ற பின்னும் யாரும் குடியேறாமல் காலியாக இருந்தன. அந்த வீடுகளின் வடிவத்தைப் பார்த்தே, அது வசதி படைத்தவர்கள் வாழும் பகுதி என்று அவனுக்குப் புரிந்தது. முதல்முறையாக அவர்கள் தங்கியிருந்த கட்டிடத்திலிருந்து வெளியே வந்து பார்த்ததில், அடைத்து வைத்திருக்கும் அந்தப் பெண் வெளியே ஓடி வந்து எவ்வளவு சத்தமாகக் கூக்குரலிட்டாலும் காது கேட்கும் தொலைவில் ஆளரவம் இல்லையென்று மீண்டும் உறுதியாகப் புலப் பட்டது.

மாடிப்படி வளைவின் கீழ், அதன் கைப்பிடிக் கம்பிகளில் சாய்வாக நின்றுகொண்டு இவனையே கண்களில் எதிர்பார்ப்புடன் பார்த்துக் கொண்டிருந்த கட்டூஸோவை நோக்கினான்.

"எதற்காகக் கூப்பிடுகிறாள்? சனியன்."

"எனக்குத் தெரியாது. உயரமானவனை வரச் சொல் என்று மட்டும் சொன்னாள்"

"நான் இங்கில்லை என்று சொல்லி விடு."

ஆனால் மற்ற மூவரும், கண்கள் நிறையக் கேள்விகளோடு அவனைப் பார்த்துக்கொண்டிருப்பதை உணர்ந்தான். எழுந்து தன் கால் சட்டையிலிருந்த தூசியைத் தட்டிக்கொண்டவன் முகமூடியை அணிந்து கொண்டு, கட்டூஸோவைத் தாண்டி மாடிக்கு ஏறினான்.

கூரைத் தகடுகளால் வெளியிலிருந்து அடைத்து சீல் வைக்கப்பட்டிருந்த ஜன்னல் மீது சாய்ந்து நின்றுகொண்டிருந்தாள் அவள். அவளுடைய மென்மையான விரல்கள் கம்பிகளைப் பற்றிக் கொண்டிருந்தன.

அவளுக்கு என்ன தேவையென்று அவன் கேட்டான்.

"பேட்ஸ் வாங்கி வந்ததற்கு உனக்கு நன்றி சொல்கிறேன்." முகத்தை அவன் புறமாகத் திருப்பினாள்.

இந்தப் பெண்கள் ஏன் இந்த மாதிரி தேவையற்ற விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்று ஆச்சரியமாக இருந்தது.

"எனக்கு குளிப்பதற்கு தண்ணீர் வேண்டும்."

அவன் திரும்பிச் செல்ல எத்தனித்தான்.

"ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?"

அவளது ஆங்கிலம் எந்த விதமான செயற்கைப் பூச்சுமின்றி இயல்பாக இருந்தது. அவனிடம் போதைப்பொடி வாங்க தங்கள் காதலனோடு வரும் பல்கலைக்கழகப் பெண்கள், செயற்கையாக உடலை அசைத்தும், தலையை ஆட்டியும் வேண்டுமென்றே மூக்கில் பேசிக்கொண்டுத் திரிவார்கள். அவர்களைப் போல இவள் இல்லை எனத் தோன்றியது.

"என்ன நடக்கிறதென்று எனக்குத் தெரிந்து கொள்ளவேண்டும், தயவு செய்து சொல்."

அங்கே என்ன நடக்கிறது என்று அவனுக்கு மட்டும் எவ்வளவு தெரியும்?

"உன் வாயை மூடிக்கொண்டு சும்மா இருந்தால் போதும், உன்னை இங்கு கொல்லமாட்டோம்."

"நீ இதற்கு முன் பல மனிதர்களைக் கொன்றிருக்கிறாய் அல்லவா? அது உன் கண்களில் தெரிகிறது."

அவள் உருவம் இருளில் கரைந்து, அங்கிருக்கும் சுவர்கள் வீழ வீழப் பெருகும் இரவில் அவள் மறைந்து போவதைப் பார்த்துக் கொண்டிருப்பதைப் போல உணர்ந்தான். ஆறு வருடங்களுக்கு முன், அந்த இரவில் மைக் டூ கன்ஸ் (Mike Two Guns) அவன் மீது ஏறி நின்று தனது பணத்தைக் கேட்டு மிரட்டிக்கொண்டிருந்தான்.

முப்பத்தைந்து வயதில், அவனது உயரம், முறுக்கேறிப் புடைத்தெழும்

தசைகள், மற்றும் அவன் எப்போதும் அணிந்திருக்கும் சலவையே காணாத பழுப்பு நிறக் கோட்டுக்கடியில் பதுக்கி வைத்திருக்கும் கைத்துப்பாக்கியின் காரணமாகவும் மற்ற இளைஞர்களை அவன் முன் மிகவும் சிறுத்துப் போக வைத்து விட்டான் மைக் டூ கன்ஸ்.

அந்த ஏரியாவின் அனைத்து போதை வணிகத்திற்கும், அதைச் சிறு பையன்கள் மூலம் கைமாற்றி விடுவதற்கும், சரக்குக்காகச் சட்ட விரோதமான பொருட்களை முன் பணமாகப் பெறுவதற்கென்றுமாக மொத்த நடவடிக்கைகளுக்கும் அவன் ஒருவனைத்தான் அனைவரும் நாடவேண்டும்.பெரும்பாலான வேளைகளில் போதையில் தள்ளாடிக் கொண்டிருப்பான். அப்படி ஒரு முறை, கால் பந்து மைதானத்தில் அவன் அட்டிலி மரத்தடியில் கிடந்தபோது ரெஸா பார்த்துவிட்டான். கண்விழித்த மைக், தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த ரெஸாவைக் கவனித்தான். பின் அவன் தோள்களிலேயே சாய்ந்து தள்ளாடியபடி வீடு வரை நடந்தான். இதுவரை யாருக்குமே தன் வீடு இருக்குமிடத்தைச் சொன்னதில்லை மைக். எப்போதும் பின் வழியே தான் வந்து சேர்வான். சரக்கை ஒப்படைப்பதற்காக மரத்தின் பின்னாலிருந்தோ, சுவற்றின் பின்னாலிருந்தோ குதிப்பான், அதே போல மீண்டும் குதித்துச் சென்று நிழல்களில் மறைந்துவிடுவான். அனைவரும் அதைக் கவனிக்கத் தவறியதே இல்லை.

அதன் பின் மைக் டூகன்ஸ் அவனைக் கஞ்சா விற்பனையாளர்களிடம் சரக்கு வாங்கவும், கொடுக்க வேண்டிய நேரத்தில் பணம் கொடுக்கத் தவறும் இளைஞர்களை மிரட்டவும் அனுப்ப ஆரம்பித்தபோது ரெஸா உற்சாகமாக இருந்தான். எத்தனை பணம் பாக்கி வைத்திருந்தார்களோ தெரியவில்லை பாவம், டூ கன்ஸுக்கு எப்போது வேண்டுமோ அப்போதெல்லாம் அந்த இளைஞர்களிடம் பணம் கறக்கவேண்டும். எப்போதும் டூ கன்ஸுக்குப் பணத்தேவை இருந்துகொண்டே இருக்கும். தீராத கடனில் இருப்பான். யார் யாரிடம்கடன்வாங்கியிருக்கிறான், எத்தனைகடன்பாக்கி வைத்திருக்கிறான் என்று ஒருவருக்கும் தெரியாது.

பைத்தியகாரத்தனமான கோரிக்கைகளை வைக்க ஆரம்பித்தான் டூ கன்ஸ். ரெஸாவையும் அவன் விட்டுவைக்கவில்லை. ரெஸாவால் பணம் கொடுக்க இயலாதபோது, அவன் நெஞ்சில் பலமாகக் குத்துவிட்டு, முகத்தின் மீது புகையை ஊதுவான்.

"இங்கே பார் ரெஸா, என்ன செய்வாயோ தெரியாது, உன்னுடைய அம்மாவையே விற்கவேண்டி வந்தாலும், விற்று என்னுடைய பணத்தைக் கொண்டு வந்துகொடு. இல்லையென்றால், உன்னை சிதைத்து விடுவேன்,

காதில் விழுந்ததா?"

ஏதாவது கொடுத்தே ஆக வேண்டுமென்று ரெஸாவுக்குத் தெரிந்தது.

ஒரு முழு நிலவு இரவில், போதையிலும் மதுவிலும் மூழ்கியிருந்த மைக் டூ கன்ஸ், பாடியபடியே தன் வீட்டை நோக்கித் தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்றுகொண்டிருந்தான். அவனைப் பின் தொடர்ந்து வந்த ரெஸா அவர்கள் முதன்முதலாகச் சந்தித்த கால்பந்து மைதானத்தை அடைந்ததும், சட்டென்று பின்னாலிருந்து பாய்ந்து அவனை வளைத்துப்பிடித்தான். முதல் மூன்று குத்துகள் சரமாரியாக விழுந்தன. தன் வயிற்றிலிருந்து பீய்ச்சி அடிக்கும் குருதியைக் கண்டு அதிர்ச்சியடைந்தான் டூ கன்ஸ்.

மூச்சிரைக்க நின்ற ரெஸா, ஒருவனைக் கத்தியால் குத்துவது எத்தனை எளிதாக இருக்கிறது என்று ஆச்சரியப்பட்டான். "ரெஸா" என்று அவனை அழைப்பது வேடிக்கைக்காக இல்லை, ஏனென்றால் அவன் கத்திகளால் கீறி பல முறை சண்டையிட்டிருக்கிறான். ஆனால் இதுவரை யாரையும் குத்தியது இல்லை. திரைப்படங்களில் காண்பிப்பது போல டூ கன்ஸ் அப்படியே தரையில் வீழ்ந்து உயிரை விட்டுவிடுவான் என்று நினைத்தான். ஆனால் அவன் தள்ளாடிக் கொண்டே முன்னே வந்து ரெஸாவின் சட்டைக் காலரைப் பிடித்தான். ரெஸாவுக்கு மூச்சுத் திணறியது. தன்னுள் எழுந்த பயத்தை அடக்கிக்கொண்டே, சட்டையில் பற்றியிருந்த பிடியை இளக்க முயற்சி செய்தான். ஆனால் டூ கன்ஸ், பலவீனமான நிலையில் வேறெதுவும் செய்ய இயலாதவனாக இருந்தாலும் சட்டையை இறுக்கமாகப் பிடித்திருந்தான். நிலவொளி பட்டுப் பளபளத்த அவன் கண்ணீரையும் கடந்து, காயம் பட்டிருந்தவனின் கண்களில் மிதந்துகொண்டிருந்த கேள்விகளை ரெஸாவால் காணமுடிந்தது. அவன் இதற்கொரு முடிவு கட்டியே ஆக வேண்டும், இந்த ஊர் இளைஞர்களை ஆட்டிப்படைக்கும் இந்தக் கொடுங்கோன்மையை முறியடிக்க வேண்டும், இல்லையென்றால் அது அவனையும் சேர்த்து விழுங்கிவிடும். கத்தியின் பிடியை இறுகப்பற்றி மீண்டும் ஒரு முறை ஆழமாக இறக்கினான்.

"தயவு செய்து இறந்து விடு."

ரெஸாவின் கண்களிலிருந்து நீர் வழிந்தது. "இறந்து விடேன்."

வலியில் முனகிய டூ கன்ஸ் அவனை நெருக்கமாக இழுத்தபோது, மீண்டும் குத்தினான் ரெஸா, மீண்டும்...மீண்டும்...டூ கன்ஸ் தன் பிடி தளர்ந்து, மெல்ல சரிந்தவன் முதலில் முழங்கால் மடங்கி அமர்ந்து, அதன் பின் புழுதியின் மீது விழுந்து, பெருகிய அவன் குருதியிலேயே மூழ்கி, மூச்சு வாங்கினான்.

புழுதியில் விழுந்து இறந்து கொண்டிருப்பவனைப் பார்க்கையில் தன்னை பலமிக்கவனாக உணர்ந்தான் ரெஸா. கிடைப்பதற்கு சாத்தியமே இல்லை என்று எண்ணியிருந்த சுதந்திரம் கிட்டியதை முழுதாக உணர்ந்தான்.

நடந்த முடிந்த விஷயத்தைப் பற்றி அவன் யாரிடமும் சொல்லவோ, பிற்றிக் கொள்ளவோ இல்லை. ஆனால், மறு நாள் காலையில் டூ கன்ஸின் உயிரற்ற உடலை மைதானத்தில் கண்ட பொழுது, இளைஞர்கள் அனைவரும் ரெஸாவின் கண்களைப் பார்த்தவுடனேயே அவன் தான் டூ கன்ஸின் அடக்குமுறையிலிருந்து அவர்களுக்கு விடுதலை வாங்கித் தந்திருக்கிறான் என்று அறிந்துகொண்டார்கள். ஒரு புதிய தலைவன் உருவாகி அவன் சான் சிரோவில் வசிக்கத் தொடங்கினான். ஒவ்வொருவராக வந்து, அவனுக்குக் குண்டர்கள் வழங்கும் வணக்கத்தைத் தெரிவித்தனர்...வலது கை முட்டியை இடது உள்ளங்கையில் குத்தி, மரியாதையுடன் தலை வணங்கிச் சென்றனர்.

போதைப் பொருள் சந்தையை அவன் கையாளத் தொடங்கினான். ஆனால் கொகெய்ன் மற்றும் மது அருந்துவதையும் தவிர்த்துவிட்டான். டூ கன்ஸைப் பலவீனமாக்கியது போல அது தன்னையும் பலவீனமாக்கி விடும் என் நினைத்தான். அவன் மற்றவர்களை விட மாறுபட்டவனாக அதாவது தொழில் நடத்துவதில் சற்று வித்தியாசமானவனாக இருக்க முற்பட்டான். போலீஸுக்குப் பயந்து வாழ விருப்பப்படவில்லை ரெஸா. அதனால் அவர்களுடன் ஒரு சமாதான ஏற்பாடு செய்து கொண்டான். இது போன்ற சில சின்னச் சின்ன முடிவுகள் அவனை தனித்துக்காட்டின.

சில வேளைகளில், டூ கன்ஸின் கண்களிலிருந்து பிரிந்து செல்லும் உயிரும், முதல் முதல் சில குத்துகள் வாங்கிய பின் அதே கண்களில் தெரிந்த துரோகத்தின் அதிர்ச்சியும் ரெஸாவின் பார்வையில் காட்சிகளாக விரியும். அந்தக் கடைசி நிமிடங்களில், டூ கன்ஸின் பலவீனத்தை தான் எவ்வளவு வெறுத்தோம் என்பதையும் நினைவுறுத்திப் பார்ப்பான். அதன் பின் ஒவ்வொரு முறையும் யாரோ ஒருவரை, இவன் கத்திக் குத்து வாங்கத்தான் லாயக்கானவன் என்று முடிவு செய்து அவன் உடலில் கத்தியைச் செருகும் போதெல்லாம், முதல்முறை அதைச் செய்கையில் ஏற்பட்ட அதே மகிழ்வை உணர்வான். டூ கன்ஸ் நிலத்தில் புழுதியில் விழுந்ததைப் பார்த்த போதும், அவன் மூச்சுத் திணறும் ஓசையைக் கேட்டபோதும் , கண்களில் நீர் வழிய அனுபவித்த மனநிறைவு மிக நீண்ட இரவுகளுக்குள் அமிழ்ந்து மங்கிப் போனது.

"என்ன, அப்படித்தானே?"

அந்தப் பெண்ணின் குரல் அவனது நினைவோட்டத்தைத் தடை செய்தது. அவனை மிகுந்த எதிர்பார்ப்புடன் நோக்கிக்கொண்டிருந்தாள்.

அவளது கூந்தலை, அளவான முலைகளை, ஒயிலான இடையைப் பார்த்தான் ரெஸா,

"ஒருவரைக் கொல்வதில் ரசிக்கத்தக்கதானது எதுவுமே இல்லை."

அவள் நிமிர்ந்து பார்த்தபோது, சில கணங்கள் அவர்கள் கண்கள் சந்தித்துக்கொண்டன. உடனே விழிகளைத் தாழ்த்திக்கொண்டாள்.

திரும்பி நடந்தவன் அறையை விட்டு நீங்கிச்சென்றான். வெளிக் கதவைத் தாழிட்ட பிறகு, சட்டைப் பையிலிருந்த அலைபேசியைக் கையில் எடுத்தான்.

—

23

”மேகம் கறுப்பதைக் கண்டவுடன் பானைத் தண்ணீரை வீசியெறிதல் கூடாது”

பிந்த்தாவின் கழுத்தில் இருந்த தங்கச் நெக்லஸ் பளபளவென எடுப்பாக மின்னியது. கண்ணாடியைப் பார்த்து சோகமாக முறுவலித்தவள், அதன் முகப்பை எடுத்து ஆள்காட்டி விரலுக்கும் கட்டை விரலுக்கும் நடுவில் வைத்து வருடிக்கொண்டிருந்தாள்.

“ஹஸன், இதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது”

பின்னாலிருந்து அவளைச் சுற்றிக் கைகளைப் போட்டு இறுக அணைத்துக்கொண்டான்.

“உனக்குப் பிடிக்கவில்லையா இது?”

“இல்லையில்லை, எனக்குப் பிடித்திருக்கிறது, ஆனால் இதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது”

“இதை நீ வைத்துக் கொள்ள வேண்டுமென்று நான் விருப்பப் படுகிறேன். முதல் தடவை உன்னைப் பார்த்தபோது எடுத்துக் கொண்டேனே, அதற்குப் பதிலாக...”

“ஒஓ , அப்போ இது ஒரு வகைக் கைமாறா?”

”ஆமாம். உனக்குப் பிடித்திருந்தால்...”

“ஆனால், என்னுடைய நகையை விட இது விலை அதிகமானது.”

அவளை இறுக அணைத்துக் கொண்டபோது, அவள் தலையை உயர்த்திச் சிரித்தாள். அவளைத் தூக்கிப் படுக்கையில் கிடத்தியவன்

அவளது இடுப்புச் சுற்றாடையை அகற்றி வேறிடத்தில் வைத்துவிட்டு, அவள் இடுப்பில் கைகளை ஓடவிட்டான். அவள் தலைமுடிப் பின்னலில் கையை வைத்தபோது அது லைலாவுடையது போல பட்டுப்போல இல்லாமலிருந்தது சட்டென ஒரு வித ஏமாற்றத்தை அளித்தது. அவள் மீதிலிருந்து இறங்கினான். ஆனால் பிந்த்தா அவன் மீது படர்ந்து முத்தமிட்டாள். எப்போதும் போல அவன் உற்சாகத்துடன் இல்லை என்று அறிந்த பிந்த்தா, சரிந்து அவனுடைய ஒல்லியான தேகத்தின் பக்கவாட்டுப் புறமாகப் படுத்துக்கொண்டு கேள்விக்குறியுடன் அவனை நோக்கினாள். அவளது தொங்கிப்போன முலைகளில் பார்வையைப் பதித்தவன், முதல் முறையாக, தான் அவளுடன் என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்று வியந்தான்.

நிமிர்ந்து ஏமாற்றம் தேங்கியிருந்த அவள் கண்களைப் பார்த்தவன், அவளைக் குப்புறத் திருப்பி விட்டான். அவனை ஆராய்வது போல் தோன்றிய அவள் பார்வை சங்கடப்படுத்தியது. அவளை முதுகுப்புறமாகவே அணைத்துக்கொண்டான். அப்படியே உறவு கொண்டார்கள் இருவரும். துவக்கத்தில் ஈடுபாடு இல்லாமல் இருந்த போதும், பிந்த்தா எழுப்பிய உணர்ச்சி மிகுந்த முனகல்கள் அவனை உற்சாகப்படுத்த உத்வேகத்துடன் இயங்கினான்.

உறவு முடிந்தும் அவனருகில் படுத்துக் கொண்டு, அவன் தலையிலுள்ள எறும்புப் புற்று முடிகளுடன் விளையாடிக் கொண்டிருந்தாள் பிந்த்தா.

"இன்று என்னுடைய மதரஸா வகுப்பை உன்னால் தவற விட்டு விட்டேன்."

"மன்னித்து விடு."

கழுத்தாரம் பரிசளித்ததற்கு நன்றி சொன்னாள். அவன் சிரித்துக் கொண்டே அவளுடைய உடலின் மீது விரல்களால் மேலுல் கீழும் அளைந்து கொண்டிருந்தான்.

"எனக்கு நேற்றே உன்னைப் பார்க்க வேண்டும் போல இருந்தது."

"எனக்குத் தெரியும். என் மகனைப் பார்க்கப்போயிருந்தேன். குடும்பத்துடன் மைத்தாமாவில் வசிக்கிறான்."

"ஓஹ, உன்னைக் கைப்பிடிக்க வேண்டுமென்றால் அவனிடம்தான் போய் கேட்கவேண்டுமா?" வாய் விட்டு சிரித்தான் ரெஸா.

பிந்த்தாவும் உடன் சிரித்தாள். அந்தச் சிரிப்பு தொடர்ந்து முடிவில்

வெறுமையில் அமிழ்ந்து நீர்த்துப் போனது. இதற்கு முன் அவனுக்கு அப்படி ஒரு எண்ணம் இருப்பதாக அவளுக்குத் தோன்றியதே இல்லை. அவன் கண்களைப் பார்த்தபோது நகைச்சுவையாகப் பேசுகிறான் என்று புரிந்தது. செல்லமாக அவன் தோளில் அடித்தாள்.

"உன்னுடைய இந்தத் தலைமுடியைப் பார்த்தவுடனேயே சுட்டு விடுவான் தெரியுமா?"

தன் தலைமுடியைக் கையால் கோதியவன் மேலும் சிரித்தான். அவன் சிரிப்பில் ஏதோ மனஅழுத்தம் இருப்பதாக நினைத்தாள் பிந்த்தா.

'நீ எப்போதாவது காதல் வயப்பட்டிருக்கிறாயா?" சட்டென அவளிடமிருந்து அந்தக் கேள்வி வந்துவிட்டதை உணர்ந்தவள், ஏன் இப்படிக் கேட்கிறோம் என்று தனக்குள் ஆச்சரியப் பட்டாள்.

"காதல்? ஹ ஹா!"

"நீ நிச்சயமாகக் காதலித்திருக்க வேண்டும். உன்னைப் போன்ற இளம் வயதுக்காரர்களுக்கு அந்த வசதி இருக்கிறது."

சற்று நேரம் யோசித்தான். "ஒரு பெண் இருந்தாள்.முன்பு. அப்போது நான் சிறு பையன், மேல்நிலைக் கல்வியில் இருந்தபோது...வீட்டுக்குச் செல்லும்போது சேர்ந்தே நடப்போம். அவள் அழகாக, கொஞ்சம் குண்டாக இருப்பாள், புரிகிறதா?"

"அவளுக்கு என்னவானது?"

"தெரியவில்லை. ஒரு பணக்காரன் வந்ததும் அவள் பெற்றோர்கள் அவனுக்கு மணம் செய்து தந்துவிட்டார்கள். அடுத்த முறை அவளைப் பார்த்தபோது, ஒரு குழந்தையைக் கையில் சுமந்துகொண்டிருந்தாள்.

"ரெஸா, என்னுடைய இந்த லட்சணமில்லாத குழந்தையைப் பார், நீ தகப்பனாக இருந்திருந்தால், இந்தக் குழந்தை அழகாகப் பிறந்திருக்கும்" என்று புலம்பினாள்.

அவனுடைய நெஞ்சைத் தட்டிக்கொண்டு நகைத்தாள் பிந்த்தா.

அவன் எழுந்து அமர்ந்து, கையோடு கொண்டு வந்திருந்த பையை எடுத்துப் பிரித்தான். அதிலிருந்து, இரண்டு சாப்பாட்டுப் பொட்டலங்கள், கோழிக்கறி, ஒரு பாக்கெட் பழரசம் இருந்தன. அவற்றையெல்லாம் அங்குள்ள சிறிய மேசையில் பிரித்து அடுக்கி, படுக்கைக்கு அருகில் மேசையை இழுத்துக்கொண்டான்.

"கொஞ்சம் கோழிக் கறி சாப்பிடு."

பிந்த்தா எழுந்து அமர்ந்தாள்.

"உன் இதயம் உடைந்து விட்டதா? அதாவது, அந்தப் பெண்ணிற்குத் திருமணமான போது?"

"அப்படியென்றுதான் நினைக்கிறேன். ஊரை விட்டு ஓடிவிட வேண்டும் போல இருந்தது" சாப்பிட ஆரம்பித்தான்.

"அதனால் தான் நீ வீட்டை விட்டு ஓடி வந்தாயா?" அவனது ஆழ்மனதை, அவனுக்கே உரிய தனிப்பட்ட நினைவுகள் பூட்டி வைக்கப் பட்டிருக்கும் இருண்ட அறையை நெருங்குகிறோம் என அவளுக்குப் புரிந்தது.

"இல்லை, இல்லை..." அவன் வாய் முழுவதும் உணவை நிரப்பி இருந்தான். அவன் விழுங்கும் வரை அவள் காத்திருக்க வேண்டியிருந்தது,

"என்னவாயிற்று?"

புகை போன்ற கடந்த கால நினைவுகளை வெறித்து நோக்கினான்.

"அப்போது எனக்கு பதினேழு வயதென்று நினைக்கிறேன், சரியாக நினைவில்லை, அவன் குரல் தொலைவிலிருந்து ஒலிப்பது போல இருந்தது. முந்தைய இரவில் டோப் அடித்திருந்ததால், காலையிலும் அதன் மயக்கத்தில் படுத்திருந்தேன். அப்போது, அந்த இரண்டு பெண்களும், அதுதான் என் அப்பாவின் மனைவிகள், அவளைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டார்கள். அந்தப் பெண்...சவூதியிலிருந்து வந்தவுடன் கிளம்பி விட்டாள். அப்புறம் அவள் சவூதியில் என்னவெல்லாம் செய்து கொண்டிருப்பாள் என்று பேச ஆரம்பித்து விட்டார்கள். எந்த மாதிரி என்று புரிகிறதா...என்னவெல்லாமோ கெட்ட பெயர்கள் சொல்லி அவளைத் திட்டினார்கள். அதன் பிறகு நான் எவ்வளவு உபயோகமில்லாதவனாக சுற்றிக் கொண்டிருக்கிறேன் என்றெல்லாம் பேசிக்கொண்டிருந்தார்கள்."

"நான் உடனே எழுந்து வெளியே வந்தேன்."

பேச்சை சற்று நேரம் நிறுத்தி ஒரு வாய் நீர் அருந்தினான்.

"என்னைப் பார்த்தும் அவர்கள் திறந்த வாய் மூடவில்லை. நான் அப்படியே வெளியேறிவிட்டேன்"

அங்கே நீண்டு கொண்டிருந்த அமைதியைக் குலைத்து, அடுத்து என்ன நடந்தது என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை, அப்படியே வெளியே வந்துவிட்டேன்."

"அப்போது நான் பெரிதாக ஒன்றும் செய்து கொண்டிருக்கவில்லை. ஒரு கார் அந்த வழியாக வந்தது. அதில் ஏறி இங்கு வந்துவிட்டேன். என்ன செய்யப் போகிறேன் என்று எந்த யோசனையும் இல்லை. அப்படியே வந்து விட்டேன்" அவனுடைய முதுகைத் தட்டிக்கொடுத்து அவன் மீது சாய்ந்து கொண்டாள். அந்த உணர்வு எப்படி இருக்கும் என்று பல சமயங்களில் நினைத்து வியந்து போவாள். எந்த முன்னேற்பாடுகளுமின்றி, அப்படியே கதவைத் திறந்து வெளியேறிச் செல்வது. பறவையொன்று கூண்டிலிருந்து தப்பிச் செல்வதைப் போல. அப்படிச் சென்றுவிட வேண்டுமென்று அவ்வப்போது உணர்ந்ததுண்டு. ஆனால் மனவலிமை போதாமையால் அந்த எண்ணத்தைக் கைவிட்டு விடுவாள். அவனுடைய முதுகில் தலை சரித்து அமர்ந்திருக்கும் அந்த வேளையிலும் அப்படித்தான் உணர்ந்தாள். அர்த்தமற்ற கற்பனையாயினும், அவனுடன் வெளியேறி, எந்த விதமான சமூக நிர்ப்பந்தங்களுமற்ற, குடும்பப் பொறுப்புகளற்ற வேறொரு மாய உலகத்துக்குச் சென்று, தடைகளேதுமின்றி அன்பு செய்துகொண்டே வாழ்ந்து விடலாம் என்று மனதில் தோன்றியது. ஆனால் அது சாத்தியமில்லை என்பது அவளுக்குத் தெரியும். ஏனென்றால், நீண்ட வாழ்நாட்காலம் அவன் முன்னே காத்திருக்கிறது. தவிர்க்க முடியாத இழப்புக்கு, அவளிடம் அவன் சலிப்படையப் போகும் அந்த நாளுக்கு அவள் தயாராகத்தான் வேண்டும். பெருமூச்சுடன் படுக்கையில் விழுந்தாள்.

பெரிய துண்டு மாமிசத்தைப் பிய்த்தான் ரெஸா.

"வா, இப்போது எல்லாமே நன்றாகத்தான் இருக்கிறது. வா, சாப்பிடலாம்."

சோகமாகப் புன்னகைத்தவள் அவனுடன் இணைந்து கொள்ள எழுந்தாள்.

அவள் மிக சொற்பமாக உண்டதை அவன் கவனிக்கவே இல்லை. சாப்பிட்டு முடித்ததும், தனது பையைத் திறந்து கத்தை கத்தையாக பணக் கட்டுகளை எடுத்தான். அவள் பாதி உண்ட கோழிக்கறித் துண்டைக் கையில் வைத்தவாறு அவனையே விழித்துப் பார்த்துக்கொண்டிருக்க, அந்தக் கட்டுகளை ஒன்றன் பின் ஒன்றாக மேசையின் மீது வைத்தான்.

"எங்கிருந்து கிடைத்து இது?"

அவளது ஆச்சரியத்தைக் கண்டு பரவசமடைந்தவன் போல அவன் சிரித்த சிரிப்பு அறையெங்கும் எதிரொலித்தபோது அதில் பெருமை பொங்கும் ஒரு சுயதிருப்தி இணைந்திருந்தது. இதற்கு முன்பு அது போன்ற சிரிப்பை முன்க்கைலாவிடம் மட்டுமே கண்டிருந்தாள்.

"எனக்காக இதை நீ வைத்திருக்க வேண்டும்"

"இவ்வளவு பணம் எங்கிருந்து வந்தது? திருடினாயா?"

ஹே! பதட்டப்படாதே, என் முதலாளிக்காக நான் ஒரு வேலை பார்க்கப் போகிறேனென்று சொல்லியிருந்தேன் அல்லவா, அதற்கான முன்பணம் தான் இது."

"முன்பணம்! என்ன மாதிரியான வேலை இது?" கையிலிருந்த மாமிசத்தைக் கீழே போட்டாள். அவன் கண்களில் கோபம் எட்டிப் பார்ப்பதை அறிந்தாள். ஆனால் அவளும் மோதுவதற்குத் தயாரான மன நிலையில் இருந்தாள்.

"நீ என்னுடைய அம்மா இல்லை தெரியுமா?"

அமைதியாக ஆனால் திடமாக ஒலித்தது அவன் குரல்.

"ஓஓ, இப்போது என்ன சொல்ல வருகிறாய்?"

"ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை, பணக் கற்றைகளை மீண்டும் பையினுள் தள்ளினான். என்னைப் பற்றி எப்படி வேண்டுமானாலும் நீ மதிப்பிடுவதை அனுமதிக்கமாட்டேன்."

"நான் ஒன்றும் மதிப்பிடவில்லை, கேள்விகள் தானே கேட்கிறேன்?"

அவன் துள்ளியபடி எழுந்தான். "நீ ஏன் கேள்விகள் கேட்க வேண்டும்? ஏன்?"

கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருப்பதால் அவனுடைய வலுவான தசைகள் துடிப்பதைக் கண்டாள். எதுவும் பேசாமல் அவளுடைய பொருட்களை சேகரம் செய்ய ஆரம்பித்தாள். கண்ணாடி முன் நின்று இடுப்புச் சுற்றாடையைக் கட்டி, உடைகளை சரி செய்தபோது கழுத்தில் மின்னும் பொருள் கண்களில் பட்டது. அந்த நெக்லஸைக் கழற்றி மேசையின் மீது வைத்தாள். அவளை வலுவாகப் பற்றித் தன் புறமாக அவன் சுழற்றியதை அவள் உணர்ந்தபோது, அவனது ஓங்கிய கைகள் அவளை அடிப்பதற்குத் தயாராக இருந்தது.

அந்தக் கணம் பயங்கரமான உருவம் போல உறைந்து நின்றது. அவளை நோக்கி, கரங்களை ஓங்கிக்கொண்டு, அடிப்பதற்கு சில வினாடிகள் இடைவெளியில், கண்களில் கோபமும், உறுதியும் நிரம்ப முகத்தின் தசை நார்கள் அதிர நின்றான் ரெஸா. அதிர்ச்சியும் திகைப்பும் கொண்டு அவனை எதிர்நோக்கிய அவள் பார்வை மேலும் அச்சமூட்டுவதாக இருந்தது.

கரங்களைத் தாழ்த்திக்கொண்டு அவளிடமிருந்து அவன் நகர்ந்த

போது, ஏறத்தாழ அவன் அறையவே வந்துவிட்ட தன் கன்னங்களின் மீது கையை வைத்துத் தொட்டுப்பார்த்தாள். அது எப்பேர்ப்பட்ட வலியை அவளுக்கு விளைவித்திருக்கும் என்றும், அவளுடைய சுய மரியாதையின் மீது எவ்வளவு பெரிய வடு ஏற்படுத்தி இருக்கும் என்றும் அவளால் கற்பனை செய்யமுடிந்தது. அனைத்துக்கும் மேலாக, படபடவென அடித்துக்கொண்டிருக்கும் அவள் இதயத் துடிப்புகளினூடே, அவர்கள் கட்டிவைத்திருந்த அழகான கூட்டை, அவர்கள் பெயரிட மறுக்கும் ஆசைகளாலும், பல வித உணர்வுகளாலும் அழகுபடுத்தி வைத்திருந்த அந்தக் கூட்டை உலுக்கிய அச்சுறுத்தலை அவளால் உணர முடிந்தது.

—

தனது ரகசிய நோட்டுப் புத்தகத்தில் சீற்றத்துடன் கோடுகளைக் கிழித்துக் கொண்டிருந்த ஃபைஸாவின் மனப்போராட்டத்தை ஹுரைராவால் புரிந்து கொள்ள முடியவில்லை. பள்ளியிலிருந்து திரும்பியதும் சீருடையைக் கூடக் களையாமல் நோட்டுப் புத்தகத்தை எடுத்து வரையத் தொடங்கி விட்டாள். புருவங்கள் நெளிய, பேனாவை இறுகப்பற்றியிருந்து விரல்கள். ஆனால், சாத்தான் திடீரென உடலை வசப்படுத்தும்போது இப்படியான சங்கேதங்களின் மூலமாகத்தான் தன்னை வெளிப்படுத்தும் என்று ஹுரைரா நம்பினாள். ஏதோ ஒரு அமானுஷ்ய சக்திக்கு தன் உடலை ஒப்புதல் கொடுத்து விடும் அபாயத்திற்கு சற்றும் இடம் தர விரும்பாமல் ஃபைஸாவின் பார்வையிலிருந்து நகர்ந்து முன் வாயில் முற்றத்தில் ஹதீஸா நட்டு வைத்திருந்த பெட்டூனியா செடிகளுக்கு அருகே அமர்ந்து நகங்களை வெட்டத் தொடங்கினாள்.

அவள் அமர்ந்திருக்கையில், குள்ள சகோதரிகள் இருவரும் உள்ளே நுழைந்தனர். ஆபிதா பொன்னிறத்திலும், கரீமா அந்திச் சூரியனின் ஆரஞ்சு வண்ணத்திலும் பூப்போட்ட நீண்ட சுற்றாடையை அணிந்திருந்தனர். அவர்களின் இடுப்பு அசைவுக்கேற்ப முகத்திரையின் நுனி பின்னால் தரையில் தோய்ந்து நடைக்கேற்ற தாளம் போல் அசைந்தது.

"ஹுரைரா அத்தை" இருவரின் அழைப்பும் கூட சேர்ந்திசை போல ஒலித்தது.

புன்னகைத்தவாறு, ஆபிதாவின் கையிலிருந்த புத்தகங்களை வாங்கி அதன் அட்டைப்படங்களை ஆராய்ந்துவிட்டுப் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தாள் ஹுரைரா. பின் ஒரு புத்தகத்தை எடுத்துத் தன் பக்கமாக வைத்துக் கொண்டாள்.

"இதை நான் வாசிக்கப் போகிறேன்."

இரு பெண்களும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். சிறு தயக்கத்திற்குப் பின் தலையாட்டி சம்மதம் தெரிவித்தனர். ஃபைஸா விசித்திரமாக நடந்து கொள்வதைப் பற்றி அவள் பேச ஆரம்பித்ததும் ஏதோ சொல்லி இருவரும் உள்ளே நழுவி விட்டனர்.

அவர்களைப் பார்த்ததும் ஓவியம் வரைந்துகொண்டிருந்த நோட்டுப் புத்தகத்தை மறைக்கவும், மறுபுறம் திரும்பி தன் கண்ணீரைத் துடைத்துக் கொள்ளவும் ஒரு சேர முயற்சித்தாள் ஃபைஸா. ஆபிதாதான் என்ன நடந்ததென்று அவளிடம் கேட்டாள்.

சுவருக்கெதிராக மிகவும் சாந்தமான முகபாவனையுடன் அமர்ந்து கொண்டு அந்தப் பெண்களை நிமிர்ந்து பார்த்தாள்.

"அப்புறம், எனக்கு என்ன புத்தகங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள்?"

புத்தகங்களை வாங்கி உற்சாகமில்லாமல் பார்த்தவள் ,ஹுரைரா ஒரு புத்தகத்தைக் கவர்ந்து கொண்டாள் என்பதை அறிந்து மேலும் சலிப்புற்றாள். அந்தப் புத்தகத்தை வாசிக்கத்தான் அவள் மிகுந்த விருப்பம் கொண்டிருந்தாள். ஏதும் பேசாமல் தோளைக் குலுக்கிக் கொண்டாள்.

"அவள் முழங்காலைத் தட்டி, கவலைப்படாதே, இந்தப் புத்தகங்களும் உனக்குப் பிடிக்கும்" என்றாள் கரீமா.

"நிச்சயமாக.." எழுந்து போய் கண்ணாடியின் முன் நின்று, தன் கன்னங்களைத் தட்டிக்கொண்டிருந்தாள் ஆபிதா.

"உன் பெரியம்மா எங்கே, காணோம்?"

"பெரியம்மாவா? எங்காவது வெளியே சென்றிருப்பார், எனக்குத் தெரியாது"

"ஹ்ம்ம்ம்ம்ம்"

"என்ன விஷயம்?"

"ஒன்றுமில்லையே" ஆபிதாவின் சிரிப்பு எதையோ உணர்த்துவது போலிருந்தது அவளுக்கே தெரிந்தது.

"இல்லை, உண்மையாகவே ஒன்றுமில்லை"

"என்னிடம் எதை மறைக்கிறீர்கள்?"

சின்ன விஷயங்கள் கூட ஃபைஸாவின் மனதைப் பாதித்து ஏதேதோ கற்பனைகளை உருவாக்குவதை மீண்டும் ஒரு முறை குள்ள சகோதரிகள்

கவனித்தார்கள்.

ஆபிதா அவள் கரங்களை வாஞ்சையுடன் பற்றிக்கொண்டாள். "ஆமின், என்னவாயிற்று உனக்கு?"

"எனக்கு? ஒன்றுமில்லை."

"இல்லை, உனக்கு ஏதோ ஆகிவிட்டது, நீ விசித்திரமாக நடந்து கொள்கிறாய்." கரீமாவின் குரலில் எள்ளல் தொனித்தது.

"நிச்சயமாக, சர்வநிச்சயமாக" ஆபிதா இசை பாடினாள்.

"விசித்திரமாக நடந்து கொள்கிறேனா? எனக்குத் தெரியவில்லை" ஆனால் அதைச் சொல்லும் பொழுதே அவள் குரல் உடைந்து தேம்பியது. ஆபிதா அவள் தோளைச் சுற்றி ஆதுரமாகக் கரங்களைப் போட்ட போது அவள் மீது சாய்ந்துகொண்டாள் ஃபைஸா. அப்போது பக்கத்து வீட்டுக் குழந்தைகளுடன் விளையாடி விட்டு, தன் பொம்மையைக் கையிலேந்தியபடி ஓடி வந்த உம்மி, கண்ணீருடன் அமர்ந்திருந்த ஃபைஸாவையும், அவளின் இருபுறமும் இறுகிய முகத்துடன்துணையிருந்த குள்ள சகோதரிகளையும் பார்த்தாள்.

"என் அக்காவை ஏன் அடிக்கறீங்க?"

சகோதரிகள் இருவரும் சிரித்தனர். கண்ணீரினூடே ஃபைஸாவும் புன்னகைத்தாள்.

"அவர்கள் என்னை அடிக்கவில்லை, ஏதேதோ பேசாதே போ."

ஆனால் அதற்குள் தன் அன்னைக்கு விஷயத்தைச் சொல்லப் பறந்து விட்டாள் உம்மி. அவசரமாக உள்ளே ஓடி வந்த ஹுரைரா, பெண்கள் மூவரும் சிரித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

தன் மகள் பக்கம் திரும்பினாள்.

"ஏ, முட்டாள் பெண்ணே, இப்படித்தான் ஒருவரை அடிப்பார்களா, என்ன?" கோபத்துடன் சத்தமிட்டுக்கொண்டே மீண்டும் முற்றத்துக்குச் சென்று விட்டாள்.

படுக்கையில் நீட்டிப் படுத்துக்கொண்டே, ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தாள் கரீமா. ஏதோ சொல்லத் துடிக்கிறாள் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. ஆபிதாவுக்குத் தெரிந்தது. அவளும் கவலையோடுதான் இருந்தாள்.

"ம்ம், ஹஜியாவுக்கும் ரெஸாவுக்கும் இடையில் என்ன நடக்கிறது?"

இறுதியில் கேட்டே விட்டாள் கரீமா.

"கரீ...மா!! "ஆபிதா கை கொட்டினாள்.

"ஹஜியா? ரெஸா? என்ன சொல்கிறாய் நீ?

"அவனுடன் என்ன செய்துகொண்டிருக்கிறாள்?"

"அவனுடன்? எனக்குத் தெரியாது." வீட்டின் வாயிலின் முன் கிடந்த ஆண் மகனின் காலணிகளும், ரெஸாவின் காலடித்தடங்களும் மனப் பிம்பமாய் அலைமோதியதை ஒதுக்கித் தள்ளினாள்.

"ம்ம், அக்கம்பக்கத்தவர்கள் ஏதேதோ பேசிக்கொள்கிறார்கள், தெரியுமா?" ஃபைஸாவிடமிருந்து விலகி அமர்ந்தாள் ஆபிதா.

"ஏதேதோவா? என்ன விஷயம்?"

"ஆமாம், ஆமாம், ரெஸாவுடன் ஹஜியா சுற்றிக்கொண்டிருக்கும் விஷயம் தான்" அவள் நாவைக் கொத்திக் கொண்டிருப்பது போல் ரெஸாவின் பெயரைத் துப்பினாள் கரீமா.

"கரீ--------மா!"

"ஓஓ, வாயை மூடு ஆபிதா. மதரஸாவிலுள்ள பெண்கள் ஹஜியாவும், ரெஸாவும் ஷாகாலி ஹோட்டல் விடுதிக்கு ஒன்றாய்ச் செல்வதைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பது உனக்குத் தெரியாதா என்ன?"

ஃபைஸா வாயைப் பொத்திக்கொண்டாள். "ஓ, லாயில்லாஹ இல்ல ல்லாஹ்! கரீமா, உன்னால் இது போல எப்படிப் பேச முடிகிறது? "

"ஆபிதா, அவளிடம் சொல்."

ஆபிதா முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

"அவளிடம் சொல்லச் சொன்னேன் "

"எனக்குத் தெரியாத விஷயத்தை எப்படிச் சொல்வது?"

"சரி, அவளுக்கு சான்சிரோவைப் பற்றிச் சொல். நீ அங்கு போயிருந்தாய். நீ உன் கண்ணால் பார்த்தாய்."

"என்ன பார்த்தாய்? அங்கு என்ன பார்த்தாய்?"

"ம்ம், எனக்குத் தெரியவில்லை, ஹஜியாவை சான்சிரோவில் பார்த்தோம். விடியற்காலை நேரத்தில்."

"ஆமாம், ஆமாம்."

"ஆனால் எதற்காக அங்கு போயிருந்தார் என்று எங்களுக்குத் தெரியாது."

"ஓ பைத்தியகாரத்தனமாகப் பேசாதே ஆபிதா. நீ அவரை ரெஸாவுடன் சேர்த்துப் பார்க்கவில்லையா?"

"அதனால்?"

"அவர் சான்சிரோவுக்குப் போய்க் கொண்டிருந்தார், இப்போது அவனுடன் உல்லாசமாக இருக்க ஷாகாலிக்குப் போவதாக மதரஸாவின் பெண்கள் அனைவரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்."

சகோதரிகள் இருவரும் வாக்குவாதம் செய்துகொண்டிருக்கையில், அசையாமல் உறைந்துபோய் அமர்ந்திருந்தாள் ஃபைஸா. தன் முகத்தைப் பார்த்துக்கொள்ள கண்ணாடி முன் சென்று நின்றாள் கரீமா. ஃபைஸாவின் ஒப்பனைப் பெட்டியிலிருந்து லிப்ஸ்டிக்கை எடுத்தாள். அதன் வண்ணம் பிடிக்கவில்லையென்றாலும் உதடுகளில் பூசிக்கொண்டாள். கண் மையையும் மீண்டும் வரைந்தவள், இடுப்பில் கை வைத்தபடி நின்றாள்.

"சரி, வா போகலாம்" ஆபிதாவின் தோளைத் தட்டினாள் கரீமா, பிறகு வருகிறோம் என்று சொல்லி எழுந்தாள். முற்றத்தில் அமர்ந்தபடி , இடுப்பை அசைத்து அசைத்து அவர்கள் செல்வதைக் கவனித்துக்கொண்டிருந்த ஹுரைராவைக் கடந்து இருவரும் வெளியேறினார்கள்.

வாசல் கேட்டை அவர்கள் அடையும்முன், தனது துணிவான காரியத்தை முடித்துக்கொண்டு அப்போதுதான் வந்த பிந்த்தா, கேட்டை வெளிப்புறமிருந்து தள்ளித் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தாள். அவள் தங்களிடமிருந்து முகத்தைத் திருப்பிக்கொண்டு, சுவரில் ஒட்டிக் கொண்டிருந்த பல்லியைப் பார்ப்பது போல பாவனை செய்வதை இருவருமே கவனித்தார்கள்.

"ஸன்னு ஹஜியா" குரலில் வெறுப்புடன் முகமன் கூறினாள் கரீமா.

அந்தக் கரலில் ஒலித்த இகழ்ச்சியை சந்தேகமின்றிக் கண்டு கொண்டாள் ஹஜியா. அவள் முகபாவனையைப் பார்க்கவேண்டித் திரும்பினாள். லேசாக அவள் தோளை உரசியவாறு கடந்து சென்று கொண்டிருந்தார்கள் சகோதரிகள். அவர்களையே விழித்துப் பார்த்துக் கொண்டிருந்த பிந்தாவைக் கடக்கும் முன் சில நொடிகள் பணிவுடன் தயங்கி நின்று, பின் அகன்றாள் ஆபிதா.

அட!! இந்தப் பெண்கள்... கதவை மூடியவள், அவளுக்கு முகமன் கூறிய ஹுரைராவுக்கு வெறும் தலையாட்டலில் பதிலளித்துவிட்டு, அவசரமாக

உள்ளே சென்றாள். அறையினுள், தோளிலிருந்து தன் மேலங்கியை, கைப்பையுடன் வெடுக்கென இழுத்துக் கீழே வீசி விட்டுப் படுக்கையில் கவிழ்ந்து விழுந்தாள்.

மனதில் ரெஸாவின் முகம் வட்டமடித்துக் கொண்டிருந்தது. அவனது முகத்தில் இத்தனை சினத்தை அவள் இதுவரை பார்த்ததில்லை. அதிலிலிருந்த அச்சுறுத்தல் அவளை அதிர்ச்சிக்குத் தள்ளியிருந்தது. அவளை அவன் தாக்கியிருந்தால் அது அவள் முகத்தை மட்டுமல்ல, அவள் பெருமிதத்தை, அவள் சுய மரியாதையை, அவளது இதயத்தையும் சிதைத்திருக்கக் கூடும்.

அவன் நிலத்தில் மண்டியிட்டு மன்னிப்புக்காக மன்றாடியபோதும், அவளது காதருகில் கெஞ்சியபோதும், அவளை வலுவாக, பாதுகாப்பாக அணைத்துக் கொண்டபோதும், அவளை அடிக்கும் முன் தன்னை மாய்த்துக் கொள்வான் என்று சத்தியம் செய்ததையும், அவள் மன்னிக்காவிட்டால் உடனே தற்கொலை செய்துகொள்வேன் என்ற அவன் மிரட்டலையும் அவள் பொருட்படுத்தவே இல்லை.

அவன் கையால் அடி வாங்கவிருந்த கன்னத்தை, அறையிலிருந்து வெளியேறுகையில் அவன் முத்தமிட்ட அதே கன்னத்தைத் தொட்டுப் பார்த்தாள். சட்டென்று மிகக் களைப்பாக உணர்ந்தாள். தான் வலிமையாக இருப்பதற்காக, மனதில் நடுக்கமிருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் தைரியமாக எதிர்கொண்டு அவனைப் புறக்கணித்தற்காக. நடந்து முடிந்த அனைத்தும் அவளை மிகுந்த களைப்புக்கு உள்ளாக்கியது. படுக்கையில் படுத்தவளின் கண்களிலிருந்து வழியும் நீர், பக்கவாட்டில் இறங்கி, தலையணை உறையை நனைத்துக்கொண்டிருந்தது.

தொடர்பற்ற அவள் கனவுகளில், மின்மினிப் பூச்சிகள் தங்கள் மினுங்கும் ஒளியால் அவள் முகத்தை முத்தமிட்டு, இதயத்தை சிலிர்க்க வைத்தன. ஜன்னல்களில் பொருத்தியிருந்த கொசுவலையின் கிழிந்திருந்த ஓர் துளையின் வழியாக அவை ஒவ்வொன்றாக நுழைந்து, பின் அவள் உடல் முழுவதும் பரவி, உடலின் அத்தனை பாகங்களையும் மொய்த்துக் கொண்டிருந்தன. அவள் ஒரு ஒளி உருண்டையாகி கூரைக்கு ஒரு அடிக்குக் கீழே மிதந்து கொண்டிருந்தாள். பின் அவை தாழ்ந்து அவளது கைப் பையினுள் இறங்கி தீப்பிழம்பாகச் சிதறுகையில் அதனுள் பணத்தைப் பார்த்தாள். அதை எடுக்கப் போனவள் அப்படியே தரையில் மோதி விழுந்தாள்.

மூச்சு வாங்க எழுந்து அமர்ந்தவள் பையை எடுத்து, அதிலிருந்த பணக் கற்றைகளை ஒன்றன் பின் ஒன்றாக எடுத்தாள். ஐந்து கட்டுகள்.

அனைத்தையும் படுக்கை மீது வைத்தாள்.இரண்டரை லட்சம். நெக்லஸ் இருந்த கழுத்தை விரல்களால் தடவிப் பார்த்தாள். அவளுடைய வழிகாட்டுதல் தேவைப்படும் ஒரு நோக்கமற்ற துணிச்சலான இளைஞன் அவன். ஆனால் இனிமேல் அவளைத் தாக்க அவன் முயற்சி செய்தால் அவளும் ஏதோ ஒரு வகையில் அவனை நோகடிப்பாள். இப்போது, ஒரு வங்கிக் கணக்குத் துவங்க அவனை எப்படி சம்மதிக்க வைப்பது என்று யோசித்தாள். அவன் தன்னுடைய பொருட்களை, அனைத்து வகையான பொருட்களையும் இருப்பு வைக்கும் சேமிப்புப் பெட்டகமாக இருப்பது அவளுக்குப் பாதுகாப்பில்லை என்று அவள் உணர்ந்தாள்.

—

24

"விவேகமில்லாத குருடன்தான் வழிகாட்டியிடம் வாதம் செய்வான்"

அறையினுள் நுழைந்து கதவைத் தாழிட்ட ரெஸா, கருவில் மடங்கியிருக்கும் குழந்தை போல் அவள் பாயில் சுருண்டு கிடப்பதைப் பார்த்தான். அவள் முன்னால் சிறு கிண்ணத்தில் வைக்கப் பட்டிருந்த நூடுல்ஸ், ரொட்டித் துண்டு, ஆறிப்போன தேநீர், எதுவுமே தொடப்படாமலேயே கிடந்தன. அவளுடைய செழித்த கூந்தலையும், முகமூடி அணிந்திருந்த அவன் முகத்தைக் காணத் தவிர்க்கும் அவள் விழிகளையும், நோக்கினான். அவளை வாட்டியெடுக்கும் பசியை அப்பட்டமாகக் காட்டிக் கொடுத்தன விழிகள்.

"நீ எதுவுமே சாப்பிடவில்லையென்று சொன்னார்கள்."

அவன் காலணிகளைப் பார்க்கும் அளவே மெல்ல அவள் விழிகள் உயர்ந்தன.

"உன்னை நீயே சாகடிக்கப் பார்க்கிறாயா லைலா?"

அவள் பெயரை அவன் உச்சரித்தபோது சில வினாடிகள் விழிகளை உயர்த்திப் பார்த்தாள்.

"எனக்கு உன் பெயர் தெரியும், லைலா. உன்னுடைய லைசன்ஸையும், மாணவர் அடையாள அட்டையையும் பார்த்துத் தெரிந்துகொண்டேன். சட்டைப் பையிலிருந்து சிகரெட் பாக்கெட்டை எடுத்து அதிலிருந்து ஒரு சிகரெட்டை உருவியபடி கதவின் மீது சாய்ந்துகொண்டான். அப்படியே சரிந்து தரையில் அமர்ந்து அதைப் பற்றவைத்து உறிஞ்சினான். எப்போதும் லைலா என்பதற்கு "Laila" என்றுதான் எழுத வேண்டுமென்று நினைத்தேன்

ஆனால் உன் பெயரில் "e" என்ற எழுத்துடன் Leila என்றிருக்கிறது. மற்ற விஷயங்களிலும் ஆர்வமான குணம் கொண்டவனாக இருந்திருந்தால் இந்நேரம் ஆர்வமாகியிருப்பேன். புரிகிறதா?"

ஒரு நாள் முன்பு இடப்பட்டிருந்த மைத்தீற்றல் வழிந்து சுற்றிலும் வளையமாகப் படிந்திருந்த கண்கள் சரேலன உயர்ந்து அவனை நோக்கின.

முந்தைய இரவை அவன் சான்சிரோவில் கழித்திருந்தான். துர் சாத்தான்களையும், மலிவான விலை மாதுகளையும் இட்டுக் கட்டி மம்மன் கோலோ பாடிய பாடல்களை நெடுநேரம் அமர்ந்து கேட்டுக்கொண் டிருந்தான். இந்தப் பணியை ஆரம்பித்ததிலிருந்து சான்சிரோவை எவ்வளவு தூரம் மனதளவில் இழந்திருக்கிறாம் என்று உணர்ந்தான். விற்பனைப் பணத்தை பெறுகையில் அதை விற்ற ஷனி ஸ்காலருக்கு மட்டமான போதைத் தாவரத்தை இனாமாகத் தந்தான். இது போன்ற வியாபாரங்களில் நேர்மைக்கும் விசுவாசத்துக்கும் கைம்மாறாக ஏதாவது தந்தாக வேண்டும். ஷனி ஸ்காலருக்குப் புகைக்கும் பழக்கம் இல்லாததால் தெளிவாக இருப்பான். சரக்கை யாருக்கு, எப்படி வழங்கி இளைஞர்களிடையே நன் மதிப்பைப் பெறுவதென்ற விவரம் அறிந்தவன்.

திரும்பும் வழியில், லூஸே செல்லும் கூட்டம் நிறைந்த பேருந்தில் ஏறி பயணம் செய்து கொண்டிருந்தபோது ஒருவன், கையிலிருந்த பெரிய பையில் குழந்தையை வைத்திருந்ததை பார்த்து விட்டான் ரெஸா. அவனால் அந்தக் காட்சியை மனதிலிருந்து அழிக்கவே முடிவைல்லை. மாளிகைக்குத் திரும்பிய பின், மற்ற இருவரும் சீட்டு விளையாடிக் கொண்டிருக்கையில் ரெஸா அமைதியாக அமர்ந்து பணக்காரனாக வேண்டுமென்ற வேட்கை ஒரு மனிதனை எத்தகைய அட்டூழியங்களை செய்யத் தூண்டுகிறது என்பதைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தான்.

கூரையை நோக்கி நீண்ட பிரவாகம் போல புகையை ஊதியவன் பெருமூச்சு விட்டான்.

"இந்த உலகம் மிகவும் கேடு கெட்டது தெரியுமா?"

தன் காலையே குறி பார்த்து சுற்றிக்கொண்டிருந்த கொசு ஒன்றைத் தட்டி விட்டாள் அந்தப் பெண், அவளது அங்கி புரண்டு மெல்ல சலசலத்தது.

இன்னொரு இழுப்பு இழுத்தான். "எப்போதுமே அப்படித்தான் இருக்கிறதென்று நினைக்கிறேன்."

அனுபவித்துப் புகைத்துக் கொண்டிருந்தவன், கடைசி இழுப்புக்குப் பின் சிகரெட்டில் இன்னும் மீதம் எவ்வளவு எடை இருக்கிறதென்று சோதிப்பது போல சற்று இடைவெளி விட்டான்.

"சிலர் புதிதாக ஏதாவது நிவாரணம் கண்டுபிடிக்கிறார்கள். அதே நேரத்தில் சிலர் புதிய ஆயுதங்களை உருவாக்குகிறார்கள். அப்புறம் சிலர் தன்னைத் தானே அழித்துக்கொள்ள நினைக்கிறார்கள். த்தா, மிகக் கேவலமா இருக்கு."

அவன் கண்களைப் பார்த்தவள் மீண்டும் பார்வையை திருப்பிக் கொண்டாள்.

"அந்த மனிதனைப் பார்த்தேன். அவனைக் கொல்ல வேண்டுமென்று வந்த வெறிபோல, இதுவரை வேறு யாரைப் பார்த்தும் ஏற்பட்டதில்லை."

புகை வளையங்கள் மேலெழும்பும் போது, அன்றைய நிகழ்வில் அவன் பார்த்த உருவம் மனதில் ஓடிக் கொண்டிருந்தது.

அவன் கையில் ஒரு பெரிய பை இருந்தது. பயணப்பை போலத்தான் தெரிந்தது. புரிகிறதா? கறுப்பு நிறப் பை. அதனுடன் பேருந்தில் ஏறி விட்டான். நடத்துனர் வந்து, சாமான்கள் வைக்கும் இடத்தில் வைப்பதற்காக அந்தப் பையைக் கேட்ட போதும் தர மறுத்து விட்டான். அதைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு என் பக்கத்தில் அமர்ந்திருந்தான்.

புகையை உறிஞ்ச சற்று இடைவெளி எடுத்தான் ரெஸா.

"ஆனால் அந்தப் பையில் ஏதோ இருக்கிறதென்று அவருக்கு சந்தேகம் வந்திருக்கலாம் என்று நினைக்கிறேன். கீழே அமர்ந்து அந்தப் போக்கிரியையே பார்த்துக்கொண்டிருந்தார். அந்த மனிதன் இறங்கும் போது அந்தப் பையை வாங்கி உதவி செய்ய முன்னால் வந்தார். அவன் மீண்டும் மறுத்துவிட்டான்."

லைலா, பலவீனத்துடன் எழுந்து அமர்ந்தாள். ஆனால் ரெஸா அவளைக் கண்டுகொள்ளவில்லை. கூரையைப் பார்த்தவாறே, தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தான்.

"அதனால், உடனே ஒரு போலீஸை அழைத்து வந்து அந்தப் பையை சோதனை செய்யச் சொன்னார். அந்தப் பையில் ஒரு பெண் குழந்தை இருந்தது. மூன்று வயது. இறந்து போயிருந்தது. மூச்சுத் திணறலால் இறந்து விட்டது. இதுவரை நான் பார்த்த குழந்தைகளிலேயே மிக மிக அழகான குழந்தை, இப்போதும் கூட என் கண்களில் நிறைந்து இருக்கிறாள். அந்தப் பிஞ்சு முகம், அவளுடைய சின்னஞ் சிறு பின்னல்களின் நுனியில் கட்டியிருந்த வண்ண வண்ண மணிகள்..."

அந்த நிகழ்வின் பயங்கரம் லைலாவின் முகத்தில் பரவுவதைப் பார்த்துக்கொண்டே, மீண்டும் தன் சிகரெட்டின் எடையை அளந்தான். பின்

மறுபடியும் கதவில் தலை சாய்த்துக்கொண்டு சிகரெட்டை உதடுகளில் பொருத்தினான்.

"அவனுடைய சகோதரன் மகள் என்று சொன்னான்."

"ஆனால் ஏன் அப்படிச் செய்தான்?

நெடுநேரம் பேசாமல் இருந்ததால் அவள் குரல் கரகரப்பாக இருந்தது. மிகவும் கண்ணியமான முறையில், தொண்டையைக் கனைத்து, குரலை சீராக்கிக் கொண்டபோது அந்தச் செய்கையில் அவளின் நாகரிகமான வளர்ப்பு தெரிந்தது.

"சடங்குகள்!" உனக்குப் புரிகிறதா? அந்தக் குழந்தையின் தலையையும், மற்ற உறுப்புகளையும் உபயோகித்து தாயத்து, மந்திரங்கள் செய்து, பணக்காரனாக ஆக வேண்டுமென்ற ஆசை. அடேய்ய்ய்! நான் அங்கேயே அவனைக் கொல்ல வேண்டுமென்று நினைத்தேன். வல்லாஹி!"

"அவனைக் கைது செய்து விட்டார்கள் தானே?"

"ஆமாம், துரதிர்ஷ்டவசமாக..."

"துரதிர்ஷ்டவசமாகவா?"

"ஆமாம். யாரையுமே குத்திக் கொலை செய்யவேண்டுமென்று நான் இவ்வளவு விருப்பப்பட்டதில்லை. புரிகிறதா? ஆனால், நான் ஆசைப் பட்டபடியே என்றாவது ஒரு நாள் அவன் உயிரை எடுக்கப் போகிறேன். இது சத்தியம்."

ஒரு கணம் அவன் கண்களில் மின்னிய வெறியைக் கவனித்தாள். மறு கணமே அது மறைந்து விட்டது. பசியால் பலவீனமடைந்திருந்த அவள் உடல், மெல்ல நடுங்கியது. உடலுக்கு நெருக்கமாகக் கால்களைக் குறுக்கி, கரங்களைத் தாடையைச் சுற்றி வைத்துக்கொண்டாள்.

"இந்த உலகம் மிகக் கெட்டுப் போய்விட்டது தெரியுமா? எழுந்து நின்றவன் ஜீன்ஸில் அப்பியிருந்த தூசியைத் தட்டிக்கொண்டே, சரி, நீ இந்த உணவை சாப்பிடு. அதைச் சொல்லத் தான் வந்தேன். சாப்பிடு."

திரும்பி அவசரமாக வெளியேறியபோது அவன் கண்களில் கண்ணீர் திரண்டு நின்றதை லைலா பார்த்துவிட்டாள்.

—

அறையின் நடுவே மின்சார விளக்கு இணைப்பு கொடுத்துக்

கொண்டிருந்தான் ரெஸா. வெளியே செல்லத் திரும்பியபோது, சற்றுத் தள்ளிப் பாயில் அமர்ந்திருந்த லைலா பாதி வெளிச்சத்தில் அவனைக் கவனித்துக்கொண்டிருந்தாள். சுவரின் மீது பிரகாசமான ஒளியைப் படர்த்திக் கொண்டிருந்த விளக்கைப் பார்த்து சற்றுத் தயங்கி நின்றான் ரெஸா.

"நில்!"

ஏதோ சொல்ல வாயெடுத்தவள் அதைப் பற்றிய நிச்சயம் இல்லாத வளாகத் தயங்கினாள். சற்று நிறுத்தி, தன்னை அமைதிப்படுத்திக் கொண்டாள். கால்களை உடலுக்கு நெருக்கமாக இழுத்துக்கொண்டாள்.

"அந்தச் சிறுமிக்காக நான் மிகவும் துக்கமடைந்தேன்."

அவன் பெருமூச்சு விட்டான்.

"என்னுடைய வருத்தங்கள்..."

"எதற்காக வருந்துகிறாய்?"

இப்போது அவள் வாயிலிருந்து வார்த்தைகள் உருண்டு விழுந்தன.

"அவள் இறந்தது எனக்கு வருத்தம், அவளை அவன் கொன்றதை நினைத்து வருத்தம், நீ அவனைக் கொல்ல முடியாமல் போனதற்காக வருத்தம்."

அவள் அழத் துவங்கியபோது, ஆங்கில சினிமாவில் பார்த்த கதாநாயகன் ஒருவன் எப்படி அழும் பெண்ணைத் தேற்றுவான் என்பது நினைவுக்கு வந்தது. அந்தப் பெண்ணை இழுத்துத் தன் மார்போடு சேர்த்து அணைத்து, அவள் தோள்களை வருடி, மின்னும் அடர்ந்த கூந்தலை தடவிக் கொடுப்பான் என்ற காட்சி மனதில் ஓடியது. லைலாவின் குனிந்த தலையை, மினுமினுப்பையும், நறுமணத்தையும் இழக்கத் துவங்கியிருந்த கூந்தலையும் பார்த்தான். ஒழுங்கான வரிசையில் அடங்க மறுத்து முன்னே வந்து விழும் ஒற்றைக்கூந்தல் இழையை ஒதுக்கி விட விரும்பினான். ஆனால் அவள் அவனுக்குச் சொந்தமான பெண் அல்ல...தேவை ஏற்படின், அவன் கையாலேயே கொல்லப்பட்டு, ஒழிக்கப்பட வேண்டிய பெண். ஏதாவது ஒரு சந்தில், உடலைக் கண்டுபிடிக்கும் முன் அழுகிக் கொண்டிருப்பாள்...உடல் சிதைந்து அழுகிக் கிடக்கையில் அவள் எப்படி இருப்பாள் என்று கற்பனை செய்து பார்த்தான். அவள் கண்கள் உளுத்துப் போய் இருக்கும், சுருங்கிக்கொண்டிருக்கும் மண்டை ஓட்டிலிருந்து தலை முடிகள் உதிர்ந்து போகும், அழகிய, சிறிய இதழ்களுக்கிடையில் புழுக்கள் ஊர்ந்து சென்று நாவை உண்ணும்.

தலையைச் சிலுப்பிக்கொண்டான். அவனுக்கு ஏனோ ஆத்திரமாக

வந்தது. கொன்று போடுவது என்பதை நாகரிகமாகச் சொல்வதற்கு வேறெந்த இணைச்சொற்களும் அவனுக்குக் கிடைக்கவில்லை.(கொலை, அழித்தொழித்தல், வெட்டுதல், காரியத்தை முடித்தல்) இதை விட வேறு ஒரு சொல்...சற்றே மனிதத்தன்மையுடன் ஒலிக்கக்கூடியது. ஆனால், போட்டுத் தள்ளு என்று சொன்னாலும் கூட அதிலும் ஒரு மிருகத்தனம்தான் தொனிக்கிறது. செல்லப் பிராணிகளின் மீது பைத்தியகாரத்தனமாக அன்பு பாவிக்கும் அமெரிக்கர்கள், அவை தளர்ந்து, நலிந்து போகும் போது செய்வது போல, அந்தக் கொலைகாரன் தன் பையிலிருந்த சிறு குழந்தைக்குச் செய்தது போல, மனிதாபிமானம் அற்ற செயலாகவே தெரிகிறது.

"எனக்குத் தெரியும், நீ என்னைக் கொல்லப்போகிறாய், அப்படித்தான் செய்யப் போகிறாய், ஆனால் எனக்கு சாக விருப்பமில்லை." தயவு செய்து கருணை காட்டு...தயவு செய்து."

அவள் அழுவதைப் பார்த்தான். அவள் அழுகையின் விசித்திரமான சப்தம் அவனை ஏதோ செய்தது.

"நான் உன்னைக் கொல்லமாட்டேன்." அதை உண்மையாகச் சொன்னான். முகமூடி அணிந்த அவன் முகத்தின் மீது வெளிச்சம்படாதவாறு விளக்கின் மறுபக்கம் பார்த்துத் தரையில் அமர்ந்துகொண்டான். சட்டைப் பையிலிருந்து, கட்டூஸோ நிரப்பிக் கொடுத்திருந்த சுருட்டை எடுக்க நினைத்தவன், அதன் துவர்ப்பான நெடி அறையில் மூச்சுத் திணறலை ஏற்படுத்தும் என்றெண்ணி பைக்குள்ளேயே வைத்துவிட்டு, அந்தப் பெண் அழுது ஓய்ந்து அமைதியடைவதற்காகக் காத்திருந்தான்.

"என்னை ஏன் பிடித்து வைத்திருக்கிறீர்கள்?" தேம்பிக்கொண்டே கேட்டாள்.

"ஒரு தேவை இருக்கிறது. நீ அவ்வளவு மட்டும் தெரிந்து கொண்டால் போதும்" கட்டூஸோ கொடுத்த சுருட்டை எடுத்து, மனம் மாறுவதற்குள் பற்ற வைத்தான்.

"உனக்குப் பணம்தானே வேண்டும்? என் மாமாவைத் தொடர்பு கொண்டாயா? அவர் என்ன சொன்னார்?"

ஏற்கெனவே புழுக்கமாக இருந்த அறையில் காரமான புகையும் நிரம்பியது..தலையிலிருந்த ஸ்கார்ஃபை எடுத்து அவள் மூக்கை மூடிக் கொண்டபோது, சுருட்டை அணைத்துவிட்டு, கதவின் தாழ்ப்பாளைத் திறந்தான்.

கால்களைக் குறுக்காக நீட்டி வைத்துக் கதவு முழுவதும் திறக்காத

மாதிரி வைத்துக்கொண்டான்.

"நான் வெளியே செல்ல முடியுமா? கொஞ்ச நேரம், காற்று வாங்க..."

தொண்டையைக் கனைத்துக்கொண்டான். "நீ என்ன படிக்கிறாய்?"

"என்ன?"

"உன் அடையாள அட்டை. நீ ஏதோ லண்டன் பல்கலைக் கழகத்தில் படிப்பதாகச் சொன்னார்கள்."

"ஓ, *Palaeontology*."

அதைப் பற்றி அவன் கேள்விப்பட்டதே இல்லை. அது தொன்மப் படிவங்களில் படிந்திருக்கும் உருவங்களுக்கும், மனித வரலாற்றுக்கும் உள்ள தொடர்பு பற்றிய பாடம் என்று அவள் விளக்கிச் சொன்னதும் அவன் பெருங்குரலெடுத்துச் சிரித்ததைக் கேட்டு, கீழேயிருந்து கட்டுஸோ குரல் கொடுத்தான். ஒன்றும் பிரச்சினையில்லையென்று அவனிடம் சொல்லி விட்டுத் தொடர்ந்து சிரித்தான் ரெஸா.

"நான் அறிந்த எல்லாப் பணக்காரர்களையும் போல நீயும் ஒரு முட்டாள் தான்."

"என்ன?"

"பணம் படைத்தவர்கள் அனைவருமே முட்டாள்கள், புரிகிறதா?"

"எப்படி?"

"இங்கே, மக்கள் பள்ளிக்குச் சென்று மருத்துவமும், மற்ற பட்டங்களும் படிக்கிறார்கள். படித்து முடித்தபின், வறுமையால் பாதிக்கப்பட்டு வியாதியடைந்தவர்களைக் குணப்படுத்தலாம். புரிகிறதா? உங்களைப் போன்ற பணக்காரப் பிள்ளைகள், லண்டனுக்கும், அமெரிக்காவிற்கும் படிக்கப் போகிகிறீர்கள். *UCLA* தெரியுமா? நிச்சயமாக அதைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பாய். அங்கே போய் இது போன்ற தேவையில்லாத படிப்பைப் படி அதைப் பற்றி யாருக்கும் கவலை இல்லை. இங்கே குணப்படுத்த மருத்துவர்கள் இல்லாமல் மக்கள் இறந்துகொண்டிருக்கும் போது, அங்கே போய் இறந்துபோன மிருகங்களின் எலும்புகளோடு விளையாடிக் கொண்டிரு போ.

"அதாவது..."

"அதாவது என்ன?"

அவள் மௌனமாக இருந்தாள். அவள் புண் பட்டுப் போனது கண்களில்

தெரிந்தது. அவள் இங்கிருந்து உயிரோடு திரும்பிச் சென்றால், என்றாவது ஒரு நாள் அவனது எலும்புகளைத் தோண்டி பிரிட்டிஷ் மியூஸியத்தில் வைக்கப் போகிறாள் அல்லது இப்போதே ஆடை போர்த்தியிருக்கும் தொல் படிமத்தின் களைத்த உயிரணு போல இருக்கும் அவன் அப்பாவைக் கூட வைக்கக்கூடும் என்று கற்பனை செய்தான். வஞ்சனை நிறைந்த பெண் ஒருத்தியின் மீது, நிபந்தனையற்ற ஒருதலை காதலைச் செலுத்தியதிலேயே அவர் காலங்கள் கரைந்து இப்போது தொன்மத்தின் மீதங்களே உள்ளன.

லைலாவின் வேதனை தாங்கிய கண்களைப் பார்த்தான் ரெஸா. அது, தன்னைச் சந்திக்க வந்திருந்த அன்னையைக் கண்டு வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டபோது அவள் முகத்தில் படர்ந்திருந்த வேதனையை அவனுக்குக்கு நினைவூட்டியது. .

அறையிலிருந்து வெளியே சென்று கதவைப் பூட்டித் தாழிட்டான்.

—

25

"பருந்தின் ஆதிநிலம் அறியாமல் இருந்திருந்தால், தான் மெதீனாவிலிருந்து வந்ததாக நம்ப வைத்துவிடும்"

சூயநினைவை முற்றிலும் இழந்தவளைப் போலத் தோற்றமளித்த ஃபைஸா, வாயைத் திறந்து ஓசை வராதவாறு கத்திக்கொண்டிருந்தாள். அவளைத் தீய சாத்தான் பீடித்திருக்கிறதென்று சந்தேகமின்றி நம்பியிருந்த ஹுரைரா இது போன்ற விசித்திரமான நடவடிக்கையை நிச்சயம் எதிர்பார்த் திருந்தாள்.

அந்த நிகழ்வு மட்டும் நிகழாதிருந்தால் எப்போதும் போலவே அதுவும் மிக சாதாரணமான தினமாகக் கடந்திருக்கும். விடியலில் கண்விழித்த ஹஜியா பிந்த்தா, உதித்தவுடனேயே சுட்டெரிக்கும் சூரியனைப் பற்றி புகார் சொல்லிக்கொண்டிருந்தாள். தேர்தல் பிரச்சாரத்துக்காகத் தெருவில் வந்திறங்கியிருந்த பேரணிக் கூட்டம் அவளை மேலும் எரிச்சலடைய வைத்தது. பொதுக்கூட்டத்தில் பேசுவதற்குத் தேவையான உபகரணங் களோடு வந்திருந்த பேருந்திலிருந்து ஏதோ ஒரு பாடல் முழங்கிக் கொண்டிருந்தது. இரைச்சலில் அதன் வரிகள் கூடப் புரியவில்லை.

முனங்கிக் கொண்டே, போர்வையை வீசியெறிந்து விட்டு எழுந்து, சென்று திரைச்சீலையை வெடுக்கென இழுத்து விலக்கினாள்.

"எந்த நாசமாகப் போனவர்கள் இந்தக் காலையில் இப்படித் தொல்லை செய்கிறார்கள்?"

முள் கம்பி வேலிக்கப்பால் CPC கட்சியின் நீல வண்ணப் பதாகைகள் தெரிந்தன. "புஹாரி ஒருவர் மட்டுமே" என்னும் முழக்கம் தொடர்ந்து ஒலித்துக்கொண்டிருந்தது. புஹாரிக்கான அவர்களின் உணர்வை அவள்

மனது ஏற்றுக்கொண்டாலும் கூட, இது போன்ற மூர்க்கத்தனமான கூச்சலை, அதுவும் அந்த இளங்காலை நேரத்தில் சற்றும் ஆதரிக்கவில்லை.

வெள்ளிக்கிழமையாதலால் மதராஸா வகுப்புகள் இல்லை. சிடுசிடுப்பை மறைத்துக்கொண்டு வெற்றுப்பார்வையோடு அமர்ந்திருந்தவளின் கண்களில் படாமல் நழுவிக்கொண்டாள் ஹுரைரா.

அப்போதுதான் ரெஸாவிடமிருந்து அழைப்பு வந்தது. ஏற்கெனவே அவன் ஹோட்டலை அடைந்துவிட்டான்.

"மீண்டும்?"

"ஆமாம், என்ன நடக்கிறதென்றே புரியவில்லை, நீ வந்தால் போதும், புரிகிறதா? "

"எதற்கு? நீ என்னை மறுபடியும் மிரட்டவா?"

"இல்லை, இல்லை, தயவு செய்து என்னைப் புரிந்துகொள். அதை நினைத்து இன்னும் சங்கடப்படுகிறேன். மிகவும் வருத்தம். வல்லாஹி, அதற்கு ஈடு கட்டவேண்டும்."

வேண்டுமென்றே தாமதப்படுத்தி, மேலும் அவனைக் கெஞ்ச வைத்தாலும், அவன் அந்த வார்த்தைகளை உதிர்த்ததுமே, தயாராகி, உடலில் வாசனைத் திரவியம் தெளித்துகொண்டு கிளம்பத்தான் போகிறோம் என்பதை அவள் அறிவாள்.

சற்று நேரம் கழித்து, முகத்திற்கு மிதமான ஒப்பனை செய்துகொண்டு கிளம்பினாள். ஹுரைராவின் மனம் நிம்மதியடைந்தாலும், ஹஜியா எதற்காக இப்படிச் சிறு பெண் போல உற்சாகமாக இருக்கிறாள் என்று ஆச்சரியப்பட்டாள்.

மதியத் தொழுகை முடிந்த சற்று நேரத்தில், வானின் மத்தியில் பிரகாசமான சூரியன் சுட்டெரித்துக்கொண்டிருந்த வேளையில், வாசல் கேட்டைத் தள்ளிக்கொண்டு வேகமாக உள்ளே வந்தாள் ஃபைஸா. பள்ளிப் பையைத் நிலத்தில் தேய்த்துக் கொண்டே இழுத்து வர, அது கிளப்பிய மண் புழுதிப் படலம் வீடு வரை அவளைப் பின் தொடர்ந்தது. சிறுமி உம்மி அவள் வேகத்திற்கு ஓடி வர முயற்சி செய்துகொண்டிருந்தாள். ஆனால் அவள் கேட்டை நெருங்குகையில் ஃபைஸா வீட்டின் கதவுக்கு அருகிலேயே சென்று விட்டாள்.

மெத்தென்ற இருக்கையில் சரிந்து அமர்ந்து, மின் விசிறியின் காற்றை ஆனந்தமாக அனுபவித்துக் கொண்டிருந்த ஹுரைரா தலையை உயர்த்தி, ஃபைஸாவின் உயிரற்ற கண்களைக் கண்டாள். வழக்கம் போலச் சொல்லும்

முகமன் கூடக் கூறாமல் அவள் அறைக்குள் ஓடி ஒளிந்து கொண்டதும், இதுவும் அவளுள் உறையும் சாத்தானின் வெளிப்பாடுகளில் ஒன்று என முடிவு செய்து விட்டாள். அச்சமும், சந்தேகமும் ஹுரைராவின் சிந்தனையை முடக்கின. உம்மி வீட்டிற்குள் நுழைந்ததும், அவளை அழைத்து தன்னுடன் அமர வைத்துக்கொண்டாள். மனப்பிறழ்வால் பாதிக்கப்பட்டவள் என்று மிக வெளிப்படையாகத் தெரியும் ஒரு பெண்ணுக்கு அருகில் தன் மகள் செல்வதை அவள் விரும்பவில்லை.

ஃபைஸாவினுள் குடியிருக்கும் சாத்தான் அவளை எப்படியெல்லாம் ஆட்டி வைக்கக்கூடும் என்று யோசனை செய்தாள். அவளுடைய ஆடைகளைக் களைந்து நிர்வாணமாக்கிக் கடைத்தெருவில் அலைய வைத்து, அவளுடைய கன்னிமையின் செல்வங்களை வணிகர்களின் பார்வைக்குப் படைக்கலாம், அல்லது அவளை மூர்க்கமாக்கி மக்களின் ஆடைகளைக் கிழித்தும், தலைமுடியை இழுத்தும் அட்டகாசம் செய்யலாம். சாத்தான் குடியிருப்பவர்கள், நாலைந்து வலிமையான ஆண்களுடன் மல்யுத்தம் செய்து அவர்களைச் சாய்த்து, உலர்ந்த குச்சிகளை ஒடிப்பது போல் அவர்களை எலும்புகளை நொறுக்க வல்லவை என்றும் கேள்விப் பட்டிருந்தாள்.

ஆனால், கடிகாரத்தின் முள் மெல்ல ஊர்ந்து கால் மணி நேரத்தைக் கடந்ததும், எழுந்து, ஃபைஸாவைக் கண்காணிக்கச் சென்றாள். கொடிய சாத்தான்களிடமிருந்து தன்னைக் காக்கும் என அவள் நம்பும் சில புனித வரிகளை வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டே சென்றாள்.

"இன்னா ஹு மின் சுலைமானா வா இன்னாஹு பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிரஹீம்"

படுக்கையறையின் கதவை மெல்லத் தள்ளியபோது, தானாகத் திறந்து கொண்ட கதவின் கீல்கள் கிரீச்சிட்டன. தரையில் மடங்கி அமர்ந்திருந்த ஃபைஸா, கையிலிருந்த காகிதத்தைப் பந்து போல் சுருட்டி சுவரின் மீது எறிந்தாள். பின் பேனாவை எடுத்துக்கொண்டு நோட்டுப் புத்தகத்தை நோக்கிக் குனிந்தாள். மிகுந்த கவனத்துடன் புருவங்கள் வளைய, தேம்பித் தேம்பி அழுதுகொண்டே அந்தக் காகிதத்தின் மீது அழுத்தமாக வரைந்து கொண்டிருந்தாள். அவளை, ஃபைஸா அல்லாத ஃபைஸா வை, தன் வீட்டில் அமர்ந்து வன்முறையைத் தூண்டிக்கொண்டிருக்கும் அந்த அறியாத உருவத்தைப் பார்த்து தன்னிலை மறந்து போனாள் ஹுரைரா.

இருக்கையில் கிடக்கும் தன் அலைபேசியை ஓடிப்போய் எடுத்து ஹஜியா பிந்த்தாவை அழைத்தாள். மறுமுனையில் அழைப்பு எடுக்கப் படவே இல்லை. ஃபைஸாவின் பிசாசுத்தனமான முனகலைக் கேட்டவள்,

உம்மியின் கையைப் பிடித்துக்கொண்டு வீட்டிற்கு வெளியே அவளை அழைத்துச் சென்றுவிட்டாள்.

வாசலில் குள்ள சகோதரிகளை எதிர்கொண்டாள் ஹுரைரா. பள்ளியி லேயே, ஃபைஸாவின் தெளிவற்ற மனநிலையைக் கண்ட அவ்விருவரும் வீட்டை அடைந்து சீருடையைக் களைந்து உடை மாற்றியவுடன் அவளைக் காண முடிவு செய்து வந்திருந்தனர்.

ஹுரைரா கனமாக மூச்சுவிட்டாள். "ஃபைஸாவின் சாத்தான்கள் பிதற்றிக் கொண்டிருக்கின்றன."

"சாத்தான்கள்? எந்த சாத்தான்கள்?"

"ஆமாம், வீட்டின் பொருட்களையெல்லாம் கலைத்துப் போட்டுக் கொண்டிருக்கிறாள்."

வாயிலிருந்து ஊதிய பபிள் கம் குமிழியை பட்டென உடைத்துவிட்டு, ஹுரைராவின் முகத்தை நோக்கிப் பார்வையைத் திருப்பினாள் கரீமா.

"ஃபைஸாவுக்குள் சாத்தான் ஏதும் இல்லை."

வேறு எதையோ நினைத்துக்கொண்டிருந்த ஹுரைராவின் மனதில், கரீமாவின் குரலில் இருந்த உறுதி சற்றும் பதியவில்லை.

"ஓ, அப்படிப் பேசுவதை நிறுத்திவிட்டு, உடனே போய் உஸ்தாஜை அழைத்து வா, அவளுக்கு பேயோட்ட வேண்டும். சீக்கிரம், சீக்கிரம், இந்த கேடு கெட்ட பேய்களால் என் தங்கை பைத்தியமாகி விட்டாள்."

இரு சகோதரிகளும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். ஹுரைராவின் முகத்தில் தெரிந்த கலவரமும் பட படப்பும் அவர்களுக்கு எச்சரிக்கையூட்டின. தோளைக் குலுக்கிக் கொண்டே அங்கிருந்து நகர்ந்தனர். அவர்களை விரைவாகச் செல்லும்படி அறிவுறுத்தி விட்டு, தன் மகளின் கையைப் பிடித்துக்கொண்டு கேட்டின் அருகிலேயே நின்று கொண்டாள் ஹுரைரா.

கீழே அமர்ந்து ஒரு சிறிய கல்லைப் பொறுக்கி அதை வைத்து ஏதோ அர்த்தமற்ற வடிவங்களைக் கிறுக்கிக்கொண்டிருந்தாள் உம்மி. நகத்தைக் கடித்துத் துப்பிக்கொண்டே, வீட்டின் உட்புறத்தையும், சகோதரிகள் இருவரும் சென்ற பாதையையும் மாறிமாறித் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஹுரைரா.

முள் கம்பியின் மீதமர்ந்திருந்த பழுப்பு வண்ண புல்புல் பறவையொன்று, மிகுந்த மன உளைச்சலுடனும், கண்களில் நம்பிக்கையைத்

தேக்கிக் கொண்டும் நின்றிருந்த ஹுரைராவையே பார்த்துக் கொண்டிருந்தது. கம்பிகளின் ஒரு வளையத்திலிருந்து இன்னொன்றிற்குக் குதித்துத் தாவிய படி, மதியவேளைக் கதிரவனைப் பார்த்து கீச் கீச் என்று கத்தியது. அந்தப் பறவையைப் பார்த்த ஹுரைராவுக்கு அதன் வண்ணம் சற்றும் பிடிக்கவில்லை. தங்கையின் மனப்பிறழ்வை எண்ணித் துயருற்றிருந்தவள், மேலும் நகங்களைக் கடித்து அதன் துண்டுகளை அந்தப் பறவையை நோக்கித் துப்பினாள்..

—

வரவேற்பறையில் நின்று, தாடியை நீவிக்கொண்டே, படிப்படியாகச் சிதைந்து கொண்டிருக்கும் ஃபைஸாவின் மனப்பிறழ்வு பற்றி உணர்ச்சி பொங்க ஹுரைரா விவரித்துக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டிருந்தார் உஸ்தாஜ் நூரா. அவளிடம் தன்னை அழைத்துச் செல்லுமாறு கேட்டார்.

சுவருக்கு எதிராக சுருண்டு கிடந்தாள் ஃபைஸா. சீருடையைக் களையவில்லை. தலை முக்காடு, சூறாவளியால் சரிந்து விழுந்த கூடாரம் போல் படுக்கையில் வீசப்பட்டிருந்தது. கதவருகில் உஸ்தாஜ் நூரா நிற்பதைப் பார்த்ததும், எழுந்து ஸ்கார்ஃபை எடுத்துத் தலையைச் சுற்றிக் கட்டிக்கொண்டாள். முகத்தை முழங்காலுக்கிடையில் மறைத்து, வழியும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

அவருடைய முகமனுக்கு பதில் சொன்னவள், அவர் மிகுந்த எச்சரிக்கையுடன் அவள் பெயரைச் சொல்லி அழைத்தபோது மறுமொழி ஏதும் சொல்லவில்லை. ஃபைஸாவுடன் பேசுகிறோமா, அல்லது ஹுரைரா குறிப்பிடுவது போல அவள் உருவிலிருக்கும் ஏதேனும் தீய சக்தியுடன் பேசிக் கொண்டிருக்கிறோமா என்று அறிந்து கொள்ளவே அப்படி அழைத்தார். அவருடைய பணியால் கிடைத்த பல தரப்பட்ட அனுபவங்களுக்குப் பிறகு இது போலச் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒரு முறை, சாத்தான் குடியிருந்த ஒரு பெண், அவரை முகத்தில் குத்தி விட்டாள். வலிமை வாய்ந்த வாலிபனொருவன் அவரை அடித்துப் புரட்டியது போல இருந்தது என்று அவர் சத்தியமே செய்யலாம்.

அதனால், அவள் கைகள் எட்டாத பாதுகாப்பான தொலைவிலிருந்தே அவளைத் தூண்டினார், முகத்தை மூடிக்கொண்டது தவிர சாத்தானிருப் பதற்கான வேறெந்தக் குறியீடுகளும் அவளிடத்தில் தென்படவில்லை. அதுவும் கூட நிச்சயம் என்று சொல்ல முடியாது. தான் ஃபைஸா தான், எந்த

விதமான மாய சக்தியும் தன் உடலில் தங்கியிருக்கவில்லை என்று அவள் சொன்ன போது, தன் முகத்தைப் பார்க்கச் சொன்னார். தலையை உயர்த்திய ஃபைஸா, அவரிடமிருந்து கண்களைத் திருப்பிக்கொண்டாள். அது ஒரு நல்ல சங்கேதம். அலைவுறும் தீய சாத்தான்கள், முகத்தை தைரியமாக நோக்கி, கண்களைத் துளைப்பது போல் பார்த்துச் சவால் விடும்.

"ஏன் அழுகிறாய் ஃபைஸா? எந்த விஷயம் உன்னைத் தொந்தரவு செய்கிறது?"

"நான் மறந்து கொண்டிருக்கிறேன்" தேம்பினாள்.

"மறக்கிறாயா? எதை மறக்கிறாய்?"

அவளால் மேலே எதுவும் பேசமுடியவில்லை. ஒவ்வொரு முறை பேச முற்படும்போதும், அழுகை தொண்டையை அடைத்தது.

கதவருகில், குள்ள சகோதரிகளோடும், உம்மியோடும் நின்று கொண்டிருந்த ஹுரைராவிடம் ஃபைஸா என்ன எழுதிக்கொண்டிருந்தாள் என்று கேட்டார். ஃபைஸா கசக்கி வீசியெறிந்திருந்த காகிதத்தைச் சுட்டிக் காட்டினாள் ஹுரைரா. எழுந்து போய் அதை எடுத்துக்கொண்டு தனது இடத்துக்குத் திரும்பினார் உஸ்தாஜ் நூரா.

"ஃபைஸா, நீ என்ன எழுதிக்கொண்டிருக்கிறாய் என்று நான் பார்ப்பதில் உனக்கு ஆட்சேபணை இல்லையே?"

அவர் கையிலிருந்த காகிதப் பந்தைப் பார்த்துவிட்டு மீண்டும் பார்வையைத் திருப்பிக்கொண்டாள்.

ஃபைஸாவுக்கு ஆட்சேபணை இல்லை என்று அவ்வப்போது உறுதி செய்துகொள்ள விரும்புவர் போலத் அவர் தயங்கித் தயங்கி மெல்லக் காகிதத்தைப் பிரித்தார். அதில் ஒரு முகத்தின் தெளிவற்ற ஓவியம் வரையப் பட்டிருந்தது. கோபம், அவசரக் கோடுகள், அடர்ந்த புருவங்கள், வடிவமற்ற நாசி... அழுவதை நிறுத்தியிருந்தாள் ஃபைஸா. ஆனால் முகம் மட்டும் இன்னும் வேறுபுறம் திரும்பியிருந்தது.

"இது யார் ஃபைஸா?"

அழுகையில் தேம்பியவள், "ஜமீலுவின் முகம் எப்படி இருக்கும் என்பதை நான் மறந்துவிட்டேன். அவன் முகத்தை நான் எப்படி மறந்தேன்? எப்படி மறக்க முடிந்தது? அவன் என் சகோதரன். அவர்கள் என் கண் முன்னே அவனை வெட்டிக் கொன்றார்கள்"

வழியும் கண்ணீர் மீண்டும் அவள் உணர்வுகளை முழுமையாக ஆட்

கொண்டது.

ஏதேதோ தீய சக்திகளுடன் போராட வேண்டி மிக அவசரமாக வரவழைக்கப்பட்ட அந்த மனிதன், தன் முன்னால், முற்றிலும் நிலைகுலைந்து, வலியும், வேதனையும், இழப்பின் பெருந்துயரமும் பீடிக்கப்பட்டு நிற்கும் பரிதாபமான பெண்ணைத்தான் கண்டார்.

—

உஸ்தாஜ் நூரா, ஃபைஸாவுடன் தனியே உரையாடிக்கொண்டிருந்த வேளையில் குள்ள சகோதரிகள் இருவரும், முன்னறையில் அமர்ந்து ஜாஸ் நகரத்தில் எப்போதோ தான் பார்த்த பேயோட்டும் நிகழ்வொன்றை கைகளிலும், கண்களிலும் அபிநய முத்திரைகள் தாண்டவமாட நாடகத்தனத்துடன் ஹுரைரா விவரித்துக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

உம்மி அவள் மடியில் சொகுசாகப் படுத்திருந்தாள். நற்பண்புகள் இல்லாத பெண் ஒருத்தி, தலையை முக்காடிட்டு மறைக்காமல், உடலை இறுக்கமாகத் தழுவும் ஆடைகளை அணிந்துகொண்டு, தீய சக்தியுடைய ஆவிகள் அரூபமாக உலவிக்கொண்டிருக்கும் வேளையில் வெளியே சென்றபோது அவள் உடலை இரு கருப்பு சாத்தான்கள் ஆக்கிரமித்துக் கொண்டதெனச் சொல்லிக்கொண்டிருந்தாள். அந்த சாத்தான்கள், அந்தப் பெண்ணை அவர்கள் மனைவி என்றும், அந்நியர் யாரேனும் அதை மறுத்தால் தங்கள் மாயசக்தி மூலம் அவர்களை அழித்துவிடுவார்கள் என்றும் கண்கள் விரியச் சொன்னாள். பல வாலிப வயது ஆண்களை அந்தப் பெண் எப்படி அடித்து நொறுக்குவாள் என்பதையும், ஒரு முறை தன் ஆடையைக் கிழித்துக் கொண்டு தெருவில் நிர்வாணமாக அவள் ஓடுவதைத் தடுக்கப் போன, இளைஞனின் கையை ஒடித்து அனுப்பினாள் என்றும் கதை கதையாகச் சொல்லிக் கொண்டிருந்தாள் ஹுரைரா.

"நம்பவே முடியாத அளவு அவள் வலிமையாக இருந்தாள். வல்லாஹி! அவ்வளவு திடகாத்திரமான ஆண்களை சுவரின் மீது அப்படியே விசிறி அடித்து, துடைப்பக்குச்சியைப் போல் அவர்களின் எலும்பை முறித்ததை நீங்கள் பார்த்திருக்க வேண்டும்!"

"ஹா! கரீமா விழித்தாள். அவள் ஒரே ஒருவரின் மணிக்கட்டை உடைத்ததாகத்தான் நீங்கள் சொன்ன ஞாபகம்."

"ஒருவரா? எல்லோருக்குமே எலும்பு முறிந்து போனது"

கரீமாவின் விழிகள் மேலும் அகலமாயின. "ஒரு நோஞ்சான் பெண் எப்படி பலசாலியான ஆறு ஆண்களின் எலும்பை முறிக்க முடியும்?"

"அட! இந்தப் பெண்!! சாத்தான்களின் பலத்தை நீ குறைத்து மதிப்பிடுகிறாய்." வல்லாஹி குவா!

"ஹுரைரா அக்கா, நீங்கள் கதையுடன் உறைப்பு, காரம் சேர்த்துச் சொல்கிறீர்கள்."

இந்த முறை ஏனோ தன் சகோதரி சொல்வதை ஆமோதித்து "நிச்சயமாக, நிச்சயமாக" என்று ஆபிதாவால் சொல்ல முடியவில்லை.

"கரீமா, மரியாதை இல்லாமல் பேசாதே, நான் ஒன்றும் உன் வயதொத்த தோழியல்ல, காதில் விழுகிறதா?"

கரீமா முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

ஆபிதா பெருமூச்செறிந்தாள். "உடன் பிறந்த சகோதரனுடைய முகம் இப்படி மறந்து போவதென்பது எவ்வளவு துயரமிக்கது."

"ஆமாம், ஆமாம்."

சற்று நேரம் அமைதியாக அமர்ந்திருந்தார்கள். பின் ஆபிதா கையிலிருந்த புத்தகத்தால் விசிறிக் கொள்ள ஆரம்பித்தாள்

"அப்படி நடக்கும் என்று என்னால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை."

"அந்த சாத்தானின் வேலைதான் அது. அவளுடைய ஞாபகங்களை உண்டு செரித்திருக்கும்."

சகோதரிகள் இருவரும் எதுவும் பேசாது ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். பெருகிய அமைதி அறையெங்கும் நிறைந்தது. அந்த வேளையில் தான் ஹுரைராவின் அலைபேசி சிணுங்கியது. அன்னையின் மடியிலிருந்து இறங்கி மேசை மீது கிடந்த அலைபேசியை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தாள்.

அதன் திரையில் கணவனின் பெயர் ஒளிர்வதைப் பார்த்தவுடன் கோபத்தில் சிவந்தாள். "கேடிப் பயல்!"

ஹுரைரா ஏதோ வித்தியாசமாகத் தெரிவதாக ஆபிதா நினைத்தாள்.

"ஹுரைரா அக்கா, ஃபோனை எடுத்துப் பேச மாட்டீர்களா?"

முகச் சுளிப்புடன் இருக்கையில் சாய்ந்த படி, ஃபோன் ஒலிக்கும் சப்தத்தைக் காதில் வாங்கிக் கொண்டே, தாங்கொணாக் கோபத்துடன்

காலை ஆட்டிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

மீண்டும் அழைப்பு வந்த போது, ஹுரைராவின் கோபம் நிறைந்த முகத்தைப் பார்த்து, அவள் ஃபோனை எடுக்கப் போவதில்லை என்று அந்தப் பெண்கள் நினைத்த போது பட்டென்று அதை எடுத்தாள்.

"நான் இன்னும் உயிரோடு இருக்கிறேன் என்று இப்போதுதான் தெரிந்ததா?"

"ஹுரைரா"

"என்ன? என்ன வேண்டும் உனக்கு?"

மறுமுனையில் சிறு தயக்கம் நிலவியது. "நீ எனக்கு முகமன் கூட சொல்லவில்லை. நீ எவ்வளவு அநாகரிகமான பெண் தெரியுமா?"

"ஆமாம், எனக்குத் தெரியும். புதிதாக ஏதாவது சொல்"

"சரி, நான் இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன்."

அதைக் கேட்டவுடன், ஏதோ உளறல் என்று நினைத்து உடனடியாக சிரிக்க வேண்டுமெனத்தான் ஹுரைராவுக்குத் தோன்றியது. ஆனால், அவனது குரலில், இறைவனை வேண்டுகையில் ஒலிக்கும் மிக நேர்மையான தொனி அதில் ஒலித்தது. மற்றவர்களை அச்சுறுத்தி தன் காரியத்தைச் சாதிக்கும் போது அவன் பேசும் பிரத்தியேகத் தொனி. ஆனால் அவள் மேலும் உறுதி செய்து கொள்ள விரும்பினாள்.

"அப்படியா? சரி,செய்து கொள்" சற்றுத் தயங்கினாள்."வாழ்த்துகள். இறைவன் உனக்கு அனைத்து வளங்களையும் பொழியட்டும்."

"ஆமீன்"

"நீ விளையாடுகிறாயா, என்ன?"

"ம்ம், நடக்கப் போவதைக் காத்திருந்து தெரிந்து கொள்" சொன்னவன் உடனே தொடர்பைத் துண்டித்தான்.

அவன் குரலில் தெரிந்த உறுதியும், அவள் மனதை உறுத்தும் வேறுபாடும் ஹுரைராவை வீழ்த்தின. மீண்டும் அழைத்த போது அவன் எடுக்காததலிருந்து அவன் சொன்னது எதுவுமே பொய்யில்லை என்று புரிந்தது.

கேட்கவே சகிக்காத வசைச் சொல்ல உச்சரித்தபடி ஃபோனை இருக்கையில் வீசினாள்.

ஹுரைராவின் கட்டற்ற உணர்ச்சி வெளிப்பாட்டையும், முன்னெப் போதையும் விட வெளிப்படையாக அவள் முகத்தில் தெரிந்த அதீத கோபத்தையும் கண்ட சகோதரிகள் அதிர்ந்து போனார்கள். பின் சட்டென கண்களில் நீர் வழிய தேற்றமுடியாத அளவுக்கு அவள் அழத் துவங்கிய பொழுது, பொறாமையென்னும் துர் அரக்கன் தாடைகள் விரிய, அவளை உள்ளும் புறமும் விழுங்கிக்கொண்டிருப்பதை அவர்களால் அறிந்து கொள்ளமுடியவில்லை.

—

"கட்டுஸோ, அவள் இறந்து கொண்டிருக்கிறாள்!"

மாடிப்படிகளின் கைப்பிடியை இறுகப் பற்றியவாறு, அங்கிருந்து கத்தினான் டோகோ. மீண்டும் அந்தப் பெண்ணை அடைத்து வைத்திருந்த அறைக்கு ஓடினான். அவன் குரல் மாளிகையின் வெற்றிடத்தில் ரீங்கார மிட்டுக் கொண்டிருந்தது.

கட்டுஸோ, சாரம் கட்ட உபயோகிக்கும் மரப் பலகையின் இரு பக்கமும் கால்களைத் தொங்க போட்டுக்கொண்டு, சட்டை அணியாத வெற்று உடம்புடன் அமர்ந்து ரொட்டியையும், கோக்கோ கோலாவையும் ஆனந்தமாக அனுபவித்து உண்டுகொண்டிருந்தான். அதை விடுத்து, இரண்டிரண்டு படிகளாகத் தாவி மேலே ஓடினான். அறையின் மூலையில், வயிற்றைப் பிடித்துக்கொண்டு, வலியில் துடித்துக்கொண்டிருந்த அந்தப் பெண்ணைக் குனிந்து பார்த்துக்கொண்டிருந்தான் டோகோ. சில நிமிடங்களுக்கு முன் அவன் வாங்கி வந்திருந்த உணவுப் பொட்டலத்தின் மீது உருண்டு அதைத் தட்டி, ஏற்கெனவே அழுக்காக இருந்த அவள் மேலங்கியை மேலும் அழுக்காக்கிக் கொண்டாள். மூடியிருந்த அவள் இரு கண்களிலிருந்தும் கண்ணீர் சொட்டிக்கொண்டிருந்தது.

"அவளை என்ன செய்து தொலைத்தாய்?"

"நானா? இல்லை, இல்லை, நான் உணவு எடுத்து வந்தபோதே அவள் இப்படித்தான் இருந்தாள்."

இப்போது அசையாமல் படுத்தபடி, உதடுகள் கோண விசும்பிக் கொண்டிருந்தாள். அவளைப் பார்த்த கட்டுஸோவுக்கு, அவள் உடலில் காயங்கள் ஏதும் தென்படவில்லை.

"அவளுக்கு என்னதான் ஆனது?" கட்டுஸோவின் தோளுக்கு மேலே எட்டிப்பார்த்தான் டோகோ.

"எனக்கு ஏதும் தெரியவில்லை, அவள் நடிக்கிறாள்."

கட்டூஸோவிற்கே தன் தீர்மானத்தின் மீது நம்பிக்கை ஏற்படவில்லை. டோகோ என்ன சொல்வான் என்று பார்த்தபோது, அவனும் முகத்தில் ஒரு கேள்விக்குறியோடு நின்றுகொண்டிருந்தான். அப்போதுதான், அவசரத்தில் தான் முகமூடி அணியாமல் ஓடி வந்துவிட்டது கட்டூஸோவிற்கு உறைத்தது. ஆனால் அவன் அறையினுள் நுழைந்ததலிருந்து இப்போது வரை அந்தப் பெண் கண்ணைத் திறக்கவே இல்லை. அறையை நீங்கிச் சென்றபோது, டோகோவும் அவனைத் தொடர்ந்தான். வெளியேறியதும் கதவைத் தாழிட்டான்.

பிரம்மாண்டமான வரவேற்பறை முழுவதும் தெரியும் பால்கனியின் ஓரம் நின்றுகொண்டிருந்தார்கள். மெல்லிய குரலில் கேட்டான் டோகோ.

"அவள் நடிக்கிறாள் என்று நீ உண்மையாகவே நினைக்கிறாயா?"

அந்தக் கேள்வியையே மெல்லுவது போலப் பற்களை நறநறத்தான் கட்டூஸோ.

"எனக்கு என்ன இழவு தெரியும்? எங்கே போய்த் தொலைந்தான் ஜோ?"

"அவன் இன்னும் திரும்பவில்லை. ரெஸாவைக் கூப்பிட வேண்டுமென்று நினைக்கிறாயா? ஆனால், ரெஸா எங்குதான் போயிருக்கிறான்?"

"ஏதோ வேலை இருக்கிறது, பார்க்கவேண்டும் என்று சொன்னான்"

"வேலையா?"

"அப்படித்தான் சொன்னான்."

"அவனுக்கும் அந்த ஹஜியாவுக்கும் இடையில் ஏதோ இருக்கிறது என்று நீயும் நினைக்கிறாயா?"

முட்டியை உள்ளங்கையில் குத்திக்கொண்டு, தலையைத் திருப்பி, தண்டுவட எலும்புகளை முறுக்கி நெட்டிச் சத்தம் கேட்கும் வரை உடலைத் தளர்த்தினான். பின் கைப்பிடிச் சுவரின் மீது சாய்ந்துகொண்டான்.

"அவனைக் கூப்பிடலாம் என்று நினைக்கிறாயா?" டோகோ மீண்டும் கேட்டான்.

கட்டூஸோ, வழக்கம் போல முட்டியை உள்ளங்கைகளில் வலுவாகத் தேய்த்துக்கொண்டே, தலையை ஆட்டினான். சட்டைப்பையில் கை விட்டுத் தேடியபோது, அதில் போதை சுருட்டு கிடைக்காமல், வெறும்

சிகரெட் இருந்ததைக் கண்டு மிக ஏமாற்றமடைந்தான். அதை பற்ற வைத்து, இருவரும் அர்த்தம் பொதிந்த அமைதியுடன் மாறிமாறிப் புகைத்தார்கள்.

அவர்கள் மனதிலும் அந்த இல்லத்திலும் படிப்படியாக அமைதி திரும்பியபோது, மனக்கலக்கத்திலிருந்த அந்தப் பெண் கதவைத் தட்டத் துவங்கினாள். முதலில் பலவீனமாக. பின் அவசரத்துடன்..இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். திரும்பி நின்று மீண்டும் புகைப்பதைத் தொடர்ந்தான் கட்டூஸோ. ஆனால் அந்தப் பெண் எழுப்பும் இடையறாத ஓசையால் எரிச்சலடைந்திருக்கிறான் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. சிகரெட் துண்டை வீசியவன் அது மேலிருந்து நேராகக் கீழே வரவேற்பறையின் தளத்தை அடைவதைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

அவர்கள் கதவைத் திறந்து உள்ளே சென்றபோது, அவள் ஒரு கையை அடி வயிற்றில் பிடித்துக்கொண்டு மறுகையால் தலைமுடியைப் பிடித்து இழுத்துக்கொண்டிருந்தாள். அது நடிப்பென்றால், அவள் ஒரு தேர்ந்த நடிகையாகத்தான் இருக்கவேண்டும். ஆனால், அவ்வளவு நம்பும்படியாக செய்யும் அளவுக்கு அவளிடம் நடிப்புத் திறன் இருக்காதென்று கட்டூஸோவுக்குத் தோன்றியது. அவள் என்ன சொல்கிறாள் என்று கேட்க மண்டியிட்டு அவள் முன் குனிந்தான்.

"அவளை ஆஸ்பத்திரிக்கு இட்டுச் செல்லலாமா?"

முழங்கையில் கைகளைத் தாங்கிக்கொண்டு முன்னே சாய்ந்து கேட்டான் டோகோ.

"உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா, என்ன?"

"அப்புறம் எங்கே சென்று தொலைந்தான் ரெஸா?"

—

26

"ஆட்டுக் கிடாய்கள் கூடியிருக்கும் இடத்தில், தனக்கும் கொம்புகள் இருப்பதாக ஒரு போதும் நத்தை சொல்லாது"

உன்னுடைய ஃபோன் அடிக்கிறது". இருக்கையின் கைப்பிடி மீது, அவள் கைகளுக்கு மிக அருகில் இருந்த அலைபேசியையும், கட்டிலில் ஏமாற்றமடைந்த முகத்தோடு அமர்ந்திருந்த ரெஸாவையும் பார்த்தாள்.

"எனக்குத் தெரிகிறது."

"அவன் சிரித்துக் கொண்டே கேட்டான். "யாரது?"

"என் மகள்."

"ஓஓ, எப்போது போகப் போகிறாள்?"

"எனக்குத் தெரியவில்லை. அவள் போகவேண்டுமென்றுதான் விருபப்படுகிறேன். இது போல ஒரு பெண் கணவனின் வீட்டைவிட்டு வெளியேறுவது சரியான செயல் இல்லை" கழுத்தைச் சுற்றிப் போர்த் தியிருந்த சாலமன் மீன் இளஞ்சிவப்பு வண்ண முகத்திரையை இயல்பான நேர்த்தியுடன் சரி செய்துகொண்டாள் பிந்த்தா.

அந்த அழகான அசைவு அவனைக் கிளர்த்தியது. அந்த முகத்திரை, ஒளி ஊடுருவும் மெல்லிய துணி, அந்த இளச்சிவப்பு வண்ணம் யாவும், புதிதாக மணமானவர்களை, புது மணப்பெண்ணை குறிப்பது போல இருந்தது. அந்த நேரத்தில் இது போன்ற எண்ணம் மனதில் எழுந்ததன் காரணம் ஏனோ சுவாரசியமாகப்படவில்லை. ஆனாலும் அது பிடித்திருந்தது. அந்த முகத்திரை அவளை இளமையாக் காட்டியதை மிக ரசித்தான். அவனுடன் அந்த அறையில் அவள் தனியாக அமர்ந்திருக்கிறாள், அவளைத்

தொடுவதற்கு அனுமதிக்காமல் இருந்தபோதும் உடனிருக்கிறாள்.

"உன்னுடைய முகத்திரையை அகற்றிவிட்டால் ஒருவேளை இன்னும் சவுகரியமாக இருக்குமே?"

"இல்லை. நன்றி."

"இதோ, நானே உதவி செய்கிறேன்"

"என் அருகில் வராதே," கண்டிப்பான குரலில் சொன்னாள். அப்படிச் சொல்வதற்காக அவள் வருத்தப்படவில்லை. அவனைத் தண்டிக்க விரும்பினாள்.

"இனிமேல் எப்போதும் என் மேல் உன் கைகூடப் படக்கூடாது தெரியுமா?

தொண்டையை சரி செய்தவாறு கேட்டான் "அன்பாகக் கூடவா?"

பிந்த்தா முறைத்தாள்.

அவளது பக்கவாட்டில், ஒரு ஸ்டூலை இழுத்துப்போட்டு அவளுக்கு மிக அருகில் இருக்குமாறு பார்த்து அமர்ந்தான். அவளது கைகளைப் பற்ற முயற்சி செய்தபோது தட்டி விட்டாள் பிந்த்தா.

"உனது நம்பிக்கையைத் திரும்பப்பெற என்ன செய்யவேண்டும் நான்?"

"இதோ பார், நாம் சில விஷயங்களை சரி செய்வது மிக அவசியம்."

"என்ன விஷயம்?"

"நம் இருவருக்குள்ளும் இனிமேலும் ஏதாவது இருக்குமென்றால், நீ கொஞ்சம் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்"

"எப்படி?"

"முதலாவதாக, இனிமேல் என் மீது கையை ஓங்கினால்..."

"மாட்டேன், எப்போதும் இல்லை, சத்தியமாக."

"சரி, அப்படி ஏதாவது நடந்தால், என் மகனை விட்டு உன்னை அடித்து, சிறைக்கு அனுப்பி விடுவேன். இதை நான் விளையாட்டாகச் சொல்லவில்லை."

"சரி, சம்மதம்."

பெருமூச்சு விட்டாள். "அப்புறம், நீ ஒரு வங்கிக் கணக்குத் துவங்க

வேண்டும், உன் பணத்தை வைத்திருப்பது எனக்கு அவ்வளவு வசதியாக இல்லை."

"கணக்குத் துவங்க நீ உதவி செய்வாயா?"

"மாட்டேன்."

"தயவு செய்து."

"மாட்டேன் என்று சொன்னேன்."

"ஹப்பா, ஹஜியா."

"இங்கே பார் ஹஸன், நான் தீவிரமாகப் பேசுகிறேன், இப்படியே இழுத்துக் கொண்டு இருக்க முடியாது."

"சரி சரி. செய்கிறேன், செய்கிறேன். அவ்வளவு தானா?"

புன்னகையை அடக்கிக்கொண்டாள். "நீ மீண்டும் பள்ளிக்குப் போய், உன் தேர்வை எழுதவேண்டும்."

ஓஓ, இறைவா! தலையை ஆட்டினான், "தயவு செய்து அது மட்டும் வேண்டாம்."

"ம்ம், அப்படியென்றால் சரி, எல்லாம் முடிந்தது என்று நினைக்கிறேன். இனி ஒன்றுமில்லை."

"இதோ பார், அதை இப்போது என்னால் செய்ய முடியாது, புரிகிறதா? எனக்கு சில கடமைகள் இருக்கின்றன. பிறகு எப்போதாவது செய்கிறேன், சரியா?"

"ஒரு வேளை, அதைச் செய்வதற்கு உன் மனது தயாராகும் போது என்ன நடக்கிறதென்று பார்க்கலாம், அதற்குள் யாராவது இளம் பெண்ணைக் கண்டு அவள் மேல் நீ பைத்தியமாகாமல் இருக்கும் பட்சத்தில்..."

சட்டைப் பையில் கைவிட்டு ஒரு சுருட்டை எடுத்தான். எடுத்தான். லைட்டரைத் தேடினான்.

" இங்கே, இதைப் புகைக்கக்கூடாது."

"இறைவா..விதிகளைக் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளேன். தயவு செய்து எனக்காக..."

அவள் எழுந்து கொண்டாள். "சரி, நீ கஞ்சா புகைத்துக் கொள், நான் வீட்டிற்குக் கிளம்புகிறேன்."

"என்னிடம் இவ்வளவு கண்டிப்பாக இருக்கிறாயே, எனக்குக்

கொஞ்சம் ஆசுவாசம் தேவை, புரிகிறதா?"

"கஞ்சா வேண்டாம்" அவளது திடமான முடிவு முகத்தில் புலப்பட்டது.

முனகிக்கொண்டே, படுக்கையில் விழுந்தான் ரெஸா. அங்கிருந்து கிளம்பிப் போய்விட மனம் உந்தியது. ஆனால், அதன் பின் அவளை அடிக்கக் கை ஓங்கி நின்றபோது அச்சத்தில் கலங்கி நின்ற அவள் முகத்தின் பிம்பம் அவனைத் தொல்லை செய்துகொண்டே இருக்கும் என அவனுக்குத் தெரியும். அந்த நிகழ்வுக்குப் பின், அவளை நினைக்கும் போதெல்லாம் அந்த பிம்பமே அவன் இதயத்தில் நிலைபெற்றிருந்தது. அந்த நினைவு , அந்தக் குற்றஉணர்வு, நிற்காமல் நகர்ந்துகொண்டே இருக்கும் மின் நடைபாதை போல தொடர்ந்து அவன் மனசாட்சியைத் தொந்தரவு செய்துகொண்டே இருந்தது. இதுவரை, அவன் பொருட்டு அவள் கண்களில் மிளிரும் வாஞ்சையும் அர்ப்பணிப்பும் அச்சத்தில் மூழ்கிப் போவதை அவன் ஒரு போதும் விரும்பவில்லை.

"ஹஸன், நான் உனக்கு உதவி செய்ய விரும்புகிறேன், உன் மீது எனக்கு அக்கறை உண்டு. வாழ்க்கையில் சரியான பாதையில் நீ நடக்கவேண்டும் என்று விருப்பப்படுகிறேன்.

"என் வாழ்க்கை சரியான பாதையில் தான் இருக்கிறது. புரிந்துகொள், சரியான பாதையில் தான் போகிறேன்..."

"அப்படி இல்லை, அது உனக்கும் தெரியும்."

தன் சொந்த மகனிடம் அமர்வது போல, அவன் அருகில் அமர்ந்து, கல்வியின் அவசியம் பற்றி எடுத்துச்சொன்னாள். மீண்டும்...அவன் எழுந்து ஜன்னலருகில் சென்று அமர்ந்து, ஒரு சிகரெட்டை எடுத்து, அவளைப் பார்ப்பது அவசியமில்லை என்பது போல அதைப் பற்ற வைத்தான்.

"எனக்குப் புரியவில்லை, இந்த பள்ளிக்குப் போவதைப் பற்றி ஏன் எப்போதுமே வற்புறுத்திக் கொண்டிருக்கிறாய்?"

அவனுடைய அலைபேசி ஒலித்தது, எடுத்து அதன் திரையைப் பார்த்து விட்டு திரும்பவும் தன் ஜீன்ஸ் பாக்கெட்டிலேயே திணித்துக் கொண்டான்.

"எடுத்துப் பதில் சொல்"

"பரவாயில்லை, அது கட்டூஸோ தான், என் சகோதரன், என் நண்பன்.."

"கட்டூஸோ?" பிந்த்தா வேடிக்கையாக சிரித்தாள். "இந்தப் பெயர் களெல்லாம் உங்களுக்கெல்லாம் எங்கிருந்துதான் கிடைக்கிறதோ தெரிய வில்லை.

ஏதோ சிந்தனையுடன் புகைத்துக்கொண்டிருந்த ரெஸா, பிந்த்தா எழுந்தவுடன், காலியாக இருந்த இருக்கையில் அமரப்போனான். அந்த மலிவான ஃபோம் இருக்கையில், அவள் உடலின் எடை காரணமாக சற்றே பள்ளம் விழுந்த தடம் இன்னும் பதிந்திருந்தது. ஒரு காலை, இருக்கையின் கைப்பிடி மீது போட்டுக்கொண்டு அமர்ந்தான்.

"ஏன் எனக்கு இப்படி மேலும் மேலும் ஊக்கம் தந்துகொண்டே இருக்கிறாய்? நான் நானாக இருக்கிறேன். இதுதான் நான், இப்படித்தான் இருக்க விரும்புகிறேன், புரிகிறதா?"

விரல்களுடன் விளையாடிக் கொண்டிருந்தாள் பிந்த்தா.

"என் கணவர், இறைவன் அவர் ஆன்மாவை அமைதியுறச் செய்யட்டும், அவரால் வேலைக்கு அமர்த்தப்பட்ட கிறிஸ்துவப் பணியாளர்களால் கொல்லப்பட்டார். அவர்களுடைய முதல் பெயரைச் சொல்லி அழைக்கும் அளவு நெருக்கமாக இருந்து அவர்களுடன் வேலை செய்தவர் அவர். என் சகோதரியின் கணவனும், மகனும் அவர்கள் பக்கத்து வீட்டு கிறிஸ்துவர்களால் கொல்லப்பட்டனர், ஏனென்றால் ஒரு பெண் அந்தக் காரியத்தைச் செய்யச் சொன்னாள் என்பதற்காக. ஆனால் என் சகோதரியும், அவள் மகள்களும் வன்புணர்விலிருந்தும், கொல்லப்படுவதிலிருந்தும் மற்றொரு கிறிஸ்துவப் பெண்ணால் காப்பாற்றப்பட்டார்கள், அந்தப் பெண்ணின் கணவனை, சில முஸ்லீம் இளைஞர்கள் கொன்றிருந்தார்கள்."

தன் முகத்திரையின் நுனியால் கண்களை ஒத்திக்கொண்டாள். அவள் கண்களில் எழுதியிருந்த மையின் கறை அந்த இளஞ்சிவப்புத் துணியில் கறுப்புத் திட்டாக அப்பிக்கொண்டது.

இதழ்களிலிருந்து சிகரெட்டை எடுத்துப் புகைப்பதற்குச் சிறிது இடைவெளி விட்டவன், "என்னிடம் ஏன் இதையெல்லாம் சொல்கிறாய்?' என்று அவளிடம் வினவினான்.

அவளுடைய விரல்களிலிருந்து பார்வையை உயர்த்தி அவன் கண்களைப் பார்த்தாள்.

"ஏனென்றால், நான் ஏன் மனிதாபிமானத்தை விட்டுத் தருவதில்லை, ஏன் உன் விஷயத்தில் இன்னும் விட்டுக் கொடுக்கவே மாட்டேனென்கிறேன் என்பதையும் நீ புரிந்து கொள்ள வேண்டும்.

—

வாடகை மோட்டார் சைக்கிளிலில் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த பிந்த்தாவை, தெரு முனையில் இடைமறித்த மல்லமா உம்மா, இறங்கச் சொல்லிக் கையசைத்தார். அவள் வாடகைப் பணம் கொடுத்ததும், மோட்டார் சைக்கிளை அதிவேகமாக வளைத்துத் திருப்பி, அவனது முழங்கால் தரையில் உராய்ந்துவிடும் அளவுக்கு சரிந்து, வண்டியின் பின் சக்கர டயர்கள் புழுதிப்புயலை கிளப்ப ஓட்டிச்சென்றான். அந்தச் செயல் இரண்டு பெண்களுக்கும் அசவுகரியத்தை ஏற்படுத்த, முகத்தைத் திருப்பி புழுதிப் படலத்தைத் தவிர்க்க உம்மா தனது ஹிஜாப் அங்கியாலும், பிந்த்தா தனது முகத்திரையாலும் மூக்கைப் பொத்திக்கொண்டார்கள்.

"பொறுக்கிப் பயல்" மல்லமா உம்மா இருமினார்.

புகையைக் கையால் தட்டிக்கொண்டே இருவரும் வயதில் மூத்த பெண்கள் நலம் விசாரிக்கும் முறையில் ஒருவரோடொருவர் பேசிக் கொண்டனர். இருவரின் உடல் நலத்தைப் பற்றியும், பேரக்குழந்தைகள் பற்றியும் விசாரித்துக் கொண்டனர். இளம் பெண்களுக்குரிய முகத்திரையை பிந்த்தா அணிந்திருந்ததை ஆட்சேபிக்கும் தொனியில், என் தோழி நயத்தகு முறையில் வயதாகிக் கொண்டிருக்கிறாள் என்று இரு பொருள் படக் கூறினாள். உம்மாவின் ஹிஜாப் கண்ணியமாகவும், வயதுக்குப் பொருத்தமானதாகவும் இருந்ததைக் கவனத்துடன் பார்த்தாள் பிந்த்தா.

அவர்களிருவரின், இளம் மதரஸா வகுப்புத் தோழி, லராபாவுக்குக் சமீபத்தில் பிரசவமாயிருந்தது. அவள் குழந்தையையும், அவளையும் பார்த்து வர அவளுக்கும் சம்மதமா என்று கேட்பதற்காகத்தான் நிறுத்தினேன் என்று மல்லமா உம்மா சொல்லிக்கொண்டிருந்தாள். ஐந்தாவது குழந்தை, ஆனாலும் அதிர்ஷ்டவசமாக சிக்கல் இல்லாத பிரசவம் என்று தொடர்ந்தாள். அங்கு செல்லத் தயாரான நிலையில் இல்லையென்றாலும், தானும் உம்மாவுடன் "வாழ்த்து தெரிவிக்கும் நிகழ்வுக்கு" நடந்து சென்று கொண்டிருந்தாள் பிந்த்தா.

சுட்டெரிக்கும் மதியவேளையில் தெருவிலுள்ள வீடுகளைக் கடந்து, தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டி, முகமே மாறிப்போய் நின்று கொண்டிருக்கும் மின்சாரக் கம்பங்களைக் கடந்து இரு பெண்களும் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். மல்லமா உம்மா, மோரிங்கா(முருங்கை) இலை உடல் நலத்துக்கு உகந்தது என்பதில் தான் உரையாடலை ஆரம்பித்தார். அது பின்னர் திசை மாறி பிந்த்தாவுக்கு எரிச்சலூட்டும் விதமாகத் திரும்பியது.

உரையாடல் எங்கிருந்து துவங்கியது என்று பிந்த்தாவுக்கு நினைவில்லை. ஆனால், எப்படியோ அவளும் ஈடுபாட்டுடன் தொடர்ந்தாள். ஒரு வேளை உம்மா, பழகவும் பேசவும் மிக எளிதானவர் என்பதும்

காரணமாக இருக்கலாம்.

"ஆமாம், நானும் ஜொகேல் சாறு அருந்துகிறேன்(முருங்கைச் சாறு) வாரம் ஒரு முறையாவது. வெள்ளிக்கிழமைகளில். அதை என் மகன் முன்க்கைலாவுக்கும் பழக்கப்படுத்தி விட்டேன். இங்கே வரும் போதெல்லாம் அதை அருந்துவான்."

"அது சிறப்பான செயல் ஹஜியா, அவன் ஆரோக்கியத்துக்கு மிக நல்லது,அவன் குழந்தைகளுக்கும் கூட"

"ஆமாம், அவர்கள் வரும்போதெல்லாம் க்வடான் ஜொகேல் (முருங்கை இலை, வேர்க்கடலை உருண்டை கலவை) பரிமாறுவேன். குழந்தைகளுக்கு அது மிகவும் பிடிக்கும்."

"ஆம், இந்தப் படித்த குழந்தைகள், நம்மை, உபயோகமில்லாத பச்சை இலைகளை உண்ணும் பழமைவாதிகள் என்று சொல்லிக்கொண்டிருந் தார்கள். இப்போது அவர்களே இதையெல்லாம் ஆய்வு செய்து, அவர் களுக்கு அதை ஊட்டி வளர்த்த நாம் அறியாதவர்கள் அல்ல என்று புரிந்து கொண்டார்கள்."

"இறைவன் சத்தியமாக...வல்லாஹி குமா, மல்லமா உம்மா"

"ஹஜியா பிந்த்தா, உன்னிடம் ஒரு விஷயம் கேட்கவேண்டும் என்றிருந்தேன்."

அந்த விஷயம் பற்றி உரையாடத் துவங்கும் முன்பே மல்லமா உம்மாவின் குரலில் இருந்த கனத்தை கவனம் கொண்ட பிந்த்தா, ஏதோ ஓர் அச்சத்தை மனதில் உணர்ந்தாள்.

"சொல்லுங்கள்."

"ம்ம், இதையெல்லாம் நான் நம்புவதில்லை, உன்னைப் பற்றிச் சொல்வதை உன்னிடமே கேட்டு விடுவதுதான் நியாயம்.இந்த வதந்திகள்..."

"வதந்திகள்? எந்த வதந்திகள்?"

ஆனால் லராபாவின் வீட்டுக்குச் செல்லும் சந்தின் மறுகோடியில், அவர்களை நோக்கி கண்டியா நடந்து வருவதைப் பார்த்தார்கள். அவளது காலணிகள் அவள் பின் சிறு புழுதியைக் கிளப்ப, கைகளை வீசிக்கொண்டு அவளுக்கேயுரிய விசித்திர நடையில் வந்துகொண்டிருந்தாள்.

கண்டியா அவர்களுக்கு முகமன் கூறினாள், மல்லமா உம்மாவுக்கு சற்று அதிக மதிப்புத் தந்ததைக் கவனித்தாள் பிந்த்தா. கண்டியாவின் ஒவ்வொரு சிறு செயலும் கேள்விக்குரியதாக இருப்பினும், உம்மா, வயதில் மிக

மூத்தவர், அவர்கள் அனைவரையும் விட அதிகமாக மதம் பற்றிப் படித்தவர், அதனால் அவர் அதிக வணக்கத்துக்குத் தகுதியானவர்தான் என்று சமாதானப் படுத்திக் கொண்டாலும், கண்டியா தன்னை அழைத்த குரலிலும் பார்த்த பார்வையிலும் ஏதோ ஒரு வித இகழ்ச்சி இருப்பதாகப் பிந்த்தாவுக்குத் தோன்றியது.

மூவரும் இணைந்து லராபாவின் வீட்டிற்குள் நுழைந்தனர். கதவருகிலிருந்தே, கண்டியா அறிவித்தாள்: 'அஸ்லாமு அலைக்கும், நாங்கள் 'வாழ்த்து' சொல்ல வந்திருக்கிறோம்.'

"வா அலைக்கும் ஸலாம். உள்ளே வாருங்கள்."

மத்தியில் அமைக்கப்பட்டிருந்த கணப்பின் வெம்மை பரவியிருந்த லராபாவின் சிறிய அறையில் உஸ்தாஸ் நூராவின் மனைவி முர்ஜா, அங்கிருந்த இருக்கையிலமர்ந்து குழந்தையைத் தாலாட்டிக் கொண்டு இருப்பதைக் கண்டார்கள். சற்று ஊதிப் போன முகத்துடனும், இதழ்களில் களைத்த புன்னகையோடும் படுக்கையில் அமர்ந்திருந்தாள் லராபா.

"வாருங்கள்."

பெண்கள் அனைவரும் ஒவ்வொருவராகக் குழந்தையைக் கையில் எடுத்து வைத்துப் பார்த்தார்கள். களி மண்ணாலான பொம்மை உயிருடன் நெளிவதாகவும், ஆட்டுக்குட்டி போல் வேதனைக் குரல் எழுப்புவதாகவும் உணர்ந்தாள் பிந்த்தா. மற்றவர்கள் குழந்தையின் வெளிறிய கண்களைக் கூர்ந்து நோக்கினார்கள்.

குழந்தையின் நல் ஆரோக்கியத்திற்காகவும், வளமைக்காகவும் பிந்த்தா பிரார்த்தித்தபோது, முர்ஜா கடகடவெனச் சிரித்தாள்.

"ஒரே இரவில் சிலர் எப்படிப் பரிசுத்தமானவர்களாகி விடுகிறார்கள் பாருங்கள். இறைவன் உன் வேண்டுதலுக்குப் பதிலளிக்கும் முன், அவரை தூய்மையான இதயத்துடன் அவரை அணுக வேண்டுமென்று அவர்கள் அறிவதில்லை. 'தூய்மையான் இதயம்' அப்படித்தான் குரான் சொல்கிறது."

அந்தக் கிண்டல் பேச்சு பிந்த்தாவின் மனதில் பதியவில்லை. எந்த விதமான பாதிப்புமின்றிக் குழந்தையை மல்லமா உம்மாவின் கையில் கொடுத்தாள். சங்கடமான அமைதி நிலவிய சூழலில் குழந்தையின் அழுகை அதைக் குலைத்தது.

குழந்தையைச் சுற்றிப் போர்த்தியிருந்த சால்வையைக் கழற்றி, அதன் வெளிறிச் சுருங்கிப் போயிருந்த சருமத்தை ஆய்வு செய்தார் மல்லமா உம்மா.

"இந்தப் பையனுக்கு மஞ்சள் காமாலை தாக்கியிருக்கிறது. உடனே

மருத்துவம் பார்க்க வேண்டும்."

"ஹா!!" லராபா எழுந்து அமர்ந்தாள். "இவனிடம் ஏதோ கோளாறு இருக்கிறது என்று நேற்று இரவுதான் இவன் அப்பாவிடம் சொல்லிக் கொண்டிருந்தேன், அவனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சொல்வதாகச் சொல்லியிருந்தார்."

"உண்மை, அங்கு எடுத்துச் செல்லுங்கள், ஆனால் மூலிகைகள் நன்றாக் குணப்படுத்தி விடக்கூடும்." குழந்தையின் தோலை லேசாக உரித்துப் பார்த்தார் உம்மா. "அப்படியே உரிந்து விடும் போல இருக்கிறது, நிச்சயம் இது காமாலை தான்."

முர்ஜாவுக்கு வியப்பாக இருந்தது. "கண்ணால் பார்த்தவுடனேயே எப்படி உங்களால் இதையெல்லாம் கண்டு கொள்ள முடிகிறது ?

சிறு பெருமையுடன் தனக்குள் சிரித்துக் கொண்டார் உம்மா.

தானும் எட்டிப் பார்த்துக் குழந்தையை கூர்ந்து நோக்கினாள் பிந்த்தா.

"அவன் குட்டிப்பிசாசு போலக் கத்திக்கொண்டிருந்தில் ஆச்சரியமில்லை, அதனால் தான் பிறந்தவுடன் ஒரு முறை மருத்துவமனையில் குழந்தையைக் காட்டி விடுவது மிக முக்கியம்."

அப்போது கண்டியா தன்னிச்சையாகக் கடகடவெனச் சிரித்தாள். அதில் தொனித்த ஆணவம் அனைவருக்கும் அதிர்ச்சியை அளித்தது.

"ஹஜியா பிந்த்தா ஷகாலி..."

ஹஜியா அவளைக் குழப்பத்துடன் நோக்கினாள்.

லராபா மிகுந்த சங்கடத்துக்கு உள்ளானாள்.

"மல்லமா உம்மா, எந்தெந்த மூலிகைகளைத் தர வேண்டும்? என்னுடைய மற்ற நான்கு குழந்தைகளுக்கும் இது போன்ற பிரச்சினைகளை நான் எதிர் கொள்ளவே இல்லை."

"ஓ, முதலில் அவனை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்."

பிந்த்தாவைப் பற்றி யோசித்த முர்ஜா பெருமூச்சு விட்டாள்.

"இந்த உலகமே முடிவுக்கு வரப்போகிறது என்று நினைக்கிறேன்"

அவளை நோக்கித் திரும்பினாள் கண்டியா. "உண்மையாகவா?"

"நிச்சயமாக, சிலருடைய பாவங்கள் அல்லாஹ்வின் கடுங்கோபத்தை தூண்டக் காரணமாகப்போகிறது. இந்த உலகை ஒரே இரவில் அவர் அழிக்கப்

போகிறார்."

"வல்லாஹி குவா! அல்லாஹ் மீது ஆணையாக"

"இனிக்கப் பேசும் சில வெட்கங் கெட்ட அம்மாக்கள், இள வயதுப் பையன்கள் பின்னால் சுற்றிக்கொண்டு, அவர்களுடன் ஹோட்டல் அறையில் தங்கி ஈனச் செயல்களில் ஈடுபடுவதைக் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா?"

"அல்லாஹ் காப்பாற்ற வேண்டும்." லராபா அமைதியின்றி நெளிந்தாள். இந்த உரையாடலின் போக்கை மாற்ற விரும்பினாள். "அல்லாஹ் அவர்களின் கருணைக்கு நான் நன்றி சொல்கிறேன். இருந்தாலும் கூட இந்தப் பிரசவ வலி என்பது யாருக்கும் வரக்கூடாது."

லராபா சொல்வதை கண்டியா பொருட்படுத்தவே இல்லை.

"முர்ஜா, நீ சொல்வதெல்லாம் நடக்காத மாதிரி பேசுகிறாய், இங்கே நமக்குள்ளேயே சில பெண்கள் அது போலத்தான் இருக்கிறார்கள். உதவாக் கரைப் பையன்களுடன் உறவு வைத்துக்கொண்டு அலைகிறார்கள்."

பிந்த்தா தலையைக் குனிந்து கொண்டாள், தன் நெஞ்சில் கை வைத்துப் பார்த்தாள். அது வேகமாகத் துடிக்கும் ஓசையை உணர்ந்தாள். கண்களை மூடிக்கொண்டாள். கண் விழிக்கும்போது நடந்தவை யாவையும் கெட்ட கனவென்று உணரப்போகிறோம் என்று நம்பினாள்.

ஆனால் கண் விழித்தபோது, அந்த இடத்திலிருந்து எப்படி வெளியேறுவது என்பதுதான் சவாலாக இருந்தது. அத்தனை பெண்களும் அவளையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவளது செயலுக்காக...அவள் யார்? "நடத்தை கெட்டவள்."

அவளுக்கு மூச்சு வாங்கியது. சட்டென எழுந்து நின்றாள்.

"நல்லது, நான் கிளம்புகிறேன் லராபா."

மற்றவர்களின் பார்வையைத் தவிர்த்தவள், குழந்தையைப் போர்த்தி யிருந்த சால்வையின் மீது சில நோட்டுகளை வைத்தாள்.

"ஹாபா! ஹஜியா எதற்கு இந்தப் பணம் எல்லாம்?"

லராபாவின் அசட்டுச் சிரிப்பு, அவளது தர்மசங்கடத்தை மறைக்க இயலவில்லை. அவள் வீட்டில் நடந்த உரையாடல், அதுவும் பாவம் தீண்டியவளாகவே இருப்பினும், பிந்த்தா அவள் குழந்தைக்காகப் பிரார்த்தனை செய்து ஆசீர்வாதம் வழங்க வந்த இந்த வேளையில் இப்படி நிகழ்ந்தது லராபாவை மிகவும் வேதனைப்படுத்தியது.

"குழந்தைகளுக்கான சோப்பு வாங்கிக் கொள், இறைவன் குழந்தையை நன்கு வாழ வைக்கட்டும்" திரைச்சீலையை விலக்கி வெளியே வந்து வெய்யிலில் நடக்கத் துவங்கினாள். வீட்டுக்குச் செல்லும் பாதை தூரமில்லை, ஆனால் தீராமல் நீண்டுகொண்டிருந்தது போலத் தோன்றியது. கண்ணீர்த் திரை மறைத்து காட்சிகள் மங்கலாகத் தெரிந்தது. ஒவ்வொரு அடி எடுத்து வைப்பதும் மிகக் கடினமாக இருந்தது.

தெரிந்தவர்கள் யாரையும் எதிரில் பார்த்துவிடக் கூடாதென்பதே அவள் வேண்டுதலாக இருந்தது. தலையைக் குனிந்துகொண்டு, தன் இளஞ்சிவப்புத் துகிலால் கண்களைத் துடைத்துக்கொண்டு நடந்தாள்.

—

வீட்டிற்குத் திரும்பிதும் அங்கு நிலவிய கொந்தளிப்பான சூழலில், தனக்கு நேர்ந்த எவற்றையும் சிந்திப்பதற்கு அவளுக்கு அவகாசம் இல்லை. ஃபைஸாவின் மனநிலை, இடையே ஓங்கி ஒலித்துக்கொண்டிருந்த ஹுரைராவின் கூக்குரலால், தற்சமயம் அமைதியாக இருந்தது.

தன்னுடைய நீண்ட இன்மை, கணவனை இரண்டாம் மனைவி கொண்டு வரும் முடிவுக்குத் தள்ளிவிட்டிருப்பது ஹுரைராவின் மனதுள் ஒரு பெரும் சூறாவளியையே உருவாக்கிக்கொண்டிருந்தது. அமர்ந்து காலை ஆட்டிக்கொண்டிருந்தவள், நடந்ததை நினைக்க நினைக்க அதிக உக்கிரமாகிக் கொண்டிருந்தாள். இறுதியில், கணவனை மீண்டும் அழைத்தபோது, அவன் அழைப்பை எடுக்கவில்லை. புயலென சீறியவள், அலைபேசியை சுவற்றில் அடித்து வீசி அது தரையில் விழுந்து இரண்டாகப் பிளந்து சிதறுவதைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"தேவடியாப் பயல்" கடும் வசைச்சொல்லால் கணவனுக்கு சாபமிட்டாள். கத்தரிக்கோலை எடுத்து, கடந்த ஈத் பண்டிகைக்கு அவன் அவளுக்குப் பரிசளித்திருந்த மெழுகு அச்சு வார்த்த ஆடையைத் துண்டு துண்டாகக் கத்தரித்து, பின் அந்தத் துண்டுத் துணிகளைத் தன்னைச் சுற்றிலும் சிதறி விட்டு நடுவில் அமர்ந்துகொண்டாள். வண்ணக் காகிதங்களின் மழை பொழிந்த நிலம் போல அவ்விடம் காட்சியளித்தது.

பிந்த்தா வீடு திரும்பியபோது, ஹுரைரா, பயணப்பெட்டியில் தன் துணிகளைத் திணித்துக்கொண்டிருந்தாள். அப்போதே ஜாஸ் கிளம்பிச் சென்று தன் வழியில் கணவனின் மண்டையில் அறிவைப் புகட்டப் போவதாக முடிவெடுத்திருந்தாள்.

"ஹஜியா, பார்த்துக்கொண்டே இரு, அவன் வம்சத்தில் அவனுடைய அப்பனைக் கூட விடமாட்டேன், தீர்த்துக்கட்டி விடுவேன், வல்லாஹி!" துணியைத் திணித்துக்கொண்டே சத்தியம் செய்தாள். கையிலிருந்த பல் துலக்கும் பிரஷ்ஷை சுவரை நோக்கி வீசியெறிந்தாள். அது உடைந்து போகாத போது ஒரு வித ஏமாற்றம் அடைந்தாள். ஆனால், உடையும் பொருட்களின் ஓசை அவளுள் பொங்கிய கடுஞ்சினத்தை சற்றும் தணிக்கவில்லை.

கதவுச் சட்டத்தின் மீது சாய்ந்து நின்றுகொண்டிருந்தாள் பிந்த்தா. யாருடைய கண்களையும் நேருக்குநேர் சந்திக்கும் திராணியற்றுப் போயிருந்தாள். அந்த வேளையில், இருள் குகையில் தன்னைப் புதைத்துக் கொண்டு அப்படியே மரணித்து விட வேண்டுமென்பதைத் தவிர வேறு எந்த நினைப்பும் எழவில்லை. ஆனால், வீட்டில் நிலவும் குழப்பங்கள் அவளுக்கு நேர்ந்த அவமானத்தைக் காட்டிலும் அதிகமாக இருந்தது.

"உன்னுடைய சண்டை, உன் கணவனோடுதான் ஹுரைரா, இறந்து போய்விட்ட அவருடைய தந்தை மீதல்ல. அப்புறம், குழந்தைகள் முன்பு இது போன்ற வசைச் சொற்களை நீ பேசுவதை நான் அனுமதிக்க மாட்டேன்."

ஹுரைரா அங்கிருந்து கிளம்புவதைத் தான் விரும்பினாள் பிந்த்தா. ஆனால் இது போன்ற கடும்கோபம் கொண்ட மனநிலையே, சம்பந்தப்பட்ட ஆண்களையும், பெண்களையும் குற்றம் செய்யத் தூண்டக்கூடியது. இந்த வேளையில் அவள் பயணம் மேற்கொண்டால் அது எந்த நல்வினைகளையும் தரப் போவதில்லை. மேலும், மதியம் கரைந்து மாலை நேரமாகி விட்டது, ஜாஸ் செல்ல உகந்த நேரம் அல்ல அது. எப்படியோ அவள் பயணத்தை மறுநாள் காலை வரை ஒத்திப் போடச் சம்மதிக்க வைத்தாள். அதற்குள், அவளது வெறுப்பும், சினமும் சற்றுக் குறையக்கூடும் என்று நம்பினாள் பிந்த்தா. பகல் நேரத்தில் சாலையும் பாதுகாப்பாக இருக்கும்.

அவள் இல்லாதபோது ஃபைஸாவுக்கு என்ன நேர்ந்தது என்பதை விளக்கமாக யாரும் சொல்லவில்லை. ஹுரைராவின் கிறுக்குத்தனமான செயல்கள் அதைப் பற்றி அதிகமாக யோசிக்கவிடாமல் தடுத்தன. வரவேற்பறை இருக்கையின் ஓரத்தில் மடிந்து படுத்தவாறு, தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தாள் ஃபைஸா. அவளுடைய மனச்சிக்கல்களைப் பற்றி உரையாட, அது சரியான நேரம் அல்ல என்று பிந்தாவுக்குப் புரிந்தது.

தனது அறைக்குள் அடைந்துகொண்ட பிந்த்தாவிற்கு , தான் என்ன செய்யப்போகிறோம், மற்றவர்கள் முகத்தில் எப்படி விழிப்பது என்று திகைப்பாக இருந்தது. மாலம் ஹுரூணா அவளை சந்திக்க வந்திருக்கிறார்

என்று உம்மி வந்து அறிவித்தபோது, இப்போது பார்க்க முடியாது என்று சொல்லி அவளை அனுப்பினாள். சில நிமிடங்கள் கழித்துத் திரும்பி வந்தாள் உம்மி.

"நீங்கள் பார்க்காதவரை, இங்கிருந்து நகரமாட்டேன் என்று சொல்லுகிறார்"

மெல்லிய பனிக்காற்று வீசிக்கொண்டிருந்த மாலையில் வெளியே முற்றத்தில் அமர்ந்திருந்தார் மாலம் ஹரூணா. பளிச்சென்று மின்னும் தன் தொப்பியைக் கழற்றி, தலையைச் சொறிந்துவிட்டு மீண்டும் அணிந்து கொண்டார். காத்திருந்த வேளையில், தன் ரேடியோவை இயக்கி செய்தி கேட்காமல், முன்னும் பின்னும் நடைபோடுவதில் நேரத்தைக் கழித்தார். மெடுகுரியின் மதுச்சாலை ஒன்றில் துப்பாக்கி ஏந்தி வந்த அடையாளம் தெரியாத நபர்கள் அங்கிருந்த பலரை சுட்டு வீழ்த்திய செய்தியை ஹௌஸா பிபிஸி ஒலி பரப்பிக்கொண்டிருந்தது.

சற்று நேரத்தில் லாவண்டர் திரவத்தின் நறுமணம் குமைய, பகட்டான ஹிஜாப் அணிந்து கொண்டு வந்த அவளிடம் பேசுவதற்காக மனப்பாடம் செய்து வைத்திருந்த வார்த்தைகள் எல்லாம் அந்த இரவினுள் கரைந்து போய், இப்போது வார்த்தைகளைத் தேடினார்... பிந்த்தாவின் கவனமின்மையும், குனிந்திருந்த தோள்களும், அவ்வப்போது அவள் வெளிப்படுத்தும் ம்ம் என்ற ஒலியும், அவர் திக்கித்திக்கிப் பேசுவதனாலேயே என்று அறிந்திருந்திருந்தார். அவருக்கே அவர் பேச்சு ரசிக்கவில்லை. ரேடியோவை எடுக்க நீளும் கரங்களை அடக்கிக்கொண்டு மௌனமாக அமர்ந்திருந்தார்.

அமைதி குறுக்கிட்ட அந்த இடைவெளியில், வெள்ளை நுனி வால் பூனை இருளிலிருந்து வெளிப் பட்டது. முட்கம்பி வளையங்களின் இடையே புகுந்து கம்பீரமாக நடைபோட்டது. சற்றே நின்று அங்கு அமர்ந்திருக்கும் வயதான ஜோடிகளின் மீது ஒரு விதமான குழப்பத்துடன் தன் கண்களைப் பதித்தது. மாலம் ஹரூணாவின் அசவுகரியத்தையும், பிந்த்தாவின் மனதை ஆக்கிரமித்திருந்த எண்ணங்களையும் மதிப்பீடு செய்வது போல அதன் பார்வை இருந்தது. பின் தன் முதுகை வளைத்து சாவகாசமாக நடை பயின்று அவ்வித்தை விட்டு அகன்றது.

மாலம் ஹரூணா தொண்டையைக் கனைத்துக்கொண்டார்.

"பார்த்தாயா, இப்போதெல்லாம் மனிதர்கள் எதற்கும் துணிந்தவர்கள் ஆகிவிட்டார்கள்."

பிந்த்தா முணுமுணுத்தாள். அவமானம் போர்த்தி அமர்ந்திருக்கும் அவளை அவரால் பார்க்கமுடியவில்லையா அல்லது பாவத்தை நுகரும்

சக்தியற்ற நாசி படைத்தவரா அவர்?

"இந்த போக்கோ ஹராம் அமைப்பினர் இப்போதெல்லாம் மக்கள் பொழுதுபோக்க வரும் இடங்களில் கூட வெடிகுண்டுகளை வீசியும், துப்பாக்கியால் சுட்டும் கலவரம் செய்கிறார்கள். செய்தியில் சொன்னார்கள். ஆறு பேரை சுட்டுக் கொன்றுவிட்டார்கள். எந்தக் காரணமும் இல்லாமல்..."

"அல்லாஹ் இந்த நிலையை மாற்றி நாட்டை மேம்படுத்தட்டும்."

"ஆமீன்" தைரியமாகப் புன்னகைத்தார் ஹரூணா. இதனால் தான் உங்களை எனக்குப் பிடிக்கிறது. இது போன்ற மனதை வாட்டும் செய்தி களைக் கேட்கும்போதெல்லாம் நீங்கள் இறைவனைப் பிரார்த்தனை செய்கிறீர்கள்.அது மிகச் சிறப்பான செயல்."

அந்த இரவில், முதல்முறையாக அவரை நிமிர்ந்து பார்த்தவள், அவர் ஒரு தவிப்புடன் இருப்பதை உணர்ந்தாள். கால்களை ஒன்றோடொன்று நெருக்கமாகச் சேர்த்து வைத்து, தொடைகளின் இடுக்கில் கரங்களை நுழைத்துக் கொண்டு அமர்ந்திருந்த கோலம் அவளுக்குத் தேவையற்றதாகத் தோன்றியது.

"நன்றி."

"ஹ்ஹஹா, நன்றியெல்லாம் சொல்லத் தேவையில்லை.உண்மையைத் தான் சொன்னேன்." அதன் பின் பேச ஏதுமற்றவராகிப் போனார். அவளிடம் சொல்ல வேண்டிய வார்த்தைகளை ஒன்று சேர்த்து, மனதில் உருப்போட்டு தலையில் ஏற்றிக்கொண்டிருந்தார்.

"பிரார்த்தனை மிக முக்கியமானது."

பிந்த்தா செருமினாள்.

"அப்படித்தான், நீங்கள் ஒத்துக் கொள்ளவேண்டும், நம்மைச் சுற்றி இருக்கும் இந்த மர்ம மனிதர்கள் அப்பாவி மனிதர்களைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றும், வெடிகுண்டுகள் வீசி அழித்துக்கொண்டும் இருக்கிறார்கள். அவர்கள் அரசியல்வாதிகள் பக்கம் மட்டும் கவனத்தைச் செலுத்தி, இந்த மக்களை அவர்களின் வறுமையோடு ஏதோ செய்யட்டும் பாவம் என்று நினைத்து விட்டு விட வேண்டும், ஆனால் அப்படி இல்லை, அரசியல்வாதிகள், வெகு ஜனங்கள் எல்லோரையுமே குறி வைக்கிறார்கள். என்னவோ, இந்த மாதிரி நிலைமை இருக்கும் போது, நாம் பிரார்த்தனை தான் செய்ய முடியும். அவ்வளவுதான்..."

பிந்த்தா கேலியாகச் சிரித்தாள்.

"அப்போ, அவர்கள் அரசியல்வாதிகளை மட்டும் சுட வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்களா?"

"ஊழல் செய்பவர்களை, தீய எண்ணம் கொண்ட அரசியல்வாதிகளை..."

"மோசமான அரசியல்வாதிகளை மட்டும் கொன்று விட்டு மற்றவர் களை விட்டு விட வேண்டும் என்று விரும்புகிறீர்களா?"

"அப்படித்தான், அப்படித்தான்..." தலையைப் பலமாக ஆட்டி ஆமோதித்தார்.

"கஷ்டம் என்று வரும்போது எல்லோருமே பாதிக்கப்படுகிறார்கள், மறந்துவிட்டீர்களா?"

"அதை எப்படி மறப்பேன்? அல்லாஹ் சொன்ன வார்த்தைகளல்லவா அவை?" அதைச் சொல்கையில், அவர் என்ன சொல்ல வேண்டும் என நினைத்து வந்தாரோ, அதற்கு முற்றிலும் மாறான திசையில் பேச்சு திரும்பிக் கொண்டிருப்பதை உணர்ந்தார்.

இறைவனைப் பற்றியும், அவரது போதனைகள் குறித்தும் உரையா டுவது அவரது நோக்கத்திற்கு சற்றும் உதவாது என்பதை அறிந்து கொண்டார். அடுத்து என்ன பேசலாம் என்பது குறித்து சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார்.

நகர்ந்து கொண்டாள் பிந்த்தா,

"ம்ம், நான் வீட்டிற்குள் போக வேண்டும், மிக நேரமாகிவிட்டது"

உங்களுடன் கழித்த நேரம் மிக அருமையாக இருந்தது. அப்படி இல்லாதிருந்தால் உடனே நீங்கள் போவதற்கு உடன்பட்டிருப்பேன். ம்ம், நாமிருவரும் எங்காவது வெளியில் போனால் என்ன என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன்.

"எப்படி?"

ம்ம், அதுதான், ஏதாவது ஓரிடத்திற்கு. நீங்களும், நானும். அழகான, தனிமையான இடத்திற்கு, இருவர் மட்டும்."

அவள் முறைத்தாள்.

ஹபா! பிந்த்தா, எனக்கு ஒரு வாய்ப்பு தரக் கூடாதா? எந்தொரு இள வயது ஆணுக்கும் நான் குறைந்தவன் அல்ல, சொல்லப் போனால், அவர்களை விட சக்தி வாய்ந்தவன், எனக்கு அனுபவமும் இருக்கிறது."

அவரையே விழித்துப் பார்த்தாள் பிந்த்தா.

அவளுடைய எதிர்வினையும், கண்களில் மின்னிய சினமும் கண்டு அவர் அதிர்ந்து போனார். ஆனால், கிடைத்த வாய்ப்பை விடாமல் பற்றிக் கொண்டார். மனதில் இருப்பதை அப்படியே சொல்லிவிட வேண்டும் என முடிவு செய்துவிட்டார்.

"ஹஜியா, என்னைப் படைத்த இறைவன் சாட்சியாக, உன் மீது எனக்கு தீராத...ம்ம், உன் இனிமையைச் சுவைக்க வேண்டுமென ஆசை."

அவர் சொன்னதை சிந்தித்துப் பார்த்தவளுக்கு, அவர் சொன்ன "உன் இனிமையைச் சுவைக்க வேண்டும்" என்பதற்கு சரியான அர்த்தம் என்னவாக இருக்கும் என்று திகைத்துப் போனாள். அவருக்கு ஏதாவது தெரிந்திருக்குமா அல்லது வழக்கம்போல உளறுகிறாரா? அப்படியே இருந்தாலும் யார் அதை நிரூபிக்க முடியும்? அவள் ரெஸாவுடன் இருந்ததைக் கண்ணால் கண்டவர்கள் யார்? ஆசை வெட்கமறியாது என்று சொல்வர்களே, அது போலவா? அதுதான் இப்படிப் பேசுகிறாரா?"

"மாலம் ஹரூணா, போதை மயக்கத்தின் உச்சத்தில் இருக்கிறீகளா? "

"பிந்த்தா..."

தன் கையை அவள் தொடையின் மீது வைத்தார். அவருடைய கையை வெடுக்கெனத் தட்டிவிட்டு அவள் எழுந்து கொள்ளும் முன் வழவழப்பான அவள் சரீரத்தின் மென்மையைக் கைகளில் தடவி அனுபவித்தார்.

"மாலம் ஹரூணா, இறைவா, என்ன ஒரு ஒழுங்கீனமான செயல் இது?"

எழுந்து நின்றவர், செய்யாத தவறுக்குத் திட்டு வாங்கும் வெகுளியான குழந்தை, அந்த தண்டனை தனக்கு இழைக்கப்படும் அநீதி என்று அறிந்திருந்ததைப் போன்றுத் தலைகுனிந்து தன் செருப்புகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"என் வீட்டை விட்டு வெளியேறுங்கள். நான் விதவை தான், ஆனால் அது என்னை நடத்தை கெட்ட பெண்மணியாக மாற்றியதில்லை. பொறுக்கிப் பயலே!"

கதவை நோக்கி விரைந்தாள்.

"என்ன தைரியம் உனக்கு? உன்னுடைய ஒழுக்கக்கேட்டுக்கு என் இரு கண்களுமே சாட்சி. நீயும், அந்தக் காணச்சகியாத அப்பன் பெயர் தெரியாத ரெஸாவும் ஹோட்டலில் இருந்து ஒன்றாய் செல்வதைப் பார்த்தவன் நான்."

அந்த இரவு அவள் தோள்களில் கனமாக இறங்கி, அதன் இருளின்

மடிப்புகளில் அவளுடைய போதம் மயங்கி, அவளது நாவை சில கணங்களுக்குக் கட்டிப் போட்டது.

"என்னை உளவு பார்த்ததற்கு நன்றி."

அங்கிருந்து தள்ளாடியபடியே அகன்றாள். மாலம் ஹரூணா, வருத்தம் தோய்ந்த, நிறவேறாத ஆசைகளின் சாயல் தொனிக்கும் குரலில் அவள் பெயரைச் சொல்லி அழைத்தபோதும் திரும்பிப் பாராமல் உள்ளே சென்று விட்டாள் பிந்த்தா.

—

27

"உணவுப்பண்டத்தை வாளால் வெட்டி உண்பதென்பது நடைமுறைக்கு ஒவ்வாதது"

லைலாவின் சிறையிலிருந்து விடியலைப் பார்ப்பது ரெஸாவுக்கு சுவாரஸ்யமாக இருந்தது. வெளிச்சக்கீற்றுகள் ஜன்னலிலிருந்து ஊடுருவவில்லை. இருள் மறைந்து ஒளி பரவுவதை புலன்கள் அறிவது மட்டுமே பகலென்பதை உணரச் செய்தது. பாயில் படுத்து உறங்கிக்கொண்டிருக்கும் லைலாவின் உடல் வரைவுகளைப் பார்த்தான். அவளது வளைவுகள் ஒளிபரப்பியிருந்த நிழலில் எடுப்பாகத் தெரிந்தன. சீராக ஏறி இறங்கும் அவள் சுவாசம் மனதுக்கு இதமாக இருந்தது.

அவள் அசைந்தபோது, நகர்ந்து சென்று மின் விளக்குகளை போட்டு, அறையில் பளீரென்ற வெளிச்சம் பரவச்செய்தான். கைகால்களை உதறி எழுந்தவள் சுவரோரமாகப் போய் ஒண்டிக்கொண்டாள். தன் ஆடைகளை ஒழுங்குபடுத்திக் கொண்டவள், தன் மீது எந்த அத்துமீறலும் நடை பெறவில்லை என்று உணர்ந்து நிம்மதியடைந்தாள். ஆனால், அச்சம் பொதிந்த விழிகளால் அறையெங்கும் துழாவினாள். அவள் சுவாசம் விரைந்தது.

"நான் உன்னை தொடப்போவதில்லை, புரிந்துகொள் பெண்ணே" அவனுடைய மெல்லிய கிசுகிசுப்பான குரல் அறையை நிறைத்தது.

"அவள் குழறினாள், இங்கு என்ன செய்கிறாய்? உனக்கு என்ன வேண்டும்?"

"உனக்கு உடல் நலமில்லையென்று கேள்விப்பட்டேன்."

அவள் தன் உடலைக் குறுக்கிக்கொண்டு, நெஞ்சின் மீது கை வைத்து, சுவாசத்தை சீராக்க முயன்றாள்.

"உனக்கு ஏதாவது நோய் இருக்கிறதா என்ன?"

"தயவு செய்து என்னை இங்கிருந்து போகவிடுங்கள்"

"லைலா, உனக்குத் தெரியும், அது என்னால் முடியாத காரியம்"

"எனக்கு உடம்பு சுகம் இல்லை, டாக்டரைப் பார்க்கவேண்டும், இப்படியே இருந்தால் நான் இறந்துவிடப் போகிறேன்"

"அது உன் மாதவிடாய் சமயத்தில் வரும் வலியா? ம்ம், அதாவது, பெண்களுக்கு அது போன்ற பிரச்சினைகள் உண்டு என்று கேள்விப் பட்டிருக்கிறேன், எனக்கு அதைப் பற்றியெல்லாம் அதிகம் தெரியாது."

முகமூடிக்குப் பின்னால் இருக்கும் அவன் முகத்தை ஊடுருவிப் பார்த்தவள், தனது மேலங்கியின் நுனியை வாயில் வைத்துக் கடிக்கத் துவங்கினாள். அதன் பின் நிசப்தமான விடியலை, தனது அழுகுரலால் திடுக்கிட்டு விழிக்கச் செய்துகொண்டிருந்தாள். ரெஸா எழுந்து, தன் உடையிலிருந்த தூசைத் தட்டிக்கொண்டு கதவைத் திறந்தான்.

—

அவளுடைய காலை உணவுடன், சில மாத்திரைகளையும் எடுத்து வந்தவன், எச்சரிக்கையுடன் அவற்றை பாயின் ஓரமாக வைத்தான். இப்போது சூரியன் முழுதாக முகம் காட்டியதால், அறை மிக வெளிச்சமாக இருந்தது. ஆயினும் மின் விளக்குகள் இன்னும் எரிந்துகொண்டிருந்தன. புறங்கை இடுக்கிக்கொண்டு வந்திருந்த ஒரு புத்தகத்தை எடுத்து அவள் முன் போட்டான்.

"நேற்று வரும் வழியில், ஒரு பழைய புத்தகக்கடைக்காரரிடம் இந்தப் புத்தகம் இருந்ததைப் பார்த்தேன். நீ படிக்கலாமென்று இதை வாங்கி வந்தேன். உனக்கு ஏதோ ஒரு வகையில் துணையிருக்கும் அல்லவா?"

முன்னால் சாய்ந்து புத்தகத்தின் அட்டையைப் பார்த்துவிட்டு மீண்டும் நேராக அமர்ந்துகொண்டாள்.

"என்ன? இந்தப் புத்தகத்தை ஏற்கெனவே படித்து முடித்து விட்டாயா?"

"அனைவருமே "*Life of Pi*" வாசித்திருப்பார்கள்."

அவன் சிரித்தான், நான் வாசிக்கவில்லையே, புத்தகம் வாசிக்கும்

அளவுக்கு எனக்குப் பொறுமை இல்லை.

"அது தான் வெளிப்படையாகத் தெரிகிறதே,"

அவள் ஆங்கிலத்தில் பேசினாள்.

"இவர் புகழ் பெற்ற எழுத்தாளரா? நான் கேள்விப்பட்டதே இல்லை"

"உனக்குத் தெரிந்திருக்கவேண்டும் என்று நான் எதிர்பார்க்கவும் இல்லை."

அவளுடைய வெடுக்கென்ற பேச்சைக் கேட்டுப் புருவத்தை நெரித்தான் ரெஸா. ஆனால், அதைப் பொருட்படுத்தவில்லை. காரணமில்லாமல் அவள் இப்படி நடந்து கொள்ளவில்லை, இது போன்ற அபாயத்திலிருக்கும் பெண்கள் கிறுக்குத்தனம் செய்வார்கள் என்று முடிவு செய்து புன்னகையுடன் தலையசைத்துக் கொண்டான்.

"இது ரொம்ப சுவாரஸ்யமான கதையா? எதைப் பற்றியது?"

சற்று நேரம் எடுத்து, தன்னைக் கண்ணியமான நிலையில் அமர்த்திக் கொண்டாள். முகத்தின் மீது வந்து விழுந்த கூந்தல் இழையை, தலையை ஆட்டி ஒதுக்கிக் விட்டாள்.

"என்னை மீட்பதற்கு எவ்வளவு தொகை பேசப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி சொல்வாயா?"

தொண்டையைக் கனைத்துக் கொண்டான் ரெஸா. பேச்சு வார்த்தை, ஆமாம். இன்னும் நடந்துகொண்டிருக்கிறது, புரிகிறதா?"

"என் மாமா என்ன சொன்னார்? தருகிறேன் என்று சொல்லிவிட்டாரா?"

திரும்பி கதவை நோக்கி நகர்ந்தான் ரெஸா. பூட்டைத் திறந்தவன் சற்றுத் தயங்கினான், "இதோ, உன் வயிற்று வலி மாத்திரைகள், சாப்பிடு, மருந்துக்கடையிலிருந்து வாங்கி வந்தேன்"

அறையிலிருந்து வெளியேறிக் கதவைப் பூட்டிச் சென்றான்.

—

கட்டுஸோ, ஜோ இருவரும் மரக்கைப்பிடிச் சுற்றின் இருபுறமும் கால்களைத் தொங்கப் போட்டு அமர்ந்தவாறு புகைத்துக் கொண்டிருந்ததைப் பார்த்தான் ரெஸா. டோகோ, வரவேற்பறையில் உறங்கிக்கொண்டிருந்தான். மதிய உணவு வாங்க ஜபி பார்க் சென்றிருந்த போது, அங்கு கண்ட ஒரு விலைமாதின் வசீகரத்தில் மயங்கிப் போனதால், உடலில் பொங்கிய காமத் தீயை, அபரிதமான கஞ்சா புகையால் அணைத்துக்

கொண்டான்.

அமைதியாகப் புகைத்துக் கொண்டிருந்தார்கள். அமைதியிழந்து தவித்த அவர்கள் மனதை அந்தப் புகையின் நெடி அழைத்துச் சென்ற பயணத்தில், சுயத்தை மறந்து ஆனந்தமாக இருந்தார்கள். அது அவர்களுக்குப் புகட்டிய சன்னமான அமைதியில் மூழ்கியிருந்தார்கள். அடுத்த சுற்றுக்கு அவர்கள் தயாராகையில், முகத்துக்கு எதிரே வட்டமிட்ட புகை வளையங்களால் சட்டென்று எரிச்சலடைந்தவன் போலக் கையை ஆட்டி அவற்றைத் தடுத்தான் ஜோ.

"ரெஸா, பண வசூல் விஷயத்தில் என்னதான் நடக்கிறது? "

முகத்தைத் திருப்பிக் கொண்டான் ரெஸா.

"இங்கே பார் ரெஸா, என்ன நடக்கிறதென்று எனக்குத் தெரிய வேண்டும், அவள் அப்பா நாம் கேட்ட தொகையைத் தர சம்மதித்து விட்டார் என நினைத்தேன்"

"அவள் அப்பா இல்லை, மாமா" கட்டூஸோ அவனைத் திருத்தினான்.

"ஆமாம், அவர் யாரோ, என்னவோ, பத்து மில்லியன், அது மூன்று நாள்களுக்கு முன்பு."

"நான்கு" நெட்டி முறித்தான் கட்டூஸோ."நான்கு நாட்கள்."

என்னவோ தெரியவில்லை, அது எப்போதோ நடந்தது போல இருக்கிறது தெரியுமா?"

"என்ன நடக்கிறது ரெஸா?"

"நமக்குப் பணம் கிடைக்கும், சரியான நேரம் அமையும்போது, புரிகிறதா?"

தன் சட்டைப்பையிலிருந்து ஜின் போத்தலை எடுத்து, கடகடவெனக் குடித்தான் ஜோ.

"அந்தப் பணத்தை நம்மிடம் கொடுக்க ஏற்பாடு செய்து விடுவோம். பத்து மில்லியன் நண்பா, பத்து மில்லியன்..."

"ஜோ, சரியான நேரம் அமையும் போது நிச்சயம் நமக்குப் பணம் கிடைக்கும்"

மரக்கைப்பிடிச் சுவற்றிலிருந்து குதித்தான் ஜோ. "இந்தப் பெண் இங்கேயே இறந்துவிடுவாள் போல இருக்கிறது" ரெஸாவின் முகத்தைப் பார்த்தான்.

"அதற்கப்புறம், நமக்கு எதுவும் கிடைக்காது, எதுவுமேயில்லை!"

சொல்லிக்கொண்டே வேகமாக அங்கிருந்து வெளியேறினான் ஜோ. ஏதோ ஒரு சஞ்சலத்தையும், நடக்கப்போவதை முன்கூட்டியே அறியும் அச்சத்தையும் அவ்விடத்தில் விட்டுச் சென்றிருந்தான்.

அறையிலிருந்த இருவரும் மௌனமாக அமர்ந்திருந்தார்கள். ஆனால் கட்டூஸோ தயங்கித் தயங்கிப் புகைப்பதிலும், வழக்கத்திற்கு மாறான முரட்டுத்தனத்துடன் அவ்வப்போது உடலின் ஏதோ ஒரு எலும்பை சடாரென்று வளைத்து நெட்டி முறித்ததிலும் அவனும் சொல்லத் துடிக்கும் தன் கவலையை சொல்லாமல் மனதுள் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறான் என்று ரெஸாவுக்குப் புரிந்தது.

"உனக்கு ஏதாவது சொல்ல வேண்டுமா?"

"ரெஸா, நேற்று அந்தப் பெண் கிட்டத்தட்ட இறந்தே விட்டாள் தெரியுமா?

"ம்ம் நாம் எல்லோரும் ஒரு நாள் இறந்து போகத்தானே போகிறோம்?"

"வலி தாளாமல் நிலத்தில் புரண்டு துடித்துக் கொண்டிருந்தாள். நாங்கள் அவளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் முடிவுக்குத் தயாராகி விட்டோம். அங்கே வைத்து உடனே கைது செய்யப்பட்டிருப்போம். இந்தப் பேரம் சரியாகப் படியாவிட்டால், இவளை அப்படியே விட்டுவிடலாம். நாம் இந்த சனியன் பிடித்த இடத்திலிருந்து போய்விடலாம்."

"என்ன அர்த்தம்?"

"இந்தப் பெண்ணிடமிருந்து விடுபடலாம். எனக்கு சான்சிரோவின் நினைவாக இருக்கிறது. அங்கு போகவேண்டும். இந்த இழவு வீட்டில் உட்கார்ந்துகொண்டு, இறக்கப்போகும் பிசாசு போல இந்தப் பெண் கத்துவதைக் கேட்பதெல்லாம் எனக்கு ஒத்து வராது, உனக்கே தெரியும்"

தலையாட்டிக்கொண்டே புகைத்துக் கொண்டிருந்தான் ரெஸா.

"இந்த பேரத்தை எது தடுத்து நிறுத்துகிறது? அவள் மாமா நாம் கேட்ட தொகையைத் தர ஒப்புக்கொண்டார் என்று நினைத்தேன்.

"இது பண விஷயம் பற்றியதல்ல."

"அப்புறம் 'த்தா,' என்ன விஷயம் தான் இது?"

அவனைப் பார்த்த ரெஸா, அந்தக் கேள்வியைப் பற்றி சிந்தித்துப் பார்த்தான். அது எதைப் பற்றியது என உறுதியாகச் சொல்லும் நிலையில்

தானும் இல்லை என்று அவனுக்கு உறைத்தது.

"கொஞ்சமாவது நினைத்துப் பார்த்தாயா ரெஸா? எதற்காக இதையெல்லாம் செய்கிறோம் என்று?"

"ஓஓ கட்டூஸோ, என் முகத்துக்கு முன்னால் நிற்காதே போ, இது போன்ற முட்டாள்தனமான கேள்விகளை என்னிடம் கேட்காதே"

"முட்டாள்தனமான கேள்விகள்? உனக்கு என்னவாயிற்று ரெஸா? நீ இப்படி இருந்ததே இல்லை, முன்பெல்லாம் எல்லா விஷயங்களையும் அக்கறை எடுத்துக் கொண்டுக் கவனமாகச் செய்தாய், இப்போது அத்தனை யும் சிதைந்துகொண்டிருக்கிறது, ஆனால் அதைப் பற்றிய கவலையே இல்லை."

"என்ன சிதைந்து கொண்டிருக்கிறது கட்டூஸோ? என்ன சொல்ல வருகிறாய்?"

அந்த உரையாடல் தந்த மனவெழுச்சியில் தைரியமுற்றவனாக ரெஸாவின் அருகே வந்து அவன் கண்களை உற்று நோக்கினான்.

"இதோபார்ரெஸா, இங்கே நடப்பது என்னவென்று நமக்கே தெரியாது, வெட்டியாகக் காவல் காத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறோம். பணம் பண்ண இடையில் ஒரு வாய்ப்பு வந்திருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொள்ளாமல் ஏன் இங்கே அமர்ந்திருக்கிறோம்?"

"இந்தப் பணியைச் செய்து கொடுக்க நாம் கூலிக்கு நியமிக்கப்பட்டு இருக்கிறோம்"

"அந்தப் பணி தான் என்ன?"

"இந்தப் பெண்ணை இங்கே பிடித்து வைத்திருக்கவேண்டும். அதற்குத் தான் நமக்குக் கூலி கொடுக்கிறார்கள்."

"ஆமாம், அவளைப் பிடித்து வைத்திருக்கவேண்டும், எதற்கு? எங்களுக்கு ஒரு இழவும் தெரியாது. ஆனால் நாங்கள் தான் அவளைப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறோம். நீ இங்கே இருப்பதே இல்லை. நீதான் அந்த ஹஜியாவின் உறுப்புக்குள் தலைகுப்புற மூழ்கிக் கிடக்கிறாய், நீ விழித்துக் கொள்ளவேண்டும்..."

சட்டென தான் தரையில் கிடப்பதை உணர்ந்தான் கட்டூஸோ. கண் முன்னால் பறந்த தீப்பொறிகளைத் தட்டி விட்டுத் தெளிவாகப் பார்க்க முயற்சி செய்துகொண்டிருந்தான், காதில் சீழ்க்கையொலி நிரம்பி ரீங்காரமிட்டது. தாடையில் மரத்துப் போன உணர்வு. அப்போதுதான் ரெஸா

தன்னைத் தாக்கியிருக்கிறான் என்று புரிந்தது.

அவனையே பார்த்துக்கொண்டிருந்த ரெஸா, கோபத்தை அடக்க மிக சிரமப்பட்டான். இறுதியாக அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

கட்டுஸோ, தாடையைத் தொட்டுப்பார்த்து, அதற்கு என்ன சேதாரம் நிகழ்ந்திருக்கும் என்று அறிய முயற்சி செய்தான். விரல்களால் எலும்புகளைத் தடவி விட்டவன் சரியாகி விடும் என்ற முடிவுக்கு வந்தான். தரையில் இங்கும் அங்கும் பார்த்து, புகைத்துக் கொண்டிருந்த சிகரெட்டின் மீதமிருந்த துண்டைத் தேடி எடுத்து உதடுகளில் பொருத்திக் கொண்டான்.

—

"சொல்"

"எனக்கு செனேட்டரிடம் பேச வேண்டும்"

ஒரு சந்திப்பின் நடுவே இருக்கிறார். என்ன நடக்கிறது அங்கே?"

"நான் இப்போதே அவரிடம் பேச வேண்டும்"

"ரெஸா, எல்லாம் சரியாகப் போகிறதா? ஏதாவது பிரச்சினையா? நீ எரிச்சலாக இருப்பது போலத் தெரிகிறாய்.முக்கியமான பிரமுகர்களின் சந்திப்பில் இருக்கிறார். இப்போது அவர் வந்து பேசமுடியாது என்று உனக்கும் தெரியும். என்ன பிரச்சினை இப்போது?

அலைபேசியை இறுகப் பிடித்தான். மறுமுனையில் இருக்கும் மோசஸின் முகத்தைக் கற்பனை செய்து பார்த்தான். வழக்கம் போலவே, முட்டியால் அவன் முகத்தைப் பெயர்த்தெடுக்கும் அடக்க முடியாத ஆசையை உணர்ந்தான்.

"என்ன நடக்கிறதா? எதுவுமே தெரியாத இருட்டில் இருக்கிறோம்."

"இல்லை, என்ன செய்ய வேண்டுமென்ற விதிமுறைகள் கொடுக்கப் பட்டிருக்கிறன. அதன் படி செய்யுங்கள்."

"அவள் மாமாவுடன் பிணைத்தொகை பேரம் பேசி அது படிந்து பல நாட்களாகி விட்டன."

"மறு கட்டளை வரும் வரை அந்தப் பெண்ணை அடைத்து வைத்திருக்க வேண்டும். இதுதான் உனக்குச் சொல்லப்பட்ட அறிவுரை."

"அந்தப் பெண் இறந்து விட்டால்?"

"அந்தப் பெண் இறந்து போகாமல் பார்த்துக் கொள்! இறைவா, நீங்கள் எவ்வளவு கற்றுக்குட்டிகளாக இருக்கிறீர்கள். இந்த விஷயத்தை உன்னை ஏன் கையாளச் சொன்னார் என்று எனக்கு இன்னும் ஆச்சரியமாக இருக்கிறது. நீண்ட மௌனத்துக்குப் பின், அவன் உஸ்ஸ் என்ற சப்தத்துடன் அழைப்பைத் துண்டித்தபோது சாட்டை நுனியால் தன் தன்மானத்தைத் தாக்கியது போல உணர்ந்தான் ரெஸா.

—

கால்சட்டைப் பையில் அலைபேசியைத் திணித்துக்கொண்டே, செனேட்டரின் எதிரில் உள்ள மேசை மீது கோப்புகளை வைத்தான். நிமிர்ந்து கண்ணாடியின் விளிம்பு வழியாக தன் இளம் காரியதரிசி மோசஸின் முகத்தைப் பார்த்தார்.

"சொல் மோசஸ்."

"அந்த இளைஞர்கள் சார், இந்தக் காரியத்தில் பொறுமையிழந்து கொண்டிருக்கிறார்கள்."

"அப்படியா?"

"ஆமாம் சார், எனக்கே புரியவில்லை, அந்தப் பெண்ணால் எந்தப் பயனும் இல்லை என்று புரிந்த பின்னும் அவளை ஏன் இன்னும் பிடித்து வைத்திருக்கிறோம்?"

செனேட்டர் மைக்குடி, நாற்காலியில் சாய்ந்து கண்ணாடியைக் கழற்றினார். முகத்தைத் தேய்த்துக் கொண்டு புன்னகை புரிந்தார்.

"நீ சதுரங்கம் விளையாடுவாயா மோசஸ்?"

"இல்லை சார்"

"அப்போ உன்னால் புரிந்து கொள்ள முடியாது. அரசியல் என்பது ஒரு சதுரங்க விளையாட்டு. சில வேளைகளில் நோக்கம் எதுவுமின்றி காய்களை நகர்த்துவோம். வேறொரு சமயம் சிப்பாய்களைப் பிடித்து வைத்துக் கொள்வதும் ஆட்டத்தின் ஒரு அம்சம். சில வேளைகளில் சிப்பாய்களைப் பலி கொடுக்க வேண்டியிருக்கும்.ஆனால், முக்கியமான விளைவுகள் மீது கண் வைத்துக் கொண்டே இருக்க வேண்டும். இங்கு ஒரு முக்கியமான விளைவு இருக்கிறது."

"மிகச் சரியாக சொன்னீர்கள் சார் "

"நான் சொல்லும் வரை, அவர்கள் இதே நிலையில் இருக்குமாறு பார்த்துக்கொள்."

"ஆகட்டும் சார்."

"நல்லது. இப்போது தேநீர் அருந்த வேண்டும் போல உள்ளது."

—

பூட்டைத் திறந்து ரெஸா உள்ளே போனபோது, ஜன்னலருகில் நின்று கொண்டிருந்தாள் அவள். பார்த்தவுடனே, ஜன்னலை உடைத்துக் கொண்டு தப்பிச் செல்ல முயல்கிறாள் என்றுதான் நினைத்தான். ஆனால், அவன் வருகையை எதிர்பார்த்துத்தான் நின்றிருந்தாள் என்பதும் அவளுடைய மெல்லிய விரல்கள் பட்டு ஜன்னல் கம்பிகள் எவ்வித சேதத்தையும் எதிர் கொள்ளவில்லை என்பதும் புரிந்தது.

"உனக்குத்தான் இந்த ஆடைகள், புரியுதா?"

குனிந்து தன்னுடைய அழுக்கு உடையைப் பார்த்துக்கொண்டாள். பாயில் வைத்திருந்த உடைகளையும் பார்த்தாள். சாலைகளில் தள்ளுவண்டியில் பொருட்களை வைத்து, சுற்றியலைந்து விற்கும் வியாபாரிகளிடமிருந்து வாங்கி வந்ததைப் போல இருந்தன. மலிவானவை, ஆனால் சுத்தமாக இருந்தன. அவன் அந்த இடத்தை விட்டுச் செல்வதற்காகக் காத்திருந்தவள் மீண்டும் ஜன்னலோரம் திரும்பிக்கொண்டாள்.

"இப்போது எப்படி இருக்கிறாய்?"

"இன்னும் சாகாமல்தான் இருக்கிறேன்."

சிரித்துக்கொண்டே சற்று அசவுகரியமாக நின்றான். அவள் முன்னால் கண்ணியமாக எப்படி நிற்பது என்று புரியவில்லை. அவள் தன் தலை முடியை சிக்கெடுத்து கைகளால் தடவிக் கொண்டிருந்தாள். அந்த சூழலிலும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு நளினமாகத் தன்னைக் கையாண்டு கொண்டாள்.

"அப்புறம், இந்தப் படிப்பு நீ படிக்கிறாயே, அதுதான்..." வார்த்தை களைத் தேடினான்.

"*Palaeontology.*"

"ஓ, ஆமாம், எதனால் அந்தப் படிப்பு படிக்க விரும்பினாய்?"

"அது ஒரு முட்டாள்தனமான படிப்பென்று நீ சொன்ன ஞாபகம்,

இப்போது ஏன் கேட்கிறாய்?"

முதன்முதலாக அவனுடைய கண்களை ஊடுருவி அவள் பார்த்த போது அதில் தெரிந்ததை அவள் இழந்திருந்ததாக அவன் எண்ணியிருந்தான். இப்போது அவற்றின் மெல்லிய கீற்று அவள் கண்களில் தெரிவதை உணர்ந்து கொண்டான். "உத்வேகம், பேரார்வம்!"

"சரி விடு, நான் ஏதோ கொஞ்சம் பேசலாம் என்று நினைத்தேன், அதுவொன்றும் முக்கியமில்லை."

பாயில் அமர்ந்தாள். கைகளால் கூந்தலைப் பின் பக்கம் தள்ளி விட்டுக்கொண்டு, மூக்கை உறிஞ்சினாள். ஆனால் அழவில்லை. அவள் கண்களிலிருந்த ஆர்வம் மங்கிப் போனதைக் கவனித்தான்.

"எதற்காக என்னை இங்கே அடைத்து வைத்திருக்கிறாய் என்பது உனக்கே தெரியாதல்லவா?" அப்படித்தானே?"

"என்ன?"

"இது வெறும் பிணைத்தொகைக்காக இல்லை. அப்படித்தானே? ஏனென்றால் என் மாமா அந்தத் தொகையைக் கொடுக்க எப்போதோ சம்மதித்திருப்பார், நிச்சயமாக எனக்குத் தெரியும்"

"ம்ம், சில சிக்கல்கள், புரிந்து கொள்."

"என்ன சிக்கல்?"

"ஏதேதோ சிக்கல்கள்."

அவளை இங்கு கொண்டு வந்து அடைத்த முதல் நாள் இரவுக்குப் பிறகு, இன்று முகமூடி சட்டகம் அணிந்திருந்த அவன் கண்களை கூர் நோக்கிய போது அவற்றில் நிச்சயமின்மையின் சாயலைக் கண்டாள்.

"இது அரசியல். இல்லையா?" அப்படியே பேச்சைத் தொடர்ந்தாள். அதிகமாக உடலை அசைக்காமல், அவளுக்குத் தோன்றிய கருத்துகளை விளக்கிக் கொண்டிருந்தாள். அவள் மாமாவின் அரசியல் எதிரிகள் இந்தக் கடத்தலுக்குப் பின்னணியில் இருக்கக் கூடும் என்றும், அசைக்கவே முடியாத மாமாவை அவளின் பிரச்சனையின் பக்கம் கவனம் குவிக்கவும், அவர்கள் அடைய நினைக்கும் ஏதோ அரசியல் நிலைப்பாட்டிலிருந்து மாமாவை ஒதுக்கி வைக்கவும் தான் இப்படிச் செய்திருக்கிறார்கள். பணத்திற்காக அல்ல என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

தான் நினைக்கும் இந்த எண்ணங்களின் சாத்தியத் தன்மையை யோசிப்பது போல பேச்சை சற்று நிறுத்தி ரெஸாவைப் பார்த்தாள்.

முகமூடிக்குப் பின்னாலிருந்த ரெஸா அவளையே வாயைப் பிளந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

"நான் இவர்கள் இலக்கு இல்லை, என் மாமா மகன் தான் அவர்கள் இலக்கு, நான் இல்லவே இல்லை, இப்போது எல்லாம் புரிகிறது" இந்த வார்த்தைகளை ரெஸாவிடம் சொல்வதை விட தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

"ஹ ஹா, உன் மூளையில் நிறைய அபத்தங்கள் கொட்டிக்கிடக்கிறது." அவன் சிரிப்பு அவனுக்கே போலியாகத் தெரிந்தது.

இது அபத்தம் இல்லை, உன்னால் பார்க்க முடியவில்லையா? நீயும் நானும் இப்போது எந்த மாதிரி இருக்கிறொம். சரி, நான் உன் கைதி என்றும் நீ சிறை அதிகாரி என்றும் வைத்துக் கொள்ளலாம். நாம் கடலில் ஒரு கப்பலில் பயணம் போகிறோம் என்று வைத்துக் கொள். அந்தக் கப்பல் கவிழ்ந்து நாம் இருவரும் ஏதோ ஒரு மரக்கட்டையை ஆதரவாய்ப் பற்றிக் கொண்டு மிதந்து கொண்டிருக்கிறோம், அப்போது நீ என்னைப் பிடிப்பதற்காக கைகளில் விலங்கு மாட்டி விடுவாயா? சொல்."

அவள் விவரித்த காட்சியைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தான் ரெஸா. எப்போதுமே, கடல் என்பது நீலமும் பசுமையும் கலந்த நீர் நிரம்பியது, தூர தேசங்களுக்கு பயணம் செய்வது, மென்மையாகத் தாலாட்டுவது...ரெஸா சிரித்தான்..

"என்னிடமிருந்து யாரும் தப்ப முடியாது."

லைலா புன்னகைத்தாள் "நினைத்துப் பார்க்க ஒரு கடல் உண்டு, நினைத்துப் பார்க்க மூர்க்கமான கடல் உண்டு."

அவன் சிகரெட்டைப் பற்ற வைத்தான். லைட்டரிலிருந்து விடுபட்ட க்ளிக் என்ற உற்சாகச் சப்தம் அந்த அறையின் அமைதியில் திடுக்குறச் செய்தது. அவளுக்கு முதுகைக் காட்டியபடி அமர்ந்து புகைக்கத் தொடங்கினான்.

"நீ புகைப்பிடிப்பாயா?"

இல்லையென்று தலையசைத்தாள்.

"உன்னைச் சுற்றிலும் புகைப்பவர்களைப் பார்த்துப் பழகியிருப்பாய் இல்லையா? இங்கிலாந்தில், நிறையப் பேர் புகை பிடிப்பார்கள் இல்லையா?"

"எனக்கு ஒரு காதலன் இருந்தான், அவன் புகைப்பான்."

"ஓ, அப்படியா? நீ அவனைத்தான் திருமணம் செய்து கொள்ளப் போகிறாயா, அதுதான், உன் காதலன்?"

வறண்ட புன்னகையை உதித்தாள். "எங்கம்மாவுக்கு அது பிடிக்கும் என்று தோன்றவில்லை, அப்புறம், அந்த அளவுக்கு அவனை எனக்குப் பிடிக்காது. உண்மையில், நாங்கள் இருவரும் இப்போது சேர்ந்து இல்லை."

"அஹ், அம்மா."

"ஆமாம், அம்மாதான்."

அவன் அன்னை, அரேபியா ஓடுகாலியின் நினைப்பு வந்தது. இன்றும் கூட நினைவுகளில் சுழன்றடிக்கும் அவள் வாசனைத் திரவியத்தின் நறுமணம் சிகரெட் புகை போல அவன் கண் முன் மிதந்தது.

"உன் அப்பா? உன் ஆங்கிலக் காதலனை வீட்டிற்கு அழைத்துச் சென்றால் அவர் என்ன சொல்வார்?"

"எனக்கு ஆறு வயதாக இருக்கும்போதே அப்பா இறந்து விட்டார். அவள் தன் உடலைக் கைகளால் கட்டிக்கொண்டாள். அவரைப் பற்றி ஒன்றுமே தெரியாது."

"அல்லாஹ் அவர் மேல் கருணை காட்டட்டும்"

"ஆமீன்" சுவரின் மீது உடலைச் சாய்த்துக்கொண்டு, கால்களை முன்னால் நீட்டிக் கொண்டாள்.

"நீ ஒருவரைக் கடத்திக் கொண்டு வைத்திருக்கிறாய் என்பது தெரிந்தால் உன் அம்மா என்ன சொல்வார்?"

"ஹா!" அவளை வேசி என்று சொல்வதிலிருந்து நாக்கை அடக்கிக் கொண்டான். எழுந்து கதவை நோக்கி நடந்தான்.

"எனக்கு என் அம்மாவைப் பார்க்க வேண்டும் போல உள்ளது." அவள் கண்களில் கண்ணீர் இல்லை, ஆனால் குரலில் இருந்தது. அந்தக் குரல் ரெஸாவை நிற்க வைத்து அவள் புறமாகத் திரும்பிப் பார்க்க வைத்தது.

"உன் இதயத்தில் அதை உணர்ந்து, என்னை இங்கிருந்து செல்ல நீ அனுமதிப்பாய் என்று நம்புகிறேன். அவரை மீண்டும் பார்த்து, உங்களை நான் மிக நேசிக்கிறேன் என்று சொல்ல வேண்டும்."

கதவருகில் நின்றிருந்தவன், அன்னையருக்கும் குழந்தைகளுக்குமான அபூர்வமான பந்தத்தை எண்ணி வியந்து போனான். அதைப் பற்றித் தான் என்றுமே புரிந்து கொள்ள இயலாது என்பதை நன்கு அறிந்திருந்தான் அவன்.

"மாலம் ஒளடு..."

"யாரது? என் பெயர் அதுவல்ல."

"அப்படியென்றால் உன் பெயர் என்ன?

"ஒன்றுமில்லை, எனக்குப் பெயர் இல்லை."

"உன்னை ஏதாவது சொல்லிக் கூப்பிட வேண்டும், நீ பெயர் சொல்ல மாட்டேன் என்கிறாய், அதனால் மாலம் ஒளடு தான் உன் பெயர்"

"கதவில் பொருத்தப்பட்டிருந்த அழகான கைப்பிடியில் கை வைத்தவாறு அவளைத் திரும்பிப் பார்த்தான்.

"உனக்கு என்ன வேண்டும்?"

அவள் பெருமூச்செறிந்தாள். "என் அம்மா சொல்வார், லைலா, நாளை உலகமே அழிந்து போகும் என்று தெரிந்தாலும் கூட நீ ஒரு மரம் நட வேண்டும்"

அவள் சொன்னதை யோசித்துப் பார்த்து விட்டு தோளைக் குலுக்கினான் ரெஸா. "அதனால் என்ன பயன் இருக்கப் போகிறது?"

கதவைத் திறந்தவன், வெளியேயிருந்து பூட்டுவதற்காக சாவியைத் திருப்பும்போது, மூடிய கதவின் வழியாக அவள் உரத்துச் சொன்னது கேட்டது. "கடலை நினைவு வைத்துக் கொள், மாலம் ஒளடு! கடலை நினைவு வைத்துக் கொள்! கடல்."

—

28

"பாலைப் போன்றது நல் மதிப்பு, திரிந்து விட்டால் மீண்டு வராது"

காலை நேரத் தொழுகைக்குப் பின் விடியலின் முதல் வெளிச்சக் கீற்றுக்குக் காத்திருந்தாள் ஹுரைரா. முகத்திரையை எடுத்து அணிந்து கொண்டாள். பின், கதிரவன் விழித்தெழுந்ததும், போருக்குச் செல்லும் வீரன் போன்ற முகத்தோற்றத்துடன், பெட்டியைத் தூக்கிக் கொண்டுக் கிளம்பி விட்டாள். அவள் இருந்தபோது, வீட்டில் நிரம்பியிருந்த மங்கலான துயரச் சாயலும், மூர்க்கத்தின் வாசனையும் அவற்றிற்குப் பதிலாக இப்போது நீண்ட கோடைக்குப் பின் பூக்களின் மீது பொழியும் மழைக்கு ஒப்பானதொரு நிம்மதியான உணர்வாக மாறியிருந்தது.

ஹுரைராவிடம், திருமண வாழ்க்கைக்கு உன் கைகளாலேயே நெருப்பு வைத்து விடாதே என்று எச்சரித்து வழியனுப்பி வைத்த பின், அவள் செல்வதையே பார்த்துக்கொண்டிருந்த பிந்த்தா, இளங்காலைக் காற்றில் மந்தமாக, மிதக்கும் இதயத்துடன் வீட்டிற்குள் நுழைந்தாள். சமையலறைக்குச் சென்று தனக்கும் குழந்தைகளுக்கும் ஆடம்பரமான காலை உணவைத் தயாரித்தாள். பொறித்த உருளைக்கிழங்கு, முட்டை ஆம்லெட் செய்து அதன் மீது மிகச் சீராக வெட்டப்பட்ட வெங்காயம் தக்காளி வளையங்களை வைத்து அலங்கரித்தாள். அவற்றுடன் குடல் சாறும், பூசணிக்காய் அரைத்த குழம்பும் சமைத்து முடித்தாள். அதன் பின் உணவு உண்ண அமர்ந்தாள்.

ஆனால், இப்போதும் வீட்டில் சோகத்தின் நிழல் படிந்திருந்தது. முதலாதவதாக உம்மி. சிடுசிடுப்பான தன் அன்னையுடன் அவளுக்கு சுமுகமான உறவு இல்லையென்ற போதிலும், அவள் செல்கையில் வாடிப் போனாள். அதன் பின் ஃபைஸா. தன்னைச் சுற்றி நடக்கும் விஷயங்களில்

அதிக நாட்டமில்லாமல், அமைதியாக அமர்ந்து நினைவிலிருந்து அழிந்து போன தன் சகோதரனின் முகத்தை ஓவியம் தீட்ட முயற்சி செய்து கொண்டிருந்தாள். கண்ணாடி முன் நின்று குழி விழுந்த கண்களைப் பார்த்த போது, அவளுக்கே அவை யாரோ அந்நியருடையதைப் போலத் தெரிந்தது. கண்ணாடி மீது ஒட்டப்பட்டிருந்த அலி நுஹுவின் படத்தின் மீது பார்வை பதிந்தது. அப்போதுதான் முதல்முறையாகப் பார்ப்பது போல், அங்கேயே நின்றபடி சில நிமிடங்களைக் கடத்தினாள். எந்த விதமான தூண்டுதலும், சடங்குகளும் இன்றி அந்தப் படத்தைக் கண்ணாடியிலிருந்து உரித்து எடுத்து உள்ளங்கைகளில் வைத்துக் கசக்கினாள். பின், அறையிலிருந்த அந்த நடிகனின் அனைத்துப் படங்களையும் நீக்குவதில் நேரம் செலவிட்டாள். சுவரிலிருந்து, அலமாரிக் கதவுகளிலிருந்து, கதவுச் சட்டங்களிலிருந்து, புத்தக அட்டையிலிருந்து, எல்லாவற்றிலிருந்தும் எடுத்து விட்டாள். படங்கள் பிடிவாதமாக ஒட்டிக்கொண்டிருந்த புத்தகங்களின் அட்டையையே கிழித்தெறிந்தாள். இப்படித் தேடித் தேடி படங்களை வேட்டையாடும் போது தான், அவளது வரை பலகையைத் தாங்கும் சட்டகத்தைக் கண்டு பிடித்தாள். அவள் கலைப் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற நாளிலிருந்து, அலமாரியின் அடியில் அது கிடத்தி வைக்கப்பட்டதை மறந்தே போயிருந்தாள். சுவரிலிருந்த நடிகனின் படத்தைக் கிழித்தெறிந்து விட்டு அந்தச் சட்டத்தை சுவரின் மீது சாய்த்து வைத்தாள்.

அதையெல்லாம் செய்து முடித்தபின் அறையின் நடுவே, கசங்கிய படங்களும், ஸ்டிக்கர்களும் மலை போல் குவிந்திருந்தன. அவற்றையெல்லாம் எடுத்துக்கொண்டு போய் வீட்டின் பின்னாலிருந்த குப்பைத் தொட்டியில் போட்டாள்.

வரவேற்பறையின் இருக்கையில், முதுகை வளைக்காமல் நேராக அமர்ந்து, கால்களைத் தாமரை மலர் போல் குவித்து சுஃபி ஞானி போல அமர்ந்திருந்தாள். சுவரில் மாட்டியிருந்த தொலைக் காட்சிப் பெட்டியின் வெற்றுத் திரையை நோக்கி, தியானம் செய்பவர்களின் கவனச் சிதறலற்ற ஈடுபாட்டோடு, ஆன்ம பலம் முழுவதும் திரட்டித் தன் கண்களின் முன் சகோதரன் ஜமீலுவின் முகத்தைக் கொண்டு வர பிரயத்தனப் பட்டாள்.

அறையிலிருந்து வெளிப்பட்ட பிந்த்தா, அரூப ஒளியினாலும், மிக அமைதியான சூழலாலும் போர்த்தப்பட்டிருந்த ஃபைஸாவைக் கண்டு சற்று அச்சமடைந்தாள். அவளைத் தொந்தரவு செய்யக்கூடாதென்று மிக கவனத்துடன் தன் உடைமைகளை எடுத்துக்கொண்டு வெளியே சென்று மதரஸாவை நோக்கி நடந்தாள். இப்போது ஹுரைரா இல்லை. இந்த வேளையில் ரெஸா மீண்டும் வீட்டிற்கு வந்தால் எப்படி இருக்கும் என்னும் கற்பனை செய்து பார்த்தாள். அது சனிக்கிழமையாதலால், உம்மியும்,

ஃபைஸாவும் பள்ளிக்குச் செல்லாமல் வீட்டிலிருப்பதுதான் ஒரே பிரச்சினை. ஆனால் அதற்கும் ஏதாவது வழி கண்டுபிடித்து விடலாம்.

லராபாவின் வீட்டில் நடந்த நிகழ்வுக்குப் பிறகு, மதரஸாவிற்குப் படிக்கப் போவதை நிரந்தரமாக நிறுத்தி விடலாமா என்று இரவு முழுவதும் யோசித்தாள். ஆனால், இப்படி அமைதியாக முகத்தைத் திருப்பிக் கொள்வது வதந்திகளை மேலும் ஊக்குவித்து, அவமானத்தில் அவளைப் புதைத்து விடும். அதனால், அவதூறு சொல்பவர்களை எதிர்கொண்டு, நிலைமை மேலும் மோசமாகும் முன் அதற்கொரு முடிவு கட்டவேண்டும் என்று உறுதி கொண்டாள்.

ஒரு கண்ணியமான பெண் மீது பொய்யாக அவதூறு சொல்பவர்களைப் பற்றி ஷாரியா விதிகள் என்ன சொல்கிறது என்று சிந்தித்துக் கொண்டே மதரஸாவை அடைந்தபோது அங்கு இரு குழுக்களாகப் பெண்கள் அமர்ந்திருந்ததைப் பார்த்தாள். பெரிய பையிலிருந்து, தான் கொண்டு வந்திருந்த பொருட்களை எல்லாம் எடுத்து மேசை மீது பரத்தி வைத்து தன்னைச் சுற்றியிருந்த குழுவை உற்சாகப் படுத்திக் கொண்டிருந்தாள் மரியா. ஒப்பனைப் பொருட்கள், அரேபியாவின் வாசனைத் திரவியங்கள், இந்தியாவிலிருந்து மருதாணி, தேன் ஜாடி, பாலியல் உணர்ச்சியை அதிகரிக்கும் ஊக்க மருந்துகள், க்ரீம் போன்றவை இருந்தன. இன்னொரு குழு, பின்னால் உள்ள பெஞ்ச்சில், மல்லமா உம்மாவைச் சுற்றி அமர்ந்து முந்தைய வகுப்புப் பாடங்களை, மூத்த பெண்மணியின் வழிகாட்டலில் படித்துக்கொண்டிருந்தார்கள். உஸ்தாஜ் நூரா வகுப்பில் இல்லை. அவர் மனைவி முர்ஜாவையும் காணவில்லை.

மரியாவின் மேசை மீது வைக்கப்பட்டிருந்த சில பொருட்களால் ஈர்க்கப்பட்டு, அங்கு சென்ற பிந்த்தா தேன் ஜாடியைக் கையிலெடுத்துப் பார்த்தாள். பின், மரியாவை நோக்கி, அது உண்மையிலேயே தூய்மையானதா என்று விசாரித்தவுடன் அவளைப் பார்த்து முகம் சுளித்தாள் மரியா.

"ம்ம், அது கலப்படமற்றது, அதைத் தான் கேட்டீர்கள் என்று நினைக்கிறேன்."

மற்ற பெண்கள் அவள் பக்கம் திரும்பிப் பார்த்தார்கள். அவளை நோக்கித் திரும்பிய கவனத்தைக் கண்டு சற்று மிரண்டு போனாள் பிந்த்தா.

"இல்லை, ம்ம், சில சமயம் சர்க்கரை சேர்த்து விடுவார்கள் என்று சொல்வார்கள்."

"பிந்த்தா, வாங்க விருப்பமில்லையென்றால் பொருட்களைக் கீழே வை, இதைப் பற்றிக் குறை கூற நீ யார்? கழுதைப் புலி நாயைப் பார்த்து

கொடூரமானது என்று சொல்லியதாம்," மரியா சினத்தில் குமைந்தாள்.

நிலைமையின் போக்கு இப்படி மாறும் என அறியாத பிந்த்தா, தன்னை சுதாரித்துக் கொள்ளும் முன்பே அங்கு லாடி வந்து சேர்ந்தாள். அரை டஜன் விவாகரத்திற்கும், பல ஆண்களுக்குப் பிள்ளைகள் பெற்றவளும்தான் லாடி. தன் முகத்துக்கு நேராக விரல்களை ஆட்டிக் கொண்டே, தொண்டையைக் கனைத்துச் சரி செய்து கொண்டாள்.

"ஏதோ கெட்ட நெடி அடிக்கிறதே ,என்னது அது?"

அவள் பேச்சைக் கேட்டு மூக்கை உறிஞ்சிய பெண்கள் எந்த நெடியையும் உணராமல் லாடி பக்கமே திரும்பினார்கள். சற்று இடைவெளி விட்டு அவளுக்குத் தேவையான கவனம் கிடைத்ததை உறுதி செய்து கொண்ட பின் அவள் அறிவித்த செய்தி, அங்கிருந்த அனைத்துப் பெண்களையும், பின்னால் அமர்ந்து தீவிரமாகப் பாடங்களைப் படித்துக் கொண்டிருந்த மல்லமா உம்மாவின் குழுவினரையும் கூட, அதிர்ச்சியில் உறைய வைத்தது.

"அது கள்ளத் தொடர்பின் வாசம். வல்லாஹி! எங்கிருந்தாலும் எனக்குத் தெரிந்து விடும். இந்த வகுப்பில் யாரோ நடத்தை கெட்டவள் இருக்கிறாள்." த்தூ என சுவரை நோக்கி உமிழ்ந்து விட்டு முகத்தை திருப்பிக் கொண்டாள்.

"யாரைப் பார்த்து நடத்தை கெட்டவள் என்கிறாய் லடி? என்னைப் பற்றி அவதூறு பரப்புகிறாயா? இதை நீ நிரூபிக்க முடியுமா?"

லடி கேலியாகச் சிரித்தாள். "உன் பெயரை யார் சொன்னார்கள் இப்போது? ஆனால், குற்றம் புரிந்தவர்களுக்கு மழையிலும் வியர்க்கும் என்று சொல்வார்கள் இல்லையா, அது சரிதான்."

கனத்த அமைதி நிலவியது. கையிலிருந்த தேன் ஜாடியை மேசை மீது வைத்து விட்டு, நடு வரிசையில் இருந்த தனது இருக்கைக்குத் திரும்பினாள் பிந்த்தா. தலைகுனிந்தவாறு அமர்ந்து கொண்டாள். அப்போது அவளுக்குப் பின் வரிசையில் அமர்ந்திருந்த புது மணப்பெண் ஷஃபாத்து, வயிற்றில் அரும்பியிருந்த இளம் உயிரின் காரணமாகக் குமட்டல் ஏற்பட்டதால் சட்டென எழுந்து வெளியே ஓட முற்படுகையில் அவசரத்தில் பையைத் தட்டி விட அது கீழே விழுந்தது. தரையில் சிதறிய புத்தகங்களை சேகரித்துக் கொண்டு, பையால் வாயைப் பொத்திக்கொண்டு, வகுப்பிலிருந்து விரைந்து வெளியேறினாள் ஷபாத்து.

தன் ஹிஜாபை சரி செய்து கொண்டாள் லடி. மீண்டும் ஒரு முறை உமிழ்ந்தவள், தலைகுனிந்து அமர்ந்திருந்த பிந்த்தாவை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே வகுப்பை விட்டு வெளியேறினாள். அவளைத்

தொடர்ந்து இரு பெண்கள் வெளியேறினார்கள்.

மல்லமா உம்மா வகுப்பைத் தொடர்ந்தாள். தேவைக்கும் அதிகமாக அவள் குரல் உரத்து ஒலித்தது. அனைவருக்கும் கேட்பதற்காகவும், அமிழ்த்தி வைத்திருந்த கோபத்தின் வெளிப்பாடாகவும் அவள் குரல் எதிரொலித்தது.

அவள் சொல்வது பிந்த்தாவின் காதில் விழுந்தது, ஆனால் அதில் கவனம் செல்லவில்லை. அந்த வார்த்தைகள் அவள் பிரஞ்கைக்கு அப்பால் அலையலையாக ஓடி, அவள் எண்ணங்களின் பின்னணியில் பதிந்து கொண்டிருந்தன. அவள் இருக்கைக்கு வந்தமரும் வரை தொடர்ந்த நிசப்தத்தை நினைவு கூர்ந்து அவள் மனம் சுரணையற்றுப் போயிருந்தது . அவள் விழிகளில் தேங்கிய நீரால் பார்வை மங்கித் தெரிந்தது. ஆனாலும் அந்தக் கண்ணீர்த் துளிகளைக் கண்களிலிருந்து இறங்கி, கன்னங்களில் வழிய அவள் அனுமதிக்கப் போவதில்லை. எவ்வளவு நேரம் அப்படி அமர்ந்திருந்தாளோ அவளுக்கே தெரியாது: தலைகுனிந்தும், விழிகளில் சிறைப்பட்ட கண்ணீரோடும், மனதில் இரைச்சலிடும் மௌனத்தோடும்... அவள் எழுந்தபோது, அங்கு நிலவிய அமைதியை உணர்ந்தாள். பையை எடுத்துக் கொண்டு, இயன்ற வரை கௌரவமாக, அளவான அடி எடுத்து வைத்து, தோள்களிரண்டையும் நிமிர்த்தி நேராக நடந்தாள். ஆனால், கனமான இதயத்தை அவளால் உணர முடிந்தது... நினைவு தெரிந்த நாள் முதலாய், அவள் உணர்ந்திராத மாபெரும் சுமையாக இருந்தது.

வரவேற்பறையிலிருந்த கட்டுஸோ, உடற்பயிற்சியில் ஈடுபட்டி ருந்தான். அந்தக் கட்டிடத்தில் வேலை செய்தவர்கள் விட்டுச் சென்ற பொருள்களிலிருந்து சில உபகரணங்களைச் செய்துகொண்டான். நீண்ட குழாயின் இருபுறமும், பெயிண்ட் வாளியில் காங்கிரீட் நிரப்பித் தொங்க விட்ட பளு தூக்கிப் பயிற்சி செய்துகொண்டிருந்தான். தூக்கும்போது வளையும் பலவீனமான குழாய்களைப் பார்த்ததும்,சான் சிரோவில் பளு தூக்க அவன் உபயோகப்படுத்தும் உபகரணங்களின் நினைவு வந்தது. அவற்றின் உதவிகளால் பெரிய, உயர்ந்த ரக ஜெபு (மாடு) களின் தசைகளைப் போல அவனது தசைகளைக் கட்டமைக்க முடிந்தது. அவ்வப்போது எழும் அவன் உறுமல் அறையின் வெறுமையைக் கிழித்தது. நிமிர்ந்தபோது, மாடிக் கைப்பிடிச் சுவரில் சாய்ந்துகொண்டு கீழே அவனைப் பார்த்துக் கொண்டிருந்த ரெஸாவைக் கண்டதும் சினம் குமிழிட்டது. பளுவைக் கீழே வைத்து விட்டு சாரத்தின் மேல் அமர்ந்தவனுக்கு மூச்சு வாங்கியது.

படியிலிருந்து இறங்கி வந்த ரெஸா, பெஞ்ச்சில் அவனருகில் வந்து அமர்ந்துகொண்டான். வழிந்த வியர்வையை சட்டையால் துடைத்துக் கொண்டிருந்தான் கட்டூஸோ.

"உன்னைத் தாக்குமாறு நடந்து கொண்டாய் கட்டூஸோ."

பற்களை நறநறத்துக் கொண்டே முன்னால் குனிந்தான் கட்டூஸோ.

அதைக் கவனித்தாலும், கண்டுகொள்ளவில்லை ரெஸா. பளிங்குக் கல் தரையில், மனதில் உதித்த ஏதோ ராகத்திற்கேற்பக் கால்களால் தாளம் போட்டுக்கொண்டிருந்தான்.

"நாம் லைலாவை செனேட்டருக்காகப் பிடித்து வைத்திருக்கிறோம். அவருக்குப் பணம் தேவையில்லை. அவளுடைய மாமா அல்ஹாஜி பக்கோரி, இந்தப் பகுதியின் கட்சி செயல்பாட்டில் செனேட்டரின் போட்டி யாளர். எவ்வளவு நாட்கள் இவளைப் பிடித்து வைத்திருக்கிறோமோ அவ்வளவு காலம் அவர் கட்சிப் பணிகளில் கவனம் செலுத்த முடியாது. தேர்தலுக்குள் கட்சியைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிடுவார் செனேட்டர்."

கட்டூஸோவின் மந்தமான மாட்டு முகம் மனதில் பொங்கிய எந்த உணர்வுகளையும் அப்போது வெளிப்படுத்தவில்லை. ஆனால் அந்த வார்த்தைகள் மெல்ல மனதில் இறங்கி, முகம் சிவந்து அவனுள் எரிந்த கடுங்கோபத்தை வெளிக்காட்டியது. தன்னுடைய உள்ளங்கையைப் பலமாகக் குத்திக்கொண்டான். அதனாலெழுந்த சப்தம் ரெஸாவுக்கு எரிச்சலூட்டியது.

"அப்படியென்றால் தேர்தலுக்குப் பின் அந்தப் பெண்ணை விட்டு விடுவோம், பிணைத் தொகை நமக்குக் கிடைக்குமா?"

தலையைச் சொறிந்து கொண்டான் ரெஸா. அந்த நேரத்தில், காரணம் புரியாமல், கறுப்புப்பையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த சிறு பெண் குழந்தையின் நினைப்பு அலையாடியது. மரித்துப் போன அவள் முகம், சிறு சடைகளின் நுனியில் குஞ்சம் கட்டித் தொங்கிய நீலம், சிவப்பு, மஞ்சள் வண்ண மணிகள் அவன் மனக்கண்ணில் தெரிந்தன. அந்தக் கொலைகாரனின் நெஞ்சில் கத்தியைச் செருக வேண்டும் என்னும் தாங்கொணா வெறி மீண்டும் மனதில் துடிப்புடன் எழும்பியது அவனுக்கே அதிர்ச்சியளித்தது. அந்த மனிதனின் வெதுவெதுப்பான இதயத்தில் சில்லென்ற உலோகம் துளைப்பதை நினைத்துப் பார்க்கையில் ஏற்பட்ட கிளர்ச்சியில் தன் உறுப்பு விறைத்து அசைந்ததை உணர்ந்தான் ரெஸா.

தன்னுடைய பதிலுக்காகக் கட்டூஸோ காத்திருக்கையில் அந்தச்

சிறுமியைப் பற்றி ஏன் நினைத்துக் கொண்டிருக்கிறோம் என்று அவனுக்கு வியப்பாக இருந்தது. எழுந்து அந்த இடத்தை விட்டு அகன்றான், எந்த விவரங்களும் புரியாமல் இப்போதும் குழப்பத்தில்தான் இருந்தான் கட்டுஸோ. அதிகத் தொலைவு செல்லும் முன், ரெஸாவின் அலைபேசி கிணுகிணுத்தது. அவன் சகோதரன் புலாமா அழைக்கிறான் என்று தெரிந்தவுடனேயே, அந்த அழைப்பு தந்தை சார்ந்த ஏதோ விஷயமாகத்தான் இருக்க வேண்டுமென்று அவனுக்குப் புரிந்து போனது.

—

அன்று மாலை, சான்சிரோவை நோக்கி நடந்து செல்கையில், கடந்த சில நாட்களாக அந்த இடத்தை எவ்வளவு இழந்திருக்கிறோம் என உணர்ந்தான் ரெஸா. மக்கள் சந்தடி மிக்க நெருக்கமுள்ள குறுகிய சந்து, அங்கு கூட்டம் கூட்டமாய் நின்றும் அமர்ந்து வம்பு பேசும் சாலையோர விற்பனையாளர்கள், மாலை உணவுத் தயாரிப்புக்காக கடைகளில் பரபரப்பாகப் பொருட்கள் வாங்கிக் கொண்டிருக்கும் இல்லத்தரசிகள், அழுக்கான சாலைகளில் சீறிப் பாயும் உற்சாகமான மோட்டார் சைக்கிள்கள், பேரம் பேசும் விற்பன்னர்கள், மிக அசட்டையாகக் காரோட்டும் வியாபாரிகள், காதைக் கிழிக்கும் ஒலிப்பான்களின் சத்தம் இவையெல்லாவற்றையும் ரசித்தான். அனைத்து ஒலிகளும் ஒன்றோடொன்று பிணைந்து கொண்டன. பேச்சு சப்தம், வண்டியோட்டிகளின் ஒலிப்பான், வாடிக்கையாளர்களைக் கூவியழைக்கும் விற்பனையாளர்கள், அவ்வப்போது ஏற்படும் குழு சார்புடைய சண்டைகள், யாவும் ஒரு சப்தச் சூறாவளியை உருவாக்கிக் கொண்டிருந்தது.

ஷனி ஸ்காலரின் அன்னை, ஜும்மாலோ அடுப்பு மூட்டி அதில் விறகுகளைத் தள்ளியவாறே மாலை நேர விற்பனைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள். பருப்பு உருண்டைகளும், உப்பு தடவிய வள்ளிக் கிழங்குச் சீவல்களும் இன்னும் சற்று நேரத்தில் கொதிக்கும் எண்ணெயில் விழுந்து வேதனையில் புரளப்போகின்றன. ரெஸாவைக் கண்டதும் செய்யும் வேலையைக் கைவிட்டு அவன் முன்னால் ஓடிவந்து நின்றாள். கம்பி போல மெலிந்திருந்த ஒரு கையை இடுப்பில் வைத்தபடி, மறு கையால் நழுவிய கந்தலான பச்சை நிற முகத்திரையை எடுத்து தோளின் மீது போட்டுக் கொண்டாள். அந்தச் செய்கை, ஹஜியா பிந்த்தா மிக நேர்த்தியாக உடுத்தியிருந்த மணப்பெண் முகத்திரையை நினைவூட்டியது.

எந்த முன்னுரையுமின்றி, ஷனி செய்யும் தேவையற்ற காரியங்களையும், தேங்கிப் போன அவன் இலக்கு பற்றியும் தன் வழக்கமான புலம்பலைத் துவக்கினாள். ஷனியின், அவன் உடன் பிறந்தவர்களின் வாழ்க்கையை

மேம்படுத்தத்தான் படும் கஷ்டங்களையும், வியாபாரத்திற்கான ஆயத்தங் களைச் செய்து விட்டு நள்ளிரவுக்கு மேல் உறங்கச் சென்று, அதிகாலை சேவல் கூவும் முன் எழுந்து விடும் பாடுகளையும் சொல்லிக் கொண்டிருந்தாள்.

ரெஸாவின் கண்கள் சுற்றும்முற்றும் அலைந்தன. சாலையின் குறுக்காக அமைந்திருந்த சிறிய, இருண்ட காவல் நிலையத்தின் முன்னே, அதிகாரி தெளடா பலேரி பெஞ்ச்சின் மீது அமர்ந்திருக்க, அவர் இரு புறமும் இரு காவலர்கள் நின்றிருந்தார்கள். மாலை வெளிச்சத்தில், சற்றுத் தொலைவிலிருந்தாலும், அந்தப் போலீஸ் அதிகாரி முன்னிருந்ததை விட அதிகமாகக் கறுத்துப் போயும், முதலில் அங்கு வந்து இறங்கிய போதிருந்த அந்த மிடுக்கும், நாகரிகமும் குறைந்து காணப்பட்டார். அவரும், அவர் இறுமாப்புடன் ஆண்டு கொண்டிருந்த அந்தக் காவல் நிலையமும் இன்று மதிப்பிழந்து பலவீனத்தின் சிறந்த உதாரணமாக விளங்குவதைச் சிந்தித்துப் பார்த்தான் ரெஸா.

மூப்பின் வேதனையும், மருந்துகளுக்குக் கட்டுப்படாத நோய்மையிலும் உழலும் தந்தையின் பால் அவன் மனம் நகர்ந்தது. மனமுடைந்த அவரை, ஈர மண்ணில் கிடத்தப் போகும் காலம் நெருங்குகிறது என உறுதியாகத் தெரிந்தது.

"வல்லாஹி, ஷனியை இரண்டு நாட்களாகக் காணவில்லை. முழுதாக இரண்டு நாட்கள் ரெஸா! இவன் ஏதாவது செய்து வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்பதுதான் என் விருப்பம்."

வாழ்க்கையின் வறுமையையும், ஏற்றத்தாழ்வுகளையும் நாடக பாணியில் உடலை அசைத்து புலம்பித் தள்ளுகையில், அவள் முகத்திரையின் நுனி தோளில் இருந்து நழுவிக்கொண்டே இருந்தது. அவன் முன்னால் காற்றில் ஆடிய அவள் கைகள், பலவீனமான மரத்தின் கிளைகளைப் போலத் தோன்றியது. உலகம் அழியும் போதுகூட ஒரு மரத்தை நட்டுச் செல்ல வேண்டும் என்ற லைலாவின் விசித்திரத் தர்க்கம் மனதில் நிழலாடியது.

"சான் சிரோவுக்குப் போனவுடன் அவன் அங்கே இருந்தால், நிச்சயமாக உங்களை வந்து பார்க்கச்சொல்கிறேன்" சொல்லி விட்டு அவ்விடத்தை விட்டு அகன்றான் ரெஸா. செல்லும் வழியில், பலேரியின் அருகில் நின்றிருந்த காவல்காரர் பணிவுடன் கையசைத்தார். கல் போன்ற முகத்துடன் பலேரி அமர்ந்திருந்தார். இருவரின் பார்வைகளும் சந்தித்தன. ஒரு சிறு தலையசைப்பு கூட இன்றி அவரைச் சற்றும் பொருட்படுத்தாமல் கடந்து சென்றான் ரெஸா.

சான் சிரோவில் வழிந்துகொண்டிருந்த அமைதியிலேயே, மம்மன் கோலோ அங்கிருந்து சென்றுவிட்டான் என்று புரிந்து போனது. நம்ப

முடியாத பேய்க்கதைகளையும், வெண்ணிற முகப்பூச்சுப் பூசிய விலை மாதர்களின் கதைகளையும், தன் கஞ்சிராவின் ஆரவாரமான சங்கீதத்துடன் சேர்த்து மூட்டை கட்டிக்கொண்டு மாறாத வழக்கப்படி இரவின் இருளில் மறைந்து போய்விட்டான். சில இளைஞர்கள் சோம்பேறித்தனமாக அமர்ந்து புகைத்துக்கொண்டிருந்தார்கள். ரெஸா உள்ளே நுழைந்தவுடன் உற்சாகமாகக் குரலெழுப்பி முகமன் கூறினார்கள். அங்கிருந்த அறையொன்றினுள் அமர்ந்து, பழைய விளையாட்டு இதழ் ஒன்றின் பக்கங்களைப் புரட்டிக்கொண்டிருந்த ஷனி அவனைப் பார்த்ததும், மிகுந்த பிரகாசமான முகத்துடன் வெளியே ஓடி வந்தான்.

இருவரும் கைகுலுக்கிக் கொண்டார்கள். ரெஸா இல்லாத வேளையில் அங்கு நடந்த வணிகக்கணக்குகளை மிகத் துல்லியமாகப் பதிவு செய்து வைத்திருந்த நோட்டை எடுக்க உள்ளே ஓடினான் ஷனி.

அறைக்குள் வந்து சேர்ந்த ரெஸா, படுக்கையில் அமர்ந்தவாறு, அவனுடைய சொந்த இடத்தின் வாசனையை மீண்டும் தன்னுள் அறிமுகப் படுத்திக் கொண்டிருந்தான். சிறு குழந்தை போலப் படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தவன், கால்களை உயர்த்தி சுவரின் மீது பதித்துக் கொண்டு மழைநீர்க் கறை படிந்த கூரையைப் பார்த்துக்கொண்டிருந்தான். அலைபேசியைக் கையிலெடுத்தவன் பிந்த்தாவின் எண்ணைத் தட்டினான்.

"ஹஸன்..."

"ஏதாவது தப்பாக நடந்ததா?"

"இல்லை."

"ம்ம், உன் குரல், ஏதோ ஒரு மாதிரி..."

"நான் நலமாக இருக்கிறேன்."

"உன் குரலில் ஏதோ வேதனை தெரிகிறது. என்ன நடந்தது?"

மறு முனையில் சிறு தயக்கம் தெரிந்தது. "நாம் பேச வேண்டும் ஹஸன்."

"ஹோட்டலுக்குப் போக வேண்டுமா?"

"வேண்டாம்."

"அப்பாவுக்கு உடல்நிலை சரியில்லையென்று ஃபோன் வந்தது. அங்கு சென்று அவரை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போகவேண்டும். ஆனாலும் உன்னைப் பார்ப்பதற்காகக் கொஞ்ச நேரம் என்னால் ஒதுக்க முடியும்.

"வேண்டாம், போய் உன் அப்பாவைக் கவனித்து விட்டு வா, நீ திரும்பி வந்ததும் சந்திக்கலாம், சரியா?"

"ஏன் கவலை, நீ கர்ப்பமாக இருக்கிறாயா?" அவன் சிரித்தான். பிந்த்தா சிரிக்கவில்லை. அதைக் கவனித்ததும் நிறுத்தினான்.

"மன்னித்துக் கொள், அப்படி நான் சொல்லியிருக்கக் கூடாது."

அவள் ஏதும் கூறவில்லை.

"நான் நாளைக்கு வந்து விடுவேன், ஹோட்டலில் சந்திக்கலாமா?"

"இல்லை, வீட்டுக்கே வா. ஹுரைரா ஊருக்குக் கிளம்பிப் போய் விட்டாள்"

"ஆனால், பெண்கள்..."

"அவர்களை வெளியே எங்காவது அனுப்பி விடுகிறேன், முன்க்கைலா வீட்டுக்குக் கூட அனுப்பலாம். ஆனால் வருவதற்கு முன் ஃபோன் செய்து விட்டு வா."

"ஆகட்டும்"

அலைபேசியைக் கீழே வைத்த போது, ஷனி ஸ்காலர் வந்து நின்றான். அவன் அன்னை ஜும்மாலோவின் புலம்பல்களைக் கேட்டுக்கொண்டு வந்திருந்ததால், அவள் சொல்வது போல் ஷனி அவ்வளவு மோசமாகவா இருக்கிறான் என்று அவன் தோற்றத்தை ஆய்வு செய்தான் ரெஸா. ஷனி மெலிந்த உடல்வாகு உடையவன் தான். ஆனால், அவன் கண்களில் எப்போதும் பிரகாசிக்கும் இரும்பு போன்ற உறுதியே, தானும், தனது வலது கரம் போன்ற சகாக்களும் அங்கில்லாத போது சான் சிரோவின் பொறுப்பை ஷனியிடம் ஒப்படைத்துச் செல்லும் நம்பிக்கையை ரெஸாவுக்கு அளித்தது.

ஷனி கீழே அமர்ந்து, விற்பனையில் கிடைத்த தொகையைக் கொடுத்தான். அனைத்துக் கணக்குகளையும் எழுதி வைத்திருந்தான். அந்தக் கணக்கு வழக்குகள் ரெஸாவை அவ்வளவாக ஈர்ப்பதில்லை, ஆனால் உதவியாளனை ஈடுபடுத்தி விடுவான். ஷனி அவனிடம் பணத்தைக் கொடுத்ததும், அதை வாங்கி எண்ணிப் பார்க்காமல் அப்படியே சட்டைப் பையில் திணித்துக்கொண்டான். லைலாவின் விவகாரம் தீர்வுக்கு வரும் வரை, மறுபடியும் சரக்குகள் வாங்கி நிரப்பி வைக்க வேண்டாம் என்று தீர்மானமாக இருந்தான். அவள் பிரச்சினை இன்னும் இரண்டு நாட்களில் முடிவுக்கு வந்துவிடும் என்று நம்பிக்கொண்டிருந்தான்.

இரண்டு நாட்களுக்கு முன் அவ்விடத்தை விட்டு அகன்று சென்ற

மம்மன் கோலாவைப் பற்றிப் பேச்சுத் திரும்பியது.

கோலாவின் கடைசி இரண்டு தினங்களைப் பற்றி விவரித்துக் கொண்டிருக்கையில், வந்திலிருந்து தெரிந்த ரெஸாவின் கவனமின்மையை ஷனி உணர்ந்தான். எழுந்து நின்ற ரெஸா, மூப்பில் நோயுடன் போராடிக்கொண்டிருக்கும் தன் தந்தையைப் பார்க்கப் போகிறேன் என்று கிளம்பிய போது ஷனிக்கு வியப்பேதும் ஏற்படவில்லை.

நோட்டுப் புத்தகத்தை மூடி எடுத்துக்கொண்டு அறையை விட்டு நீங்கும் ஷனியை அழைத்தான் ரெஸா.

"ஸ்காலர்..."

அவன் திரும்பிப் பார்த்த போது, சொல்ல வந்ததைச் சொல்லவா, வேண்டாமா என்று ஒரு கணம் குழம்பிப் போனான் ரெஸா.

"நீ டாக்டராக வேண்டும் என்று விருப்பப்பட்டாய் அல்லவா"

ஷனி சிரித்தான். அதிலிருந்த வெறுமையையும், தோல்வியின் சாயலையும் ரெஸாவால் அடையாளம் காண முடிந்தது.

"அதற்கு நான் மீண்டும் *WAEC* தேர்வுகள் எழுத வேண்டும்."

படுக்கையிலிருந்து கீழே இறங்கி வந்து, அறைக்கு வெளியே சென்று கதவைத் தாழிட்டவன், அருகில் நின்றவாறு, கண்களில் எதிர்பார்ப்பு மின்ன தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் ஷனியை நோக்கித் திரும்பினான். சில நோட்டுகளை எண்ணி அவன் கையில் வைத்தான் ரெஸா.

"இதோ, இதை நீ எடுத்துக் கொள். தேர்வுக்கு பெயரைப் பதிவு செய்போ, புரிகிறதா? அப்படிச் செய்வதுதான் உன் அம்மாவுக்குப் பல வழிகளில் உதவியாக இருக்கும்."

ஷனியின் கண்கள் அகல விரிந்தன. இன்மை நிலையிலிருந்து பெருகி பூரண நிலைக்கு மாறும் வளர்பிறை நிலவு போல, அவன் முகத்தில் உணர்வுகள் மாறி மாறிக் கொப்பளித்தன. அப்போதுதான், அவனைத் தான் ஒரு சகோதரன் போலப் பாவித்து அன்பு செய்திருக்கிறோம் என்று புரிந்து கொண்டான் ரெஸா.

கடல் பற்றியும், மரங்கள் நடுவது பற்றியும் பேசிய அனைத்து பேச்சுக்களும், தந்தையின் மறைவு குறித்த மெய்ப்பாடும், எப்போதையும் விட மனதில் நெருக்கமாகப் படர்வதை உணர்ந்தான். அது அவனது அசையாத்தன்மையைக் குலைத்தது. அதை அவன் விரும்பவில்லை. கொஞ்சம் கூட விரும்பவில்லை.

ஷனியின் தோளைச் சுற்றிக் கரங்களைப் போட்டான் ரெஸா. "ஸ்காலர், என்னைப் போல் இருக்காதே, பள்ளிக்குத் திரும்பி விடு, உன் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கி ஏதாவது சாதிக்கப் பார். நீ எடுக்கும் முடிவுகளில் யாரும் தலையிட்டு அதைக் கெடுக்க அனுமதிக்காதே, புரிகிறதா? சரி, இப்போது இந்த இடத்தை விட்டு உடனே கிளம்பிச் செல்.

—

29

“கழுகுகளின் நீதிமன்றத்தில் கோழிகளுக்கு நியாயம் கிடைக்காது.”

மாலை நேரத் தொழுகை முடிந்தபின்னும் மூடுபனி போல சூழ்ந்திருந்த துயர நினைவுகளிலிருந்து மீளமுடியாமல் பாயில் அமர்ந்திருந்தாள் பிந்த்தா. மன்னிப்பு வழிபாட்டைக் (தஸ்பிஹ்) கூடச் சரியாக முடிக்க இயலாத அளவு, இறைக்கும் நம்பிக்கைக்கும், உலகியல் நடைமுறைகளுக்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருந்தது மனது. அந்த நிரந்தர விவாகரத்துக்காரி லடியின் வார்த்தைகளும், மதரஸா பெண்களின் குற்றம்சாட்டும் பார்வையும் அவளைத் துரத்திக்கொண்டே இருந்தன. கையிலிருந்த வழிபாட்டு மணிமாலையை மனம் போன போக்கில் உருட்டிக்கொண்டிருந்தாள். அவளுடைய சோர்வான மனதிற்கு ஏற்பத் தாளம் போடுபவை போல அந்த மணிகளும் ஒன்றோடொன்று உருண்டு ஓசை ஏற்படுத்தின.

தனக்குச் சொந்தமான அனைத்தையும் எங்கு இழந்தாளோ அந்த ஜாஸ் நகரத்துக்கே திரும்பிப் போய்விடலாமா என்னும் எண்ணம் அவளுக்குத் தோன்றிக்கொண்டிருந்தது. கடந்த சில தினங்களாக நடந்த நிகழ்வுகள் யாவும் அவளைத் திணறடித்தன. அவற்றிலிருந்தும், மதரஸா பெண்களிடமிருந்தும், அவர்களுடைய மதிப்பீடுகளிலிருந்தும் ,ரெஸாவிடமிருந்தும், அவனுடன் ஏற்பட்ட இயல்பான மயக்கத்திடமிருந்தும் விடுபட்டு எங்காவது சென்று விட வேண்டும் போலிருந்தது.

வாசல் கதவு திறக்கும் சப்தமும், சலாம் சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்த சிறுவன் கனவிலிருந்து நீங்கி அவளருகில் வராமல் நிற்பது போலிருந்தது. விடாப்பிடியாக நின்றுகொண்டிருந்த அந்த சிறுவனின் உருவம் கனவல்ல, நனவு என்று உறுதியாகத் தெரியும் வரை அவள்

தயங்கியபடியே இருந்தாள். ஃபைசாவும் உம்மியும் குள்ள சகோதரிகள் வீட்டிற்குச் சென்றிருந்தால் தானே எழுந்து கதவருகே சென்றாள் பிந்த்தா. அவளைப் பார்க்க அனுமதி வேண்டி யாரோ ஒருவர் வெளியே காத்திருப்பதாகச் சொன்னான் அந்தச் சிறுவன். அவனை விசாரித்ததில் வந்திருப்பவர் உஸ்தாஜ் நூரா என்று அறிந்ததும் அதிர்ச்சியடைந்தாள் பிந்த்தா. மனதில் பயம் தொற்றிக்கொண்டது. இந்த நிலையில் சந்திக்கையில் அவளைப் பற்றி அவர் என்ன நினைப்பார்? உடனடியாக இறந்து போய் விடும் ஆசை அவளுக்கு இது போல் முன்பு எப்போதுமே தோன்றியதே இல்லை. மரணித்தவர்களின் மீது மக்கள் எழுதும் தீர்ப்பில் கடுமையின் அளவீடு சற்றுத் தணிந்தே இருக்கிறது.

வீட்டினுள் சென்று தன் மீது வாசனைத் திரவியத்தைத் தெளித்துக் கொண்டவள், உடனே அந்தச் செயலுக்காக வருந்தினாள். அந்த நல்ல மனிதரைத் தூண்டுவது போன்ற எண்ணத்தைத் தோற்றுவிக்குமோ என அஞ்சினாள். அதிலும், இது போல் நறுமணத்தின் உதவியுடன் ஆண்களைத் தவறான செயலுக்குத் தூண்டும் பெண்கள், நடத்தை கெட்டவர்களுக்கு ஒப்பானவர்கள் என்று அவர் பாடம் எடுத்திருந்தது நினைவில் வந்து போனது. அது (ஹதித்) மறை ஆகும். ஆயினும், அந்நேரத்தில், அந்த அனாதைப் பெண்மணி லடி அவளைப் பற்றி இகழ்ந்து பேசிய கள்ள உறவின் தீய நெடிதான் மற்றெப்போதையும் விட இப்போது பிந்த்தாவின் மனதை ஆட்கொண்டிருந்தது.

சில ஊதுபத்திகளைப் பற்ற வைத்து, அறையின் மூலைகளில் அந்தக் குச்சிகளை செருகி வைத்தாள். அதன் மெல்லிய வெண்புகையிலிருந்து விடுபட்டு நறுமணம் அறையெங்கும் வியாபிக்கட்டும் என எண்ணினாள். அவள் வெளியே சென்று பார்த்தபோது, வாசல் கதவைத் திறந்து உள்ளே நின்படி தன் தாடியைத் தடவிவிட்டுக் கொண்டிருந்தார் உஸ்தாஜ் நூரா. ஹதீஸாவின் பெட்டூனியா மலர்ப்பாத்திகளுக்கு அருகே நின்று அவரின் வருகைக்காகக் காத்திருந்தாள். அவளை நோக்கி நடந்து வருகையில், அவரது கால் சராயின் மடிப்புகளைக் கணுக்கால்களுக்கு மேலாக விசிறியது காற்று.

உள்ளே வருமாறு அழைப்பு விடுத்தபோது மிகவும் கண்ணியமான முறையில் மறுத்தார். முற்றத்தில் அவர் அமர்வதற்காகப் பாய் எடுத்து வர முனைந்தபோது அதற்காக சிரமப்பட வேண்டாம் என நயமாகச் சொல்லி விட்டார். அவர் வந்த வேலை சுருக்கமானது என்பதை மறைமுகமாக உறுதிப் படுத்தினார்.

எல்லாப் புகழும் உண்மையில் இறைவனுக்கே என்று மிகப் பணிவான முன்னுரையுடன் அவர் துவங்கியபோதே, அவளுடைய பாவங்களைப்

பற்றிப் பேசும் பொருட்டே அவர் அங்கு வந்திருக்கிறார் என்று புரிந்து கொண்டாள் பிந்த்தா. அல்லாஹ் மற்றும் அவருடைய உன்னதமிக்க தீர்க்கதரிசி ஆகியோர்களைப் புகழ்ந்துரைத்த பின், தீய செயல்கள் புரியும் சாத்தானின் கொடுஞ்செயலால், அவளது அழகிய தோட்டத்தில் நோய்த் தொற்றெனப் பரவியிருக்கும் கொடிய வண்டுகளின் பிடியிலிருந்து காத்தருளுமாறு வேண்டிக்கொண்டார். பிரார்த்தனை நீடிக்கும் வரை தலை குனிந்து நின்றாள் பிந்த்தா. முந்தைய நாள் ஃபைஸாவின் பிரச்சினையில் அவருக்கு நேர்ந்த அனுபவத்தை விவரிக்கையில் முக்காட்டு மறைவில் கைகளைப் பிசைந்தபடி நின்றுகொண்டிருந்தாள். சாத்தான் புகுந்து கொண்டிருப்பவர்களின் நடவடிக்கைகளிலிருந்து, மனவேதனையால் பீடிக்கப்பட்டவர்களின் நடத்தை எப்படி மாறுபட்டிருக்கும் என்பதையும், ஹுரைரா போன்ற அவசரக்குடுக்கைகள் இரண்டையும் குழப்பிக் கொள்வதையும் எடுத்துச் சொன்னார்.

"அவளை எதுவுமே ஆட்கொள்ளவில்லை, அவள் மிகுந்த மன வேதனையில் உழன்றுகொண்டிருந்தாள். அவளது துயரம் இதுவரை உன் கண்களில் படாமல் இருந்தது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது பிந்த்தா."

மேலும் தலைகுனிந்தாள் பிந்த்தா.

"எனக்குத் தெரிந்த உளவியல் அறிவின்படி, அவளுக்குத் தேவை பிரார்த்தனையும் அரவணைப்பும் தான். யாராவது அவளிடம் அன்பாகப் பேசவேண்டும். அவ்வளவுதான். மற்ற சூழ்நிலையில், மருத்துவ உதவி பெற அவள் யாராவது ஒரு உளவியல் நிபுணரிடம் சென்றிருக்கலாம்."

"ஆனால் உஸ்தாஜ், இவையெல்லாம் இரண்டு வருடங்களுக்கு முன் நடந்தவை. இப்போது ஏன் இப்படி நடந்து கொள்கிறாள்?

"ம்ம், அவள் மனது அந்த ஞாபகங்களை மனதின் எங்கோ ஒரு மூலையில் அடைத்துப் புதைத்து விட்டது. இப்போது அவை மேலெழும்பி வருகையில் சரியாக நெறிப்படுத்திக் கொள்ள முடியவில்லை."

"இவையெல்லாம் அவளுக்கு நேர்ந்து கொண்டிருந்தது என்பதே உனக்குத் தென்படவில்லையா?"

இறுதியில், ஃபைஸா தன் சொந்த சகோதரனின் முகத்தையே மறந்து விட்டாள் என்று அவர் சொன்னபோது பெரும் அதிர்ச்சியடைந்தாள் பிந்த்தா. இப்படிப்பட்டதோர் இழப்பு, அதுவும் கற்பனை செய்யவே இயலாத மோசமான இழப்பு சாத்தியம் என்று நினைத்தே பார்க்கவில்லை. அன்புக்குரியவர்களின் மறைவின் இழப்பே மிகக் கொடியது, அதற்கு எந்த வகையிலும் குறையாதது அவர்கள் யாரென்ற நினைவே அழிந்து போவது.

"மாஷா அல்லாஹ். உன்னிடம் இன்னொரு விஷயத்தைப் பற்றியும் பேச வேண்டியுள்ளது."

பிந்த்தாவின் இதயம் ஒரு நிமிடம் துடிப்பதை நிறுத்தியது தன்னால் இயன்றவரை மென்மையாக அந்தப் பேச்சைத் துவக்கினார் அவளது சந்திப்புகளைப் பற்றிய வதந்திகள் குறித்து அவர் பேசுகையில் பூமிக்கு வாய் முளைத்து அது விரிந்து தன்னை ஒரே விழுங்கில் உள்ளிழுத்துக் கொள்ளக்கூடாதா என்று தவித்தாள் அந்த இழிவான வதந்திகளைத் தான் நம்பவில்லையென்று உறுதிபடுத்தினார் எனினும் கருணை மிக்க இறை தூதர் விசுவாசம் மிக்கவர்களைப் பற்றி நல்லதையே நினைக்கத் தூண்டுகிறார் என்று குறிப்பிட்டார் ஆயினும் ஒரு நற்குணமிக்க இஸ்லாமியப் பெண்மணி யாகிய அவள் நேர்மையை சமரசம் செய்து கொள்ளும் நிலைக்கு என்றுமே தன்னை உட்படுத்திக் கொள்ள மாட்டாள் எனென்றால், பண்புமிக்க வளர்ந்த குழந்தைகளின் தாயான அவள் ஒழுக்கங்கெட்ட போதை விற்பனையாளனை விட மிக மிக மேம்பட்டவள் என்று உணர்த்தினார்.

"உஸ்தாஜ் நூர் வல்லாஹி அந்த அவதூறுகளில் உண்மை இல்லை நான்... ம்ம்." வந்து ஹிஜாபை எடுத்துத் தன் முகத்தை மறைத்துக் கொண்டாள்

"வதந்திகள் காரணமின்றிப் பேசப்படுவதில்லை ஹஸிபா. உதாரணத்திற்கு இப்போது உன் வீட்டுக்கு வரும் வழியில் இங்கிருந்து ரெலா ஒளிந்து செல்கிறான் அல்லது பெயர் போன ரவுடியான ரெலாவுடன் நீ பேசுவதை நான் பார்த்தேனென்றால் சுபஹானல்லாஹ் அது என் மனதில் சந்தேகத்தை ஏற்படுத்தும் தானே" இதையே மற்றவர்கள் பார்த்தால் உடனே ஓ. அவளையும் அவளையும் சேர்த்துப் பார்த்தேன் அது செய்கிறார்கள் இது செய்கிறார்கள் என்று பேசுவார்கள் சுபஹானல்லாஹ் அது உன் கண்ணியத்திற்கு இழைக்கப்படும் அநீதி அல்லவா?"

கண்களிலிருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள் பிந்த்தா

இது போன்ற பாவங்களும் அவை சார்ந்த வருத்தம் மிக்க குற்ற உணர்வுத் தருணங்களையும் கையாளுவதில் அனுபவம் மிக்கவரான உஸ்தாஜ் நூர் அந்தக் கணத்தை அப்படியே நீட்டித்தார் அவள் செய்த தகாத செயலின் சமையை தென்றலைவிட குறுவாளால் சாத்தான் கிறிலிருந்த அவள் இதயத்தில் ஆழமாக இறங்கி அழுத்துவதை உணர அனுமதித்தார்

"மாஷா அல்லாஹ் ஹஸிபா பிந்த்தா இந்தக் கண்ணீர் உன் இதயத்தைத் தூய்மைப்படுத்தும் என நம்புகிறேன் நீ எது செய்திருந்தாலும் அல்லது செய்யவில்லை என்றே வைத்துக்கொண்டாலும் மிகுந்த

கருணையுள்ளவராகவே அல்லாஹ்வைக் காண்பாய். நீ மனம் வருந்திச் செல்கையில் இரு கரங்களாலும் அவர் உன்னை ஏந்திக்கொள்வார்.'

அவளுக்காக வருந்தினார் உஸ்தாஜ் நூரா. உண்மையில், அவளது தனிமைப்பட்ட மனதின் ஊசலாட்டமே பாவத்தின் பாதையில் செல்லக் காரணம் என்ற நிச்சயமான முடிவுடன், அவளிடமிருந்து விடைபெற்றுக் கிளம்பிச் சென்றபோது, மசூதியின் உயர்ந்த தூபியிலிருந்து எழும்பிய இறுதித் தொழுகைக்கான அழைப்பின் ஒலி, கவிழும் இரவைக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டது.

—

உஸ்தாஜ் நூரா அங்கிருந்து அகன்றபின், தொழுகையை முடித்த பிந்த்தா, கம்பளத்திலேயே அமர்ந்திருந்தாள். அவர் வருவதற்கு முன் அவளைச் சூழ்ந்திருந்த கவலையின் பனி மூட்டம் இப்போது வருத்தத்தின் வாசம் பூசிக்கொண்டன. கண்களில் நீருடன் விசும்பிக்கொண்டே உணர்வுகள் மரத்துப்போன நிலையில் தனது தோல்விகளைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில் ஃபைஸாவும் உம்மியும் வீடு திரும்பினர். அவர்களுக்கு முதுகைக் காட்டியபடி அமர்ந்திருந்தவள், பதில் வணக்கத்தை முணுமுணுத்தாள். அவர்கள் சென்றதும், தான் செய்தாக வேண்டிய காரியத்திற்கான வலிமையை முனைந்து வரவழைத்துக்கொண்டாள்.

அலமாரியின் அடுக்குகளின் ஆழத்திலிருந்து அவளுடைய புகைப் பட ஆல்பத்தை உருவி எடுத்தாள். இரண்டு ஆல்பங்கள், நினைவுகளால் நிரம்பிப் பெருகி இருந்தன. தேவையான ஒரு படத்தின் தேடல், கடந்த கால நினைவுகள் தேங்கிய மங்கலான பழைய நினைவுகளின் இண்டு இடுக்குகளுக்கு அவளை அழைத்துச் சென்றது. ஒவ்வொரு பக்கங்களாகத் திருப்புகையில், தேய்ந்துபோன கடந்த காலத்திற்குள் அவ்வப்போது நுழைந்து வெளிவந்தாள். பள்ளி சென்ற முதல் நாளன்று ஹதீஸாவின் பயந்த விழிகள் புகைப்படத்திலிருந்து அவளைப் பார்த்து முறைத்தன. இறப்பதற்குப் பல வருடங்களுக்கு முன் எடுக்கப்பட்ட புகைப்படத்தில் இளமையான ஜுபைரு, அழகிய பின்னல் வேலைப்பாடுடைய அங்கியும், பலாஸோ கால்சராயும் அணிந்து, தலையில் சுருட்டையான அடர்ந்த முடிக்கற்றைகளுக்கு மேலே ஜன்னாத் தொப்பி பொருத்தி மிடுக்குடன் இருந்தான். நஷ்டங்களின் தாக்குதலுக்கு முன் கிடைத்த குறுகிய செழிப்பான நாட்களையும், அதன் பின், அவனது கருத்த அடர்முடி அலங்காரம், சாதாரணமாக மாறியதையும், தாடி, சீராக்கப்படாமல் அடர்ந்து வளர்ந்ததையும் நினைவு கூர்ந்தாள் பிந்த்தா. அதே போல,

கருப்பு வெள்ளைப் புகைப்படங்களுக்கும், காலம் பாழ்படுத்தி பழுப்பாக மாறியிருந்த வண்ணப் படங்களிலும் மாறி மாறி பயணித்து அலைந்து கொண்டிருந்தாள். சில நிகழ்வுகளின் நினைவுகளில் புன்னகைத்தும், பல இடங்களில் கண்ணீரை அடக்கப் பிரயத்தனமும் செய்துகொண்டிருந்தாள். முதல் திருமணப் படத்தில் இளமையாக இருந்த ஹுரைராவைப் பார்த்து வியந்து போனாள். குழந்தை உம்மியை மேகக்குவியல் போன்ற சால்வையில் பொதித்து, கையில் எடுத்து வைத்திருந்தவளின் உணர்ச்சிகளற்ற முகத்தையும், திருமண வாழ்வின் சுடரை இழந்த வெற்றுப் பார்வையும் பார்த்தாள் பிந்த்தா. கல்லூரிக் காலங்களில் எப்போதும் அணியும் பிரத்தியேக வகை டீ சர்ட்டிலிருந்து எட்டிப்பார்க்கும் குச்சி போன்ற கழுத்துடனும், ஆங்கில எழுத்து 'வி'யைக் குறிக்கும் விரல் சைகையுடனும் இருந்த முன்க்கைலாவைப் பார்த்ததும் சிரித்துக்கொண்டாள் பிந்த்தா. இப்போது தலைமுடி கொட்டி வழுக்கை விழுந்து, பருத்த மனிதனாக இருக்கும் முன்க்கைலாவுடன், ஒவ்வொரு அங்குலத்திலும் அவன் அப்பாவின் சாயலை ஒத்திருக்கும் மெலிந்த தேகமுடைய இளம் வயது முன்க்கைலாவுடன் சற்றும் ஒப்பிட முடியவில்லை. மெதீனாவில், புனிதப் பயணத்தின் வெண்ணிற ஆடையில், நூற்றுக்கணக்கானவர்கள் நெருக்கியடித்துக் கொண்டிருக்கும் மசூதியின் பின்னணியில் உள்ள தன் புகைப்படத்தைப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டாள். தான் இறக்கும் முன்பு, மீண்டும் ஒரு முறை அங்கு செல்லும் வாய்ப்பு அமைந்து, இறைவனின் மன்னிப்பை நாடவேண்டும் எனப் பிரார்த்தித்துக் கொண்டாள். அப்போது, எதிர்காலக் கணவரின் தோள்களில் சாய்ந்திருந்த ஹதீஸாவின் முகத்தில் மிளிர்ந்த மகிழ்வைக் கண்டு ஆனந்தமடைந்தாள் பிந்த்தா. இன்றும் திருமணம் ஆகிப் பல வருடங்கள் கடந்த பின்னும், ஹதீஸாவின் முகத்தில் அதே மகிழ்ச்சியைக் காண்கிறாள்.

அதன் பின் குழந்தைகளின் படம் கண்ணில் பட்டது. சுவரொன்றின் முன் கொள்ளைக்காரர்கள் துப்பாக்கிச் சூட்டுக்குத் தயாராக நின்று கொண்டிருப்பதைப் போல் வரிசையாக நின்று கொண்டிருந்தார்கள். அவளது பேரன்புக்குரிய யாரூ. விருப்பமில்லாத வழிப்போக்கரைக் கட்டாயப் படுத்தி இழுத்துக் குடும்பப் புகைப்படத்தில் நிற்க வைத்தது போல நின்று கொண்டிருந்தான். அவனது முகத்தை மீண்டும் மீண்டும் விரலால் வருடிக் கொண்டேயிருந்தபோது, எப்போதும் போல, தன் தாயை நினைத்துக் கொண்டாள் பிந்த்தா. இறுதியில், பிளாஸ்டிக் உறையிலிருந்து அந்தப் படத்தை உருவித் தன் நெஞ்சோடு இறுகச்சேர்த்து அழுத்திக்கொண்டாள். நீண்ட காலமாய் அடக்கி வைத்திருந்த குற்ற உணர்வும், வருத்தமும் பொங்கிப் பீறிட அவள் இதயம் விம்மல்களால் குலுங்கியது. அவனுக்குத் தான் இட்ட சொந்தப் பெயரைக் கூவிக்கொண்டே, 'என்னை மன்னித்து விடு

யாரூ' என்று அரற்றியவாறே படுக்கையில் விழுந்து கதறினாள். அவனிடம் தான் எவ்வளவு பிரியம் வைத்திருந்தோம் என்பதை ஒரு முறையாவது சொல்லியிருக்கலாம் என ஆதங்கப்பட்டாள். ஒரே ஒரு நிமிடமாவது கூடக் கிடைத்திருந்தால், அவன் மீது அவள் வைத்திருக்கும் அன்பை எடுத்துச் சொல்லி, எந்தக் குண்டுகளும் நெருங்கவியலாத அளவுக்குத் தன் நெஞ்சோடு அவனைச் சேர்த்து அணைத்துக் கொண்டிருக்கலாம்.

சற்று நேரம் கழித்து, ஒரு புகைப்படத்தைக் கண்டெடுத்தாள். அதைப் பார்த்தவுடனேயே வாடிய மலர்கள் நிறைந்த நிலத்தின் பயணத்திற்கு அழைத்துச் செல்வது போலத் தோன்றியது. கண்களைச் சுத்தமாகத் துடைத்துக் கொண்டு எழுந்து ஃபைஸாவைக் காண அவள் அறைக்குள் நுழைந்தாள்.

"என்ன செய்து கொண்டிருக்கிறாய் ஃபைஸா?"

"நானா? ஓவியம் தீட்டப் போகிறேன்" அவளது கனவுகளைப் பெருமளவில் ஆக்கிரமிக்கும் கருஞ்சிவப்பு வண்ணம் கிடைக்குமாறு வண்ணங்களை குழைக்கத் தொடங்கினாள்.

"ஓவியம், என்ன மாதிரியான ஓவியம்?"

கண்களை உருட்டினாள் ஃபைஸா. "எதை வரையப் போகிறேன் ? வரைந்து முடித்த பின் நீங்களே பாருங்கள் ஹஜியா."

ஃபைஸாவின் முகத்தில் பொலிந்த அமைதியும் தெளிவும் பிந்த்தாவின் கவலையை விரட்டியது. கவலைப்பட்டிருப்பாள். இருப்பினும், அவளது சமிங்ஞைகளைத் தவறாகப் புரிந்து கொள்கிறோமா என்றும் கூட யோசித்தாள். பிந்த்தா நிலை கொள்ளாமல் நின்றிருக்க, பெரியம்மாவின் இருப்பால் குழப்பமடைந்த ஃபைஸா, தான் செய்துகொண்டிருந்த வேலையை விடுத்து, படுக்கையில் அமர்ந்தாள். அவளருகில் அமர்ந்த பிந்த்தா அவள் தோளைச் சுற்றிக் கைகளால் வளைத்து அணைத்துக் கொண்டாள்.

"என்னை மன்னித்துக் கொள் ஃபைஸா, உனது நிலைமையை நான் அறிந்துகொள்ளவே இல்லை."

விழிகளைத் தாழ்த்தியபடி, விரல்களைப் பின்னிக்கொண்டாள் ஃபைஸா.

"இப்போது நலமாக இருக்கிறேன். வல்லாஹி குவா."

வார்த்தைகளற்றுப் போன நிலையில், ஆல்பத்திலிருந்து எடுத்து வைத்திருந்த புகைப்படத்தை ஃபைஸாவுக்கு அளித்தாள் பிந்த்தா.

"நீ சிறு பெண்ணாக இருந்தபோதிலிருந்து இந்தப் படம் என்னிடமிருந்தது எனக்கு ஞாபகம் வந்தது. உனக்கு உதவக் கூடும், வைத்துக் கொள்"

எப்போதோ ஈத் பண்டிகையின் போது எடுத்த படம் அது. வறுத்த மாமிசத்தின் மணம் அவள் நாசியில் நிரம்பியது. அவள் பெற்றோர்கள் சோஃபாவில் அமர்ந்திருக்க அவர்களுக்கிடையில் ஜமீலாவும் அவளும் அமர்ந்திருந்தார்கள். அப்போது அவனுக்கு ஒன்பது வயது. அவள் நினைவுக்குக் கொண்டு வரப் போராடிக்கொண்டிருந்த முகத்தைப் புகைப் படத்தில் பார்த்தாள். வளர்ந்த ஆண்மகனுடைய கண்களில் தெரியும் தீர்க்கமான பார்வை, அதன் மேற்புறத்தில் சினத்தினால் வளைந்திருந்த புருவங்கள்... அவன் எப்போதும் எப்படி புன்னகைப்பானென்றும், கண்களில் ஒளிபட்டபோது, உதட்டின் இடது நுனியை மட்டும் எப்படி சுளித்தான் என்றும் நினைத்துப் பார்த்தாள் ஃபைஸா. பின் அந்தப் படத்தை நெஞ்சோடு சேர்த்து அணைத்துக்கொண்டு அழத் துவங்கினாள்.

அவளை இழுத்து அணைத்துக்கொண்டாள் பிந்த்தா.

—

தந்தையின் படுக்கைக்கு அருகில் அமர்ந்திருந்த ரெஸா, மூச்சுத் திணறலால் அவரது மார்புக் கூடுகள் ஏறி இறங்குவதைக் கவனித்துக் கொண்டிருந்தான். எலும்பும் தோலுமாக இருந்த அவரது முகம், திறந்த வாய், அவற்றை விட மோசமானதாக அவரிடமிருந்து வெளிப்பட்ட நோயின் நெடி யாவும் ரெஸாவுக்கு மிகுந்த துயரத்தை அளித்தது. அந்த வாசம், அங்கு மிதந்து கொண்டிருந்த கிருமி நாசினி வாசத்தோடு கலந்து அவனுக்குக் குமட்டலை ஏற்படுத்த, வேறெங்காவது போய் விடலாமா என்று கூட நினைத்தான். அறையின் மூலையில் படுத்திருந்த மற்றொரு வியாதியஸ்தர் இருமத் துவங்கினார். உள்ளிருக்கும் உறுப்புகளே வெளியே வந்து விழும் அளவு பலமாக அவர் இரும, தந்தையின் கையைத் தட்டிக்கொடுத்து விட்டு, அறையிலிருந்து வெளியேறி நடந்து போனான் ரெஸா. இரவுக்காற்று வீசிக்கொண்டிருந்த வாரந்தாவில் வந்து நின்றான். அங்கு, அமர்ந்திருந்த பெண்கள் உரையாடிக்கொண்டும், உணவருந்திக்கொண்டும், நோயாளி உறவினர்களைப் பராமரிக்க வேண்டிய மற்றொரு இரவுக்காகத் தயாராகிக் கொண்டிருப்பதையும் பார்த்தான். சிகரெட் புகைப்பதற்குத் தோதான ஒரு மூலையைத் தேடிப்போனான் ரெஸா.

"ரெஸா..."

அவனுக்கு இந்தப் பெயரை முதன்முதலாக சூட்டியவள், அவன் சிற்றன்னை தலாத்துவின் குரலை அடையாளம் கண்டுகொண்டான் ரெஸா. அவள் சைகை காட்ட இருவரும் வாராந்தாவின் ஓரமாகப் போய் அங்கு சுற்றிக்கொண்டிருந்த கொசுக்களை எதிர்த்துத் தைரியமாக அமர்ந்தனர்.

தொண்டையை செருமிக் கொண்டாள் தலாத்து.

"உன் சகோதரன் புலாமா, மனைவியை வீட்டிற்கு அழைத்துச் செல்லப் போய்விட்டான்."

அவளுடைய கவலை தோய்ந்த முகத்தையும், கண்களைச் சுற்றியுள்ள கரு வளையத்தையும், சுருக்கங்கள் நிரம்பிய நெற்றியையும் பார்த்தான். வயதும், கவலையும் யாருக்கும் இதைத் தோற்றுவிக்கும். அவர்களுக்கிடையேயுள்ள ஒரே பந்தம் உள்ளே படுத்திருக்கும் கிழவன் மட்டுமே என்பதை ரெஸா அறிவான். அவர் இறந்த பின்பு இந்தப் பெண்மணியைப்பார்ப்போமா, இவளதுமகன், வேகாதஅரிசிச்சோற்றையும், நீரில் நனைத்த மிளகாய் போன்ற குழம்பையும் பரிமாறிய அவன் கர்ப்பிணி மனைவி ஆகியோரைப் பற்றியெல்லாம் கவலைப்படப்போகிறோமா என்பது கூட ஐயம்தான் என அவனுக்குத் தோன்றியது.

"பரவாயில்லை, அவனுக்கு இங்கே ஒரு வேலையும் இல்லை தானே."

"உன் அம்மா மைமுனா இன்று ஒரு நல்ல காரியம் செய்தார்."

"ஃபோனில் அழைத்து உன் அப்பா சீக்கிரம் குணமாக வாழ்த்தினார்."

கோபத்தில் உறுமினான் ரெஸா.

"அவரிடம் பேசி நீண்ட காலமாகி விட்டது."

சுற்றுமுற்றும் பார்த்தபோது, இரு பெண்கள் கொல்லைப்புறத்தின் புல்வெளியில் முகாமில் உபயோகிக்கும் தற்காலிக அடுப்பை அமைத்துக் கொண்டிருந்தார்கள். நோய்மை மனிதர்களை எப்படியெல்லாம் பிணைக் கிறது என்று ஆச்சரியப்பட்டான் ரெஸா.

"எங்களுக்குள் எப்பவுமே ஒத்துப்போனதில்லை, உன் அம்மாவும், நாங்களும்...எல்லாமே இந்த சக்களத்தி சண்டைதான்." அவள் சிரித்துக் கொண்டாள். "அப்போது எங்களுக்கு இள வயது, கொஞ்சம் அறியாமையும் அதிகம்."

ரெஸா எங்கேயோ நோக்கினான். முதலில் அவன் வலது பக்கம், பின் இடது பக்கம்... "நாளை நான் திரும்பப் போய் விடுவேன்."

"ஓ, சரி, நீ ரொம்ப நல்ல காரியம் செய்திருக்கிறாய், அல்லாஹ் உனக்குத்

தக்க பரிசு தரட்டும், உன் அப்பா குணமாகி விடுவார், முதுமைதான், அப்புறம் ரத்த அழுத்தம் வேறு."

அவள் சொல்வதற்குத் தலையாட்டினான் அவன். "ஆமாம், அவர் குணமாகி விடுவார்."

அதைத் தொடர்ந்து அங்கு நிலவிய அமைதியில் அவன் லைலாவையும், அவளது கடல் பேச்சையும், மரங்கள் நடுவதைப் பற்றியும் யோசித்துப் பார்த்தான். பின், அவனது மனம் சான் சிரோவின் பக்கம் நகர்ந்து, ஹஜியா பிந்த்தாவில் நிலைகொண்டது.

"ரெஸா, உன் சகோதரன் அமினூவை நீ உன்னுடன் கூட்டிக்கொண்டு போனால் பரவாயில்லை என்று நான் நினைக்கிறேன். உன் தொழிலுக்கு உதவியாக இருப்பான். அவன் புத்திசாலியான பையன்."

ஆற்றாமை நிறைந்து கெஞ்சும் அவள் கண்களை வாய் பிளந்து பார்த்துக் கொண்டிருந்தான் ரெஸா.

"இங்கே பார் தலாத்து, நான் கிளம்ப வேண்டும், புரிகிறதா? நான் கிளம்பியே ஆக வேண்டும்."

அவன் எழுந்து நிற்கையில் அலைபேசி அலறியது. மோசஸிடமிருந்து அழைப்பு.

அவனையே அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்த மாற்றாந் தாயிடமிருந்து விலகி நடந்து, அலைபேசியைக் காதில் பொருத்தினான்.

"சொல்லுங்கள்."

"நீ எங்கிருக்கிறாய்?"

"உங்களுக்கு என்ன வேண்டும்?"

"அந்தப் பெண் எங்கே?"

"எங்கிருக்க வேண்டுமோ, அங்கு."

"அங்கிருந்து அவளை கிளப்பி விடு."

"என்ன?"

"அங்கிருந்து கிளம்பி விடுங்கள், போலீஸ் அந்த இடத்தை மோப்பம் பிடித்துவிட்டார்கள். அடுத்த அரை மணி நேரத்தில் அவர்கள் அங்கு வரக் கூடும். அவளைக் கண்டுபிடிக்கக் கூடாது. அங்கிருந்து நகருங்கள். எந்த தடயத்தையும் விட்டுவிடாதீர்கள். இப்போது அவளை அங்கிருந்து நகர்த்திய பின், அடுத்த கட்டளைக்குக் காத்திருங்கள்"

ஒரு நிமிடம் முழுதாக அசையாமல் நின்று, அந்த சூழலில் நடைமுறைப் படுத்தக் கூடிய சரியான செயல்பாடு எதுவாக இருக்கும் என சிந்தித்தான். எதுவும் செய்ய இயலாத தொலைவில் அவன் இருக்கும் இந்த நேரத்தில், அவனது படை வீரர்களை நம்புவதைத் தவிர வேறெந்த வழியுமில்லை. அலைபேசியில் எண்களைத் தட்டிக் காதில் பொருத்தினான்.

"கட்டூஸோ, ஓடு, ஓடு, தப்பிச் செல்!"

"அந்தப் பெண்?" கட்டூஸோ எச்சரிக்கை ஆனான்.

"அவளுக்கு மயக்க மருந்து கொடு, சான்சிரோவுக்குத் தூக்கிக் கொண்டு போ. நான் அங்கு வந்து சேர்வதற்குள் அவளை வேறிடத்தில் தங்க வைக்க ஏற்பாடுகள் செய்கிறேன். எந்தத் தடயங்களையும் விட்டு விடாதே. கிளம்பி விடு கட்டூஸோ, உடனடியாகக் கிளம்பு, புரிகிறதா உனக்கு?"

—

30

"கழுதைப் புலியும், காட்டுக் கோழியும் உலவுமிடத்தில் என்றாவது ஒரு நாள் மோதல் நிகழும்"

நேயிறு காலையின் கதிரொளி திரைச்சீலையை ஊடுருவி உள் நுழைந்து. முந்தைய நாள் இரவின் துயரத்தால் சில்லிட்டிருந்த பிந்த்தாவின் இதயத்தில் கதகதப்பை ஏற்படுத்தி இதமளித்தது. படுக்கையிலிருந்து எழுந்து அமர்ந்தவள் தன் நாசியைத் தாக்கும் நெடி நிச்சயமாகக் கரப்பான் பூதத்தின் நெடி அல்ல என்று சமாதானம் செய்துகொண்டாள். நெடு நேரமாகத் தேடினாலும், வேட்டையாடிக் களைத்தாலும் அவளால் அந்தக் கரப்பானைக் கண்டடைய முடியாது என்று நிர்மானமாகத் தெரியுமாதலால். எழுந்து சென்று இந்திய ஊதுவத்தியை எடுத்துப் பற்ற வைத்தாள். நிழலாகப் பதுங்கியிருக்கும் பேராபத்தைத் தவிர்க்கும் பொருட்டு சிறப்புத் தொழுகை செய்தாள். வெளியே சென்று நீல வண்ண பெட்டூனியா மலர்களுக்கு நீர் வார்த்துவிட்டு முற்றத்தில் அமர்ந்தாள் உம்மியும். ஃபைலாவும் அங்கு வந்து அவளுடன் இணைந்து கொண்டார்கள். சிட்டுக்குருவிகள் வெளியெங்கும் தத்தித் தத்திக் குதித்துக் கொண்டிருப்பதை மூவரும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவற்றின் கீச் கீச்சென்ற ஒலி இளங்காலையை நிறைத்தது. இரண்டு சாம்பல் நிற புறாக்கள் மின் கம்பிகளில் அமர்ந்தபடி மூத்தவர்களின் அதிகார தோரணையுடன் அந்தக் குருவிகளை நோட்டமிட்டுக்கொண்டிருந்தன.

பிந்த்தாவின் மீது சாய்ந்து அவள் காதில் கிசுகிசுத்தாள் உம்மி. "நேற்று இரவெல்லாம் ஃபைலா என்ன செய்துகொண்டிருந்தாள் தெரியுமா?"

தலையசைத்தாள் பிந்த்தா. ஃபைலாவை ஓரக்கண்ணால் பார்த்தாள். மென்மையான மலரிதழ்களை வருடிக்கொண்டிருந்த அவள் முகம்

பிரகாசமாகவும், சாந்தமாகவும் இருந்தது.

பிந்த்தாவின் காதருகில் வாயைக் குவித்து, " இரவெல்லாம் ஓவியம் வரைந்து நிறங்களுடன் விளையாடிக்கொண்டிருந்தாள்"

"வம்பு, வம்பு" ஃபைஸாவின் குரலில் சினமோ,வன்மமோ இல்லை. உம்மியை அவள் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

உம்மியின் கண்கள் சற்றே விரிந்தன."ஹஜியா, நான் வம்புக்காரி இல்லை, அப்படித்தானே?"

"இல்லவே இல்லை செல்லம்' அவளைத் தட்டிக்கொடுத்தாள் பிந்த்தா. ஃபைஸா, உன் ஓவியம் எந்த அளவுக்கு இருக்கிறது ?"

ஃபைஸா முறுவலித்தாள். "என் ஓவியமா? ஓ, அது முடிந்ததும் நீங்களே பாருங்கள்."

"ரொம்ப மர்மமாக இருக்கிறதே?"

மீண்டும் முகம் மலர்ச்சியுற, ஏதும் பேசவில்லை ஃபைஸா.

"அவ்! ஹஜியா, நேற்று சொன்னீங்க, நாம் எல்லோரும் காலிதாவையும், ஸாராவையும் சந்திக்கப் போகலாமென்று, நாம் அங்கே போகிறோமா? பாட்டியின் கையைப் பிடித்துக் கொண்டு அவள் கண்களை நோக்கினாள் உம்மி.

"ஆமாம், நிச்சயமாக. நீயும் ஃபைஸாவும் செல்லப் போகிறீர்கள். முன்க்கைலா வீட்டில்தான் இருப்பான்."

"அப்போ நீங்க? நாங்கள் போய்விட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?"

பெருமூச்சு விட்டாள் பிந்த்தா. "எனக்கு ஓய்வெடுக்க நேரம் கிடைக்கும் கண்ணே."

பிந்த்தாவைப் பார்த்தாள் ஃபைஸா. இருவரின் கண்களும் சில வினாடிகள் சந்தித்து மீண்டன. அவள் கண்களில் வெளிப்பட்ட விஷயம் புரிந்த பரிச்சயமான பார்வையை பிந்த்தா அறிந்துகொண்டாள். தான் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பது ஃபைஸாவுக்குத் தெரிந்திருக்கிறது என்று பிந்த்தாவுக்கு சந்தேகமறப் புரிந்தது. தலைகுனிந்து விரல்களைப் பிசைந்தாள். எப்போதிருந்து அவளுக்குத் தெரியுமோ என யோசித்தாள்.

"ஃபைஸா எழுந்தாள். கிளம்புவதற்கு முன் கொஞ்சம் வரைகிறேன்."

அவள் கண்களைத் தவிர்த்தாள் பிந்த்தா.

"நான் போய் அதைப் பார்க்கிறேன்" அவளைப் பின் தொடர்ந்து

உம்மியும் ஓடினாள்.

பெட்டூனியா மலர்களின் அருகிலேயே நின்றுகொண்டிருந்தாள் பிந்த்தா. மெல்லிய பச்சைநிறத் தண்டு மலர்களின் கனம் தாளாமல் வளைந்திருப்பது போல், அவளது கனத்த இதயம், உடலை ஈர மண்ணை நோக்கிச் சரித்துக் கொண்டிருப்பது போலத் தோன்றியது. அவளுக்கு ரெஸா தேவை, அதில் எந்த விதமான ஐயமும் இல்லை. அவர்கள் இருவருக்குமிடையே நிகழ்ந்ததைத்தான் இத்தனை காலமாக அவள் தேடித் தவித்திருந்தாள். இறுதியில், வாழ்வின் அந்திமக் காலத்திலாவது தனது பாலியல் இச்சைகள் கட்டற்று ஓடியது அவளுக்கு முக்கியமாக இருந்தது. அவனைத் திருத்தி நல்வாழ்வுக்கு மீட்பதில் -- தன்னையும் மீட்பதில், அவனை ஒரு மேம்பட்ட மனிதனாக உருவாக்குவதில், வெற்றியடைய அங்குல தூரமே பாக்கி உள்ளது. அவளைச் சுற்றியுள்ளவர்களுக்கு, இந்தத் தங்கை பெண் உட்பட யாருக்கு என்ன தெரியும்? வாழ்வு முழுவதும், அவளுக்குக் கிடைக்கவேண்டியது மறுக்கப் பட்டதின், இதுகாறும் அவள் சகித்துக் கொண்ட இழப்பின் வலியைப் பற்றித் துளியேனும் அவர்கள் அறிவார்களா? இன்று அவளை அனைவரும் குற்றம்சாட்டும் பார்வையால் துளைத்தெடுக்கிறார்கள். தான் யாராக இருந்தோம், யாராக இருக்க வேண்டும் என்பதை அவள் தேர்வு செய்தாகவேண்டிய நேரம் வந்து விட்டது. இந்தத் தேர்வை, இவ்வளவு தாமதமாக வாழ்வில் எதிர்கொள்ள நேர்ந்தது மிகத் துக்கரமானது. ஆனால், தீவிரமாக அலசிப் பார்க்கையில் இறுதியில் ஒரே ஒரு வழி இருப்பதுதான் தெரிகிறது. இந்த உறவை இத்துடன் முடித்துக் கொள்வது, வாழ்வைப் புதிதாகத் துவங்குவது, புதிய இடத்தில்... எங்கோ தொலைவில்...

காலைத் தொழுகை நிறைவடைந்த பின், ரெஸா அவளை அழைத்து, உடனடியாக வருவதை அறிவித்த போது, எடுத்திருந்த முடிவை செயலாற்றும் வலிமை தனக்கு இல்லை என்பதை அவள் புரிந்து கொண்டாள்.

நீல நிற வண்ணத்துப்பூச்சியொன்று, மஞ்சள் நிறப் புள்ளிகள் இறைத்த சிறகைப் படபடத்தவாறு பெட்டூனியா மலரின் மீது வந்தமர்ந்தது. பின், சிறகை விரித்து ,மின் கம்பிகளைக் கடந்து, மேலே சாம்பல் வானில் பறந்து மறைந்தது. புறாக்கள் பறந்து சென்றபின், இரு சிட்டுக்குருவிகள் மட்டுமே வேலியின் மீதமர்ந்து, கீச் கீச் சென்று இடையறாது கூவிக்கொண்டிருந்தன.

சத்தமாக முகமன் கூறியபடி, வாயிற்கதவை தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்த மாலம் ஹரூணா, வெளியிலேயே அமர்ந்திருந்த பிந்த்தாவைக் கண்டதும் ஆச்சரியமானார். வாய் விரியச் சிரித்துக்கொண்டே அவளை

நோக்கி வந்தவரைப் பார்த்ததும், முகச் சுளிப்புடன் எழுந்து நின்றாள் பிந்த்தா.

"ஹஜியா பிந்த்தா, அப்படியே உங்களைப் பார்த்துக்கொண்டு போகலாமென்று..."

"அட, மாலம் ஹரூணா, இந்தப் பிரபல வேசியைப் பார்க்க வந்து விட்டீர்கள் போல, அப்படித்தானே?

"ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்?"

"எல்லாப் பக்கமும் போய், என்னைப் பற்றி நீங்கள் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள் என்பது நன்றாகத் தெரியும். இப்போது என்னைப் பார்த்து முகத்துக்கு நேராக சிரித்துவிட்டுப் போகலாம் என்று வந்தீர்களா? எனக்கு யாரிடத்தில் வேசித்தனம் செய்யப் பிடிக்கிறதோ, அவர்களுடன் நான் போய்க்கொள்கிறேன். இப்போது என் வீட்டைவிட்டு வெளியேறுங்கள், இனிமேல் இந்தப் பக்கம் எப்போதும் திரும்பிப் பார்க்கவேண்டாம். வந்து விட்டார் வேடதாரி!"

திரும்பி உள்ளே சென்ற விட்டாள். கதவருகில் நின்று திரும்பிப் பார்த்த போது, கண்களில் வேதனையுடன், தோள்கள் துவள, வாய் பிளந்து அவளையே வெறித்துக்கொண்டிருந்தார் ஹரூணா. ஆச்சர்யம்! உள்ளே சென்ற பிந்த்தா கதவை அறைந்து சாத்திய ஓசை வெளியே நின்றிருந்த அவரை அதிர்ச்சியில் குலுங்க வைத்தது.

—

வரவேற்பறையில், காப்பி மேசை மீது வைக்கப்படிருந்த தீக்கொன்றை மலர்கள் நிரம்பிய கண்ணாடிக் குவளையின் அருகில் நின்றுகொண்டிருந்த காலிதாவை விரட்ட பெரும் பிரயத்தனப்பட்டார்கள் ஸாராவும் உம்மியும். அவள் குவளையைத் தொட எத்தனிக்கும்போதெல்லாம் அவர்கள் இருவரும் விரட்டிவிடவே, கத்திக் கூச்சலிட்டுக்கொண்டிருந்தாள் காலிதா. பார்க்கவே வேடிக்கையாக இருந்தது ஃபைஸாவிற்கு. இருக்கையில் அமர்ந்தபடி, மலர் அலங்காரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவள், அதன் சாரத்தை தன் ஓவியத்தில் எவ்வாறு சிறப்பாகப் கொண்டு வரலாம் என யோசித்துக் கொண்டிருந்தாள்.

அல்ஹாஜி பக்கோரியின் மருமகளின் கடத்தல் பற்றிய செய்திகளைக் கவனித்துக்கொண்டிருந்த முன்க்கைலா, தன் இளைய மகளின் அலறல் கேட்டு எரிச்சலடைந்தான்.

"தயவு செய்து அந்தப் பெண்ணின் அழுகையை நிறுத்தி தொலை யுங்கள். எனக்கு செய்தி கேட்க வேண்டும்."

காலிதாவை மடியில் இழுத்துப் போட்டுக்கொண்டு சமாதானப் படுத்தினாள் ஸாதியா. "அல்லாஹ் சர்கி, கடைசியில் அந்தப் பெண் கிடைத்து விட்டாள்."

"இந்தக் கடத்தல் வேலை இப்போது அதிகமாகி விட்டது." திரையில் தெரிந்த அழகான பெண்ணின் முகத்தின் மீது அவன் பார்வை நிலைத்தது. அது லைலா சர்க்கியின் புகைப்படம், அவள் கடத்தப் பட்ட நாளிலிருந்து அந்தப் படத்தைத் தான் காட்டிக் கொண்டிருந்தார்கள். திரும்பிப் பார்த்தவன் ஸாதியா கண்களில் பொறாமையுடன் தன்னையே நோட்டமிட்டுக் கொண்டிருப்பதை அறிந்தான்.

"இந்தப் பெண்ணைக் கண்டுபிடிக்க இத்தனை நாட்கள் ஆகி விட்டது, பார்த்தாயா?"

காவல் அதிகாரி ஒருவர் தொலைக்காட்சி அலைவரிசையில் வந்து, அந்தப் பெண்ணை எப்படிக் கண்டுபிடித்தோம் என்பதை விளக்கிக் கொண்டிருந்தார். முதலில் அவளை அடைத்துவைத்திருந்த மாளிகை மீது மேற்கொண்ட சோதனை, அந்த மறைவிடத்தை விட்டு அவர்களைப் பலவந்தமாக ஓட வைத்ததென்று சொன்னார். அதன் பிறகு, போலீஸ் பாதுகாப்பு வளையத்தின் கெடுபிடிகளைத் தாக்குப்பிடிக்க முடியாமல் அந்தப் பெண்ணை ஒரு மருத்துவமனையின் முன் விட்டுச் சென்றதையும், அங்கு அவர்களுடைய கண்காணிப்பு அதிகாரி அந்தப் பெண்ணைக் கண்டதையும் அதிகாரி பெருமிதத்துடன் சொல்லிக்கொண்டிருப்பதை சிறு முகச் சுளிப்புடன் கேட்டுக்கொண்டிருந்தான்.

ஸாதியா தலையைக் குலுக்கிக் கொண்டாள். "இறைவனுக்கு நன்றி, அந்தப் பெண் உயிருடன் கிடைத்துவிட்டாள்."

முன்க்கைலாவின் அலைபேசி அழைத்தது. ஹதீஸாவிடமிருந்து அழைப்பு. வீட்டுக் கட்டுமான வேலைகளைப் பற்றி விசாரித்தாள். வீட்டுக்குத் தேவையான மர சாமான்கள், சர விளக்குகள், ஆகியவற்றைப் பாரீஸிலிருந்தும், துருக்கியிலிருந்து கம்பளமும் வரவழைப்பதில் உள்ள சிரமத்தையும் சவாலையும் சொல்லிக்கொண்டிருந்தான் முன்க்கைலா. ஹஜியா பிந்த்தாவின் குடியிருப்புக்கு, முக்கியமாக அவளுடைய படுக்கையறைக்கு எந்த வண்ணம் பூசினால் பொருத்தமாக இருக்கும் என்று கேட்டான். ஆனால், ஹதீஸாவின் கவனம் பேச்சில் இல்லாதது போலத் தோன்றியது.

"ஹுரைரா தான்." ஸாதியா விளைக்கினாள். "வீடு திரும்பியதிலிருந்து அவருக்கு மிகவும் தொல்லை கொடுத்துக் கொண்டிருப்பதாக அவள் கணவன் ஃபோனில் அழைத்துச் சொன்னார்."

"முட்டாள் பெண்."

கணவனை இரண்டாம் மனைவி கொண்டுவர அனுமதிப்பதைக் காட்டிலும், தான் ஒரு லிட்டர் நஞ்சை அருந்திவிடுவதாகவும், தன் உடலைத் தீ வைத்துக் கொளுத்திக்கொள்வதாகவும் மிரட்டிக்கொண்டிருக்கிறாள். ஆனால் அவள் கணவன் ஏற்கெனவே திருமண ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து முடித்துவிட்டதாகவும், அதை மாற்ற உத்தேசமில்லை என்றும் தெரிகிறது. கொடுத்த வாக்குத் தவறும் அபாயம் இப்போது. அது போக, ஒரு நல்ல குடும்பத்துக்குத் தேவையான அமைதியான சூழலை அளிக்கும் திறமையற்றவள் ஹுரைரா.

ஹுரைராவின் இயல்பான மூர்க்ககுணத்தையும், யோசிக்காமல் செயல்படும் பிடிவாத மனப்போக்கையும் வைத்துப்பார்த்தால், அவள் அப்படி மிரட்டல்கள் விடுப்பது சாத்தியம் என்பது அவனுக்கு நன்கு புரிந்தது. அவர்களது இளம் வயதில் ஒரு முறை, அவளைத் திருமணம் செய்யும் அளவுக்கு முட்டாள்தனம் நிரம்பிய ஆண் கிடைப்பது அரிது என்று ஒரு முறை முன்க்கைலா கணித்துச் சொன்ன போது கோபத்தில் அவனுடைய ஜீன்ஸை நெருப்பிலிட்டுக் கொளுத்தி விட்டாள். ஹுரைராவை அழைத்துப் பேசி, அவளுக்கு அறிவுரை சொல்வதாக ஹதீஸாவுக்கு வாக்களித்தான்.

"ஹஜியாவுக்குத் தெரியப் படுத்தி விட்டாயா?"

"அவரைத் தொடர்பு கொள்ளமுடியவில்லை"

"அப்படியா" சரி முயற்சி செய்துகொண்டே இரு, நான் ஹுரைராவை அழைத்துப் பேசுகிறேன்."

ஹுரைராவின் எண்ணை அழைத்தபோது, அவள் அலைபேசியை எடுக்கவில்லை. பற்களை நறநறத்துக்கொண்டே அமர்ந்தான்.

கணவனின் குணத்திற்கு பழக்கப்பட்டுப் போன ஸாதியா, அவனுக்குத் தம்ளரில் நீர் எடுத்துக்கொண்டு வந்தாள். முன்பு பலமுறை செய்தது போல, இப்போது தம்ளரை சுவற்றின் மீது விசிறி எறிய மாட்டான் என நம்பினாள். இன்னும் அவ்வளவு சினம் கூடவில்லையென்றாலும், இந்த நிலையில் சின்ன விஷயம் கூட சினத்தின் உச்சிக்கு இட்டுச் சென்று விடக்கூடும்.

அப்போது இன்டர்காம் மணியடித்தது. யாரோ மாலம் ஹரூணா கேட்டில் நின்றுகொண்டு அல்ஹாஜி முன்க்கைலாவைப் பார்க்க

வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருப்பதாகக் குரல் அறிவித்தது.

ஸாதியாவும், ஃபைஸாவும் குழந்தைகளை அழைத்துக்கொண்டு மாடிக்குச் செல்ல, விருந்தினரை வரவேற்க எழுந்தான் முன்க்கைலா.

சிறு வெட்கத்துடன் புன்முறுவல் செய்துகொண்டே, முன்க்கைலாவுடன் கை குலுக்கினார் ஹரூணா. வசதியாக வாழ்வதால், தன் தந்தையை விட மூத்தவர்கள் கூட அவனுக்கு மரியாதை செய்வதை பழகிக்கொண்டான் முன்க்கைலா. அவர் அணிந்திருந்த கஞ்சி போட்ட மொட மொடப்பான நீண்ட காஃப்தான் அங்கியையும், தலையில் மின்னும் தொப்பியையும் பார்த்தவுடன், தன் கவனத்தைக் கவரவே அப்படி வந்திருக்கிறார் என்று முன்க்கைலாவுக்குப் புரிந்தது. அவருக்கு மட்டும் எப்படி இவ்வளவு சிறப்பான ஜன்னா தொப்பி கிடைக்கிறது என்று அவன் கேட்டபோது அவர் முகத்தில் பெருமை சுடர்விட்டது.

"அப்படியென்றால் நான் என்ன தொழில் செய்கிறேன் என்பது உனக்குத் தெரியாது அல்லவா? இந்த நாட்டின் மதிப்புக்குரிய பெரிய மனிதர்களுக்கும், உயர்மட்ட அரசியல் வாதிகளுக்கும் நான்தான் தொப்பிகளை சலவை செய்து, செப்பனிட்டு வினியோகம் செய்கிறேன். வல்லாஹி குவா!"

மிகுந்த தோழமையுடன் புன்னகைத்தான் முன்க்கைலா. "அது நல்ல விஷயம். என் தொப்பிகளை சலவை செய்யக்கொடுத்து வாங்கும்போது மோசமான நிலையிலிருக்கும். பார்த்தாலே எனக்கு உற்சாகமில்லாமல் போகும். அவர்களுக்குப் பதிலாக, இனிமேல் உங்களிடம் தான் சலவை செய்யக் கொடுக்கவேண்டும்."

பெரும் பணக்காரர்களோடு உடனிருக்கும் வாய்ப்புக் கிடைத்தால், அந்த சொகுசில் ஆனந்தமாகப் பேசி நேரம் கழிப்பவர் ஹரூணா. தொப்பிகளின் வரலாறு, அதைப் பராமரிப்பது அவருடைய சேவையைப் புகழும் உயர்ந்த பதவியிலுள்ளவர்கள் என நிதானமாக உரையாற்றிக் கொண்டிருந்தார்.

ஆனால், இந்த அர்த்தமற்ற உரையாடலில் மயங்கவில்லை முன்க்கைலா. அதுவும், தன் அன்னையை மணக்க வேண்டுமெனும் பொருத்தமற்ற எண்ணத்தை மனதில் வளர்த்துக்கொண்டிருக்கும் மனிதனிடம் இந்தப் பேச்சுகளைவிட வேறு ஏதோ இருக்கிறதென்று யூகித்தான்.

"மாலம் ஹரூணா, என்னிடத்தில் சொல்ல வேறு ஏதாவது முக்கியமான விஷயம் உள்ளதா?"

அந்த இளைஞனின் முகத்தில் தெரிந்த சிறு சலிப்பைக் கச்சிதமாக உணர்ந்துகொண்ட மாலம் ஹரூணா, தொண்டையைச் செருமி சரிப்படுத்திக் கொண்டார். "ஓ, ஆமாம், நேரத்தின் அருமை எனக்கும் புரிகிறது. நானே ஒரு வியாபாரி அல்லவா? ம்ம், நான் உன் அம்மாவைப் பற்றியும் அவருடைய நன் மதிப்பையும் மரியாதையையும் பற்றிய விஷயத்தைப் பேச வந்துள்ளேன்."

மாடியில், முன்க்கைலா பல நாடுகளிலிருந்து வாங்கிவந்திருந்த அவ்விடத்தின் நினைவுப் பொருட்கள் அறையெங்கும் பரத்திவைக்கப் பட்டிருந்தன. ஃபைஸாவின் அருகில் அமர்ந்திருந்த ஸாதியா, அவளது உடல்நலத்தைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தாள். ஃபைஸாவிடம் ஒளிரும் தெளிவுக்குக் காரணம் என்னவாயிருக்கும் என்று வியந்தாள். அதை நினைத்துக் கவலைப்படுவதா என்றும் புரியவில்லை. ஏனென்றால், கிறுக்குத்தனம் என்பது சில வேளைகளில் அதிபுத்திசாலியாகத் தன்னைக் காட்டிக்கொள்வதாகவும் இருக்கும் என அறிவாள்.

"நானா? நலமாக இருக்கிறேன், வல்லாஹி," ஃபைஸா புன்னகைத்தாள்.

"கடந்த முறை நாம் பேசிக்கொண்டிருந்தோமே, என் மாமாவைப் பார்க்கப்போகலாம் என்று, அதைப் பற்றி ஏதாவது யோசித்தாயா?"

"உங்க மாமா? ஓ, வேண்டாம், அது தேவையில்லை என்று நான் நினைக்கிறேன். படுக்கையிலிருந்து இறங்கி, அருகிலிருந்த மேசை மீது வைக்கப்பட்டிருந்த உருண்டையான அலங்காரப்பொருளைப் பார்த்தாள். அதன் மீது துல்லியமான தங்க வேலைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

"இது மிக அழகாக இருக்கிறது. இதை எதற்காகவாவது பயன்படுத்தலாமா?"

ஸாதியா புன்னகைத்தாள். "இல்லை, இது வெறும் அலங்காரப் பொருள்தான், பாரீஸ் நகரத்தில், ஒரு சிரியனிடமிருந்து உன் சகோதரன் இதை வாங்கி வந்தார்."

"பாரீஸ்? அது மிக அழகான நகரம் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். எப்போதாவது அங்கு செல்ல வேண்டுமென்று எனக்கு ஆசை உள்ளது."

"நிச்சயமாக, இன்ஷா அல்லாஹ்."

மீண்டும் அமர்ந்து, உறங்கிக்கொண்டிருந்த காலிதாவைத் தட்டிக் கொடுத்தாள்.

"ஸாதியா அக்கா, புது வீட்டைக் கட்டி முடிக்க அல்ஹாஜிக்கு இன்னும் எத்தனை நாட்களாகும் என்று நினைக்கிறீர்கள்?"

புன்னகைத்தாள் ஸாதியா. "புது வீட்டில் எங்களோடு வந்து சேர்ந்து வாழ உனக்கு விருப்பம், அப்படித்தானே ஃபைஸா?"

பெருமூச்செறிந்தாள் ஃபைஸா. மற்றெதையும் விட ஹஜியாவுக்காக அதை விரும்பினாள். அந்த வீட்டிலிருந்து ஹஜியா நீங்கி வர வேண்டும்... அவளை ஆட்கொண்டிருக்கும் சலனத்திலிருந்து நீங்கி வர வேண்டும்.

"புது வீட்டில் தானே? ஆமாம், அந்த இடத்தைவிட்டு நீங்கி நாங்கள் இங்கு வரவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்."

"நல்லது, நிச்சயமாக அடுத்த மாதவாக்கில் வீடு தயாராகி விடும், அங்கே குடிபுக உன் சகோதரன் ஆவலாக இருக்கிறார், ஒரு நாள் கூடத் தவறாமல், தினமும் வேலை நடக்குமாறு பார்த்துக் கொள்கிறார்.

"அப்படியா?"

"ஆமாம், உனக்குத் தெரியுமா, அந்த வீட்டின் முன்னால், வெளிப்புறம் நீரூற்று அமைக்கப்படுகிறது. நீ பார்க்கவேண்டும் ஃபைஸா, அது மிக அழகாக இருக்கப்போகிறது, வீட்டுக்குத் தேவையான மரச்சாமான்கள் அனைத்தையும் பாரீஸிலிருந்தும், தரைக் கம்பளங்களை இஸ்தான்புல் நகரத்திலிருந்தும் இறக்குமதி செய்கிறார் உன் சகோதரன்."

"இஸ்தான்புல், அது துருக்கி, சரிதானே?"

"ஆமாம்!"

அப்போது புயல் போல உள்ளே நுழைந்தான் முன்க்கைலா. அவன் முகத்தில் பெருங்கோபம் தாண்டவமாடியது. தம்ளரை சுவரில் விசிறியடிக்க கூடிய கொந்தளிப்பு மனநிலை. அதை உணர்ந்த ஸாதியா, பயந்து பின் வாங்கினாள். ஆனால் அவன் ஃபைஸாவின் பக்கம் திரும்பி, தொண்டையில் அடைத்து வைத்திருந்த இடியோசையை வார்த்தைகளில் இறக்கிய போது நடுங்கிப் போனாள் அவள். "அந்தப் பொறுக்கி ரவுடி ரெஸாவைப் பற்றி என் காதில் விழுவது என்ன?"

—

கட்டிலின் தலைப்பக்கமாய், சற்றே உயர அவன் சாய்ந்திருக்க அவன் மார்பில் தலைவைத்துப்படுத்திருந்த பிந்த்தா, பெருமூச்சுவிட்டாள். ரெஸாவும் நீண்ட மூச்செடுத்தான். இருவருமே அன்று தடுமாற்றமான உறவு கொண்டார்கள், சிரத்தையில்லாமல் முத்தங்கள் இட்டுக்கொண்டார்கள். ஆர்வமற்ற மனநிலையில், ஒருவர் மற்றவரின் உடலுக்கு அந்நியமானவர்கள்

போல இருந்தார்கள். மனம் எங்கோ நிலைத்திருக்க அவள் தோளை வருடிக் கொண்டிருந்தான். அந்த வீட்டிற் முதன்முறையாக வந்ததும், அவள் கழுத்தைக் கீறிக் காயப்படுத்தியதும் நினைவில் புரண்டது. காயத்தின் வடுவை அவள் கழுத்தில் விரல்களால் தேட, அது கிடைக்கவில்லை.

"என்னை மன்னித்து விடு" வாயிலிருந்து வேகமாக வார்த்தைகள் உருண்டு வர, ஆச்சரியமானான். அவளைச் சுற்றிக் கைகளைப்போட்டு நெஞ்சோடு இறுகத் தழுவிக்கொண்டான்.

"மன்னிப்பு? எதற்கு?"

"அன்று முதல் தடவை உன் அறைக்கு வந்ததற்காக, நான் உன்னைக் காயப்படுத்தியதற்காக..."

அவள் அமைதி நீண்டு, பழைய நினைவுகளின் புலத்திற்குச் சென்றது. சுற்றுச் சுவரைத் தாண்டி வீட்டிற்குள் அவன் நுழைந்த தினங்களுக்கு முந்தைய தன் வாழ்க்கையை நினைத்துப் பார்த்தாள். அன்றிலிருந்து வாழ்வில் எவ்வளவு மாற்றங்கள்? மகிழ்வும், துயரமும் சரி சமமான அளவில் இருந்தன. இந்த உறவை முடிவுக்குக் கொண்டு வரக் கட்டாயம் ஏற்பட்டதை நினைத்தாள். ஏனென்றால் இப்போது இது மகிழ்ச்சியை விட அதிக அளவு அயர்ச்சியையே அளிக்கிறது. மீண்டும் பெருமூச்சுவிட்டாள்.

"எது நடந்தாலும் அதில் ஒரு காரணம் இருக்கிறது."

அவளை இறுக அணைத்து, நரைத்திருந்த அவள் கூந்தலில் தலையைப் புதைத்துக்கொண்டான். அவனுடைய நோயாளித் தந்தையையும், அவர் உடலிலிருந்து வீசிய நோயின் வீச்சத்தையும் நினைத்தான். அந்த அளவு வயதானால், தானும் தன் நோயால், பேரக்குழந்தைகளை அப்படித்தான் விரட்டி விடுவோமா என்று யோசித்தான்.

அவன் மார்பின் சுருட்டை முடியுடன் விளையாடிக்கொண்டிருந்த பிந்த்தா, ஒவ்வொரு முடியாகப் பிடுங்கி அதன் முழு நீளத்துக்கு இழுத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவனுடைய இருப்பில், அவனது ஆண்மையின் வாசத்தில் திளைத்துக்கொண்டிருந்தாள். ஆனால், அண்மையில் அவள் எதிர்கொண்ட நிகழ்வுகளின் நிழல் மனதில் படர்ந்தபோது அந்தக் கிளர்ச்சி மறைந்துபோனது. இப்போது யாருடைய மார்பில் தலைசாய்த்துப் படுத்திருக்கிறாளோ, அவன் தான் அத்தனை வெட்கக்கேட்டிற்கும் அவமானங்களுக்கும் காரணமானவன். ஹ்ம்ம்ம்!

"நீ உள்ளே வரும்போது தெருவில் யாராவது இருந்தார்களா?"

"ஏதோ சில குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தார்கள். சிலர்

பேசிக்கொண்டு நின்றார்கள், புரியுதா..."

"உன்னைப் பார்த்தார்களா?"

"இல்லை, இரண்டு முறை அப்படியும் இப்படியும் நடந்தேன், மூன்றாவது முறை யாரையும் காணவில்லை, சுவரேறிக் குதிப்பது எளிதுதான்."

"ம்ம். ஆனால் முள் கம்பிகள் இருக்கிறதே, நாம் மிக கவனமாக இருக்க வேண்டும் ஹஸன்."

"நாம் கவனமாகத்தான் இருக்கிறோம்..."

"அதிக கவனம் தேவை, அனைவரும் ஒரு மாதிரியாகப் பேசுகிறார்கள்"

ரெஸா மெல்ல செருமிக்கொண்டான். "நீ எப்போதாவது கடல் பார்த்திருக்கிறாயா"?

தலையை உயர்த்தி அவன் முகத்தைப் பார்த்தாள். குழப்பத்தில் கண்கள் விரிந்தன.

அவள்அறையின்சுவர்களைத்தாண்டி, வெளியே, எங்கோதொலைவில் வெறித்துக் கொண்டிருந்தான். தெளிவில்லாத பகற்கனவிலிருந்து பேசுவது போல, தொடர்பற்று இருந்தது அவன் பேச்சு.

"நான் கடலைப்பற்றி நினைத்துக்கொண்டிருந்தேன். அதில் நிறைந்திருக்கும் நீர், சில சமயம் பொறுமையாகவும், சில சமயங்களில் உக்கிரமாகவும் இருக்கிறது. அத்தனை நீர்...உனக்குப் புரியுதா, அது என்னவெல்லாம் செய்யக்கூடும் என்று உன்னால் கற்பனை செய்ய முடிகிறதா?"

"நான் ஒரே ஒரு தடவைதான். கடல் பார்த்திருக்கிறேன் ஹஸன். ஹஜ் பயணம் போகும்போது, விமானத்தின் சிறிய ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்திருக்கிறேன்."

"அது ரொம்பத் தொலைவா, மெக்கா?"

"அவ்வளவாக இல்லை. இப்போது ஐந்து மணி நேரத்துக்கும் குறைவுதான்..."

சற்று நேரம் அமைதியாக இருந்தான். "நேற்று இரவு அவள் அழைத்திருந்தாள்" அந்தப் பெண்மணிதான்...நான் அவளுடன் ஜெட்டாவில் இருக்க வேண்டுமாம். நினைத்துப் பார், அவளே விமானப் பயணம் எல்லாம் ஏற்பாடு செய்து விடுவதாகச் சொன்னாள்."

சத்தமாகச் சிரித்தான். "அப்பாவுடனும் பேசினாள். விரைவில் குணமடைய வாழ்த்துகள் சொன்னாள்."

"எவ்வளவு நல்ல செயல் அது, நீ என்ன சொன்னாய்?"

அவன் முகம் இருண்டது. சற்று நேரம் பற்களைக் கடித்துக் கொண்டிருந்தான். "உனக்குத் தெரியுதா?, அவள் இப்போது தனிமையாக இருக்கிறாள், புரிகிறதா? அவளிடம், நீ யாருமில்லாமல் தனியாகத்தான் இறக்கப் போகிறாய், உன் பிணத்தை எங்கேயோ தூக்கி வீசப்போகிறார்கள், ஏனென்றால் உனக்காக துக்கப்படுவதற்கு யாருமே இல்லை என்று சொன்னேன்"

எழுந்து அமர்ந்தாள் பிந்த்தா. "அப்படிச் சொல்லியிருக்கக்கூடாது ஹஸன், அவர்களின் செய்கைக்குப் பரிகாரமாக ஏதாவது செய்ய முயற்சி செய்கிறார்கள், நீ அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது. ஒரு வாய்ப்புத் தந்திருக்கலாம் ஹஸன்."

ஆனால் அந்த உரையாடலுக்கான கதவுகளை அடைத்து விட்டான் என்பது அவன் முகத்தில் தெரிந்தது. பாதி திறந்திருந்த ஜன்னல் கதவிலிருந்து மிதந்து வரும் காற்று, விதியின் இரக்கமற்ற தருணங்கள் படிமங்களாக உறைந்து நிற்கும் அவன் இதயத்தை உலுக்குவதைக் கண்டு பிடித்தவனைப் போலத் தெரிந்தான். அந்த ஜன்னலை மேலும் சற்று நேரம் திறந்து வைக்கும் முயற்சியில் ஏதோ சொல்ல ஆரம்பித்தாள் பிந்த்தா. ஆனால் அவளைத் தன் பக்கமாக இழுத்துக்கொண்டான் ரெஸா.

"எப்போதாவது எனக்குக் கடல் பார்க்கவேண்டும்."

ஏதோ ஒரு நினைப்பில் அவள் தலையை வருடிக்கொண்டிருந்தான். வெகு தொலைவில், நீலக்கடலோரத்தில் அவன் மனம் இருக்கையில், லைலாவை மார்பில் தாங்கிக்கொண்டிருப்பது எவ்வாறு இருக்கும் என அந்தக் கணத்தில் கற்பனை செய்து பார்த்தான். மேலும் அவளது பட்டுப் போன்ற, நறுமணம் வீசும் கூந்தலை அவன் கைகள் அளைந்து கொண்டிருக்க, கடலின் நீலம் அவளது விழிகளில் பிரதிபலிப்பதாகவும் கற்பனையில் மிதந்தான். பதின்பருவத்தில் அவனைக் காதலித்துவிட்டுப், பின்னாளில் வேறொருவனைத் திருமனம் செய்துகொண்டு, அவலட்சணமான குழந்தையைப் பெற்றுக்கொண்ட அந்தப் பெண்ணைப் பற்றி நினைத்தான். காதலிப்பதென்பது எந்த வகையான உணர்வு என்று தான் உணர்ந்ததை, பருவவயதின் காதல் ததும்ப அவனைப் பார்த்து வெட்கத்துடன் அவள் சிரிக்கும்போதெல்லாம் இதயம் படபடவென வேகமாகத் துடித்ததையும் நினைத்துப் பார்த்தான். துயர அலைகளின் அடியாழத்தில், சிறு கோபமும், வருத்தமும் இருந்தது. கட்டூஸோ, டோகோ இருவரின் மீதும் கோபம்.

ஏனென்றால், பிடிபட்டு விடுவோமோ என்னும் அச்சத்தில், லைலாவை, நடுஇரவில் ஒரு மருத்துவமனையின் வெளியே விட்டுவிட்டார்கள். அவனுக்குப் பிடித்தமான முறையில் அவளை வழியனுப்பி வைக்க முடியவில்லை என்பதுதான் ரெஸாவின் வருத்தம்.

அவன் கைகளைத் தன்னிச்சையாக வலுவுடன் இறுக்கிப் பிடித்தாள் பிந்த்தா. அவளைப் பார்த்தபோது கண்களில் நெருப்பின் சாயை தெரிந்தது. தாங்கொணாப் பொறாமையால் மட்டுமே மூளக்கூடிய நெருப்பு.

"இன்னொருத்தி இருக்கிறாள், அப்படித்தானே ஹஸன்?"

"என்ன?"

அவனிடமிருந்து விலகினாள் பிந்த்தா. "இன்னொரு பெண்"

"நீ என்ன சொல்ல வருகிறாய்?"

"நீ இன்னொரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருக்கிறாய்"

"நானா? என்ன அது, பெண்?"

அவனை ஆழ்ந்து நோக்கிய அவள் பார்வையில் அவன் தன்னிலை இழந்துகொண்டிருந்தான்.

"இன்னொரு பெண் இருக்கிறாள்" இந்த முறை அவள் உறுதியாகச் சொன்னாள் "இந்த நிமிடத்தில் நீ என்னைத் தொட்டவிதத்தில் எனக்குப் புரிந்துபோனது, உன் மனதில் அப்போது நான் இல்லை, அவள் தான் இருந்தாள், அந்த இன்னொரு பெண்." படுக்கையிலிருந்து எழுந்து, ஆடைகளை அணியத் தொடங்கினாள். "எனக்குப் புரிந்திருக்க வேண்டும், அண்மைக்காலத்தில் நீ என்னோடு உறவு வைத்துக்கொள்ளும் முறையிலிருந்தே நான் தெரிந்து கொண்டிருக்கவேண்டும், உன் மனதில் அவள் தான் இருக்கிறாள் என்று, தேவையா இந்த அபத்தம்?"

அவன் எழுந்து அமைதியாகத் தன் ஆடைகளைப் பொறுக்கிப் படுக்கையின் ஓரத்தில் அடுக்கினான். பற்களை மட்டும் நறநறத்துக் கொண்டே இருந்தான். ஆடைகளை அணிந்தபின் அவள்புறமாகத் திரும்பினான்.

"நான் கையாள வேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன. புரிகிறதா? ஏதோ ஒரு கிறுக்குத்தனமான காரியம் கையில் எடுத்தோம், அது என்னவென்று எனக்கே முழுதாக விவரம் தெரியாது, ஆனால் அந்த வேலையால் சுத்தமாகத் தூக்கம் இல்லை. இங்கேயும் அங்கேயும் ஓடி ஒளிய வேண்டியுள்ளது, இப்போது வேலையைச் சரியாகச் செய்துமுடிக்காமல்

மொத்தக் காரியமும் கெட்டுப் போய்விட்டது. அதற்கும் நான் தான் பதில் சொல்லவேண்டும். ஆனால், எப்படி, எங்கிருந்து தொடங்குவதென்றே எனக்குத் தெரியவில்லை, உனக்கு இதெல்லாம் புரியுமா? என் அப்பா ஆஸ்பத்திரியில் படுக்கையில் இருக்கிறார், ஆனால் நான் இங்கு உன்னுடன் இருக்கிறேன், என் வாழ்க்கையில் அவர் ஒருவர் மட்டும்தான் எப்போதும் என் மேல் அக்கறையோடு இருப்பார், புரியுதா, ஆனால் நான் இங்கிருக்கிறேன், இப்போது நான் சான்சிரோவில், அந்தப் பையன்களோடு இருக்கவேண்டிய நேரம், எப்படி,எங்கு,என்ன தப்பு நடந்தது என்று அவர்களை விசாரிக்க வேண்டும், ஒரே ஒரு நிமிடம்...த்தா, ஒரு நிமிடம், நான் அங்கு இல்லை, மொத்தக் காரியத்தையும் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி இருக்கிறார்கள். என்ன செய்தார்கள் என்று கேட்க வேண்டும், புரியுதா, இருந்தாலும் நான் இங்கே இருக்கிறேன். ஆனால், நீ என்ன செய்கிறாய் என்று பார்.”

அவள் இதயம் மிகக் கடும் கொந்தளிப்பில் சுழன்றுகொண்டிருந்தது. காதலர்களை உணர்ச்சிவசப்படுத்தி மூர்க்ககுணத்துக்கு மாற்றக்கூடிய ஒரு மனநிலையில் இருந்தாள். கையில் கிடைப்பதைத் தூக்கி அவன் மீது வீசி எறிந்து ரத்தக் காயமாக்கி விட நினைத்தாள். ஆனால் அவன் முகத்தைப் பார்த்தபோது, அதில் ஓடிக்கொண்டிருந்த உணர்வுகளின் சுழலைக் காணும் போது மகன் யாரூவின் நினைவு வந்தது. அவன் மனதில் நெளிந்து கொண்டிருந்த குழப்பமான உணர்வுகளை விவரித்துச் சொல்வதற்கு ஒரு வாய்ப்புக் கூட தான் அளிக்காததை நினைவு கூர்ந்தாள். இப்போது படுக்கையின் மறுபுறம் சென்று ரெஸாவை அணைத்துக்கொள்ள முயற்சி செய்தாள், சினம் தீராது அவன் மறுத்தபோதும், வாரித்தழுவி மார்பில் தாங்கிக்கொள்ள அவன் அனுமதிக்கும் வரை தொடர்ந்து வற்புறுத்தினாள். அவன் மனதுக்குள் என்ன ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை, அவனுக்கு இப்போது அவள் தேவையாக இருப்பதை, சொந்த மகனிடம் தோல்வியடைந்தது போலன்றி இவனைக் காப்பாற்ற வேண்டிய தேவை அவளுக்கு இருக்கிறதென்பதை, இந்த உலகத்தாரால் ஏன் புரிந்து கொள்ள முடியவில்லை? அவர்கள் எப்படி அவளை மதிப்பீடு செய்யலாம்?

முதல்முறையாக, பதட்டத்தில் நடுங்கிக்கொண்டிருக்கும் இரு இதயங்களும் உண்மையாகத் தழுவிக்கொண்டன. ஒன்றுக்குள் ஒன்று உருகின. முதன்முறையாக அவன் இதயம் அவள் இதயத்தைத் தொட்டது. இதுவரை அவர்கள் பகிர்ந்துகொண்ட தகிக்கும் உறவையும், நினைவுகளின் தொகுப்பையும் விட, இன்றுதான் காதலுக்கு மிகவும் நெருக்கமானதோர் உணர்வை அவளிடம் உணர்ந்தான் ரெஸா. “ இறைவா!! என்னை மன்னித்து விடு.”

நிச்சயமாக அவன் குரல் வழியே கண்ணீர் வழிகிறது என்பதை உணர்ந்தாள்.

அவ்வேளையில், எந்தவொரு திரைகளுமின்றி நிர்வாணமாக இருக்கும் தன்னுடைய இதயத்தையோ, விழிகளில் வழியும் கண்ணீரையோ அவள் பார்ப்பதை அவன் விரும்பவில்லை.

"நான் போக வேண்டும், நான் போயாக வேண்டும், புரிகிறதா?"

அவளை வேறுபுறமாகத் தள்ளிவிட்டு, அறையை விட்டு வேகமாக வெளியேறினான். அவளைத் தவிர மற்றவர்கள் யாருக்குமே நினைவில் இல்லாத அவனது பெயரைச் சொல்லி அழைத்துக்கொண்டே பின்னால் ஓடினாள் பிந்த்தா. ரெஸா, வரவேற்பறையைக் கடந்து, கதவைத் திறந்து கொண்டு சென்றபோது, அவன் பின்னால் விரைந்தாள். வாசற்கதவை அடைய பாதி வழி செல்லும் முன், வெளியே இருந்து அதைத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே ஓடி வந்தாள் உம்மி. அவனைக் கண்டுகொள்ளாமல், கதவருகில் உறைந்து போய் நின்ற தனது பாட்டியை நோக்கி ஓடினாள். ஆனால், கேட் அருகிலேயே நின்று கொண்டிருந்த ஃபைஸா, ரெஸாவை உடனே அடையாளம் கண்டு கொண்டாள். அவள் இதயம் நின்று போனது. அவள் பின்னால் வந்து கொண்டிருந்த மனிதனை எதிர்கொள்ளும் வரை நடையைத் தொடர்ந்தான் ரெஸா. அந்த ஆண், பிந்த்தாவின் பணக்கார மகனாகத்தான் இருக்கக்கூடும் எனச் சரியாகக் கணித்தான். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். மனக்குழப்பத்துடன் ரெஸாவும், கடுஞ்சினத்துடன் முன்க்கைலாவும் இருந்தார்கள். அது போன்ற ஆத்திரம், கொலைக்காரியம் செய்யவும் தூண்டக்கூடிய அளவுக்கு உக்கிரமானது என்பதை ரெஸா நன்கு அறிவான்.

ரெஸாவுக்கு அப்பால் நின்ற தன் தாயை எட்டிப்பார்த்தான் முன்க்கைலா. பிந்த்தாவின் முகத்தில் குற்றவுணர்வு தெளிவாக எழுதப்பட்டிருந்தது. அவசரமாக உடலில் சுற்றிகொண்ட ஆடை, அவள் தோள்களை சரியாக மறைக்காமலிருக்க, திறந்திருந்த தோள் அவளது கறுப்பு உள்ளாடையின் பட்டையை வெளிக்காட்டிக் கொண்டிருந்தது.

அக்கணத்தில்தான், அந்த ஞாயிறு அதிகாலையில், கரப்பான் பூச்சியின் நெடிக்குத் தான் கண்விழித்ததை துல்லியமாக நினைவு கூர்ந்தாள் பிந்த்தா.

—

31

"ஒப்பாரிப் பாடலின் இனிமை இழப்பை ஈடு செய்யாது."

கொடூரமாகத் துரத்தும் பகற்கனவுகளில் மீண்டும் சிக்கித் தவித்தாள் பிந்த்தா ஜுபைரு. அந்தக் கனவுகளை விளிம்புகளாகக் கொண்ட அவளது சோகத் திரைகள், துயரத்தின் ஆழ்ந்த வண்ணத்தை இழைத்துக் கொண்டு அவளது எல்லைகளை தெளிவற்றதாக்கிவிட்டது. அதனால் கனவு நிலையும், கனவற்ற நிலையும் எதுவென்று அவளுக்குப் புலப்படவில்லை. சூழ்ந்திருக்கும் வருத்தம் தோய்ந்த நட்புகள், ஓலமிடும் உறவினர்கள் யாவும் புகையாகத் தெரிந்தன. படுக்கையில் அமர்ந்தவாறு, அவளது துக்கத்தின் மந்திரத்தை அவ்வப்போது உச்சரித்துக் கொண்டிருந்தாள்." இன்னலில்லாஹி வ இன்னா இலாஹி ரஜி யுன்"

இரங்கல் தெரிவிப்பவர்கள் அனைரும் பனிப்புகை போல் மறைய, அவள் கண்விழிக்கும்போது, முன்க்கைலா வந்து, அவளுடைய இருக்கையில் அமர்ந்துகொண்டு, அவனது பருத்த விரல்களுக்கிடையே கார் சாவியைச் சுழற்றி விளையாடப்போகிறான் என்று உறுதியாக நம்பினாள். அவனுடைய விரல்களை, கொழுத்த கன்னங்களை, தொப்பையை நினைத்துப் பார்த்தாள். அந்தத் தொப்பையை மண்ணிற்கு விருந்தாகக் கொடுப்பதை விடத் தன் கையால் தடவித் தருவதையே அவன் விரும்புவான் என்று சிந்தித்த வேளையில் அவள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. அவளுடைய முன்க்கைலா வெண்மையான மஸ்லின் துகில் மட்டுமே சுற்றப்பட்டு, நிலத்தின் வயிற்றுக்குள்ளே தள்ளி விடப் பட்டான். தன் இத்தாலியக் காலணிகள் மீது ஒரு எறும்பு ஊர்வதைக் கூடப் பொறுத்துக் கொள்ளமாட்டான் அவள் முன்க்கைலா.

பின் வந்த நாட்களில், அந்தக் கொடுங்கனவு நுட்பமான திரைப்படக்

காட்சி போல அவள் மனதில் ஓடிக்கொண்டிருந்தது. முன்க்கைலாவின் முகபாவனைகள் தெளிவாகத் தெரிந்தன. அந்தப் பைத்தியகாரத்தனமான துரத்தல், வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் காட்சி, நினைவுகளின் சிக்கலான பாதைகளில் எதிரொலித்துக் கொண்டிருக்கும் ரெஸாவின் காலடி ஓசைகள், அவர்களை நிற்கச் சொல்லும் அவளுடைய குழப்பமான கூச்சல். ..இறுதியில் அவள் மகன் வாயிலிருந்து வந்த, அந்தக் கடைசி வார்த்தை, அவளை அழைத்த தொனி, அந்த அறைகுறை உறுமல் யாவும் அவள் பால் அவனது வெறுப்பையும் இகழ்ச்சியையும் வெளிக்காட்டின.

பிந்த்தா அவளது கனவோட்டங்களில் நீண்ட நேரமாக அமிழ்ந்திருக்க, அவளது தங்கை அஸபேவும், மகள் ஹதீஸாவும் இரங்கல்களை ஏற்றுக் கொண்டு, துக்க வீட்டை நிர்வகித்துக்கொண்டிருந்தார்கள்.

செய்தியைக் கேட்டவுடன் உடனே தத்தம் கணவர்களுடன் அவர்கள் வந்துவிட்டார்கள். ஹுரைராவும் அவள் கணவனுடன் எந்த வித முன்னேற்பாடுமின்றி திடீரென்று கிளம்பி வந்துவிட்டாள். அவள் கணவன் ஒரு இரவு மட்டும் தங்கிவிட்டு ஜாஸ் திரும்பிவிட்டான். ஆனால் ஹுரைரா அவ்வப்போது பெருங்குரலெடுத்துக் கத்தி ஆர்ப்பாடம் செய்து, தொல்லை கொடுப்பவளாகவே இருந்தாள்.

ஸாதியா, முன்க்கைலா இறந்த அன்று, அவனைப் புதைப்பதற்கு முன், இறுதியாக ஒரு முறை அவனைப் பார்க்க வந்தவள், அவளது உறவினர்களும், நண்பர்களுக்கும் அவளைச் சூழ்ந்திருக்க பிந்த்தாவின் அறையில் ஒரு மூலையில் முடங்கிக் கொண்டாள். கோபத்திற்கும், குழப்பத்திற்கும் நடுவே ஊசலாடியபடி அவர்கள் மத்தியில் அமர்ந்திருந்தாள்.

அசூயையுடன் அமர்ந்திருந்த அவளுடைய உறவினர்கள் மூன்றாம் நாள் பிரார்த்தனை முடிந்தும் முடியாமலும் கைம்பெண்ணையும், குழந்தைகளையும் அங்கு காத்திருந்த காரில் ஏற்றிக்கொண்டு அவள் பிறந்த வீட்டிற்கே அழைத்துச் சென்றுவிட்டனர். தன் அன்னையின் மானத்தைக் காக்கும் முயற்சியில், அவள் கணவன் பலியாகிய இடத்திலிருந்து வெகு தொலைவு சென்றுவிட்டாள் அவள்.

வீட்டின் முன்புறத்தில் போடப்பட்டிருந்த பந்தலின் கீழ் அமர்ந்திருந்த ஆண்கள், தலையைக் குனிந்து கொண்டு பெருமூச்செறிந்து, அவ்வப்போது 'ப்ச்' என்று ஒலியெழுப்பிக் கொண்டிருந்தார்கள். வீட்டினுள் இருந்த பெண்கள் ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தார்கள். பந்தலின் கீழ் அமர்ந்திருந்தவர்களும், உள்ளே இருந்தவர்களும் நடந்து முடிந்து போன துக்கசம்பவத்தைப்

பற்றி இடையிடையே பேசிக்கொண்டிருந்தார்கள். அதன் முடிவில் பல விதமான கதைகளும் கருத்துகளும் அங்கு உலவின. ரெஸா, தன் கைகளால் முன்க்கைலாவின் கழுத்தை நெரித்துக் கொன்று விட்டானென்று யூகித்தார்கள். மற்றவர்கள், முன்க்கைலா தன் அம்மாவைப் பார்க்கக்கூடாத கோலத்தில் பார்த்துவிட்டதால் அந்தப் பொறுக்கி மூர்க்கமாகப் பாய்ந்து அடித்துவிட்டானென்று கதை சொன்னார்கள்.

ஆனால், பிந்த்தாவுக்கும், மௌனத்தின் கூட்டுக்குள் தன்னை அடைத்துக்கொண்ட ஃபைஸாவுக்கும் தான் என்ன நடந்ததென்று சரியாகத் தெரியும். அவர்களுடைய மௌனத்தின் அடிப்படையில் கட்டுக்கதைகளும், யூகங்களும் முளைத்தன. அதனால், அவளுடைய துக்கத்தோடு, துரத்தும் துர்க்கனவுகளுக்கும், நடுங்கும் நனவுக்கும் இடையில் உள்ள எல்லைகளைப் பற்றி சிந்தித்துக்கொண்டே அமர்ந்திருந்தாள் பிந்த்தா. மூன்றாம் நாள் இரவில், எழுந்து, வரவேற்பறையில் உறங்கும் உருவங்களுக்கிடையே பாதையைக் கண்டுபிடித்து வெளியே வந்து, இரவுக்குள் நடந்தாள். அந்த இடத்தை அடையாளத்தைக் கண்டவுடன், அங்கு எவ்வளவு நேரம் நின்றிருந்தாளோ தெரியவில்லை, உள்ளே, ஹதீஸாவும், அஸபேவும் அவளது இல்லையென்று அறிந்தவுடன் எச்சரிக்கையாகி அவளைத் தேடி வெளியே ஓடி வந்தார்கள்.

"யாயா, உள்ளே வா, சகோதரியை நெருங்கி ஆறுதலாகத் தன் கையைச் சுற்றிப் போட்டாள் அஸபே. அவர்கள் இருவரும் எப்போதும் இவ்வளவு நெருக்கமாக இருந்ததில்லை. ஏனென்றால், மரியாதையின் அகண்ட பிளவு இருவருக்கிடையேயும் இருந்தது. அவளை விட ஆறு வயது இளையவள் அஸபே. அவர்களிருவருக்கும் நெருக்கமான பிணைப்பு உருவாகி இருக்க வேண்டிய நேரத்தில், பிந்த்தா திருமணமாகிச் சென்றுவிட்டாள். உடன் பிறந்த மற்ற சகோதரர்களுக்கு மூத்த சகோதரியாகி கடமையாற்றும் பொறுப்புக்கு அஸபே தள்ளப்பட்டாள். ஜாஸ் நகரத்தில் நிகழ்ந்த பேரழிவுக்குப் பின், அவர்களது வாழ்க்கையின் நிலப்பரப்பு நிரந்தரமாக மாறிப்போன நிலையில் பிந்த்தா தன் கணவனை இழந்து நின்றபோதும், அஸபேயிடமிருந்து அவள் கணவனும், மகனும் பறிக்கப்பட்ட பின்னரும் இரு சகோதரிகளிடையே நெருக்கம் மலர்ந்தது.

"இந்த இடம் தான்" பிந்த்தா சைகையில் காட்டினாள். அவள் முகத்தில் கண்ணீர்த் திவலைகள் மின்னின.

"இங்குதான் விழுந்து கிடந்தான்."

"ஹஜியா, சரி, வாங்க, உள்ளே போகலாம்" முன்க்கைலா விழுந்த இடத்தை நோக்கி நீண்டிருந்த கரங்களை மெல்ல இழுத்து வேறு புறமாகத்

திருப்பினாள் ஹதீஸா. அவளது தோளில் கைபோட்டு, அங்கிருந்து நகர்ந்து செல்ல வழி நடத்தினாள். ஆனால், பிந்த்தா அந்த இடத்தில் மண்டியிட்டு அமர்ந்தாள். உடன் மற்ற இரு பெண்களும் அமர்ந்து, அவளை எழச் சொல்லிக் கெஞ்சினார்கள்.

"அவன் சண்டையிட விரும்பவில்லை, முன்க்கைலாதான் விட வில்லை. அவனைத் துரத்திக்கொண்டே இருந்தான். துரத்திக்கொண்டே வீட்டைச் சுற்றி ஓடினார்கள். அவன் ஓடிப் போய் வாசல் கேட்டைத் திறக்க முயற்சி செய்யும்போதும் முன்க்கைலா விடாமல் துரத்தினான்.

"ஷ்ஷ்ஷ்! யாயா, போதும் விடு, அப்படித்தான் நடக்க வேண்டும் என்று விதி நிர்ணயித்துள்ளது."

"அவர்களை நிறுத்தச் சொல்லி நான் கத்தினேன், முன்க்கைலாவிடம் 'நில், நில்' என்று சொல்லிக் கொண்டே இருந்தேன். ஆனால் அவன் கேட்கவே இல்லையே. ஃபைஸா அலறிக் கொண்டிருந்தாள், அவ்வளவு சத்தமாக அலறினாள்."

பிந்த்தாவின் குரல் தேய்ந்து தடுமாறியது. விசும்பியவள், தன் ஹிஜாபால் முகத்தைப் பொத்திக்கொண்டாள்.

அவளை அங்கிருந்து அழைத்துச்செல்ல ஹதீஸா முயற்சித்தபோது, அவள் போக்கிலேயே விட்டுவிடும்படி அஸபே அறிவுறுத்தினாள்.

"அவர்கள் இரண்டு பேருமே வீட்டைச்சுற்றி ஓடிக்கொண்டிருந்தார்கள். அப்புறம் முன்க்கைலாவைக் காணவில்லை. ஹஸ்....ரெஸா மட்டும் ஓடி வந்து கேட்டைத் திறந்துகொண்டு வெளியேறி விட்டான். நாங்கள் சுற்றி ஓடி வந்து பார்த்தபோது, இங்கே, இங்கேதான், அதே இடத்தில்தான் விழுந்து கிடந்தான் முன்க்கைலா. அந்த மரக்கட்டை அவனுக்கு அருகில் கிடந்தது. தலைக்குப் பின்னால் அவனைத் தாக்கியிருக்கிறான். அவன் மூச்சுத் திணறிக் கொண்டிருந்தான்.. இப்படித்தான்..இப்படித்தான்..."ஆழ்ந்த சுவாசமெடுத்தவள், அப்படியே உறைந்தாள்.

முன்க்கைலா கீழே விழுந்த போது கேட்ட ஓசையை நினைவு கூர்ந்தாள். அவனது பருத்த உடலுக்கேற்ற பெரும் ஓசை... அவளும் ஃபைஸாவும் ஓடி வந்து அவன் எழுவதற்காக உதவி செய்ய முற்பட்டபோது முன்க்கைலா அவளைப் பார்த்த பார்வையின் அர்த்தங்களை ஒருபோதும் சொற்களால் விவரிக்க இயலாது. அம்மா என்று அவன் உறுமியபோது, அந்தக் குரலில் முளைத்திருந்த வெறுப்பின் கொடுக்குகள் இப்போதும் கூட அவளைக் கொட்டிக்கொண்டிருந்தன. அவனைத் தாங்கிப்பிடித்துக் கொண்டிருந்த அவள் கரங்களைத் தட்டிவிட்டதுதான் இறக்கும் முன்

அவன் செய்த கடைசிச் செயலாக இருந்தது. அவ்வளவு வெஞ்சினத்தைச் சுமந்தபடி உயிர் விட்ட எவரையும் வாழ்நாளில் அவள் பார்த்ததில்லை. இந்த அனல் கக்கும் சினம்தான் அவள் குடும்பத்தின் அழிக்கமுடியாத சாபக்கேடு என்பதை அறிவாள், தலையில் பட்ட அடியைவிட இறந்து போன அவள் கணவன் ஜுபைரு வழி வந்த பரம்பரைச் சொத்தான அதீத சினம்தான் அவனைக் கொன்றுவிட்டது. வெள்ளிக் கீற்றாய் நிலவொளி வீசும் அவ்விரவில், தன் மகன் இறந்து போன அதே இடத்தில் அமர்ந்து கதறிக்கொண்டிருந்தாள் பிந்த்தா.

—

ஜன்னலோரம் அமர்ந்து வெளியே தெரிந்த வறண்ட புல்வெளியில் மேய்ந்து கொண்டிருக்கும் மாடுகளையும், அவற்றை மேய்த்துக் கொண்டிருந்த பதினான்கு வயதுக்கும் குறைவாகத் தெரிந்த சிறுவனையும் பார்த்துக் கொண்டிருந்த ரெஸாவை நோக்கினான் கட்டுஸோ. குளிக்காத உடலின் வீச்சம் அவனை எட்டியது. ஆனால், அதை விட ரெஸாவின் வெற்றுப் பார்வைதான் கட்டுஸோவிற்கு அதிக வேதனையளித்தது.

"ரெஸா, ஐந்து நிமிடங்களாக நான் இங்கு இருக்கிறேன், நீ இன்னும் ஒரு வார்த்தை கூட பேசவில்லை".

பெருமூச்சுவிட்டான் ரெஸா.

"மன்னித்துக்கொள் சகோதரா, வேறு எதையோ நினைத்துக் கொண்டிருந்தேன்...அவனைக் கொல்லவேண்டுமென்று நான் நினைக்கவில்லை, உனக்குப் புரிகிறதா, அங்கிருந்து தப்பி ஓட நினைத்தேன், ஆனால் அவன் விடாமல் துரத்திக்கொண்டிருந்தான், அதனால், அவனிடமிருந்து தப்புவதற்காகத்தான் அப்படித் தாக்கினேன். ஹஜ்ஜியா பிந்த்தா, மிகவும் துக்கத்திலிருப்பார். இந்த நிகழ்வு நடந்த பிறகு எப்போதாவது அவளை நீ பார்த்தாயா?"

நகங்களைப் பலமாக நெட்டி முறித்தான் கட்டுஸோ.

ஏதோ நடக்கக்கூடாதது நடந்திருக்கிறதென்பது ரெஸாவின் புலன்களில் உறைத்தது. தலையைக் குனிந்து அமர்ந்து, அவ்வப்போது தலையாட்டிக் கொண்டிருந்த கட்டுஸோவை நோக்கினான் ரெஸா. கட்டுஸோ நிமிர்ந்து பார்த்தபோது, அவனது ஒளியிழந்த கண்களையும், இருளடைந்த முகத்தையும் பார்த்தான் ரெஸா. அனைத்தையும் விட அவன் கண்களில் தெரிந்த இழப்பின் வலி அவனை வதைத்தது. ஜன்னல்

பக்கமிருந்து நீங்கி, அந்தச் சிறு குடிலின் குறுக்காக நடந்து, மூங்கில் கட்டிலில் அவன் நண்பனுடன் சேர்ந்து அமர்ந்தான்.

"கட்டூஸோ, என்ன நடந்தது?"

நகர்ந்து, மண் சுவர் மீது சாய்ந்து அமர்த்தான் கட்டூஸோ.

"நீ இந்தப் பெண்மணியிடம் எவ்வளவு மூழ்கிப் போய்விட்டாய் ரெஸா. இத்தனை வருடங்களாக உன்னோடு நின்று தோள் கொடுத்த நண்பர்களை எந்த நிலைமைக்கு ஆளாக்கி விட்டுச் சென்றிருந்தாய் என்று கொஞ்சமேனும் நினைத்துப் பார்த்தாயா?

பெருமூச்சு விட்டுக்கொண்டே, எரிச்சல்படுத்திக் கொண்டிருந்த மழிக்கப்படாத ஐந்து நாள் தாடியைச் சொறிந்துகொண்டிருந்தான் ரெஸா.

"அதற்காக நான் மிக வருத்தப்படுகிறேன், என்னை மன்னித்து விடு கட்டூஸோ, நம் பையன்கள் எப்படி இருக்கிறார்கள்?"

உள்ளங்கையில் பலமாக முட்டியைக் குத்தினான். அந்த மனிதன் இறந்துவிட்டான் என்றதும், போலீஸ் படையே சான்சிரோவை சோதனை செய்ய வந்துவிட்டது. உனக்குத்தான் தெரியுமே, அந்தப் போலீஸ் அதிகாரி, அந்தத் தாயளி தான் அதற்குக் காரணம். நீ அந்தக் கொலையில் சம்பந்தப் பட்டிருக்கிறாய் என்று கேள்விப்பட்டவுடன் அங்கிருந்த அனைவரும் உடனே தப்பியோடிவிட்டார்கள். சோதனையில் ஜோ மட்டும் அகப்பட்டுக் கொண்டான்.

உணர்வுகளை அடக்க முடியாமல் விசும்பினான் கட்டூஸோ. அதை கேட்டதும் எழுந்து நேராக அமர்ந்தான் ரெஸா.

"என்ன நடந்தது?"

"நாம் பிணையத் தொகையை வசூல் செய்யவில்லை என்ற கோபத்தில், ஜோ நன்றாகக் குடித்துவிட்டு வந்தான். போலீஸ் வந்தபோது, போதையில் தள்ளாடிக் கொண்டிருந்தவனால் ஓட முடியவில்லை. அவனைப் பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள். பிற்கு, கொஞ்ச நேரம் கழித்து சிறையிலேயே அவனை சுட்டுக் கொன்றுவிட்டார்கள். அவன் தப்பியோட முயற்சி செய்தான் என்று காரணம் சொன்னார்கள். அது பொய், அந்தத் தாயளிகள் அவனை உயிரோடு சுட்டுக் கொன்றுவிட்டார்கள்."

"என்ன!! ஜோவை சுட்டு விட்டார்களா?"

கட்டூஸோ கண்களைத் துடைத்துக்கொண்டான். சற்று நேரத்திற்கு முன் ரெஸா நின்றுகொண்டிருந்த ஜன்னலோரம் போய் நின்றான்.

தூரத்தில் மறைந்துகொண்டிருந்த கதிரவன், அவன் கண் முன் பரந்து கிடந்த சமவெளியில், பளபளக்கும் செவ்வொளியை வாரி இறைத்துக் கொண்டிருந்தது. கால்நடைகள் அங்கிருந்து நீங்கிச் சென்று விட புல்வெளியில் சில கொக்குகள் சோம்பலாக நடை போட்டுக் கொண்டிருந்தன. அந்தச் சிறிய மண்குடிசையில் நிலவிய அமைதி, கட்டூஸோவிற்கு எரிச்சலாக இருந்தது. குவாந்தரா சமவெளியில் அமைந்திருக்கும் தற்காலிக மறைவிடமான இந்தக் குடிசையில் நாட்களைக் கடத்திக் கொண்டிருப்பது ரெஸா போன்ற மனிதனுக்கு எப்படி இருக்கும் என்று யோசித்துப் பார்த்தான். சுற்றிலும் உள்ள சுவர்களின் மீது எப்போதோ தன்னால் ஆணியால் கீறப்பட்டிருந்த பழக்கமான கிறுக்கல்களை கட்டூஸோ நோட்டமிட்டான். எந்த நோக்கங்களும், அர்த்தங்களும் இல்லாத வடிவங்கள். முன்பொரு முறை, இரண்டு நாட்கள் அங்கு ஒளிந்து மறைந்திருந்த போது, மனதின் பாரத்தை இறக்கி வைக்க, அது ஒன்றைத் தான் அவனால் செய்ய முடிந்தது. சுமார் ஒரு வருடத்துக்கு முன்பு ஒரு பையனுடன் கைகலப்பு ஏற்பட்டு அவன் கால்களை உடைத்து விட்டான் கட்டூஸோ. அந்தப் பையனின் தந்தை, ராணுவத்தில் கேப்டனாக இருக்கிறார் என்று தெரிந்ததும் தலைமறைவாக வேண்டிய கட்டாயம் கட்டூஸோவுக்கு நேரிட்டது. அவன் கையில் ஒரு சாவியை வைத்து அழுத்தி, அந்தக் குடிசையைக் கண்டடையும் வழியையும் சொல்லி அனுப்பி வைத்தான் ரெஸா. இரண்டு நாட்கள், முட்டாள்தனமான கீறல்களால் சுவரைப் பிராண்டிக்கொண்டு இருந்தவன், பொறுமையிழந்து பைத்தியம் பிடிக்கும் அளவுக்குச் சென்றுவிட்டான். மூன்றாவது நாள், தூரத்தில், முகமெல்லாம் புன்னகையுடன் அவனை நோக்கி ரெஸா வந்து கொண்டிருந்தபோது, கேப்டன் மகன் விவகாரத்தை அவன் சரியான முறையில் கையாண்டு பிரச்சினையை சுமுகமாக முடித்து விட்டான் என்று கட்டூஸோவுக்குப் புரிந்து போனது. அவன் என்ன செய்தான், எப்படி முடித்தான் என்பதைப் பற்றியெல்லாம் இதுவரை அவனுக்குத் தெரியாது, அதை அவனிடம் கேட்டதுமில்லை. ஆனால், எப்போதும், எந்த சூழ்நிலையிலும் அவனுக்கு நன்றியுடையவனாக இருந்தான் கட்டூஸோ.

ரெஸா தாக்கிய மனிதன் இறந்து விட்டான் என்றும், எங்கோ பதுங்கிக் கொண்ட ரெஸா பல நாட்களாக யார் கண்ணிலும் படவில்லை என்ற செய்தி சான்சிரோவில் பரவியது. அப்போது, சமவெளியில் இருக்கும் இந்தச் சின்னஞ்சிறு குடிலில்தான் ரெஸா தனிமையில் உழன்று கொண்டிருப்பான் என்று கட்டூஸோவுக்குப் புரிந்து போனது.

திரும்பிப் பார்த்த போது, நீண்ட பருவங்களின் தூசி மழை படிந்திருந்த மூங்கில் கட்டிலின் மீது அமர்ந்து, தலை குனிந்து அழுது கொண்டிருந்தான் ரெஸா.

"சூரியன் அஸ்தமனம் ஆகிக் கொண்டிருக்கிறது" நெட்டி முறித்தான் ரெஸா.

கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டான் ரெஸா.

தன் சட்டைப் பையிலிருந்து இரண்டு சிகரெட்டுகளை எடுத்தான் ரெஸா. "வா, ஜோவுக்காகப் புகைக்கலாம்."

அழுக்கான தரையில், சுவரில் முதுகைச் சாய்த்து அமர்ந்து, அவர்களின் துக்கத்தை குடிலின் தென்னங்கீற்றுக் கூரையின் மீது புகையாக ஊதிக் கொண்டிருந்தார்கள். புகை வளையங்களால் மெருகு பூசிய மௌனத்தில், அவர்களிருவரும் ஜோவின் நினைவுகளுக்கு மரியாதை செய்து கொண்டிருந்தார்கள்.

இரண்டு சிகரெட் ஊதியவுடன், கால்களை நீட்டி அமர்ந்தான் கட்டூஸோ.

"அந்த மனிதன் மிக முக்கியமானவன். போலீஸும் இந்த விஷயத்தில் மும்முரமாக இருக்கிறார்கள். மிகப் பெரிய அளவில் தேடுதல் நடந்து கொண்டிருக்கிறது. நிலைமை சூடாக இருக்கிறது ரெஸா. நம்மை ஒழித்துக் கட்ட இதை ஒரு காரணமாக எடுத்திருக்கிறான் அந்த போலீஸ்காரன்."

தலையாட்டினான் ரெஸா. "இந்த மாதிரி விளைவுகள் ஏற்படும் என்று நான் நினைக்கவே இல்லை என்று அவளுக்குத் தெரியப்படுத்த வேண்டும், புரிகிறதா? நான் தப்பிப்போய் விட வேண்டுமென்றுதான் அவனை அடித்தேன். அது அவ்வளவு பெரிய அடி கூட இல்லை தெரியுமா? ஆனால் அந்த ஆசாமி, அப்படியே கீழே விழுந்து உயிரை விட்டுவிட்டான். பணக்கார நாய், திமிர் பிடித்தவன்"

"இப்போது என்ன செய்யப்போகிறோம்?"

"இதைச் சரி செய்யமுடியுமா என்று தெரியவில்லை கட்டூஸோ. ஆனால் நான் செனேட்டரிடம் பேசி ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கிறேன்"

மற்றொரு சிகரெட்டை எடுத்தான் ரெஸா. அதை அவனுக்காகப் பற்ற வைத்தான் கட்டூஸோ. ஐந்து நாட்களாக வாழ்வின் வெற்றிடத்தை சகித்துக் கொண்டிருந்தாலும், சில குறுக்கு எண்ணங்கள் ஆக்கிரமித்திருக்கும் மனதின் இடுக்குகளைக் கண்டுகொண்டான் ரெஸா.

"ரெஸா."

"ம்ம்."

"உன் அப்பாவைப் பற்றி ஏதேனும் செய்தி?"

"அவரை வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள். ம்ம், இரண்டு நாட்களுக்கு முன்பே."

"அவரைப் பார்க்கப் போயிருந்தாயா?"

"இல்லை. அங்கே என்னைத் தேடி வந்துவிடுவார்கள், அதனால் ஃபோனில் அழைத்துப் பேசினேன்."

சில்வண்டொன்று கீச்சிடத் தொடங்கியது. துவக்கத்தில் காதைக் கிழித்தாலும், போகப்போக அதன் தாளம் ரெஸாவை ஆட்கொண்டது. ஒரு விதத்தில் அலுப்பை நீக்கும் சிகிச்சை போல அந்த ஓசை இருந்தது. அப்போது விசித்திரமான ஒரு பறவையின் கூவல் கேட்டது. அதன் மனம் தகிக்கும் துயரச் சாயல் கீதம் அந்த இரவைக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு, சில்வண்டின் தாளத்திற்கு இடையூறு செய்துகொண்டிருந்தது. சற்று நேரம் கழிந்த பின் சில்வண்டு தன் தனித்த பாடலைத் துவங்கியது.

"கட்டூஸோ."

"ம்ம்"

"ஹஜியா பிந்த்தாவைப் பற்றி ஏதாவது கேள்விப்பட்டாயா?"

தயங்கியபடி சொன்னான் கட்டூஸோ. "இல்லை நண்பா, மன்னித்துக் கொள், நாங்கள் எல்லோருமே ரகசியப் பதுங்கிடத்துக்குச் சென்று விட்டோம். இன்னும் கூட நிறையப் பேரைக் காணவில்லை."

"இப்படியெல்லாம் நடக்கவேண்டும் என்று நான் நினைக்கவில்லை" என்பதை மட்டும் அவளிடம் சொல்லிவிட்டால் போதும்."

மீண்டும் அந்தப் பறவை கூவியது. அதே துயரச் சாயல் ஒலியை எழுப்பி விட்டு, சட்டென உயர்ந்து சிறகடித்துப் பறந்து போனது.

சிகரெட்டின் நுனி, இரவின் இருளில் அமானுஷ்யமாக மினுமினுத்தது. துக்கம் பாவித்துக்கொண்டிருக்கும் அவர்கள் இதயத்தில், மௌனம் மட்டுமே விஞ்சியிருந்தது.

—

செனேட்டர் புபா மைக்குடி, தன் இருக்கையில் அமர்ந்தவாறு, எதிரே அமர்ந்திருந்த தௌடா பலேரியைக் கூர்மையாக அவதானித்துக் கொண்டிருந்தார். அவனைத் தனக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை என்னும்

முடிவுக்கு வந்திருந்தார். இருப்பினும், புன்னகைத்துக்கொண்டே அவனுடன் கை குலுக்கினார்.

"நீங்கள்தானா அது?"

"நான்தான் சார். அவருடைய சிறிய உருவத்தையும், சிறுபையனுக்குரிய கண்களையும் பார்த்துப் பிரமித்தான் பலேரி. நான்கு நாட்களுக்கு முன் செனேட்டரிடமிருந்து அழைப்பு வந்தவுடன் அதிர்ந்து போனான். முதலில் அது ஒரு ஏமாற்று வேலையாக இருக்கும் என்றுதான் நம்பினான். ஆனால் வங்கிக் கணக்கு எண்ணைத் தருமாறு கேட்டு, பின் உடனடியாக அவன் கணக்கில் கணிசமான தொகை ஏற்றப் பட்டவுடன்தான் உண்மையென்று நம்பினான்.

"ம்ம், தேர்தல் பிரச்சாரத்துக்கு நடுவில் இருக்கிறோம் என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும். நாளை முதல் கட்டத் தேர்தல் நடைபெற உள்ளது. அதனால், சுற்றிலும் உள்ள மனிதர்கள் ஓய்வெடுக்கவே விட மாட்டார்கள்."

"என்னால் பார்க்க முடிந்தது சார், நான் உள்ளே வர அனுமதி பெறவே இரண்டரை மணி நேரம் காத்திருந்தேன்."

"ஓ, அப்படியா ஆஃபீஸர், அதற்காக நான் வருத்தப்படுகிறேன். உங்களுக்கே தெரியும் என்ன நடக்கிறது என்று."

இவனை அணுகியது தவறான செயலோ என்ற யோசனை அவர் மனதில் ஓடியது. ஆனால் அதற்கு மாற்றாக வேறேதும் உபாயமில்லை என்பதால் பொறுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. இப்போது அவனிடமிருந்து விடுபட வேண்டும். அரசியலில் முன்னுக்கு வர இது போல உள்ளுணர்வு எச்சரிக்கும் சில முடிவுகளை யோசனையின்றி எடுக்க வேண்டும். பலேரி நிரந்தரமாக வைத்துக் கொள்ளக் கூடிய ஆள் இல்லை என்பதை அவர் அறிவார். தான் ஏன் அப்படி உணர்கிறோம் என்பதை அவர் யோசிக்கத் தலைப் படவில்லை. மூஸாவை அழைத்து அந்தப் போலீஸ்காரனுக்குத் தேநீர் பரிமாறத் தேவையில்லை என்று அவருக்குத் தோன்றியது

"முதல் முறை நாம் ஃபோனில் பேசியபோது சொன்னேனே, அதேதான், அரசியலில் நிரந்தரமான நண்பர்கள் இல்லை, ஆனால் நிரந்தர நோக்கம் உள்ளது. உங்களைப் பார்த்தால் சாதிக்கும் ஆர்வமுள்ளவராகத் தெரிகிறீர்கள். நான் இளமையாக இருந்தபோது எப்படி இருந்தேனோ அப்படி இருக்கிறீர்கள்." தலையை முன்னால் சாய்ந்துக் குனிந்தபடி கேட்டார். "அதனால் நாமிருவரும் இணைந்து செயல்படுவோம், ஒருவருக்கொருவர்

அனுகூலமாக இருப்போம், என்ன சொல்கிறீர்கள்?"

"இது என் கௌரவம் சார், மிகவும் கௌரவமாக உணர்கிறேன்."

"இப்போது ஒரு காரியம் செய்யச்சொல்லி இருக்கிறேன், தெரியுமல்லவா? அதன் அரசியல் ஆதாயங்களை நான் விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன். இந்தப் பையன்களை நாம் கண்டுபிடிக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் அவர்களை விசாரணைக்கு உட்படுத்தக்கூடாது. கூடவே கூடாது. என்ன செய்ய வேண்டுமென்று உங்களுக்கு விளங்கி இருக்கும் என நினைக்கிறேன்."

பலேரி புன்னகைத்தான். ஏற்கெனவே ஒருவனைப் பிடித்து விட்டேன் சார். மற்றவர்களையும் கண்டு பிடித்து விடுவேன்."

"ஆமாம், தகவல் வந்தது. சிறப்பான செயல்."

"அவனையுமா...."

"என்ன?"

"ரெஸாவையும் பிடிக்க வேண்டுமா? உங்களுக்கும் அவனுக்கு மிடையே உள்ள விசேஷ உறவை மனதில் வைத்துக் கேட்டேன்"

முன்னே சாய்ந்து, அவன் முகத்துக்கு நேராக ஆட்காட்டி விரலை மட்டும் உயர்த்தியபடி நின்றார். அதே செய்கையுடன் நீண்ட நேரம் உறைந்து போனவரைப் பார்த்து, அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு விட்டதோ என்று சந்தேகம் கொண்டான் பலேரி.

"அவன்தான் முதன்மை இலக்கு. அவன் ஒரு போதும் வாய் திறக்க அனுமதிக்கக் கூடாது. அவன் எப்போதுமே வாயைத் திறக்கப் போவதில்லை என்று எனக்கு உறுதியளித்தால், நீங்கள் எப்போதும் என்னுடன் இணைந்திருப்பீர்கள் என்று நானும் உறுதி அளிக்கிறேன்."

"எனக்குப் புரிகிறது சார்," பலேரியின் முகத்தில் புன்னகை சுடர் விட்டது.

அந்தப் புன்னகையில் ஒளிந்திருந்த பேராசையைக் கண்டு ஒரே நேரத்தில் ஆத்திரமும், உவகையும் அடைந்தார். இருக்கையின் பக்க வாட்டில் வைக்கப்பட்டிருந்த பெட்டியைத் திறந்து அதிலிருந்து சில நோட்டுக் கற்றைகளை எடுத்து எண்ணிய பின், அவருக்கும், போலீஸ்காரன் பலேரிக்கும் இடையே இருந்த காப்பி மேசையின் மீது அவற்றை வைத்தார். பின் அழைப்பு மணியை அழுத்தி உதவியாளன் மோசஸை வரவழைத்தார்.

"மோசஸ், ஒரு காகித உறை எடுத்து வா."

"இப்போதே எடுத்துவருகிறேன் சார்" தன் டையை சரி செய்து கொண்டே அங்கிருந்து அகன்றான் மோசஸ்.

எவ்வளவு திருட்டுத்தனமாகப் பார்க்க முடியுமோ அவ்வளவு திருட்டுத்தனமாக ஓரக் கண்ணால் அந்தப் மேசை மீதிருக்கும் பணத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான் பலேரி. எவ்வளவு பணம் இருக்கக்கூடும் என்று ஆச்சரியப்பட்டான். அவனுக்கு ஒரு கார் தேவை. இந்தப் பணத்துடன் சேர்த்து, ரெஸாவைப் பிடித்ததும் கிடைக்கும் கூடுதல் தொகையுடன் நிச்சயமாக ஒரு நல்ல கார் வாங்க முடியும். அதை கிறிஸ்டியின் முன் ஓட்டிச் சென்று, அவனை வேண்டாமென்று உதறிச் சென்றது எவ்வளவு பெரிய தவறு என்று அவளுக்குப் புரிய வைக்கவேண்டும். வாழ்வில், தானும் ஒரு வெற்றி பெற்ற மனிதன் என்று அவளுக்குக் காண்பிக்க வேண்டும்.

காகித உறையை எடுத்துக்கொண்டு வந்தான் மோசஸ். ஆனால், செனேட்டர் அருகில் சென்று குனிந்து அவர் காதில் ஏதோ கிசுகிசுத்தான். தலையை ஆட்டிய செனேட்டர், தொண்டையைச் செருமிக்கொண்டே பலேரியைப் பார்த்து முறுவலித்தார்.

"இந்த விஷயத்தில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது என்று யோசிக்கிறேன் ஆஃபிசர்".

—

ரெஸாவைப் பார்த்தவுடன், தப்பியோடிய கைதியைப் போலத்தான் தோற்றமளிக்கிறான் என மனதில் நினைத்தார் செனேட்டர். நல்ல வேளையாக பின் பக்க நுழைவு வாயில் வழியாக அவனை அனுமதித்திருந்தார். எந்த சூழ்நிலையிலும், ரெஸாவுக்கும் தனக்கும் உள்ள தொடர்பு வெளியில் தெரிவதை அவர் விரும்பவில்லை.

"நீ மிகவும் மோசமாகத் தோற்றமளிக்கிறாய் நண்பா"

தளர்ந்து போன ஆரோக்கியமற்ற தன் தாடியை நீவினான் ரெஸா. "இப்போது என் கவலை அது இல்லை சார்."

"உண்மை, உண்மை."

தேநீர் தட்டைச் சுமந்துகொண்டு வந்த மூஸா, செனேட்டரின் முன்னிருந்த கம்பளத்தில் அதை வைத்தான். மண்டியிட்டு, இரண்டு கோப்பைகளை நிரப்பினான். தேநீர் அருந்த விருப்பமா என்று ரெஸாவைக் கேட்ட போது, ஆமாம், என்று பதிலளித்தவன் அதனுடன் பாலையும்

கலக்கச் சொன்னான். பால் கலவாத தேநீரை அருந்தும் சம்பிரதாயம் அவனது அறிவுக்கு எட்டாத ஒரு செயல். நள்ளிரவுக்குக் கால்மணி நேரமே குறைவாக இருக்கும் அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் தேநீர் அருந்தும் எண்ணத்திற்கு அவன் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. கடந்த ஐந்து நாட்களில் அதுவே அவனுடைய வாய் சுவைத்த முதல் நல்ல பொருளாகும்.

சூடான பானத்தை மிக ரசித்து அருந்திக்கொண்டிருந்த ரெஸாவைப் பார்த்த செனேட்டருக்கு அவன் மீது சன்னமான பச்சாதாபம் கவிந்தது. ரெஸா மிகவும் விசுவாசமானவன், எதிர்காலத்திலும் அப்படியேதான் இருப்பான் என்பதும் அவருக்குத் தெரியும். ஆனால் இப்போது சுமையாகி விட்டான்.

"ரெஸா, நீ செய்த காரியம் எனக்கு மகிழ்ச்சியை அளிக்கவில்லை, தெரியுமா?"

" மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன் சார்."

"ஒரு எளிமையான வேலை, ஆனால், நீயும் உன்னோட ஆட்களும் காரியத்தை சொதப்பி விட்டீர்கள்" தப்பான ஆளைப் பிடித்துக்கொண்டு வந்தீர்கள். அதன் பிறகு, அந்தத் தப்பான ஆளையும் விட்டு விட்டீர்கள்."

"மன்னித்து விடுங்கள் சார்"

"உன் மீது எனக்குக் கொஞ்சம் கூட திருப்தியே இல்லை" தேநீரை உறிஞ்சியவர், தலையணையின் மீது சாய்ந்து கொண்டார்.

"இதை நான் நிச்சயம் சரி செய்கிறேன் அல்ஹாஜி, சத்தியமாக"

"என்ன செய்யப் போகிறாய்?

"அந்தப் பெண்ணை மீண்டும் கொண்டு வருகிறேன்."

செனேட்டர் சிரித்தார். "என்னவோ அவளால் எனக்கு பெரும்பயன் இருக்கிறது போலச் சொல்கிறாய்."

"அப்படியென்றால், உங்கள் விருப்பம் என்னவோ, அதைச் செய்கிறேன் சார், எதுவானாலும் எனக்கு இன்னொரு வாய்ப்பு மட்டும் தாருங்கள்."

அவனுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொள்வதைப் பற்றிச் சில கணங்கள் சிந்தித்தார். அவனுடைய நேர்மையை அவர் சந்தேகப் படவில்லை. ரெஸா போன்ற திறமையானவன் அவருக்கு உபயோகமான கையாளாக இருப்பான். ஆணையிட்டால் தயக்கமில்லாமல் சாக்கடையில் கூட நுழைந்து எந்த விதமான அசுத்தமான காரியங்களையும் செய்யக் கூடியவன். மீண்டும் ஒரு மிடறு தேநீரை உறிஞ்சினார் செனேட்டர்.

"இங்கே பார் ரெஸா, நான் முன்வைக்கும் இந்த போராட்டம், பேரணி, உரிமைக்கும், நீதிக்கும் குரல் கொடுப்பது யாவும் யாருக்காக, உங்களுக்காக, மக்களுக்காகத்தானே?"

"உண்மைதான் சார்."

"இந்த நாடு முன்னேற்றமடைந்தால், நீயும், உன் சந்ததிகளும் தானே அனுபவிக்கப் போகிறீர்கள்? எனக்கென்ன? வயதாகி விட்டது. இந்த உலகித்திலிருந்து வேறென்ன வேண்டும் எனக்கு?"

தலையாட்டினான் ரெஸா.

நான் இந்தப் போராட்டங்களில் ஈடுபட்டு, எந்த மக்களுக்காக அசிங்கம் பிடித்த அரசியல் சண்டைகளில் பங்கேற்கிறோனோ, அவர்களே என்னையும், என் ஏழை, உழைப்பாளித்தந்தையையும் அவமரியாதை செய்கிறார்கள்.

"அவர்கள் எத்தனை அவமானப் படுத்தினாலும் அவர்களுக்காக நாம் உழைக்கிறோம், ஏன் தெரியுமா?"

'தெரியாது' என்பது போலத் தலையாட்டினான் ரெஸா.

"ஏனென்றால் அவர்களுக்காக நாம் செய்யும் செயல்கள் அவர்களுக்குப் புரியவில்லை, மழையில் நனைந்துகொண்டிருக்கும் ஆடு ஒன்றின் மீது கருணைகொண்டு அதை நிழலில் கொண்டு வந்து கட்டிவைத்தால் அது நம் நியதியை சந்தேகப்படுவது போலத்தான் இதுவும்...ஆனால் அது ஒரு நல்ல செயல் அல்லவா?"

"உண்மைதான் சார்."

"இதோ பார்," என்றவர் நாடக பாணியில் இரு கைகளையும் விரித்து உயரே தூக்கி, வாய் திறந்த நிலையில், முத்துப்போன்ற கண்கள் பள பளக்க, தான் செய்யும் சேவைக்குப் பல வருடங்களாக எந்த விதமான பாராட்டுகளையும் பெறாதது போன்ற வேதனையான முகபாவனையுடன் நின்றார்.

"ஆயினும் எதிர்பார்ப்பின்றி, அவர்களுக்காக நாம் உழைத்துக் கொண்டே இருப்போம். ஏனென்றால் அவர்கள் நம் மக்கள், அவர்களுக்காக உழைப்போம்."

"நிச்சயமாக சார்."

தேநீர்க் கோப்பையை மீண்டும் உயர்த்தி, இதழ்களில் பொருத்தும் முன், சற்று நிதானித்தார், உனது தேநீரைக் குடி ரெஸா, கா ஜி கோ, கேட்கிறதா?"

பால் வாசனையை ரசித்தவாறே தேநீரை அருந்தினான் ரெஸா. அருந்தி முடித்த பின், சின்னஞ் சிறிய குவளையில் தேநீர் நிரப்பித் தருவது தான் சிறந்த பண்பாடு என்று முதல் முதலில் அந்த வழக்கத்தை ஏற்படுத்தியவனை மனதில் சபித்தான்.

"சார், ஒரு பிரச்சனை, நீங்கள் எனக்கு உதவி செய்ய முடியுமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்."

"ஆமாம், அதைப் பற்றிக் கேள்விப்பட்டேன். நீதான் அல்ஹாஜி முன்க்கைலாவுடன் சண்டையிட்டு அவனைக் கொன்றுவிட்டதாகத் தகவல் கிடைத்தது.

"அவரை உங்களுக்குத் தெரியுமா சார்?"

"ஓ, தெரியும். எனக்காக சில வணிக வேலைகள் செய்து கொடுத்திருக்கிறான். மிகவும் நல்ல மனிதன். அல்லாஹ் அவன் கல்லறையில் ஒளியேற்றட்டும்"

"ஆமீன், ஆமீன்"

"என்ன இது ரெஸா, அவனைப் போன்ற நல்ல மனிதனைக் கொன்றது சரியான செயல் இல்லை."

"அது வேண்டுமென்றே செய்யவில்லை. அப்படி நடக்கவேண்டுமென்று நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை"

"அந்த வயதான பெண்ணுடன் உனக்குத் தொடர்பு இருந்ததாகச் சொன்னார்கள், உண்மையா!! அடடா, ரெஸா, இந்த விஷயத்தில் நீ உண்மையிலேயே சரியான ரவுடிதான் என்று எனக்குத் தெரியவில்லை." தலையைப் பின்னால் சாய்த்துக் கொண்டு கட கடவென சிரித்தார். "நானோ, உன் பெண் தோழியை எனக்கு அறிமுகப்படுத்தி வை என்று கேட்டேன், பெண்மணித் தோழி என்று கேட்டிருக்க வேண்டும் போல..."

இந்தத் துயர நிகழ்வின் பொருட்டு மிகவும் உணர்வுப்பூர்வமான நிலையிலிருந்த அவர் சிரிப்பதைப் பார்த்ததும் சட்டென அதிர்ந்து போனான். இப்போது அவர் அதை நினைத்து சிரிக்கிறார். தன்னை அவர் காப்பாற்றக் கூடிய சிறிய வாய்ப்பு இருக்கிறதாக நினைத்தான் ரெஸா.

சிரிப்பதை நிறுத்திவிட்டு தீவிரமான நிலைக்கு மாறினார் செனேட்டர். "நீ மிகவும் மோசமான நிலையில் இருக்கிறாய் ரெஸா, உண்மையாகவே மிக மோசமான நிலை."

"எனக்கும் புரிகிறது சார், இதிலிருந்து விடுபட நீங்கள் எனக்கு உதவி

செய்வீர்கள் என்று தெரியும்"

சற்று நேரம் அமைதியாக இருந்தார் செனேட்டர். ரெஸாவின் பதட்டம் கூடிக் கொண்டிருந்தது.

"இதில் சிரமம் என்னவென்றால், உன்னால் உயிரிழந்த மனிதனுக்கு முக்கியமான இடங்களிலெல்லாம் நண்பர்கள் இருக்கிறார்கள். உன்னைப் பிடிப்பதற்கு அவர்கள் எல்லோரும் தீவிரமாக இருக்கிறார்கள். ஆனால். எனக்கு உன் மேல் அக்கறை உண்டு. நீ என் ஆள் அல்லவா? அப்படித் தானே?"

ஆர்வமாகத் தலையாட்டினான் ரெஸா.

அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர் ஜெனெரல் என் நண்பர். அவரிடத்தில் பேசினேன். ஏதாவது ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார். உனக்கு மாற்றாக, வேறு ஒருவரை, யாரோ ஒரு பலிகடாவைத் தயார் செய்ய வேண்டும். அதற்கு சரியான ஆளைத் தேடிப்பிடிக்க வேண்டும். ஆனால், முதலில் அவர் உன்னைப் பார்க்கவேண்டும். எதற்கும் கவலைப்படாதே. எனது ஆட்களை உன்னை அங்கே அழைத்துச் சென்று, மீண்டும் இங்கே கொண்டு வந்து விட ஏற்பாடு செய்து விட்டேன். அங்கே போனதும், இது ஒரு விபத்து என்று அவரிடம் சொல். எப்படி. அழுவது என்று உனக்குத் தெரியுமல்லவா? அழுது கொண்டே அவரிடம் எவ்வளவு வருத்தத்துடனும், குற்ற உணர்வுடனும் நீ இருக்கிறாய் என்று சொல். அப்படியெல்லாம் செய்தால் அவருக்குப் பிடிக்கும். உனக்குப் பதிலாக வேறொருவரைக் கொண்டு வந்து விடுவார். தண்டனை பெற்ற கைதி அல்லது துப்பாக்கித் திருடன், யாராவது ஒரு ஆளாக இருக்கலாம்."

"மிக்க நன்றி சார், மிக்க நன்றி"

"உனக்காக நான் கேட்கும் இந்த உதவிக்கு மிகப் பெரிய விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆனாலும் உன் பொருட்டு இதையெல்லாம் நான் செய்கிறேன். எனக்காக ஒரே ஒரு வேலை செய்யச் சொன்னேன், நீயோ அதையும் கெடுத்து விட்டாய்."

"மன்னித்துக் கொள்ளுங்கள் சார்."

"போ, அந்த மனிதனைப் பார்க்க மோசஸ் உன்னை அழைத்துச் செல்வான். அவனுக்கு ஒத்துழைப்புக் கொடு. என்ன நடந்தாலும் என்னை அழைத்து பேசு, சரியா?"

"ஆகட்டும் சார்."

மோசஸ் வந்து அழைத்துச் செல்லும் வரை வெளியே காத்திருக்கச்

சொன்னார். கதவருகில் சென்றதும் செனேட்டர் அவன் பெயரைச் சொல்லி அழைத்தார்.

"இந்தக் குழப்பமெல்லாம் நீங்கியதும், உன் படிப்பைத் தொடரப் போய் விடு. உன் எதிர்காலத்தை நல்லமுறையில் அமைத்துக் கொள்."

"அப்படியே செய்வேன், அப்படியே... மிக்க நன்றி சார், நகோடே சொசாய்."

அதை ஆமோதிக்கும் தொனியில் தலையசைத்து அவனை வெளியே செல்லுமாறு பணித்துக் கையசைத்தார்.

உள்ளே நுழைந்த மோசஸ் கதவை மூடினான். "சார்?"

"பலேரி அவன் இடத்தில் சரியாக இருக்கிறானா?"

"ஆமாம், அவன் தயார்"

வேலை முடிந்ததும் அவனுக்குக் கொடுக்க வேண்டிய தொகையை உடனே கொடுத்து விடு. அவனை மீண்டும் பார்க்க விருப்பமில்லை. எனக்கு ஏனோ அவனைப் பிடிக்கவில்லை."

"ஒன்றும் பிரச்சினையில்லை சார்"

செனேட்டர் தலையசைத்தார்.

மோசஸும் தலையசைத்தான்.

எப்போதுமே மோசஸை அடித்துச் சாய்க்க வேண்டுமென்று விரும்பும் ரெஸா, அன்று, நள்ளிரவிலும் நேர்த்தியாக இருந்த அவன் உடையையும், அப்போதுதான் இஸ்திரி செய்யப்பட்டது போலிருந்த அவனது டையையும் பார்த்து மனதில் பாராட்டினான். அவனை பின் வாயில் வழியாக கார் நிறுத்தத்திற்கு அருகில் அழைத்துச்சென்றான் மோசஸ். அங்கே அடர்ந்த கறுப்பு வண்ண கோட் அணிந்திருந்த மூவர் காத்திருந்தனர்.

"நீங்கள் இவரை AIG யிடம் அழைத்துச் செல்லவேண்டும் என்று செனேட்டர் சொன்னார். அதன் பின், அவர் செல்லவேண்டிய இடத்திற்குக் கூட்டிச் செல்லுங்கள். இது மிக அவசரம்."

"நீ மிகவும் அதிர்ஷ்டசாலி, செனேட்டருக்கு உன்னை மிகவும் பிடிக்கும்." மூவரில் ஒருவன் ரெஸாவின் தோளைச் சுற்றிக் கை போட்டுக் கொண்டே, காரின் பின் கதவைத் திறந்தான்.

அங்கிருந்து கார் நகர்ந்த பின்னர் தான், அவனுக்குப் பக்கவாட்டில் இரு ஆண்கள் அமர்ந்திருப்பதை உணர்ந்தான் ரெஸா. காரின் பின்பக்கக் கண்ணாடி வழியாகப் பார்த்தபோது, பின்னால் மோசஸ் அவர்கள் விட்டு வந்த இடத்திலேயே நின்றபடி கார் நகர்வதைப் பார்த்துக்கொண்டிருப்பது

தெரிந்தது. உடனிருந்த இருவரும் தங்கள் கைகளை சட்டைப் பைக்குள்ளேயே வைத்திருப்பதை சட்டெனக் கவனித்தான். ஒட்டு மொத்த நிகழ்விலும் எங்கேயோ பெருந்தவறும் சூதும் இருக்கின்றதென்பதை மிக மிகத் தாமதமாக அறிந்தான் ரெஸா.

—

32

"வல்லூறுகளால் சூழப்பட்டிருக்கையில், இறக்காமலிருக்க முயற்சி செய்."

கண்ணாடியின் முன் அமர்ந்து, சற்று வெளிறிய நிற லிப்ஸ்டிக்கைத் தடவி, பின் உதடுகளை மடித்துச் சுழற்றி அதை சீராக்கிக் கொண்டிருந்தாள் ஆபிதா. அவளுக்குப் பின்பக்கமாக இருந்த படுக்கையில் அமர்ந்து, சிதறிக் கிடந்த சோயாயா நாவல் ஒன்றை எடுத்து அதன் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்தாள் கரீமா.

"ஆபிதா, நாம் திருமண விழாவுக்குச் செல்லவில்லை தெரியுமா?"

லிப்ஸ்டிக்கைக் கீழே வைத்துவிட்டு, கண் மை பென்சிலை எடுத்தாள் ஆபிதா. "ஏதோ கொஞ்சமாக ஒப்பனை செய்துகொள்ளலாமே, நாம் ஒன்றும் பிரதானதுக்க அனுஷ்டிப்பாளர்கள் இல்லை." கையில் பென்சிலை வைத்துக் கொண்டே ஃபைஸாவைப் பற்றி ஆபிதா யோசித்தாள். துக்க நிகழ்வுகளின் அனைத்துப் பொழுதுகளிலும் அவளிடம் அமைதி குடிகொண்டிருந்தது. அன்புக்குரியவர்களின் தொடர் மரணம் ஒருவரது உணர்வுகளை அவ்வாறு மரத்துப்போகச் செய்துவிடுவது சாத்தியமோ என்று வியந்தாள் ஆபிதா. மைப்பென்சிலைக் கீழே வைத்துவிட்டு, ஒரு துணியை எடுத்து லிஸ்டிக்கை துடைத்தவள், கண்ணாடியில் தெரிந்த தன் பிம்பத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

தோளைச் சுற்றியிருந்த முக்காட்டை இழுத்துச் சரி பண்ணிக் கொண்டே, படுக்கையில் கிடந்த தொலைக்காட்சியின் ரிமோட்டை எடுத்து இயக்கினாள் கரீமா. அவர்களுக்காக தந்தை வாங்கித் தந்திருந்த 14 அங்குலத் தொலைக்காட்சித் திரை, உற்சாகமான "கலங்கு" நடனக்காட்சியால் உயிர் பெற்றது. சேனல்களை மாற்றிமாற்றிப் போட்டுக் கொண்டிருந்தாள்.

"ஆபிதா, இப்படியே கண்ணாடியை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தால், "தாலியா" விற்கு (துக்கத்திற்கு) நாம் போகவே முடியாது.

அவர்களிருவரும் முதல் மூன்று நாட்கள் துக்கம் அனுசரிப்பதில் ஃபைஸாவோடு இணைந்து, அவள் துயரத்தையும், அவள் அறையையும் பகிர்ந்து கொண்டார்கள். பல நாட்களாக மௌனித்து விட்ட ஃபைஸாவின் குரலாக இருந்தவர்கள், அவளுக்கு இத்தனை மன உறுதி எங்கிருந்து கிடைத்தது என்று ஆச்சரியப்பட்டுப் போனார்கள். பின் வந்த நாட்களில், அவர்கள் பள்ளி செல்ல ஆரம்பித்ததும், வீட்டுக்குத் திரும்பியதும் சீருடையை மாற்றிய உடனே ஃபைஸாவிடம் சென்று விடுவார்கள். இரவு வரை அங்கேயே தங்கிக்கொள்வார்கள். யாருடனும் பேசாமல், வெட்ட வெளியை நோக்கி வெறித்த பார்வையுடன் ஃபைஸா அமர்ந்திருப்பதால், வருபவர்கள் தெரிவிக்கும் இரங்கல்களை சகோதரிகள் இருவரும் ஏற்றுக் கொள்வார்கள்.

"பிரியமானவர்கள் அனைவரும், கண்முன்னே கொல்லப்படும் போது எப்படி இருக்கும் என்பதை நினைத்துப் பார்க்க முடியுமா?" ஆபிதாவின் குரல் அவளுடைய கற்பனைப் புலத்திலிருந்து எதிரொலித்தது.

ஆழ்ந்த மூச்செடுத்தாள் கரீமா. "நாம் நினைப்பதை விட ஆமின் மன வலிமை உடையவள். என் கவலையெல்லாம் முன்க்கைலாவின் மனைவி குறித்துத்தான். அவள் மிகுந்த அதிர்ச்சி அடைந்துவிட்டது போலத் தெரிந்தது. அப்படியே கீழே விழுந்து உயிரை விட்டுவிடுவாள் போல இருந்தாள். மூன்றாவது நாள் கழிந்தபின் அவள் இங்கிருந்து சென்று விட்டது நல்லதாகப் போயிற்று. அதாவது, அவள் நிலையில் நான் இருந்திருந்தாலும் அதைத் தான் செய்திருப்பேன். குடும்பத்திற்கு அவமானம் ஏற்படுத்தியது மட்டுமல்லாமல், மரணத்தையே அழைத்து வந்த மாமியாருடன் ஒரே கூரைக்கடியில் எப்படி தங்க முடியும்?"

மீண்டும் சேனலை மாற்றியபோது, அதில் தெரிந்த ஒரு உருவம் அவள் கவனத்தை ஈர்த்தது. ஒரு இளைஞன், மேல் சட்டை இல்லாமல், தரையில் கிடந்தான். இறந்து போய்விட்டான் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. தொலைக்காட்சியின் சப்தத்தைக் கூட்டினாள்.

". . . சந்தேகத்துக்குரிய நபர், ரெஸா என்று அறியப்படுகிறார். ரெஸா, அனைவராலும் அறியப்பட்ட ஒரு குற்றவாளி. அல்ஹாஜி முன்க்கைலாவின் கொலை தொடர்பாகக் கைது செய்கையில் ஒத்துழைக்க மறுத்துத் தப்பியோடியதால் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். போலீஸ் தரப்பில் சொல்வது என்னவென்றால் . . . "

கரீமாவின் கையிலிருந்த ரிமோட் நழுவித் தரையில் விழுந்தது. ஆபிதா

திரும்பி தனது சகோதரியைப் பார்த்தபோது, கரீமாவின் கண்களில் கண்ணீர் திரளத் துவங்கியிருந்தது.

—

ஃபைஸாவின் அறையில் அங்குமிங்கும் உலவிக்கொண்டிருந்தாள் பிந்த்தா. தங்கை மகளின் கண்களை நேராக சந்தித்த போதுதான் எதற்காக அங்கு வந்தோம் என்பதையே தான் மறந்துவிட்டதை உணர்ந்தாள். அஞ்சலி செலுத்த வருவோருக்கு இடம் அளிக்கும் பொருட்டு கடந்த சில நாட்களாக அறையின் ஓரத்தில் சாற்றி வைக்கப்பட்டிருந்த ஓவியப் பலகைச் சட்டத்தை எடுத்து அதற்குரிய இடத்தில் வைத்துக் கொண்டிருந்தாள் ஃபைஸா. கனவின் வர்ணங்களைக் குழைத்துக் கேன்வாஸில் தீட்டும் அவள் விருப்பத்தை மரணம் சற்றும் தணிக்கவில்லை. பெரியம்மாவுக்கு என்ன வேண்டும் என்ற கேள்வியுடன் காத்து நின்ற ஃபைஸாவின் கண்களைத் தவிர்க்கவேண்டி, நோக்கமேதுமில்லாமல் அறையைச் சுற்றிலும் பார்வையை ஓட்டினாள் பிந்த்தா.

சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருந்த பூர்த்தியான ஓவியத்தின் அருகில் மண்டியிட்டு அமர்ந்தாள். சிவப்பும் பழுப்பும் கலந்த வண்ணம் பெருமளவில் திரையை ஆக்கிரமித்திருக்க, அதன் நடுவே அவள் கனவுகளில் வந்து பயமுறுத்தும் வன்முறையின் அதிர்வலைகளைப் பிரதிபலிக்கும் அடர்சிவப்பை வாரித் தெளித்திருந்தாள் ஃபைஸா.

"இது என்ன?"

"இதுவா? இது நான் வரைந்த ஓவியம்."

ஒரு பக்கமாகத் தலையைச் சாய்த்து அந்த ஓவியத்தைப் பார்த்தாள் பிந்த்தா. மிகக் கவனமாக ஆராய்ந்த பின்னும் கூட, தெளிவடைவதற்குப் பதிலாக மேலும் குழப்பமே அடைந்தாள்.

பணிவாகத் தோளைச் சாய்த்திருந்தவளின் தோல்வியுற்ற பார்வையைக் கவனித்தாள் ஃபைஸா.

"இது நவீன பாணி ஓவியம், நேரடி விளக்கமில்லாத அரூப வெளிப்பாடு. என் கனவுகளின் வண்ணங்களாக இருந்தவை. இப்போதும் அது போன்ற கனவுகள் வருகின்றன. ஆனால் அவை முன்பு போல என்னைப் பயமுறுத்துவதில்லை."

கம்பளத்தின் மீதமர்ந்து, அந்த ஓவியத்தையே உற்றுப் பார்த்துக்

கொண்டிருந்தாள். சிவப்பு கலந்த பழுப்புப் பின்னணியின் நடுவில் அடர் சிவப்பு சிதறியிருக்கிறது. குருதியும், பழுப்பு நிறமும்... பிந்த்தாவின் விரல்கள் கேன்வாஸின் விளிம்பை மெல்லத் தொட்டுப்பார்த்தன.

"நான் தவறாக நினைத்து விட்டேன்" மனது அலைந்துகொண்டிருந்த உலகத்திலிருந்து எதிரொலித்தது அந்தக் குரல்.

"தவறு, எதைப் பற்றி?"

"உன்னைப்பற்றித்தான். இழந்ததையும், இழந்து கொண்டிருப்பதையும் எதிர்த்து இன்னும் போராடிக்கொண்டிருக்கிறாய் என்று நினைத்தேன்"

"நானா?"

கலைகளின் மீது பெரிதாக ஆர்வமில்லாதவள் பிந்த்தா. அதன் அர்த்தங்களை அறிந்து உள்வாங்கிக் கொள்ளும் அளவுக்குத் தேவையான நுணுக்கங்களை அவள் பெற்றிருக்கவில்லை. அது மட்டுமன்றி, இது போன்ற அரூப, நவின ஓவியங்கள் அவளைக் குழப்பத்தில் ஆழ்த்துபவை. சில மலிவான மலர்க்கொத்துகளின் ஓவியங்கள் வெறும் அலங்காரத்துக்காக அவள் வரவேற்பறைச் சுவரில் மாட்டப்பட்டிருக்கும். துக்கம் அனுசரிக்கும் நாட்களில் அவை கழற்றி வைக்கப்பட்டிருந்தன. ஃபைஸாவின் திறமையை மதிப்பீடு செய்யக்கூடிய அளவு அழகுணர்ச்சி இல்லையென்ற போதும், தனது அச்சத்தையும், துர்க்கனவுகளையும் வலிமையுடன் எதிர்கொண்டு, அவற்றை இப்படியொரு அழகிய படைப்பாக மாற்றிக் கொண்ட ஃபைஸாவை நினைத்துப் பெரும் வியப்பு அடைந்தாள்.

"அது நான் தான்" ஆழ்மனதிலிருந்து சுயபரிசோதனையின் குரலாக பிந்த்தாவின் வார்த்தைகள் ஒலித்தன. இத்தனை காலமாக நான் தான் இழப்புகளை எதிர்த்து போராடிக்கொண்டே இருந்தேன்.

ஃபைஸாவுக்கு விளங்கவில்லை. அதீத சோகம் மனப் பிறழ்வை ஏற்படுத்தக் கூடியது என்று கேள்விப்பட்டிருக்கிறாள். அது போல பெரியம்மாவும் பாதிக்கப்பட்டிருக்கிறாரோ என்று வியந்தாள். பிந்த்தாவைத் தொடப்போகிறவள் போல அருகில் சென்றவள். பின் கரங்களை இழுத்துக் கொண்டாள்.

அமைதியாகச் சிரித்தாள் பிந்த்தா. "உனக்குத் தெரியுமா? வாழ்க்கை என்பது ஆடையைப் போன்றது என்று ஒருவர் சொன்னார். சில ஆடைகள் அதிர்ஷ்டமானவை. மற்றவை அப்படி அல்ல. அதனால் அவை கிழிந்தோ அல்லது கறைபட்டுப் போகும்போதோ, நம்மால் செய்யக்கூடியதெல்லாம், தைப்பதும், துவைப்பதும், அல்லது அதை வெட்டிச் சிறு துண்டுகளாக்கி அதிலிருந்து புதியதாக ஏதாவது ஒன்றைச் செய்து கொள்வது தான்."

ஒரு பக்கப் புருவத்தை மட்டும் உயர்த்தி, இதழோரத்தை மேற்புறமாக சுழித்து குழப்பத்துடன் நின்றுகொண்டிருந்த ஃபைஸாவைத் திரும்பிப் பார்த்தாள். கண்களிலிருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, ஃபைஸாவின் முதுகில் தட்டிக் கொடுத்தாள்.

"உனக்கு இதெல்லாம் புரியாது என்று நினைக்கிறேன். உடனடியாகப் புரிந்து கொள்ளமுடியாது."

அறையை நோக்கித் தளர்வாக நடந்து சென்ற பிந்த்தா, அங்கு, பெட்டியைத் திறந்து கற்பூரம் மணக்கும் துணிகளுக்கிடையில் எதையோ தேடியபோது, ரெஸா அவளுக்குப் பரிசாக வாங்கி வந்திருந்த துணி அதன் நடுவே இருந்தது. அவள் எதிர்கொள்ள விருப்பமில்லாத நினைவுகளை மீண்டும் அது ஏந்தி வந்தது. அதைத் தூக்கி வீசிவிட்டு, விடுபட வேண்டும் என முடிவெடுப்பது எளிதாகத்தான் இருந்தது. ஆனால், அவன் கொண்டு வந்து தந்திருந்த பணக்கற்றைகள் அவள் பெட்டியின் அடிபாகத்தில் இன்னும் அசையாமல் அமர்ந்திருக்கின்றன.

படுக்கைக்கு அருகில் இருந்த மூக்குக்கண்ணாடியை எடுத்துக் கொண்டு, வரவேற்பறைக்குச் சென்றாள் பிந்த்தா. அஸபேயின் கால்களுக் கிடையில் அமர்ந்து, தலையை அவள் தொடை மீது சாய்த்து வைத்திருந்தாள் உம்மி. அவளுக்கு சடை பின்னிக் கொண்டிருந்த அஸபே, அவள் பக்கத்தில் அமர்ந்திருந்த ஹதீஸா இருவரையும் கடந்து, அறையின் ஒதுக்குப்புறமாக வைக்கப்பட்டிருந்த தையல் இயந்திரத்தின் அருகில் சென்றாள். துக்க நாட்களில் அனைவரும் அதை மறந்து போயிருந்தனர். அதன் அருகில் போடப்பட்டிருந்த ஸ்டூலில் அமர்ந்து, இயந்திரத்துக்கு எண்ணெயிடத் துவங்கினாள் பிந்த்தா.

ஹதீஸா, அஸபே இருவரும் பிந்த்தாவின் செய்கையைக் கூர்ந்து கவனித்தனர். அவள் நிமிர்ந்து பார்க்கப்போகிறாள் என்று உணரும் போதெல்லாம் பார்வையை வேறுபுறம் திருப்பிக்கொண்டனர். இதையெல்லாம் அறியாத பிந்த்தா, அவள் வேலையை செவ்வனே செய்து கொண்டிருந்தாள். இயந்திரத்தில் ஊசிக்கு அடியில் துணியை நுழைக்கும் பாகத்தை சிறு எரிச்சலுடன் அவள் தட்டிய போது எழுந்த 'தப்" என்ற ஓசை மற்ற இரு பெண்களையும் உலுக்கியது. இருக்கைக்குப் பக்கவாட்டிலிருந்த பழைய அட்டைப் பெட்டியில் கை விட்டுத் துழாவி பழைய நீல வண்ணத் துணி ஒன்றை எடுத்தாள். அந்தத் துணியை வெட்டி எடுத்துக்கொண்ட பின் மீண்டும் தையல் இயந்திரத்தின் புறம் திரும்பியவள், கண்ணாடியை அணிந்துகொண்டு பெடலின் மீது பாதத்தை வைத்து இயக்க ஆரம்பித்தாள். பெரும் ஆவேசத்துடன், மிக வேகமாக அவள் பெடலை அழுத்துவதைப்

பார்த்ததும் அதிர்ச்சியில் உம்மியின் தலைப் பின்னலைக் கைவிட்டு, பிந்த்தாவின் மீது கவனத்தைச் செலுத்தினாள் அஸபே.

பின்னப்படாமலிருந்த தலையின் மறு பாகத்தைத் தொட்டுப் பார்த்த உம்மி ஓரமாக விறைத்து நின்ற முடியைத் தொட்டுத் தடவி நேராக்கினாள். இரு பெண்களின் கண்களும் எங்கு நிலைத்திருக்கிறது என்று கவனித்தவள், தானும் பிந்த்தாவை நோக்கினாள்.

"ஹஜ்ஜியா, என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?"

"கிழிந்த ஆடையைத் தைத்து சீராக்கிக் கொண்டிருக்கிறேன்." அப்போது தன் புறமாகத் திரும்பியிருக்கும் விழிகளனைத்தையும் புலன்களால் அறிந்த பிந்த்தா, நிமிர்ந்து ஒவ்வொருவரின் முகத்தையும் பார்த்தாள். ஹதீஸாவின் விழிகளில் கண்ணீரும், அஸபேயின் விழிகளில் தவிப்பும் தெரிந்தது. உம்மியின் பார்வையில் ஆர்வம் மின்னியது. மீண்டும் தலையைக் குனிந்து கொண்ட பிந்த்தா, ஆடையின் ஓரங்களைக் கவனமாக மடிக்கத் துவங்கினாள்.

அவ்வேளையில் தான், துணியின் மீது அழகிய, சிறிய, மஞ்சள் நிற வண்ணத்துப் பூச்சிகளின் வடிவங்கள், பறத்தல் நிலையின் பல கோணங்களில் அச்சிடப்பட்டிருந்ததைக் கவனித்தாள். அதன் வடிவொன்றின் மீது மிகுந்த கவனத்துடன் விரல்களால் தடவிப் பார்த்தாள். சிந்தித்துப் பார்க்கையில் இறுதியாக அவளுக்குத் தோன்றியது, கனவுகள், வண்ணத்துப் பூச்சிகளைப் போலவே நுட்பமும் அழகுமாய் மிளிரக் கூடியவை, ஆனால் அவற்றின் மெலிவைப் போலவே வலுவற்றையும் கூட...

———

மொழிபெயர்ப்பாளர்

லதா அருணாச்சலம்

கவிதை, கட்டுரை, மொழிபெயர்ப்பில் ஈடுபட்டு வரும் லதா அருணாச்சலம், ஆங்கில முதுகலை மற்றும் ஆசிரியப் பட்டப்படிப்பை முடித்தவர். பதினான்கு வருடங்கள் நைஜீரியா நாட்டின் லாகோஸ் நகரில் வாழ்ந்தவர். சில காலம் அங்கு ஆசிரியராகப் பணி புரிந்தார். கடந்த சில வருடங்களாக சென்னையிலும், நைஜீரியாவிலும் மாறி மாறி வாசம் செய்கிறார். இவருடைய முதல் கவிதைத் தொகுப்பு 'உடலாடும் நதி' கடந்த வருடம் வெளியானது. தீக்கொன்றை மலரும் பருவம் இவரது முதல் மொழிபெயர்ப்பு நாவல் ஆகும்.

அபுபக்கர் ஆடம் இப்ராஹிம் நைஜீரிய நாட்டைச் சேர்ந்த எழுத்தாளரும், பத்திரிக்கையாளரும் ஆவார். அவருடைய முதல் சிறுகதைத் தொகுப்பான The Whispering Trees, எட்டிசலாட் இலக்கிய விருதுக்கான பட்டியலிலும், சிறந்த ஆப்பிரிக்க எழுத்துக்கான Caine பரிசுக்காக இறுதிச் சுற்றிலும் பங்கேற்றது. சிறந்த எழுத்துக்கான ஆப்பிரிக்க பிபிசி பரிசு பெற்றவர் அபுபக்கர். சஹாரா துணைக் கண்டப் பிரதேசங்களின் சமகாலத்தின் முக்கிய எழுத்தாளர்களில் ஒருவராகக் குறிப்பிடப்படுபவர்.

உலக அளவில் வெளியிடப்பட்ட Season of Crimson Blossoms நாவலுக்காக 2016 ஆம் ஆண்டுக்கான நைஜீரியாவின் NNLG இலக்கியத்துக்கான பரிசைப் பெற்றவர்.

பரந்து விரிந்த அபுஜாவின் புறநகர்ப் பகுதியில் வசிக்கும் ஐம்பத்தைந்து வயது பிந்த்தா ஜுபைரு - ஐந்து குழந்தைகளின் பாட்டி - கரப்பான் பூச்சிகளின் நெடி படர்ந்த அதிகாலையில் கண் விழித்தபோது தவிர்க்க இயலாத தீய சம்பவம் ஒன்று நிகழப் போகிறதென்று உணர்ந்தாள். இருபத்தைந்து வயது ஹஸன் 'ரெஸா,' போதைப் பொருள் விற்பனை செய்பவன், உள்ளூர் ரவுடிகளின்தலைவன், திருடும் பொருட்டுஅவளது வீட்டின் வேலியைத்தாண்டிக் குதித்தபோது, அவள் இதயத்தில் தடம் பதிக்கப் போகிறான் என்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

அசாதாரண சூழலில் சந்தித்துக்கொண்ட இருவரும் ரகசிய உறவின் பயணத்தில் திளைத்திருக்கையில், பிந்த்தாவின் செல்வச் செழிப்புடைய மகன் அதை அறிய நேரும்போது, எதிர்பாராத வகையில் அவலமும் துயரமும் ஏற்படுகின்றன.

பழமைவாதமும், கட்டுப்பாடுகளும் நிறைந்த நைஜீரிய நாட்டின் வடமாகாணத்து இசுலாமிய சமூகம், ஊழல் மலிந்த அரசியல் மற்றும் வன்முறைகளைப் பின்புலமாகக் கொண்டு எழுதப்பட்ட அபுபக்கரின் முதல் புதினமான இது, வயது, வர்க்கம், மதம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்ட கட்டுக்கடங்காத மென்னுணர்வுகளை மெல்ல மெல்ல அவிழ்த்து நம் மனதை ஆட்கொள்ளும் மாறுபட்ட காதல் கதை.

எழுத்து பிரசுரம்

அட்டை வடிவமைப்பு :
வெ சரவண குமார்

ISBN 978-93-87707-89-4

9 789387 707894

Rs. 499